# தளம்

கலை இலக்கிய இதழ்

தளம்:5 இதழ்:19 ஜன-மார்ச் 2018 ரூ.50/-



ஓவியம் : **ஓவியர் A. செல்வம்**

"ஆனா, நான் பொண்ணா பக்கத்துல இருக்கிற கடைக்குக் கூட போகக்கூடாது. வெளியில போய் சுத்திப்பாக்கலாம்னா, உடனே அட்வைஸ் பண்ண ஆரம்பிச்சிடுவாங்க. பொம்பளபிள்ளை இப்படியா செய்யறது அப்டின்னு. ஏன் பொண்ணுங்கள்லாம் வெளியில போகக்கூடாது? வீட்டுக்குள்ளதான் இருக்கணுமான்னு கேட்டா, நாட்டு நிலைமை சரியில்லை. மக்கள் இப்படி இருக்காங்க. நீ கலெக்டருக்குப் படி. நீ வந்து சொசைட்டியை சேஞ்ச் பண்ணுன்னு பதில்! அவங்க ஏன் இப்படி இருக்காங்க? ஒரு பக்கம் வீட்டை விட்டு வெளியில போகாதேன்னு சொல்றாங்க. இன்னொரு பக்கம் நீ ஒரு பொசிஷனுக்குப் போ, அப்புறம் இந்த சொசைட்டிய மாத்து அப்டின்னு சொல்றாங்க. நான் என்ன பண்ணா இந்த சொசைட்டிய மாத்த முடியும்? என்னையும் பாத்துக்க முடியும்?"

***எத்திராஜ் கல்லூரி மாணவியர் – டாக்டர் ருத்ரன் உரையாடல்.***

# இந்த இதழில்...


## முகப்பு ஓவியம்

ஓவியர் A. செல்வம்

## கட்டுரைகள்......

அதங்கோடு அனிஷ்குமார் 9
பா. கண்மணி 12
லாவண்யா சத்யநாதன் 40
சே. கோச்சடை 48
பிரயென் கேலகர் 54
தமிழில்: சத்திய நாராயணன்
இரா.ம. கார்த்திக் 59
ச. வின்சென்ட் 60
சஃபி 109
எம்.குமரேசன் 115
அவனி அரவிந்தன் 130
சர்வோத்தமன் 132
செ.க.கார்த்திக் 135

## கதைகள்......

எஸ்.டி.ஏ. ஜோதி 20
கலைச்செல்வி 23
ஃபிர்தவ்ஸ் ராஜகுமாரன் 29
என். செல்வராஜ் 35
சாதனா (ஜெர்மனி) 69
சாந்தினி (ஜெர்மனி) 81
பென் ஒக்ரி (நைஜீரியா) 88
தமிழில் : எம். ரிஷான் ஷெரீப்
மானுவேல் ரோஹாஸ் (சிலே) 119
தமிழில்: அமரந்த்தா
இசபெல் அயந்தே (சிலே) 126
தமிழில்: அமரந்த்தா
ஆர். ரமணன் 151
ஏ.ஏ.ஹெச்.கே. கோரி 156

## கலந்துரையாடல்......

மனநல மருத்துவர் ருத்ரன் - 3
எத்திராஜ் கல்லூரி மாணவியர் உரையாடல்

## கவிதைகள்......

கு. அழகர்சாமி 97
இரா. இலக்குவன் 99
தமிழ் உதயா (லண்டன்) 100
ஜான்னவி 102
மனுஷி 104
வீ விஜயராகவன் 113
உருதுக் கவிதைகள் 114
ஆங்கிலம்வழித் தமிழாக்கம்:வீ விஜயராகவன்

## நினைவுகூரல்......

ஞாநி
எஸ்.எம்.ஏ. ராம் 105
வெளி ரங்கராஜன் 108

## புதிய புத்தகங்கள்......

பார்வைக்கும் படிப்புக்கும் -
(பின்அட்டை உள்பக்கம்)

## பதிவு......

கரிசல் விருது - (பின்அட்டை)

உள் ஓவியங்கள் :
ஓவியர் ஜே.கே.
ஓவியர் A. செல்வம்
ஓவியர் S. அருணகிரி

# இப்போது

கலாச்சாரம் குறித்த தவறான கண்ணோட்டத்தின் காரணமாக பின்னுக்குப் போதல் *(Reverse Pattern)* இப்போது வெளிப்படையாகத் தன்னை இனங்காட்டிக்கொள்ளத் தயங்குவதில்லை. வெட்கப்படுவதில்லை. மாறாக, எலும்புக்கூடுகளைத் தோண்டி எடுத்துக் கொண்டாடச் சொல்லப்படுகிறது. மனநல மருத்துவர் ருத்ரன் மாணவரிடையே தளத்துக்காக உரையாடுகையில் இந்த 'ரிவர்ஸ் பேட்டர்ன்' பற்றி எச்சரிக்கை செய்தார். பிற்போக்கு (ரிவர்ஸ்) மக்கள் என்னவாகத் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ள வேண்டுமென, எவற்றைத் தேடி அடைய வேண்டுமென சுயஅடையாளமிழந்த சாயம் வெளுத்துப்போன வாலறுந்த நரிகள் (நரிகள் மன்னிக்க!) அருளுரை அருள்கின்றன. எல்லாவற்றையும் கடந்தவர்களாகப் பொதுவானவர்களாக அறிவாளிகளாக அமைதியே வடிவானவர்களாக இதுநாள் வரை தங்களை வலிந்து அடையாளங்காட்டி வந்த நாசூக்குக்காரர்கள்கூட இப்போது உண்மை முகத்தைக் காட்டிப் பல்லிளிப்பதைக் காணமுடிகிறது. 'எல்லாம் சொல்லப்பட்டுவிட்டது, அகழ்ந்து பார். மணிகள் கொட்டிக் கிடக்கின்றன' எனப் பெருச்சாளிகள் இருளின் பழமையை மேன்மையைக் கூவி 'நாவலோ நாவல்' என்கின்றன. இப்போக்குகளின் உண்மைத் தன்மை என்ன? உளவியல் என்ன? இருளின் நிறம் இப்போது கருப்பு அல்ல.

சாதித்திமிர், மத ஆணவம் கொண்ட, நாள்முழுவதும் தின்றுக்கொழுக்கும் தடியர்களால் கேரள அட்டபாட்டில் ஒரு எளிய மலைவாழ் மனிதர் கொல்லப்பட்டிருக்கிறார். காலம்காலமாய் இருளில் தள்ளப்பட்டு இன்னமும் மனித கௌரவமும் சமூக அங்கீகாரமும் மறுக்கப்பட்டப் பெண்கள் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டுக் கொல்லப்படுவது இளைஞர்களை முகம் சிதைத்துக் கொல்வது தமிழ்நாடு விழுப்புரத்தில் நடந்துள்ளது. இவை நிகழ்வது முதல்முறை அல்ல. சிரியாவில் குழந்தைகள் ரத்தக்குளியலில் சிதைவதும், வடஅமெரிக்கப் பள்ளிகளில் மாணவர்கள் கண்டமேனிக்கு சுடப்படுவதும் ஒன்றல்ல.

ஒவ்வொரு நிகழ்விற்குப் பின்னும் நீலிக்கண்ணீர் வடித்து ஊடகங்களும் அதிகார அமைப்புகளும் அரசும் ஒன்றை மற்றொன்று குற்றம்சாட்டி அடுத்த நிகழ்விற்கு ஆயத்தம் ஆகின்றன. இங்கே எழுத்தாளர்களும் கலைஞர்களும் கல்வித்துவம் சார்ந்தவர்களும் என்னவாக இருக்கிறார்கள். சிறுசலசலப்பைக் காட்டுபவர்களாக இருப்பதைத் தவிர்த்து. சாதி மத இன அடையாளங்களில் பெருமைகொள்ளும் இவர்கள் கூட்டுக் களவாணிகளாக வாய்ப்பொத்தி சமூகக் கொடுமைகளுக்குத் துணைபோகும், சாதிப் பெருமை பேசும் ஆட்களாக வலம் வருவது பெரும் அவக்கேடு.

அறிவச்சம் கொண்ட அறம்சார் சமூகத்தை ஆக்காமல் சாதி மத இன அடையாளங்களைக் கொண்டாடுபவர்களா மேன்மையான இலக்கியத்தை உருவாக்கப்போகிறார்கள்?

ஊடகங்கள் கவந்தகர்களின் கரங்களாக நீண்டு யாவற்றையும் உள்ளிழுத்து, யாவரையும் கவர்ந்து உட்கார்ந்த இடத்தில் வாயே வயிறாகத் திணித்துக் கொண்டு வருவனவாய் 'அரிதாரம்' கலைந்து காட்சி அளிக்கின்றன. இந்தக் கவந்தகர்களின் கைகளாக எழுத்தாளர்களும், கலைஞர்களும், கல்விப்புலம் சார்ந்தவர்களும் மற்ற மற்ற விற்பன்னர்களும் ஆவதை உணர்ந்தும் உணராதவர்கள்போல இரையாகின்றனர். எதற்கெல்லாம் எவற்றுக்கெல்லாம் எதிராகப் புறப்பட்டார்களோ, அதற்கெல்லாம் அவற்றுக்கெல்லாம் ஆளாகிப்போகும் அவலத்தைக் காண முடிகிறது. பெருமை பொங்கி வழிகிறது. யாரை யார்க் கொண்டாடுவது! தங்களை மனிதர்களாக அடையாளப்படுத்திக்கொள்ள மறுத்து, சாதி மதக் கொண்டாட்டக்காரர்களாக இனங்காட்டிக்கொள்ளும் ஏமாற்றுக்காரர்களின் பிழைப்பு ஒரு பக்கம். அதே ஏமாற்றுக்காரர்கள், எவையெல்லாம் படைப்பு, எதுவெல்லாம் இலக்கியம் எனக் கோடு கிழிக்கும் நவீனத்திலும் நவீன இலக்கியவாதிகளாக இருக்க முனைவது வேடிக்கை. இலக்கண மயக்கம்? எலும்புகளை உயிர்ப்பிக்கும் மாயமந்திர தந்திர சரணாகதிப் பீடங்கள் கட்டமைக்கப்படுகின்றன. கட்டுடைப்பவர்களா கட்டுப்பட்டவர்களா?

சிந்தனை மரபு எங்கு வேர்க்கொண்டுள்ளது, எதை வேராகக் கொள்கிறது என்பதைப் பார்க்கத் தவறினால், பரவசப்போக்கில் நிலைத் தடுமாறிப்போகும் காலம். வெளி, இருப்பு, காலநிலை ஓட்டத்தை ஒலி ஒளி வேகத்தை விண்ணை மிஞ்சுகிறது அறிவு. அறிவின் கருவியான படைப்பு மொழி, ஊடகம், தளம்.

இவற்றையெல்லாம் காணும் மனம், தான் இல்லாமற்போகையில் வேறு எங்கு யாராக இவற்றைக் காணும் மனமாக இருக்கும் எனக் காண விழைகிறது. அழிய விழையாத மனம். இதழ் மனஇயல், உளவியல் பற்றிப் பேசும் முன்னால், இங்கே இன்று மனித உளவியல் எப்படியெல்லாம் 'தான்' அல்லது 'நான்' ஐ நிலைநிறுத்த முனையும் போக்குகளாகத் தடம் மாறுவதை இந்த இதழில் தளம் பேச முயன்றுள்ளது.

* * *

சென்ற ஆண்டில் புற, அகக் காரணங்களால் ஒரு இதழ் மட்டுமே வெளிவந்தது. இந்த ஆண்டில் தொய்வு கூடாது என உடன் பயணிக்கும் நண்பர்கள் வலியுறுத்துகின்றனர். அவர்கள் உடன் நிற்பதே தளத்தின் வலு.


# தளம்

கலை இலக்கிய இதழ் (காலாண்டு)

இதழ்–19. ஜன–மார்ச்2018 (தனிச்சுற்றுக்கு)

ஆசிரியர்
**பாரவி**
***

இதழ் வடிவமைப்பு
அ. கணேஷ்

அனைத்து தொடர்புகளுக்கும்
**தளம்,**
*c/o.* **சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷன்ஸ்,**
10/2 (8/2) போலீஸ் குவார்டர்ஸ் ரோடு,
தியாகராய நகர், சென்னை–600 017.
தொ. பே. 044 – 2434 2771
(தியாகராய நகர் பேருந்துநிலையத்திற்கும்
காவல் நிலையத்திற்கும் இடைப்பட்ட சாலை)
மொபைல்: 94452 81820
மின்னஞ்சல்: thalam. base@gmail. com
முகநூல்: www. facebook. com/thalambase
இணையம்: www. pratilipi. com/thalam

படைப்புகளை யூனிகோட்டில்
அனுப்புதல் வேண்டும்.
உரிய படங்களை இணைக்கலாம்.

தனி இதழ் ரூ. 50/– + ரூ. 10/– (அஞ்சல் செலவு) ஆண்டுக்கு ரூ. 200/– + ரூ. 40/–
'தளம்' எழுச்சிக்கான ஊக்கத்தொகை
மற்றும் இதழ் கட்டணங்களை,
THALAM என்ற பெயரில், இந்தியன் வங்கி,
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக
வளாகக் கிளை, சைதாப்பேட்டை.
சென்னை–15 CURRENT A/C NO:
6087653615க்கு செலுத்தலாம் அல்லது
காசோலை முதலானவற்றை
'**தளம்**' முகவரிக்கு அனுப்பலாம்.
வலை வங்கி செலுத்த. எண்:
IFSC - IDIB000TI46, MICR - 600019228
Swift Code - IDIBINBBTSY



'**தளம்**' இதழில் வெளியாகும் படைப்புக்களின் உரிமை, படைப்புகளின் கருத்துக்களின் பொறுப்பு அனைத்தும் அவ்வவற்றின் படைப்பாளிகளுக்கே உரித்தானதாகும். மறுவெளியீடு செய்ய விழைவோர் உரிய படைப்பாளிகளிடம் அனுமதி பெறக்கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# மனசு சொல்வதைக் கேட்பதா அல்லது அறிவு சொல்வதைக் கேட்பதா?

எத்திராஜ் கல்லூரி மாணவியர் – மனநல மருத்துவர் ருத்ரன் உரையாடல்

**பேராசிரியர் அரங்க மல்லிகா** : இளைய சமுதாயமாகிய உங்களுடன் தளம் காலாண்டிதழ் பொருட்டு டாக்டர் ருத்ரன் அவர்கள் இன்றைக்கு உரையாட வந்திருக்கிறார்.

நாங்கல்லாம் ஒரு காலத்துல மிரண்டு பார்த்த ஒரு பர்சனாலிட்டி டாக்டர் ருத்ரன். அந்த மாதிரி நாங்க ரொம்ப பயபக்தியோட, மரியாதையோட அவருடைய வார்த்தைகளுக்காக காத்துக் கொண்டிருந்த காலம் என்னுடைய கல்லூரிக் காலம். ஓர் உளவியல் நிபுணராக இன்றைக்கு உலகம் முழுவதற்குமே தன்னுடைய கருத்தை மிக நேர்மையாகப் பதிவு செய்யக்கூடிய, யாருக்கும் அச்சப்படாமல், யாருடைய பின்விளைவோடும் செயல்படாமல், இருப்பதை உள்ளதை உள்ளவாறு சொல்லக்கூடிய ஓர் அதி அற்புதமான உளவியல் நிபுணர் டாக்டர் ருத்ரன்.

எத்திராஜ் கல்லூரி மகளிர் மன்றம் சார்பாக இப்படி ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கு திரு. பாரவி மிகுந்த ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கிறார். இந்தக் கூட்டம் போன மாதமே நடந்திருக்கவேண்டும். ஆனால் எதிர்பாராத சில காரணங்களால் இன்று இங்கு சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. சிறந்த சுய முயற்சியோடு இலக்கியத்தை இளம் தலைமுறையினராகிய உங்களிடம் எடுத்துச்செல்ல வேண்டும் என்பதற்காகப் பல்வேறு தலைவர்கள், அறிஞர்கள் உலக அறிஞர்களுடைய சிந்தனைகளையெல்லாம் ஓர் அற்புதமான மொழிநடையோடு கொணர்வது தளம். மொழியிலும் தளம் கவனமாக இருக்கிறது என்பதை இந்தப் பத்திரிகையை நீங்கள் படித்தால் உங்களுக்குப் புரியும். நமது கவனத்தைக் குவிக்கக்கூடிய அளவிற்கு நல்ல ஒரு தரமான தமிழ்ப் பத்திரிகை இந்த தளம்.

இன்றைக்கு வரக்கூடிய சாதி, மத பிரச்சனைகள், அது எவ்வளவு ஆணித்தரமாக இளைய தலைமுறையினரைப் பாதித்துக் கொண்டிருக்கிறது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், சாதி என்பது மனிதர்களைக் காப்பாற்றுவது இல்லை. மனிதநேயம்தான் மனிதர்களைக் காப்பாற்றும். சாதியை, மதத்தைக் கடந்த ஒரு மனிதநேய சிந்தனையோடு தளம் வருகிறது.

இன்றைக்கு உளவியல் நிபுணர் டாக்டர். ருத்ரன் அவர்களை நமக்கு தளம் அறிமுகம் செய்து வைக்கிறது.

இந்த மேடையில் அவர் பேச, நீங்கள் கேட்க என இல்லாமல், நீங்களும் பேசப்போறீங்க. அவர் அதற்குப் பதில் தரப்போகிறார். இங்கு இருக்கும் மாணவியர் யாரும் எங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம். டீச்சர்ஸ் நாங்க எதுவும் உங்கள சொல்லமாட்டோம். இதெல்லாம் நாம கேக்கலாமா, பேசலாமா என்று நீங்க கவலப்படாதீங்க.

எங்களுக்கு அற்புதமான வழிகாட்டியாகத் துறை ஆசிரியர்கள் இங்கு வந்திருக்கிறாங்கள். வெட்டிக்கிட்டு வான்னா, கட்டிக்கிட்டு வரக்கூடிய கூட்டம் நம் கூட்டம். நீங்க இல்லன்னா இந்த நிகழ்ச்சியே இல்ல. பிரச்சனை இல்லன்னா நாம பேசப்போறதே இல்ல. அது பிரச்சனையா இருக்கணும்னு அவசியமே இல்ல. உங்களுடைய அனைத்து உளவியல் பிரச்சனைகளையும் வெளிப்படையாகப் பேசலாம்.

**தளம்:** தளம் இதழுக்காக டாக்டர் ருத்ரன் அவர்கள் இன்று உங்களுடன் உரையாடுகிறார். மனநலம் சார்ந்த துறையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். மனநலம் மட்டுமல்லாமல் தியேட்டர், சினிமா, ஓவியம் சார்ந்தும் இயங்குபவர். பாரதி சொன்ன அந்தச் சக்தி இவரது சக்தி.

மனநலம், உடல்நலம் பற்றிய ஒவ்வொரு பொருளையும், பாதிப்பையும் ஆய்ந்தால், எல்லாமே உளவியல் சார்ந்த விஷயங்களுக்கு நம்மைக் கொண்டு செல்லும். எப்படி ரியாக்ட் பண்றோம், எதுக்கு ரியாக்ட் பண்றோம். இந்தச் சமூகத்தில் நாம் என்னவாக இருக்கிறோம் எவற்றின் பாதிப்பு நம்மை எதிர்வினை ஆற்ற வைக்கிறது என எது பற்றியும் டாக்டர் ருத்ரனுடன் நீங்கள் உரையாடலாம். இது ஒரு தொடக்கம்.



**டாக்டர் ருத்ரன்:** நாம் பேசுவோம். நாம் பேச வேண்டும். முதலில் நான் தொடங்குகிறேன். ஏன் நமக்கு தாழ்வு மனப்பான்மை வருகிறது? பாரு என்னைவிட அவ நிறைய மார்க் வாங்கிட்டா என்பது ஒரு ஹெல்தியான பொறாமையில பேசறது. இன்னொரு நாள். என்னுடைய உழைப்பு வேஸ்ட், மை டைம் வேஸ்ட்னு கம்பேர் பண்ணாம இருக்கணும்னா என்ன பண்ணனும். நம்ம மைண்ட்ல கம்பேர் பண்றதுக்கு ஒரு ஸ்பேஸ் விடறோம். *24 hours*-ல *1 hour* மத்தவங்களைக் கம்பேர் பண்றதுக்கு நாம கொடுத்தோம்னா? அந்த *1 hour* நாம யாரையும் கம்பேர் பண்ணக்கூடாது. நான் முதல்ல என்னை கம்பேர் பண்ணிக்கணும். நேத்து என்னால படிக்க முடிஞ்சது, எழுத முடிஞ்சது. இன்னைக்கு என்னால இப்ப படிக்க முடியுமா? ஏன் முடியலைன்னு பாக்கணும். அதுக்கு என்னவெல்லாம் காரணம்? நான் வேறெதுவோ வெட்டியா அரட்டைல இருந்திருக்கலாம். *Something.* இது நான் எனக்கு ஆய்வு பண்ணிக்கிட்ட விஷயம். இது எனக்கு ஹெல்ப்ஃபுல்லா இருந்தது.

மத்தவங்களை விட நான் ஒரு பாய்ண்ட் பெட்டரா பண்ணமுடியுமா? இப்படி மத்தவங்களைப் பார்த்து எனக்கு இம்பிரியாரிட்டி காம்ளக்ஸ் வருதுன்னா, தாழ்வு மனப்பான்மை என்பது மத்தவங்களைப் பார்த்து வரணும்னு இல்லை. உள்ளுக்குள்ளவே என்னால செய்ய முடியாத சில விஷயங்களை நாம தீர்மானிக்கும்போது அது உருவாகுது. ஏன் உருவாகுதுன்னு யோசிச்சி நாம பாக்கணும். அதற்கான முயற்சி எடுத்து நாம தோல்வி அடைஞ்சா அது நியாயமான காரணமாக இருக்கும். ஆனா நிறையபேர் முயற்சியே எடுக்காம இருக்காங்க. அதனால் மனஉளைச்சல் வருது.

டிப்ரஷன் என்பது இரண்டு வகையாகப் பிரிக்கலாம். நாம எதையாவது இழந்துட்டோம்னா வரும். இன்னொன்று. பெண்கள் அழகா, வசதியா, ஆடம்பரமா இருக்கமுனையறது. வசதிக்கும் மீறி. வசதி இருந்துச்சின்னாக் கூட சில பேருக்கு டிப்ரெஷன்ஸ் வரும். அந்த டிப்ரெஷன் ஏன் வருதுன்னா, மூளையில கெமிக்கல்ஸ் உற்பத்தியாகும். அந்த கெமிக்கல்ஸோட பேலன்ஸ் கரெக்டா இருந்தாதான் நாம இயல்பா பேசமுடியும். சின்ன விஷயத்துக்கு சின்ன வருத்தம், சின்ன விஷயத்துக்குக் கூட சின்ன கோபம், அந்த மாதிரியெல்லாம், எமோஷனல் பிளாக்மெயில் அதெல்லாம் வரும். அந்த பேலன்ஸ் சரியில்லாமப் போகும்போது டிப்ரெஷன் அதிகமாகி அது நோயா நமக்கு வரும். இந்த நோய் வந்துடுச்சின்னா, இந்த நோயை நாம அடையாளம் கண்டுபிடிக்கணும்னா, இது எல்லாம் இருக்கான்னு கவனிக்கணும், நாளுக்கு நாள் நம்ம கான்சன்ட்ரேஷன் குறையும். யாருடனும் பேசவே பிடிக்காது. ஏற்கனவே அவங்களுக்குப் பிடிச்சிருந்த சினிமா, பார்க் வேற எது இருந்தாலும், அதுல அவங்களுக்கு இன்ட்ரஸ்ட் குறையும்.

சிலருக்கு டிப்ரஷன் காலையில் வரும். கான்சன்ட்ரேஷன் குறையும், காலையில இருக்கறதுக்கும், மாலையில இருக்கறதுக்கும் மூட் மாறி மாறி இருக்கும். மனச்சிக்கல் வரும், இதெல்லாம் இருந்ததுன்னா, அது ஒரு நோய். நோய் இருந்ததுன்னா, நாம் அவங்ககிட்ட கொஞ்சம் ஆறுதலா பேசணும், சிலருக்கு சிம்பிளான டிப்ரெஷன் வரும். சிம்பிளான டிப்ரெஷன் எப்ப வரும் என்னோட பர்ஸ் தொலைஞ்சிப் போச்சின்னு வச்சிக்கங்க, ஐயோ பர்ஸ் தொலைஞ்சிப் போச்சே, வாட் இஸ் திஸ், அப்டின்னு கஷ்டமா மனசு ஃபீல் பண்றப்போ வரும். இந்த டிப்ரெஷன் பொதுதான். இது ரியாக்டட் டிப்ரெஷன் அப்டின்னு பேர். அப்டின்னா, ஒரு ரியாக்ட், ஒரு லாஸ்.

ஒரு பொருள நாம தொலைச்சாலும் சரி, சக மனிதனை நாம் தொலைச்சாலும் சரி, யாராவது செத்துப் போய்ட்டாலும் சரி, யாராவது நம்மை விட்டுப் பிரிஞ்சி போனாலும் சரி, இந்த மாதிரி பெரிய லாஸ், அது லாஸ்னு நாம நினைச்சிக்கிட்டு கஷ்டப்படுவோம். ஆக்சுவலா அது லாஸே கிடையாது. நம் வாழ்க்கையில் கொஞ்சமும் சம்பந்தமே இல்லாத நபர் நம்முடைய வாழ்க்கையில் டைம் வேஸ்ட்

பண்ணிக்கிட்டே இருக்காங்கன்னு வச்சிக்கங்க. அந்த நபர் உங்கள் வாழ்க்கையை விட்டு விலகிப் போய்ட்டா, ஐயய்யோ... போய்ட்டாங்களே அப்டின்னு பீல் பண்றது டிப்ரெஷன்தான். ஆனா தேவையில்லாத டிப்ரெஷன்.

இப்ப நாம கொஞ்சம் யோசிச்சி பார்க்கணும். இப்ப பர்ஸ் தொலைச்சிட்டா அடுத்து நாம என்ன பண்ணலாம், எப்படி சேஃபா பாத்துக்கலாம் அப்டின்னு அடுத்தடுத்து போய்டணும். என்னோட வாழ்க்கையில நடந்த ஒரு சம்பவம். உரியவங்க கேட்டாங்க,

என்னடா என்னாச்சி உனக்கு?

இல்ல எனக்கொரு ப்ராப்ளம் இருக்கு.

ஐ ஆம் டிப்ரெஸ்டுன்னேன். விவாதித்துக் கொண்டேன். பிராப்ளம் ப்ராப்ளமே இல்லைன்னு என்னை தெளிவுபடுத்திக் கொண்டேன்.

என்ன பிராப்ளம்? எதனால டிப்ரெஷன் வருது, எனி டைம் யு ஃபீல் சேட், எல்லாம் நம்மை அதிகமாக வந்து தாக்கும்போது, நாம இந்தப் பிரச்சனையைப் பார்த்து ஒளிஞ்சிக்கறோமா? இல்ல அதை சால்வ் பண்றதுக்கு முயற்சி எடுத்துக்கறோமா என்றுதான் பாக்கணும். சால்வ் பண்றதுக்கு என்ன பண்ணலாம்னு நீங்க யோசிக்க ஆரம்பிச்சா, டிப்ரெஷன் அதே மூட்ல இருந்து தானா குறைஞ்சிடும். டிப்ரெஷனுக்கான ஸ்பேஸ் நம்ம வாழ்க்கையில நாம சில நேரம் கொடுக்க மாட்டோம். கரெக்ட்டா முடிவெடுக்கறமான்னு தெரியாது. தப்பான முடிவைக்கூட எடுக்கலாம். அந்தத் தப்பான முடிவால இன்னொரு தடவை நம் வாழ்க்கையில சிக்கல் வரலாம். வராம இருக்கணும்னா, என்ன பண்ணலாம் அப்டின்னு நாம நினைச்சி செயல்படும்போது, சோர்ந்து உட்கார்ந்து எந்த வேலையும் செய்யாம அப்படியே திகைச்சிப்போய் உட்கார்ந்திருந்தா அந்த டைம்ல டிப்ரெஷன் வரலாம். ஸோ, எந்தப் பிரச்சனை என்றாலும், அடுத்து என்ன செய்யலாம் என்பது நம்மோட ரியாக்ஷனா இருக்கணும். ஐயோ என்பது போன்ற ரியாக்ஷன்ஸ் இருக்கக்கூடாது. ரொம்ப சிம்பிளா டிப்ரஷன ஹான்டில் பண்ணலாம்.

**கேள்வி:** பரீட்சை இருக்கும்போது அதிகமா டிப்ரெஷன் இருக்குதே?

**டாக்டர் ருத்ரன்:** தேர்வுமுறை ஒருகாரணம். எழுதும்போது, உங்களுக்குள்ள உரிமைகள், உங்களுடைய சுதந்திரமான எண்ணங்கள், உரிமைகள் மட்டும் கிடையாது, உங்களுடைய எண்ணங்கள் கூட உங்களிடமிருந்து பறிக்கப் படுவதாக ஒருவித ஆற்றாமை. ஆனா, பரீட்சை எழுதியாகணும். பறிக்கப்படுதல் அப்டின்னா என்ன? அது ஒரு இழப்பு. நாம இழந்துட்டோம் அப்டின்னு நினைக்கறீங்க. திரும்பிப் பெறணும் அப்டின்னு நினைச்சீங்கன்னா, டிப்ரெஷன் வராது. திரும்பிப் பெறணும்னா என்ன செய்யணும். சண்டை போடணும். சண்டை போட்டா என்னாகும் கை ஒடையும். நாம கை ஒடையாம சண்டைப் போட எல்லாம் முடியாது. பெரிய அடியெல்லாம் தாங்கிக்கறதுக்கு நாம ரெடியா இருந்தோம்னா, சின்ன சின்ன அடியெல்லாம் நமக்கு வலிக்கவே வலிக்காது. ஆனா திரும்பப் பெறமுடியாம குடும்பம், சமுதாயம் உங்களிடமிருந்து பறிக்குதுன்னா, சண்டைப் போடப்போனா, இந்தப் பக்கம், அந்தப் பக்கம் நமக்கு சப்போர்ட்டுக்கு ஆள் இருக்கிறாங்களான்னு பாத்துதானே சண்டைப் போடறோம் இல்லையா. சண்டைப் போடறதுன்னு நாம தீர்மானிச்சிட்டோம்னா, இதுதான் நம்மோட மெயின் ஃபோகஸா இருக்குமே தவிர, ஐயோ என்ற எண்ணம், வார்த்தை வரவே வராது.

**கேள்வி :** நாம் சில சமயம் முடிவெடுக்கும்போது மனசு சொல்வதைக் கேட்பதா அதாவது *Heart* உணர்வதுபோல, இல்லை அறிவு சொல்வதுபோல கேட்பதா என்கின்ற குழப்பம் வருகிறது. எப்படி முடிவெடுப்பது?

**டாக்டர் ருத்ரன்:** சிம்பிள். லாப நஷ்ட கணக்குதான். எதை செலக்ட் பண்ணா லாபம், எதை செலக்ட் பண்ணா நஷ்டம், எவ்வளவு லாபம், எவ்வளவு நஷ்டம்னு பாத்துக்கிறது முடிவு.

பொதுவாகவே மனசு உணர்ச்சிப்பூர்வமாக முடிவெடுத்ததா, அறிவுப்பூர்வமா முடிவெடுக்கிறதா அப்டின்ற கேள்வி வரும்போது, அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கிறது மூலம்தான் வாழ்க்கையில் சிக்கல்கள் குறையும். சிக்கல்கள் குறையுமே தவிர, குழப்பம்? உதாரணமா நான் என்னோட வாழ்க்கையின் லட்சியமாக ஒரு ஹாஸ்பிட்டலை உருவாக்கணும்னு நினைச்சேன். உருவாக்கினேன். அதை என்னால நடத்த முடியலை. இப்பவே மூடிட்டா இருக்கற கடனோட தப்பிச்சிடலாம். இல்லன்னா இன்னும் கடன் சுமை அதிகமாகும் அப்டின்னு ஒரு காம்ப்ளிகேட்டட் சிச்சுவேஷன். என் மனசு உணர்ச்சிப்பூர்வமா, ரொம்ப நாள்

கழிச்சி உருவாக்கி இருக்கோம், இதை எப்படி மூடறது. எப்படியாவது எதையாவது பண்ணி நடத்திடலாம். மூடறதை ஒரு பத்து வருஷம் கழிச்சி மூடிக்கலாம் அப்டின்னு ஒரு முடிவு பாசிட்டிவ். இன்னொன்னு நல்லா யோசிச்சாச்சி, ஹாஸ்பிட்டல நடத்தி பிசினஸ் பண்றது நமக்கு ஒத்துவராது. அதனால இப்பவே மூடிட்டாக்க என்னோட கஷ்டங்கள் குறையும்ன்றது. அதுதான் அறிவுப்பூர்வமான டெசிஷன். ஸோ, அறிவுப்பூர்வமான டெசிஷன் எடுத்து நான் என்னோட ஹாஸ்பிட்டல மூடிட்டேன். மூடிட்டு நான் சந்தோஷமாதானே இருக்கணும்? நிம்மதியாதான இருக்கணும்? இல்ல. என்னோட அவ்வளவு விரும்பிய ஒன்று என்னைவிட்டு போகும்போது எனக்கு அவ்ளோ வலி. அந்த வருத்தம் வலி போறதுக்காக அடுத்து என்ன செய்யலாம், வேற என்னெல்லாம் செய்யலாம் அப்டின்னு என் மனசு நினைச்சது. ஆக, நல்லா தீர்மானிச்சி, அதன்படி செயல்பட ஆரம்பிச்சா ஆட்டோமேட்டிக்கா அந்த வலி குறையும். இப்ப உணர்ச்சிப்பூர்வமாக ஒரு முடிவை எடுக்கிறோம், நமக்கு ஓரளவு மனசுக்குள்ளயே தெரியும். நாளைக்கு இது சிக்கலாதான் ஆகப்போகுதுன்னு. அந்தச் சிக்கலையும் நாம ஃபேஸ் பண்ணி திரும்ப வந்துட்டோம், சகிச்சிக்கறோம், அந்த வலி நமக்கு பரவாயில்லை, நமக்கு அது வேணும் அப்டின்னு நினைச்சா உணர்ச்சிப்பூர்வமான ஒரு முடிவை எடுக்கலாம்.

காதல் தோல்வி என்ற விஷயமும் அப்படித்தான். காதலிக்கறவன்லாம் தோல்வி அடையறது கிடையாது. காதலிக்கற மாதிரி நடிக்கறவன்தான் தோல்வி அடையறான். பிரியமா இருந்த ரெண்டு பேர், திடீர்னு பிரிஞ்சிட்டாங்க, பிரேக்அப் ஆயிடுச்சி ஐ ஆம் டிப்ரெஸ்டு என்பதைக் காட்டுவதற்காகச் சத்தம்போடுவது அப்டின்னு எல்லாம் நிறையப்பேர் பண்ணுவாங்க. சிலர் தங்கள் கையைப் பிளேடால் கீறிக் கொள்வது எல்லாம் செய்வாங்க இதுபோல மிரட்டினா நாம் சொல்வதைக் கேப்பாங்க என்று நினைப்பதால் செய்கின்ற காரியங்கள். இதுமாதிரியான நேரங்களில் முடிவெடுப்பதைச் சற்று தள்ளிவைக்கணும்

**கேள்வி:** ஆல்ஃபா மெடிடேஷன் பண்றேன். அதையும் மீறி எனக்குக் கோபம் வருது. அதை கண்ட்ரோல் பண்ண நினைக்கறேன். ஆனா என்னால முடியலை...

**டாக்டர் ருத்ரன்:** கோபத்தை கண்ட்ரோல் பண்றது என்பது அவ்வளவு எளிதான விஷயம் கிடையாது. எல்லாருக்குமே கோபம் வரும். அது எவ்வளவு அப்டின்றதுலதான் வித்தியாசம். இப்ப நாம கோபத்தை வெளிக்காட்டறோம்ன்னா நமக்கு வெளிக்காட்ட ஸ்பேஸ் இருக்குன்னு அர்த்தம். இந்த இடத்துல கோவிச்சிக்கலாம் என்பதால நாம கோவிச்சிக்கறோம். எல்லா இடத்துலயும் கோபிச்சிக்கணும்னு இல்லை. கோபம் வராது என்பதெல்லாம் ஏமாற்று வேலை. அப்படி யாருமே இருக்கமுடியாது. கோபம் வராது என்றால் அப்படி இருக்கிறவர்கள் மனுசர்களே கிடையாது.

அட்வைஸ் பண்ணாலே கோபம் வர்றது என்பது நாம பழகிகிட்ட விஷயம். யார் சொன்னாங்க, எதுக்கு சொன்னாங்க, அவங்க ஏன் அப்படி சொன்னாங்க அப்டின்னு யோசிச்சி பார்க்கணும். நீ அட்வைஸ் பண்றதால எனக்கென்ன பிரயோஜனம், உனக்கென்ன பிரயோஜனம் அப்படின்னு பார்க்கணும். எல்லா விஷயமும் எரிச்சல் படக்கூடிய விஷயம் கிடையாது. எரிச்சல் ஏன் நாம படறோம்னா, எப்பவுமே நம்மளை யாராவது டாமினேட் பண்ணி பேசறமாதிரி ஃபீலிங் வரும்போது, டாமினேட் பண்ணல என்ற மாதிரி நாம நடிச்சோம்னா நமக்குப் பிரச்சனை வராது. *Tolerant* என்பது வேறு; *Submission* என்பது வேறு. அதாவது பொறுத்துக்கொள்ளலாம். பணிந்து போகக்கூடாது. உடல்ரீதியாகத் தாங்கிகொள்வது என்பது சாத்தியமில்லை. அதற்கும் ஒரு Physical Limit உள்ளது.

**கேள்வி:** எனது அம்மா எப்பொழுதும் என்மீது சந்தேகப் பார்வையுடன் இருக்கிறார்கள். ஆனால், எனக்கும் என் அம்மாவிற்கும் இடையே நல்ல அன்பு இருக்கிறது. ஆனாலும் எனது செல்போனை எடுத்து பார்ப்பது, Message படிக்கிறது, யாருன்னு கேக்கிறது போன்ற வேலைகளைச் செய்கிறார்கள். பொம்பள பிள்ளைங்கன்னாலே நிறைய ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் இருக்கு. இப்ப வீட்ல பாத்தீங்கன்னா, என் தம்பி வெளியில போய்ட்டு எங்கன்னா சுத்திட்டு வருவான். ஆனா, நான் பெண்ணா பக்கத்துல இருக்கிற கடைக்குக் கூட போகக்கூடாது. வெளியில போய் சுத்திப்பாக்கலாம்னா, உடனே அட்வைஸ் பண்ண ஆரம்பிச்சிடுவாங்க. பொம்பளபிள்ளை இப்படியா செய்யறது அப்டின்னு. ஏன் பொண்ணுங்கள்லாம் வெளியில போகக்கூடாது? வீட்டுக்குள்ளதான்

இருக்கணுமான்னு கேட்டா நாட்டு நெலம சரியில்லை. மக்கள் இப்படி இருக்காங்க. நீ கலெக்டருக்குப் படி. நீ வந்து சொசைட்டியை சேஞ்ச் பண்ணுன்னு பதில்! அவங்க ஏன் இப்படி இரண்டு விதமா இருக்காங்க. ஒரு பக்கம் வீட்டை விட்டு வெளியில போகாதன்னு சொல்றாங்க. இன்னொரு பக்கம் நீ ஒரு பொசிஷனுக்குப் போ அப்புறம் இந்த சொசைட்டிய மாத்து அப்டின்னு சொல்றாங்க. நான் என்ன பண்ணா இந்த சொசைட்டிய மாத்த முடியும், என்னையும் பாத்துக்க முடியும்?

**டாக்டர் ருத்ரன்:** நீங்கள் உங்க அம்மாவை மாற்ற முயற்சி செய்யாதீர்கள். நீங்க உங்க மனதை அம்மாவிற்கு இணையாக சமநிலையில் வைத்துக்கொள்வதுபோல நடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பெண்கள் ஏன் தனித்து நடத்தப்படுகிறார்கள். என்றால் சமூகம் இன்னும் அதற்குத் தயாராக இருக்கவில்லை. இப்ப இருக்கிற அரசியல் சூழல் நம்மை ரிவர்ஸ்ல போக சொல்லுது. ரிவர்ஸ் பேட்டர்ன். இது கலாச்சாரம் குறித்த தவறான கண்ணோட்டத்திலிருந்து வருது. *Misconception!*

**கேள்வி :** நாங்க என்ன கேக்கறோம்ன்னா, எங்களுக்குக் குடும்பத்துல ஏதாவது ஸ்பேஸ் இருக்கா? இல்ல ஆண்களுக்கு மட்டும்தானா? பெண்களுக்கான உலகமே கிடையாதா? வீட்ல பையன்களைத்தான் கொண்டாடுறாங்க. பெண்களைக் கொண்டாடுவதில்லை. நாம வேறு வழியில்லாம இந்த வாழ்க்கையை வாழ தள்ளப்பட்டிருக்கோமோன்னு நினைப்பு வருது? எது எங்களைப் பாதிக்கிறது?

**டாக்டர் ருத்ரன்:** வேற வழியில்லாமன்னோ வாழத் தள்ளப்பட்டிருக்கோம்ன்னோ? அந்தப் பாதிப்புகள் என்ன என்பதைப் பத்தி நீங்க ஃபோகஸ் பண்ணீங்களா? இதெல்லாம் வரும்போது அப்படியே ஃபேஸ் பண்ணிக்கலாம் எதைப் பற்றியும் எனக்குப் கவலையில்லைன்னு இருக்கீங்களா... சொல்லுங்க.

**தளம்:** இப்ப இருக்கின்ற நிலைமையில சோஷியல் எகனாமிக்ஸ், பொலிட்டிகல் பேக்ரவுண்ட்லாம் ரிவர்ஸ்ல போயிட்டிருக்குன்னு டாக்டர் சொன்னாரு. இந்த ரிவர்ஸ் பேட்டர்ன் பத்தி உங்களுக்கு ஏதாவது கருத்து இருக்கிறதா? அதை நீங்கள் விவாதிக்கணும். எப்படி அது உங்களை பாதிக்கப்போகிறதுன்னு. நாம 11வது செஞ்சுரிக்குப் போகமுடியாது, 9வது செஞ்சுரிக்குப் போகமுடியாது. 23, 24, 25



நூற்றாண்டுகளுக்குதான் போகமுடியும். ரிவர்ஸ் போக்கு உங்களை எந்த வகையில் உளரீதியா பாதிக்கும்னு நினைக்கறீங்க. அதற்கு எதிராக உங்களுக்கு ஏதாவது கருத்துக்கள் இருக்கா என்பதையும் நீங்கள் பேசலாம்.

**கேள்வி:** கௌசல்யா என்ற பெண்ணுக்கு வந்த நிலையை எப்படி பாக்கிறது? ஆண்கள் இறந்துபோறாங்க. ஆனா பெண்களுக்கு மறுபடியும் லைஃபே இல்லை. அது எந்த மாதிரியான டிப்ரஷனுக்குள்ள எங்களை வைக்கும். அது தேவையா? தேவையில்லையா? இசையில்கூட ஏற்றத்தாழ்வு பாக்கறாங்க. சென்னையில் திருவையாறு என்று நடத்துவதுபோல, ஒரு இயக்குநர் கானா பாடல்களுக்காக ஒரு நிகழ்ச்சி நடத்தினார். இது வெல்லாம் பாதிக்குது.

**டாக்டர் ருத்ரன்:** அவங்க இரண்டாவதா சொன்னது எனக்கு என்னமோ சரியில்லை இது என்று தோன்றுகிறது. நீங்க உங்கள் இசையை நடத்தினால் நாங்கள் எங்கள் இசை நிகழ்ச்சியையும் நடத்துவோம் என்பது அல்ல, நீங்க இருக்கிற இடத்தில் வந்து நாங்கள் எங்கள் பாட்டை பாடுவோம் என்பதுதான் சரியான பாதை என நினைக்கிறேன். இப்பல்லாம் மீடியாக்காரன் நமக்காக சிந்திக்கிறான். ஐந்து ஆறு பேர் கூட்டமாக உட்கார்ந்துட்டு பேசிட்டே இருக்கான். அப்பறம் 6 மணிலயிருந்து 10 மணி வரைக்கும் டீ.வி. சீரியல்கள். மோசமான நடவடிக்கையில ஈடுபடறதெல்லாம் பெண் என்பது மாதிரி காட்றாங்க. அரசியல் ரீதியாகவும், மத ரீதியாகவும் நம்மை பின்னடைவிற்கு கொண்டு போறாங்க. இந்த காலகட்டத்தை மீறி வரணும்னா, நாம போராடித்தான் ஆகணும்.

**பேராசிரியர்:** ஒவ்வொரு தனி நபரும் மாறும்போது, ஒரு குடும்பம் மாறும், ஒரு குடும்பம் மாறும்போது இந்த சமுதாயமும் மாறும். சமுதாயம் மாறும்போதுதான் நாடு மாறும். எதுலயும் நமக்கு சந்தோஷம் இல்ல, திருப்தியில்ல. இது ஆண்களுக்கான சமூகம் அப்டின்னு நினைக்கறோம். சமூகம்

ஆண்களுக்கு மட்டுமில்ல. ஆண்களுக்குதான் நிறைய விஷயம் தெரியுதுன்னு. நாம நிறைய தப்பா நினைச்சிக்கறோம், அவங்களுக்குத்தான் எல்லாம் தெரியும்னு. ஆனா அவங்களுக்கு ஒண்ணுமே தெரியாது. நாமதான் சொல்லித்தர வேண்டியிருக்கிறது. சமுதாயத்தில் இப்படி குறைபாடுகள் இருக்குது. நீங்க இன்னைக்கு ஸ்டூடண்ட்ஸ் ஆக இருக்கீங்க. நாளைக்கு டிகிரியோ, இன்னொரு டிகிரியோ முடிச்சி வேலைக்குப் போகும்போதோ, வாழ்க்கையிலோ எந்த மாதிரியான விஷயத்திற்கு நீங்க ஆசைப்படறீங்கன்னு தெரியல. இரும்புக் கூண்டில் இருந்து தங்கக் கூண்டிற்கு போக ஆசைப்படறோமா, இல்ல கூண்டே இல்லாத ஒரு சமுதாயத்துல வாழ நினைக்கறோமா? என்னவாக இருக்கணும்னு நீங்க நினைக்கறீங்க?

சோஷியல் ஒர்க்ல அவெர்னஸ் வரணும்னா உங்களோட ரோல் என்னவாக இருக்கணும்னு நீங்க நினைக்கறீங்க? இல்லன்னா நமக்கு ஒண்ணுமே தேவையில்லைன்னு நம்மை விடலாமா? சூழ்நிலையும் நம்மை உருவாக்குகிறது. நாம வெளியில் வந்து நிறைய கத்துக்கணும். பேசணும். டாக்டர் ருத்ரன் வழிகாட்டக்கூடியவர். நேரிலோ செய்தி அல்லது மின்அஞ்சல் மூலமாகவும் அவருடைய ஆலோசனைகளை வேண்டுபவர்கள் பெறலாம்.

**தளம்:** ஆயிரக்கணக்கான வருஷமா, லட்சக்கணக்கான வருஷமா மரங்கள்ல எப்படி இலைகள் உதிர்ந்துகிட்டே இருக்குதோ, அந்த மாதிரி நாம உதிர்ந்துகிட்டே இருக்கோம். நம்மை எதிர்கொள்வதற்கும், இந்த சமுதாயத்தை எதிர்கொள்வதற்கும் நமக்கு ஆரோக்கியமான மனநிலை வேணும்னா, அதுக்கு யாரிடம் கேட்டால் சரியான கைடென்ஸ் கிடைக்குமோ அவங்ககிட்ட. இப்ப நாம எல்லாமே பெரிய விஷயத்தைப் பத்தி பேசிக்கிட்டிருக்கோம். நம்ம மனநிலை உயர்வா இருக்கு. இதுவே மோசமான ஒரு சூழ்நிலையில நாம இருந்தோம்னா?, நம்ம சூழ்நிலைதான் நாம உருவாக ஒரு காரணமாக இருக்குது. எந்த மாதிரியான சூழ்நிலையில நாம இருக்கப்போகிறோம் என்பதை நாம தான் தீர்மானம் பண்ணனும். இப்ப தமிழ்நாட்டில் எக்கச்சக்கமான பிரச்சனைகள் இருக்கு. ட்விட்டர், பேஸ்புக், வாட்ஸ்ஆப்ல இருக்கறவங்களுக்குத் தெரியும். இதையெல்லாம் உடைச்சிக்கிட்டு வரும்போதுதான், நமக்கான வாழ்க்கைய நாம வாழமுடியும்.

இயற்கை உடற்கூறுகள் தவிர வேறு எந்த வேறுபாடும் ஆண், பெண் இடையே கிடையாது. சமத்துவமான ஒரு சமுதாயம் வேணும், நிறையப்பேர் நம்முடைய உணர்வுகளை எப்படி வெளிப்படுத்தறதுன்னு தெரியாம புழுங்கிக்கிட்டே இருக்கோம். சைக்கிள் டியூப்ல அழுத்தம் அதிகமானா எங்க வீக்கான பகுதி இருக்குதோ, அங்க எப்ப வேணாலும் பர்ஸ்ட் ஆகும். எப்ப பர்ஸ்ட் ஆகும்னு யாருக்குமே தெரியாது. எல்லாரும் ஏதோ ஒரு வகையில பர்ஸ்ட் ஆகியிருக்கோம். அப்படி இல்லாதவங்க கிடையாது. எஸ் ன்னு சொல்றதுக்கு நமக்கு ஆயிரம் காரணங்கள் இருக்குது. நோ ன்னு சொல்றதுக்கு இருக்கா? நோ.. வேண்டாம்... சொல்வதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். நோ இது எனக்குத் தேவையில்லைன்னு, நோ சொல்ல என்றைக்கு நாம் கற்றுக்கொள்ளப் போகிறோமோ அன்றைக்குத்தான் நம்மால எழுந்து நிக்க முடியும். நீங்க மாணவிகள் மட்டும்ன்னு நாங்க பார்க்கல. இந்த சமுதாயத்துல உங்களுக்கான ஒரு ரோல் இருக்கிறது. அந்த ரோலை நீங்க பிளே பண்ணாததாலதான், அந்த ரோல யார் யாரோ எடுத்துப் பிளே பண்ணிட்டு இருக்காங்க.

தொடர்ந்து நாம உரையாடலாம். நன்றி.



*இந்த உரையாடல் நிகழ்வில் (25-01-2018) முனைவர். அரங்கமல்லிகா, முனைவர். ஆர்.கே. மாயா, முனைவர். முத்துமாலை, முனைவர். பிரபா, முனைவர். முல்லை, திருமதி. கீதா மற்றும் எத்திராஜ் கல்லூரி மாணவியர் கலந்துகொண்டார்கள்.*

குறிப்புப்பதிவு & ஆக்கம் : **மு. ஞானசூரியன்** . கணினி அச்சாக்கம் : **நிஷா.**

e-mail : arangamallika@gmail.com
dr.rudhran@gmail.com

# கனவுகளுக்கான இடம் எங்கே இருக்கிறது?

அதங்கோடு அனிஷ்குமார்

தமிழகக் கல்விச் சூழலில் கற்றல் செயல்பாட்டில் ஆசிரியர் மையமாக இருந்த காலம் மாறி மாணவன் மைய நிலைக்கு வருவதற்கான எத்தனிப்புகள் முணுமுணுப்புகளுக்கிடையே தொடங்கியிருக்கின்றன. இனிவரும் காலங்களில் மாணவர் மைய கல்வியில் ஆசிரியர் ஒரு ஒருங்கிணைப்பாளராக அல்லது நெறியாளராக *(Facilitator)* மட்டுமே இருக்க முடியும். தானும் கற்று தன் மாணவர்களையும் கற்றல் செயல்பாட்டில் இணைத்துக் கொள்ளும் ஆசிரியரே நல்லாசிரியராகக் கருதப்படும் சூழல் உருவாக வேண்டும். ஆனால் மரபார்ந்த பார்வையுடைய ஆசிரியர்களுக்கு இந்த மாற்றத்தை உள்வாங்கும் மனநிலை ஏற்படாததில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. இந்தச் சூழலில் நவீனத் தொழில்நுட்ப சாதனங்களின் வருகையும் பயன்பாடும் ஆசிரியரின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கிவிடுமோ என்ற அச்சமும் எழாமலில்லை. ஆசிரியரல்லாத வகுப்பறைகள் நோக்கிய நகர்தல் சாத்தியமா எனும் கேள்விக்குப் பதிலாக *Virtual Classroom* மற்றும் காணொளிக் காட்சி முறையிலான படிப்பு என்பவை அதிகரித்து வரும் நிலையில் வளர்ந்து வரும் உலகச் சூழலுக்கு ஏற்றவாறு தங்களைப் புதுப்பித்துக் கொள்ளும் ஆசிரியர் மட்டுமே தொடர்ந்து இயங்கும் நிலை விரைவில் உருவாகலாம்.

நேற்றைய ஆசிரியர் மாணவர் உறவு கண்டிப்பையும் அன்பையும் ஆயுதமாகக் கொண்டு மாணவனை தன் நேரடி கண்காணிப்பின் கீழ் எப்போதும் வைத்திருக்கும் குருசிஷ்ய பந்த அடிப்படையிலானதாக இருந்தது. இந்த உறவு படிப்பிற்குப் பிறகும் பொதுவெளியிலும் தொடரும் நீண்ட கால உறவும் கூட. கார்ப்பரேட் மனநிலை இன்றைய ஆசிரிய மாணவர் உறவை வாடிக்கையாளருக்கும் வணிகர்களுக்குமான உறவாக மாற்றிய பின்புலத்தின் நிகழ் அரசியலைப் புரிந்து கொள்வதன் மூலமாகத்தான் சமகால மாணவனின் மனநிலை நோக்கி நகர முடியும் என்று தோன்றுகிறது. மாணவர்களை வாடிக்கையாளராக மாற்றுவதன் மூலம் இந்த உறவு எவ்வித தார்மீக உறவுமற்ற தற்கால உறவாக உருமாற்றம் பெறும் ஆபத்தும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த மனநிலையில் வளரும் மாணவனை நோக்கித்தான் உலகச் சந்தையில "உன்னையே நீ விற்க முடியும்" *(You Can Sell yourself)* என்று அவனை அவனே பண்டமாக உணரும் சாதுர்யமும் நடந்தேறுகிறது. போட்டி நிறைந்த உலகச்சந்தையில் தன் மாணவனை விரைவாகமற்றும்வெற்றிகரமாகவிற்பனையாகும் ஒரு பண்டமாக மாற்றுவது தான் நம் கால ஆசிரியர்களின் சவாலாக இருக்க வேண்டும் என வணிகக் கலாச்சாரம் திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது. இந்த பின்னணியில் தான் நூறு விழுக்காடு வெற்றி எனும் கோஷத்தையும், நூறு விழுக்காடு வேலைவாய்ப்பு தரும் படிப்பு எனும் அறிவிப்பையும் விளம்பரங்கள் மூலம் பெரும்பாலான கல்வி நிலையங்கள் முன் வைக்கின்றன.

மதிப்பெண் பெறும் இயந்திரங்களாக மாணவர்களை மாற்றும் சூழலில் மிகவும் மனநெருக்கடிக்குள்ளாகும் ஆசிரியர்களும் மாணவர்களும் தங்களை அறியாமலேயே தங்களுக்கிடையில் எழும்பும் சுவர்களைக் கவனிக்கத் தவறிவிடுகிறார்கள். இன்னும் விரித்துக் கூறுவதானால் போட்டி மாணவர்களுக்கும், மாணவர்களுக்கும் அல்ல. மாறாகக் கோழிப் பண்ணைகளாய் பெருகும் கல்வி நிலையங்களுக்கிடையிலான போட்டி தான் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இத்தகைய போட்டிகளை உருவாக்கும் கல்வி நிலையங்கள் தான் உலகின் அதிகம் விற்பனையாகும் பண்டங்களை (மாணவர்களை) தயாரிப்பவர்களாக இருக்கிறார்கள்.

உடல் மற்றும் உளவியல் சார்ந்த மாற்றங்களை உணரும் பதின்பருவ வயதில் தான் தாங்கள் உலகச் சந்தையில் பண்டமாக மாற்றப்படுகிறோம் என்பதை உணராமலேயே மாணவர்கள் வார்த்தெடுக்கப்படுகிறார்கள். தாங்கள் தேடும் தங்களுக்கான அடையாளங்களைத் தரத் தவறும் சமூகமும் இந்த பண்டமாற்றுதலில் பங்குதாரராக இருப்பதே அவலத்தின் உச்சம். இந்தச் சூழ்நிலைதான் அடையாளச் சிக்கலை *(Identify Crisis)* உருவாக்கிவிடுவதோடு மன அழுத்தத்தையும் மனச்சிதைவையும் உருவாக்கும் காரணியாகவும் மாறி மாணவனை தனித்துவிடப்பட்டவனாக உணரவும் வைக்கிறது. ஆகவே அகத்தனிமையில் மாணவர்கள் சிக்கித் தவிப்பதற்கு நோய்க்கூறு மிகுந்த நம் சமூக அமைப்பும் ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது.

சிறைச்சாலை விதிகளையொத்த விதிமுறைகளைக் கொண்ட விடுதிகளைக் கொண்ட பள்ளிகள் நோக்கி படையெடுக்கும் பெற்றோரும் அடிமைச் சேவை செய்யும்படி பணிக்கப்படும் ஆசிரியப் பெருந்தகைகளும், கல்வியை வியாபாரமாக்கி, கல்வி நிலையங்களை வியாபாரத்தளங்களாக்கி சுவரொட்டிகளில் பல்லிளிக்கும் கல்வி வள்ளல்களும் கொண்ட தனியார் பள்ளி மற்றும் கல்லூரிச் சூழல் செக்குமாட்டு மனநிலை கொண்ட மாணவனைத் தான் உருவாக்கித்தருகிறது. மேலும் தங்களின் வியாபார இலக்கை எட்ட மாணவர்கள் மீது தொடர்ந்து தரப்படும் அழுத்தம் தான் அவனை சமூக வாழ்விலிருந்து அந்நியப்படுத்துவதோடு சிலநேரம் சமூகம் மீது வெறுப்பை விதைக்கவும் செய்கிறது.

தேர்வுகளில் வெற்றி பெற்றோர் மட்டுமே வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் எனும் மனநிலையை உருவாக்குவதன் மூலம் தேர்வில் தோல்வி அடைவோர் வாழத் தகுதியற்றவராகக் கருதப்படும் நிலையை ஏற்படுத்தி அவர்கள் மனதில் விரக்தி மனப்பான்மையை வளர்த்தெடுக்கும் சூழல் ஆரோக்கியமானதல்ல. தேர்வில் ஏற்படும் தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாத மாணவர்களால் வாழ்க்கையில் ஏற்படப்போகும் சிக்கல்களுக்கு எப்படி விடை காணமுடியும்? என்பதே நம்முன் நிற்கும் கேள்வியாகும். இப்படி தற்கொலை எண்ணத்தைத் தோற்றுவிக்கும் அல்லது தற்கொலைக்கு தூண்டும் சமூக அமைப்பிலிருந்து மாணவர்களை விடுவிக்கும் மந்திரச்சாவி எங்கே இருக்கிறது? இந்தச் சூழல் மாறாதிருப்பதில் பெற்றோரின் பங்கும் இல்லாமல் இல்லை.

பெரும்பாலான பெற்றோர்கள் சில குறிப்பிட்ட தனியார் பள்ளி அல்லது கல்லூரிகளில் தங்கள் குழந்தைகள் படிக்கிறார்கள் என்று சுய தம்பட்டம் அடிப்பதற்காகக் குழந்தைகளின் விருப்பங்களை அல்லது கனவுகளைச் சாகடிக்கிறார்கள். குறிப்பாக அரசு அல்லது தனியார் நிறுவனங்களில் உயர் பதவி வகிக்கும் நடுத்தர மற்றும் மேல்தட்டு கனவான்கள் தங்கள் கனவைச் சுமக்கும் கழுதைகளாகத் தங்கள் குழந்தைகளை மாற்றுவது அவர்களின் உளவியல் சிக்கலுக்கு வழிவகை செய்கிறது. முதல் தலைமுறை ஏழை மாணவர்களோ தங்கள் கனவுகள் என்னவென இனம் காண முடியாதபடி குழம்பித் தவிப்பதோடு தாங்கள் பயிலும் கல்வி நிலையங்களைக் கேளிக்கை கூடாரங்களாக மாற்றித் தங்களை தாங்களே ஏமாற்றி கொண்டிருக்கிறார்களோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. முன்னர் குறிப்பிடப்பட்டது கனவு சுமக்கும் பிரதி எனில் பின்னது கனவை கண்டடைய முடியாமல் தவிக்கும் பிரதி எனக் கொள்வதில் தவறில்லை.

மாணவர்கள் தங்கள் கனவுகள் வெல்ல அல்லது கனவுகளைக் கண்டடைய ஆசிரியர்களே வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். ஆனால் உண்மை நிலவரம் முற்றிலும் வேறாக இருக்கிறது. நிர்வாகத்தின் இலக்கை சுமக்கும் படி நிர்ப்பந்திக்கப்படும் ஆசிரியர்களால் எப்படி மாணவர்களின் கனவுகள் வெல்ல திசை காட்ட முடியும்? திசைக்காட்டிகள் எத்திசையைக் காட்ட வேண்டுமென நிர்வாகம் முடிவெடுக்குமெனில், நிர்வாகம் எந்த முடிவெடுக்க வேண்டுமென உலக முதலாளிய சந்தை முடிவெடுக்கும் எனில் கனவுகளுக்கான இடம் எங்கே இருக்கிறது? என்பதே மிகப் பெரிய கேள்வி.

சுமூகமானச் சூழலற்ற கல்வி நிலையங்களில் தங்கள் சுதந்திரக் காற்றையே சுவாசிக்க இயலாமல் பணி நெருக்கடி மற்றும் பண நெருக்கடியால் உழலும் ஆசிரியர்களால் எப்படி ஆகச் சிறந்த மாற்றங்களை உருவாக்க முடியும்? சுயசிந்தனையும் சுதந்திரச் சூழலும் இல்லாத வெறும் 'கற்றுச்சொல்லிகளாக' வலம் வரும் ஆசிரியர்களிடம் மாணவர்கள் தங்கள்

வாழ்க்கைக் கனவை எப்படி ஒப்படைப்பது?

எல்லா கல்வி நிலையங்களிலும் அடிமை வாழ்வே சுகபோகமென எண்ணும் ஆசிரியப் பெருந்தகைகள் உண்டு. அரசியல்வாதிகளை மிஞ்சும் அரசியல் செய்யத் தெரிந்தோரும் உண்டு. மாணவர்களை தன் சுயலாபத்திற்காகப் பயன்படுத்தும் ஆசிரியர்களும் உண்டு, இவர்களே இன்றைய 'ஆசிரியப் பெரும்பான்மை' என்பதே நம்மை உலுக்கும் உண்மையாக இருக்கிறது. துறை வல்லுநர்களே ஆசிரியர்களாகக் கோலோச்சிய காலம் மாறி இத்தகைய தன் துறை சார்ந்த அறிவுக் குறைபாடுடையவர்களே இன்று கல்வி நிலையங்களில் பெரும்பான்மையாக இருப்பதால் மாணவர்களின் அறிவு மழுங்கடிக்கப்படுகிறது. இந்த ஆசிரியப் பெரும்பான்மையினரால் எள்ளி நகையாடப்படும் குறைந்த விழுக்காடாக இருப்பதால் புறந்தள்ளப்படும் 'ஆசிரியச் சிறுபான்மையினரே' மாதிரிகளாக ஏற்றுக்கொள்ளத்தக்கவர்களாக இருக்கிறார்கள்.

எண்ணிக்கையே எல்லாவற்றையும் தீர்மானிக்கும் காரணியாக மாறும் நிலையில் 'ஆசிரியச் சிறுபான்மையினரின்'; குரல் அடங்கிய குரலாகவே இருக்கிறது. ஆசிரியப் பெரும்பான்மைக்கு நேரெதிர் திசையில் பயணிக்கும் இவர்கள் தற்சார்பும், சுயசிந்தனையும், பன்முகவாசிப்பும் ஊக்குவிப்புத் திறனும்மிக்கவர்கள், சிறுமை கண்டு சீறும் இவர்கள் பெரும்பான்மையின் கேலிக்குரியவர்கள். இவர்கள் மாணவர்களின் அடையாளச் சிக்கலுக்குத் தீர்வாக இருப்பவர்கள். ஆனால் தீர்வாக ஆகாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்வதே ஆசிரியப் பெரும்பான்மையின் பெரும்பணியாக இருக்கிறது என்பதே பொதுச் சமூகத்தின் பார்வைக்கு வராத பக்கங்களில் ஒன்றாகும்.

கல்வியின் நோக்கம் வர்க்க வேறுபாடற்ற, சமத்துவ மற்றும் சுய சிந்தனை கொண்ட மாணவர்களை உருவாக்குவதாக இருக்க வேண்டுமென்ற கல்வியாளர்களின் எண்ணம் ஈடேற வேண்டுமானால் ஒரு விழிப்பு நிலை கொண்ட சமூக அமைப்பு கட்டமைக்கப்பட வேண்டும். அது வெறும் வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட கல்வியாக இருக்கக் கூடாது. ஏனெனில் வேலைவாய்ப்பை மையமாகக் கொண்டு பத்தாண்டு அல்லது பதினைந்தாண்டு என சுழற்சி முறையில் மாணவர்கள் கூட்டம் கூட்டமாக சில படிப்புகளைத் தேர்ந்தெடுப்பதும், பின்னர் வேலைவாய்ப்பு குறைவு ஏற்படும்போது அப்படிப்புகளுக்கான மதிப்பிழப்பு ஏற்படுவதும் தொடர் கதையாகிவிட்டது. தற்போது பொறியியல் படிப்புகளுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவையும் அதனால் சுயநிதிக் கல்லூரிகளில்; ஆசிரியர்களின் பணி பாதுகாப்பு இன்மையையும் உடனடி விளைவாகக் முன் வைக்கலாம். இந்த இடத்தில் தான் படிப்புத் தேர்வும் வாழ்வின் தேவையும் இணையும் புள்ளியையும் நாம் கண்டடைய வேண்டியிருக்கிறது. வாழ்வின் தேவையே மிக முக்கியமானதாக மாறிவிடும் போது அறம் சார் மதிப்பீடுகளின் வீழ்ச்சி பற்றிய பேச்சுகளைத் தொடங்க வேண்டியிருக்கிறது.

வாழ்வியல் விழுமியங்கள் பற்றிய உரையாடலுக்கான உயிரோட்டமான களமாக வகுப்பறைகள் மாற்றப்பட வேண்டும். தன்னை அழுத்தும் பிரச்சினைகளைப் பற்றி பேசுவதற்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். பதின்பருவ மனநிலை மாற்றங்கள் குறித்துப் பேசவும், கலந்துரையாடவும் மனநல ஆலோசகர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் சின்னச்சின்ன தயக்கங்களைக் களையவும் வாழ்வின் மீது நம்பிக்கை ஏற்படுத்தவும் பாடம் எனும் குறுகிய எல்லைகளைக் கடந்தும் மாணவர்களிடம் ஆசிரியர்கள் பேச வேண்டும், பிறருக்கு முன் மாதிரியான வாழ்க்கை வாழ அறம் சார் வாழ்க்கை வாழ்ந்த மனிதர்களை அவர்களுக்கு முன்மாதிரிகளாக அடையாளம் காட்ட வேண்டும்.

சமூகப் பொறுப்புகள், தனி நபர் வழிபாடற்ற, பொதுப் பிரச்சினைகளுக்காக உரிமைக் குரல் எழுப்பும் திறன்மிக்க, சனநாயக உணர்வு மிக்க மாணவர்களை உருவாக்கப் பெற்றோர் –ஆசிரியர் மாணவர் கூட்டுறவு வலுப்பெற வேண்டும். வாழ்வின் மீது நம்பிக்கை கொண்ட, பிறருக்கும் வழிகாட்டும் விழிப்புணர்வு பெற்ற மாணவர்களால் மட்டுமே சமூகமும் நாடும் பயன்பெறும் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.

e-mail : athangoduanish@rediffmail.com

# உளவியல் ஆவணங்களாகும்
# கோபிகிருஷ்ணனின் படைப்புகள்

பா. கண்மணி

உளவியல் பட்டதாரியான கோபிகிருஷ்ணன், உளவியல் துறையிலும் சமூகசேவைத் துறையிலும் பணியாற்றியவர். தன்னுடைய துறைகளில் அவர் சந்தித்த மனப் புதிர்கள் ஏராளம். கோபி, தம் படைப்புகளின் மூலமாக அப்புதிர்களுக்கு விடை தேடுகிறார். விடை காணும் படிகளை நம்மோடு ஒரு தோழனாகப் பகிர்ந்துகொள்கிறார் கோபி. 1983ஆம் ஆண்டு, தன் 38ஆவது வயதில் எழுதத் துவங்கினார். இவருடைய முதல் சிறுகதைத் தொகுப்பான 'ஒவ்வாத உணர்வுகள்', 1986இல் புதியதொரு குரலாக வெளிவந்து கவனத்தை ஈர்த்தது. நகுலன், அசோகமித்திரன் போன்ற எழுத்தாளர்களின் பாராட்டு பெற்ற எழுத்து கோபியுடையது.

கோபிகிருஷ்ணன் எழுதிய 86 சிறுகதைகளும் அவரைச் சுற்றியிருக்கும் எளிய மனிதர்களின் மன அவசங்களாலேயே நெய்யப்பட்டிருப்பினும் வாசகரை முற்றிலுமாக உள்ளிழுத்துக்கொள்ளக் கூடியவை. அளவில் சிறிய கதைகளினூடாக மனதின் விநோதங்களை சகஜமான சொற்களில் புரியவைக்கும் கோபியின் யுக்தி வியக்கவைப்பது.

இந்த சமூகத்தின் அதீதமான கட்டுப்பாடுகளும் நெறிமுறைகளுமே மனதை இறுக்கிப் பிறழச் செய்கின்றன என்பது கோபியின் ஆதங்கம். அன்றாட வாழ்வில் மனிதர்களின் அதீத நடவடிக்கைகளை வெவ்வேறு மனப்பிறழ்வு களாக வகை பிரிக்கிறார் கோபி. அவருடைய கதைகளில் பல்வேறு நிலைகளுக்கான, பிறழ்வுகளுக்கான எல்லா பெயர்களும் சர்வசாதாரணமாகப் புழங்கும்.

உதாரணத்திற்கு 'மடி' என்பதை *'avoidance behaviour'*, என்கிறார். சாதுவான கணவர், அராஜகமான மனைவியிடமிருந்தும் புறச்சூழல்களின் உபாதைகளிலிருந்தும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு *'escapism'* ஆகக் குடியை நாடுவதாகச் சொல்கிறார். இவருடைய கதைகளைப் படிக்கப் படிக்க நம்மை நாமே சுயபரிசீலனை செய்துகொள்வது தவிர்க்க முடியாததாகிறது.




**'காணி நிலம் வேண்டும்' சிறுகதையிலிருந்து சில பகுதிகள் உங்கள் வாசிப்புக்கு :**

'சாமி கண்ணைக் குத்தும்', என்று பயமுறுத்தும் மதமும், 'உன் வீட்டில் நடக்கும் சம்பாஷணைகளை ஆண்டவன் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்', என்று சொல்லும் மதமும் *Paranoia* நோய்க்கு வித்திடுகின்றன.

சந்தேகம்தான் இதன் அடிப்படை. செய்யும்போது அதைப் பார்த்துவிட்டதாகச் சந்தேகம் வந்தாலும் மற்றவர்கள் தன்னைப் பற்றித்தான் பேசுகிறார்கள், தான் செய்த இழிசெயலைப் பற்றித்தான் பேசுகிறார்கள் என்ற நினைப்பு அடிப்படை. இந்நோய் மனத் திடம் அதிகமாக இல்லாத எவருக்கும் எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்படலாம். சமூகம் அங்கீகரிக்காத ஒன்றை ஒருவன் பிறருக்குத் தெரியாமல் விட்டாலும் இந்த மனநோய் ஏற்படுகிறது.

தன்னைப்பற்றி உயர்வாக நினைத்துக் கொள்பவன் தன்னை வீழ்த்த சதிகள் நிகழ்வதாக நினைத்தாலும் இது ஏற்படுகிறது. பிறர் தன்னை ஏமாற்றுவதாக நினைப்பதே *Paranoia*-வின் அறிகுறி தான். பார்க்கப் போனால் இந்த வியாதி நம் சமூகத்தில் மிகவும் பரவலாக வியாபித்திருக்கும் ஒன்று. காய்கறி, பழக்காரன் அநியாய விலை சொல்கிறான் என்பதெல்லாம் இதன் விளைவே. தனக்கு ஒரு *self image* இருக்கிறது என்று நாம் நம்மை ஏமாற்றிக் கொண்டிருக்கும் வரையில் இந்த மனநோய் தாராளமாக சிநேகம் கொள்ளும்.

*Paranoia* எனும் இந்த வகை சித்தப்பிரமை என்பது, பிறர் மீது நம்பிக்கை இல்லாததோடு அவரைக் கண்டு அஞ்சுதலுமாகும்.

* * *

**காதல் என்பது :** காதலின் இரு துருவங்களையும் கோபிகிருஷ்ணன் தன்னுடைய புனைவுகளில் சித்தரித்திருக்கிறார்.

'டேபிள் டென்னிஸ்', வித்தியாசமான பாணியில் எழுதப்பட்ட குறுநாவல். அலுவலகத் தோழி அயானாவை (அந்தஸ்தில் சற்று உயர்ந்தவள்), அவளது திருமணத்திற்கு முன்பிருந்தே காதலிக்கிறான் அவன். அயானா வீட்டிற்குப் போய் நான்கு மணிநேரம் சலிக்காமல் காத்திருந்து வெறுமே அவளைப் பார்த்துவிட்டு வருகிறான். ஈஸ்டர் அன்று கல்யாண்ஜி கவிதைப் புத்தகத்துடன் சென்றால் வீடு பூட்டியிருந்தது. சிலமணி கழித்து மீண்டும் ஆட்டோவில் வந்து பார்க்கும்போதும் வீடு பூட்டியே இருக்கிறது.

**மக்களின் *mass hysteria* தான் சாமியார்களை உருவாக்குகிறது'. 'பக்திப் பரவசத்தைக் கஞ்சா கலந்த பிரசாதம் மூலம் மிகவும் அருமையாக ஏற்படுத்தலாம்'.**

ஒரு குரோட்டனையும் புத்தகத்தையும் காகித உறையில் போட்டுக் கதவு வழியே தோழமையுடன் நுழைக்கிறான். தோழியின் நினைவுச் சுமையுடன் வீடு திரும்புகிறான். மறுநாள் அயானா, பரிசைத் தன் நெஞ்சில் ஏந்திக் கொண்டதாகத் தொலைபேசியில் நன்றி தெரிவிக்கிறாள். தொலைபேசி வழியே இருவரும் முத்தங்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள். இது கற்பனையோ எனக் குழம்புகிறான். அயானாவைத் தேவதையாகக் காண்பவன், அவள் அழகுக்குத் தன் உயிரையும் தரலாம் எனத் தவிக்கிறான்.

திருமணம் செய்துகொண்டு மகிழ்ச்சியாக வளையவரும் அயானாவைப் பார்த்து, 'அயானா, தங்கள் கணவர் என்னளவு தங்களைக் காதலிக்கிறாரா?', என மனதிற்குள் பொருமுகிறான். அவனும் மணமானவன்; வெவ்வேறு பெண்களுடன் உறவு கொள்பவன். ஆனால் இவையெதுவும் அயானா மீதான அவனுடைய நேசத்தைப் பாதிப்பதில்லை.

அவர்களுக்கிடையேயான அதிகபட்ச நெருக்கம் கோபிகிருஷ்ணன் வரிகளில்:

தங்கள் *panties* சாம்பல் நிறம்தானே என்றேன் தணிந்த குரலில். இடது கன்னத்தில் கையை வைத்து முகத்தைத் தள்ளினார். வலது கன்னத்திலும் கையை வையுங்கள். பிரான் அப்படித்தானே உபதேசித்திருக்கிறார் என்றேன். (அவன் நேசத்தின் தன்மையைப் புரிந்து கொண்டிருக்கும் அயானா, அவனை இதுபோன்ற சிறு வரம்பு மீறல்களுக்கு அனுமதிக்கிறாள். அவள் ஒரு விதத்தில் இந்த கபடமில்லாத பிரியத்தை அனுபவிக்கிறாள்.)

ஓர் இருபத்து ஐந்து நிமிடங்கள் இனிமையான வெற்றுகளைப் பகிர்ந்துகொண்டோம். கண்களால் ஒருவரையொருவர் விழுங்கிக் கொண்டிருந்தோம். இனிமையான வெற்றுகள் எங்கள் இருவருக்கும் மட்டும் புரியும், சுத்தமாக ஒரு வேற்றுலகம். ஆன்மாக்களின் சந்திப்புலகம். நந்தவனம். மலர்கள் எங்கள் நட்பின்மீது பொழிந்து கொண்டிருந்தன. நாங்கள் மலர்களில் புதைக்கப்பட்டோம். மீண்டும் எழவே இல்லை.

அயானாவுடன் காமம் கூடப் பேசுபவன், அவள் தாயானதும், 'அயானாவுக்கும் அவரது கணவருக்கும் நடுவில் படுத்துறங்கும் குழந்தையாக நான். தாங்கள் தாயான பிறகுதான் அதிகமாகத் தங்களைக் காதலிக்கிறேன். எனக்குத் தேவை ஒரு தாயார். தங்கள் வடிவில் ஒரு தாயார். எனக்கும் பாலூட்டுங்கள் அன்னை மேரி, அயானா! என்னைப் *pram*ல் போடுங்கள். இது பாலுறவா? நான் தங்களிடமிருந்து விரும்புவது தங்கள் முலைப் பாலைத்தான்', என்று தனக்குள் மாய்கிறான். இந்நிலையில் அவன் காதல் உச்சமடைகிறது.

அறுபது வயது அயானாவையும் மாறாமல் நேசிக்கிறான். அயானா நீங்கள் ஒரு நவீன ஓவியம் போல. நீங்கள் பேசியது அனைத்தும் மறந்தாலும் இந்த இனிமையான *impression* வாரக் கணக்கில் போதையூட்டுகிறது. அயானா, தங்கள் நினைவுகளின் இனிய சுமை எப்பொழுதும் தொண்டையில் ஆரம்பிக்கிறது. உடம்பு முழுவதும் அந்தக் கதகதப்பு பரவச் சரியாக நான்கு நிமிடங்கள் ஆகின்றன. நான் நகத்தைக்கூட வெட்டிக்கொள்ளவில்லை. அதிலும் தங்களின் அந்தக் கதகதப்பை உணர்கிறேன்.

உங்களுக்கு ஒன்று சொல்லவேண்டும். நேற்று நான் அயானாவில் முழுமையாகக் கலந்தேன். அயானா, சீக்கிரம் என் கல்லறைக்கு ஏற்பாடு செய்யுங்கள். அந்தக் கிருஸ்துவப் பெரியவரிடம் சொல்லி. சந்தோஷமாக இருங்கள் அயானா. கடைசிவரை அயானாவும் அவளது உணர்வுகளும் மதிக்கப் படுகின்றன.

'தெய்வீக அர்ப்பணம்', சிறுகதையில் கோபிகிருஷ்ணன் காண்பிக்கும் காதல் வேறு விதமானது. செவ்வாடை உடுத்திய பராசக்தித் தொண்டர், உடன் பணிபுரியும் பாருவை ஒருதலையாகக் காதலிக்க ஆரம்பித்ததும் துவங்கியது வினை. தியானமெல்லாம் செய்யும் செவ்வாடை, தனக்குள் சக்தி இருப்பதாக நம்பிக்கொண்டு இருப்பவர், பாருவிற்குக் கோலா வாங்கிக் கொடுத்ததைக் கூட நெருக்கம் என்று தோழரிடம் பறைசாற்றுகிறார்.

பாருவிடம் செவ்வாடை, தன் காதல் தெய்வீகமானது, கல்யாணம் ஆகும்வரை தனது விரல்நுனி கூட அவள்மீது படாது என்று உறுதியளிக்கிறார். அவரது காதல் விவகாரம் அலுவலகத்தில் பரவ, கோபங்கொண்ட பாரு, அவருடன் பேச்சைக் குறைத்துக் கொள்கிறாள். அவள் கிடைக்காவிட்டால் தான் தற்கொலை செய்துகொள்வதாகத் தூக்க மாத்திரை சாப்பிட்டு இரண்டு நாட்கள் உறங்கியெழுகிறார். பாரு மௌனமாக இருக்கிறாள்.

அம்மன் முன் பூப்போட்டு சாதகமாக வர, பாருவை நினைத்து சுயமைதுனம் செய்து களைக்கிறார். கடன் பெற்று வாங்கிய தங்க மோதிரத்தைப் பொட்டலத்துடன் பாருவிடம் நீட்ட, அலுவலகத்தில் களேபரம். தேவதாசாகப் புலம்பிப் பாருவின் பெயரைக் கெடுக்கிறார்.

கடைசியாகப் பாருவின் அனுமதியின்றி அவள் வீட்டிற்குச் சென்று அவள் தாயாரிடம் பராசக்தியின் ஸ்பெஷல் குங்குமப் பிரசாதத்தைத் தர, வெகுண்ட பாரு, பிரசாதத்தையும் அவர் நட்பையும் விசிறியெறிந்து நிம்மதியாக இருக்கிறாள்.

மேற்கூறிய இரண்டு கதைகளும் காதலைப் பற்றியவையே என்றாலும் எதிர் மறையானவை. 'டேபிள் டென்னிஸ்'இன் அயானா, காலத்தை வென்ற ஒரு கலைப் படைப்பாக ரசிக்கப்படுகிறாள். அயானா மீதான காதல் நிபந்தனையற்றது. இங்கு பொறாமையோ சுயநலமோ இல்லை. அதனாலேயே மூன்று தலைமுறை கடந்தும் வீரியம் குறையாதிருக்கிறது. அவன் கடைசி மூச்சிழுக்கும்போதும், 'ஆண்டொரு முறை மலர்வளையம் வைக்க வரும்போது தங்கள் தோழமையின் பரிசுத்தத்தைத் தரிசிப்பேன்', என அமிழ்கிறான். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் சுய அர்ப்பணம் இதில் தொனிக்கிறது.

ஆனால் 'தெய்வீக அர்ப்பண'த்தில் ரசனையற்ற செவ்வாடை, ஒரு டிபிகல் ஆணாக பாருவை உடைமைப் படுத்த விழைகிறார். சுயநலமாகத் தன் காதலைப் பறைசாற்றி அவளுடைய *image*-ஐக் குலைக்கிறார். தற்கொலை

மிரட்டல் எனும் வன்முறையைக் கையாண்டு அவளைப் பலவந்தமாக அடைய விழைகிறார். சுயநலமியான செவ்வாடைக்குப் பாருவின் விருப்பத்தைப் பற்றிக் கவலையில்லை. அதனால்தான் கதையின் முடிவில் கோபி, 'இதெல்லாம் காதல்தானா?', எனக் குழம்புகிறார்.

**ஆண் பெண் உறவு:** ஆண் பெண் இடையிலான பரஸ்பரக் கவர்ச்சியை, புரிதலை, மரியாதையை, நட்பை, நிரப்புதலை மிக மென்மையாகக் காண்பித்தவர் கோபிகிருஷ்ணன். உதாரணத்திற்கு 'இடாகினிப் பேய்களும் நடைப்பிணங்களும் சில உதிரி இடைத்தரகர்களும்', என்கிற குறுநாவலை எடுத்துக் கொள்ளலாம். இதில் தன்னோடு சமூகசேவை மையத்தில் பணிபுரியும் வாயிலோன் முதல் மேலாளர் வரை மனிதர்களின் போக்குகளை அலசுகிறார்.
"நான் செய்வதை விமரிசனம் செய்யாமல் அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள்", என்று சொன்னபடியே சமாதானம் (அலுவலகத் தோழி) என் கன்னங்களை அவளது கரங்களில் ஏந்தியவண்ணம் என் உதடுகளில் ஓர் ஆழமான முத்தத்தைப் பதித்தாள். என் உணர்வுகள் கிளர்ந்து விட்டன.

ஆனால், சமாதானம் மிகவும் விசனத்துடன், "நான் இன்னும் பத்து நாட்களில் மணிலா போகப் போகிறேன். எல்லாம் அப்பா ஏற்பாடு. சென்னையில் இருந்தால் நான் சித்தப்பாவுடன் வாழ ஆரம்பித்துவிடுவேனோ என்ற பயம் அவருக்கு, " என்றாள்.

"சமாதானம், எந்தப் பெண்ணும் இவ்வளவு வெம்மையான முத்தத்தை எனக்குக் கொடுத்ததில்லை", என்றேன்.

"நாம் நாளைக்குக் கேளம்பாக்கம் செல்வோம்", என்றாள் விரகதாபக் குரலில். எங்கள் இல்லம் ஒன்று கேளம்பாக்கத்தில் இயங்கி வந்தது.

அடுத்தநாள் மோட்டார் வாகனத்தின் பின்சீட்டில் சமாதானம் என் மடியில் படுத்துக்கொள்ள நான் அவளது கேசத்தைக் கோதிவிட்டவாறு இருந்தேன். "எனக்கு இன்னும் வேண்டும்", என்றாள். அவளது முந்தானையை விலக்கி மார்பகங்களை வருடியவண்ணம் இருந்தேன். குறியில் கிளர்ச்சி ஏற்பட்டிருந்தது. "இட் இஸ் வெரி ஸூதிங் சார்", என்றாள். எனக்கு உச்சகட்ட சிலிர்ப்பு வந்துவிடுமோ என்று பயமாக இருந்தது.

சமாதானத்திடம் போதையினூடே சொன்னேன், "நான் வரம்புகள் அற்றவன். ஆனால், நீங்களாக என்னை நாடும்போது உங்களை நான் பரத்தையாக உணரவைக்க மாட்டேன். "

மெதுவாக, மிக மிக மிருதுவாக நாங்கள் ஒருவரை ஒருவர் எங்கள் பிணைப்பிலிருந்து விலக்கிக் கொண்டோம். "இது தோழமை சமாதானம். பாலுறவு அல்ல. மேற்கில், *He is my casual friend and an occational lover-Erica Jung*", என்றேன் அவளை வருடியவாறு. இந்த எல்லையற்ற நிர்வாணம்தான் கோபியின் பலம்.

**திருமணம் குறித்து :** தன்னுடைய 'குற்றமும் தண்டனையும்' கதை வாயிலாகத் திருமண அமைப்பையே கோபி பலமாகச் சாடுகிறார். மாதிரிக்கு சில :

புரியாத சுப மந்திரங்கள் ஏதோ ஒரு விளங்காத புனிதச் சூழலை உண்டுபண்ண, முன்பின் தெரியாத எவனோ ஒருவன் தன் கழுத்தில் கட்டும் பவித்திரத் தாலி பல வேளைகளில் சுருக்குக் கயிறாக மாறும்போது ஏற்படும் வேதனையில் இன்பத்தை நன்றாகச் சுவைத்தே அனுபவித்துக் கொண்டிருக்கும் பொறுமையின் சிகரம் ஒரு வக்கிரம் பிடித்த *masochist*.

எந்தக் கண்ராவிக்கு இந்த அலைச்சல், சிரமம் என்று விடை காணமுடியாத கேள்வி ஒன்று என்றைக்கோ எழுந்து, குடும்பம் நடத்துவதற்குத்தான் என்ற தவறான பதில் வந்து, இப்போது அதை நடத்தாவிட்டால் என்ன கேடு விளைந்துவிடும் அவன் வாழவில்லை. வாழ்க்கை அவனுக்கு நேர்ந்துகொண்டிருக்கிறது.

'இதுவும் சாத்தியம்தான்' சிறுகதையில், "திருமணம் ஆனால் உடமை மனப்பான்மையோ ஆதிக்க உணர்வோ தோன்ற வாய்ப்புண்டு. ஓர் அழகான உறவு சிதைவுறும்", "ஓர் உறவுக்குப் பெயர் சூட்டிப் பாதுகாப்பைத் தேடிக் கொள்வதும் வரைமுறை வகுப்பதும் தோழமைக்கு ஒரு பழிப்பு, கொச்சைப் படுத்துதல். என்னைப் பொறுத்தவரை நிர்ப்பந்திக்கப்படாத அனைத்து உறவுகளும் புனிதமானவையே', எனப் பழகிய தோழன், தோழியை விட்டுப் பிரிகிறான்.

**கற்பு:** கற்பு என்பதே நாம் பாவித்துக்கொண்ட ஒரு சிக்கலெனும் கோபியின் எரிச்சல் ஒரு சிறுகதையில் வெளிப்படுகிறது. கதையின் பெயர்,'

ஈடன் தோட்டம் தொட்டு இறையுணர்வுக் கூட்டம். ஊடாக ஐந்து நட்சத்திர ஓட்டல் வரை! மூன்று வேலையற்ற கடவுள்களுக்கு அனுசூயாவின் கற்பு மீது சந்தேகம் வந்தது. அம்மணமாக வந்து தங்களுக்கு விருந்தளிக்க (உணவு விருந்துதான்) முடியுமா என்று கேட்க, கற்பின் சக்தியால் கடவுள்கள் குழந்தைகளாக மாற, அனுசூயா அவர்களுக்கு அம்மணமாக விருந்தளித்தாள். '

பொருள் தேட மட்டும் பேருந்தில் இடிபட்டு, பணியிடத்தில் வளைந்து கொடுக்கத் தன் வீட்டுப் பெண்ணை அனுமதிக்கும் இந்த மத்தியதர சமூகத்தவரை இரட்டை வேடதாரிகள் என விமரிசிக்கிறார். ஏகபத்தினி விரதனையும் கோபிகிருஷ்ணன் விட்டு வைக்கவில்லை. ' கடைசிவரை ஓர் ஆணின் உணர்வு ஒரே பெண்ணைச் சுற்றி வளைய வருவது பார்க்கப் போனால் இது உணர்வுகளின் ஒரு மந்த நிலை. அலுப்பூட்டும் சமாச்சாரம். ஒரு தேக்கம், ஒரு *emotional fixation*. இதில் என்ன பெருமை வேண்டிக் கிடக்கிறது!', என 'தூயோன்' கதையில் சலிக்கிறார்.

**மன வக்கிரங்கள்:** பெரும்பாலும் கோபி கிருஷ்ணனின் புனைவுகள் தன்னிலையிலிருந்தே கூறப்படுகின்றன. தன்னுடைய பலகீனங்களை வெளிப்படுத்துவதில் கோபிக்குத் தயக்கமேதும் இருந்ததில்லை. மருத்துவ மனையில் தன்னோடு செவிலியாகப் பணியில் சேர்ந்த இளம்பெண்ணை (பத்து வயது சிறியவள்) *'child'* என்று அன்போடு அழைக்க ஆரம்பிக்கிறார். பதிலுக்கு அவள் இவரை *'daddy'* என்றழைத்ததும் மகிழ்ச்சியே அடைகிறார். *child* வேறு மருத்துவமனைக்குப் பணிக்குச் சென்றாலும் அவளைத் தேடி அங்கு சென்று தன் வழக்கம்போல அவளுக்கு இனிப்பு கொடுப்பதை கோபி, நிறுத்துவதில்லை. ஆண் விட்டு ஆண் மாறிப் பழகும் *child* இன் லீலாவிநோதங்களை அவள் திருவாய்மொழியாகக் கேட்பதையுந்தான்.

மனிதர்களை அப்படியே ஏற்றுக்கொள்வதே தன் வழக்கம் என்கிறார். இறுதியாக *"You are a lousy pervert"*, என்கிற வசவைத் தன் நண்பரிடமிருந்து ஏற்றும் கொள்கிறார். இந்தக் கதையின் தலைப்பு 'இனிமையான வக்கிரம்'. ஆம். வக்கிரங்கள் எல்லாமே கசப்பானவையல்ல.

*Schizophernia: double standard* உள்ள அனைவருமே *Schizophernia* என்கிற *Split Personality* கொண்ட மனநோயாளிகளே என்கிறார். 'தெய்வீக அர்ப்பணம்' சிறுகதையில், வசதியான பாட்டியின் வீட்டில் '24 மணிநேர மருத்துவமனை போல சுவாமிகள் எந்த சமயத்தில் வந்தாலும் விசேஷ பராமரிப்பு தப்பாமல் நடக்கும்'.

ஆனால், சுதந்திரப் போராட்ட தியாகியான தாத்தாவின் (பாட்டியின் கணவர்) மனநிலை சிதைந்ததும் அவரைக் குணசீலத்திற்கு அனுப்பிவிட்டுத் தன் வழக்கமான பூஜை புனஸ்காரங்களைத் தொடர்கிறார் பாட்டி. கோபியின் வற்புறுத்தலில் இல்லத்திற்கு அழைத்து வரப்பட்ட தாத்தா, தக்க கவனிப்பின்றி ஒரே மாதத்தில் இறக்கிறார்.

**அந்தரங்க வெளி:** எழுத்தாளர் ஆதவனின் ரசிகரான கோபி, 'சக மனிதர்களுடன் ஒத்துப் போவது சில வேளைகளில் மகா சிரமமாகி விடுகிறது', என்கிறார். தன் 'இரு உலகங்கள்' சிறுகதையில், மனிதர்கள் தத்தம் எல்லைகளை மீறுவதால்தான் உரசல்கள் என்கிறார். "உங்களுக்குப் பல்லில் என்ன கேடு?" என்று அவரது சமூக நிறுவனத்திற்கு வந்த *N. R. I.* மருத்துவ யுவதி புகையிலைக் கறையைக் கேட்க, கோபி கடுப்பாகிறார். ஒரு கட்டத்தில் கோபி அவரது பாலிஸ்டர் சட்டையை விமரிசிக்க, கோபமுற்ற யுவதி, "என் உடையைப் பற்றிச் சொந்தமுறையில் பேச உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை", என வெடிக்க, "என் பற்களைப் பற்றி விசாரித்ததை நான் எப்படி எடுத்துக்கொள்ள?", என்று பதிலடி கொடுக்கிறார்.

'ஓட்டம்' சிறுகதையில் குற்றவுணர்வோடு தன் திருமண அழைப்பிதழை நீட்டும் காதலியிடம் நாகராசு, "இதோ பாருங்கள் அயானா, உங்கள் ஆணை நீங்கள் தேர்வு செய்துகொள்வதைத் தடுக்க இந்த நாகராசுவுக்கோ, ஏன் உங்கள் கர்த்தருக்கேகூட உரிமை இல்லை", எனக் கம்பீரமாக வாழ்த்துகிறான்.

ஓரிடத்தில் மனைவி கணவனிடம், "ரெண்டு பேரும் இணைபிரியாத தம்பதிகள். நாம் இனி ரெண்டு பேர் இல்லை. ஒருத்தர்தான். இனி சினிமாவுக்குப் போறச்சே ஒரு டிக்கெட் எடுத்தாலே போறும்", *Sarcastic* ஆகக் கூறுகிறாள்.

**வாழ்க்கையவலம்:** மாற்றமில்லாத ஒரே மாதிரியான இந்த வாழ்வு கோபிக்கு சலிப்பூட்டுகிறது. 'பிறழ்வு விடிவு' குறுநாவல், போதாமையும் போராட்டமும் நிறைந்த இந்த வாழ்வினால் மனநோய் பீடிக்கும் டைப்பிஸ்ட் ராமனின் பாதிப்புகளைப் படிப் படியாக தத்ரூபமாகப் படம் பிடிக்கிறது. தன் மனம் சிதைந்து வருவதை உணரும் ராமன், அது வெளிப்படாதவாறு கஷ்டப்பட்டு மறைக்கிறார். ஒருநாள் வீதியில் கவனக் குறைவாக நடந்து விபத்தில் தூக்கி எறியப் படுகிறார். 4 நாட்கள் கழித்து மருத்துவ மனையில் கண் விழித்துப் பார்த்தால் மனநிலை சரியாகிவிட்டதாகத் தோன்றுகிறது கூடவே அதில் சந்தேகமும்.

வாழ்க்கை எளிமையானது: 'போதை' கதையில், 'வாழ்க்கை என்பது புலனுணர்வு. அதுதான் நிஜம். புலனுணர்வில் சிந்தனை கலக்காமல் இருக்கும்வரை மனநிலை பவித்திரமானதுதான். எதையும் ஆராயவேண்டாம் என்பவர், 'ஒவ்வாத உணர்வுகள்' சிறுகதையில் இவ்வாறு எழுதுகிறார் :

வாழ்க்கையை ஒருசில வாக்கியங்களில் அடக்கிவிடலாம். இவ்வளவு பேச்சு அவசியம்தானா என்று தெரியவில்லை. மிகவும் ஆழமான உறவுகள் அமைதியாகவே இருக்கும். நேசத்தையும், மென்மை உணர்வுகளையும், தோழமையையும் வெளிப்படுத்த இனிய முகபாவம் மட்டும் போதுமானதே. வார்த்தைகள் பரிமாறிக் கொள்ளாமலேயே ஒருவருடைய எண்ணங்கள் மற்றவரை சேர்ந்ததையும். வாழ்க்கை மிகவும் நிசப்தமாக இருப்பதற்கு சாத்தியக் கூறுகள் உள்ளன. ஆனால் இரைச்சல் ஏனோ, எப்பொழுதும் இருந்துகொண்டுதான் இருக்கிறது ('தொழுகை' கதையில்)' காரணம் என்பதே குப்பை. மகா குப்பை. எல்லாம் தானாக நேரியவை.

இதே கதையில், பிறருக்குச் செய்யும் நல்ல காரியங்கள், உபகாரங்கள் முதலியன மனித நேயத்தின் அடிப்படையில் ஒருவித பயங்கர சுயநலம். நம் மனதைச் சாந்தமாக வைத்துக்கொள்ள நாம் செய்துகொள்ளும் சுயசேவை என்கிற கருத்தை எடுத்து வைக்கிறார். வேறோரிடத்தில், ' நேர்மை எனக்கும் பிடிக்கும். அது நற்பண்பு என்பதால் அல்ல. மன உறுத்தல் இல்லாமல் நிம்மதியாக இருக்கலாம் என்பதால்தான்', அப்பட்டமாகப் பேசுகிறார்.

'தென்னகக் கலாச்சார சிக்கல், இயல்பான விசயங்களைக் குழப்பி ஆபத்துக்கு இட்டுச் செல்லும்', என்பது கோபியின் ஆதங்கம். 'தடை விதிக்கப்பட்ட கனியின் விளைவில் உருவான மனிதகுலம் இசகு பிசகாக ஏதாவது செய்துவைப்பதில் ஆச்சரியப்படும் சமாச்சாரம் ஒன்றுமிருப்பதாகத் தோன்றவில்லை', என்னும் கோபிகிருஷ்ணன், சக மனிதர்களை வாஞ் சையோடே பார்க்கிறார். 'இது ஒரு பித்துப் பிடித்த உலகம்', என்பவர், ' நான் ஒரு நாகரிக மனிதன், அதாவது தோற்ற அளவில்', என்கிறார். ஆழ்மனத்தின் கசடுகளை வெளிச்சம் போட்டுக் காண்பித்தவர் கோபி.

'இந்த யோக்கியன் அயோக்கியன், நல்லது கெட்டது, அழகு குரூரம் எல்லாம் மனசு போடற ஆடைகள். இத விட்டொழிச்சாத்தான் உண்மையிலேயே நீங்க வாழ முடியும்', துணிவான வெளிப்பாடு.

உளவியலின் மெலிய நூலிழைகளையும் நுட்பமாக ஆராய்ந்தவர் கோபி. *Fugue* எனப்படும் மனநோய் அகதா கிறிஸ்டிக்கு இருந்ததையும் 'வைக்கம் முஹம்மது பஷீர்', பாத்துமாவுடைய ஆடு நாவலை ஒரு மனநலக் காப்பகத்தில் சிகிச்சையில் இருந்தபோது எழுதியதையும் தனது சிறுகதையில் (கருத்தரங்கில் கணக்கில் கொள்ளப்பட்டவை) குறிப்பிடுகிறார். இதன் மூலம், மாறுபட்ட மனநிலையானது கற்பனையைத் தூண்டிப் படைப்பாற்றலை ஊக்குவிக்கக் கூடியது என்பதை நிறுவுகிறார். தான்கூட 'லவ் ஆல் ' குறுநாவலை எழுதும்போது முற்றிலுமாக ஒரு கிளர்ச்சி மனோநிலையில் மிதந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கிறார். அளவான மனப் பிறழ்வானது மனிதனை மந்தைத் தனத்திலிருந்து வெளிக்கொணர்ந்து மாற்றி யோசிக்க வைக்கிறது.

'உள்ளேயிருந்து சில குரல்கள் ', என்ற தலைப்பில் கோபிகிருஷ்ணன் ஆவணப் படுத்தியிருக்கும் *case studies*இல், தான் சந்தித்த 59 மனநோயாளிகளின் எண்ணவோட்டங்கள் அவர்களுடைய கோணங்களிலிருந்தே விளக்கப் பட்டிருக்கின்றன. அவர்களை அந்நிலைக்கு ஆளாக்கிய சூழல்கள், காரணங்கள் திறனாய்வு செய்யப்பட்டிருக்கின்றன. இவை படிப்பவரைக் கசிய வைத்தாலும் ஓர் உளவியல் ஆராய்ச்சி மாணவர் படிக்கத் தகுதியானவை. குறைந்த பக்கங்களில் மிகவும் செறிவான படைப்பு

இது. முக்கியமான *case studies*-ஐத் தலைப்பு வாரியாகப் பிரித்துக் கொடுத்திருக்கிறேன்.

**பக்தி :** கடவுளை வைத்து பயமுறுத்துகையில் அது மனப்பிறழ்வுக்கும் காரணமாகிவிடும் என்பதைப் 'பதிவுகளி'ல் பயம் பீடித்த மனநோயாளி மூலமாகப் பதிவு செய்கிறார்.

*"பயம் போறதுக்கு நீங்க என்ன முயற்சி எடுத்துக்குறீங்க?"*

*"நா குருதேவ் சுவாமிகளைத்தான் நம்பிக்கிட்டிருக்கேன். காலைல எந்திரிச்சதும் ஜெயஜெய குருதேவ் ஹரஹர குருதேவ் நாமகோடி குருதேவ் மீனாக்ஷி குருதேவ்னு சொல்லிக்கிடுவேன் "*

மனிதன் பிறிதொன்றை அளவுக்கு அதிகமாக நம்ப ஆரம்பிக்கையில் தன்னம்பிக்கையை இழக்கிறான்.

*"அப்ப பயம் போகிறதா?"*

*"இல்லெ. எல்லாம் நா போன ஜென்மத்துல செஞ்ச பாவம். அதான் ஆண்டவன் என்னெ இப்பிடியாக்கித் தண்டிச்சிட்டிருக்கான்".*

*"ஆண்டவன்னா தண்டிக்கணுமா?"*

'பரலோகத்திலிருக்கும் எங்கள் பிதாவே, எங்கள் பாவங்களை மன்னித்தருள்வீராக', என்று பிள்ளைப் பிராயத்திலிருந்தே பிரார்த்திப்பது வழமை. அடிப்படையில்லாத குற்றவுணர்வைத் தூண்டவல்லது இறைபக்தி.

இன்னொரு 44 வயது பெண் நோயாளி திருமணமாகாதவர் தன்னை மாரியாத்தா என நம்பிக்கொண்டு கற்பூரத்தை விழுங்குபவர். வேலைக்கு சரிவரப் போவதில்லை. அடிக்கொரு தரம் விரதமிருந்து சாப்பிடுவதில்லை.

விபத்தினால் தலையில் அடிபட்ட ஒருவர், மறு ஜென்மமே தனக்கு வேண்டாமென விழைகிறார். ராகவேந்திரசாமி மாதிரி ஜீவசமாதி அடையவேண்டுமென்பது அவரது ஆசை. தன்னைக் கடித்த கொசுவைக் கூட கடவுள் அனுப்பியதாக நம்புபவர் காதில், 'உனக்கு மோட்சம் நிச்சயம்', என்று கொசு சொல்லிச் செல்கிறது. இதுபோன்ற எண்ணற்றவற்றைப் புனைந்துகொண்டு அவ்வப்போது அழுபவர், இவையெல்லாம் தனக்கு ஏற்பட்ட ஆன்மீக அனுபவமென்று நம்புகிறார்.

ஏறக்குறைய இதேபோன்ற மற்றொரு கேஸ். குளியலறையில் தடுக்கி விழுந்து மயங்கியவர், அதன்பின் தான் யேசுநாதரின் அருள் பெற்றவராக நம்பத் துவங்குகிறார். *"நா சின்ன வயசுல செஞ்ச தப்புக்கெல்லாம் சாமிகிட்ட மன்னிப்பு கேட்டுக்கிட்டேன். ராத்திரி ஒரு மணி வரைக்கும் ஜபம் பண்ணுவேன்"*, என்கிறார். மிதமிஞ்சிய பக்தியானது இந்த வாழ்வைத் துய்க்க விடுவதில்லை.

இதன் தொடர்ச்சியாக 'இன்றும் தொடரும் பழமைகள் ' என்கிற கட்டுரையில், 'மக்களின் *mass hysteria* தான் சாமியார்களை உருவாக்குகிறது', என்கிறார். 'பக்திப் பரவசத்தைக் கஞ்சா கலந்த பிரசாதம் மூலம் மிகவும் அருமையாக ஏற்படுத்தலாம்', என்பதை கோபி அன்றே கண்டு தெரிவித்துவிட்டார். சாதுக்களின் தியான நிலைக்கு அவர்களுடைய உடலில் ஏற்படும் ரசாயனச் சிதைவே காரணம். *Glassolalia* எனப்படும் பிறழ்வு நிலையில் ஏற்படுவதுதான் அம்மன் சாமி உடலில் புகும் நிலை.

**ஆண்களின் காமப் பிறழ்வுகள் :** ஒரு பெண்ணின் அண்மையும், காமமும் எளிதாகக் கிடைக்காத நம் சமூகத்தில் பெரும்பான்மையான இளைஞர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகி காமம் சார்ந்த உளவியல்சிக்கல்களுக்குஉள்ளாகிறார்கள் என்பது கோபிகிருஷ்ணனின் கருத்து. 'பெரும்பாலும் பெண்களோடு அதிகம் பழகாதவர்களுக்கு இது அதிகம் பீடிக்கும்', என்கிறார்.

மற்றொரு *case study*-யில் திருமணமாகி பத்து வருடமான படித்தவருக்கு மனைவியுடன் உடலுறவு கொள்ளும்போது வேறோர் பெண்ணின் நினைவு வருகிறது. அது சினிமா நடிகை, எங்கோ பார்த்த பரிச்சயமற்ற பெண் அல்லது மாமியார் கூட! இதனால் அவர் உடலுறவு முடிந்ததும் குற்றவுணர்ச்சியில் உழலுகிறார். அதன்பின் இரவு தூக்கமின்றி பகலெல்லாம் சோர்ந்து அலுவல்களில் நாட்டமில்லாமல் இருக்கிறார். இவ்வளவிற்கும் அவர் வுமனைஸர் அல்ல. மனைவியைத் தவிர வேறோர் பெண்ணை சுகித்ததில்லை.

மற்றொருவர், பதிமூன்றிலிருந்து பத்தொன்பது வயதிலான அழகிகளை மட்டும் ரசித்துப் பழகியவர். 26 வயதான சாதாரணத் தோற்றமுள்ள தன் புது மனைவியிடம் காம உணர்வு எழாததால் அவரைத் துன்புறுத்துகிறார். தன்னுடைய

அதிக வயதோ, சாதாரணத் தோற்றமோ அவரது பிரக்கினைக்கு உறைப்பதில்லை.

**பெண்களின் மனப் புழுக்கங்கள்:** கணவனால் புறக்கணிக்கப்பட்ட மீனு, ஏங்கி மனச் சிதைவுக்கு ஆளாகி, ஆடவனொருவன் தன்னுடன் அன்போடு உடல் ரீதியிலும் பழகுவதாகக் கற்பனை செய்து கொள்கிறார். டேவிட் என அவனுக்குப் பெயருமுண்டு. கவுன்சிலர் உறவு பற்றிப் பேசத் தொடங்கியதும், "தாம்பத்திய உறவாவது மயிராவது....", என்று கொதித்து விசும்புகிறார். அன்பில்லாத உறவு அதற்குத்தான் சமானம். இதனால் அவருக்கு உடலுறவில் நாட்டமில்லாமல் போகிறது . "என்ன எழவோ, புருஷனும் பெண்ஜாதியும் சந்திக்குற முதல் எடமே படுக்கெ அறதான்", என பாதிக்கப் பட்டவர் வெடிக்கிறார்.

**கட்டுரைகள்:** பல்வேறு உளவியல் ஆராய்ச்சியாளர்கள், மருத்துவர்களின் கருத்துக்களை கேப்ஸ்யூல் வடிவில் எளிய தமிழில் உள்ளடக்கிக் கட்டுரைகளாகத் தர கோபிகிருஷ்ணனால் மட்டுமே முடியும். உளவியல் பற்றிய இவரது வாசிப்பு உலகளாவியது. ஒரு மேலைநாட்டு மருத்துவரும் டில்லியில் உள்ள பட்டேஷா தர்க்காவில் இருக்கும் முஸ்லீம் மாந்திரீகரும் தொழில் ரீதியில் மிகவும் நெருக்கமானவர்கள் என்பது கோபியின் கருத்து.

**'சைக்யாட்ரி டுடே' கட்டுரையில்:** நோய்க்கணிப்பானது உளவியல் மருத்துவருக்கு நோயாளி மீது அதிக அதிகாரத்தை அளிக்கிறது. இந்த அதிகாரம் குற்றவாளியைச் சிறையில் அடைக்குமாறு தீர்ப்பு வழங்கும் நீதிபதியின் அதிகாரத்தைவிட அதிகமானது. நீதிபதியாவது வழக்கறிஞர்களின் வாதப் பிரதிவாதங்களையும் ஜூரிகளின் முடிவுகளையும் கணக்கிலெடுத்துக் கொள்கிறார். யார் பிரகாரம் ஒருத்தன் மனநோயாளிங்குறது இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைதானே. யார் சரி, யார் தப்புங்குறது எப்பவுமே ஒரு பிரச்சினைதான்.

மனநோயாளிகளை இந்தச் சமூகம் புறக்கணிக்கும் விதம் மனிதாபிமானத்திற்கு உட்பட்டதல்ல. அவர்களை உயிருடன் வைத்துக் கொள்வதில் ஒருவித அர்த்தமும் இல்லை என்று கருதி முப்பதுகளின் இறுதியில் நாஜி அதிகாரத்தில் 30000 நோயாளிகள் கொல்லப்பட்டனர். மாதா கோயில்கள் எதிர்ப்புக் குரல் எழுப்பிய பிறகே இக்கொலைகள் நிறுத்தப்பட்டன எனும் அதிர்ச்சியூட்டும் தகவலைத் தருகிறார்.

இன்றைய உளவியல் மருத்துவத்தின் ஆபத்துக்களைத் தன் பதிவில் ஆதாரங்களோடு சுட்டிக் காட்டுகிறார்.

எளிய வாழ்க்கையை சிக்கலாக்கிக் கொள்ளும் மனிதனின் உளவியலைத் தன் கவிதையினூடாக,

**கவலைக்குரிய விஷயம்**

**கவலைப்படவில்லை**

**யாரும் நிஜமாகவே**

**கவலைப்படவில்லை.**

**கவலையில்லாமல் இருந்தது.**

**கவலைப்பட ஆரம்பித்தார்கள்.**

**கவலைக்கிடமாகியது.**

**கவலையைப் போக்க நினைத்தார்கள்.**

**கவலை வந்து சூழ்ந்தது.**

**கவலையைப் பற்றி**

**கவலைப்படாமல் இருந்திருந்தால்**

**கவலை இல்லாமல் இருந்திருக்கும்.**

* * *

கோபிகிருஷ்ணன் எழுதிய சிறுகதை, குறுநாவல், பதிவு, கட்டுரை என எந்த வடிவமானாலும் உளவியல் சார்ந்தவையே. அவர் அளவிற்கு எல்லா கோணங்களிலும் ஆழமாகவும் நுட்பமாகவும் விஞ்ஞான ஆதாரங்களோடும் உளவியலை எழுதிய எழுத்தாளர் மற்ற இந்திய மொழியில் இருப்பாரா என்பது சந்தேகமே. கோபியின் எழுத்து பரந்துபட்ட வாசிப்பிற்குக் கிடைக்காதது வாசகரின் இழப்பே.

கோபிகிருஷ்ணனின் வெளியில் உள்ளங்கள் துளிர்த்தும் தழைத்தும் பூத்தும் கனிந்தும், அழுகியும், விதையும் முள்ளுமாக வெடித்தும், உலர்ந்து நெற்றி வைரம் பாய்ந்தும் கிடக்கின்றன. ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கும் இந்தக் காட்டுவெளியின் மர்மமான மணங்களும் ஒலிகளும் தோற்றங்களும் சுவாரசியம் குன்றாதவை.

e-mail : bkanmani16@gmail.com

# விடாப்பிடி

எஸ்.டி.ஏ. ஜோதி

ஏதோ விழுகிறது என்று பார்வையற்ற மாற்றுத் திறனாளி உள்வீட்டினின்று வியந்து சொல்லக் கேட்ட ஞானவான், ஓர் அபூர்வ எதிர்பார்ப்பின் உந்துதலோடு வெறித்த வண்ணம் பார்க்க, அண்ணாந்திருந்த அவன் தலை, காணாததைக் கண்ட மாதிரியும், மாற்றுத் திறனாளியுடையதும் தன்னுடையதுமான அனுமானம் சரி என்கிற மாதிரியும் குறுகுறுத்த அருவெறுப்பில் குனிய, அக்குனிதலில், கெட்டக் குருதி வழித்தெறிந்த சானிடரி நாப்கின்கள், பொதுமிப்போன நிரோத்கள், அக்குள் துடைத்த அசிங்கமான நைந்து அழுக்காய்ப்போன டவல்கள், நாறிய கோமணக் கிழிசல்கள் போன்றவை மிதந்த செந்திரையோட்டத்தால் அரோசிகமாய்ப் போன பூமியில் அவன் கண்ட காட்சி அவனை அதிர்ச்சிக்கும் குமட்டலுக்கும் உள்ளாக்கிவிட, இயற்கையோவெனில் தன் பருவகாலக் கடமையை வழக்கம்போல் மாறாது தவறாது செய்து கொண்டிருந்தது என்பது மட்டுமே நிஜம், மற்றவையெல்லாம் தன் கண் மாறாட்டத்தால் நேர்ந்த பின்விளைவு என ஓர்ந்தானில்லை, பாவம்.

தலைகளைத் துண்டாடும் அந்நிய பகை தேசத்தார் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டு கூட்டுப் பலம் சேர்த்துக் கொண்டு விட்டது போல், போர் ஆரம்பிக்காமலேயே வென்றுவிட்டோம் என்று கொக்கரிக்க, ஞானவான் வசிக்கும் தேசம் அதனால்



ஓவியம்: ஜே.கே.

உட்பயம் கொண்டு நடுநடுங்க, ஜெகஜோதியாய் மின்னிய அனேக கோவில்களில் இருட்டு மண்டிவிட, பலர் அச்சமுற்று நினைவு தப்ப, இதையெல்லாம் கண்ட ஞானவான், தான் வீணுக்குப் பயமுறுத்தப்படுவதாக மட்டுமே நம்பினானேயல்லாமல் தான் கண்ட கோரக் காட்சியினை மறு பரிசீலனை செய்ய ஒப்பாமல், கூரறிவு அற்ற பலரையும் தன்பக்கம் வலுக்கட்டாயமாக இழுத்து சேர்த்தவாறிருந்தான்.

எட்டாத் தொலைவிலுள்ளனவும், அருகிலுள்ள னவுமான திரையரங்குகள், கண்காட்சியகங்கள் பார்வையாளர்கள் வராக்குறை நிமித்தம் மூடப்பட, முதலடி எடுத்து வைக்குமுன், எல்லா சந்தேகங்களையும் நிவர்த்திக்க நீண்ட பயணம் போகிறேன் என்று வாய் திறவாது முணுமுணுக்கும் வான சாஸ்திர ஆராய்ச்சி வல்லுநர், என்று அதே வாய் திறவாத போக்கில் ஆணித்தரமாக பகர்ந்த பின்பும், தண்ணீர் வெள்ளம் கொந்தளிப்பினின்று மீண்டு சம சாஸ்வத அமைதிநிலை எய்தியது கண்ட பின்பும்கூட சந்தேகம் தீரா விடாப்பிடி ஞானவானுக்கும், அவன் தீவிர ஃபாலோவர்களான அடியாட்களுக்கும்.

கொல்லர் பட்டறை உலையில் ஞானவானின் உருவத்தைச் சிறியதாய் ஆக்கியது போலிருந்த இரும்புத்துண்டு ஒன்று சூடேறிக் கனிந்து தகதகக்க, கொக்கிரகுளம் சுப்பையா, சுடும் அதனை தன் உதவியாளன் ஞானதேசிகன் சம தளத்தில் கொக்கியால் கிடத்திப் பிடித்துக் கொள்ள, ஆகப் பெரிய சுத்தியல் கொண்டு ஓங்கி ஓங்கி அதன்மீது சப் சப் என்று அறையவும், அது ஒரு முனையில் சப்பென்று சப்பி ஓர் உளியின் கூர்மை பெற அதை அதே கொக்கியாலேயே எடுத்து குளிர்ந்த நீரில் தூக்கிப்போட, அது சுர்ர் என்ற சப்தம் எழுப்பி சூடு தணிய, வேறு வெட்டும் வேலைக்குப் பயன்படுத்திக் கொள்ள அதை உரியவரிடம் ஒப்படைக்க, இவ்வளவு நடப்புகளுக்குக்கிடையேயும் மழை விடாமல் கொட்டோ கொட்டென்று கொட்டிக்கொண்டிருக்க, ஞானவான் கண்ட அந்த அரோசிகமான காட்சி வானம் இடிக் குமட்டலோசையோடு தூவென்று துப்பிய எச்சில் மழைத் துளிகளை அழுகிய முடை நாற்றம் கொண்ட பூமியில் வெள்ளமாய் பெருக்கெடுக்க வைத்த சம்பவமின்றி வேறில்லை என்பதை விளக்கோ விளக்கென்று ஐயந்திரிபற விளக்கியாயிற்று ஞானவானுக்கு.

இவ்வளவு தூரம் அர்த்தம் சொன்ன பிறகும் ஞானவான், எல்லாமே வெற்றுச்சொல், ஒன்றிலும் உண்மை இல்லை என்று விடாப்பிடி பண்ண, ஏற்கனவே அயல் தேசத்தாரும் அவனுடன் முரண்பட்டு, அவன் விடாப்பிடிக்குப் பதிலடி கொடுக்க, ஒட்டு மொத்த, அவன் வதியும் நாட்டை தம் ஆங்காரப் படையெடுப்புப் பயமுறுத்தல் செய்வதுபோல் பாவலா காட்டிய பின்னும், தான் கண்ட காண்டாமிருகத்துக்கு ஐந்து உடல்கள், அதில் சந்தேகம் இல்லை என்னும்படி இன்னும் சாதிக்க, வான சாஸ்திரி கோபக்கனல் கக்க ஞானவானைத் தூக்கி கொக்கிரகுளம் சுப்பையாவசம், செய்வதை செய்துகொள் என்று ஒப்படைக்க, ஒரு இரும்புத் துண்டு போல் நெருப்புக் கனலில் அவன் போடப்பட்டு சம்மட்டியடி மாறி மாறி கொடுத்த பின்னும் கூட, அவன் பிடிவாதம் கூடிற்றேயன்றி குறையக் காணோம் என்ற பாங்கில், நெருப்பு சுட்டதோ, அடி வலித்ததோ என்று இல்லாமல் ஞானவான், தான் கண்ட அருவெறுத்த காட்சியிலேயே மனம் ஒன்றிப் போய் கிடந்தான்.

மிதமிஞ்சிய சம்மட்டியடிகள் வாங்கியும் ஓயாத சந்தேகக் கொடுக்குகள் மாறி மாறி என்றில்லாமல் நிரந்தரமாகவே கொட்டி விட்டிருக்க, தன் பெயர் அரைகுறையாய்ப் போன அவமானம் தாளமாட்டாது ஓங்கி அடித்த அடி ஒன்று. அவன் உதவியாளன் ஞானதேசிகன் பெருவிரலைப் பதம் பார்க்க, அது, இரும்புத் துண்டு எனக் கிடந்த ஞானவான் பெற்ற சுத்தியலடிகளை விடவும் அதிகமதிகமான வலியை ஞானதேசிகனின் வாய்வழி வீறிடச் செய்ய, ஆம்புலன்ஸுக்கு அழைப்புவிடும் அளவுக்கு காரியம் கை மிஞ் சிப் போயிற்று.

பிணியாளன் ஞானதேசிகனையும், கொசுறு ஆக சுரணை கெட்ட ஞானவானையும் அவசரத்துக்கு சுமந்து சென்று மருத்துவமனை கொண்டு போய் சேர்க்கும் வண்ணம் வேகம் கூட்டிய ஆம்புலன்ஸ் வண்டி ஒலியளவில் பாய, நடுவழியில் சக்கரம் காற்றிழப்பில் புஸ் என்று பழுதுபட, வாகன ஓட்டுனர், பெரும்பாலும் போக்குவரத்து குறைந்த நடு ரோட்டில் ஒரு சத்தியாகிரகிபோல் குத்துக்காலிட்டு அமர்ந்து

வண்டி பழுது நீக்க வழிவகை கண்டிடத்தான் தாமதம் வீல் என்ற ஞானதேசிகன் அதிரும் சப்தமாய் ஒலி எழுப்ப, இவ்வளவுக்கும் சுடுபட்டு சம்மட்டியடி பெற்று வாகன மூலையில் ஒன்றும் நடவாதது போல் வெறிச்சென்ற வான் நோக்கிய பார்வையுடன் மல்லாந்து கிடந்த ஞானவானுக்கு ஒரு மந்திராலோசனை தேவைப்பட்டது போலுமானாலும், அது செய்ய மார்க்கமற்று போயிற்று வண்டியின் அற்ப சொற்ப விஸ்தீரணத்துக்குள்.

துடிதுடித்துச் சாவாய் என்று இள வயதில் சாபம் கொடுத்த ஞானவானின் அண்ணன், கலப்படமற்ற உண்மைதான் பேசினான் என்பது சத்தியமேயானாலும், ஞானவான் என்ற பெயர் கொண்டிருப்பினும் , அவனுக்கு இப்போது சுய சிந்தனையோ, பிறர் சொல் கேட்டு நம்பிப் பணியும் சாத்வீக மனப்பான்மையோ இல்லாது போக செத்த பாம்பை தடி கொண்டு அடித்துக் கொல்லும் வீராதி வீரன் போல், வலியில் அலறும் ஞானதேசிகனை ஓரக் கண்ணின் பார்வை மேய்வதாய் நோக்கிய அவன், உனக்கும் எனக்கும் ஒரே ஒரு வித்தியாசம் நீ தேசிகன், நான் வான், அவ்வளவே என்று அடங்காச் சிரிப்பின் அட்டகாசமாய் எள்ளி நோக்கியவாறு இருந்தான்.

ஒளியளவில் பாயும் வண்டி பழுது நீங்கிப் புறப்பட, வழியில் மேடு பள்ளம் தீவிரமிட, சாலை பராமரிப்பாளன் ஓட்டுனர் வாயில் குற்றுயிரும் குலையுயிருமாய்ச் சவைபட, எப்படியோ யார் செய்த புண்ணியமோ, ஏதும் கூடுதல் விக்கினமின்றி எய்தினர் மருத்துவமனை.

மருத்துவமனை கண்ட அதிர்ச்சிதானோ என்னவோ, அதுவரை அமைதி காத்து வந்த ஞானவான், திடீர் வலி கண்டாற்போல வீறிட்டலற, மருத்துவமனை கண்ட மன நிம்மதிதானோ என்னவோ , ஞான தேசிகனின் வலி மாயமாய் கணிசமாய்க் குறைய, பிணியாளர் வண்டிக்குள் வலி மாறாட்டம், வலி போராட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், எனினும் மாறாட்டம் ஒன்றுதான் சரி, மற்றவையெல்லாம் தெற்று என ஓர்க.

ஆகப் பெரிய சுத்தியலடிக்கும், வெப்பக் கொப்புளங்களுக்குமாக வெந்துபோன சதை மாமிசமாய் இருந்த ஞானவான் பிழைப்பது அரிது எனவும், நரமாமிசம் சாப்பிடுகிறவர்கள் எங்கிருந்தாலும் வருக எனக் கூவி, தசைக் கூளத்தை உள்ளெலும்பு வெளித் தெரிய கூறுகட்டி விற்பனைக்கு வைக்கலாமா என யோசித்த மருத்துவர்களை, தான் கொசுறு அல்ல, ஞானதேசிகனே கொசுறு என ஆகிவிட்ட மாறுபட்ட நிலையில், மறுபடியும் அண்ணாந்த அருவெறுத்த வான், பின்பு குனியலில் ஆரோசிக பூமி என மாறிமாறி நோக்கிய பார்வை ஞானவானுக்கு உண்டாகி அவனுடைய பிடிவாதம் மேலும் மிகுதியாயிற்று என்ற உண்மை வியப்படையச் செய்து அவன் இன்னும் சாகவில்லை என்பதைக் கட்டியம் கூறி உணர வைத்தது.

ஞானதேசிகன் பெருவிரல் நகம் கன்றிப்போன நிலையில், உயிருக்கு ஆபத்தில்லை என்று டாக்டர்கள் சான்றிதழ் வழங்க, காயம் பட்ட அடிக்கான அபராதத்தை கொக்கிரகுளம் சுப்பிடமிருந்து பெறலாம் என்று நடமாடும் நீதி மன்றம் தீர்ப்பிட, மகிழ்ச்சியில் திணறிப்போய், தன் மனைவிக்கு செய்தி அனுப்பியும், பின்பு நேரில் சென்று சந்தித்தும் இல்லற சுகத்துக்காக ஆலாய்ப் பறந்தான்.

இரத்தம் சிவப்பென்பது எல்லாரும் அறிந்ததெனினும் அதைப் பெருந்திரளாய்க் கண்ட அதிர்ச்சியும், அதோடு கூடவே, சிறு சிறு துண்டுகளாய் மனித, மிருக சதைக்கோளத்தையும், எலும்புக் குச்சிகளையும் அரிந்து, உடைத்து, ஆலங்கட்டி மழை என பெய்வித்த விபரீதக் காண்டலின் அருவருப்புக் கூடிய ஒக்காளமும் ஒரு சேர, ஏதோ விழுகிறது என்று அவற்றைச் சரியாகச் சுட்டிக் காட்டிய பார்வையற்ற மாற்றுத் திறனாளியை மனதுக்குள் மெச்சியபடி, அற்ப சொற்ப சந்தேகமும் அற்றுப் போயாயினும், மதி பிறழ்ந்தபடி முதலில் வான் நோக்கியும், பின்பு கீழ் நோக்கியுமாக மாறி மாறி செய்து, பிரபஞ்ச வெட்ட வெளியின் அந்த விகார நரக அதிசய காட்சிதனை மறுபடியும் மறுபடியும் தன் கனவுக்குள்ளும் நினைவுக்குள்ளும் கொண்டு வந்து பயந்து விதிர்விதிர்த்து பிரமித்தவாறு ஞானவான் வீறு நடை போட, அவனது அடியாட்கள் அவனுக்குப் பின்னால் புரட்சிப் போர்க்கொடி தூக்கி, நகர்வலம் வந்து, அவனை நிரந்தரப் போராளியாய் சாசனம் செய்து கொண்டாடியவண்ணம் அவன் சாகுமுன் செத்தபின் எப்படி எப்படி என்று பட்டிமன்றம் எல்லாம் வைத்து, வாதாடி வென்றவர்க்கு பரிசுக் கேடயம் கொடுத்தும் கௌரவித்து வந்த வண்ணம் இருந்தனர்.

e-mail : jantonyraj2007@gmail.com

# ஆழமான பரவல்

கலைச்செல்வி



ஓவியம்: ஜே.கே.

**சா**தத்தைத் தட்டில் கொட்டிக் கொண்டான் கதிர். சாம்பாரில் கிடந்த முருங்கைக்காயை கடமைக்கு உறிஞ்சி விட்டு சோற்றை அள்ளித் திணித்தான். ஞாபகம் வந்தவன் போல அவ்வப்போது கேரட் பொரியலையும், வெண்டைக்காய் வதக்கலையும் தொட்டுக் கொண்டான். வாழைக்காய் வறுவலை சட்டை செய்யாமல் இடது கையால் குழம்பை ஊற்றிக் கொண்டே குப்புறக் கிடந்த கத்திரிக்காயோடு சோற்றை அள்ளி வாய்க்குள் திணித்துக் கொண்டான்.

கிட்டத்தட்ட குண்டானில் இருந்த முழுச் சோறையும் முடித்த போதும் வயிறு வலித்தது அவனுக்கு.. ஆனால் பரவலாக வலிக்கவில்லை. வயிற்றின் ஆழத்தில் வலி. அதுதான் தொடக்கம். அதை அப்படியே விட்டுவிட்டால் பரவலாகி விடும். நழுவும் டவுசரால் வயிற்றை இறுக பிடித்துக் கொண்டாலும் வலி நிற்காது. வலி வரும் போதெல்லாம் சாப்பிட வேண்டும் என்று புரிந்தாலும் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் போதவில்லை. தங்கை எதற்கோ அடம் பிடித்து அழ, அவள் தட்டிலிருந்த சோற்றை சாப்பிடும் எண்ணத்தோடு அருகே சென்றவன் அம்மாவின் எரிச்சல் பார்வைக்கு பயந்து விலகி ஓடினான். எங்கு ஓடினாலும் வயிறும் கூடவே வந்து விடுகிறது. பள்ளியில் இருக்கும்போது.. விளையாடும்போது.. ஏன் தூங்கும்போது கூட வயிறு அவனை விலக்குவதில்லை.

அதைத் தவிர்த்து வெளியுலகில் அவனுக்குக் குறைவில்லை. வயிற்று தொல்லை அவனை படுத்தி எடுத்தாலும் வேலை வெட்டியில் அவனை யாருமே குறை சொன்னதில்லை. அரசாங்க அலுவலகத்தில் தினக் கூலி பணியாளன். டீ.. காபி வாங்கி வருவது.. கப், சாசர்களைக் கழுவுவது.. பியூன் வாஞ்சி கட்டளையிடும் வேலைகளைச் சிரமேற்கொண்டு செய்வது என எதிலும் குறையில்லை.

கதிரின் விறுவிறுப்பான நடையில் கழுத்தில் தொங்க விடப்பட்ட செல்போன் குலுங்கி ஆடியது. அதிகம் போனால் அதில் பத்து பேருடைய எண்கள் சேமிப்பிலிருக்கும்.

வாஞ்சியிடமிருந்துதான் அடிக்கடி அழைப்பு வரும். டீக்கடையிலிருக்கும் போது.. சாப்பாடு வாங்கச் செல்லும்போது.. பேப்பர் வாங்கி வரும்போதெல்லாம்.. "கதிரு.. சீக்ரம்.. " "கதிரு சீக்ரம்.. "என்று அவசரப் படுத்துவான். ஞாயிற்றுக் கிழமைகளில் செல்போனுக்கு அதிகம் வேலையிருக்காது. எப்போதாவது குணா அழைப்பான். குணா ஆபிசர் வீட்டில் சமையல் வேலை செய்பவன். இன்று பகல் கடுக்கத் தொடங்கிய நேரத்தில் குணா அழைத்தான்.

"கதிரு.. எங்கருக்க.. " குணா அழைத்த போது திண்ணையில் உட்கார்ந்திருந்தான் கதிர். பொதுவாக விடுமுறை நாட்களில் அருகிலிருக்கும் பஞ்சவர்ணசாமி கோயிலிலேயே விழுந்துக் கிடப்பான். கூட்டத்துக்கும் உபயத்துக்கும் குறைவில்லாத கோவில். தங்கைக்கு உடல்நிலை சரியில்லாததால் அம்மா அவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று விட, அப்பாவுக்கு துணையாக இருக்க வேண்டிய நிர்பந்தம் கதிருக்கு.

"வீட்லதான் சார்.. " குணாவை சார் என்றுதான் அழைப்பான். குணாவுக்கு முப்பத்து நாலோ.. ஐந்தோ வயதிருக்கும். "ஒடனே கௌம்பி வர்றியா.. "

உற்சாகமாகத் தலையசைத்தான். இதேபோல் இரண்டு முறை அழைத்திருக்கிறான். ஆபிசர் வீட்டுக்கு வருபவர்கள் வாங்கி வரும் பழங்கள்.. இனிப்புகள் எல்லாமே விலையுயர்ந்தவை. குணாவுக்கும் பெரிய மனசுதான்.

"கௌம்பி வர்றியா கதிரு.. "

"வர்றன் சார்.. வர்றன் சார்.. " என்றான் வார்த்தையாக.

அலுவலகத்தில் வைத்துதான் குணா பழக்கம். தலைமை அலுவலகம் என்பதால் கூட்டங்களுக்கு பஞ்சமிருக்காது. கேம்ப் இல்லாத நாட்களில் ஆபிசரை பார்க்க யாராவது வந்துக் கொண்டேயிருப்பார்கள். சில நேரங்களில் மதிய உணவுக்கு கூட வீட்டுக்குச் செல்ல முடியாத நேர நெருக்கடி வந்து விடும் அவருக்கு. அப்போதெல்லாம் வாஞ்சி குணாவுக்குப் போன் செய்து "சாருக்கு சாப்பாடு கொண்டாந்துடு.. " என்பான். ஆபிஸ் கார் லஞ்ச் எடுப்பதற்காக வீட்டுக்கு போகும். ஆபிசர் குடியிருப்பும் அலுவலகமும் அருகருகில்தான் இருந்தன. சொல்லப் போனால் கதிரின் வீடும் அந்த பகுதியில்தான் இருந்தது. காரில் தோரணையாக அமர்ந்து வரும் குணாவை கதிருக்கு பிடிக்கும்.

ஆபிசரின் டிபன்கேரியருக்கு ஆபிசருக்குண்டான மரியாதை உண்டு. குணாவிடமிருந்து பவ்யமாக வாங்கிக் கொள்வான் கதிர். முதல் தளத்திலிருக்கும் சாப்பாட்டு அறையில் கொண்டு போய் சேர்ப்பிக்கும் வரை அதே பவ்யம் இருக்கும். பெரிய சைஸ் ஐந்து அடுக்கு கேரியர். கேரியரை பார்த்த முதல் தருணத்தில் ஆச்சர்யமாக இருந்தது கதிருக்கு.

"கேரியருதான் பெருசு கதிரு.. அய்யா கொஞ் சந்தான் சாப்புடுவாரு.. "

குணா சொல்வது உண்மைதான். டிபன்கேரியரில் பாதி சாப்பாடு மிச்சப்பட்டிருக்கும். அது கதிருக்கானது. அவன் சாப்பிட்டு முடிக்கும் வரை காத்திருப்பான் குணா. சின்ன சின்ன கப் அன்ட் சாஸர்களை கழுவியே பழகிப் போயிருந்த கதிருக்கு அத்தனை பெரிய டிபன்கேரியரை கழுவுவது பெருமையாக இருந்தது. வட்ட வட்டமான அடுக்குகள்.. ஒன்றோடொன்று பொருந்துவதற்கேற்ப மடித்து விடப்பட்ட விளிம்பு.. கீழடுக்கில் உட்கார தோதாக பள்ளமாக்கப்பட்ட மேலடுக்கு.. கேரியரை தாங்கிக் கொள்ளும் நீளக்கம்பி.. பார்வைக்கே கவர்ந்திழுக்கும் பளபளப்பான சில்வர் வேறு. அதனை சுத்தம் செய்வதற்காகவே பிறப்பெடுத்தது போல எண்ணிக் கொள்வான்.

"சார் ஏன் இவ்ளோ கொஞ்சமா சாப்புடுறாரு.. "என்பான் டிபன் கேரியரை பூட்டிக் கொண்டே.

"அவருக்குதான் சக்கர.. ரெத்தக் கொதிப்பெல்லாம் இருக்கில்ல.. அப்றம் சோத்தை தின்னு.. ? இப்பதான் என் வைத்தியத்தில கொஞ்சம் கன்ட்ரோல் ஆயிருக்கு.. திருப்பி. சோத்தை தின்னா ஏறிக்காதா.. ?" என்பான்.

"நீங்க டாக்டரா.. ?"

"ஆமா.. "

ஒரு மருத்துவர் சமையல் வேலை பார்ப்பது ஆச்சரியமாக இருந்தது கதிருக்கு. உடம்பு சரியில்லாத நேரத்தில் தனக்கும் வைத்தியம் பார்க்க சொன்னான். குணாவின் வைத்தியம் புதுமையாக இருந்தது. கதிரின் கைகளை இறுக்கி மூடச் சொன்னான். பிறகு மூடிய விரல்களில் கலர் ஸ்கெட்ச்சில் மாறி மாறி புள்ளிகள் வைத்தான். கலர் தெரபியாம். உடம்பு சரியாகி விடும் என்றான். சென்றமுறை

சளி பிடித்துக் கொண்டபோது கட்டை விரலில் ஆறேழு மிளகை வரிசையாக வைத்து டேப் போட்டு ஒட்டி விட்டான். சளியெல்லாம் சரியாப் போவும்.. என்றான். ஆனால் அதையும் மீறி காய்ச்சல் வந்து விட, உச்சந்தலை உட்பட அங்கங்கே ஊசியை சொருகினான். வலிக்கவுமில்லை.. ஆமாம் வலிக்கவுமில்லை. ஆபிசருக்கும் இதுபோலச் செய்வதால்தான் சுகரும் பிரஷரும் கட்டுப்பாட்டில் இருப்பதாக சொன்னான், கதிருக்கு புரியவில்லை. அதே நேரம் கேள்வியாக எதுவும் கேட்க தோன்றவில்லை.

ஞாயிற்றுக்கிழமை மதிய நேரத்தை வீடுகள் கொண்டாடிக் கொண்டிருந்ததால் தெருவில் நடமாட்டம் அதிகமில்லை. கதிருக்கு உள்ளப்படியே நீளமான கால்கள். அதில் விறுவிறுப்பும் ஏறிக் கொள்ள பதினைந்து நிமிட நடையில் ஆபிசர் வீட்டை எட்டி விட்டான். காம்பவுண்டுக்குள் நுழையப்போகும் தருணத்தில் ஆபிசரின் கார் கதிரைக் கடந்து எதிர் திசையில் சென்றது.

”சார் இப்பதான் கௌம்புனாரு.. “ கதிரைக் கண்டதும் குணா உற்சாகமானான்.

”தெரியும் சார்.. பாத்தேன்.. ”

”சாப்டியா.. ”

வயிறு பரவலாக வலித்துக் கொண்டிருந்தது.

”சோறாக்கிட்டேன்.. சாப்டறதுக்குள்ள ஏதோ அவுசர வேலன்னு சார் கௌம்பீட்டாரு.. ”

”லீவு நாளுன்னா கூட வேலை இருக்குமா.. “

”ஆபிசருக்குல்லாம் எல்லா நாளும் வேலயும் உண்டு.. அதுக்கேத்த காசும் உண்டுல்ல.. ” கண்ணடித்து கலகலவென்று சிரித்தான் குணா.

கதிருக்கு அதெல்லாம் புரிவதில்லை. வாஞ்சி எப்போதாவது கொடுக்கும் காசை அம்மாவிடம் கொடுத்து விடுவான். கூட்டம் நடக்கும் நாட்களில் வாஞ்சியின் தயவால் தீனி... காபி.. டீ கிடைத்து விடும். ஒருமுறை ஆபிசர் இவனை பார்த்து விளையாட்டாக சொன்னது ”புள்ளையாண்டான்.. ” என்று காதில் விழுந்தது கதிருக்கு.

வாஞ்சி விழுந்து விழுந்து சிரித்து விட்டு “சார் ஒன்னை புள்ளையாருங்கிறாரு.. ஒன் வயித்த பாரு.. ” என்றான்.

உப்பலாக தனித்து நீண்டிருந்த வயிற்றை தொட்டுக் கொண்டு இவனும் சிரித்தான். ”இந்த வயிறு மட்டும் இல்லேன்னா சூப்பரா இருக்கும் சார்.. வயத்திலதான் சார் எல்லா பிரச்சனயும்.. ஆனா வயிறுதான் சார் பெருமை.. அதான ஒடம்புல முக்கியம்.. ”

”போடா லூசு.. ” என்று கிண்டலடித்தான் வாஞ்சி.

”சரி.. கதிரு கொஞ்சம் வெளி வேல கெடக்கு.. நா கௌம்புட்டுமா.. ஆக்கி வச்சதெல்லாம் அப்டியே கெடக்கு.. சாப்டு செத்த நேரம் படுத்தீன்னா பறந்து வந்துடுறன்.. ” என்றான் குணா.

”நீங்க சாப்டீங்களா சார்.. ”

”நா வெளிய பாத்துக்கிறேன்.. பாத்து.. பத்ரம். கதவ தாப்பா போட்டுக்க.. நா வரவுட்டு கௌம்பிக்கலாம்.. வருட்டுமா.. ”

ஆபிசரின் குடும்பம் வெளியூரில் இருக்கிறது. சமையலுக்கு தோதாக குணா கூடவே தங்கிக் கொண்டான். சமையலறையும், முன்கூடமும் புழங்கிக் கொள்ள அவனுக்கு அனுமதியுண்டு. மீதி அறையின் சாவிகள் ஆபிசரிடம் இருக்கும்.

உண்டு முடித்து பிறகுத் தரையை சுத்தப்படுத்தினான் கதிர். முன்கதவை மூடி தாழிட்டான். வெளியில் வாட்ச்மேன் உண்டு. ஆபிசர் உபயோகிக்கிறாரோ இல்லையோ கொல்லைப் பகுதியில் செடிக் கொடிகளோடு ஊஞ்சல்.. சறுக்கு.. சிமிண்ட் பெஞ்ச் என ஏகக் கோலாகலம். பூவரச மர நிழலிலிருந்த சிமெண்ட் பெஞ்சில் கைகளைக் கோர்த்து தலைக்கு அடியில் முட்டுக் கொடுத்து மல்லாந்து படுத்துக் கொண்டான். எறும்புக் கூட்டம் ஒன்று தொந்தரவான கோபத்தோடு அங்குமிங்கும் அலைந்து இவனையும் கடித்து வைக்க.. அதைக் கையால் தள்ளி நகர்த்தினான். மல்லாந்திருந்த வயிறு மேடாக ஏறி இறங்கியது. தொங்கிக் கொண்டிருந்த செல்போனை சட்டைப் பையில் போட்டுக் கொண்டவுடன் அலைபேசி அடித்தது.

”சம்பளத்தில கழிச்சுக்க சொல்லி ஆபிசர்ட்ட பணம் கேட்டுப் பாரேன் கதிரு.. ” என்றாள் அம்மா.

”அவரு ஊர்ல இல்லம்மா.. ”

”பெரிய காச்சலாருக்கும்னு சொல்றாங்கப்பா.. ”

”அதுக்கு நா என்ன செய்யிட்டும்.. ”

அலைபேசியை அணைத்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். கண்களை மூடி வலது கையை நெற்றியின் மீது படுக்கையாக்கிக் கொண்டான்.

தங்கச்சி பாவம்தான்.. ஆனா அதுக்கு ஒண்ணும் புரிய மாட்டேங்குது..வயித்து வலியத்தான் காச்ச.. காச்சன்னு சொல்லுது.. நெறைய சோறாக்கச் சொல்லி சாப்பட வச்சா சரியாப் போயிடும்.. சின்ன வயதில் பாப்பாவும் இவனுமாகச் சோறு சமைத்து விளையாடியதை நினைத்துக் கொண்டான். இருவரும் சின்னதான மூன்று கற்களைக் கூட்டி அதில் நுழையுமளவுக்கான சின்ன சின்ன சுள்ளிகளை விறகுகளாக்கிக் கொள்வார்கள். கொட்டாங்குச்சியில் இருக்கும் மண் தான் சோறு. பாதி விளையாட்டில் சோற்றை அள்ளி திங்க வேண்டும் என்ற ஆவல் மிகுந்து விடும். அம்மாவிடம் ஓடுவான். பல சமயங்களில் அம்மா வருத்தப்படும். சில சமயங்களில் “அதான் காலைல சாப்டுட்டேல்ல.. அப்றம் என்ன.. ?“ என்று கத்தும். ”ஆட்டுப் புளுக்க சம்பளத்தில ஒக்காந்து சாப்ட அம்பது பேராம்.. ”ஊரிலிருக்கும் மாமியார் குடும்பத்தை இழுத்துத் திட்டும்.

வயிற்றின் ஆழத்திலிருந்து வலி கிளம்புவது போலிருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் அது வயிறு முழுக்கப் பரவும். குழம்பும் பதார்த்தங்களும் இருந்தளவுக்குச் சோறு அதிகமாக இல்லை. பதார்த்தங்களை அவன் அதிகம் விரும்புவதுமில்லை. மளமளவென்று அங்கிருந்த குழாயில் கைகளை ஏந்தித் தண்ணீரை குடித்தான். இருந்தும் வயிற்றில் இடம் பாக்கியிருந்தது. அப்படித்தான் தோன்றியது. “ஆனை வந்தாலும் அடங்காதுடா.. “என்பாள் அம்மா. ஆனாலும் சாப்பிடும்போது மற்றவர்களை போல “போதும் எழுந்திரி.. “ என்று சொன்னதில்லை.

அம்மாவைத் தவிர யார் அவனை உட்கார வைத்து சோறிட்டிருக்கிறார்கள்..? சித்தப்பா வீட்டுக்குப் போன ஒரு சமயத்தில் சித்தி “போதும் எழுந்திரி..“ என்று சொல்லியிருக்கிறாள். “வவுறா.. வண்ணாஞ்சாலா..?“ என்று அத்தை திட்டியிருக்கிறாள். கல்யாண வீட்டில் இரண்டொரு முறை அப்பாவுடன் சென்றபோது யாரும் எழுந்திரிக்கச் சொல்ல வில்லை. அதே போல அந்தக் கோவிலில் அவனை உட்கார வைத்துச் சோறிட்டதை கதிரால் மறக்கவே முடியாது. அருகில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த அப்பா வேறு “இருமுடி காசுல சோத்துக்கும் சேத்துதான் வாங்கிக்குவாங்க.. நல்லா தின்னு.. தின்னு..“ என்று உசுப்பேற்றினார். அப்போது வேலையிலிருந்தார். அரசாங்க வேலைதான். ஆனால் கீழ் நிலைப் பதவி. அவரை பொறுத்தவரை கீழ்நிலைப் பதவியில் பியூன் பதவிகள் ஆசிர்வதிக்கப் பட்டவை. அதிகாரியிடம் ஏச்சு.. பேச்சுகள் கிடைத்தாலும் அதற்கேற்ப வருமானமும் இருக்கும். வெளியே ஜபர்தஸ்தும் காட்டிக் கொள்ளலாம்.. அதுவும் காசாக்கிக் கொள்ளக் கூடிய ஜபர்தஸ்து. ஆனால் இவர் வகிக்கும் பதவி எதற்கும் லாயக்கில்லை. சம்பளத்துக்கும் சேர்த்து தான். பியூன்களிடம் அன்பாகவும் பணிவாகவும் இருக்க பழகிக் கொண்டார். டீ காசாவாது மிஞ்சும்.. அந்த சகவாசத்தில்தான் இந்தக் கோயில் பழக்கமானது. இந்தக் கோயிலில் சிலையை விட மனித உருவில் நடமாடும் சாமிக்குதான் பக்தர்கள் அதிகம். எப்போதும் கூட்டம் அலை மோதிக் கிடக்கும்.

எப்போது தூங்கினான் என தெரியவில்லை. தலைக்கு மேல் காகம் இடைவிடாமல் கத்த, விழிப்புத் தட்டியது. வாயில் வழிந்த எச்சிலை இடது கையால் துடைத்துக் கொண்டான். தூக்கம் முழுமையாக விடுப்படவில்லை. அனிச்சையாக காகத்தை துரத்தும் சைகையில் கையை உயர்த்தினான். எழுந்து உட்கார்ந்து கொண்டான். சட்டைப் பையில் இருந்த அலைபேசியை எடுத்து நேரத்தைப் பார்த்தான். மணி மூன்றாகியிருந்தது. குணாவின் அழைப்பு தவறியிருந்தது. அப்படியே அழுத்தி மறு அழைப்பு செய்து துண்டித்தான். குணாதான் “நீ மிஸ்ட் கால் குடுத்தா போதும்.. ” என்று சொல்லியிருந்தான்.

”தூங்கீட்டியா கதிரு.. ”

”ஆமா சார்.. ”

”கெளம்பிடாத.. வந்துடுறேன்.. ” என்றான். மெல்லியப் பேச்சுக்குரல் கேட்டது. பெண் குரலாக இருக்கலாம்.

”சரிங்க சார்.. ”

ஒரு முறை ஆபிசர் வெளியே போயிருந்த நேரத்தில் வீட்டை பூட்டி விட்டு குணா எங்கோ கிளம்பி போக, அந்த நேரம் ஆபிசர் வீட்டுக்கு திரும்பி விட வேலை பறி போகுமளவுக்கு, பிரச்சனையாகிப் போனது. குணாவுக்கு சமையல் வேலை கை கொடுத்ததோ

இல்லையோ கலர்தெரபி கைக்கொடுக்க வேலை நீடித்துப் போனது.

"சார்.. நான் அஞ்சாப்பு படிக்கறப்ப செந்தில் தெனைக்கும் மதியானம் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு போயிடுவான்.. ஒருநா என்னையும் கூட்டீட்டு போனான்.. பருப்பு போட்டு நெய் ஊத்தி அவுங்கம்மா சோறு போட்டாங்க.. நீங்க சமைக்கறமாதிரியே இருந்துச்சு அவங்க சமையலும்.. " கதிரின் இம்மாதிரியான பேச்சுகள் அபத்தமாக தோன்றினாலும் அவனின் ஆபத்தில்லாத பேச்சுத்துணை குணாவுக்கு பிடித்திருந்தது.

"அப்டீன்னா என் சமயல் நல்லால்லேங்கிறியா..?"

"இல்ல சார்.. இல்ல சார்.. சூப்பரா சமக்கிறீங்க.."

பிஸ்கெட் பாக்கெட்டை பிரித்து இரண்டு மட்டும் எடுத்துக் கொண்டு மீதத்தை அப்படியே கதிரிடம் நீட்டினான்.

"எத்னாவது படிச்சிருக்க.. "

"ஆறாவதோட நின்னாச்சு.. வீட்ல சண்டப் போட்டுட்டு எங்கப்பா காசு குடுக்க மாட்டேன்னு போயிட்டாரு.. அம்மா பிரைவேட் ஸ்கூல்ல ஆயா வேலைக்கு போச்சு.. அப்போல்லாம் இங்க பாருங்க.. இங்க பாருங்க சார்.. இப்டிதான் குனிஞ்சுக்கிட்டே நடப்பேன்.."

"ஏன்..?"

"வயித்துவலிதான்.."

வயிற்றுவலி பிரச்சனையோடு ஒண்ணுக்கு போக வேண்டும் என்ற உணர்வு வேறு. ஆனால் அது கொஞ்சம் வேறுமாதிரியான அவதி. அப்போது அவனுக்கு இருபத்தைந்திருக்கும். கனவு முழுக்க பெண்கள். அதுவும் துணியில்லாத உடல்களோடு. கனவில் கூட பயந்து வியர்த்து போய் கண்களை மூடிக் கொள்ளத் தோன்றும்.. ஆனாலும் திருட்டுத்தனமாக பார்ப்பான். உடனே "ஒண்ணுக்கு" வருவது போலிருக்க, விழிப்பு வந்து விடும். சில சமயங்களில் பகலில் கூட அப்படியொரு உணர்வு வரும். ஆனால் அது வயிற்று வலியை விட தேவலாம். தீவிரமாக சாமி கும்பிட்டதில்தான் படிபடியாக குறைந்து வருவதாக நம்பினான். இந்த சேதியை வெளியே சொல்லக் கூடாது என்ற சத்தியத்தோடு குணாவிடம் ஒருநாள் பகிர்ந்துக் கொண்டான்.

அந்த கோயிலில் செக்யூரிட்டியாக இருந்தபோது நிஜமாகவே ஒண்ணுக்கு வந்தாலும் அடக்கிக் கொண்டுதான் இருக்க வேண்டும்.. கூட்டம்.. கூட்டம்.. எங்கும் பக்தர்கள் கூட்டம்.. ஒதுங்குவதற்கு சற்று தூரம் நடக்க வேண்டும். பணி நேரத்தில் அதெல்லாம் சாத்தியமில்லை. தங்குவதற்காக கோவில் நிர்வாகம் ஒதுக்கியிருந்த இடத்திலும் அதே நிலைதான். அது முன்னாள் மாட்டுக் கொட்டகை.. நான்கு புறமும் தகரத்தால் தடுத்திருந்தனர். செங்கல் பதித்தத் தரை. பாய்.. தலையணை.. இரண்டு செட் துணிமணிகள்.. ஒரு கடப்பா கல் பதித்த அலமாரி. இவனைப் போல ஏழெட்டு பேர் அங்கிருந்தனர்.. சம்பளம் என்று ஏதுமில்லை. இவனுக்கு செலவுமில்லை. வருடத்திற்கு இரண்டு செட் துணிமணி கிடைத்து விடும். எப்போதும் அவனுக்கு வயிறுதான் பிரச்சனை. நான்கு மணிக்கே குளித்து தயாராகி விடுவான். அதுவரை முணுக்முணுக்கென்றிருந்த வயிறு காலை ஏழு மணிக்கெல்லாம் பெரியதாக ஓலமிடத் தொடங்கும். அந்நேரத்திலேயே பக்தர்கள் கூட்டம் நெருக்கியடிக்கத் தொடங்கியிருக்கும். அதட்டலாக பேசி வரிசையை சரிப்படுத்த அவனால் முடியாது. இருந்தாலும் கெஞ் சலாக சொல்வான்.. நெரிசலில் நழுவ விடும் பொருள்களை எடுத்துத் தருவான். சில சமயம் அழும் குழந்தைக்கு பலூன் வாங்க தாய்மார்கள் இவனை பணிப்பதும் உண்டு. என்னயிருந்தாலும் வயிற்று தொந்தரவுக்கு முன் "ஒண்ணுக்கு" போகும் தவிப்பு ஒன்றும் பெரிதில்லைதான். எட்டு மணிக்கு சூடாக டிபன் கிடைக்கும்.. இட்லி.. பொங்கல்.. சப்பாத்தி.. சில சமயங்களில் பூரி.. தின்ன தின்ன திகட்டுவதில்லை. அப்போது அப்பாவின் ஞாபகம் வந்துப் போகும். அவரால்தான் இந்த வாய்ப்பு.

"தம்பி மாதிரி பக்தியான பசங்க கோயிலுக்கு தொண்டு செய்ய வந்தா நல்லாருக்கும்.. "என்றனர் இருமுடி கட்டி வந்த தருணத்தில். அணுகுவது முன்பின் தெரியாத கோயில் நிர்வாகத்தினர் என்றாலும் இம்மாதிரியான நல்ல சகுனங்கள் காட்டுவது குடும்பத்துக்கு நல்லது என்பதால் அப்பா நெகிழ்ந்திருந்தார்.

"சாப்பாடு.. தங்கறதெல்லாம் ஃப்ரிதான்.. சம்பளம் மட்டும் கொஞ்சநாளுக்கு குடுக்க முடியாத நெலம.. " என்றனர்.

"அய்யோ.. சாமி தொண்டுக்கு சம்பளம் எதுக்குங்க.. நாங்க குடுத்து வச்சிருக்கணும்.. "

"நான் இங்கயே இருக்கம்ப்பா.. "என்றான் கதிர் யாரும் கேட்காமலே.

”இல்லல்ல.. இருமுடி செலுத்துனா வீட்டுக்கு போயி மாலைய எறக்கி வக்கணும்.. அதான் முறை.. எறக்கி வச்சிட்டு அடுத்த பஸ்ச புடிச்சு ஓடியாந்துடு.. ” நூறு ரூபாய் தாளை மடித்து கையில் வைக்க, அப்பாவும் இவனும் நெகிழ்ந்துப் போனார்கள். இவனுக்கு மதியம் உண்ட பாயாசம்.. வடை.. சாம்பார்.. கூட்டு.. எல்லாவற்றையும் மீண்டும் சாப்பிட வேண்டும் போலிருந்தது.

”இப்பதானே சாப்டே.. ”என்றார் அப்பா. ஆனாலும் பொரி வாங்கிக் கொடுத்தார். பத்து ரூபாய்க்கே கை நிறைந்த பாக்கெட். அங்கிருந்த இரண்டு வருடங்களும் வயிறு அதிக வேதனைக் கொடுத்ததில்லை. மதிய வேளையில் ஒரு மணிக்கு சாப்பாடு.. இருமுடி சாப்பாடு போல தடபுடலாக இல்லாவிட்டாலும், ஒரு பொறியலும், அப்பளமும் கட்டாயம் இருக்கும். சாப்பாட்டில் அளவு கிடையாது. இருந்தாலும் திரும்ப திரும்ப இவன் கேட்பது அவர்களுக்கு பிடிப்பதில்லை. மதியத்துக்கும் இரவுக்குமான நீண்ட இடைவெளியை கடப்பது பெரிய சவாலாகவே இருந்தது. எட்டு மணிக்கு ஆவலாக இட்லியில் கை வைக்கும்போது “முன்ன பின்ன தின்னதே இல்லியாடா நீ.. ” கிண்டலாக எரிச்சலை காட்டுவார்கள்.

அப்பாவுக்கு திடீரென கையும் காலும் இயக்கமற்று போக, இவனை அம்மா அழைத்துக் கொண்டாள். “அவருக்கு கை வர்லீன்னா நா என்னா பண்ணுட்டும்.. நா வர்ல போ.. ” என்றான் அம்மாவிடம் கோபமாக. ஆனால் அம்மா விடவில்லை. திரும்பி வந்தபோது தங்கச்சி பாப்பா அநியாயத்துக்கு மெலிந்திருந்தாள். எல்லோரும்தான். “ஒனக்கென்ன.. வயித்துக்கு சோறுக் கெடச்சா சொர்க்கம்தான்.. எங்க பாடு ஒனக்கெங்க புரியப்போவுது.. ” என்றாள் அம்மா எரிச்சலுடன். அப்பாவுக்கு சம்பாத்தியம் இல்லை. ஆஸ்பத்திரி செலவு வேறு.

இருட்டத் தொடங்கியிருந்தது. தோட்டத்தில் கொசுக்கள் அப்பிக் கொள்ள, எழுந்து வீட்டுக்குள் வந்தான். மளிகைக்கடையில் சரக்கு தூக்கும் வேலையில் இருந்த போது இத்தனை பிரச்சனை இல்லை. இவனின் சம்பளத்துக்கு பதிலாக அம்மா பலசரக்காக வாங்கிக் கொள்வாள். அப்போதுதான் பாப்பாவுக்கு திருமணமானது. பலசரக்குக் கடைக்காரர் கொஞ்சம் கடன் கொடுத்திருந்தார்.. ஆனால் திருமணக்கடன் அடைவதற்கு முன்பே தங்கை வீட்டிற்கு திரும்பி விட, எதிர்த்து நின்ற அம்மாவை “பேக்குங்களை பெத்துப் போட்டுட்டு தெனாவட்டாவா பேசுற..?” மாப்பிள்ளை ஒருமையில் பேசும்போது இவனும் நின்றுக் கொண்டிருந்தான். அப்போது கூட வயிற்றில் வலி இருந்தது. வலி என்றால் முதலில் ஆழத்தில் இருக்கும். பிறகு மேலெழும்பி முன்னகரும். பிறகு வயிறெங்கும் பரவும். கவனம் முழுக்க வயிற்றிலேயே வைத்திருக்க வேண்டியிருக்கும்.

பிறகுதான் யாரோ சொல்லி இந்த அரசாங்க அலுவலகத்தில் எடுபுடி வேலை. “சீக்ரம் ரிடையர் ஆயி கோயில்ல ஒக்காந்துக்குணும்.. ”என்பான் வாஞ்சியிடம்.

”ஒனக்கென்ன ரிடையர்மெண்ட்.. ? எப்ப வேணும்னாலும் போயிட்டே இருக்க வேண்டியதுதான்.. ”

”கோவிலுன்னா சோத்துக்கு பிரச்சனை இல்ல.. அதான்.. ” என்றான் வாஞ்சி சொல்வதை காதில் வாங்காததுபோல.

”வீட்ல மத்தவங்கள்ளாம் இருக்காங்கள்ல.. ?”

”அம்மாப்பா செத்துருவாங்க.. தங்கச்சிக்கும் வயித்துவலி.. அதும் செத்துரும்.. எனக்கு யாரு சமைச்சுப் போடுவா.. ?”

”ஏயப்பா.. காரியக்கார லூசு நீ.. சாவுற வரைக்கும் ப்ளான் பண்ணீட்டியே.. ”

மணி எட்டாகியிருந்தது. ”இன்னுமா வீட்டுக்கு போவுல.. தங்கச்சிய பெட்ல வச்சிட்டாங்கடா தம்பீ.. ஒங்கப்பாவப் பொரட்டிப் போட கூட ஆளில்ல.. ”

”வர்றம்மா.. சார் வந்துருட்டும்.. ” என்றான் குணாவை நினைத்துக் கொண்டு.

”சார் வந்தார்ன்னா நெலமய சொல்லி பணம் கேளுப்பா.. ” என்றாள் அம்மா ஆபிசரை நினைத்துக் கொண்டு.

கதிருக்கும் கிளம்ப வேண்டும் என்றுதான் தோன்றியது. குணாவுக்குப் போன் செய்தான்.

”சார்.. ”என்பதற்குள் குணா மறித்துப் பேசினான்.

”முக்குக்கடையில பரோட்டா வாங்கிட்டு வர்றன்.. நீ கௌம்பிடாத.. ”

வயிறு வலிக்க ஆரம்பித்தது பரவலாக.

அம்மா மீண்டும் அழைத்தாள். அலைபேசியின் சத்தத்தை குறைத்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான்.

e-mail : kalaiselvi312try@gmail.com

# உளச்சல்...!

ஃபிர்தவ்ஸ் ராஜகுமாரன்

ஏதோ சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்தாள் ரம்லத். எதிர் வீட்டு மைமூன் அக்கா வளர்க்கும் சேவல் “கொக்கரக்கோ.. ” என்று கூவி மொஹல்லா வாசிகளை துயில் எழுப்பிக்கொண்டிருந்தது. ஸுபுகு தொழுகை நேரமாகிவிட்டதை உணர்ந்து எழுந்து உட்கார்ந்தாள். ‘கட கட.. ’ வென்று மெல்லிய சத்தத்துடன் மின்விசிறி சுற்றிக்கொண்டிருந்தது. முஸ்தபா வந்ததும் உம்மாவுக்கு முதலில் ஒரு புதுப் ஃபேனை வாங்கிக் கொடுக்கச்சொல்லணும் என்று நினைத்துக் கொண்டவளாக உம்மா பக்கம் பார்வையைத் திருப்பினாள். பக்கத்து கட்டிலில், உம்மா ஒருக்கழித்துப் படுத்திருந்தது. அதிகாலை குளிருக்குப் போர்வையை இன்னும் இழுத்து மூடிக்கொண்டு இந்தப் பக்கம் உம்மா திரும்பிப் படுப்பதைப் பார்த்தாள் ரம்லத். பாவம் உம்மா! எத்தனை ஆண்டுகளாக இப்படித் தனிமையிலேயே காலம் கழிக்கிறது. உம்மா மீதும் இரக்கம் சுரந்தது.

இரவு தூங்கும்போது மட்டுந்தான் அவள் மனம் எந்த நினைவுகளும் இல்லாமல் கொஞ்சம் ஓய்வெடுக்கிறது. இப்போது அதுவும் கெட்டுவிட்டது! தூக்கம் பிடிக்கவே நீண்ட நேரம் புரண்டு கொண்டே கிடக்க வேண்டியிருக்கு!. என்னாகுமோ... ஏதாகுமோனு ஒருவித கலக்கம் அவளுக்குள் உளைந்து கொண்டேயிருக்கிறது. குடும்ப வாழ்க்கை நசிந்து விடுமோ என்கிற அச்சம் தின்று கொண்டிருக்கிறது! நிம்மதியாக தூங்கக் கூட விடாமல் இம்சிக்கிறது. சின்னச் சின்ன சத்தத்துக்கெல்லாம் திடுக் திடுக்கென்று முழிப்பு வந்து விடுகிறது. பிறகு கண்ட கண்ட நினைவுகள் அலைக்கழிக்க விழித்துக்கொண்டே கண்ணீருடன் கழிக்க வேண்டியிருக்கு!

இன்னும் ஒரு மாதம்தான் முஸ்தபா வந்துவிடுவான் என்று நிலை கொள்ளாத மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த ரம்லத்திற்கு முஸ்தபாவிடமிருந்து திடீரென சில நாட்களாக எந்தத் தகவலும் இல்லாமல் போனது அதிர்ச்சி. தினம் தவறாமல் போன் செய்து கொஞ்சிப் பேசுபவனுக்கு என்னாகிவிட்டது. என்னதான் ஓய்வு ஒழிச்சல் இல்லாத வேலை அதிகம் இருந்தாலும் தூங்கப் போகும்போது கூடவா ஒரு அஞ்சு நிமிஷம் பொண்டாட்டியுடன் ஆசையாகப் பேச நேரம் இருக்காது...! அழுகை முட்டிக்கொண்டு வரும். அடுப்படிக்குச் சென்று முகம் பொத்திக் கொண்டு அழுவாள். எந்நேரமும் கணவனை நினைத்து நினைத்து இரவுகளில் அழுது கொண்டு யுகமாய் கழியும்; நாட்களை எண்ணிக்கொண்டு மூன்று வருடமாக தவித்துக்கொண்டிருக்கும் தவிப்பு அவளுக்குத்தான் தெரியும்.

சென்ற முறை இரண்டு ஆண்டுகள் முடியு முன்பாகவே லீவு போட்டு ஓடோடி வந்தவன் இப்போது லீவு கிடைக்கவில்லை என்று வருவதை தள்ளிப் போட்டுவிட்டான். ரம்லத் மிகவும் ஏமாந்து போனாள். போனில் புலம்பினாள். ஒரு ஆறுதல் கூட சொல்லாமல் “சரி சரி.. ” என்று உடனே போனை கட் செய்துவிட்டான் முஸ்தபா. போனில் மணிக்கணக்காக உருகுபவனுக்கு இப்போது என்னாகிவிட்டது..! ரம்லத்துக்கு மிகவும் வருத்தம். சில மாதங்களாகவே இந்த மாற்றத்தை அவள் கவனித்துதான் வருகிறாள். ஒரு வேளை நான் வருத்தம் அடைவேன் என்று இப்படிச் செய்கிறாராக இருக்கும் என்று அவளாகவே எண்ணிக்கொண்டு ஆறுதல் அடைந்தாள்.

சென்ற முறை ஒத்தப்பாலம் சென்றபோது மஜீத்தான் அவளிடம் முஸ்தபா ஊருக்கு வர ரெடியாயிட்டிருக்கான் என்ற தகவலைச் சொன்னான். மஜீத் அப்போது விடுமுறையில் வந்திருந்தான். செய்தியைக் கேட்டவுடன் ரம்லத் சந்தோசத்தில் திக்குமுக்காடிப் போனாள். “உண்மையாவா மச்சான்.?” என்று பலமுறை திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே இருந்தாள். இதை ஏன் அவர் என்னிடம் போனில் பேசும் போது சொல்லவில்லை..!

என்ற கேள்வி அவளுக்குள் எழுந்து அடங்கியது. ஒரு வேளை விளையாட்டுக்காக மஜீத் பொய் சொல்கிறரோ... சந்தேகம் அடைந்தாள். ஆனால் அவன் உறுதியாகச் சொல்லவே அவளுக்குள் கொஞ்சம் நெருடியது. இன்னிக்கு நைட் முஸ்தபாவிடம் பேசும்போது கேட்கலாம் என்று சமாதானம் அடைந்தாள். ஒரு வேளை என்னிடம் சொல்லாமல் 'நாளைக்கு கிளம்பி வர்றேன்னு..' திடுமென எனக்கு இன்ப அதிர்ச்சி கொடுப்பாராக இருக்கும் என்றும் நினைத்துக் கொண்டு தினம் தினம் முஸ்தபாவின் போனை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். மனக் கலக்கத்தை கொஞ்சம் தள்ளி வைத்து, காலைக் கடன்களை முடித்து ஒய்வெடுத்து வந்து, முன் அறைக்கு வந்து விளக்கை போட்டாள் ரம்லத். வெளியே இன்னும் இருட்டு மிச்சமிருந்தது. தொழுகை விரிப்பை எடுத்துபோட்டு தொழ ஆரம்பித்தாள். ஒவ்வொரு தொழுகையின் போதும் தினம் தினம் இறைவனிடம் மன்றாடி துஆ கேட்டுக் கொண்டுதான் இருக்கிறாள்.

மஜீத் மச்சான் மட்டும் எப்படி வருஷம் தவறாம லீவுல வந்துடுறார். சிலசமயம் ஆறு மாசத்துக்குள்ளாகவே வந்துடுறார். இவருக்கு மட்டும் எப்படி அடிக்கடி லீவு கிடைக்குது...? மஜீத் வரும்போதெல்லாம் அவளுக்குள் இந்தக் கேள்வி திரும்பத் திரும்ப எழும். முஸ்தபாவிடம் இது பற்றி ஒரு முறை கேட்டபோது, "அவன் சொந்தக் கடை போட்டிருக்கான். அதனால அவன் அரபி அவுனுக்கு லீவு குடுப்பாரு.. " என்றான். ஒவ்வொரு முறையும் இவனிடம்தான் முஸ்தபா பணத்தையும், பொருட்களையும் கொடுத்து அனுப்புவான். மஜீத் ஊருக்கு வந்தவுடன் அவளுக்கு தகவல் வரும். மறு நாள் ஒத்தப்பாலத்துக்கு மாமியுடன் கிளம்பிவிடுவாள். சில சமயம் உம்மாவும் கூட வரும். முஸ்தபா ரம்லத்தின் மாமா மகன். இவன் மூலம்தான் முஸ்தபாவும் சவுதிக்குச் சென்றிருந்தான்.

அற்ப சம்பளத்தில் இங்கு ஒரு கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்த முஸ்தபாவை திருமணத்திற்குப் பிறகு மஜீதை வற்புறுத்தி சவுதிக்கு அழைத்துப் போக வைத்தார்கள். விருப்பம் இல்லாமல்தான் சென்றான் முஸ்தபா.! மனைவியையும், குடும்பத்தையும் இங்கே தவிக்கவிட்டுக் கடல் கடந்து போய் சம்பாதிப்பதில் முஸ்தபாவுக்கு விருப்பம் இல்லை. கேரளாவில் உள்ள அவன் உறவினர்கள் எல்லாம் துபாய், சவுதி என்று வளைகுடா நாடுகளில்தான் வேலை செய்கிறார்கள். பெரிய பெரிய வீடுகள், கார்கள் என்று அவர்கள் எல்லாம் பணக்காரர்கள் ஆகிப்போனதில் இவனுக்கு கொஞ்சம் பொறாமையும் தானும் அவர்களைப் போல சம்பாதிக்க வேண்டும் என்கிற சபலமும் ஏற்பட்டது. அவர்களிடம் சவுதிக்கு அழைத்துப் போகும்படி தனது விருப்பத்தைச் சொன்னான். விசாவுக்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லி, பிறகு பார்க்கலாம்... பார்க்கலாம் என்று தட்டிக் கழித்தார்கள். எனவே ஏஜெண்ட் மூலம் பணம் கொடுத்து ரியாத் செல்ல முயற்சித்தான். மெடிக்கல் டெஸ்ட் வரை எல்லாம் ஓகேவானது. கடைசி நேரத்தில் விசா கேன்சல் ஆகிவிட்டது என்று அவனது வெளிநாட்டுப் பயணம் கைகூடாமல் போனது. கொடுத்த பணமும் திரும்பக் கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்தான்.

சவுதி வந்த புதிதில் தானும் பணக்காரன் ஆகிவிட்ட உணர்வு எழுந்து மகிழ்ச்சியடைந்தான். பிறகுதான் வேலைப் பளுவின் கஷ்டம் புரிந்தது. ஓயாத உழைப்பு அவனை சோர்வடையச் செய்தது! திருமணம் ஆன கையோடு மனைவியைப் பிரிந்து வந்த சோகமும் அவனை வருத்தமடையச் செய்தது. இரவுகளில் ரம்லத்துடன் உருகி உருகி பேசிக்கொண்டிருந்தான். இரண்டாவது வருடத்தில் விடுப்பு பெற்று ஊருக்கு வந்து அந்த மூன்று மாத காலமும் ரம்லத்தை விட்டுப் பிரியாமல் கொஞ்சிக் கொண்டு திரிந்தான். மறுபடி சவுதி வந்த பிறகும் சில மாதங்கள் போனில் உருகிக்கொண்டுதான் இருந்தான் அறை நண்பனின் விஷயம் தெரியும் வரை! சோகமாகத் திரிந்து கொண்டிருந்தார். அறை நண்பன் சம்சுதீன் மூலமாக இன்னொரு நண்பனான தினேஷின் மனைவி பற்றிய விவரம் தெரிய வந்து அதிர்ச்சியடைந்து போனான். ஊரிலிருந்து தினேஷின் மனைவி பற்றி அரசல் புரசலாக செய்தி வந்து கொண்டிருந்தது. பொறாமையால் வீண் புரளி கிளப்புகிறார்கள் என்று அந்தச் செய்தியை நம்பாமல் புறக்கணித்தே வந்தான் தினேஷ்.

விடுமுறையில் ஊருக்குச் சென்ற போது கேள்விப்பட்ட செய்திகள் எல்லாம் புரளியல்ல உண்மை என்று தெரிந்து அதிர்ந்து போனான்.

இங்கே திரும்பி வந்து. அறையில் ஒருவரும் இல்லாத சமயம் சம்சுவிடம் ”என்ன குறை வைத்தேன் அவளுக்கு..?” என்று அழுது புலம்பியிருக்கிறான். சம்சுதீன் ஒருவாறு அவனைத் தேற்றி மீட்டெடுத்திருக்கிறான். எல்லாம் இந்த பணம் செய்யும் வேலை. பணப்பிரச்சனையால் ரொம்பகாலம் ஊருக்குப் போகாததன் விளைவால் வந்த வினை என்பது புரிந்தது அவனுக்கு. அதன் பிறகு கொஞ்ச காலம் சோகமாகத் திரிய ஆரம்பித்தான். ஊருக்குப் போவதையே மறந்து போனான். இன்னொரு நண்பனுக்கும் இதே போலவே ஆன சங்கதி கேட்டு ஆடிப்போனான் முஸ்தபா. இன்னொருவன் ஊருக்குப் போனபோது வேறொருவன் மனைவியை அனுபவித்த கதையை சாகசம் செய்ததற்கு ஒப்ப விவரித்துச் சொன்னான். அதைக் சுவாரஸ்யமாக கேட்டுக் கொண்டிருந்த காதர், இங்கே அரபி வீட்டில் வேலை செய்யும் நைஜீரியப் பெண்ணைத் தான் பயன்படுத்திக் கொள்வதாக தம்பட்டம் அடித்து சிரித்தான். என்ன கர்மம் இது! சுய ஒழுக்கத்துடன் வாழ்வதை இவர்கள் பரிகாசம் செய்கிறார்களா..? ச்சை! தவறு செய்வதை குற்றம் செய்வதை சாகசம் போல பெருமை பொங்க சொல்கிறார்களே..! ஏன் இப்படி எல்லோருமே சந்தர்ப்பம் கிடைத்தால் குற்றம் செய்ய தயாராக இருக்கிறார்கள்..? சுய ஒழுக்கம் என்பது தேவையற்றதாகி விட்டதா இன்று...? வெறுப்பாக உணர்ந்தான் முஸ்தபா. இந்த மாதிரியான செய்திகள் அடிக்கடி அவன் காதில் விழுந்து கொண்டிருந்தது. கேட்கவே அசிங்கமாக இருந்தது. ‘அவன் ஒயிப் அப்பிடியாமா... இவன் ஒய்ப் இப்பிடியாமா...’ இப்படியான செய்திகள் அடிக்கடி இங்கே அறைவாசிகளிடம் கேலியும், கிண்டலுமாக தெறித்துச் சிதறும். இதில் என்ன கேலியும், கிண்டலும் இருக்கு..? எவ்வளவு சோகமான அவமானம் இது ச்சை....! நொறுங்கிப் போவான் முஸ்தபா..

அவனுக்குள் மெல்ல மெல்ல ஒரு வித பயம் அப்ப ஆரம்பித்தது! பணம் சம்பாதிக்க வேண்டி பெண்களைத் தனியே விட்டு வரும் ஆபத்து அவனைப் பிசைந்து கொண்டேயிருந்தது. ‘கொடுத்து விடும் பொருளையும் , பணத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டி ஒத்தப்பாலம் வேறு ரம்லத் சென்று வருகிறாள். அவள் மாமா மகன் மஜீத். ஏற்கனவே ரம்லத்தை கட்டும் ஆசையில் இருந்தவன் வேற.... மாசத்துல பாதி நாளு அவ உம்மா வீட்டுல போயி உக்காந்துக்குறா...! பக்கத்துல இருக்கிற முபாரக் எப்பப் பாத்தாலும் பொம்பளைங்க கூடவே பேசித் திரியறவன் வேற. அதும் ரம்லத்தக் கண்டா நேரம் காலம் இல்லாமப் பேசிட்டே நிப்பான். நா வேற வருசக் கணக்கா இங்க கெடக்கேன். ரம்லத் யதார்த்தமான சுபாவம் கொண்டவள். யாரையும் எளிதில் நம்பிவிடுவாள். உருக்கமாக யார் எதைச் சொன்னாலும் பரிதாபம் கொள்ளும் குணம் அவளுக்கு! எவனாவது எதையாச்சும் சொல்லி ஏமாத்தி வீழ்த்தி விட்டால் என்னாவது? இவையெல்லாம்தான் அவனை பயம் கொள்ளச் செய்தது. இங்கே இவுனுங்க சொல்றமாதிரி ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆயிப்போச்சுனா.... ச்சை! திடுமென அவனுக்குள் இப்படியான தேவையில்லாத எண்ணங்கள் ஓட ஆரம்பிக்க, தன் தலையை சுவரில் ஓங்கி முட்டிக் கொள்ளவேண்டும் போலிருந்தது அவனுக்கு. ச்சே! கண்ட கதைகளையும் கேட்டு நான் ஏன் என் மனைவியை சந்தேகிக்கிறேன்...! என்ன ஒரு அற்பத்தனமான எண்ணம் ஓடுகிறது..! மனதை கட்டுப்படுத்த எவ்வளவோ முயற்சித்தான். அது பாட்டுக்குத் தறிகெட்டுப் போய் கடிவாளம் பூட்டாத குதிரை போல அலைபாய்ந்து கொண்டிருந்தது. இனி ஒத்தப்பாலத்துக்கு ரம்லத்தைப் போகச் சொல்லக்கூடாது. முதல் காரியமாக மஜீத்திடம் பணம் கொடுத்து விடுவதை நிறுத்தி விடவேண்டும் என்றும் எண்ணிக் கொண்டான்.

என்னதான் மறக்க முயற்சித்தாலும் வேலையின் போதும் கூட இந்த நினைவுகள் அடிக்கடி அவனை இம்சித்துக்கொண்டே இருக்க, பித்துப்பிடித்தவன் போல ஆனான் முஸ்தபா. இந்த மயிரு சம்பளத்துக்காக நாடு விட்டு நாடு வந்து நாய் படாதபாடு பட்டும் நிம்மதியாயிருக்க முடியலையே...! பேசாம ஊருக்கே போயிரலாம்... என நினைத்துக் கொள்வான். அங்கே போய் என்ன வேலை செய்வது.?

அங்கே ஒண்ணும் சரியில்லை என்றுதானே இங்கே வந்தோம்..! என்ற எண்ணம் வரும்... ச்சை! என்ன மயிரு வாழ்க்கை இது..! அவனுக்கு வெறுப்புதான் மிஞ்சியது. உடனடியாக ஊருக்குச் செல்ல மனம் பரபரத்தது. இரண்டு மூன்று முறை லீவுக்கு முயற்சித்தான். அரபி லீவு கொடுக்கவில்லை. அதன் பிறகு ரம்லத்துடன் பேசும் போதெல்லாம் ஒரு வித இறுக்கம் அவனைத் தொற்றிக் கொள்வதை உணர்ந்தான். முன்புபோல ரம்லத்துடன் ஆவலுடன் பேசமுடியாமல் எதுவோ அவனைத் தடுத்தது. எவ்வளவோ முயற்சித்தும் சகஜ நிலைக்கு அவனால் வரமுடியவில்லை! என்னாகிவிட்டது எனக்கு....! குற்றம் செய்தவனைப் போலத் தவிக்க ஆரம்பித்தான் முஸ்தபா..

ஒரு மாசத்துக்கும் மேலாகிவிட்டது. முஸ்தபாவிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை! கொஞ்ச நாட்களாகவே ரம்லத் பயந்து கொண்டிருந்தாள். இந்த தலாக் பிரச்சனைதான் அவளை பயமுற செய்துகொண்டிருந்தது! கேரளாவில் உள்ள ஒரு உறவினர் பெண்ணை துபாயிலிருந்து அவள் கணவன் தலாக் சொல்லிவிட்டான் என்று பிரச்சனையானது. அதை அவள் வீட்டில் யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதெப்படி போனில் தலாக் சொல்லலாம். மார்க்கம் இப்படியெல்லாம் வழியுறுத்தவில்லையே...... இதையெல்லாம் அனுமதிக்கவில்லையே என்று குதித்தார்கள். அந்த ஊர் ஜமாஅத்தார் அதை ஏற்றுக்கொண்டு அங்கீகரித்தார்கள். அந்தப் பெண் குமுறி அழுததை யாரும் பொருட்படுத்தவில்லை. அவளைப் பெற்றவர்கள் இடிந்து போனார்கள். மருமகனைத் துபாய்க்கு அனுப்ப வேண்டி அவர்கள் செய்த செலவெல்லாம் வீணாய்ப் போனது. மனைவியின் மீது அபாண்டமாகக் குற்றம் சுமத்தி அவன் சுலபமாக தலாக் கொடுத்து விட்டதையும் அதை ஜமாஅத் ஏற்றுக் கொண்டதையும் பெண்ணின் குடும்பத்தார்களால் ஜீரணிக்க முடியவில்லை. “இருந்தாலும்.. இருக்கும்.. ” என்று அவளை ஊர் தூற்றியது.

இது போல இரண்டு மூன்று சம்பவங்கள் தொடர்ச்சியாக நடக்க நிலை குலைந்து போனாள் ரம்லத். சிலர் வசதி வாய்ப்பிற்காக வேறு பெண்ணைக் கட்ட வேண்டி முதல் மனைவியைப் பொய்யான காரணம் சொல்லித் தலாக் விடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்படி வேண்டுமென்றே தலாக் கொடுப்பதுதான் அதிகமாக இருந்தது. இந்தச் சமூகம் அதை அங்கீகரித்துக் கொண்டிருந்ததுதான் வேதனையின் உச்சம்!

“என்னாயிருச்சு இந்த ஆம்பிளைகளுக்கு! சம்பாதிக்கப் போன இடத்தில் பெண்கள் தொடர்பு ஏதாச்சும் கிட்டியிருக்குமோ... அதனாலத்தா அங்கிருந்தபடியே இப்டி தலாக் குடுக்குறாங்களோ என்னமோ....!” படிப்பறிவில்லாத அவளுக்குள் இப்படியான எண்ணங்கள் மேலும் பயத்தைக் கொடுத்தது. ‘எல்லா ஆம்பிளைங்களும் இப்பிடி ஒண்ணுபோலவே இரிக்காங்களே..!’ முஸ்தபா கூட முன்பு போல இல்லை. போனில் பேசுவதையே குறைத்துக்கொண்டிருக்கிறார். இரண்டு வருடமாகியும் இன்னும் லீவில் வராமல் இருக்கார். அவளுக்குள் மெல்ல மெல்ல பயம் கூட்டிக்கொண்டிருந்தது.! போதாதற்கு இப்போது மாசமாக வேறு இருக்கிறாள். உம்மாவிடம் போய் சொல்லி அழ வேண்டும் போலிருந்தது. மாமி வீட்டில் ரெண்டு மாசம். உம்மா வீட்டில் ஒரு மாசம் என்று அவள் நாட்கள் ஓடிக்கொண்டிருந்தது. ‘‘அல்லாஹ் நாயகனே..!” என்று பெருமூச்சு விட்டுக் கொண்டாள் ரம்லத். இருந்தாலும் அவளுக்குள் தன் கணவன் மீது அதிகப்படியான நம்பிக்கை இருந்தது. ‘வேலைப்பளு அதிகம் இரிக்கும் போல... அதா இப்பவெல்லாம் அதிகமா பேச முடியலையாயிரிக்கும்... ” இப்படியாகச் சமாதானம் அடைந்துகொள்வாள்.

“காத்திருந்தால் எதிர் பார்த்திருந்தால் ஒரு நிமிஷமும் வருஷமடி....

கண்களெல்லாம் எனைப் பார்ப்பது போல் ஒரு கலக்கமும் தோணுதடி....

வெண்ணிலவே உன்னைத் தூங்க வைக்க உந்தன் விரலுக்கு சொடக்கெடுப்பேன்...

வருட வரும் பூங்காற்றை எல்லாம் கொஞ்சம் வழி விட்டு அனுப்பி வைப்பேன்... ”

அவனுக்கு மிகப் பிடித்த காதலன் படத்தின் பாடல் வரிகள் நினைவுக்கு வந்து அவளை இப்போது கலங்கடித்தது.

திடுமென ஒரு நாள் முஸ்தபாவிடமிருந்து போன் வர சந்தோஷம் பொங்க ஆசையுடன் போனை எடுத்தாள் ரம்லத். அப்போது அவள் உம்மா வீட்டில் இருந்தாள். ரொம்ப நாட்களுக்குப் பிறகு போன் வருகிறது. கணவன் சந்தோஷம் பொங்க கொஞ்சிக் குழாவுவான். ஊருக்கு வரும் தகவலைச் சொல்லுவான் என்ற ஆசையோடு போனை காதில் வைத்து 'சலாம்' சொன்னாள். பதில் சலாம் அவனிடமிருந்து வரவில்லை. எடுத்ததும், "இனி நீயி ஒத்தப்பாலத்துக்குப் போகாண்டாம். எங்கும்மா பேர்ல பாங்க் அக்கவுண்ட் ஒண்ணு பிரமைப் பிடித்தவளாக நின்றிருந்தாள். அடுத்த அஸ்திரத்தை வீசினான் முஸ்தபா. "இனி நீ நம்ம வீட்டுலதா இருக்கணும். உங்கும்மா வீட்டுக்கெல்லாம் இனிமே வரக்கூடாது. நாளைக்கே நீ உங்கும்மாகிட்டச் சொல்லி நம்ம வீட்டுல கொண்டு உடச்சொல்லு என்ன..?" அதட்டலுடன் இருந்தது அவன் உத்தரவு. இதற்கு என்ன மறு மொழி சொல்வது என்றே அவளுக்கு எதுவும் தோன்றவில்லை. "நாஞ் சொல்றது காதுல விழுதா. என்ன..?" என்ற அடுத்த அதட்டல் அவளை நிலைகுலையச் செய்தது. அழுகை பொத்துக்கொண்டு கொண்டு





ஓவியம்: ஜே.கே.

ஆரம்பிக்கச் சொல்லியிரிக்கேன். இனி அதுலதா பணம் போடுவேன்.... என்ன..?" என்றான். அதிர்ச்சியில் அவளுக்குப் பேச்சு வரவில்லை. பதில் கொடுக்கத் தோன்றாமல் போனைக் காதில் வைத்தபடி அப்படியே வந்தது. வலது கையால் மெல்லக் கண்களைத் துடைத்துக்கொண்ட ரம்லத், 'என்னங்க சொல்றீங்க..?" என்றாள். "இவ்வளவு நேரம் என்ன இங்கிலீஷ்லயா சொல்லிட்டிரிக்கேன். தமிழ்லதான சொல்றேன்.... அப்பறமென்ன..?"

என்றான் வெடுக்கென்று. 'என்னாகிவிட்டது இவுருக்கு..! நா பயந்த மாதிரியே நடந்துருமோ... அதா இப்பிடியெல்லாம் பேசுறாரோ..' மனதைக் கொஞ்சம் திடப்படுத்திக் கொண்டு, "எப்ப ஊருக்கு வர்ரீங்க..?" என்றாள் ஆசை பொங்க. "லீவு கிடைக்கும் போது வருவேன்.. நாளைக்கே நீ வீட்டுக்கு போயிரு என்ன..?" என்று சொல்லிவிட்டு உடனே போனை கட் செய்தான் முஸ்தபா. "யாருளா..... மருமொவனா..?" என்றபடியே உம்மா அடுப்படியிலிருந்து வந்தது. கண்களைத் துடைத்தவாறு தலையாட்டினாள் ரம்லத். "ஊருக்கு எப்ப வாராறாமா..?" உம்மா சந்தோஷத்துடன் கேட்டது. "லீவு கெடைக்கலனு சொல்லுதும்மா... " என்றாள் வருத்தத்துடன். "அதுக்குத்தா அழுவுறையாக்கும்..?" என்று திருப்பிக் கேட்டு விட்டு, "லீவு கெடைக்காததுக்கு மருமவன் என்ன செய்வாரு..?" என்றது உம்மா.

உம்மாவிடம் கணவன் சொன்னதை எப்படிச் சொல்வது....? வெறுமனே தலையை ஆட்டினாள் ரம்லத். நாளைக்கு அவுங்க வீட்டுக்குப் போகச் சொல்லியிருக்காரே... இதை உம்மாகிட்டச் சொல்லித்தானே ஆகணும். பொங்கிவரும் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்ட ரம்லத், "உம்மா! இனிமே நா இங்க வரக்கூடாதாம். நாளைக்கே அவுங்கூட்டுக்கு என்னப் போவச் சொல்றாருமா.... " என்றாள். "என்னவாம்.?" என்றது உம்மா. "தெரீலமா. அப்பறம் அவுங்கும்மாக்குத்தா இனி பணம் அனுப்புவாராம்.." "என்னளா சொல்றே..?" அதிர்ச்சியுடன் கேட்டது உம்மா. "ஏன் இப்பிடியெல்லாம் பண்றாருனு ஒண்ணும் புரிலமா...!" "எல்லாம் அந்தப் பொம்பள பண்ற வேலயாயிருக்கும். மகன் சம்பாதிக்கிறதெல்லாம் மாமியா ஊட்டுக்கு கொட்டிக் குடுக்குறாருனு நெனப்பாயிருக்கும்..!. என்னயிருந்தாலும் எப்பிடிப் பாத்தாலும் மாமியார்களின் வேலத்தனத்த காமிச்சுருவாங்களே..!" சம்பந்தியம்மாவைக் குற்றம் சொன்னது உம்மா. 'எதனால இப்பிடியெல்லாம் பண்றாருனு...' என்கிற சிந்தனையே அவளுக்குள் ஓடிக்கொண்டிருந்தது. அன்று முழுக்க ஒரே அழுகையும், கலக்கமுமாகவே இருந்தாள் ரம்லத். 'என்ன நெனச்சுட்டு அந்த மனுஷன் இப்பிடியெல்லாம் செய்றாரு.... போனில் பேசும் போது நல்லாருக்கியா ரம்லத்னு ஒரு வார்த்தை கேட்கவே இல்லையே அந்த மனுஷன்... என்னாயிப் போச்சு அவுருக்கு..! கடைசியில் என்னப் புடிக்கலேனு சொல்லி விடுவாரோ...!' என் சங்கடத்தை நான் யாரிடம் போய் சொல்லி அழுவேன். அல்லா நாயனே! இது என்ன சோதனை..? அவளால் அழுகையை கட்டுப்படுத்தவே முடியவில்லை. இரவில் தூங்கும் அந்த கொஞ்ச நேரத் தூக்கமும் பறிபோனது. மனம் நிம்மதியில்லாமல் தவித்துக்கொண்டிருந்தது. அழுது அழுது முகம் வீங்கிப் போனது.. உம்மாவும் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

அதிகாலை எழும்போதே மண்டையைப் பிளக்கும் தலைவலியை உணர்ந்தாள். ஸுபுகு தொழுதுவிட்டு அழுகையினுடே இறைவனிடம் துஆ கேட்டாள். மாமி வீட்டுக்கு இன்னைக்கே போகண்டாம். ரெண்டு நாள் கழிச்சுப் போயிக்கலாம் என முடிவு செய்தாள். உடனே உள்ளுக்குள் ஒருவித அச்சம் கிளர்ந்தது. இதுக்கும் கோவிச்சுக்கிட்டு ஏதாச்சும் சொல்லித் திட்டுவாரோ... இல்ல இனி போனே பண்ணாம இருந்தாலும் இரிக்கலாம்.. அவுங்கும்மாகிட்டயும் இதையெல்லாம் சொல்லியிருப்பாரே.... இன்னிக்கு நா போகலேன்னா 'முஸ்தபா உன்ன இன்னிக்கே வீட்டுக்கு வரச் சொன்னானே.. நீ ஏன் வரலேன்னு அந்தப் பொம்பள கெடந்து சாடுமே..!' என்ன செய்வது.... என்று தவிக்க ஆரம்பித்தாள். தலைவலி இன்னும் கூடியது. மண்டையைப் பிடித்துக் கொண்டு சுவரில் சாய்ந்து உட்கார்ந்தாள். கரை புரண்டு வரும் வெள்ளம் போல அழுகை பொத்துக்கொண்டு வந்தது. திடும்னு முஸ்தபாவிடமிருந்து "தலாக்னு" செய்தி வருமோ.... இதை நினைத்து நினைத்து ரம்லத் தினமும் பயந்து கொண்டிருந்தாள். நிம்மதி பறிபோனது. எல்லோரிடமும் வெடுக் வெடுக்கென்று கோபப்பட்டாள். சுய நினைவே இல்லாதவள் போல நடக்க ஆரம்பித்தாள். தேவையில்லாமல் மாமியிடம் சண்டைக்குப் போனாள்.

காரணமே இல்லாமல் அங்கே முஸ்தபாவும், இங்கே ரம்லத்தும் மன உளச்சலுக்கு ஆளாகி அவதிப்பட்டுக் கொண்டிருந்தது யாருக்கும் தெரியவில்லை. காலம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

e-mail : firthouserajakumaaren@gmail.com

# விவாகரத்து?

என். செல்வராஜ்

"கோர்ட் நோட்டீஸ் வந்திருக்கு. அப்பா ஊருக்கு வரச் சொல்றாரு" என்றான் நடராஜன். எதுக்கு என்று கேட்டான் குமார். எல்லாம் என் பொண்டாட்டி பண்ற வேலைதான். அவளுக்கு விவாகரத்து வேணுமாம்" பதில் சொன்ன நடராஜன் வார்த்தையில் கோபம் கொப்பளித்தது. கேட்டா நீ கொடுக்கணுமா. "அவங்க கேட்கட்டும் நீ முடியாதுன்னு சொல்லிடு" என்றான் குமார். "இல்ல, அப்பா கோர்டில விவாகரத்து கேஸ் ஃபைல் பண்ண வரச் சொல்றாரு" என்றான் நடராஜன்.

நீ வர முடியாதுன்னு உங்க அப்பா கிட்ட தெளிவா சொல்லிடு. இப்போதைக்கு ஆறப் போடு. ஆறு மாசம் போனா தானா உன் மனைவி வீட்டுக்கு வருவா. அவங்க பிடிவாதமா விவாக ரத்து கேஸைத் தொடர்ந்தா அப்புறமா என்ன பண்றதுன்னு யோசிக்கலாம் "என்றான் குமார்.

* * *

கல்யாணம் ஆகி இரண்டு வருடம் ஆகியும் மனைவி சீதா கருத் தரிக்கவில்லையே என்று மனக் கவலையில் இருந்தான் நடராஜன். இருவரும் ஒரே ஊர். தெருமட்டும்தான் வேறு. நடராஜன் வீடு இருந்த தெருவின் ஆரம்பத்திலேயே ஓர் அழகிய பெருமாள் கோயில் இருக்கிறது. மன நிம்மதிக்காக அங்கே போய் அமருவான் நடராஜன். பல நாட்கள் சீதாவை அந்த கோயிலிலே பார்த்திருக்கிறான். சீதா பள்ளிப் படிப்பை முடித்திருக்கிறாள். நடராஜன் பட்டப் படிப்பு முடித்துவிட்டான். ஒரே ஊர் என்பதால் அவ்வப்போது இருவரும் பேசிக்கொள்வதுண்டு. வேலை கிடைத்து வெளியூர் கிளம்பியபோது அவளின் கண்களைப் பார்க்க அவன் சிரமப்பட்டான். அவன் அவளை மனைவியாக்கிக் கொள்ள விரும்பினான். ஆனால் அதை அவன் அவளிடம் சொன்னதில்லை. வேலையில் சேர்ந்தவுடன் பெற்றோரிடம் சொன்னான். அவர்களும் அந்த பெண்ணையே பேசி முடித்து அவனின் மனைவியாக்கினர்.

அவன் மனைவி மிகவும் நல்லவளாக இருந்தாள். இல்லற வாழ்க்கையும் நன்றாகத்தான் போய்க்கொண்டிருந்தது. ஆனாலும் குழந்தை இல்லை என்ற குறை மட்டும் மனதில் இருந்துகொண்டே இருந்தது. நகரின் பிரபல மருத்துவமனைக்குச் சென்று வந்தான். குறை எதுவும் இல்லை என்று சொன்ன மருத்துவர் சில மாத்திரைகள் எடுத்துக்கொள்ள சொல்லி அறிவுறுத்தினார். அதன்படி மருந்து சாப்பிட்டு வந்த சில மாதங்களில் மனைவி கர்ப்பமானாள். கர்ப்பமான மனைவியைச் சைக்கிளில் வைத்து நண்பனின் வீட்டுக்கு அழைத்து சென்றான். செல்லும் வழியில் திடீரென ஒரு சைக்கிள் வந்து மோத மனைவியுடன் கீழே விழுந்துவிட்டான். அந்த இடத்தில் சாலை சுத்தமானதாக இருந்ததால் அடி அதிகம் இல்லை. இருந்தாலும் மனைவிக்கு ஏதும் ஆகிவிடக்கூடாது என்ற பயம் அவனுக்கு வந்து விட்டது. உடனே மருத்துவமனைக்கு மனைவியை அழைத்துச் சென்றான். கூட்டம் மிக அதிகமாக இருந்தது. அவனுடைய தவிப்பு அதிகமாகிக்கொண்டே வந்தது. நெஞ்சில் ஒரு பயம். ஏதேனும் ஆகி விட்டால் என்ன செய்வது என்ற எண்ணத்திலேயே இருந்தான். குமார் டாக்டரின் உதவியாளரிடம் சென்று நடந்த விபத்தை சொல்லி உடனே டாக்டரைப் பார்க்க அனுமதிக்குமாறு கேட்டான் உதவியாளர் உடனே மருத்துவரைப் பார்க்க அனுமதித்தார். டாக்டரம்மா நடராஜனின் மனைவியைப் பரிசோதனை செய்தபிறகு பிரச்சினை எதுவும் இல்லை என்றார்.

எப்படியாவது உடனே ஒரு ஸ்கூட்டர் வாங்கவேண்டும் என்று நினைத்தான். அப்போது வெஸ்பா ஸ்கூட்டர் பிரபலமாக இருந்தது. அவனுக்குப் பிடித்த நீல நிற ஸ்கூட்டரைக் கடன் வாங்கி உடனே வாங்கினான். அதில் மனைவியை உட்காரவைத்து அழகு பார்த்தான். சீதாவுக்கும் பெருமைதான். கணவன் ஸ்கூட்டர் வாங்கியதை எல்லோரிடமும் பெருமையாகச் சொல்லிக்கொண்டாள்.

எதைச் செய்தாலும் அதைச் சிறப்பாக பலரும் பாராட்டும்படிச் செய்யவேண்டும் என்ற எண்ணம் நடராஜனுக்கு. வீட்டுக்கு வரும் நண்பர்களை நன்றாக உபசரிப்பான். எந்த நேரத்தில் போனாலும் சாப்பிடச்சொல்வான். குமார் அவன் வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் சாப்பிடச் சொல்வான். ஆனால் குமாரின் பழக்கம் வேறு. நண்பர்கள் வீட்டுக்கு முன்பே முடிவுசெய்து அவனுக்காகவும் சமையல் செய்யப்பட்டால் தான் சாப்பிட ஒத்துக்கொள்வான். இல்லை என்றால் ஏதேனும் காரணம் சொல்லிவிட்டு அவன் வீட்டுக்குப் போய்விடுவான். எப்போது போனாலும் நடராஜனின் மனைவியும் சாப்பிடச் சொல்வார். அவனது பழக்கத்தை அவன் மாற்றிக்கொள்ளமாட்டான். எனவே நடராஜனும் அவன் மனைவியும் குமார் வந்தால் வீட்டில் இருக்கும் கார வகையில் கொஞ்சம் வைத்து காப்பி அல்லது டீ சாப்பிட சொல்வார்கள். அவனும் அவர்களின் நலம் விசாரித்துவிட்டு கிளம்பி விடுவான்.

நடராஜனின் சில நண்பர்கள் அவனின் வற்புறுத்தலுக்கு இணங்கிச் சாப்பிடுவார்கள். அவன் தப்பாக நினைத்து விடக்கூடாதே என்று சாப்பிடுவார்கள். ஆனால் அவன்



ஓவியம்: ஜே.கே.



ஓவியம்: ஜே.கே.

மனைவிக்குச் சாப்பிட மிஞ்சுகிறதா என்பதை அவன் பார்க்காமல் விட்டுவிடுவான். பல நாட்களில் அவன் மனைவி சாப்பாடு இன்றி அசதியில் படுத்து விடுவாள். அவளுக்கு எரிச்சலாக இருக்கும். என்ன மனிதர் இவர். மனைவி சாப்பிட இருக்கிறதா என்றுகூட பார்க்காமல் வரும் நண்பர்களுக்கு உபசரிக்கச் சொல்கிறாரே என்று நினைப்பாள். இந்த மாதிரியான எரிச்சல்கள் அவள் பார்வையில் கணவன் மீது கோபத்தை வரவழைத்தன. ஐந்து மாதம் நெருங்கி விட்டது. அவளது அண்ணன், அண்ணி இருவரும் ஒரு நாள் வந்தனர். விருந்து தடபுடலாக நடந்தது. மனைவியின் அண்ணனாச்சே. தங்கை குறை வைப்பாளா? அவர்கள் எதற்கு வந்திருப்பார்கள் என்பது நடராஜனுக்கு நன்றாகப் புரிந்தது. நடராஜனுக்கோ அவளது பிரசவத்தைத் தான் வேலை செய்யும் இடத்திலேயே வைத்துக்கொள்ளலாம் என்று ஆசை.

மனைவியைப் பிரிந்திருப்பது மிகவும் கஷ்டம் என்று அவனுக்குத் தோன்றியது. மனைவியின் அண்ணன் " நடராஜன் என் தங்கச்சியை ஊருக்கு அழைச்சிகிட்டு போகலாம்னு வந்திருக்கேன். என்னைக்கு அழைச்சுட்டு போகலாம் ? என்றார். அம்மாகிட்ட கேட்டுட்டு

நாளைக்குச் சொல்றேன் என்றான் நடராஜன். ஊரில் இருக்கும் அப்பா, அம்மாவுடன் தொலைபேசியில் பேசினான். அவன் அம்மா " "தலைப்பிரசவம் , அவங்க அம்மா வூட்டில தான் வச்சுக்கணும். அதுதான் முறை. நீ அனுப்பிடு. ஒரே ஊரு தானே. நான் பாத்துக்கிறேன். வந்து நம்ம வூட்டில ஏழாம் மாசம் வரைக்கும் இருக்கட்டும். வளைகாப்பிட்ட பிறகு அவங்க வூட்டுக்கு அனுப்பலாம்" என்றார் அம்மா. நடராஜனும் சம்மதித்தான். இன்னும் இரண்டு மாசம் நம்ம வூட்டிலதான இருப்பாள். அம்மாவுக்கு தெரிஞ்ச பெரிய டாக்டர் கிட்ட காட்டலாம். அந்த டாக்டர் கிட்டேயே பிரசவத்தையும் வச்சுக்க சொல்லலாம் என நினைத்தான்.

மறுநாள் மச்சானிடம் பதில் எப்படிச் சொல்வது என்று யோசித்துக் கொண்டிருந்தான். மனைவி சீதாவிடம் கலந்து பேசுவது நல்லது என அவனுக்குத் தோன்றியது. மனைவியிடம் "உங்க அண்ணன் என்ன சொல்றாரு. இப்பவே ஊருக்குப் போகணுமா " எனக் கேட்டான். எனக்கு ஒண்ணும் இல்லீங்க. அம்மா அழைச்சிட்டு வரச் சொன்னதா அண்ணன் சொல்றாரு. நீங்க தான் சொல்லணும். நான் ஊருக்குப் போனா வர எப்படியும் ஒரு வருஷம் ஆயிடும். அதுவரைக்கும் நீங்க தனியா இங்க இருக்கணும். அதான் ஒங்க கிட்ட கேட்க சொன்னேன்" என்றாள். "சரி அம்மாகிட்ட கேட்டேன். அவங்க உன்னை அனுப்ப சொல்லிட்டாங்க. ஆனா வளைகாப்பு வரைக்கும் எங்க வீட்டுல தான் இருக்கணும். அப்புறமா உங்க அம்மா வீட்டுல இருக்கலாம். டாக்டர் எங்க அம்மாவுக்குத் தெரிஞ் சவங்க. அவங்ககிட்ட காட்டிக்கலாம். எல்லா செலவையும் நானே பாத்துக்குறேன். நீ நல்லா இருந்தா எனக்கு போதும். அப்புறம் உன் இஷ்டம் " என்றான் நடராஜன். ஊருக்குப் போக கணவன் சம்மதம் சொன்னதும் மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போனாள் சீதா. அம்மாவைப் பார்த்து பல நாட்கள் ஆகிவிட்டன. கர்ப்பமாக இருப்பவள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று எல்லோரும் சொல்வார்கள். அவளை சந்தோசமாக வைத்திருக்க வேண்டும் என்றே நடராஜன் விரும்பினான்,

மனைவி ஊருக்குப் புறப்பட்டாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. முந்தானையை எடுத்து துடைத்துக்கொண்டாள். நடராஜன் அதைக் கவனித்தான். 'சீதா நீ நம்ம வீட்டுக்குத்தானே போற, அதுக்குப்போயி கண் கலங்குறியே "என்றான். "இல்லீங்க உங்களை நெனச்சா கஷ்டமா இருக்கு. நான் இல்லாம எப்படி கஷ்டப் படுவீங்களோன்னு நெனச்சேன். அதான் கண் கலங்கிட்டுது " என்றாள். ஊருக்கு போனதும் அவளும் அண்ணனும் முதலில் அவர்கள் வீட்டுக்குச் சென்றார்கள். வீட்டுக்கு போனதும் அம்மா " ஏண்டி ஒன் வீட்டுக்கு போகப்போறீயா" என்றாள். "ஆமாம்மா. என் வீட்டுக்காரரு அப்படித்தான் சொல்லி அனுப்புனாரு" "அதெல்லாம் சரி. ஆனா உன்னோட மாமியார் உன்ன விடாம திட்டி கிட்டே இருப்பாங்களே. அத எப்படி சமாளிப்ப" "எப்படியும் பொறுத்துதான் போகணும். ரொம்ப முடியாம போச்சுன்னா நா இங்க வந்துடுறன்" "சரி அவங்க கிட்ட மரியாதை கொடுத்து பேசு. எதாவது சொன்னாலும் மரியாதை இல்லாம பேசிடாதே" "அதெல்லாம் எனக்குத் தெரியும். நான் பாத்துக்கறன்." அம்மாவிடம் சொல்லிவிட்டு மாமியார் வீட்டுக்குப் போனாள் சீதா.

மாமியார் வாசலிலேயே வரவேற்றார். "என்னக்கி வந்தவளுக்கு இன்னக்கிதான் வழி தெரிஞ்சுதா. ஒன்ன சொல்லி குத்தமில்ல. எல்லாம் எம் மவன் கொடுக்கிற தைரியம். ஊருக்கு வந்து ரெண்டு நாள் கழிச்சு வரே. என் மவன் என்னடான்னா பொண்டாட்டி ஊட்டுக்கு வந்துட்டாளா.. வந்துட்டாளான்னு தெனம் போன் போட்டு கேட்டுகிட்டு இருக்கான். நான் என்னத்த சொல்ல..." என்றவாறே "சரி உள்ளே போ" என்றாள். "என்ன மருமவளே துணி மணியெல்லாம் எங்கே? சும்மா வந்திருக்க" என்றார் மாமியார். "அத்தே நான் எங்க அம்மா வீட்டிலேயே தங்கிக்கிறனே, தெனம் இங்க வந்துட்டுப் போறேன் " என்றாள் அவள். "மவன் கிட்ட பேசிட்டுதான் சொல்ல முடியும்" என்றார் மாமியார்.

அன்னக்கி சாயங்காலம் மகனின் போன் வந்தததாக போஸ்ட் ஆபீசில் இருந்து தகவல் வந்தது. மாமியார் மருமகளையும் அழைத்துக்கொண்டு போஸ்ட் ஆபீஸ் போனார். மகனின் போன் வந்ததும் "தம்பி இன்னிக்குத்தான் மருமவ நம்ம வூட்டுக்கு வந்தா. அவங்க வூட்டிலேயே தங்கிக்கறேன்றா, என்னடா சொல்றே" என்றார் அவனின் அம்மா. மறுமுனை சற்று அமைதியானது. "சரி போன என் பொண்டாட்டிகிட்ட கொடும்மா

நான் பேசிக்கிறன்" என்றான் நடராஜன். போனை மருமகளிடம் கொடுத்தார். மறுமுனையில் இருந்த சீதாவின் கணவன் எடுத்த எடுப்பிலேயே திட்ட ஆரம்பித்தான். சீதா பதிலேதும் சொல்லவில்லை. கொஞ்ச நேரம் கழித்து "ஏன் எங்க வூட்டில இருக்க மாட்டியா" "இல்லீங்க ஒங்க வீடு நீங்க இல்லாம எனக்குச் சரிப்பட்டு வராது. அதான் எங்க வீட்டிலேயே இருக்கலாம்னு நெனைக்கிறன்" "அதை ஊருக்குக் கிளம்பும்போதே சொல்லி இருக்கலாம்ல. ஊருக்குப் போயிட்டு இப்படி பண்றியே" "அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க தெனம் நம்ம வூட்டுக்கு வந்துட்டுப் போறேன். அடுத்த தெருதானே எங்க வூடு" "ஏதாவது பண்ணித்தொல. அம்மா வூட்டுக்கு போயிட்டா பொண்ணுகள புடிக்க முடியாது. அங்க ஏதாவது பிரச்னை வந்ததுன்னா நான் உன்னைப் பார்க்ககூட வரமாட்டேன், அம்மா கிட்ட போன கொடு" போனை மாமியாரிடம் கொடுத்தாள்." அம்மா அவ அவங்க வூட்டுல இருந்துட்டு போகட்டும். நீ ஒன்னும் கேக்க வேணாம்" "எக்கேடாவது கெட்டுப்போங்க எனக்கென்ன " என்றபடி போனை வைத்த அம்மா தன் மருமகளிடம் ஏதும் பேசாமல் வீடு திரும்பினார்.

தினம் வீட்டுக்கு வருவதாகக் சொன்ன மருமகள் வாரத்துக்கு ஒரு நாள் கூட வரவில்லை. மகனுடன் பேசும்போது மருமகளைப் பற்றிய வருத்தத்தை அம்மா தெரிவித்தார். ஊருக்கு வந்ததிலிருந்தே சீதா எதிர் வீட்டில் குடியிருக்கும் சதீஷுடன் அடிக்கடிப் பேசப் போய்விடுவதாகவும் வீட்டுக்கு இரவில் கூட நேரமாகித்தான் வருவதாகவும் செய்திகள் அம்மாவுக்கு வந்துகொண்டே இருந்தன. செய்திகளைக் கொண்டு வந்து தந்தவள் அவள் சிறிய மகள். தினம் அவள் அண்ணியைப் பார்க்கப் போவாள். அப்படியே அங்கு கிடைக்கும் செய்திகளை அம்மாவிடம் வந்து சொல்லிவிடுவாள். அண்ணியைப் பக்கத்து வீடுகளில் இருக்கும் பெண்கள் கேலியாகப் பேசுவதை அம்மாவிடம் சொல்லிய மகள் செல்வி "அம்மா அண்ணி இங்க வந்தால் இத கேளும்மா" என்றாள். எப்படி கேட்பது என்று தயங்கியபடி இருந்த அம்மா ஒருநாள் சம்மந்தி வீட்டுக்கு போனார். அவர் போனபோதும் சீதா எதிர் வீட்டுக்கு போயிருந்தாள். சம்மந்தியம்மாவிடம் மருமகள் எப்படி இருக்கிறாள் என்று கேட்ட அம்மா எங்கே என் மருமவ எனக் கேட்டாள். சீதா எதிர்வீட்டுக்குப் போயிருப்பதாக சொன்னால் பிரச்னை வரும் என்று நினைத்த அவள் அம்மா "அண்ணன் வீட்டுக்கு போனாள். எப்ப வருவாளோ தெரியாது" என்றாள். அம்மாவின் கண் எதிர்வீட்டிலேயே இருந்தது. தன் மகள் சொல்வது உண்மையா எனப் பார்க்கவே அவர் அன்று அங்கே வந்தார். இரவு எட்டுமணிக்கு மேல் சீதா எதிர் வீட்டிலிருந்து வெளியே வந்தாள். அவள் பின்னாலேயே சதீசும் வீட்டை விட்டு வெளியே வருவது தெரிந்தது. அதைப் பற்றி எதுவும் கேட்காத சீதாவின் மாமியார் சம்மந்தி அம்மாவிடம் விடைபெற்றுக் கிளம்பினார்.

எதுவும் கேட்காமல் வீடு திரும்பிய நடராஜனின் அம்மா தன் கணவரிடம் " சீதா பண்றது ஒண்ணும் சரியில்லீங்க. எப்ப பாத்தாலும் எதிர் வீட்டுல போய் உக்காந்துகிட்டு சதீசுடன் பேசிக்கொண்டே இருக்கிறாள். நாளக்கி பையன் பேசுனான்னா அவன் கிட்ட சொல்லிடுறன். அவனே அவ கிட்ட கேட்கட்டும். நாம பேசுனா நாம அவ மேல தப்பா சொல்றோம்னு சொல்லிடுவாங்க. வயித்தில புள்ளய சுமந்துகிட்டு இருக்கிறவள நாமளும் ஒன்னும் கேட்க முடியாது " என்றார். அவரும் சரி என்றார். மறுநாள் நடராஜனின் அழைப்பு வந்தது. அம்மா மட்டும் போன் பேசப் போனார். "எப்படிம்மா இருக்கே? அப்பா நல்லா இருக்காரா. சீதா எப்படி இருக்கா" என்று கேட்ட நடராஜனிடம் "எல்லாரும் நல்லாதான் இருக்காங்க. ஆனா உன் பொண்டாட்டி பண்றதுதான் இப்போ ஊரே பேச்சா கிடக்கு. எப்ப பாத்தாலும் எதிர் வீட்டு சதீசு வீட்டிலேயே கிடக்கிறாள். அவளைக் கண்டிச்சி வை. இல்லேன்னா அவ கத இங்க நாறிப்போயிடும். நா அம்புட்டுதான் சொல்ல முடியும்" என்றார் அம்மா.

நடராஜனுக்கு அது அதிர்ச்சியாக இருந்தது. சீதா பேசும்போது கேட்டுவிடத் துடித்தான். இருந்தாலும் எந்தவித ஆதாரமும் இல்லாமல் அவள் மீது குற்றம் சுமத்த முடியாமல் தவித்தான். அம்மா சொல்வதை நம்புவான் என்றாலும் சீதாவின் விஷயத்தில் நம்பமுடியவில்லை. அம்மா அவ இப்ப எங்க? என்ற மகனிடம் அவள் வரவில்லை என்றார் அம்மா. சீதாவிடம் பேச வேண்டும் என்ற எண்ணமே அவனுக்குப் போய் விட்டது. வெறுத்துப் போய் போனை வைத்து விட்டான். சில நாட்கள் மனைவி

அழைத்துப் பேசுவாள் என்று பொறுத்துப் பார்த்தான் நடராஜன். ஆனால் அவள் பேசவில்லை. அவள் மீதான வெறுப்பு அதிகரித்துக்கொண்டே சென்றது. கடைசியில் அவளிடம் பேசிவிட முடிவு செய்து அவன் ஊர் போஸ்ட் ஆபிஸை அழைத்தான். போஸ்ட் மாஸ்டரிடம் சீதாவை வரச் சொல்லுங்கள் என்றான். அவரும் சீதாவை அழைத்துவர ஆள் அனுப்பிவிட்டுச் சற்று நேரம் கழித்து மீண்டும் கூப்பிடச்சொன்னார். கொஞ்ச நேரம் கழித்து நடராஜன் போஸ்ட் ஆபீஸ் எண்ணுக்கு அழைத்தான். போஸ்ட் மாஸ்டர் சீதாவிடம் போனைக்கொடுத்தார். யாரு சீதாவா? என்ற நடராஜனுக்கு, ஆமாங்க, எப்படி இருக்கீங்க? என்றாள் சீதா.

"ஏண்டி எத்தனை நாளாவுது.என்னைக்கூப்பிட்டு பேசணும்னு உனக்கு தெரியாதா?" "நீங்க கூப்பிடுவிங்கன்னு இருந்தேன். இன்னிக்குதான் பேசத் தோணுச்சா உங்களுக்கு" "உன்னை என் ஊட்டுக்குத்தானே போவச்சொன்னேன். ஒங்கம்மா ஊட்டுக்குப் போய் தங்கிகிட்டு எதிர் வீட்டுக்காரனோட கூத்தடிக்கிறியா?" "எப்பவும் பேசற அவன் கிட்ட பேசறத எப்படி தப்பா பேசுறீங்க?" நீ அவங்கிட்ட பேசக்கூடாது. ஒடனே எங்க வூட்டுக்கு போய் தங்கிக்க. ஒங்க அம்மா வூட்டுக்கு நான் வர்றப்ப போய்க்கலாம் "யாரோ சொல்றதுக்கெல்லாம் என் பேர்ல தப்பு சொல்றீங்க. நான் ஒரு தப்பும் பண்ணல. நான் ஒங்க வூட்டுக்கு போவ முடியாது. நீங்க வரப்ப நான் ஒங்க வூட்டுக்கு வரேன்" ஒங்க அம்மா இருக்கிறவரைக்கும் நீ உருப்படமாட்டே, சொன்னா கேளு,. எங்க ஊட்டுக்கு போ. நான் ஒரு மாசத்துல வரேன். அப்ப எல்லாத்தையும் பேசிக்கலாம். "ஏன் ஒங்கம்மா யோக்யமா? அவங்களாலதான் பிரச்னையே. எங்க ஊட்டுக்கு ஆள் அனுப்பி வேவு பாக்குறாங்க "ஏண்டி நீ எதுத்த வூட்டுல இருக்கும்போது ஒங்கம்மா நீ உன் அண்ணன் வூட்டுக்குப் போயிருக்கிறதா எங்கம்மாகிட்ட பொய் சொன்னாங்க?" "ஓ அதான் பிரச்னையா. நான் அங்கே போனதுல என்ன தப்பைப் கண்டுபிடிச்சுட்டீங்க?" ஊர்ல ஒன்னபத்தி யாரும் தப்பா பேசிட்டா என்ன செய்றது" யார் பேசுறா? ஒங்கம்மாதான் வூடு வூடா போய் என்னபத்தி பேசிட்டு இருக்காங்க. நான் உத்தமி இல்லேங்குறாங்க. அப்புறம் அங்க நான் எப்படிப் போக முடியும். என்னால முடியாது நீங்களாச்சு ஒங்கம்மாவாச்சு, எப்படியாவது போங்க. நான் பத்தினி இல்லேனே வச்சுக்கிங்க. கெட்டபேரு வாங்கிகிட்டு ஒங்க வூட்டுல என்னால இருக்க முடியாது. இதுக்கு மேல நான் என்ன சொல்ல. போன வச்சுடுங்க" அவள் பேச்சை முடித்துக் கொண்டாள். அதன் பிறகு இருவரும் பேசிக் கொள்ளவேயில்லை.

சீதாவுக்கு ஆண் குழந்தை பிறந்து விட்ட செய்தியை நடராஜனின் அம்மா தெரிவித்த போது அவன் என்ன செய்வது என்று புரியாமல் தவித்தான். அம்மாவிடம் "எங்கிட்ட பேசாத அவள் பெத்த என் புள்ளய எப்படிம்மா நான் பாக்குறது? என்றான். அம்மாவின் குரலில் கோபம் எதுவும் இல்லை." ஆசுபத்திரியில தான் இப்ப இருக்கா. அங்க போய் பாத்துட்டு வா. பாவம் உனக்காக காத்துட்டு இருப்பா. உடனே வா" என்றார் தாய். மறுநாள் ஊருக்கு வந்த நடராஜன் தன் மனைவியையும், குழந்தையையும் மருத்துவமனையில் சென்று பார்த்தான். அம்மாவும் கூடவே வந்தார். அங்கேயும் சீதாவின் அம்மா தன் மருமகனிடன் வாக்குவாதம் செய்ய ஆரம்பித்தார். " ஒங்கம்மா எப்படி என் பொண்ண தப்பானவள்னு சொன்னாங்க. அதுக்கு ஒரு பதில் தெரியற வரைக்கும் என் பொண்ணு ஒன் வூட்டுக்கு வரமாட்டா" என்றார். இங்க பாருங்க, என் பொண்டாட்டிய என்னைக்கு என் வூட்டுக்கு அனுப்ப தோணுதோ அப்ப சொல்லுங்க. அதுவரைக்கும் வாய மூடிக்கிட்டு இருங்க. வீணா பிரச்னையை வளக்காதீங்க" என்றவன் அங்கிருந்து ஊருக்குப் புறப்பட்டுச் சென்றான். ஊருக்கு போனவனுக்குச் சில நாட்கள் கழித்து வக்கீல் நோட்டீஸ்தான் வந்தது.

* * *

இனி வாழ்வு வேதனையானதுதான் என்று அவன் நினைத்தபோதுதான் அவன் நண்பனின் வார்த்தைகள் சரி எனப்பட்டன.

ஆனாலும் சமாதானம் செய்வது யார் என்ற கேள்வியும் கூடவே எழுந்தது. ஒரு நாள் முழுவதும் அவன் மனம் ஊசலாடிக்கொண்டிருந்தது. குமார் சொல்வதைத்தான் கேட்கவேண்டும் என்று மனம் முடிவு செய்ய, அவன் தந்தைக்குப் போன் செய்து சுருக்கமாகப் பேசிப் போனை வைத்து விட்டான்.

“அப்பா, இந்த விவாகரத்தில் எனக்கு விருப்ப மில்லை”.

e-mail : enselvaraju@gmail.com

# ஒற்றைத் துருவ உலகமும் தீவிரவாதமும்

லாவண்யா சத்யநாதன்

**முன்னோட்டம்**

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. ஜனநாயகமென்றாலென்ன?

தனிநபருக்குப் பல்வகை சுதந்திரங்களுண்டு. இந்தச் சுதந்திரங்களில் கூடுதல் குறைவு கிடையாது. அனைவரும் சமம்.

இந்தியா ஒரு குடியரசு நாடு. அரசு மக்கள் அனைவரையும் சம அந்தஸ்துள்ளவர்களாக, சமஉரிமையுள்ளவர்களாக கருதும் நாடு குடியரசு நாடு.

ஒரு சிலருக்கான சமூகப் பொருளாதாரச் சலுகைகள், அதிகாரங்கள் பெரும்பான்மை மக்களின் உரிமைகளைப் பாதிக்கின்றன. சமத்துவம் சமவுரிமையிரண்டும் இல்லாமல் போகின்றன. அதைச் சீர் செய்வது ஒரு குடியரசின் கடமை.

பெரும்பான்மை மக்களின் வாக்குகளால் ஆட்சிக்கு வருபவர்கள், பெரும்பான்மை மக்களின் சமூகப் பொருளாதார அரசியல் உரிமைகளை அதிகாரங்களை சிறுபான்மையினர் பறிப்பதைத் தடுப்பதே உண்மையான குடியரசு.



கடந்த எழுபது ஆண்டுகளாய் இந்தியாவில் மத்தியிலும், மாநிலங்களிலும் நடந்த ஆட்சி மாற்றங்கள் அதைச் செய்ததா? இல்லை. ஏன்?

நாம் ஆட்சியாளர்களைத்தான் மாற்றுகிறோம். ஆளுங்கட்சியைத்தான் மாற்றுகிறோம். சமூகப் பொருளாதார அரசியல் அமைவை *(Socio Economic Political system)* மாற்றவில்லை.

உண்மையில் ஜனநாயகமென்பது சாமான்ய மக்கள் ஒரு பொருளாதாரச் சமூக அமைவை மாற்றும் வலிமை பெறுவதுதான். பெரும்பான்மை மக்கள் அத்தகைய வலிமையைப் பெறும்போதுதான் மக்களதிகாரம் வலுப்பெறும். மக்களதிகாரம் அரசை இயக்கும்போதுதான் ஒரு நாடு குடியரசு நாடாகும்.

மக்களதிகாரம்தான் ஒரு கட்சியை ஆட்சி பீடத்தில் அமர்த்துகிறது. ஆட்சியாளர்கள் மக்களதிகாரத்தை வலுப்படுத்துகிறார்களா? பெரும்பான்மை மக்களின் பொருளாதார நலன்களை அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கிறார்களா? மக்கள் தந்த அதிகாரத்தை ஆட்சியாளர்கள் யாருடைய நலனைப் பாதுகாக்க, வளர்க்கப் பயன்படுத்துகிறார்கள்?

ஒரு நிதியமைச்சர் பட்ஜெட் தயாரிக்கிறார். பட்ஜெட் என்பது ஒரு செயல்திட்டம். அதில் பெரும்பான்மை மக்கள் தந்த அதிகாரம் பெரும்பான்மை மக்களின் பொருளாதார வலிமையைக் கூட்டச் செயல்படுகிறதா?

தொழிலாளர்கள், விவசாயிகள், சிறுவியாபாரிகள், உதிரி வேலை செய்பவர்கள் இந்தியாவின் பெரும்பான்மை மக்கள். அவர்கள்தான் ஆட்சியதிகாரத்தை ஒரு கட்சிக்குத் தருகிறார்கள்.

அந்தக் கட்சி தன் செயல்திட்டத்தைத் தயாரிக்கும் முன் யாரைக் கலந்தாலோசிக்க வேண்டும்? குறைந்தபட்சம் பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகளைத்தானே? இவர்கள் யார்? தொழிற்சங்கத் தலைவர்கள், விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகள், சிறு வியாபாரிகளின் பிரதிநிதிகள். சுதந்திர இந்தியாவில் எந்த நிதியமைச்சராவது இவர்களைக் கலந்தாலோசித்ததுண்டா? கருத்துக் கேட்டதுண்டா? இந்திய ஜனநாயகத்தில் ஓட்டுப் போட்டவுடன், மக்களதிகாரம் காணாமல் போய்விடுகிறது. அவர்களுக்கு செயல் திட்டங்களத் தீர்மானிக்கும் பங்களிப்பு இல்லை. கறிவேப்பிலையாகத் தூக்கியெறியப் படுகிறார்கள். ஏ.சி. அறையிலமர்ந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தயாரிக்கும் பட்ஜெட், அதில் நிதியமைச்சர் செய்யும் ஒப்பனைகளோடு வருவதுதானே பட்ஜெட் என்னும் செயல்திட்டம். குடியாட்சி எங்கே? இந்தியாவில் ஒவ்வொரு செயல்திட்டமும் யாருடைய நலனைக் காக்கிறது? யாருடைய நலனை வளர்க்கிறது? அம்பானிகள், அதானிகள், பிர்லாக்கள், மிட்டல்களின் நலனைத்தானே?

அரசின் செயல்திட்டத்திற்கு வடிவம் தருவது யார்?

இந்தியா இன்க். மெம்பர் ஆஃப் காமர்ஸ்கள் தானே? அறிவுரை யார் தருகிறார்கள்? உலக வங்கிதானே?

பெரும்பான்மை மக்களதிகாரம் சிறுபான்மை கார்ப்பரேட் வணிகர்களிடமும், உலக வங்கியிடமும் அடகு வைக்கப்படுமானால், குடியரசுத் தத்துவம் என்னவானது? நம் அரசு குடியரசா? இல்லை. மேட்டுக்குடியரசு.

இதன் விளைவென்ன? பெரும்பான்மை மக்களுக்கெதிரான பொருளாதாரக் கொள்கைகள், செயல் திட்டங்கள், மில்லியனர்களைப் பில்லியனர்களாக்கும், ட்ரில்லியனர்களாக்கும். இது ஜனநாயகமா? மக்கள் ஜனநாயகமா?

நம் ஆட்சியாளர்கள் வலுப்படுத்துவது கார்ப்பரேட் முதலாளித்துவம். வளர்ப்பது அமெரிக்கப்பாணி ஜனநாயகம்.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் அழுத்தங்கள் பன்னாட்டு நிதி நிறுவனத்தின் போதனைகள், உலக வங்கியின் உபதேசங்கள் இந்திய ஜனநாயகத்தை அமெரிக்கப்பாணி ஜனநாயகமாக மாற்றுகின்றன.

**அமெரிக்க ஜனநாயகம்**

அமெரிக்கப்பொருளாதார அமைவு,கார்ப்பரேட் முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இரு கட்சிகள் மாறி மாறி ஆட்சி செய்வது ஜனநாயகமென்பது வெறும் மாயை.

அமெரிக்க ஜனநாயகம் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்ததா? சாமான்ய மக்களுக்கு அரசின் செயல் திட்டங்களில் கொள்கைகளில் உரிமைகளுண்டா? கட்சி மாற்றங்களால் அவர்கள் பயனடைந்தார்களா?

பயனாளிகள் யார்? அமெரிக்க அரசின் மறைமுக ஆட்சியாளர்கள், அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்கள், ஹாலிபர்ட்டன், எக்சான் மோபில், பெக்டெல், கோல்டன் சாக்ஸ், மார்கன் சேஸ், வால் ஸ்ட்ரீட் முதலைகள் தான்.

மேலே குறிப்பிட்ட கம்பெனிகளின் லாபம் அமுதசுரபியாக அமெரிக்க நிர்வாகம் செய்யும் அனைத்தும் டெக்சாசில் வாழும் கருப்பின விளிம்பு நிலை மக்களுக்கும் பயனளிக்கும் என்ற தத்துவம் கட்சிப் பாகுபாடின்றி கடைபிடிக்கப்படும் என்பது எழுதப்படாத விதி. நடைமுறை யதார்த்தம்? உள்நாட்டுக் கொள்கை இது வெளியுறவுக் கொள்கை காரணமாக,

இராக்கில் தலையிட அமெரிக்க மக்களின் வரிப்பணம் 500 மில்லியன் டாலர்கள் செலவானது. மரண வணிகர்களுக்கு 17 கோடி டன் குண்டுகள் விற்பனையானது. ஹாலிபர்ட்டனுக்கு பீரங்கி வண்டிகள் விற்பனையானது. லாபம் யாருக்கு?

**பரமார்த்த குருவும் கருமாந்திரச் சீடனும்**

சமீபத்தில் அம்பானி விற்கும் தொலைபேசி வசதிகள், இலவசங்கள் TRAI யின் (Telephone Regulatory Authority of India) விதிகளுக்கெதிரானதாகத் தகவல்கள் கூறுகின்றன. ஆகஸ்டா வெஸ்ட்லேண்ட் வழக்கில் இந்துஜாவுக்கு 52 கோடிக்கு வருமானவரி விதிவிலக்கு அளிக்கப்பட்டதாக செய்தி.

அதனாலென்ன? அம்பானிக்கு லாபம் பெருத்தால் ஆட்டையாம்பட்டி அங்கமுத்துவுக்கும் லாபம்தானே? இந்துஜாவுக்கு 52 கோடி அன்பளிப்பு வழங்கினால், இடார்சியில் இமானுவேலுக்கு வயிறு நிரம்பும்தானே? இது பொருளாதார மேதை மன்மோகன்சிங்கின் கொள்கை.

தொலைபேசிக் கம்பெனிகளின், பேடிஎம்களின் கஜானா நிரம்பினால் தொட்டியம் துரைக்கண்ணு இரு நூற்றாண்டுகளை ஒரு க்ளிக்கில் கடந்து புதியதோர் உலகில் புகுவாரோ? இது நாவலர் மோடியின் டிஜிட்டல் இந்தியா கொள்கை. எடுத்துக்காட்டுக்கு ஒன்றைப் பார்ப்போம். இணையதளம் ஒரு நவீன சாதனம். அமெரிக்க இராணுவக் கண்டுபிடிப்பு. பல மாற்றங்களுடன் பரவலாக்கப்பட்டது. ஒரு சொடுக்குப்பொழுதில் ஒருவரைத் தொடர்பு கொள்ளும் வசதி. வரம்.

இணையதளம் புழக்கத்தில் வருமுன் உங்கள் முகவரி தெரியாத ஒருவர் உங்களுக்கு கடிதம் அனுப்ப இயலாது. இப்போது உங்களுக்கு இணையதளத்தில் ஒரு மின்னஞ்சல் முகவரியுள்ளது. நீங்கள் அதைத் தந்தால் தான் நான் உங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும். நாகரிகம் கருதி நான் உங்கள் முகவரியை, தகவல் வங்கி *(Data Bank-™)* தேடி உங்களுடன் தொடர்பு கொள்ளமாட்டேன். கைப்பேசியிலும் அதே நிலைப்பாடுதான். அதாவது உங்களுடைய அந்தரங்க விஷயங்களில் *(Privacy)* தலையிட எனக்கு உரிமையில்லை என்பது கோட்பாடு.

ஆனால் எந்தக் கம்பெனியும் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்ப முடியும். அனுப்புகிறார்கள். எந்தக் கம்பெனியும் உங்களைத் தொலைபேசியில் / கைப்பேசியில் தொடர்புகொள்ள முடியும். ஆனால் நீங்கள் அவர்களைத் தொடர்பு கொள்ளவியலாது. தொடர்பு கொண்டாலும் துண்டிக்கப்படும். உங்களுடைய பிரைவசியில் கம்பெனிகள் நுழைய முடியும். அவர்களுடைய பிரைவசியில் நீங்கள் குறுக்கிட முடியாது. உங்களுக்கொரு விதி. கார்ப்பரேட் பெரு வணிகர்களுக்கொரு விதி!

பெரு வணிகக் கம்பெனிகளின் உரிமைகள், தொழில்நுட்பம் உங்கள் உரிமைகளை ஏறி மிதிக்கிறது. அவர்களுடைய கூடுதல் உரிமைகள் உங்கள் நலனுக்குத்தானே? ரம்மி விளையாடுங்கள், ராஜாவாக மாறுங்கள் விளம்பரம் அழைப்பு யார் நலனுக்கு? உங்கள் நலனுக்குத்தான். நம்புங்கள்!

இதுதான் அமெரிக்க மாடல் ஜனநாயகம். அமெரிக்க வெளியுறவுக்கொள்கை உங்கள் அரசு எதைச் செய்ய வேண்டும். செய்யக்கூடாதென்று போதிக்கிறது. நெருக்கடி தருகிறது. உங்கள் அன்றாட வாழ்க்கையில் நுழைகிறது. அதனால் அதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. விமர்சிக்க வேண்டியது கட்டாயமாகிறது.

**அமெரிக்க வெளியுறவுக் கொள்கையும், பரிமாணங்களும்**

அமெரிக்க சர்வதேசக் கம்பெனிகளின் உலகளாவிய விஸ்தரிப்பு அமெரிக்க மக்களுக்கு மட்டுமல்ல, உலக மக்களுக்கே சுபிட்சம் தரும்! அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைத் தத்துவம் இதுதான். இந்தத் தத்துவத்தின் இலக்கு அமெரிக்கப் பன்னாட்டுக் கம்பெனிகளின் சாம்ராஜ்ய உருவாக்கம். அதன் மறுபெயர்தான் ஒற்றைத் துருவ உலகம்.

இத்தகைய விரிவாக்கத்துக்கான உத்திதான் உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், மன்மோகன் சிங் சொன்னதும், செய்ததும் இதைத்தான். ஒரு நாட்டின் அரசை, ஆளுங்கட்சியைக் கைக்குள் போட்டுக் கொண்டால் அமெரிக்கக் கம்பெனிகளின் வணிக விஸ்தரிப்பும், சுரண்டல் வசதியும் எளிதாகிறது. அதனால் ஜனநாயக நாடுகளில் ஆட்சியாளர்களின் கொள்கைகளை அமெரிக்கா போதிக்கிறது. விலைக்கு வாங்குகிறது. சில சமயங்களில் நிர்ப்பந்திக்கிறது. ஒத்துவராத ஆட்சிகளைக் கவிழ்க்கிறது. மற்றபடி, அமெரிக்கா முழங்கும் ஜனநாயகம், மனித உரிமைகள் எல்லாம் வெற்றுக் கூச்சல்கள்.

அமெரிக்கா ஜனநாயகத்தின் காவல் தெய்வமல்ல. மனித உரிமைகளை அமெரிக்கா மதித்ததுமில்லை. மிதித்ததுதான் அதிகம். பிற நாடுகளும், இந்தியாவும் அமெரிக்கப் போலி ஜனநாயகத்தைப் பின்பற்ற வேண்டிய கட்டாயமெதுவும் கிடையாது. இந்தியாவில் எவ்வகை சமூகப் பொருளாதாரம் அமைவது தேவையென்பதைத் தீர்மானிப்பது இந்திய மக்களின் பிறப்புரிமை.




அதை அமெரிக்கா தன் வெளியுறவுக் கொள்கை வழியே தன் பன்னாட்டுக் கம்பெனிகளின் வசதிக்கேற்றவாறு மாற்றுகிறது. அதனால் விமர்சிப்பது அவசியமாகிறது. அமெரிக்கப் பன்னாட்டுக் கம்பெனிகளின் பாதுகாவலர்களான அமெரிக்க ஆட்சியாளர்களின் வெளியுறவுக் கொள்கையை சற்று விரிவாகப் பார்ப்போம்.

**அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்கள்**

1. உலகக் கிராமத்தில் உலகச் சந்தை இருக்க வேண்டும்.
2. உலகச் சந்தையில் அமெரிக்க சர்வதேசக் கம்பெனிகள் ஆண்டைகளாக இருக்கவேண்டும்.
3. உலக மக்கள் முட்டை வாங்க சந்தைக்கு வரவேண்டும். முனியம்மா வீட்டுக் கோழியை கன்னியம்மா வீட்டுச் சேவல் மிதித்துவிடக்கூடாது. முனியம்மா முட்டை விற்றால் சந்தை சரிந்து போகும்.
4. உலக நாடுகளைச் சந்தைப் பொருளாதாரத்தைப் பின்பற்றச் செய்ய வேண்டும்.
5. பிற நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகள் அமெரிக்க சர்வதேசக் கம்பெனிகளின் வணிகம் லாபம் இரண்டுக்கும் தோதாயிருக்க வேண்டும்.
6. அமெரிக்க சர்வதேசக் கம்பெனிகள் ஈட்டிய லாபத்தை அமெரிக்காவுக்குக் கொண்டு செல்ல பிற நாடுகளின் அரசுகள் தடை விதிக்கக்கூடாது.
7. அமெரிக்க சர்வதேசக் கம்பெனிகளுக்கு பிற நாடுகளின் அரசுகள் முன்னுரிமை சலுகைகள் வழங்குமாறு செய்ய வேண்டும்.
8. பிற நாடுகளின் சட்டங்களை சர்வதேச அமெரிக்கக் கம்பெனிகளின் வணிக உத்திகளுக்குத் துணை நிற்கும் விதமாய் மாற்றும் யுக்திகளைக் கையாள வேண்டும்.
9. சந்தைப் பொருளாதாரத்துக்கெதிரான மாற்று அமைவை *(Alternate Socio Economic Political System)* உருவாக்கவிடக்கூடாது.
10. சோசலிசம் ஒரு மாற்று அமைவு. அமெரிக்க வணிக சாம்ராஜ்யத்தின் எதிரி. எதிரிகளுக்குக்கெதிராக பிரச்சாரப்போர், பீரங்கிப்போர் இரண்டையும் செய்யவேண்டும்.
11. இஸ்லாம் மதம், மத நம்பிக்கைகள், கலாச்சாரம் அமெரிக்க சர்வதேசக் கம்பெனிகளின் கலாச்சார மேட்டிமைக்கு எதிரி. அதனால் மதம் சார்ந்த கலாச்சாரங்களை நவீனப்படுத்துதல் என்ற பிக்கினி அணிய வைக்கவேண்டும்.
12. அமெரிக்க சர்வதேசக் கம்பெனிகளின் சாம்ராஜ்ய ஸ்தாபன திக்விஜயத்துக்கெதிரான நாடுகளில் சமூகப் பொருளாதார அரசியல் ஸ்திரத்தன்மையை இரட்டைக் கோபுரங்கள் போல் சரிய வைக்கவேண்டும் *(Destabilisation).* ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும். அதன் ஆதரவாளர்களை கொள்ளை லாப தேவதைக்கு நரபலியாய் சமர்ப்பிக்க வேண்டும்.

**செயற்கருவிகள்**

கரப்பான் பூச்சி உயிரியலில் பெரிப்ளானட்டா அமெரிக்கானா என்று அழைக்கப்படுகிறது. இது இரண்டு மில்லியன் வருடங்களாக பரிணாம வளர்ச்சியில் தன்னைத் தக்கவைத்துக் கொண்டிருப்பது விந்தைக்குரியது. அதன் ஆபத்துக்களிலிருந்து தப்பிப் பிழைக்கும் திறமை குறித்தும்

பேசப்படுகிறது. அதன் கண்கள் சிறுசிறு சதுர பாகங்களாக உள்ளன. ஒவ்வொரு சதுரமும் தனித்தனியே பார்க்கும் திறமை படைத்தவை. அபாயங்களிலிருந்து விரைந்து தப்பிச் செல்லஉதவுபவை. ஈரம் இருட்டு இரண்டும் அதற்குப் பிடித்தவை. எதையும் உண்ணும், ஒரு மணிஜாடியில் இரண்டு கரப்பான் பூச்சிகளையடைத்து வைத்தால் ஒன்றையொன்று தின்றுவிடும். எளிதில் ஒளிந்துகொள்ளும்.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கைகளைச் செயல்படுத்தும் அமைப்புகள் கரப்பான் பூச்சியின் குணங்களுள்ளவை. கரப்பான்பூச்சி, மருந்து மாத்திரைகளைப்போல பத்திருபது முட்டைகளை மெல்லிய உறையுடனிடுகிறது. இந்தச் செயலமைப்புகளும் எண்ணிக்கையைப் பெருக்கும். அவை டஜன் கணக்கிலிருக்கின்றன. அமெரிக்க வெளியுறவுத்துறை, வணிகத் துறையல்லாது தனித்தனியாக இயங்குபவை. இவற்றில் நான்கை மட்டுமறிவோம்:

*Freedom House* அமெரிக்க ஆதிக்கம் / வணிகம் ஒவ்வொரு நாட்டிலும் கடைப்பிடிக்கத் தேவையான உத்திகளை உருவாக்கும் நிறுவனம்.

*Endowment for Democracy:* கம்யூனிச எதிரிகள், அதிருப்தியாளர்கள், சிந்தனையாளர்கள், பத்திரிகையாளர்கள் வழியே பிற நாடுகளில் சமூக ரீதியாக அமெரிக்கப் பாணி ஜனநாயகத்தின் புகழ்பாட வைக்கும் நிறுவனம். சோழியன் குடுமி சும்மா ஆடுமா?...

**அமெரிக்கன் எண்டர்பிரைசஸ் இன்ஸ்ட்டியூட் அமைப்பு** ஒற்றைத் துருவ உலகக் கனவையேற்க மறுக்கும் அரசுகளைக் கவிழ்க்க இடம், பொருள் ஏவல் காலம் வர்த்தமானம் கணித்துத் தரும்.

இதுபோல் பல அமைப்புகளுண்டு. இவை சில ஒப்பனாக செயல்படுகின்றன. சில ரகசியமாகச் செயல்படுகின்றன. இவை காரியம் சாதிக்க காசை வீசியதும் பல சூழல்களில் தெரிய வந்துள்ளது.

இவை தவிர மாயாவி அமைப்பு ஒன்றுண்டு. அது **அமெரிக்க உளவு நிறுவனம்.** ஒற்றர்கள், உளவாளிகள், ஏஜெண்டுகள், மாறுவேட ஏஜெண்டுகள், கொலைகாரக் கூலிப்படைகள் *(Mercenaries)* என பல கரங்கள் கொண்டது. பிற நாடுகளின் சட்டங்கள் இந்த அமைப்புக்கு ஒரு பொருட்டில்லை. அரசுகளைக் கவிழ்க்கும். ஜனநாயக அரசைக் கவிழ்க்க சர்வாதிகாரிகளை / இராணுவ அதிகாரிகளை விலைக்கு வாங்கும் துணைபோகும். சர்வாதிகாரிகளைக் கவிழ்க்கவேண்டுமா? கலகக்காரர்களை உருவாக்கும். தீவிரவாதத்தை வளர்க்கும். நியாயப்படுத்தும். கலகக்காரர்களை அடக்க வேண்டுமா? சர்வாதிகாரிகள் உருவாக்கும். உலக வங்கி, பன்னாட்டு நிதி நிறுவனம் இரண்டும் வளரும் நாடுகளுக்கு அமெரிக்க சர்வதேசக் கம்பெனிகளை வளர்க்கும் நிபந்தனைகளோடு, கடன்களை வழங்கும்.

**செயல்முறைகள்**

இவை நாட்டுக்கு நாடு வேறுபடும். தலைக்கேற்ற குல்லாவும் வைப்பார்கள். குல்லாவுக்கேற்ப தலையையும் வெட்டுவார்கள். பொதுவான வகைப்படுத்தலுண்டு. நாடுகள் வகைப்படுத்தல்.

**நட்பு நாடுகள்:** தகவல் பரிமாற்றம், ஒத்துழைப்பு.

**வழிநடத்தப்படும் நாடுகள்:** விஞ்ஞானத் தொழில்நுட்ப இறக்குமதி, நிபுணர்கள் வழிகாட்டுதல், தருமசேவையல்ல, கட்டணச் சேவை.

**போலீஸ் இராணுவ உதவி பெறும் நாடுகள்** ***(Vassal States)*** காவல்துறை இராணுவ வலிமையில்லாத சிறிய கலகம் நிறைந்த நாடுகள், இராணுவ தளவாடம், துருப்புகள் அனுப்புதல், அரசைக் காப்பாற்றுதல்.

**பொம்மை அரசுள்ள நாடுகளை உருவாக்குதல்** ***(Puppet Regimes)*** சிலேயில் பினோச்சே., இந்தோனேஷியாவில் சுஹார்தோ, பிலிப்பைன்ஸில் மார்க்கோஸ்.

**எதிர்கொள்கையுள்ள நாடுகள்** ***(Enemy States):*** சில அறிவிக்கப்படும் சில அறிவிக்கப்படாது: வெனிசுலாவில் சாவெஸ், இராக்கில் சதாம் உசேன், இரானில் முல்லாக்களின் ஆட்சி, லிபியாவில் கதாபி.

**உறவுகளின் அளவுகோல்** கொள்ளையடிப்பதற்கான வசதியும், வாய்ப்பும். உறவுகளின் நீடிப்பு அளவுகோலைப் பொறுத்தது. மற்றதை அமெரிக்க உளவுத்துறை பார்த்துக்கொள்ளும். பிறநாட்டு ஆட்சியாளர்கள் (அதிபர்கள்,

பிரதமர்கள்) குறித்த அந்தரங்க கோப்புகள் அவர்களை மிரட்டவோ, ஆட்சியைக் கவிழ்க்கவோ உதவும். கலகம் விளைவிக்க, தாக்குதல் நடத்த அடியாட்கள் வேண்டு மல்லவா? அடியாட்களென்றால் கேவலமாக இருக்கிறதல்லவா? அடியாட்களுக்கு கௌரவமான பெயர் *NATO (North - Atlantic Treaty Organization).*

**அமெரிக்காவும் சர்வாதிகாரிகளும்**

இரானில் 1960களில் ஆட்சி செய்த ஷா ரேசா ப்ஹ்லாஷா, சிலேயில் பினோசே, இந்தோனேஷியாவில் சுஹார்தோ, பனாமாவில் நோரிகா, அர்ஜெண்டினா, பிரேசில் நாட்டு இராணுவ ஆட்சி... ஜனநாயகத்தின் காவல் தெய்வமான அமெரிக்கா ஆதரித்த நிறுவிய பாதுகாத்த சர்வாதிகார ஆட்சிகள். அமெரிக்கா ஜனநாயக ஆதரவு நாடென்பது அண்டப்புளுகு என்பதற்கு இவை வரலாற்றுச் சான்றுகள்.

**அமெரிக்காவும், ஜனநாயகமும்**

அமெரிக்காவின் இராக் ஆக்கிரமிப்புக்குப் பிறகு இராக்கில் ஒரு நகராட்சிக்குத் தேர்தல் நடத்தியது. வாக்காளர்கள் ஷியா, அசிரியன், குர்த் என வகைப்படுத்தப்பட்டார்கள். சன்னி இன மக்களுக்கு வாக்குரிமை ரத்து செய்யப்பட்டது. தேர்தல் ஆணையர் யார் தெரியுமா? அமெரிக்க இராணுவ தளபதி. இராக்கில் பாலஸ்தீனத்தின் தூதரகம் அமெரிக்க ராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. தூதரக அதிகாரிகளுக்கு விலங்கு மாட்டியது அமெரிக்க ராணுவம். குரான் சுக்குநூறாகக் கிழித்தெறியப்பட்டது. இவை அமெரிக்க ஜனநாயகத்துக்கு எடுத்துக்காட்டுகள்.

**அமெரிக்காவும், மனிதவுரிமைகளும்**

- கடந்த 40 வருடங்களில் அதிகமாக மரண தண்டனை நிறைவேற்றிய நாடு அமெரிக்கா
- உலகில் சிறைவாசம் செய்யும் மக்கள் தொகை அதிகமான நாடு அமெரிக்கா (20 லட்சம் பேர்)
- ஆண்கள் பெண்களிருவருக்கும் சம ஊதியம் தராத நாடு அமெரிக்கா.
- கடந்த அதிபர் தேர்தலின்போதுதான் கால் நூற்றாண்டுகளுக்குப் பிறகு குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்த யோசித்த அரசியல்வாதிகளின் நாடு அமெரிக்கா.
- மருத்துவக் காப்பீடு செய்து கொள்ளும் வசதியில்லாதவர்கள் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள்.

இவற்றைக் குறிப்பிடுவதன் நோக்கம், அமெரிக்கா மனிதவுரிமைகளைப் பாதுகாக்கும் அருளாளனென்று மாயையில் பலரும் திளைப்பதைக் கருதிதான்.

**பிற நாட்டு மக்களின் மனித உரிமைகளும், அமெரிக்காவும்** தீவிரவாதத்தை ஒழிக்கும் போர்வைக்குள் அமெரிக்க ராணுவம் ஒளிந்து பல நாடுகளில் அந்த நாடுகளின் அரசுகளுக்குத் தெரியாமல் தன் அரசியல் எதிரிகளைக் கடத்தி இரகசியச் சிறைகளில் வைத்திருப்பதாக சில செய்திகள் கூறுகின்றன.

இதைச் செய்யும் அமெரிக்கா பிற நாடுகளிடம் என்ன கோரிக்கை வைக்கிறது தெரியுமா? என்ன குற்றம் செய்தாலும் தங்கள் ராணுவவீரர்களைப் பிறநாட்டு அரசுகள் தண்டிக்கக்கூடாது...!

இதைக் குறிப்பிடக் காரணம் இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் ஒரு *Logistics Agreement* கையெழுத்தாகியுள்ளது. அமெரிக்க ராணுவம் இந்தியாவில் சுதந்திரமாக நடமாடலாம் என்பது இந்த ஒப்பந்தத்தில் ஒரு உடன்பாடு.

மேலும், அமெரிக்கன் ஒருவன் இந்தியாவில் குற்றம் புரிந்தால் அவனைத் தண்டிக்கும் உரிமை இந்திய அரசுக்கு இல்லை என்பதும்.

ஈராக்கில் 40 நாட்களில் 17 கோடி பவுண்டு குண்டுகளை அமெரிக்க ராணுவம் / விமானப்படை வீசியதாக வில்லியம் ப்ளம் என்ற எழுத்தாளர் தன் நூலில் குறிப்பிடுகிறார். அங்கே தீவிரவாதிகள் / சதாம் ஆதரவாளர்களென்று கருதப்பட்டவர்கள் எப்படி வதை முகாம்களில் நடத்தப்பட்டார்கள் என்பதை கூகுளில் பார்த்தால் தெரியும். அமெரிக்கா மனித உரிமைகளை மதிக்கும் அவலம். லத்தீன் அமெரிக்க நாடுகள், இந்தோனேசியா, அர்ஜென்டினாபோன்றநாடுகளில் ஆயிரக்கணக் கானவர்களை இரகசிய நிறுவனங்கள், கூலிப்படைகள் வைத்து அமெரிக்கா கொன்று குவித்ததென்பது வரலாறு.

மனிதவுரிமைகளை அமெரிக்கா மிதித்தது அதிகம். மதித்தது சொற்பம்.



### அமெரிக்க வெளியுறவுக் கொள்கையும் தீவிரவாதமும்

முன்னாள் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்தபோது, அதை எதிர்க்க, ஒசாமாபின்லேடன் அமெரிக்காவால் களத்திலிறக்கப்பட்டார். (ஒசாமா பொறியியல் பட்டதாரி. ஒரு வருடத்திற்கு 7 லட்சம் பவுண்டுகள் அவருக்கு வருமானமென்று எங்கோ படித்தேன்) ஒசாமா சோவியத் யூனியனை எதிர்த்தபோது விடுதலை வீரர் அமெரிக்காவை எதிர்த்தபோது தீவிரவாதி!

மீர் காசிம் என்ற ராணுவ அதிகாரி இராக்கில் ஆட்சியைக் கைப்பற்றியபோது இராக்கில் இருந்த தனியார் எண்ணெய் நிறுவனங்களைத் தேசியமயமாக்கத் திட்டமிட்டார். அவரை ஒழிக்க உருவாக்கப்பட்டவர்தான் சதாம் உசேன். அமெரிக்க உளவுத்துறை அவருக்குப் பணம் கொடுத்தது, பாதுகாப்பு கொடுத்தது. அவரை அதிபராக்கவும் செய்தது. இராணுவத்திற்கு எதிராக ரசாயனத் தளவாடங்களைத் தந்து போர் செய்ய வைத்தது. பிறகு பேரழிவு ஆயுதங்களை சதாம் வைத்திருக்கிறாரென்று ஒரு பொய்யைச் சொல்லி அவரைத் தூக்கிலிட்டது.

சிரியாவில் ரஷ்யா ரயில்பாதைகள் போடும் பணிகளைச் செய்து வருகிறது. சிரியாவில் எண்ணெய் கிணறுகள் உள்ளன. 1958ல் அமெரிக்கா சிரிய அரசைக் கவிழ்க்க முயன்று தோற்றது. இப்போதும் கவிழ்க்க முயல்கிறது. தீவிரவாதிகளுக்கு ஆதரவு தருகிறது.

இவையெல்லாம் ஜனநாயகத்தை உருவாக்க, மனித உரிமைகளை நிலைநாட்ட நடப்பதாக உலகில் எவரும் நம்பத் தயாரில்லை.

இரான், இராக், சிரியா மூன்றும் எண்ணெய் வளமுள்ள நாடுகள். அமெரிக்க சர்வதேசக் கம்பெனிகள் கட்டுப்பாட்டில் எண்ணெய் வணிகத்தைக் கொண்டுவரத்தான் இந்த நாடகம். அந்த நாடகத்தின் பெயர் அரேபிய வசந்தம்.

அமெரிக்க சர்வதேசக் கம்பெனிகளின் சாம்ராஜ்யத்தை உலகமயமாக்க அமெரிக்க ஆட்சியாளர்கள் தீவிரவாதத்தை உலக மக்களின் காதில் பூ ஆக சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா ஒரு உலக ரவுடி. அது அணிவது தீவிரவாத எதிர்ப்பு போலீஸ் வேடம். மனிதவுரிமைகளை போதிக்கும் ஜெகத்குரு மேக்கப்.

### அமெரிக்கா கவிழ்த்த அரசுகள்

சர்வாதிகாரிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் என்ற வேறுபாடுகளெல்லாம் அவர்களுக்குக் கிடையாது. சர்வாதிகாரிக்கும் சூன்யம் வைப்பார்கள். ஜனநாயகவாதியையும் சுட்டுத் தள்ளுவார்கள். இரண்டாம் உலகப்போருக்குப் பின் நாற்பதுக்கும் மேற்பட்ட அரசுகளைக் கவிழ்த்திருக்கிறார்கள். பல நாடுகளில் டாலர்கள் தேர்தலில் விளையாடியிருக்கின்றன.

நீண்ட பட்டியலென்பதால் ஒரு சில உதாரணங்களைப் பார்ப்போம். வெவ்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்தவை. வரலாற்றில் பதிவானவை.

1957–58ல் சுகர்ணோ (இந்தோனேஷியா அதிபர்) கம்யூனிஸ்ட் கட்சியை தடை செய்ய மறுத்தார். கவிழ்க்கப்பட்டார்.

1964பிரேசில் பன்னாட்டுக் கம்பெனிகள் தங்கள் லாபங்களைத் தாய்நாட்டுக்கு எடுத்துப் போவதற்கு எதிராக சட்டம் போட்டது, ஆட்சி கவிழ்ந்தது.

1990 கௌதமேளா நாட்டில் அமெரிக்க பழக் கம்பெனி தேசியமாக்கப்பட்டது. அதிபர் ஆர்பென்சின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

அர்ஜென்டினா பன்னாட்டு வங்கிகளுக்கு முன்னுரிமை தர மறுத்தது. ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

சதாம் உசேன் இராக்கின் கச்சா எண்ணெயின் விலையை, அமெரிக்க எண்ணெய் கம்பெனிகள் கேட்ட விலைக்குத் தர மறுத்தார். அமெரிக்க டாலர் வேண்டாம். யூரோவில்

தரவேண்டுமென்றார். தூக்கில் தொங்கினார்.

கதாபி (லிபியா). 1980களில் தொழில்நுட்ப உதவி, நவீனப்படுத்துதலுக்கு நாங்கள் உதவுகிறொமென்று அமெரிக்கா ஆசை காட்டியது. கதாபி மறுத்தார். லிபியா ஒரு சிறிய வட ஆப்பிரிக்க நாடு. எண்ணெய் வளமிக்க நாடு. தங்கம் நிறைந்த நாடு. கதாபி ஆப்பிரிக்க நாடுகளை ஒன்றிணைத்து ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கி, ஆப்பிரிக்காவுக்கு ஒரு பொது கரன்சி உருவாக்கத் திட்டமிட்டார். இது அமெரிக்க ஆதிக்கம் நிறைந்த உலக வங்கி. சர்வதேச நிதி நிறுவனத்தை பலவீனப்படுத்தும். டாலர் மதிப்பு ஆப்பிரிக்காவில் வீழும். கதாபி நடுத்தெருவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**அமெரிக்க வெளியுறவுக் கொள்கையும் இந்தியாவும்**

இந்தியா மக்கள் தொகை அதிகமான நாடு. மிகப்பெரிய சந்தை. அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களுக்கு சுரண்டல் வாய்ப்புகளதிகம். அதனால் பன்னாட்டு நிதிநிறுவனம் உலகவங்கி மூலமாக அமெரிக்கா இந்தியப் பொருளாதாரக் கொள்கையை தனியார்மயமாக்குதல், தாராளமயமாக்குதல் நோக்கித் தள்ளுகிறது.

நட்பு ஒத்துழைப்பென்ற பேரில் அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களின் சாம்ராஜ்யத்தை இந்தியாவில் நிறுவுகிறது.

1. கூட்டுவணிகம். 2. நேர்முக / மறைமுக முதலீடுகள் 3. பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் ஒப்பந்தங்கள் 4. அணுசக்தி வணிகம் போன்ற துறைகளில் இவை நிகழ்கின்றன.

அரசுரீதியாக 1. இராணுவ ஒத்துழைப்பு 2. அமெரிக்க ராணுவ வீரர்கள் இந்தியாவில் சுதந்திரமாகத் திரியும் ஒப்பந்தங்கள் மூலமாகத் தன் இராணுவ வலிமையை இந்தியாவுக்குள் நுழைக்கிறது.

விமான நிலையங்கள் மன்மோகன் சிங் ஆட்சியில் தனியார் மயமாக்கப்பட்டன.

உலகின் மிகப்பெரிய ரயில்வேயான இந்திய ரயில்வேயைத் தனியார் மயமாக்க அழுத்தம் தருகிறது.

தொலைபேசி, நிதி நிறுவனங்கள், போக்குவரத்து, இராணுவ இறக்குமதியென பன்னாட்டு நிறுவனங்களால் சராசரி இந்தியனின் அன்றாட வாழ்க்கை நடத்தப்படும் நிலைமை, அந்நிய முதலீடு, வளர்ச்சியென்ற பெயரில் அமெரிக்கா புகுத்துகிறது.

இது நவீன காலனி ஆதிக்கத்துக்கான முன்னோட்டம். சந்தனக் காடுகளை சாம்பல்மேடுகளாக்குவது அமெரிக்காவின் வழக்கமென்று பல வரலாற்றுச் சான்றுகளை முன்பத்திகளில் பார்த்தோம். அமெரிக்க ஆட்சியாளர்கள் நவீன காலனி ஆதிக்கத்தின் மெசையாக்கள். அமெரிக்க உளவு நிறுவனம் பன்னாட்டு நிறுவனங்களின் இரகசியப் போர்ப்படை.

இந்தியக் கார்ப்பரேட் பெரு வணிகர்களும், ஆட்சியாளர்களும் நிலைபெற வழிவகுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெரும்பான்மை மக்கள் விழித்துக்கொள்ள வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் இந்தியப் பெரும்பான்மை மக்களின் அதிகாரத்தைப் பாதிக்கும். பொருளாதார உரிமைகளை நசுக்கும். இந்தியக் கலாச்சாரத்தை சீரழிக்கும். இந்திய மக்களின் வாழ்வுரிமையை பாதிக்கும்.

பெருவணிகக் கம்பெனிகளின் சர்வாதிகாரத்தின் (CorporateDictatorship) முகமூடிதான் அமெரிக்கப் பாணி ஜனநாயகம். அதை முதலில் இந்திய நடுத்தர வர்க்கம் புரிந்துகொள்ள வேண்டும். corporate Glamour-ல் கரையாமல் எளிய மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளவேண்டும். அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

“இந்திய மக்கள் விழித்துக் கொள்ளாவிடில், இந்தியா பெரும் விலையைத் தர வேண்டியிருக்கும். மக்களின் உரிமைகள் பறிக்கப்படும்போது, மக்கள் எதிர்க்காமல் இருந்தால் அடிமைகளாவார்கள். புரட்சியின் மூலமாகவே தங்கள் உரிமைகளை மீட்க நேரும் (அருந்ததிராய்).

***

**கட்டுரைக்கு உதவியவை:**
**சாம்ராஜ்யம் - ஜான் பெர்கின்ஸ், பேராசிரியர் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம்**
**ரௌடி அரசு - வில்லியம் ப்ளம்.**
**ஜனநாயகம் கொல்கிறது - ஹம்ப்ரி ஹாக்ஸ்லி**
**சில உரைகள் - மைக்கேல் பேரண்டி, யேல் பல்கலைக்கழகம், பல இணையதளங்கள்.**

e-mail : vishnusatya@yahoo.com

# சீனப் பண்பாட்டுப் புரட்சி மீள்பார்வை

சே. கோச்சடை

சீனாவில் மாபெரும் பாட்டாளி வர்க்கப் 'பண்பாட்டுப் புரட்சி' மாவோவால் 1966 மே 16இல் தொடங்கி வைக்கப்பட்டது. அது 1966 முதல் 1976 வரை நடந்த சமூக, அரசியல் இயக்கமாகும். அது சீனப் பொதுவுடைமைக் கட்சியிலிருந்த முதலாளிய, திரிபுவாத, பழமைப் பற்றாளரை வெளியேற்றிவிட்டுப் பொதுவுடைமைக் கருத்தியலைத் தூய்மைப் படுத்துவதாகும். 'முன்னோக்கிய மாபெரும் பாய்ச்சல்' இயக்கம் 1958 முதல் 1962 வரையில் நடந்தது. சீனாவில் தனிஉடைமையை ஒழித்து விட்டு அரசின் நேரடிக் கண்காணிப்பில் நிலத்தில் கூட்டுப் பண்ணைகளும், தொழிற் கூட்டுறவுகளும் நிறுவப்பட்டன. ஊழியர்கள் நேரடியாக அரசிடம் இருந்து சம்பளம் பெற்றனர். ஓரளவுக்கு உணவு உத்தரவாதம் கிடைத்தது.

என்றாலும் வேளாண்மையிலும், தொழிற்சாலை களிலும் வல்லுனர்களின் பங்கு புறக்கணிக்கப் பட்டதால் உற்பத்தி குறைந்ததாகவும், பெரும் பஞ்சம் தலை விரித்தாடியதாகவும், செங்காவலர்களின் பட்டறிவுக் குறைவால் ஏற்பட்ட வன்முறையில் பல லட்சம் பேர் கொல்லப் பட்டதாகவும் தகவல்கள் வருகின்றன. இதனால் மாவோ மீது விமர்சனங்கள் எழுந்தன. கட்சியிலும் ஆட்சியிலும் மாவோவின் செல்வாக்கு சரிந்தது. இழந்த செல்வாக்கை மீட்கவும், திரிபுவாதத்தை முறியடித்துக் கட்சியைத் தூய்மைப் படுத்தவும் கட்சியின் கீழ் மட்டத் தொண்டர்களை வைத்துச் சீனப் பண்பாட்டுப் புரட்சி தொடங்கப் பட்டது. முன்னோக்கிய மாபெரும்பாய்ச்சலுக்குப் பிறகு மாவோ அதிகாரத்துக்குத் திரும்பியதைப் பண்பாட்டுப் புரட்சி குறித்தது.

அது உலகெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. பெருங்குழப்பத்தையும் வன்முறையையும் கட்டவிழ்த்துவிட்டதாகக் கூறி அந்தப் பண்பாட்டுப் புரட்சியை வல்லரசினர் கடுமையாக எதிர்த்தனர். புரட்சியாளர்கள் குன்றின் மேலிட்ட விளக்காகக் கருதி அதை வரவேற்றனர்.

சமூகம், அடிக்கட்டுமானம், மேற்கட்டுமானம் என்ற இரு பெரும் பிரிவுகளால் அமைந்தது என்பதை நாமறிவோம். ஓர் அரசியல் புரட்சி முதலில் அடிக்கட்டுமானமாகிய பொருளியல் அமைப்பில் மாற்றம் கொண்டுவர முயல்கிறது. அது மிகக் கடுமையான பணியாதலால், புரட்சியாளர்கள் முதலில் பொருளாதாரப் போராட்டங்களை முன்னெடுத்து நடத்து கின்றனர். மெய்யியல், கலை, இலக்கியம், கல்வி போன்ற பண்பாட்டுக் கூறுகளின்மீது அதிக அக்கறை காட்டுவதில்லை. எனவே அடிக்கட்டுமானம் மாற்றப்பட்ட சமூகம் பழைய மெய்யியல், அதற்கேற்ற கலை, இலக்கியம், கல்வி போன்ற பண்பாட்டுக் கூறுகளோடு இயங்கும்போது மீண்டும் தனக்கேற்ற பழைய வகைப்பட்ட அடிக்கட்டுமானத்தைக் கொண்டுவர இடையறாது முயல்கிறது. அடிக்கட்டுமானம்தான் மேற்கட்டுமானத்தைத் தீர்மானிக்கிறது என்றாலும் கூட, மேற்கட்டுமானமும் சில நேர்வுகளில் அடிக் கட்டுமானத்தைத் தீர்மானிக்கிறது என்பார் மாவோ. எனவே, புரட்சிக்கு முன்பும், புரட்சியினூடாகவும், புரட்சிக்குப் பின்பும் மேற்கட்டுமானத்தை மாற்ற இடைவிடாமல் முயல வேண்டும்.

ருஷ்யாவில் ஜோசப் ஸ்டாலின் இறந்த பிறகு முதலாளியப்பாதையாளர்கள்வெளிப்படையாக செயல்பட்டனர். அப்போது ஆட்சிக்கு வந்த குருஷ்சேவ் திரிபுவாதியாகி பொருளியல் சீர்திருத்தம் என்ற பெயரில் 1950களில் மார்க்சிய லெனினியத்திலிருந்து தடம் மாறினார்.

சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் 20ஆவது பேராயத்திலிருந்து இம்மாற்றம் வெளிப்படையானது. சீனாவிலும் சீனப் பொதுவுடைமைக் கட்சிக் கருத்தியல் தூய்மையைக் காட்டிலும் உற்பத்தி வல்லமைக்கு *(expertise)* அழுத்தம் கொடுத்தது.

முன்னோக்கிய மாபெரும் பாய்ச்சலுக்குப் பின் லியுஷாவோகியினதும் டெங்சியாவோ பிங்கினதும் கை மேலோங்கியது. அவர்கள் இருவரும் மாவோவுக்கு நெருக்கமாக இருந்தனர். அவர்கள் சீனாவில் குருஷ்சேவின் முகவர்களாக இருந்து, மாவோவுக்கு எதிராக அரசியல் செய்வதாக மாவோ கண்டார். எனவே, உள்நாட்டில் பழமைக்குத் திரும்புவதைத் தடுக்கவும், அரசியல் தலைமையைத் தக்க வைக்கவும் வேண்டியத் தேவை மாவோவுக்கு ஏற்பட்டது. வெளிநாட்டில் திரிபுவாத சோவியத் மேலாதிக்கத்தை எதிர்க்க வேண்டியத் தேவையும் ஏற்பட்டது. அடிமட்ட ஊழியர்களும், மக்களும் இடையறாது திரிபுவாதத்தை எதிர்த்துப் போராடினால்தான் புரட்சி நீடிக்கும் என்று மாவோ கருதினார்.

உடைமை வர்க்கங்கள் சீன அரசை நிலைகுலையச் செய்து உடைமை வர்க்கச் சுரண்டலை மீண்டும் தொடர நகரங்களிலும் சிற்றூர்களிலும் நடக்கும் முயற்சிகளை முறியடிக்க வேண்டியதாயிற்று. உடலுழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையில் உள்ள வெளியை அகற்ற வேண்டியதாயிற்று.

எனவே, மாவோ இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார். மாணவர்களையும், இளைஞர்களையும் சிற்றூர்களுக்குப் போய் வேலை செய்யச் சொன்னார்.

நகர்ப்புறங்களிலிருந்த அதிகாரிகள், உடுப்பில் அழுக்குப் படாமல் வாழ்ந்த அலுவலர்கள், பேராசிரியர்கள், செல்வர்கள் எல்லாரும் உடலுழைப்பின் அருமையை அறியும்பொருட்டுச் சிலகாலம் சிற்றூர்களிலும் உழைப்புக்களங்களிலும் வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப் பட்டனர்.

மக்கள் மனதிலுள்ள கருத்தியலை மாற்றும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக மாவோவின் மனைவி ஜியாங் கிங், சென்இ, நைரோங் யென், க்சூக்சியங்யான் ஆகிய நால்வரின் பொறுப்பில் பண்பாட்டுப் புரட்சி நடத்தப்பட்டது. அவர்கள் 'மாவோவின் பொன்மொழிகள்' என்ற *(Redbook)*சிவப்புநூலை இலட்சக் கணக்கில் அச்சிட்டு வெளியிட்டனர். தமிழிலும் அது வெளியிடப்பட்டது. அவர்களும், செங்காவலரும் மேற்கொண்ட அதி தீவிர நடவடிக்கையால் நாட்டில் குழப்பம் ஏற்பட்டது என்றும், 15லட்சம் பேர் கொல்லப் பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

பண்பாட்டுப் புரட்சியின்போது முதலாளிய நாட்டு ஊடகங்களோ, தலைவர்களோ சீனாவுக்குள் விடப்படவில்லை. ஆனாலும் பண்பாட்டுப் புரட்சி நடந்தபோது அதைப்பற்றி நாளொன்றுக்கு 3 நூல்கள் வெளியானதாகக் கூறப்படுகிறது. வன்முறை வர்க்கப் போராட்டம் வாயிலாகத் திரிபுவாதிகளை அகற்ற நாடெங்கும் 'செங்காவலர்' *(red guards)* குழுக்கள் அமைக்கப் பட்டன. இராணுவம் நகர்ப்புற உழைப்பாளர், பொதுவுடைமைத் தலைமை எங்கணும் இந்த இயக்கம் பரவியது.

எனவே, எல்லாப் பக்கங்களிலும் இராணுவம், நகர்ப்புற உழைப்பாளர், பொதுவுடைமை தலைமை, உழவர்கள் அணி பிரிந்து போராட்டம் நடந்தது.

அரசியல் தலைவர்கள் லியுஷாவோகி, டெங்சியாவோபிங் போன்றவர்களும் மூத்த அதிகாரிகளும் தூக்கி எறியப்பட்டனர். உற்பத்தி 12% குறைந்தது. கோடிக்கணக்கானோர் பாதிக்கப் பட்டனர்.

எனினும் ஏராளமான நகர்ப்புற இளைஞர்களும், அலுவலர்களும் சிற்றூர்களுக்கு அனுப்பப் பட்டனர். 'சிற்றூர்களுக்கு செல்வோம்' இயக்கம் *(Down to countryside movement)* நடந்தது. வரலாற்று சின்னங்களும் பண்பாட்டு, மத வழிபாட்டிடங்களும் சிதைக்கபட்டன என்று மேலைநாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. ஆனால் வழிபாட்டிடங்களை இடிப்பதற்கு எதிராக, அவை நம் உழைப்பால் உருவானவை ஆதலால் பாதுகாக்கப்பட வேண்டும்; ஆனால் உள்ளே இருப்பது கடவுளா இல்லையா என்பதை மக்களே கண்டறியட்டும் என்றார் மாவோ.

மெய்யியல் என்பது மேல்மட்டத் தலைவர்களால் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடியது; அவர்கள் மட்டுமே மெய்யியல் விதிகளை, இயற்கை/சமூக நிகழ்வுகளுக்குப்



பயன்படுத்தித் தீர்வுகாண முடியும் என்று இருந்த நிலையை மாற்றும் வகையில், எளிய சிறுசிறு கட்டுரைகளாக, 'முரண்பாடு பற்றி', 'நடைமுறை பற்றி' 'சரியான கருத்து எங்கிருந்து வருகின்றன', 'நமது படிப்பை சீர் செய்வோம்', 'கம்யூனிஸ்டை அறிமுகம் செய்வது, 'பத்துப் பெரும் உறவுகளைப் பற்றி' போன்றவற்றை மாவோ எழுதினார். இந்த மார்க்சிய மெய்யியலை அன்றாட நிகழ்வுகளுக்கு எப்படி பயன்படுத்துவது என்பதற்கு எடுத்துக்காட்டாக ஒரு சிறு நூல் வெளியிடப்பட்டது. பல துறைகளைச் சேர்ந்த வல்லுநர்களும் எளிய மக்களும் இயங்கியல் ரீதியாக செயல்பட்டதை அந்நூல் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியது. எடுத்துக்காட்டாக, முகவரி சரியாகத் தெரியாத ஓர் அஞ்சலை, மெய்யியலைப் பயன்படுத்தி ஓர் அஞ்சல் ஊழியர் எப்படி உரியவரிடம் சேர்க்கிறார்; ஒரு மருத்துவர் தன் நோயாளிக்கு எப்படி மருத்துவம் பார்க்கிறார்; ஓர் உழவர் எப்படி தன் விளைச்சலைப் பெருக்கினார் என்பதைப் போன்ற அன்றாட முயற்சிகள் அதில் விளக்கப்பட்டிருந்தன. அதைப் படித்துவிட்டு இயக்கத் தோழர்களே நையாண்டி செய்வதும் நடந்தது. ஆனாலும் முதல் முயற்சி என்ற வகையில் அது பாராட்டத் தக்கது. வாழ்க்கையில் எல்லாரும், ஆன்மீகவாதிகள் உட்பட தம்மளவில் பொருள் முதலியராகவே உள்ளனர். ஆனால் அடிப்படை விதிகள் தெரியாது. அதை மேலும் மேலும் வளர்த்து அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்த வேண்டுமென்று விரும்பிய அந்நூலாசிரியரின் ஆர்வத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. மெய்யியலை அன்றாடப் பொருளியல், அரசியல், வாழ்வியல் நிகழ்ச்சிகளில் பயன்படுத்தாத காரணத்தால், புரட்சி முடிந்தவுடன் எல்லாம் முடிந்துவிட்டது என நினைத்து மக்களும் ஊழியர்களும் ஓய்வு எடுக்கிற நிலையில்தான் திரிபுவாதம் தலை தூக்கியது. இதை முறியடிக்கவே மூளை உழைப்பாளர்கள் சிற்றூர்களுக்குப் போய் உடலுழைப்பு செய்தால்தான் மனிதரை மனிதர் சமமாக மதித்து நடப்பார்கள் என்பதற்காகவே "சிற்றூர்களுக்குப் போங்கள் இயக்கம்' நடந்தது. கல்வி, பொருளியல் திட்டங்கள், மருத்துவம், கலை போன்றவற்றிலெல்லாம் திட்டமிடுபவர்கள் எளிய மக்களின் துன்ப துயரங்களை அறிந்து உணர்ந்தால்தான் சரியாக திட்டமிட முடியும். நம் தலைவர்கள் எளிய மக்களுக்கானவர்களாக இருந்திருப்பின், நம் அரசியல் தலைவர்கள் மக்களிடம் கலந்து பழகியிருப்பின், செல்வர்களுக்கும், அதிகாரிகளுக்குமுதவிய பணமதிப்பு நீக்கம், சரக்கு மற்றும் சேவை வரி போன்ற மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்திருக்க மாட்டார்கள் அல்லவா? சீனப் பண்பாட்டு புரட்சியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது ஏராளமாக உள்ளது. புரட்சி என்பது பொருளியல் மாற்றம் மட்டுமில்லை, தொழிற்சாலைகளைக் கைப்பற்றி தொழிலாளர் நிர்வாகத்தின்கீழ் உற்பத்தி செய்வதுமட்டுமில்லை; உற்பத்திப் பொருட்களைப் பங்கிடுவது முதல் வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் மக்களிடையே சமத்துவத்தை நிலைநாட்டுவது புரட்சியின் கடமையாகும். இதற்காக அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதாகும்.

புரட்சிக் கால கட்டத்தில் மட்டுமின்றி முன்னும் பின்னும், உழவர், உழைப்பாளர், ஆசிரியர், ஆராய்ச்சியாளர், நடிகர்கள், பாடகர்கள், எழுத்தாளர்கள், ஓவியர், சிற்பிகள் போன்ற கலைஞர்கள் எனப் பல துறைகளை சேர்ந்த எல்லா தரப்பாரும் சேர்ந்ததே சமூகமாகும்.

இவர்கள் எல்லாரும் ஒன்றுபோலச் சிந்திக்க மாட்டார்கள்; இவர்களிடம் காணப்படும் முற்போக்குக் கூறுகளைப் பாராட்டி வளர்த்தெடுக்க வேண்டும்.

பிற்போக்குக் கூறுகளைக் களைய முயற்சி எடுக்க வேண்டும். இதனால்தான் மாவோ 'நூறு பூக்கள் மலரட்டும்' என்றார். மாவோவை சீனாவின் ஸ்டாலின் என்று சீன மேல்மட்ட அரசியலைப் பற்றிய வல்லுநரான விஸ்கான்சின் மாடிசன் பல்கலைக்கழகத்தின் எட்வர்டு ஃபிரீட்மேன் வர்ணிக்கிறார். மாவோ உலக வல்லரசு எதிர்ப்பு இயக்கத்தை வழிநடத்த விரும்பியதால், குருஷ்சேவை மதிப்பிழக்க வைக்க வேண்டியிருந்ததென்கிறார். மாவோவின் அயல்நாட்டுக் கொள்கைகள் சோவியத், வட அமெரிக்க வல்லரசிய எதிர்ப்பாக இருந்தது. எனவே சோவியத் ஒன்றிய எதிர்ப்பாளர்களான ஈரானின் ஷா, சிலியின் அகஸ்டோ பினோசெட், அங்கோலாவின் ஹோல்டன் ராபர்ட்டோ, கம்போடியாவின் போல்பாட் ஆகியோர் சீனாவின் நண்பர்களாகப் பார்க்கப்பட்டனர்.

1968இல் சோவியத் ஒன்றியம் செக்கோஸ்லாவியா மீது படையெடுத்தபோது சீனாவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்குமான பிளவு முடிவுக்கு வந்தது. பிரழ்னேவ் ஆட்சிக்கு வந்தபிறகு அவர் எல்லா சோசலிச நாடுகளையும் வட அமெரிக்காவை எதிர்க்க அணி திரட்டும் கொள்கையைக் கடைபிடித்தார். பின்னர் சீனா படிப்படியாக, வட அமெரிக்காவைவிட சோவியத் ஒன்றியமே பெரிய அச்சுறுத்தலாக உள்ளது என்று கருதியது. சோவியத்தை சமூக வல்லரசு என்று வரையறுத்து, வடஅமெரிக்கா அடுத்தநிலை வல்லரசியம், வளரும்/ஏழை நாடுகள் மூன்றாவது உலகம் என்றனர். இது மூன்றுலகக் கோட்பாடு எனப்பட்டது. வடஅமெரிக்காவிடமிருந்தும், சோவியத் ஒன்றியத்திடமிருந்தும் விலகி இருந்த சீனாவுக்கு அல்பேனியா, ரோமானியா போன்ற ஒரு சில சோசலிசக் கூட்டாளிகளே இருந்தனர்.

உலகில் பொதுவுடைமை வீழ்த்தப்படலாம் என்று மாவோ கருதினார்.

எனவே திரிபுவாத எதிர்ப்பைப் பலமாகக் கட்டினார். இது உலகெங்கும் உள்ள இடதுசாரிகளிடையே பண்பாட்டுப் புரட்சி அதிர்வலைகளை ஏற்படுத்தியது. மாவோ சோவியத் ஒன்றியம் உலகெங்கும் நடந்த புரட்சிப் போராட்டங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டதாகக் கூறினார். சீனா, வியத்னாம், ஆப்பிரிக்கா, பாலஸ்தீன விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாக இருந்தது. உலகளாவிய புரட்சி என்ற கருத்தை மாவோ முன் வைத்தார். நாட்டுப்புறங்களில் முதலில் புரட்சி நடந்து, பிறகு நகர்ப் புறங்களில் முடிவுறும் என்றார்.

பண்பாட்டுப் புரட்சி நடந்தபோது ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன், அமெரிக்கா போன்ற நட்பு நாடுகளின் சார்பாளர்கள் மட்டுமே பீகிங்கிற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். பண்பாட்டுப் புரட்சி புரட்சிகர பன்னாட்டுத் திசை வழியை வலுப்படுத்தியது. அந்த நேரத்தில் சீனா அயலுறவுக் கொள்கையை வரையறுத்தது.

இக்கருத்தியல் தூய்மைக் கொள்கையால் சீனாவின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டு, நலன்கள் பாதிக்கப்பட்டன. இதனால் சீனா மற்ற நாடுகளிலிருந்து தனிமைப்பட்டது.

நால்வர்குழு சோவியத் ஒன்றியத்தையும் வட அமெரிக்காவையும் ஆராய்ந்து ஓர் அறிக்கையைத் தந்தது. அதில் சோவியத் ஒன்றியமே மிகப் பெரிய எதிரி என்று குறிப்பிட்டிருந்தது. எனவே சோவியத்தை எதிர்க்க சீன – வட அமெரிக்கக் கூட்டணி உருவாகும் நிலை வந்தது. 1970களின் தொடக்கத்தில் பிங்பாங் விளையாட்டைத் தொடர்ந்து வட அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹென்றி கீசிஞ்சரும், பிறகு ரிச்சர்டு நிக்சனும் சீனாவுக்குச் சென்றனர். இது சீனாவின் பன்னாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட தலைகீழ் மாற்றத்தைக் காட்டுகிறது.

சீன பண்பாட்டுப் புரட்சி நடந்த காலத்தில் மாவோவின் மேற்கோள்கள் அடங்கிய கையடக்கப் பதிப்பு ஏராளமாக வெளியிடப்பட்டது.

அது செந்நூல் *(The Red Book)* என்றழைக்கப் பட்டது. கீழ்மட்ட ஊழியர்களுக்கு அது வழிகாட்டியாக இருந்தாலும்கூட, அதுமட்டுமே போதும் என்று மாவோ சொல்லவில்லை. 'நமது படிப்பைச் சீர் செய்வோம்', 'கம்யூனிஸ்டை அறிமுகம் செய்வது' போன்ற கட்டுரைகள் மேலும் பல நூல்களைத் தொடர்ந்து படிக்க வேண்டியதின் இன்றியமையாமையை விளக்கு கின்றன. ஆனால் மாவோவுக்குக் கீழிருந்த

தலைவர்கள், குறிப்பாகப் பண்பாட்டுப் புரட்சிக்குப் பொறுப்பேற்ற நால்வர் மெய்யியல் அறிவை வளர்ப்பதற்கு மாறாக அதிதீவிர நடைமுறையை மேற்கொண்டதால், பேரிழப்பு நேர்ந்துவிட்டது. இருப்பினும், முதலாளிய அறிஞர்களின் கணிப்பை மீறி சீனா இன்றைக்குப் பல துறைகளிலும் சிறந்து விளங்குகிறது. ஆனால் டெங்சியாவோபிங், மாவோ மறைவுக்குப் பிறகு முதலாளிய சீர்திருத்தங்களை மேற்கொண்டபோது, 'பூனை கருப்பாயிருந்தால் என்ன, வெள்ளையாக இருந்தால் என்ன? எலியைப் பிடித்தால் சரிதான்.' என்றார்.

அன்று தொடங்கிய திசைவிலகல் இன்றைக்கு அதை ஒரு முதலாளிய நாடாக, தன் பொருளியல் நலன்களுக்காகத் தேசிய இன உரிமைப் போராட்டங்களைக் கடுமையாக ஒடுக்கும் இலங்கை போன்ற நாடுகளுக்கு ஆதரவாகப் போகும் நாடாக மாற்றிவிட்டது..

மாவோ சீனப் புரட்சியை அந்நாட்டு வரலாறோடு தொடர்புபடுத்தி அதன் நீட்சியாகவே கண்டார். அந்த நாட்டில் அவருக்கு முன்பு இருந்த மெய்யியல்களைக் கற்று அவற்றில் எடுக்க வேண்டியதை எடுக்கவும், தள்ள வேண்டியதைத் தள்ளவும் செய்தார். தன் கட்டுரைகளில் மேற்கோள்களாகச் சீன மெய்யியலார் கன்பூசியஸ் போன்றவர்களின் கருத்துகளை எடுத்தாண்டார். அந்நாட்டு இலக்கியங்களையும் தொன்மங்களையும் பொருத்தமாகக் கையாண்டார்.

ஆனால் நம் நாட்டுப் பொதுவுடைமையாளர்கள் ருஷ்ய, சீன இலக்கியங்களை அப்படியே எடுத்தாண்டனர். அவற்றைக் கற்று, அதன் நீட்சியாக அவற்றை எப்படி செயலூக்கமுடன் பொருத்துவது என்று சிந்திக்கவில்லை. நம் தமிழ் மரபிலும், சமஸ்கிருத மரபிலும் ஆழ்ந்து அகன்ற ஏரண(தர்க்க) நூல்கள் ஏராளமாக இருந்தும் அவற்றை ஆழ்ந்து கற்று வளர்க்கவில்லை.

ஒரு சிறு எடுத்துக்காட்டைக் காண்போம். 'நில்லா உலகத்தை நிலையினை என்றுணரும் புல்லறிவாண்மை கடை' என்ற திருக்குறளில் நில்லா உலகம் என்பது உலகம் இயங்கிக்கொண்டிருப்பது, மாறிக் கொண்டிருப்பது என்பதைக் குறிக்கிறது. இதைப் போல, 'உத்தாலகர் கதை' பொருளே அடிப்படை என்று காட்டுகிறது. ஆக இயங்கியலும் பொருள் முதலியலும் நமக்கு அயலானவையோ, அறியாதவையோ அல்ல. அதைச் சரியாகப் பொருத்திச் சமூகத்துக்குப் பயன்படுத்த இங்கொரு காரல் மார்க்ஸ் தோன்றவில்லை.

'வரலாற்றில் அறிவியல்' என்ற நூலை அறிஞர் ஜே. டி. பர்னால் எழுதினார்.

இதைப் போன்று 'தமிழ் வரலாற்றில் அறிவியல்' என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நூலாக வெளிவந்தால், தமிழரிடையே இயங்கியற் பொருள் முதலியலைக் கொண்டு செல்வது எளிதாக இருக்கும். 'தமிழில் இயங்கியல்' என்றொரு சிறு நூலை புலவர் ஆதி எழுதித் தொடங்கி வைத்தார். அதை விரித்து எழுதி நூலாக்கும் முன்பே அவர் இறந்தது பேரிழப்பாகும்.

நக்சல்பாரி எழுச்சி நாட்களில், கனுசன்யால், தீபக் பிஸ்வாஸ், காடம் மாலிக், கோகென் மசூம்தார் ஆகிய நால்வரும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் மாவோவை சந்திக்க சீனாவுக்கு நடந்தே சென்றனர். அங்கே 3 மாதம் புரட்சியைப் படித்தபிறகு 1967 திசம்பரில் மாவோவைச் சந்தித்தனர்.

அவர் அப்போது "சீனப் பண்பாட்டுப் புரட்சி சீனாவுக்கு மட்டுமே உரித்தானது. பிற நாடுகளுக்கு அல்ல. " என்று கூறினாராம். சிறிது நேர அமைதிக்குப் பின்னர் "உங்கள் படிப்பு எந்த அளவில் உள்ளது?" என்று வினவினார். மேலும் அவர் உடனடியாக," நீங்கள் சீனாவில் கற்றது எதுவாயினும் அதை மறந்துவிட்டு உங்கள் நாட்டின் நிலைமைக்கு ஏற்பச் செயல்படுங்கள்." எனக் கூறினார்" என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மாவோ பண்பாட்டு புரட்சி முடிவுக்கு வந்ததாக 1969இல் அறிவித்தார். எனினும் ராணுவத்தலைவர் லின்பியாவோ 1971இல் இறக்கும்வரை அது நீடித்தது. மாவோ இறந்தபிறகு நால்வர்க் குழு 1976இல் ஒடுக்கப்பட்ட பிறகே, முடிவுக்கு வந்தது. டெங்சியாவோபிங் தொடங்கிய 'பொருளியல் சீர்திருத்தங்கள்' படிப்படியாகப் பண்பாட்டுப் புரட்சியுடன் சேர்த்து மாவோ கொள்கைகளையும் புறக்கணித்தன. 1981இல் "பண்பாட்டுப் புரட்சி" மக்களுக்கும் கட்சிக்கும் மிகமிக மோசமான பின்னடைவையும், மிக மிக பெரிய இழப்புகளையும் சந்திக்கக் காரணமாக இருந்ததென்று சீனப் பொதுவுடைமைக் கட்சி அறிவித்தது.

நக்சல்பாரிப் போராட்டத்தை 'வசந்தத்தின் இடிமுழக்கம்' என்று சீனப் பொதுவுடைமைக் கட்சி கூறியது. 'சீனாவின் போராட்ட அனுபவத்தை ஒத்ததாக நக்சல்பாரிப் போராட்டம் இருப்பதால் சீனப் பொதுவுடைமைக் கட்சி நக்சல்பாரிப் போராட்டத்தை ஆதரிப்பதாக' மாசேதுங் கூறினார். ஆனால் சாருமஜூம்தார் உட்பட தலைவர்கள் "சீனாவின் தலைவர் எம் தலைவர்", "சீனாவின் பாதை எம் பாதை" என எந்திரகதியில் முழங்கினர். இதை ஒரு பிரிவினர் அப்போதே எதிர்த்தனர். நம் வரலாற்றை அறிந்து, அதன் தொடர்ச்சியாக, மண்வாசனையோடு சொல்லும்போது அது அடித்தட்டு மக்களிடம் எளிதில் போய் சேரும். இதையே சிலர் 'மண்ணுக்கேற்ற மார்க்சியம்' என்பர். ஒவ்வொரு நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ப மார்க்சிய வழியில் மண்ணையும் மக்களையும் ஆய்வு செய்து முடிவு காண்பது என்பதே அதன் பொருள். இதைத்தான் மாவோவும் வலியுறுத்தினார்.

ஆனால் நம் நாட்டிலுள்ள அரசியல், சமூக, பொருளியல் நிலைமைகளை ஆராயாமல், மாவோ வகுத்த 'வர்க்கங்களைப் பற்றி ஆராய்வை' அப்படியே நம் நாட்டுக்குரியதாகக் கொண்டு, நிலப்பிரபு, பணக்கார உழவர், ஏழை உழவர், கூலி உழவர் என்று வகைப்படுத்தியது தவறு, நம் நாட்டிலும் சரி. தமிழகத்திலும் சரி. எல்லாப் பகுதியிலும் ஒரே மாதிரி வர்க்கப் பிரிவைப் பார்க்க முடியாது. அப்படிப் பார்த்தது தவறாகும்.

இதைப்போலத் துறைதோறும் நம் வாழ்விலும், வரலாற்றிலும் உள்ள முற்போக்குக் கூறுகளைக் கண்டறிவதும், அதைப் பிற்கால இயற்கை/சமூக அறிவியலோடு பொருத்துவதும் இக்காலக் கடமையாகிறது. இதையும் தமிழர் மெய்யியல், ஏரணவியல் (தர்க்கவியல்) போன்றவற்றை அடிப்படை ஊழியர்கள், பொதுமக்கள் வரையிலும் கொண்டு சேர்ப்பதும் கடமையாகும். இதுவே சீனப் பண்பாட்டுப் புரட்சியிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்.

இப்போதுள்ளவற்றில் மற்ற எந்தக் கட்சியைக் காட்டிலும் பாரதிய சனதாக் கட்சி பண்பாட்டுப் புரட்சியின் இன்றியமையாமையை நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறது. நெடுங்காலத்துக்கு




முன்பே இந்துமகாசன சபை, ஆர். எஸ். எஸ். போன்ற அமைப்புகள் இந்துக்களிடையே பண்பாட்டுத் தளத்தில் வேலை செய்தன; இப்போதும்கூட வார வழிபாட்டு மன்றம், கோவில் பராமரிப்புக் குழுக்கள் போன்ற ஏராளமான அமைப்புகளின் வாயிலாகச் சமூகத்தின் பல்வேறு தளங்களிலுள்ள இந்து மக்களிடையே வேலை செய்து மதவெறியைப் பரப்பி வருகின்றன. இதனால் எளிதாக ஆட்சியைப் பிடித்துவிட்டதை அறியலாம். ஆனால், திராவிடர்கழகம், மார்க்சிய அமைப்புகள் போன்றவை மதவெறிக்கு எதிராகப் பரப்புரை மேற்கொண்டாலும்கூட, அக்கட்சிகளிலுள்ள பலர் மதச் சடங்குகளைக் கடைபிடிப்பதையும், மதக் குறியீடுகளை அணிந்துகொள்ளுவதையும், சிறுபான்மை மதங்களுக்கும் தலித்துகளுக்கும் எதிராகக் கருத்து கொண்டிருப்பதையும் காண முடிகிறது.

e-mail : kochadai@yahoo.com

# இடையறாது தாக்கி மனவுறுதியைக் குலைக்கும் நவீன ஊடகங்கள்

பிரயென் கேலகர்

**தமிழில் :** சத்திய நாராயணன்

மக்களாட்சியையும், சுய முடிவுகளையும் நவீன கவனயீர்ப்புப் பொருளியல் திசைதிருப்புகிறது

ஆக்ஸ்போர்ட் பல்கலையின் மின்னணு அறத்துறையின் முனைவர் மேற்படிப்பில் இருக்கும் ஜேம்ஸ் வில்லியம்ஸூக்கு கூகிளில் வேலை செய்த போது ஏதோ ஒரு தருணத்தில் 'இறைவா, நான் என்ன செய்துவிட்டேன்' என்று அஞ்சுமளவுக்கு இல்லாவிடினும் சிலவேளைகளில் ஏதோவொன்று சரியன்று என்று தோன்றிக்கொண்டிருந்தது.

2006ல் கூகிள் சியாட்டல் அலுவலகத்தில் சேர்ந்து விளம்பர மென்பொருட்களையும் கருவிகளையும் உருவாக்கியதற்காக 'ஃபவுண்டர்ஸ் அவார்ட்' எனப்படும் கூகிளின் உயரிய விருதைப்பெற்றவர் வில்லியம்ஸ். பின்பு 2012 வாக்கில் அவருக்கே இம் மென்பொருட்கள் மிகவும் மனவுளைச்சலைக் கொடுப்பதாகத் தோன்றியது. என்னிடம் அவர் பேசுகையில், 'புதிய தொழில்நுட்பத் தளங்கள், இணையத்துக்கு முன்பான பழைய விளம்பர நுட்பங்களையே கையாண்டது. அதாவது எவ்வளவுக்கு எவ்வளவு உங்கள் கவனத்தைத் தன்பக்கம் திருப்ப முடியுமோ அவ்வளவு திருப்புவதே அதன் குறிக்கோள்' என்கிறார்.




2011ல் தன் விருப்பத் தேடலான இலக்கியம் மற்றும் அரசியல்தத்துவத்தில் (ஜார்ஜ் ஆர்வெலின் 1984 மற்றும் ஆல்டஸ் ஹக்ஸ்லியின் ப்ரேவ் நியூ வேர்ல்ட் மிக விருப்பமான நூல்கள்) கவனம் செலுத்த ஆசைகொண்டு, கூகிள் இலண்டன் அலுவலகத்தில் வேலை பாத்துக்கொண்டே ஆக்ஸ்போர்ட் பல்கலையில் சேர்ந்தார். அவர் மேலும், 'தொழில்நுட்பம் நம் மனங்களை ஆக்கிரமிப்பதை நிறுத்த வேண்டும்' என்பதையே ஒரு இயக்கமாக்க விரும்பி *Time Well Spent* எனும் நிறுவனத்தையும் ஆரம்பித்து இருக்கிறார். 'மோமண்ட்' எனும் செயலியுடன் இணைந்து 200,000 பேர்களிடம், 'எவ்வளவு நேரம் செலவழிக்கிறார்கள்' என்ற அடிப்படைக்கேள்வியுடன் தாங்கள் பயன்படுத்தும் செயலிகளை வரிசைப்படுத்த ஒரு வாக்கெடுப்பு நிகழ்த்தப்பட்டது. அதிலிருந்து ஒரு அவதானிப்பாக 'எவ்வளவு அதிகம் ஒரு செயலியைப் பயன்படுத்துகிறார்களோ அவ்வளவு தூரம் அச்செயலியினால் மகிழ்ச்சியை இழப்பதாகப் பதிவு செய்திருக்கிறார்கள்.' கவனச்சிதைவு என்பது ஒரு சிறிய பிரச்சனை இங்கு, மேலும் ஆழமாக வேறு என்னமோ நிகழ்கிறது, என்கிறார். அதற்காகவே இங்கு பிஎச்டி செய்ய வந்தேன்', என்கிறார்.

சமீபத்தில் வில்லியம்ஸ், நைன் டாட்ஸ் பரிசையும் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்துக்காக புத்தகம் ஒன்று எழுதவும் ஒப்பந்தமாயிருக்கிறார்.

நாட்டிலஸ், நவீன கவனயீர்ப்புசார் வர்த்தகத்தின் சூழ்ச்சிகளைக் குறித்து, வில்லியம்சுடன் உரையாடியது:

**ஜனநாயகத்தை இணையமும் சமூக(வலைத்தள) ஊடகங்களும் எவ்வாறு அச்சுறுத்துகின்றன?**

ஜனநாயகம் சில அடிப்படைத்திறன்களை வலியுறுத்துகிறது; கொள்கை சார்ந்த ஆழமான விவாதங்கள், மாற்றுத்தரப்புகளை புரிந்துகொள்ளல் மற்றும் தெளிவாக முன்வைக்கப்படும் விவாத முடிவுகள். இதுவே அரசாங்கத்தின் அதிகாரத்தையும், மக்களின் விருப்பத்தேவைகளையும் உறுதி செய்கிறது. ஒருவகையில் பார்த்தால் இப்போது இத்தொழில்நுட்பங்கள் மக்களுக்கு உண்மையில் என்ன தேவை என்று உணரும் தன்மையையே குலைத்து, இடையறாத சமூக ஊடகத்தாக்குதல் மூலம் செயலிழக்கவைக்கிறது. நம் வாழ்க்கையின் இயங்குதளங்களாக செல்பேசிகள் இருக்கின்றன. நம்மை, அவற்றைப் பார்த்துக்கொண்டும், சொடுக்கிக்கொண்டுமே இருக்க வைக்கின்றது. ஒரு ஆராய்ச்சிமுடிவின்படி இடையறாத கவனச்சிதறல் மனிதர்களின் ஐ. க்யூ எனப்படும் சிந்தனைத்திறன் அளவீடு பத்து புள்ளிகள் குறைந்துவிடுவதாக அறிகிறோம்.

இது தொடர்ச்சியாகப் போதை மருந்து உட்கொண்டு குறையும் அறிவுத்திறனை விட இரண்டு மடங்கு. வேறு சில அறிவுசார் பிரச்சனைகளும் இருக்கின்றன. போலிச்செய்திகள் மட்டுமன்றி ஒரே சமூகத்தில் ஒரே தெருவில் இரு வேறு நிதர்சனங்கள் உணரப்படுகிறது. ஜனநாயகம் திறனுடன் இயங்க பொதுவான நிலைப்பாடுகளை எடுக்க இது பெருந்தடையாக ஆகிவிடுகிறது.

**செய்தி ஊடகங்களை இத்தொழில்நுட்பங்கள் எவ்வாறு பாதிக்கின்றது?**

ஒரு பூகம்பம் போல, அதிவிரைவாக, தகவல் வரவுக்கும் ஊன்றிக் கவனித்தலுக்கும் இடையிலான தலைகீழ்விகிதத்தை நாம் கடந்து விட்டோம். சமுதாயத்தில் உள்ள பெரும்பாலான அமைப்புகள், செய்தி, விளம்பரம், மற்றும், சட்டங்களைப் பாதுகாக்கும் அமைப்புகளும், குறைந்த தகவல்கள் கொண்ட அல்லது பற்றாக்குறையான சூழலை எதிர்பார்த்தே உருவாக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவின் முதல் சட்டத்திருத்தம், பேச்சு சுதந்திரத்தை பாதுகாக்க உருவாக்கப்பட்டது, ஆனால் அது உங்கள் கவனத்திறன் பாதுகாப்புக்கு உறுதி அளிக்கவில்லை. அது எழுதப்பட்ட நேரத்தில் மக்களின் கவனத்தைத் தடுக்க எதுவும் உண்மையில் இல்லை. தகவல் பற்றாக்குறையான சூழ்நிலையில், செய்தித்தாளின் கடமை என்பது தகவல் கொண்டுவருவது மட்டுமே அதன் கடமையாக இருந்தது. அக்காலத்தில் தகவல்கள் குறைவாக இருந்ததே பிரச்சனையாக இருந்தது. ஆனால் இன்று அதற்கு நேர்மாறாக தகவல்கள் மிக அதிகமாக இருக்கின்றன.

மீண்டும் மீண்டும் ஒரே மாதிரி தினமும் திசைதிருப்பப்பட்டால் திசைதிரும்பிய வாரங்களும் மாதங்களாக நீண்டுவிடுகின்றன.

**இந்த நிலைமை எவ்வாறு செய்தித்தாள்களின் பங்களிப்பை மாற்றுகிறது?**

பத்திரிகையின் பங்கு, செய்திகளை வடிகட்டி, மிக முக்கியமாக நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்களை அளிக்கவேண்டும். ஒரு நல்ல கட்டுரை என்பது அதிக அளவில் சொடுக்கப்பட்டு படிக்கப்பட்ட கட்டுரையாக ஒரு வணிகம்போல் பத்திரிகைகள் செயல் பட்டால், கருத ஆரம்பித்தால் நமக்கு பரபரப்புத் தலைப்புகளே கிடைக்கும், ஏனெனில் இன்று வணிக நிர்ப்பந்தங்களாக இந்த அளவீடுகள்தான் இருக்கின்றன. தகவல் ஏராளமாக இருக்கும்போது, கவனக்குறைவு ஏற்படுகிறது. விளம்பரத்துக்கான இந்த அளவீடு எல்லோரையும் கீழே இழுத்துச்செல்கிறது, உயரிய, தரமான செய்திநிறுவனங்கள்கூட இந்தப் புதிய அளவீடுகளோடு போட்டியிட வேண்டி இருக்கிறது. இதனால், ஒவ்வொரு வாரமும் இணையத்தில் பெருஞ்சீற்றங்கள் தொடர்ச்சியாக உருவானவண்ணம் உள்ளது. சீற்றம் என்பது நமக்கு ஒரு அவசியமான தேவையாக இருக்கிறது, ஏனென்றால் அது நமக்கு தேவையான பலவகையான உளவியல் தேவைகளை பூர்த்தி செய்கிறது. நம் கோபம் நம்மை முன்னோக்கி நகர்த்த உதவுவதற்கு பயன்படலாம், ஆனால் பெரும்பாலும், நம்மை மேலும் கட்டுரைகளைச் சொடுக்கி, மேலும் மேம்போக்காக வாசித்து, தட்டச்சு செய்ய வைக்கிறது.. இணையப் பயன்பாட்டினைப் பற்றிய முதல் புத்தகங்களில் ஒன்றின் பெயர், *Don't Make me Think.* மூளையின் பகுத்து அறியும் திறன் மங்கவைக்கப்பட்டு மனக்கிளர்ச்சியடைய வைக்கும் பகுதிக்கே அதிகத் தீனி போடப்படுகிறது.

**ட்ரீஸ்டன் ஹாரிசுடன் இணைந்து *Time Well Spent* நிறுவனத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். 2 பில்லியன் மக்கட்தொகையை அரசாங்கங்களையும் மத நிறுவனங்களையும் விட மிகப்பெரிய நிறுவனமாக**

**தொழில்நுட்பம் வழிநடத்துகிறது என்கிறார் அவர். அதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா?**

நான் அக்கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். மக்கள் இத்தனை ஆர்வமாக ஒன்றின் மீது இவ்வளவு நேரத்தையும் கவனத்தையும் செலவழிக்கும் அளவுக்கு நவீன செல்பேசிகளையும் சமூக ஊடகங்களையும் ஒப்பிடத்தக்க ஒரு அரசாங்க அல்லது மத அமைப்பு போன்ற முறையை எனக்குத் தெரியாது. அதுவும் இத்தனை அதிக வீச்சிலும், பயன்பாட்டிலுமாக வேறெதுவும் ஆதிக்கம் செலுத்துவதில்லை. அதுவும் மக்களிடம் மிக ஆழமாக நெருக்கமாக ஆதிக்கம் செலுத்துகிறது, அரசாங்கத்தின் அல்லது மத அமைப்புமுறைகளை விட மக்களின் கவனத்திற்கு நெருக்கமாக உள்ளது. ஒரு வேதிவினைபோல ஒருவகை போதை மருந்து போன்றது என்று நான் கருதுகிறேன். எடுத்துக்காட்டாக, *Snapchat™ Snapstreak* என்று ஒன்று இருக்கிறது, "எத்தனை நாட்கள் தொடர்ச்சியாக யாரோ ஒரு நண்பருடன் புகைப்படம் எடுத்திருக்கிறீர்கள்" என்று வினவுகிறது. இதன்மூலம் நீங்கள் உங்கள் சமூக இருப்பை உங்கள் நட்பிடம் உறுதி செய்யக் கோருகிறது. இந்த வகையான அளவீடுகள் பகுத்தறிவற்ற சார்புகள் பல்லாயிரம் உருவாக்கப்படுகின்றன. சமூக ஒப்பீடு என்பது மிகப் பெரிய தாக்கத்தை உண்டாக்குவது. நிர் எயல் என்பவர், தள வடிவமைப்பாளர்களுக்கு ஒரு பயனாளியை எவ்வாறு எப்படி ஈர்ப்பது என்று கற்பிக்க, *Hooked* என்றொரு புத்தகத்தையே எழுதியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

**உங்கள் கட்டுரையில் ஜனநாயகத்துக்கு தேவையான மூன்று வகையான கவனத்தை இத்தொழில்நுட்பங்கள் சிதைப்பதாக குறிப்பிட்டு இருக்கிறீர்கள். அவை எவை?**

இது ஒரு கருத்தாக்கம்தான். அறிவியல் பூர்வமானதல்ல. முதலாவது அறிவாற்றல் குறித்து ஆராய்வோர், நம் கவனம் எவ்வாறு புலனுணர்வுகளால் நிகழ்கிறது என்பதைப் பற்றி. இதை நான் கவனத்தின் 'சுயஒளி' என்று கூறுவேன். என் சூழலில் நிகழ்வதை அறிந்து கொண்டு வினையாற்றுவது. இரண்டாவது 'நட்சத்திர ஒளி'. இது நான் என்ன ஆக வேண்டும் என்று விரும்புகிறேன் என்பதைக் குறித்த கவனம். வேறெதையோ அடைவதற்கான வழிகாட்டியாக இல்லாமல் நேரடியான குறிக்கோள். நீண்ட கால நேரடியான குறிக்கோள் குறித்த கவனம். மேலும் அதைநோக்கி நம் நகர்தல்கள் எவ்வாறு நிகழ்கின்றன என் இன்றைய சூழலில் அதை நோக்கிய பயணத்தில் உயர்ந்த அல்லது நீண்ட கால குறிக்கோள் குறித்து நாம் என்ன செய்கிறோம் என்பதைக் குறித்தானது.

மூன்றாவது, 'பகல் ஒளி' தத்துவவாதி ஹேரி ப்ராங்கபர்ட் சொல்வதைப்போல், தன் தேவைக்கு, என்ன தேவை என்று அறிவது அதாவது சுய அறிதலறிவு. அடிப்படையில், 'சுய ஒளி' யும்'நட்சத்திர ஒளி'யும் ஏதாவது ஒரு குறிக்கோளை நோக்கி, ஒரு முடிவை நோக்கி, ஒரு விழுமியத்தை அடைய, பகலொளி என்பது அந்த குறிக்கோள் என்ன, முடிவு என்ன என்று அறுதியிட்டு முடிவு செய்ய வைப்பது.

**நம் 'சுயஒளி'த் தருணங்களை எவ்வாறு இத்தொழில்நுட்பங்கள் வசப்படுத்திச் சிதைக்கின்றன என்று புரிகிறது. ஆனால் மற்ற இரண்டை எவ்வாறு பாதிக்கிறது?**

ஒருவகையில், இவை நமக்கு கெட்டபழக்கங் களை உருவாக்குகின்றன என்று நினைக்கிறேன். ஒவ்வொரு நாளும் ஒரே வகையில் நீங்கள் சிறிது சிறிதாகக் கவனத்தை திசை திருப்பினால், திசை திரும்புதல் வாரங்களாக, மாதங்களாக நீடிக்கிறது. திரும்பத்திரும்ப செய்வதாலோ அல்லது வேறெதோ ஒரு காரணத்தாலோ நாம் அடைய வேண்டிய நீண்ட கால, 'நட்சத்திர ஒளியை' அடையாத ஒரு பாதிப்பை அல்லது எதை அடைய வேண்டும் என்று நினைக்கிறோமோ அதை அடையாமல் அல்லது அதை வலியுறுத்தும் விதமாகக்கூட இல்லாமல் மறக்கடிக்கப்பட்டுவிடுகிறோம். இது மிகக் கீழ்மையானக் குறிக்கோள்களை சிறுமையான விழுமியங்களையே ஒரு நிகழ்வாக மாற்றிக்கொண்டு இருக்கிறது. என் அணி வெற்றிபெற்றால் போதும், முழுமையாக அரசியல் சூழலும் நச்சுத்தன்மையுடையதாக ஆனாலும் பரவாயில்லை என்பதே ஒரு சிந்தனையாக மாறுகிறது.

**நம் அரசியலை எவ்வாறு இத்தொழில்நுட்பங்கள் மாற்றுகிறது?**

மேற்கத்திய தாராளவாத ஜனநாயகத்தை மிக அழுத்தமாக பெரும்பான்மை மக்களீர்ப்பு அரசியலாக மாற்றிக்கொண்டு இருக்கிறது. பொதுவாக எல்லாப் பெரிய சமூகத்திலும் பெரும் ஊடகங்கள் இருக்கின்றன. எனக்கு இவை எல்லாமே இம்மாதிரி அரசியலையே முன்வைப்பதாகத் தோன்றுகிறது. இது ஒன்றும் புத்தியக்கம் அல்ல, முன்பே இருப்பதுதான்.

ஆனால் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு மிக அதிக வீச்சில் அதீத வேகத்தில் ஊட்டத்துடன் இது இப்போது நிகழ்கிறது. செய்தித்தாள், தந்தி இருந்த காலத்தில், ஏன் தொலைக்காட்சி வந்த காலத்தில் கூட இதுபோன்று நிகழ வாய்ப்பு இருந்ததாக நினைத்துப் பார்க்க இயலவில்லை.

**1930களில் வானொலி பரவியபோதுகூட அதை ஜனநாயக விரோதமாகத்தானே பத்திரிகைகள் சித்தரித்தன?**

ஹிட்லரின் எழுச்சியில் வானொலியின் பெரும் பங்களிப்பு உண்டு. அதனால்தான் அவர் அதை எல்லா வீடுகளுக்கும் கிடைக்க வழிசெய்தார். இது ஒரு நல்ல ஒப்பீடு. மார்ஷல் மக்லுஹான் எனும் கனேடிய ஊடகவியலாளர் இதைப்பற்றிக் குறிப்பிட்டது, ஒரு புதிய தொழில்நுட்பம் வரும்போது, நமக்கு எப்படி அதை புரிந்துகொள்வது என்று தெரியாது, ஆரம்ப காலத்தில் ஒருவித பிரமையில் இருப்போம், நம் புலன் உணர்வுகள் ஸ்தம்பித்துவிடுகிறது, ஹிட்லரின் அபாரமான பேச்சாற்றல் மட்டுமல்லாது புதிய ஊடகம் மக்களின் வாழ்க்கையில் அளவிட முடியாத அளவுக்கு ஆக்ரமிப்பு செய்து ஸ்தம்பிக்கும் நிலைக்குத் தள்ளியது பரப்புரையை மேலும் அதிகப்படுத்தியது என்கிறார்.

தேர்வு என்பது மிகவும் குழப்பமானது, அதில் ஆழமாக ஊடுருவிப் பார்க்க ஆரம்பித்தால் நமக்கு எப்படி ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறோம் என்று யாருக்கும் தெரியாது என்பது புலப்படும்.

**காலப்போக்கில் நாம் புதிய ஊடகங்களுக்குப் பழகிவிடமாட்டோமா என்ன?**

வானொலி தொலைபேசி முதலியவற்றின் தாக்கத்திலிருந்து விலகி வர எத்தனை காலம் பிடித்தது என்று யோசித்துப்பாருங்கள், கிட்டத்தட்ட இரண்டு தலைமுறைகள் எடுத்தன. மின்னணு ஊடகங்கள், மேம்படப்பட, ஒரு எடுத்துக்காட்டு அளவாக சுமார் 150 மில்லியன் பயனர்களை அடைவதற்கான நேரம் குறைந்துகொண்டே போகிறது. வானொலிக்கு 60 அல்லது 70 ஆண்டுகள் ஆயிற்று என்று நினைக்கிறேன். தொலைக்காட்சிக்கு 30 அல்லது 40 ஆண்டுகளாயிற்று. இன்றைய தொழில்நுட்பத்தில், சிறு செயலிக்கு 150 மில்லியன் பயனர்களை அடைய, அது ஒரு சில நாட்களாக இருக்கலாம். நாம் தொழில்நுட்பத்தை முழுக்க உள்வாங்கி அதில் திறம் மிக்கவர்களாக ஆகி நிலைத்தன்மையை அடைவதே இல்லை. எப்போதும் பின்தங்கியவர்களாகவே இருக்கிறோம். நன்றாகப் பயன்படுத்த முனைகிறோம் ஆனால் அடுத்து இன்னொன்று வந்து நாம் நுட்பத்தில் தேர்ந்து சமநிலை அடைவதைத் தடுத்துவிடுகிறது.

**இவ்வாறு கவனம் சிதறுவது, நம்முடைய குறைதானே? நமக்குக் கொஞ்சம் சுய ஒழுக்கம் மட்டும் இருந்தால் போதாதா?**

இதுபோன்றதொரு சொல்லாடல்கள் உள்ளார்ந்து சொல்ல வருவது, நுட்பங்கள் நமக்கு எதிரானதாக இருந்தாலும் பரவாயில்லை என்பதுதான். தொழில்நுட்பங்களின் பணி என்பது நாம் என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறோமோ அதற்கு மேலும் உதவிகரமாக இருப்பதுதான். தொழில்நுட்பங்களின் தேவை வேறன்ன? ஒரு புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கும் முன்பு நாம் கேட்கும் கேள்வி என்னவாக இருக்க வேண்டும்?, 'இது எதற்காக' என்று. ஆனால் நாம் அறியாமலேயே இந்நிறுவனங்கள் சென்றடைந்த இடம் என்பது, இந்த ஸ்மார்ட்போன் எதற்காக என்று கேட்டால் , ஒரு ஸ்மார்ட்போனால் என்ன செய்யவியலுமோ அதுவே அதன் பயன் என்ற கேலிக்குரிய பதில்தான் கிடைக்கிறது.

**தனிநபர் பொறுப்பு ஒரு பொருட்டே இல்லையா?**

தனிநபர் பொறுப்பு முக்கியமானதல்ல என்று நான் நினைக்கவில்லை. ஆனால் அது இந்தப் பிரச்சனைக்கான தீர்வு என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இதைக்குறித்து தினம் தினம் பேசும் ஆட்களுமே, ஏன் நானுமே (கூகிளில் பத்து வருடங்கள் பணியாற்றி இருக்கிறேன்) நாங்களே, ஓயாமல் அளவுக்குமீறிய தகவல்கள் எங்களை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு தாவச்செய்யும் என்று நினைவில் வைத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. இந்நிறுவனங்கள் திறமைமிக்க புத்திசாலிகளை; ஆயிரக்கணக்கில் முனைவர்களை, வடிவமைப்பாளர்களை, புள்ளியலாளர்களை, பொறியாளர்களை பணியமர்த்தியுள்ளன. அவர்கள் தினமும் நம் உள்ள உறுதியை உடைக்கவேண்டும் என்ற ஒற்றைக் குறிக்கோளுக்காகவே பணிக்குச் செல்கிறார்கள், ஆகவே உள்ள உறுதியோடு இருங்கள் என்பது யதார்த்தமான யோசனையன்று. அதை உடைப்பது என்பதே குறிக்கோளாக இருக்கும்போது!

தகவல் தொழில்நுட்பம் நமக்குச் சாதகமாக நிற்கிறதென்று கருதுகிறீர்களா?

நம் கவனத்தை கவர்ந்து நம்மை திசைதிருப்பும் குறிக்கோள் என்ற அளவில் அது நமக்கு சாதகமானதில்லை. அதற்கு நம் குறிக்கோள் என்ன என்றுகூட இத்தொழில்நுட்பங்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. அதுகுறித்த ஒரு உரையாடல் நிகழ்ந்து சரியான திசையில் நகர்வது அவசியம். ஜிபிஎஸ் தொழில்நுட்பம் ஒரு சிறந்த முன்மாதிரியான உதாரணமாகக் கூறுவேன்.

மெய்யுலகில் ஜிபிஎஸ் நம்மை தகவல்நுட்பம் போலவே கவனம் சிதறச் செய்தால், யாருமே ஜிபிஎஸ் பயன்படுத்தமாட்டோம்.

வசப்படுத்தும் நுட்பங்களை நாம் எவ்வாறு நம்மை கவனயீர்ப்பு செய்வதிலிருந்து நிறுத்துவது?

பல்வேறு தளங்களில் இது நிகழவேண்டி இருக்கிறது, வணிகமுறைகள், கட்டுப்பாடுகள், நிறுவன அமைப்புகள், அதன் செயல்பாடுகள், முன்னுரிமைகள் என மாற்றவேண்டி இருக்கிறது.

உடனடியாக நாம் செய்ய வேண்டிய முக்கியமானது, பிரச்சனையின் தன்மை பற்றிய மொழியை மாற்றவேண்டியது. ஏனெனில், சரியான மொழியில் இந்த உரையாடல் நிகழாவிட்டால் இதைப் பரப்புரை செய்வது கடினம். சிலவேளைகளில் நாம் கவனச்சிதறல் எனவோ, கவனயீர்ப்பு என்றோ கூறும் போது அது உடனடித்தன்மை குறித்தே கவனிக்கிறோம், நீண்ட கால வாழ்வின் தாக்கத்தை குறித்தல்ல.

அதற்கு எத்தனை காலமாகும்?

இது உடனடியாக நிகழ்ந்துவிடாது. ஏனெனில் மனிதப்பண்புகளும், தொடர்புகளும் குறித்து நம் சரியாக உரையாடவேண்டும். பெருமளவில், குறிப்பாக அமெரிக்காவில் இது தனிநபர்த் தேர்வுகளின் விருப்பம் என்ற அளவிலே நிகழ்கிறது. என் உள்ளுணர்வில், இது என் உள்ளுணர்வு மட்டுமே, இதை நாம், நம் விருப்பத்தின் தேர்வுகளாகப், உரிமைகளாகப் பார்க்காமல், வாய்ப்பாக எந்த வாய்ப்பு நமக்கு மேன்மையானது, இவற்றால் உண்மையில் என்ன நிகழ்கிறது என்று உரையாடுவது நல்லது. தேர்வு என்பது மிகவும் குழப்பமானது, அதில் ஆழமாக ஊடுருவிப்பார்க்க ஆரம்பித்தால் நமக்கு எப்படி ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறோம் என்று யாருக்கும் தெரியாது என்பது புலப்படும்.

நம்மைத் திசைதிருப்புவதிலிருந்து நிறுத்த நிறுவனங்கள் உடனடியாக ஒன்றே ஒன்றைச் செய்யவேண்டும் என்றால் என்ன பரிந்துரைப்பீர்கள்?

என் நடத்தையை, சிந்தனையை மாற்றக்கூடிய ஒரு தளத்தின், இணையப்பக்கத்தின் வடிவமைப்புக் குறிக்கோள் என்ன என்று நானறிய விரும்புகிறேன் எனக்கான எந்த அனுபவத்துக்காக வடிவமைப்பு செய்யப்படுகிறது. நிறுவனங்கள், உலகைத் திறந்த வெளியாக்க, இணைக்க என்று ஏதோ ஒரு காரணத்தைக் கூறுவார்கள்.

இவை எல்லாம் சந்தைப்படுத்தலுக்கான கோஷங்கள். ஆனால் உண்மையில் அவர்கள் எதைத் தங்கள் நிறுவன வெற்றிக்கான அளவீடுகளாக வைத்திருக்கிறார்கள் என்று கவனித்தால் எதை வைத்து வடிவமைக்கிறார்கள் என்று கவனித்தால் நீங்கள் இதையெல்லாம் காணமுடியாது. எத்தனை முறை பயனர்கள் வருகிறார்கள், எவ்வளவு நேரம் செலவிடுகிறார்கள், இதுபோன்றே இருக்கும். உங்களிடம் ஒரு செயலியின் பயனராக, ‘இதை மட்டுமே உங்கள் கவனம் சம்பந்தமாக எதிர்பார்க்கிறோம்’ என்று நேரடியாகக் கூறினால் அதுவே பெரிய வெற்றியாக இருக்கும். இதை வைத்தே நான் எந்தச் செயலியை தரவிறக்கி பயன்படுத்துவேன் என்று முடிவுசெய்வேன்.

உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?

இந்நிறுவனங்களில், தனிநபராக வேலை செய்வோரைக் கருதும்போது மிகுந்த ஆறுதலும் நம்பிக்கையும் இருக்கிறது. ஏனெனில், யார் இதை உருவாக்குகிறார்களோ, வடிவமைக்கிறார்களோ கடைசியில் அவரும் ஒரு பயனரே. யாருமே வாழ்க்கையை சிதைக்கவென்றே வடிவமைக்கப் புகுவதில்லை. ஆனால் பிரச்சினை என்பது நிறுவனங்களின் கட்டுமானங்களிடம் உள்ளது, அல்லது நிறுவனத்தின் குறிக்கோள்களில் இதுபோன்ற உயர்ந்த உன்னதக் குறிக்கோள்களுக்கு இடமில்லாமல், உடனடிக் குறிக்கோள்களை, சிறுமைகளை முன்னிறுத்துவதாக இருக்கிறது. தொலைநோக்கில் சிந்தனை செய்தால், நம்பிக்கை வைப்பதா வேண்டாமா என்பது கடினமாக இருக்கிறது. ஆனால் ஒரு கட்டத்தில் நாம் திசையை மாற்றவில்லையென்றால் நிறுவனங்களின் குறிக்கோள்களை மறுபரிசீலிக்க வில்லையென்றால், நாம் நெடுந்தூரம் செல்ல வியலாது என்பதை உணர்வோம் என்று நம்புகிறேன்.

நன்றி : சொல்வனம் மின்னிதழ்.

www.solvanam.com

# ப்ளூவேல்

இரா.ம. கார்த்திக்

மேற்கத்திய நாடுகளில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிற்குத் தேர்ந்தேடுக்கப்படுபவர்களைக் கவனித்தால் அவர்கள் பெரும்பாலும் சிறிய குற்றங்களில் ஈடுபடுபவர்களாக, போதை மருந்துக்கு அடிமையானவர்களாக, வாழ்க்கையில் ஒரு நோக்கமும் அற்றவர் களாகத்தான் இருப்பார்கள். தான் வாழும் சமூகத்திலிருந்து விலகியும் அந்நியப்பட்டும் இருப்பவர்கள், ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற அமைப்புகளின் அடிப்படைவாதத்தின் மூலம் தங்களுக்கு ஓர் அடையாளமும் அர்த்தமும் கிடைப்பதாக நம்பி, அழித்தொழிப்புச் செயல்பாடுகளின் மூலம் தங்களின் ஆக்கப்பூர்வ வெளியைத் தேர்ந்தெடுகின்றனர். சாதாரண வாழ்க்கை என்ற ஒன்றின்மீதே நம்பிக்கையற்றவர்களாக, தங்களுக்கான மதிப்பைப் பெற தற்கொலைப் படையினராகவும் மாற அவர்கள் தயங்குவதில்லை.

ப்ளூவேல் என்ற விளையாட்டு விளையாட விழைபவர்களும் ஏறத்தாழ இந்த மன நிலையிலேயே இயங்குகின்றனர். சமூகத்துடன் எந்தவித ஆரோக்கியச் செயற்பாடுகளும் சாத்தியப்படாமல் அதனால் தங்களின் மன ஆரோக்கியமும் குலைக்கப்பட்டு, அர்த்தமற்ற தங்களின் வாழ்க்கைக்கு ப்ளூவேல் மாதிரியான விளையாட்டுகளிலேயே அவர்களுக்கு மிகப்பெரிய சாகசம் இருக்கிறது. என்ன ஒரு வித்தியாசம் எனில், மதத்தின் மீது குருட்டுத்தனமான ஈடுபாடுகொண்ட மனநோயாளிகளுக்குப் பதில், வாழ்வு, வாழ்தல் என்பதையே சாபமாகக் கருதும் கணினிவழி இயங்கும் சமூகச் சீர்கேட்டாளர்களால் இவர்கள் இயக்கப்படுகின்றனர்.

மட்டுமின்றி, சமூக வலைத்தளங்களின் காலம் மக்களை சமூக எதிரிகளாக மாற்றிக்கொண்டிருக்கிறது எனலாம். ஆயிரக்கணக்கானவர்கள் இணைவதற்கான வாய்ப்புகளை வழங்குபவை என்று நாம் நினைத்தாலும், இச்சமூகத் தளங்கள் ஒருவருக்கொருவர் தொடர்பறுத்தலையும் புறக்கணிப்பையுமே ஏற்படுத்துகின்றன.

சாத்தியமற்ற எதிர்பார்ப்புகள், குறிப்பாக புதிது புதிதாக எதையாவது செய்துகொண்டிருக்க வேண்டியத் தேவை ஒவ்வொரு தனி நபரின்மீதும் பொறுப்பற்றத் தன்மையில் திணிக்கப்படுகிறது.

இதுவொன்றையும் ஆரோக்கியமாக அணுகத் தெரியாதவர்களுக்கு உச்சபட்சமாக ப்ளூவேல் விளையாட்டுகளின் வழி கிடைக்கும் புதுப்புது சவால்கள் கவனஈர்ப்பை வழங்குகின்றன.

துரதிர்ஷ்டவசமாக, எய்ட்ஸ் போன்ற நோய்கள் குறித்தான தவறான மதிப்பீடுகளைப்போல, மனநலம் குறித்த தவறான அணுகுமுறைகளும் மனச்சோர்வு, மன அழுத்தம், தனிமை, போன்றவைகளை வெளிப்படையாக விவாதிக்க அனுமதிப்பதில்லை.

ஒரு தனி மனிதரின் மன நலத்தை எந்தவொரு சமுதாயம் கணக்கிலெடுத்துக்கொள்கிறதோ, அவருக்கு சமூகம் சார்ந்த இணக்கத்தையும் நெருக்கத்தையும் வழங்குகிறதோ, அத்தகைய சமுதாயமே, அதன் மனிதர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வதிலிருந்து தடுத்துக்கொள்ள முடியும்.

ஒரு ப்ளூவேல் தடுக்கப்பட்டிருக்கலாம். இன்னும் பல ப்ளூவேல்கள் இனங் காணப்பட வேண்டும்.




e-mail : karthickjnu@gmail.com

# நரம்பு உளவியலும் பார்ஹேசும்

ச. வின்சென்ட்



மூளையின் இடது அரைக்கோளத்தின் மேல்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதிவரை உளவியலாளர் கவனம் செலுத்தி வந்தார்கள். நரம்பியல், நரம்பு உளவியல் ஆகியவற்றின் வரலாறு முழுவதும் இடது கோளத்தைப் பற்றிய ஆராய்ச்சியின் வரலாறாகவே இருந்து வந்திருக்கிறது. எனினும் மொழிப் பிறழ்வு, அறிதல் பிறழ்வு முதலான பல நரம்பு நோய்களின் புதிர்களுக்கு வலது அரைக்கோளம்தான் விடை தர முடியும் என்று காணப்பட்டது. வலது கோளம் மனிதன் உயிர் பிழைத்து வாழத் தேவையான மெய் நிலையை அடையாளம் கண்டு கொள்ளும் மிக முக்கிய ஆற்றல்களைக் கட்டுப்படுத்துகிறது. வலது அரைக்கோளம் ஒரு கணினி போலச் செயல்படுகிறது; நிரல்களுக்கும் *(Programmes)* அமைப்பு நிலைகளுக்குமாக *(schemata)* அது வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

ஃபிராய்ட், உளவியல் பகுப்பாய்வை முன்னிறுத்தினாலும், அடையாளம் காணுதல், புலன்காட்சி ஆகியவற்றிலுள்ள பிறழ்வுகள் பற்றியும் சிந்தித்தார். மொழிப் பிறழ்வையும், அறிதல் பிறழ்வையும் புரிந்து கொள்ளப் புதியதொரு அறிவியல் தேவைப்பட்டது என்று அவர் நம்பினார். இரண்டாம் உலகப் போரின்போது ரஷிய உளவியலாளர் லூரியாவும் மூளை, மதி பற்றிய புதிய அறிவியல் தொடர்பாகக் காரணமாக இருந்தார். அவரும் அவரது நண்பர்களும் அதற்கு நரம்பு உளவியல் *(neuro psychology)* என்று பெயரிட்டார்கள். இருப்பினும் அவர்களும்கூட மூளையின் இடது அரைக் கோளம் பற்றியே பெரிதும் கவனம் செலுத்தினார்கள்.

மூளையின் வலது அரைக் கோளத்தில் ஏற்படும் நோய்க் குறிகளைக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தது. அந்த நோயாளிகளால் தங்கள் பிரச்சனைகளையே அறிந்து கொள்ள முடியாது. இதனை உள்காட்சி இழப்பு *(anosagnosia)* என்று அழைத்தார்கள்.

வலப்பக்கக் கோளத்தில் ஏற்படும் சீர்குலைவுகள் பல வகையானவையாக இருக்கின்றன. இவற்றை வகைப்படுத்தவும் முடியும். ஆஸ்கர் சேக்ஸ் *(Oscar Sacks)* இரண்டு வகைகளை முதன்மைப்படுத்துகிறார். தனது *The Man who Mistook his Wife for a Hat* என்ற நூலில் பல நரம்பு நோயாளிகளின் நோய் விவரங்களை விவரிக்கிறார். அவை இழப்புகள் *(Losses)*, மிகுதிகள் *(Excesses)* ஆகும். இழப்புகளில் பல வகைகள் உள்ளன. ஒரு நரம்பியல் நோயாளி பேச்சை இழக்கலாம். நினைவாற்றலை இழக்கலாம். நுண்ணுணர்வை இழக்கலாம்.



காட்சி நுண்ணுணர்வை இழந்த ஒரு நோயாளி *(vision agnosia)* கண் பார்வை நன்றாக இருந்தாலும் உருவங்களை, ஆட்களை அடையாளம் காணும் திறனை இழந்து விடுவார். ஒரு நோயாளி தனது மனைவியின் தலையைத் தொப்பியாக நினைத்து கையில் எடுக்கப் போன நோய் விவரக் குறிப்பை சேக்ஸ் விளக்குகிறார். அதேபோல நினைவாற்றலை இழத்தலும் இருக்கும். ஒரு நோயாளிக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த அனைத்தும் நினைவில் இருந்தது. ஆனால் அந்த வினாடி நடப்பதை மறந்து விடுவார். இப்படிப்பட்ட நோய்கள் மூளையின் வலது அரைக் கோளில் ஏற்படும் சீர்குலைவுகளால் ஏற்படுபவை.

இழப்புகள் ஒருவகை நோய்க்குறிகள். மிகுதியாதல் இன்னொரு வகை. மிகுதியான உணர்ச்சிகள், வாழ்க்கை உச்சக்கட்டத்தில் இருப்பது போன்ற உணர்வு, ஆற்றல் அதிகமாகி விட்டது போன்ற ஓர் எண்ணம் ஏற்படும். எல்லாம் அபரிமிதமாக நடைபெறும். ஆலிவர் சேக்ஸ் 90 வயதான பெண் அதிகமான பாலுணர்வு கொள்ளும் கதையை விவரிக்கிறார். பதினேழு வயதில் அந்தப் பெண் விபச்சாரத் தொழிலில் இருந்தபோது சிஃபிலிஸ் நோயால் பாதிக்கப்பட்டார். அது முழுவதும் குணமாக்கப்படாமல் அமுக்கப்பட்டதால் அது சிஃபிலிஸ் நரம்பு நோயாக இப்போது மாறி இப்படிப்பட்ட அபரிமிதமான உளக் கிளர்ச்சியை ஏற்படுத்துகிறது. இது பல காரணங்களால் ஏற்படலாம்: பக்கவாதம், மூளைக் கட்டிகள், மது போதை, நோய்த் தொற்று முதலியவை காரணங்களாக இருக்கலாம். சேக்சின் நோயாளியான தாம்சன் எப்போதும் நிலைகுலைந்தே காணப்படுகிறார். ஆனால் கற்பனை வளம் அதிகம்; புதுப் புதுக் கதையாகச் சொல்வார், கட்டுக் கதைகளாக அவர் கற்பனை உலகம் விரியும். அவருக்கு மனத்துக்கு உண்மையான உள்ளே தொடர்பு, அமைதியாக கதையாடல் தொடர்ச்சி இல்லாததால், இப்படி புனை கதைகளில் இறங்கிச் சமநிலையை உருவாக்கிக் கொள்கிறார். இந்தப் பாத்திரத்தைக் கொண்டே ஒருவர் நாவலை எழுதி விட்டார். ஆலிவர் சேக்ஸ் தாம்சனைப் பற்றி எழுதியபோது பார்கேசின் ஃபியூன்சைக் குறிப்பிட்டார். ஃபியூன்ஸ் இப்படிப்பட்ட ஒரு கதை சொல்லிதான். மித மிஞ்சிய நினைவுகள் ஃபியூன்சுக்கு.

லூரியாவின் *Mnemonist* என்ற நூல் ஷெரெஷ்பஸ்கி என்ற ஒருவருடைய நோய்க் குறிப்புகளையும் சொல்கிறது. அவர் மிகவும் அதிகமான கற்பனைத் திறனுள்ளவராதலால் நினைவுக் குறிகளை *(mnemonics)* உண்டாக்கிக் கொள்கிறார். *(Mnemonics* என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு: ஒரு செய்யுளின் அடிகளை நினைவு வைத்துக்கொள்ள அதன் ஒவ்வொரு அடியின் முதல் எழுத்தையும் சேர்த்து ஒரு வார்த்தை அமைத்து அதை மனப்பாடம் செய்துகொள்வது) அவரைப் போலவே ஃபியூன்சும் இருக்கிறார். பார்ஹேஸ் அவரைப் போன்ற ஒருவரைச் சந்தித்து ஃபியூன்ஸ் பாத்திரத்தைப் படைத்தாரோ என்ற ஐயப்படும் அளவிற்கு இந்தக் கதை இருக்கிறது.

எப்படியிருப்பினும் நரம்பு உளவியல், நரம்பு நோயியல் கோட்பாடுகளைப் பயன்படுத்தி ஃபியூன்சை வாசிப்பது நம்முடைய புரிதலை ஆழப்படுத்தும். தாஸ்தாவஸ்கியும் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர். அவருக்கு அந்த நோய்க் குறிகள் தோன்றும்முன் வித்தியாசமான உணர்வுகளைப் பெறுவார் என்று ஆலிவர் சேக்ஸ் கூறுகிறார். தாஸ்தாவஸ்கின் *The Idiot* நாவலிலும் இளவரசன் முய்ஷ்கின் ஒரு வலிப்பு நோயாளி. அவனை நோய் தாக்கும் முன் மிக அதிகமாகப் பேசுவான், தாம்சனைப் போல.

இலக்கியங்களைப் புரிந்து கொள்ள உளவியலைப் பயன்படுத்துவது புதிதில்லை. ஹாம்லட்டை உளவியல் பகுப்பாய்வுக் கோட்பாட்டை பயன்படுத்திப் படிக்கலாம். ஹாம்லட்டில் ஈடிபஸ் காம்ப்ளக்ஸ் இருப்பது பற்றிப் பல ஆய்வுகள் வந்துள்ளன. விர்ஜினியா உல்ஃப், ஜேம்ஸ் ஜாய்ஸ், லா. ச. ரா. நாவல்களின் நனவோடை உத்தியை உளவியல் வழியாக ஆராய்கிறார்கள். இங்கே பார்ஹேசின் ஃபியூன்ஸ் சிறுகதையை நரம்பு உளவியல் கோட்பாடுகளைப் பயன்படுத்தி ஆராய்தல் ஒரு நல்ல அனுபவம்.

கதை இங்கே:

### ஃபியூன்ஸின் நினைவுகள்

**எ**னக்கு அவரை நினைவிருக்கிறது (இந்த தெய்வீகமான வினைச் சொல்லைப் பயன்படுத்த எனக்கு உரிமை இல்லை; உலகில் ஒருவனுக்குத் தான் அந்த உரிமை

இருந்தது; அவனும் இறந்து விட்டான்). அவன் தனது கையில் ஒரு பேஷன் மலரை வைத்திருந்தான். அவன் அதைக் காலையில் மருள் ஒளியிலிருந்து மாலை வரையில் ஒரு வாழ்நாள் முழுவதும், வேறு யாரும் பார்க்காதது போலப் பார்த்தாலும், அவன் அதனைப் பார்த்துக் கொண்டிருப்பான். அதிகம் உணர்ச்சியைக் காட்டாத, இந்தியருடையதைப் போன்ற, தொலைதூரத்தில் சிகரெட்டுக்குப் பின்னால் இருக்கும் முகத்துடன் அவனை எனக்கு நினைவு இருக்கிறது. அவனுடைய கோணிய தோல் தைக்கும் கைகள் எனக்கு நினைவிருக்கின்றன (என்று நினைக்கிறேன்). உருகுவே நாட்டு இலச்சினை தாங்கிய ஒரு சதுரங்கக் காய் அந்தக் கைகளின் அருகில் இருந்தது நினைவிருக்கிறது. அவனது வீட்டு சன்னலில் ஏரி ஒன்றின் இயற்கைக் காட்சியைக் கொண்ட ஒரு மஞ்சள் திரை நினைவிருக்கிறது. எனக்கு அவனது குரல் நினைவிருக்கிறது, இன்று நாம் கேட்கும் இத்தாலிய மென்னொலிகள் இல்லாத மெதுவான, வெறுப்புக் காட்டும், புறநகர்ப் பகுதிகளில் நெடுங்காலம் வசிக்கிற ஒருவரின் மூக்கில் பேசும் குரல் எனக்குத் தெளிவாக நினைவிருக்கிறது. அவனை மூன்று முறைகளுக்கு மேல் நான் பார்த்ததில்லை. கடைசியில் பார்த்தது 1887இல். அவனைத் தெரிந்தவர்கள் அனைவரும் அவனைப் பற்றி எழுதுவது எனக்கு மன நிறைவு அளிக்கிறது. என்னுடைய சாட்சியம் மிகச் சிறியதாக, மிகவும் மோசமானதாக இருக்கலாம். ஆனால் நீங்கள் தொகுக்கும் நூலில் எந்தப் பக்கமுமே சாராத ஒன்று அது. நான் ஒரு அர்ஜன்டைனா நாட்டவன் என்று வெறுக்கத்தக்க நிலை, உருகுவே நாட்டவரைப் பற்றிப் பேசும் போதெல்லாம் உருகுவேயின் கட்டாயமான நடைமுறை வடிவமான பாராட்டு மொழியைப் பயன்படுத்த என்னைத் தடுக்கிறது. அறிவுலக மேதை, நகரத்துக்காரன், பகட்டுக்காரன். ஃபியூன்ஸ் இந்தக் காயப்படுத்தும் வார்த்தை களைப் பேசியதில்லை. ஆனால் இந்தத் துரதிர்ஷ்டங்களின் இந்தக் குறியீடுகளாக நான் அவனுக்கு இருந்தேன் என்பது எனக்கு உறுதி. பீட்ரோ லியண்ட்ரோ இபுசி, (உருகுவே நாட்டுக் கவிஞர், இசைக் கலைஞர்) சூப்பர் மேன்களுக்கு, ஃபியூன்ஸ் ஒரு முன்னோடி, 'சாமான்யர்களின் கிராமத்து ஜாரதுஸ்ட்ரா" (பாரசீக ஞானி, மதத்தை நிறுவியவர்) என்று எழுதினார். இந்தக் குறிப்பை நான் எதிர்த்துப் பேசமாட்டேன். ஆனால் அவனும், சில குணமாக்கப்படமுடியாத குறைபாடுகளுடைய ஃப்ரே பென்டோசிலிருந்து (உருகுவேயிலுள்ள ஒரு நகரம்) வந்த ஒரு பையன் என்பதை மறந்து விடக் கூடாது.

ஃபியூன்ஸ் பற்றிய எனது முதல் நினைவு சிறப்பானது. 1884ஆம் ஆண்டு மார்ச் அல்லது பிப்ரவரியில் ஒரு பிற்பகலில் நான் அவனைப் பார்க்கிறேன். அந்த ஆண்டு கோடை காலத்தைக் கழிக்க என்னை ஃபிரே பென்டோசுக்கு எனது தந்தை கூட்டிப் போயிருந்தார். என்னுடைய ஒன்று விட்ட சகோதரரான பெர்னார்டோ ஹெய்டோவோடு சான்ஃபிரான்சிஸ்கோ பண்ணையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தேன். குதிரையில் சவாரி செய்த போது பாடிக் கொண்டே போனோம். குதிரையில் போவது என்ற சூழல் மட்டுமே எங்களது மகிழ்ச்சியைத் தீர்மானிக்கவில்லை. வியர்வை கொட்டச் செய்த ஒரு நாளுக்குப் பிறகு, ஒரு பெரிய ஸ்லேட் நிறப் புயல் வானத்தை மறைத்துக் கொண்டிருந்தது தெற்குக் காற்றினால் அது தூண்டப்பட, மரங்கள் எல்லாம் தலைவிரித்து ஆடத் தொடங்கி விட்டன. அந்தப் பரந்த வெளியில் நாங்கள் போனபோது திடீரென்று மழை வரும் என்று பயந்தேன் (நம்பவும் செய்தேன்). புயலோடு ஒரு ஓட்டப் பந்தயம் தான். இரண்டு உயரமான செங்கல் நடைபாதைகளுக்கு இடையே கிடந்த பக்கத்துச் சந்தில் நுழைந்தோம். திடீரென்று இருள் சூழ்ந்து விட்டது. மேலே வேகமான இரகசியமான காலடிச் சத்தங்கள் கேட்டன. நான் கண்களை உயர்த்திப் பார்த்தேன். குறுகிய, விட்டுவிட்டிருந்த பாதையில், சிறிய சிதைந்த சுவராக அதைக் கருதி ஒரு சிறுவன் ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவனுடைய தொளதொளக் கால் சட்டையையும், கயிற்று அடிப்பாகம் கொண்ட காலணிகளையும் நான் நினைவில் வைத்திருக்கிறேன். எங்கும் நிறைந்திருந்த புயல்மேகத்தின் பின்னணியில் தெரிந்த அவனுடைய கடுமையான முகத்தில் நீட்டிக்கொண்டிருந்த சிகரெட் எனக்கு நினைவிருக்கிறது. எதிர்பாராமல் பெர்னார்டோ, "மணி என்ன, ஐரீனியோ?" என்று கேட்டான். அவன் வானத்தைக்கூட அண்ணாந்து பார்க்காமல், நிற்காமலேயே, "எட்டு மணிக்கு ஐந்து நிமிடங்கள் இருக்கின்றன,

பெர்னார்டோ யுவான் ஃபிரான்சிஸ்கோ, ” என்று விடையளித்தான். அவன் குரல் கிரீச்சென்று கேலி செய்வது போலிருந்தது.

நான் இதை ஒன்றையும் கவனிக்கவில்லை. என்னுடைய ஒன்றுவிட்ட சகோதரன் அழுத்தமாகச் சொல்லாதிருந்தால் நான் இப்போது சொன்ன உரையாடல் எனது கவனத்தைக் கவர்ந்திருக்காது. அவன் உள்ளூர் கர்வத்தாலும், மற்றவனுடைய விடை பற்றிக் கவலைப்படவில்லை என்று காட்ட வேண்டுமென்ற விருப்பத்தாலும் தூண்டப்பட்டான் என்று நினைக்கிறேன்.

சந்தில்போன ஆள் ஐரீனியோ ஃபியூனஸ் என்றும், மக்களோடு தொடர்பைத் தவிர்ப்பது, கடிகாரம் போன்று சரியான நேரத்தைத் தெரிந்திருப்பது போன்ற சில குறிப்பிட்ட தன்மைகளால் அவன் அறியப்பட்டிருந்தான் என்றும் சொன்னான். மேலும் மரியா கிளெமென்டினா ஃபியூம்ஸ் என்ற ஆடைகளுக்குப் பெட்டி போடும் பெண்ணின் மகன் என்றும், அவனுடைய தந்தை ஓ'கானர் *(Pádraic Ó Conaire)* என்ற பெயருடைய ஆங்கிலேயர், இறைச்சிக் கடையில் பணியாற்றும் மருத்துவர் என்று சிலரும், சால்டோ மாவட்டத்தைச் சார்ந்த குதிரை அடக்குபவர் அல்லது சாரணர்தான் அவனுடைய தந்தை என்று வேறு சிலரும் சொல்கிறார்கள் என்று அவன் கூறினான். லாரிலஸ் வீட்டிலிருந்து முனையில் அவன் தன்னுடைய தாயுடன் வசித்து வந்தான்.

எண்பத்தைந்து எண்பத்தாறாம் ஆண்டுகளில் நாங்கள் மான்டிவீடியோவில் (உருகுவே நாட்டின் தலைநகர்) எங்களது கோடை காலத்தைக் கழித்தோம். எண்பத்தேழில் நான் ஃபிரே பென்டோசுக்குத் திரும்பினேன். நான் எனக்குத் தெரிந்தவர்களைப் பற்றியெல்லாம் கேட்டுவிட்டு ”கடிகாரக்காரன்” ஃபியூன்சைப் பற்றிக் கடைசியில் கேட்டேன். சான்ஃபிரான்சிஸ்கோ ரேஞ்சில் சரியாகப் பழக்கப்படுத்தப்படாத குதிரையிலிருந்து அவன் தூக்கியெறியப் பட்டுவிட்டான் என்றும் இப்போது பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுக் கிடக்கிறான் என்றும் கூறினார்கள். என்னிடம் இந்தச் செய்தி உண்டாக்கிய மாய உணர்வை நான் நினைத்துப் பார்க்கிறேன். நான் அவனை ஒரு முறை தான் பார்த்திருந்தேன். நாங்கள் சான் ஃபிரான்சிஸ்கோவிலிருந்து குதிரையில் வந்து கொண்டிருந்தோம். அவன் உயரமான இடத்தில் ஓடிக் கொண்டிருந்தான்: என்னுடைய ஒன்றுவிட்ட சகோதரன் பெர்னார்டோ சொன்ன இந்த உண்மை முன்னர் நடந்த நிகழ்வுகளால் ஆன ஒரு கனவின் தன்மையைக் கொண்டிருந்தது. அவன் தனது கட்டிலை விட்டு அசையவில்லை என்றும், அவனுடைய பார்வை பின்னாலிருந்த அத்தி மரம் அல்லது சிலந்தி வலையில் பதிந்திருக்கும் என்றும் எனது சகோதரன் சொன்னான். மாலை வேளைகளில் அவனைச் சன்னலருகில் கொண்டு வர அனுமதித்தான். அவனை வீழ்த்திய அடி அவனுக்கு நன்மை செய்தது போல அவன் நடந்துகொண்டான், அவன் தனது கர்வத்தை இன்னும் விடவில்லை. நான் இரண்டு முறை அவனை சன்னல் கம்பிகளுக்குப் பின்னால் பார்த்தேன். இது அவன் வாழ்நாள் முழுவதும் கைதி என்ற அவனது நிலையைக் கடுமையைக் காட்டிற்று. ஒரு நேரம் கண்களை மூடி அசையாமல் கிடந்தான், இன்னொரு நேரம், சான்டோனிக்கா செடியின் இனிமையான மணம் கொண்ட குச்சியைப் பற்றிய தியானத்தில் ஆழ்ந்து அசைவற்றுக் கிடந்தான்.

கொஞ்சம் தற்பெருமையோடேயே நான் அப்போதுதான் ஒழுங்கான முறையில் லத்தீன் மொழியைக் கற்றுக் கொண்டிருந்தேன். என்னுடைய பெட்டியில் லோமான்ட் எழுதிய *De Viris illustribus* குயிசெராட்டின் *Thesaurus*



ஜூலியஸ் சீசரின் *Commentaries* பிளினியின் *Natural historia* ஆகியவை இருக்கும். இது நான் லத்தீன் மொழி தெரிந்தவன் என்ற பெயரை அதிகமாக்கியது (இன்னும் அதிகமாக்குகிறது). ஒரு சிறிய நகரில் எல்லாமே எல்லோருக்கும் தெரிந்துவிடும். ஊர்க்கோடியில் ஒரு வீட்டில் இருந்த ஐரீனியோவிற்கு இந்த வித்தியாசமான புத்தகங்கள் எனக்கு வந்தது பற்றித் தெரிவதற்கு அதிகம் நாட்களாகவில்லை. அவன் அலங்காரமாக எழுதிய கடிதம் ஒன்றை எனக்கு அனுப்பினான். அதில் 1884ஆம் ஆண்டு பிப்ரவரி ஏழாம் நாள் மிகச் சிறிதுநேரமே நிகழ்ந்த சந்திப்பை நினைவு கூர்ந்தான். என்னுடைய மாமா கிரிகோரியோ ஹெய்டோவின் பாராட்டுதற்குரிய தொண்டுகளைப் புகழ்ந்தான். அவர் அதே ஆண்டுதான் இறந்தார். “அவர் நமது இரண்டு நாடுகளுக்கும் இடுஜயின்கோவின் வீரமிக்க போரில் பெரும் தொண்டாற்றினார், ”என்று புகழ்ந்து விட்டு, என்னிடமுள்ள நூல்களில் ஏதாவதொன்றை ஒரு அகராதியுடன் சேர்த்துக் கடனாக அனுப்புமாறு கேட்டுக் கொண்டான். ‘ஏனென்றால் மூல பாடத்தைப் படிக்கும் அளவிற்கு எனக்கு லத்தீன் மொழி தெரியாது, ’ என்று எழுதியிருந்தான். நல்ல நிலையில் புத்தகங்களை விரைவில் திருப்பித் தந்து விடுவதாக உறுதியளித்தான். அவனுடைய கையெழுத்து குறை எதுவுமின்றி இருந்தது. அவனுடைய கையெழுத்துக் கலை ஆண்ட்ர பெல்லோவைப் பின்பற்றி இருந்தது வீக்குப் பதிலாக *y* , ரீக்குப் பதிலாக *j*. முதலில் இதை ஒரு ‘ஜோக்’ என்று நினைத்தேன். ஆனால் என்னுடைய ஒன்று விட்ட சகோதரர்கள் அப்படி இல்லையென்றும், இவை ஐரினியோவின் தனிக் குணங்கள் என்றும் உறுதி கூறினார்கள். இலத்தீன் மொழியைக் கற்க ஒரு அகராதி மட்டும் போதும் என்று எண்ணியதற்கு ஆணவமா, அறியாமையா அல்லது முட்டாள்தனமா காரணம் என்று என்னால் சொல்ல முடியவில்லை. அவனை முழுவதுமாகக் குழப்புவதற்காக குயிசெராட்டின் *Gradus ad Parnassum* நூலையும், பிளினியின் நூலையும் அனுப்பினேன்.

பிப்ரவரி பதினான்காம் நாள் போனஸ் அயர்சிலிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது. எனது தந்தையின் உடல்நிலை சரியில்லை என்பதால் நான் உடனே திரும்ப வேண்டும் என்று தந்தி கூறியது. கடவுள் என்னை மன்னிப்பாராக. அவசரத் தந்தியொன்றைப் பெற்றவன் என்ற மரியாதை. செய்தியின் எதிர்மறை வாசகத்திற்கும், பயன்படுத்தப்பட்ட சொல்லுக்குமுள்ள முரண்பாட்டை ஃபிரே பென்டோஸ் மக்களிடம் சொல்ல வேண்டும் என்ற ஆசை, எனக்கு




எதையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை இருக்கிறது என்பதை வெளிக்காட்ட வேண்டும் என்ற விருப்பம் ஆகியவை உண்மையான துயரத்திலிருந்து என்னை விலகச் செய்தது. என்னுடைய பையில் எல்லாப் பொருட்களையும் எடுத்து வைத்தபோது, கிராட்சும், பிளினியின் முதல் பகுதியும் இல்லாததைக் கண்டுபிடித்தேன். ‘சாட்டர்ன்’ கப்பல் அடுத்த நாள் காலையில் புறப்பட்டது. அன்றிரவு இரவு உணவிற்குப் பிறகு ஃபியூனின் வீட்டிற்குப் புறப்பட்டேன். அன்றைய மாலைப் பொழுது பகலைப் போல அவ்வளவு அழுத்தத்தைத் தருவதாக இல்லை என்று கண்டு வியப்படைந்தேன்.

அது மரியாதை ஏற்படுத்தக் கூடிய சிறிய வீடு. ஃபியூனின் அம்மா கதவைத் திறந்தார்.

ஐரீனியோ பின் அறையில் இருப்பதாகச் சொன்னார். அவன் இருட்டில் இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்படக் கூடாது என்றும் சொன்னார். ஏனென்றால் அவன் சும்மா இருக்கும் நேரங்களில் மெழுகுத்திரி ஏற்றாமல் இருந்து பழக்கப்பட்டவன். நான் கல் பதித்த உள் முற்றத்தையும், சிறிய பாதையையும் தாண்டி இரண்டாவது முற்றத்தை அடைந்தேன். அங்கே திராட்சைக் கொடி வீடு இருந்தது. இருள் முழுமையாக இருந்தது போல எனக்குத் தோன்றிற்று. திடீரென்று ஐரினியோவின் கேலியான் குரல் செய்யும் உச்ச சுதியில் கேட்டது. அவனுடைய குரல் லத்தீன் மொழியில் பேசிக்கொண்டிருந்தது. (இருளிலிருந்து வந்த) அவனது குரல் ஒரு பேச்சையோ, மன்றாட்டையோ, மந்திர வாசகத்தையோ சோகம் கலந்த மகிழ்ச்சியில் உச்சரித்துக் கொண்டிருந்தது. ரோமானிய சொற்கள் மண் முற்றத்தில் எதிரொலித்தன.

என்னுடைய அச்சத்தினால் அவை பொருள் காணப்பட முடியாதவையாக, முடிவுறாதவையாக எனக்குத் தோன்றின. பின்னர், அன்றைய இரவின் நீண்ட உரையாடலில், அவை *Naturalis hisitoria*-வின் ஏழாவது நூலின் இருபத்து நான்காம் அதிகாரத்தின்; முதல் பத்தி என்று தெரிந்து கொண்டேன். அந்த அதிகாரத்தின உட்பொருள் நினைவு *(memory)*. கடைசிச் சொற்கள் *ut nihil no iisdem verbis redderetureauditum* (கேட்ட எதையுமே அதே சொற்களில் திரும்பச் சொல்ல முடியாது).

குரலை மாற்றாமலேயே ஐரினியோ உள்ளே வருமாறு அழைத்தான். அவன் கட்டிலில் இருந்தான்; புகை பிடித்துக் கொண்டிருந்தான். அவனுடைய முகத்தைக் காலை வரையில் நான் பார்க்கவில்லை என்று எனக்குத் தோன்றியது. அவனுடைய சிகரெட் விட்டு விட்டு ஒளிர்ந்ததை நான் நினைவுபடுத்திக் கொள்கிறேன் என்று நினைக்கிறேன். அறை ஈர வாடை அடிப்பது போலத் தோன்றியது. நான் உட்கார்ந்தேன். தந்தியைப் பற்றியும் எனது தந்தையின் நோயைப் பற்றியும் சொன்னேன்.

நான் இப்போது எனது கதையின் மிகுந்த கஷ்டமான பகுதிக்கு வருகிறேன். இந்தக் கதைக்கு (வாசகருக்கு இப்போது அது தெரிவது நல்லது) அரை நூற்றாண்டுக்கு முன்னர் நடந்த ஓர் உரையாடலைத் தவிர வேறு கதைப் பின்னல் இல்லை. நான் அந்தச் சொற்களை இங்கே அப்படியே கொண்டு வர முடியாது. இப்போது அவை திரும்பப்பெற முடியாதவை. ஐரினியோ என்னிடம் சொன்ன பல விஷயங்களின் சுருக்கத்தை உண்மையுடன் கூறுகிறேன். அயற்கூற்று நடை தள்ளி இருப்பது போல, வலிமையற்று இருக்கிறது. என்னுடைய கதையாடலின் பயன்பாட்டை நான் தியாகம் செய்கிறேன் என்பது எனக்குத் தெரியும். அன்றிரவு என்னை ஆட்கொண்ட நான் தயங்கிய கால கட்டங்களை எனது வாசகர்கள் கற்பனை செய்ய வேண்டும்.

ஐரினியோ லத்தீனிலும் ஸ்பானிய மொழியிலும் *Naturalis historia* நூலில் பதிவு செய்யப்பட்ட வியத்தகு நினைவாற்றல் கொண்ட ஆட்களை வரிசையாகச் சொல்லத் தொடங்கினான். தன்னுடைய இராணுவங்களிலுள்ள ஒவ்வொரு வீரனையும் பெயர் சொல்லி அழைக்கக் கூடிய பெர்சிய மன்னன் சைரஸ், தனது பேரரசை இருபத்திரண்டு மொழிகளில் நிர்வகித்த மித்ரிடேட்ஸ் யூபேட்டர் (இப்போதைய துருக்கியின் ஒரு பகுதியாக இருந்த போன்டியஸ் நாட்டின் பேரரசன்) நினைவு யுக்தி அறிவியலைக் *(mnemonics)* கண்டுபிடித்த சீமோனிடஸ் (கிரேக்க அறிஞர் இடங்களை வைத்து விஷயங்களை நினைவு வைக்கும் யுக்தியைக் கண்டுபிடித்தவர்); ஒரு முறை கெட்டதைத் திருப்பிச் சொல்லும் கலையைப் பயன்படுத்திய மெட்ரோடோரஸ் (கிரேக்கத் தத்துவ ஞானி) ஆகியோருடைய பெயரைக் குறிப்பிட்டான். அப்படிப்பட்ட விபரங்கள் வியப்பூட்டுவனவாகக் கருதப்படுவது ஐரினியோவை வியப்பில் ஆழ்த்தியது. மழை பெய்த அந்தப் பிற்பகலில் அவனை நீலசாம்பல் நிறக் குதிரை கீழே தள்ளி விடும் வரை எல்லா மனிதர்களையும்போலத்தான் இருந்ததாக அவன் சொன்னான்; கண் தெரியாமல், காது கேளாமல், குழப்பமான மூளையுடன், அதிக மறதியுடன் இருந்தான். (அவன் மிகச் சரியாக நேரத்தைச் சொன்னது, ஆட்கள் பெயரை நினைவில் வைத்திருந்தது ஆகியவற்றைப் பற்றி அவனுக்கு நினைவுபடுத்த முயன்றேன். ஆனால் அவன் அதைக் கவனிக்கவில்லை). பத்தொன்பது ஆண்டுகள் அவன் கனவில் இருப்பது போல இருந்திருக்கிறான். அவன் பார்க்காமல் கண்டிருக்கிறான், கேட்காமல் கவனித் திருக்கிறான், எல்லாவற்றையும் ஏறக்குறைய எல்லாவற்றையும் மறந்து விட்டான். அவன் கீழே விழுந்தபோது நினைவிழந்து விட்டான்; நினைவு வந்த போது நிகழ் காலம் என்பது வளமானதாகவும் கூர்மையானதாகவும் இருந்தது. அவனுடைய மிகுந்த தொலைவிலிருந்த, சாதாரண நினைவுகளும் அப்படியே இருந்தன. சிறிது காலம் கழித்துத்தான், தனக்குப் பக்கவாதம் என்று அறிந்து கொண்டான். இந்த உண்மை அவனுக்கு உற்சாகமளிக்கவில்லை. அவனால் அசைய முடியாமல் இருப்பது அவன் செலுத்த வேண்டிய மிகக் குறைந்த விலை என்று காரணம் சொன்னான் (என்று உணர்ந்தான்). இப்போது அவனுடைய புலனறிவும், அவனுடைய நினைவும் தவற முடியாதவை.

நாம் ஒரு வீச்சில் மேசையிலிருக்கும் மூன்று கண்ணாடிப் பாத்திரங்களைப் பார்க்க முடியும்;

ஃபியூன்ஸ் திராட்சைக் கொடியின் எல்லா இலைகளையும், காம்புகளையும், பழத்தையும் பார்க்க முடியும். 1882ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் நாள் காலையில் தெற்கு மேகக் கூட்டங்களின் வடிவங்கள் அவனுக்கு மனப்பாடமாகத் தெரியும். அவன் ஒரேயொருமுறை பார்த்திருந்த ஸ்பானியக கட்டமைப்புள்ள புத்தகத்திலிருந்த பல புள்ளிகளுள்ள கோடுகளோடும், குயிபிராசோ புரட்சிக்கு (உருகுவேவில் 1886 இல் இங்கு புரட்சி நடந்தது) முந்திய இரவில் ரியோ நீக்ரோவில் (ஆறு) ஒரு துடுப்பால் எழுப்பப்படும் நுரையின் வெளிக் கோடுகளோடு அந்த வடிவங்களை அவன் நினைவில் ஒப்பிட்டுக் காட்ட முடியும். இந்தப் பழைய நினைவுகள் எளிமையானவை அல்ல. ஒவ்வொரு காட்சிப் படிவமும், தசையுணர்வு, வெப்ப உணர்வு முதலியவற்றோடு தொடர்புடையது. அவனுடைய கனவுகளையெல்லாம், பாதிக் கனவுகளையெல்லாம் அவனால் திரும்ப அமைக்க முடியும். இரண்டு மூன்று முறைகள் ஒரு நாள் முழுவதுமே திரும்ப அமைத்திருக்கிறான். அவன் தயங்கியதே இல்லை. ஆனால் ஒவ்வொரு முறையும் மீண்டும் அமைப்பதற்கு ஒரு முழு நாள் ஆயிற்று. "இவ்வுலகம், ஒரு உலகமாக ஆனதிலிருந்து மனித இனம் முழுவதும் கொண்டிருந்த நினைவுகளை விட அதிகமாக நான் ஒருவனே கொண்டிருக்கிறேன்," என்று என்னிடம் சொன்னான். மீண்டும், "என்னுடைய கனவுகள்; நீங்கள் விழித்திருக்கும் மணிகளைப் போன்றது," என்றான். மீண்டும், விடியும் வேளையில்," என்னுடைய நினைவு ஒரு குப்பை மேடு போல," என்றான். கரும்பலகையில் வரையப்பட்ட வட்டம், செங்கோணம், ஒரு மிட்டாய் ஆகிய எல்லா வடிவங்களையும் நாம் உள்ளுணர்வில் முழுவதுமாகப் புரிந்து கொள்ள முடியும். ஒரு மட்டக் குதிரையின் அலைபாயும் பிடரி மயிரில், குன்றின் மேலிருக்கும் கால்நடைக் கூட்டத்தில், மாறிக் கொண்டிருக்கும் தீயில் அதனுடைய எண்ணிக்கையற்ற சாம்பல்களில், இழவு வீட்டில் நீண்ட ஒப்பாரியில் இறந்து போனவனின் பல முகங்களில் ஐரினையோ இதையே செய்ய முடியும். அவன் வானத்தில் எத்தனை விண்மீன்களைப் பார்க்க முடியும் என்பது எனக்குத் தெரியாது.

இவற்றை எனக்கு அவனே சொன்னான்; அப்போதோ, பின்னாலோ நான் அவற்றைச் சந்தேகித்ததே இல்லை. அந்தக் காலங்களில் திரைப்படங்களோ, கிராம ஃபோன்களோ இல்லை; எனினும் யாரும் ஃபியூன்சை வைத்து சோதனை எதுவும் செய்யவில்லை என்பது வினோதமாகவும் நம்ப முடியாததாகவும் இருக்கிறது. உண்மை என்னவென்றால் தாமதப் படுத்தக் கூடியவற்றை யெல்லாம் தாமதப்படுத்தி நாம் நமது வாழ்க்கையை நடத்துகிறோம். ஒருவேளை நாம் எல்லோரும் இறப்பில்லாதவர்கள் என்றும், இப்போதோ எப்போதோ எல்லா மனிதர்களும், எல்லாவற்றையும் செய்வார்கள் தெரிந்திருப்பார்கள் என்றும் நாம் அனைவரும் நமக்குள்ளேயே தெரிந்து வைத்திருக்கிறோம் போலும்.

இருளிலிருந்து ஃபியூன்சின் குரல் என்னிடம் பேசிக் கொண்டே இருந்தது.

1886ஆம் ஆண்டு எண்ணிக்கை இடுவதில் புதுமை அமைப்பு முறையைக் கண்டுபிடித்திருப்பதாகவும், சில நாட்களிலேயே அவன் இருபத்து நான்காயிரம் எண்ணிக்கையைத் தாண்டி விட்டதாகவும் என்னிடம் சொன்னான். அவன் அதை எழுதி வைத்துக் கொள்ளவில்லை. ஏனென்றால் அவன் ஒருமுறை சிந்தித்தது எதையும் அவன் இழக்க மாட்டான் மறக்கமாட்டான். உருகுவே வரலாற்றில் முப்பத்து மூன்று கவுசோக்கள் என்ற புரட்சிப் படையைக் குறிக்க, ஒரு சொல், ஒரு அடையாளத்திற்குப் பதிலாக இரண்டு அடையாளங்களும், இரண்டு சொற்களும் தேவைப்படுகின்றன என்பது அவனிடம் பிரச்சனையை ஏற்படுத்தியது. இது அவனுடைய முதல் தூண்டுதலாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த அபத்தமான கோட்பாட்டை மற்ற எண்களுக்கும் பயன்படுத்தினான். எடுத்துக்காட்டாக, ஏழாயிரத்துப் பதின்மூன்றை மேக்சிமோ பெரஸ் (ஃபிலிப்பைன்ஸ் நாட்டவர்) என்றும் ஏழாயிரத்துப் பதினான்கின் இடத்தில் தெ ரெயில்ரோட் என்றும் குறிப்பிடுவான். மற்ற எண்கள் *Luuis Melian Lafinur, Olimar, sulphur, the reins, the whale, the gas, the caldron, Napoleon, Agustin de Vedia ......* (இவற்றில் வரலாற்றில் இடம்பெற்ற ஆட்களுடன் மற்ற சொற்களும் இடம்பெற்றிருக்கின்றன) ஐநூறுக்குப் பதிலாக

ஒன்பது என்பான். ஒவ்வொரு சொல்லுக்கும் ஓர் அடையாளம், ஒரு குறியீடு இருக்கும். இந்த வரிசையில் கடைசியானவை மிகுந்த குழப்பமானவை.

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத இந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு எண்கள் அமைப்பிற்கு முற்றிலும் மாறானது என்று விளக்க முயன்றேன். *365* என்று சொல்வது மூன்று நூறுகள், ஆறு பத்துகள், ஐந்து ஒன்றுகள் என்று சொன்னேன். இந்தப் பகுப்பாய்வு 'எண்களான' *The Negro Timoteo* அல்லது *meat blanket* (காதலித்தவரை உணர்ச்சி சதை ஆசைகளில் மூழ்கடிவிடும் ஆற்றல்) இல் காணப்படமாட்டா. ஃபியூன்ஸ் என்னைப் புரிந்து கொள்ளவில்லை அல்லது புரிந்து கொள்ள மறுத்து விட்டான்.

ஒவ்வொரு தனிப் பொருளும், ஒவ்வொரு கல்லும், ஒவ்வொரு பறவையும், ஒவ்வொரு கிளையும் அதற்கென்று தனிப் பெயரைக் கொண்டிருக்கும் சாத்தியமில்லாத ஒரு மொழியை பதினேழாம் நூற்றாண்டில் லோக் (ஜான் லோக் ஆங்கிலத் தத்துவ ஞானி) முன் வைத்தார். (அதை விட்டுவிடவும் செய்தார்). ஃபியூன்ஸ் ஒருமுறை இதுபோன்ற ஒரு மொழியை முன்னிறுத்தினான். ஆனால் அது அவனுக்கு மிகவும் பொதுவானதாகவும், தெளிவற்றதாகவும் தோன்றியதால் அதனை விட்டு விட்டான். ஃபியூன்ஸ் ஒவ்வொரு காட்டின் ஒவ்வொரு மரத்தின் ஒவ்வொரு இலையை மட்டும் நினைவில் வைக்கவில்லை; அதனை எப்போது பார்த்தோம் அல்லது கற்பனை செய்தோம் என்பதைக்கூட நினைவில் வைத்திருந்தான். அவனுடைய கடந்த நாட்கள் ஒவ்வொன்றையும் எழுபத்தைந்தாயிரம் நினைவுகளாகச் சுருக்கத் தீர்மானித்தான். அவை குறியீடுகளால் வரையறுக்கப்படும். ஆனால் அவன் அதைச் செய்யாமல் இருக்க இரண்டு விஷயங்கள் தடை செய்தன: ஒன்று இந்த வேலை ஓயாத ஒன்று என்பதை அவன் அறிந்திருந்தது. இன்னொன்று இது பயனற்றது என்பதை அவன் அறிந்திருந்தது. அவன் சாவதற்குள் அவனுடைய குழந்தைப் பருவத்து நினைவுகளைக் கூட வகைப்படுத்த முடிந்திருக்காது என்று நினைத்தான்.

நான் குறிப்பிட்டிருந்த இரண்டு திட்டங்கள் (எண்களின் இயற்கையான வரிசைக்கு முடிவில்லாச் சொற்கள், அவனுடைய நினைவிலிருந்த படிமங்களுக்கான பயனற்ற மன வரிசை) முட்டாள்தனமானவை. எனினும் அவை ஒரு குறிப்பிட்ட மதிக்கக்கூடிய ஒரு கம்பீரத்தைக் காட்டுகின்றன. ஃபியூன்சின் மிக உயரமான உலகில் தன்மையைப் பற்றி மேலோட்டமாகப் பார்வையிடவோ, யூகிக்கவோ நம்மை அவை அனுமதிக்கின்றன. அவன் பொதுவான, பிளேட்டோவினுடையது போன்ற கருத்துக்களைக் கொள்வதற்கு ஏறத்தாழ இயலாதவன் என்பதை நாம் மறக்கக் கூடாது. நாய் என்ற பொதுவான குறியீடு வெவ்வேறு அளவு வடிவமுள்ள ஒரே மாதிரியாக இல்லாத பல தனியாட்களைச் சுட்டுகிறது என்பதைப் புரிந்து கொள்வது அவனுக்குக் கடினமாக இருந்தது. (பக்கவாட்டிலிருந்து பார்க்கும்போது) மூன்று பதினான்காக இருக்கும் நாய் (முன்னாலிருந்து பார்க்கும்போது) மூன்று பதினைந்தாக இருக்கும். நாயும் அதே பெயரைக் கொண்டிருப்பது அவனைத் தொந்தரவு செய்தது. கண்ணாடியில் அவன் பார்க்கும் அவனுடைய முகமும், அவனுடைய கைகளுமே அவன் பார்க்கும் ஒவ்வொரு முறையும் அவனை வியப்படையச் செய்கின்றன. லில்லிப்புட் பேரரசன் (கல்லிவர்ஸ் டிராவல்ஸ் கதையில் வருபவன்) நிமிடமுள் நகர்வதைக் காண முடிந்தது என்று ஸ்விஃப்ட் சொல்கிறார், ஊழல், அழிவு, களைப்பு ஆகியவை அமைதியாக முன்னேறுவதை ஃபியூன்ஸ் தொடர்ந்து காண முடிகிறது. சாவின், ஈர நாம்பலின் முன்னேற்றத்தை அவன் காண முடிந்தது. பல வடிவமுள்ள, அக்கணமே இருக்கின்ற, தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்குத் துல்லியமான உலகைப் பார்க்கும் தனியான, தெளிவான பார்வையாளன் அவன்தான். பாபிலோன், லண்டன், நியூயார்க் ஆகியவை அவற்றின் கொடூரமான கம்பீரத்தால் மனிதரின் கற்பனைகளை ஆட்கொண்டு விட்டன. தனது தென்னமெரிக்க புறநகரில், இரவும் பகலும் பரிதாபகரமான ஐரினியோவின் மேல் சளைக்காமல் ஒன்று சேரும் உண்மையின் வெப்பத்தையும், அழுத்தத்தையும், வேறு யாரும் குறிப்பாக மக்கள் நிறைந்த மேல் மாடிகளிலோ அவசரத் தெருக்களிலோ வசிப்பவர்கள் யாரும் உணர்ந்ததில்லை. அவனுக்குத் தூங்குவது கடினமாக இருந்தது. தூங்குவது என்பதை உலகிலிருந்து மனத்தைத் திருப்பிக்

கொள்வது; கட்டிலில் மல்லாக்கப் படுத்திருந்த ஃபியூன்ஸ் தன்னைச் சுற்றியிருந்த துல்லியமாக வரையறை கொண்ட வீடுகளின் ஒவ்வொரு பொந்தையும், வளைவையும் கற்பனை செய்ய முடிந்தது. (அவனுடைய நினைவுகளில் முக்கியமில்லாதவை கூட உடல் இன்பம் அல்லது உடல் துன்பத்தை நாம் உணர்வதை விடத் துல்லியமாகவும், தெளிவாகவும் இருந்தன என்பதை நான் திரும்பச் சொல்கிறேன்). கிழக்குப் பக்கம், இன்னும் வீட்டு மனைகளாகப் பிரிக்காத பகுதியில், ஃபியூன்சுக்குத் தெரியாத புதிய வீடுகள் இருந்தன. அவன் அவற்றை ஒரே மாதிரியான இருளினால் ஆன கறுப்பான ஒன்றாகக் கற்பனை செய்தான். தூங்குவதற்கு அவன் அந்தப் பக்கம் நோக்கி முகத்தைத் திருப்பிக் கொள்வான். ஆற்றின் அடியில் ஆற்று நீரோட்டத்தால் அலைக்கழிக்கப்பட்டு அழிக்கப்படுவதாகவும் அவன் கற்பனை செய்தான்.

அவன் எந்தச் சிரமுமின்றி ஆங்கிலம், ஃபிரெஞ்ச், போர்ச்சுகீஸ், லத்தீன் மொழிகளைக் கற்றுக்கொண்டான். எனினும் அவனிடம் சிந்திக்கும் ஆற்றல் இல்லை என்று சந்தேகப் படுகிறேன். சிந்திப்பது என்பது வேறுபாடுகளை மறப்பது, பொதுமைப்படுத்துவது, சாரத்தைக் காண்பது. ஃபியூன்சிஸ் உலகில், விபரங்கள் மட்டுமே, முன்னால் மிக அருகில் நின்றன.

*மண் முற்றத்தில் காலைக் கதிரவனின் தயங்கிய ஒளி நுழைந்தது.*

அப்போது இரவெல்லாம் பேசிய குரலுக்குச் சொந்தமான முகத்தைப் பார்த்தேன். ஐரினியோவுக்கு பத்தொன்பது வயது. அவன் *1868*ஆம் ஆண்டு பிறந்தான். அவன் தாமிரம் போன்று ஒரு நினைவுச் சின்னமாக, எகிப்தை விடப் பழமையானவனாக, முன்னறிவிப்பு களுக்கும், பிரமிப்புகளுக்கும் மூத்தவனாக எனக்குத் தோன்றினான். என்னுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் (என்னுடைய அசைவுகள் ஒவ்வொன்றும்) அவனுடைய சமரசமற்ற நினைவில் தொடரும் என்று நினைத்தேன். பயனற்ற சைகைகளை அதிகப்படுத்திக் கொண்டே போவதன் அச்சத்தில் நான் மரத்துப் போனேன்.

*ஐரினியா: ஃபியூன்ஸ், நுரையீரல் நோயினால் 1899ஆம் ஆண்டு இறந்தான்.*

* * *

ஃப்யூன்சின் மூளைச்சிதைவு அவனுக்கு அதீதமான நினைவாற்றலைத் தந்திருக்கிறது. இது ஆலிவர் சேக்ஸ் மிகுதி *(Excess)* வகையைச் சேர்ந்தததது. ஃப்யூன்சுக்கு நினைவாற்றல் விபத்துக்கு முன்னால இருந்ததைவிட் இப்போது அதிகமாகிறது; கற்பனை வளமும் கூடுகிறது. விபரங்களைக் காணமுடிகிறது. ஆனால் பொதுமைப்படுத்த *(generalization)* இயலவில்லை. திராட்சைக் கொடிகளின் இலைகள் காம்புகளைக்கூட அவனால் சரியாகச் சொல்ல முடியும். ரியோ கறுப்பர் ஆற்றில் துடுப்பு கிளப்பும் நுரையின் ஓரத்தில் இருக்கும் கோடுகளையும் நினைவில் வைத்திருந்தான். அவனுடைய காட்சிப் படிவமும் தசை உணர்வு, வெப்ப உணர்வு முதலியவற்றோடு தொடர்புடையது என்று பார்ஹேஸ் விவரிப்பது ஒரு நரம்பு உளவியலாளரின் விவரிப்பு போலவே இருக்கிறது. அவனுக்குச் சிந்திக்கும் ஆற்றல் இல்லையென்று கதைசொல்லி முடிவு கட்டுகிறார். சேக்சின் நோயாளி தாம்சன் பேசிக்கொண்டே இருக்கிறார். சேக்சும் இரவுமுழுவதும் பேசுகிறான். தாம்சன் இட்டுக்கட்டிப் பழங்கதை பேசினால் இவன் புதிய கணக்கிடும் முறையைக் காணமுயல்கிறான்.

ரோடெரிகோ க்விரோகா என்ற உயிர்ப்பொறியல் துறையில் வல்லுநர், ”ஃப்யூன்ஸ் கதையில் பார்ஹேஸ் நரம்பு அறிவியல் வளர்வதற்கு முன்னரே நினைவுத்திறன்களின் சீர்குலைவுகளால் ஏற்படும் சிக்கல்களைத் துல்லியமாக விளக்கியிருக்கிறார்,” என்று குறிப்பிடுகிறார். புது நினைவுகள் உண்டாவதற்கு மூளையிலுள்ள ஹிப்போகேம்பஸ் என்ற பகுதி முக்கியப் பங்கு வகிக்கிறது. அவற்றிலுள்ள நியூரான்கள் புலன் காட்சியையும் நினைவையும் தொடர்புபடுத்துகின்றன. அவை இல்லாதபோது பொதுமைப்படுத்தும் அல்லது சாரத்தை எடுக்கும் ஆற்றல் குறைந்துபோகிறது. அதுதான் ஃப்யூன்ஸ் விஷயத்தில் நடந்தது என்று ரோடெரிகோ சொல்கிறார்.

இவ்வாறு பார்ஹேசின் சிறுகதையை உளவியல், குறிப்பாக நரம்பு உளவியல்' அடிப்படையில் ஆராய்வது, ஃபியூன்சையும் பார்ஹேசையும் புரிந்துகொள்ள உதவும்.

---

e-mail : vincentsoundaram@gmail.com

# சிறுமி கத்தலோனா

சாதனா (ஜெர்மனி)

வழக்கம்போல், தற்கொலை செய்து கொள்ளலாமா? என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதுதான் முழுவதுமாய் கண்ணாடிபோடப்பட்ட அந்த ஜன்னலை உற்றுப் பார்த்தார். அதில் நத்தையொன்று மெதுவாக மிக மெதுவாக ஊர்ந்து கொண்டிருப்பது தெரிந்தது. அதனருகினில் சென்று பார்த்த போது, நல்லவேளை... கண்ணாடிக்கு வெளிப் பக்கமாய்த்தான் அது இருந்தது. தனது வலது கையின் கட்டைவிரலுக்கு அடுத்துள்ள விரலினால் கண்ணாடியைத் தேய்த்து நத்தையை உசுப்பினார். அது தன்னுடைய உணர்கொம்புகளிலாலான தலையைத் தூக்கி அப்படியே நின்றுவிட்டு பின்னர் மீண்டும் தன்னுடைய பயணத்தைத் தொடரலாயிற்று.

எத்தனை மணிநேரமென்று சரியாகத் தெரியவில்லையென்றாலும் நேற்றிலிருந்து மழையானது ஒரு பிடிவாதத்துடன் கொட்டிக் கொண்டிருக்கின்றது. அதன் காரணமாகத்தான் நத்தையும் வந்திருக்க வேண்டும். இந்த வருடத்துக் கான மழைக்காலம் தொடங்கி இது மூன்றாவது நந்தை. முதலில் வந்தது இதைவிட சற்றுப் பெரியது. உடல் முழுவதும் ஒருவிதப் பச்சை நிறமாயிருந்தது. கூடும் பெரிது. இரண்டாவது நத்தை, இதனைப் போன்றே அளவுடையது. ஆனால், அதன் உணர்கொம்புகளானது சம அளவிலில்லாமல் ஒன்று பெரிதாகவும், மற்றது சிறிதாகவுமிருந்தது.

சிலோன் நாதன், தன் வீட்டிலிருந்த கண்ணாடிப் பெட்டியொன்றில் ஒரேயொரு நந்தையை வளர்த்து வந்தார். இது மூன்றாவது வருடம். இதேபோன்றதொரு மழைநாளில்தான் குட்டியாக யிருந்த இந்த நத்தையைக் கண்டு பிடித்து அதற்கு அடைக்கலமும் கொடுத்திருந்தார். என்ன காரணமோ? அந்த நத்தைக்கு சிலோன் நாதனென தன்னுடைய பெயரையே வைத்திருந்தார்.

துண்டை எடுத்துக்கொண்டு குளிக்கப் போனார். அவருடைய அடர்ந்த தலைமயிர்க் கற்றைக்குள் வெதுவெதுப்பான நீரானது நுழைந்து தேகம் முழுவதும் படரத் தொடங்கிய போது தற்கொலை எண்ணம் அவருள் மீண்டும் கிளர்ந்தெழுந்தது. இந்தத் தற்கொலை எண்ணம் இன்றென்றல்ல, கிட்டத்தட்ட வருடக்கணக்கில் அது அவருக்குள் கிடந்து படுத்தியது. சாவதென்பது அவ்வளவு கடினமான விடயமல்ல. ஒரு உத்தரமும், நான்கடி கயிறுமே போதுமானது. முதலில் உத்தரத்தில் கயிற்றைத் தொங்கவிட்டு அது உறுதியாகயிருக்கிறதாயென ஒன்றுக்கு இரண்டு தடவைகள் இழுத்துப் பார்த்து திருப்தியில்லையாயின் மறுபடியும் இறுக்கிக் கட்டிப் பின்னர், கயிற்றின் மறுமுனையில் ஒரு சுருக்கைப் போட்டு அதில் உங்கள் கழுத்தைக் கொடுக்க வேண்டும். முதலில் உங்கள் குரல்வளையானது இறுகி...

வாஸ்தவம்தான். எல்லாம் சரிதான் ஆனால் செத்துப் போவதில் ஒரு மிகப் பெரிய கொடுமை யாதெனில் நாம் செத்துப்போனது நமக்கே தெரியாமல் போய்விடுவதுதான். மரணத்தில் உள்ள அதிக உச்சபட்ச வலியே அதுதான். சாவின் வலியைவிடக் கொடூரமானது.

இந்தச் சிந்தனைதான் சிலோன் நாதனை அதிகமும் துன்புறுத்தியது. ஒருதடவை, தூக்கு மாட்டி தற்கொலைக்கும் முயற்சி செய்தார். கழுத்தைச் சுற்றி இறுக்கியிருந்த கயிற்றை இரண்டு கைகளினாலும் இறுக்கிப் பிடித்துக் கொண்டு தான் நின்றுகொண்டிருந்த கதிரையிலிருந்து கால்களைத் தொங்க விட்டார். கயிறு, கைகளோடு சேர்ந்து அவரின் கழுத்தினையும் இறுக்கியது. கண்கள் இருண்டு,

மூச்சுத் திணறி, தொண்டை நசிய, ஒரு வினாடியோ இரண்டு வினாடியோ இன்னும் கொஞ்சநேரத்தில் செத்துவிடுவோமென்று தோன்றியபோது, ரொம்பவும் பிரயத்தனப்பட்டு, என்னவெல்லாமோ செய்து நல்லவேளையாக... கதிரையில் கால்களை ஊன்றிக் கொண்டார். கழுத்து வலிப்பதுபோல் பட்டது. ஒரு அந்தரமான நிலையொன்றில் தள்ளாடிக் கட்டிலில் சரிந்தவர், தொடர்ந்து பத்து நிமிடங்கள் வரை பெருக்கெடுத்த இருமலினால் அவஸ்தைப்பட்டார். ஒருவாறாகச் சமாளித்துக் கண்ணாடியில் கழுத்தைப் பார்த்தவர், அதில் மெல்லிய இரத்தக்கோடுகள் இருப்பதைக்கண்டு கைகளினால் தொட்டுப் பார்த்தார். எரிந்தது. எரியட்டும் என்பதைப் போல அவர் மறுபடியும், மறுபடியும் கழுத்தினைத் தடவிக் கொடுத்தார்.

ஆகவே, செத்துப்போவதில் சிலோன் நாதனுக்கு சிக்கலில்லையெனினும்தான்செத்துப்போனபின் அதைத் தனக்கு அறிவுறுத்தப்போவது யாரென்பதை நினைக்கும்போதுதான் சிக்கல் ஏற்பட்டது.

குளித்து முடித்து, சுற்றித் துண்டு கட்டிய தேகத்துடன் அரைநிர்வாணமாக வெளியே வந்த அவர், நேராகக் கண்ணாடிப் பெட்டிக்குச் சென்று, காய்ந்துபோன குச்சியொன்றில், தன்னுடைய மென்மையான, ஈரலிப்பு நிறைந்த தேகத்துடன் ஊர்ந்து செல்லும் நத்தையை மறுபடியும் பார்த்துக் கொண்டார்.

பின்னர், நத்தையென எழுதப்பட்டு, அதன் கீழ் நத்தையொன்றின் உருவப்படமொன்றும் வரையப்பட்டிருந்த கொப்பியொன்றினையெடுத்து சில பக்கங்களைப் புரட்டி அதில் எழுதப்பட்டிருந்ததைப் படித்தார். அது கீழ்வருமாறு இருந்தது.

- நான் நத்தையொன்றினை வளர்த்து வருகின்றேன். அதற்கு சிலோன் நாதனென என்னுடைய பெயரையே வைத்திருக் கின்றேன்.
- தலையில் இரண்டு உணர்கொம்புகளைக் கொண்ட வயிற்றுக்காலிகள் வகுப்பினைச் சேர்ந்த ஒரு உயிரியே நத்தையாகும்.
- *“PULMONATA”* எனப்படும் நத்தைகள் நுரையீரல்களின் மூலம் சுவாசிக்கும் தன்மையும், *“PARAPHYLY”* எனப்படும் நத்தைகள் செவுள்களின் மூலம் சுவாசிக்கும் தன்மையும் கொண்டவை.
- நத்தைகள் குறித்து இன்னும் சொல்லவேண்டுமென்றால் அவை தன் வீட்டைத் தானே சுமக்கும். மழைக்காலங்களிலோ, அல்லது தனக்கு ஒவ்வாத காலநிலையைக் கொண்ட காலங்களிலோ தன் முதுகிலுள்ள ஓடு போன்ற கூட்டினுள் தன்னை மறைத்துக் கொள்ளும். தன்னுடைய இந்தத் தன்மையை எதிரிகளிடமிருந்துபாதுகாத்துக்கொள்ளவும் அவை பயன்படுத்துகின்றன.

படித்து முடித்ததின் பின் மேற்கண்டவாறு எழுதப்பட்டிருப்பதின் கீழ் கீழ்கண்டவாறு எழுதினார்.

- நத்தை ஒருகிலோமீட்டர் அளவிலான தூரத்தைத் தாண்டுவதற்கு ஒரு கிழமை வரை எடுத்துக் கொள்ளும்.

சிலோன் நாதனின் அறையின் மேற்கு மூலையிலிருந்த அலமாரியொன்றில் அவருடைய புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. அந்தப் புத்தக அலமாரியின் மையப் பகுதியில் முழுவதுமாய் வெள்ளையாயிருந்த புத்தபெருமான் பெருத்த மவுனத்தோடு குந்தியிருந்தார்.

*1*

முன்பு போலில்லாமல் இப்போதெல்லாம் என்ன காரணத்திற்காகவோ பேருந்து வருவதற்குக் குறைந்தது ஒரு மணித்தியாலம் இருப்பதற்கு முதலே தரிப்பிடத்திற்குச் சென்று விடுவார். அது அவருக்குப் பிடித்திருந்தது. வீட்டிலிருப்பதை விட இப்படி எதற்கோ காத்துக்கொண்டிருப்பது சந்தோஷம் தருவதாகவும், வெறுமை படர்ந்திருந்த மனதிற்கு அது உற்சாகம் தருவதாகவும் அவருக்குத் தோன்றியது. ஒருவகையில், இப்படி பேருந்துக்காகக் காத்திருத்தலும், மரணத்திற்காகக் காத்திருத்தலும் ஒன்றெனவே அவர் நினைத்தார். தான் மற்றவர்களைப் போலில்லையென்றும் அவருக்குத் தெளிவாகவே தெரிந்தது. ஏதோ ஒன்று தன்னை விடாமல் இம்சிப்பதாகவும், அது எப்போதும் தன் பக்கத்திலேயேயிருப்பதாகவும் ஒரு மாய ஆவியைப் போல் தன்மீது படர்ந்திருப்பதாகவும் அவர் நினைத்தார். சரணாகதி என்று

சொல்வார்களே அதைப்போல் என்னவென்றே தெரிந்துகொள்ள முடியாத ஒரு வஸ்துவிடம் தான் அடைக்கப்பட்டுள்ளேனா? எனவும் அபத்தமாகச் சிந்திக்கத் தோன்றியது.

பேருந்தின் கடைசி இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டார். அந்த இருக்கைக்கு முன்னால் ஒரு கண்ணாடி போடப் பட்டிருந்தது. சிலவேளைகளில் தான் தனக்குள்ளே பேசிக்கொள்வதை மற்றவர்கள் அறியாதபடி அந்தக் கண்ணாடி தன்னை மறைத்துக்கொள்ளுமென அவர் நம்பினார். அந்த நம்பிக்கையினூடே தனக்குள் பேசவும் ஆரம்பித்தார். அப்படியான நேரங்களில் சிலோன் நாதனின் தேகமானது ஒரு இரும்பினைப் போல் இறுகத் தொடங்கி, கால்கள் உதறிப் படபடக்கும். மண்டை கனத்து மூளை நரம்புகள் வெடித்துவிடுமாற் போலிருக்கும். கத்தியொன்றினை எடுத்து நேராக நடு மண்டையில் இறக்கினாற் தேவலாம் என்றிருக்கும்.

தன்னை மறந்து, சுற்றியிருப்பவர்களை மறந்து, ஏன் உலகத்தினைக்கூட மறந்து அடித்தொண்டையில் பிதற்ற ஆரம்பிப்பார். நேரக்கணக்கெல்லாம் கிடையாது. எப்போது தன்னினைவு வந்து பிரக்ஞை ஏற்படுகின்றதோ அப்போது பதறியடித்துச் சுற்றும், முற்றும் பார்ப்பார்.

இப்படித்தான் ஒருதடவை, இவர் தனக்குள் பேசிக் கொண்டிருந்தபோது எதிரிலிருந்த வெள்ளைக்காரப் பெண் அதைக் கவனித்து விட்டாள். சிலோன் நாதனுக்குப் பெருத்த அவமானமாகப் போய்விட்டது. இரண்டாம் தடவை அந்தப் பெண்ணைச் சந்திக்க நேர்ந்தபோது இவரையே வைத்த கண் வாங்காமற் பார்த்துக் கொண்டிருந்தவள், சட்டெனக் கண்ணாடிப் பக்கமாய் பார்வையைத் திருப்பி 'க்ளுக்' கென்று சிரித்தாள். மறுபடியும் அதே புன்னகையோடு சிலோன் நாதனைப் பார்த்தாள். இப்போது சிலோன் நாதன் பார்வையை மறுபுறமாகத் திருப்பிக் கொண்டார். அன்றிலிருந்து சிலோன் நாதன் அந்தப் பேருந்தில் போவதை விடுத்து அதற்கு அடுத்ததாக வரும் பேருந்தில் ஏறி, சென்ராஃல்ப் புங்டில் இறங்கி, இன்னொரு பேருந்து பிடித்து... அதையே வழக்கமாக்கிக் கொண்டார்.

இவ்வாறாக மரணம் அவருள் மிகப்பெரும் குழப்பத்தினையும், அயர்ச்சியினையும் ஏற்படுத்தியது. வாழ்வுக்கும், மரணத்திற்கும் இடையில் ஒன்றுமேயில்லை என்றவாறாகப் பட்டது. அந்த இடையென்பது வெறும் பிரம்மை. சூனியங்களினால் நிரப்பப்பட்ட மாயவெளி. ஒருவகையில் வாழ்வென்பது பைத்தியக்காரத்தனமென அவர் நினைத்தார். சுற்றியிருப்பவர்களெல்லோரும் பித்தர்கள். வாழ்வு நிலையானதல்ல; மரணம் மட்டுமே நிலையானது. இறப்பிற்குப் பின் நாம் ஒன்றுமே இல்லை. தேகம், உயிர், ஆன்மா உட்பட அனைத்துமே அழிந்து விடுகின்றது. எங்களுடைய இறப்பை எங்களாலே அறிந்து கொள்ளமுடியாதெனில் வாழ்வதின் அர்த்தம் தான் என்ன? நினைத்துப் பார்த்தபோது வேடிக்கையாகயிருந்தது. சிலோன் நாதன் தனக்குள் சிரித்துக் கொண்டார். வாழ்க்கை என்பது என்ன? மரணத்திற்காக காத்துக் கொண்டிருப்பதுதான் வாழ்க்கை. மரணத்தை விடுத்து இந்த லௌகீக வாழ்க்கையில் வேறெதுவுமேயில்லை.

மரணம் தான் எல்லாவற்றுக்கும் தொடக்கமாக இருக்கிறது. இன்பம், துன்பம், காதல், காமம், கோபம், அன்பு, அபூரணம், புண்ணியம் இவையெல்லாமுமே மரணத்தை நோக்கித்தான் நம்மை இழுத்துச் செல்கின்றன. வாழ்க்கையென்பது வெறும் பயணம் மட்டுமே. இப்பயணத்தின் முடிவுதான் மரணம். தெரிந்தோ, தெரியாமலோ நாமெல்லோரும் மரணத்தை நோக்கி பிரயாணம் செய்யும் பிரயாணிகளாய் இருக்கின்றோம்.

அப்படியெனில் மறு பிறப்பு? அதெல்லாம் சுத்தப் பொய். சுயலாபத்திற்காய் யாரோயொருவன் அவிழ்த்துவிட்ட தகிடுதத்தம்தான் அது. இறப்புத்தான் மனிதனின் கடைசி முடிவு. அதைத் தாண்டி எதுவுமேயில்லை. வாழ்விற்கும், இறப்பிற்கும் இடையிலான ஒரே வேறுபாடு... வாழ்வு, அடுத்த க்ஷணமே, எதிர்பாராத நேரத்தில், நினைத்தேயிருக்காத சூழ்நிலையொன்றில் எம்மைக் கைகழுவி விட்டுவிடும். ஆனால் மரணம் அப்படியல்ல; அது எப்போதும் நம்மை கை விடாது. நாம் நடந்துகொண்டிருக்கின்றோம், நம்மெதிரே ஒரு அகண்ட குகையிருக்கின்றது; அந்தக் குகைதான் மரணம். நடந்துகொண்டிருக்கும் அனைவரும்

என்றோ ஒருநாள் அந்தக் குகைக்குள் செல்வது நிச்சயம். ஒரு மாபெரும் மிருகத்தின் பிளந்த வாயினைப் போல் அந்தக் குகையிருக்கின்றது.

தலைமுடியைப் படியவிட்டிருக்கும் இந்தப் பெண்தான் இன்றைய நாளின் முதல் வாடிக்கையாளர். இரண்டு கறுப்பு நிறப் பாண்களும், ஆலிவ் விதைகள் தூவப்பட்ட குண்டுப் பாண்கள் நான்கும் வாங்கினாள். சிலோன் நாதன், வெள்ளை நிறத்தில் நீலக் கட்டம் போட்ட துணியை எடுத்து நெஞ்சுப் புறமாக வைத்து நேராகயிருக்கின்றதாயெனப் பார்த்து அதன் கயிறுகளை முதுகுப்புறமாக எடுத்தார். பின் மறுபடியும் அதை நெஞ்சுக்கே எடுத்து, லேசாக இறுக்கி, பின்னர் மறுபடியும் முதுகுக்கே கொடுத்துக் கட்டினார். திரு. மைக்கல் பாஷ்பேர்க் ஏற்கனவே பிசைந்து வைத்திருந்த மாப்பிண்டத்தை எடுத்து, மேசையில் கிடத்தி, அதை ஒரு தேர்ந்த கலைஞனைப் போல் சிறு சிறு துண்டுகளாக வெட்ட ஆரம்பித்தார்.

அரை மணி நேரத்தில் எல்லா வேலையையும் முடித்தாயிற்று. இனி இயந்திரம் சத்தம் எழுப்பும்போது அதை நிறுத்தி, தயாராகியிருக்கும் பாண்களை வகை பிரித்து அடுக்கியில் அடுக்கினால் சரி. இரண்டாவதாக வந்தவருக்கு வயது அதிகமிருக்கும். ஆமை ஊருமாற் போல் ஊர்ந்து பாஷ்பேர்க்கை அணுகியவர், வயதானவர்கள் உண்ணும் கறுப்புப் பாண்கள் ஆறு வங்கினார். அவர் போனதும் சிலோன் நாதன் பாஷ்பேர்க்கை அணுகி வணக்கம் தெரிவித்தார்.

*மரணத்தை விரும்பும் மனிதனே எப்படியிருக்கின்றாய்?*

பாஷ்பேர்க் இப்படிச் சொன்னதும் சிலோன் நாதன் மெதுவாகச் சிரித்து பின், பாண்கள் கணப்பில் வேகின்றன என்றும், முடிந்ததும் அவைகளை வகைபிரித்து அடுக்குகின்றேனென்றும் சொன்னார். பதிலுக்கு பாஷ்பேர்க் தலையை ஆட்டி நன்றி தெரிவித்தார். பின்னர், தன் பின்னாலிருந்த சிகப்பு நிற குண்டு மெழுகு திரிகள் ஆறினையும் பற்ற வைத்தார். பன்றி வடிவ உண்டியலையெடுத்து கல்லாவின் மீது வைத்தவர் அன்றைய தன்னுடைய பங்காக அய்ந்து யூரோத் தாளொன்றினை அதற்குள் தள்ளினார். சிலோன் நாதன் மேசையின் மீதடுக்கப்பட்டிருந்த கதிரைகளை எடுத்து கீழே வைத்தார். அது முடிந்ததும், மேசைகளை ஈரத் துணியொன்றினால் துடைத்து சுத்தப்படுத்தினார்.

அதன் பின் அய்ம்பது வயது மதிக்கத்தக்க மனுசியொருத்திவந்து பத்துத்துண்டு பாண்களும், சுடச் சுடச் கோப்பி குவளையொன்றும் வாங்கினாள். பாஷ்பேர்க் மீதிக்காசுகளை சில்லறைகளாகக் கொடுத்தபோது, நானொன்றும் உன்னிடம் பிச்சையெடுக்க வரவில்லையென முணுமுணுத்துவிட்டுச் சென்றாள்.

*2*

காலெலும்பு முறிந்து தொங்கும் சிறுமி யொருத்தியை அவர்கள் இரத்தம் சொட்டச் சொட்டத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். நான் அலறிக் கொண்டிருந்த சிறுமியைக் கைகளில் வாங்கி நிலத்தில் கிடத்தினேன். வெளியே மழை பெய்து கூரை பெயர்ந்த ஆஸ்பத்திரி மண்டபத்தில் ஒழுகிக் கொண்டிருந்தது. கூடவே மக்களின் தீராத ஓலம். நான் இவை எவற்றையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் சிறுமியின் காலைப் பாதுகாப்பதிலேயே குறியாகயிருந்தேன். பாதியெலும்பு உடைந்து விட்டது. இரத்தம் வேறு ஒழுகிக் கொண்டிருக் கின்றது. முதலில் உடைந்துபோன காலெலும்பு களைப் பொருத்த வேண்டும். விலகியிருந்த எலும்புகளை ஒன்றாகப் பொருத்தி அது அசையாதவாறு கட்டையொன்றியையும் வைத்து துணியொன்றினால் கட்டினேன். இரத்தமானது வெளியேறுவது குறைந்திருந்தது. சிறுமியின் தலையை ஆறுதலாக வருடிக்கொடுத்து வலிக்கிறதாயென்றேன். அவள் பதிலேதும் சொல்லமால் தன் தேகத்தினை ஒரு பாம்பினைப் போல் அசைத்து, உதடுகளிரண்டையும் இறுக்கக் கடித்தாள். பெதிடின் இருக்கிறதாயெனப் பார்த்தேன். மோர்ஃபீன் தானிருந்தது. உண்மையில் மோர்ஃபீன் கொஞ்சம் ஆபத்தானது. கஞ்சா அடித்ததைப் போன்று ஒருவித மயக்க நிலையை உருவாக்கும். வலி தெரியாது.

கொடுப்பதா? இல்லையாயென்று யோசித்துக் கொண்டிருக்கும்போதுதான் அந்த மண்டபத்தின் பிரதான கதவைத் திறந்துகொண்டு உள்ளிட்டார்கள். அவர்கள் இராணுவப் பெண்கள். பச்சைநிறச் சீருடையினையும், சற்றே பெரிய சப்பாத்தினையும் அணிந்திருந்த



ஓவியம்: ஜே.கே.

அவர்கள், எங்கள் எல்லோரையுமே கைது பண்ணி அழைத்துப் போனார்கள்.

பெயர் தெரியாத முகாமொன்றில் நாங்கள் அடைக்கப்பட்டிருந்தோம். விசாலமான மண்டபம். உயரத்தில் பெட்டிப் பெட்டியாக ஜன்னல்களிருந்தன. அதனிலிருந்து மாலை நேரத்துச் சூரிய வெளிச்சம் கசிந்தபடியிருந்தது. அப்போது, வளைவாகயிருந்த படிகளில் இறங்கியபடி அவர்கள் வந்தார்கள். அவர்களில் தலைவி போலிருந்தவளுக்கு நாற்பது வயதுக்கு மேலிருக்கும். அவளின் தேகத்தினை விடவும் மார்புகள் தள்ளிக்கொண்டு பெரிதாகயிருந்தன. ஒரு மிடுக்குடன் நடந்து தொப்பியைக் கழற்றி மேசையில் எறிந்தாள்.

(அ) இந்தியாவெ இதலா ரஸ்சாவ ஒயாகெனெ ஆபு பிஸ்சொன்ட லங்காவ ஓனெத?

முழங்காலில் நிற்க வைக்கப்பட்டிருந்த எங்களை நோக்கி அவள் அவ்வாறு கூறியபோது, ஏதோ ஒன்று ஆனால் கனதியான, வஜ்ரத் தின்மைகொண்டு என் தொண்டையில் தொக்கி நின்று வெளியே வர மறுத்தது. எதிர்காலம் குறித்த பயம் அந்த 'ஏதோ ஒன்றை' என் வாயிலிருந்து வெளிவராமற் தடுத்தது. என்னருகில் வந்து (ஆ) கோமத என்றாள்.

மஞ்சற் கறை படிந்த அவளின் பற்களின் வாயிலிருந்து பேசும்போது ஒருவிதமான தாங்கிக்கொள்ளவே முடியாத நாற்றமெடுத்தது. எனக்கு வாயில் வருமாற் போலிருந்தது. சிரமப்பட்டு மூச்சை அடக்கி வைத்திருந்தேன். அந்தச் சிங்களப் பெண் என் முகத்துக்கு அருகாக ரொம்ப அருகாக ரொம்ப ரொம்ப அருகாக தன்னுடைய முகத்தைக் கொணர்ந்து பற்களைக் காட்டிச் சிரித்தாள். அதுவொரு அகோரம் நிரம்பிய புன்னகையாயிருந்தது. இன்னொருவிதமாகச் சொல்வதாகயிருந்தால் வெற்றியின் புன்னகை. நான் அவளுடைய பார்வைக்கு அஞ்சி என்னுடைய தலையை வேறுபக்கமாகத் திருப்ப எத்தனித்தபோது வேகம்கொண்டு என்னுடைய நாடியைப் பற்றிக் கொண்டாள். இருப்புப் பிடி. ஒரு பெண்ணின் கைகளில் இத்தனை பெலம் இருக்குமென்பதை நான் அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். வெடிச் சிரிப்பு சிரித்தவள், திடீரென்று அதை நிறுத்தி (இ) உம்ப கவுத? என்றாள்.

குப்பென்று வாயிலெடுத்தேன். சளிபோல் ஏதோ வந்தது. அவள் மறுபடியும் என் நாடியைத் தாங்கிப் பிடித்து முறைத்தாள். டொக்ட்டர் என்றேன்.

பூதம் சிரித்தாற் போலச் சிரித்தவள், திரும்பி தன் தோழிகளைப் பார்த்து (ஈ) மேஹ மே மனுஸ்சயா வைத்தியவரயெக்லு என்றாள். அவள் இப்படிச் சொன்னதும் மற்றைய இராணுவப் பெண்கள் ஏதோ பெரிய பகடியைக் கேட்டதுபோல் என்னையே பார்த்துக்கொண்டு கொல்லென்று சிரித்தார்கள். அது தாங்க முடியாத ஆத்திரமாகவும், அவமானமாகவும் எனக்குள் இறங்கியது. இப்போது தலைவி தன் கால்களினால் என்னை எட்டி உதைத்தாள். நிலத்தில் சரிந்து, உருண்டு விழுந்தேன். வலி ஏதோ செய்தது.

பின் மெதுவாக நடந்து வந்தவள், காறி உமிழ்ந்து இப்படிச் சொன்னாள். (உ) வைத்யவரயெக் உனாம மொகத ரடக விதுஹல்பதிதுமா உனாம மொகத? அபிட தெமல அய ஒக்கம பல்லா தமய் உத்தோ தூக்கி வாரிப்போட்டது. உத்தோவா? அல்லது உம்பெர்த்தோ எக்கோவா? உம்பெர்த்தோ எக்கோவுக்கும் இவளுக்கும் என்ன சம்பந்தம்? சந்தேகமேயில்லை அவள் என்னைப் பார்த்து உத்தோ என்றுதான் சொன்னாள். என் தேகம் பஞ்சாட்டம் ஆனதைப் போலிருந்தது. ஒரு கிரகத்திலிருந்து அப்படியே அல்லேக்காக இன்னொரு கிரகத்திற்கு மாறி மாறி, குறைந்த பட்சம் இரண்டு தடவைகளோ, அல்லது மூன்று தடவைகளோ இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாக தூக்கியெறியப்படுவதைப் போலுணர்ந்தேன். எப்படியென்று சொல்லிவிட முடியாத தன்னினைவு இழந்து சுற்றியிருப்பவர் களைப் பார்த்தேன். கையறு நிலையில், கண்களில் அச்சம் தெரியுமாறு கூட்டம் நிற்க அவர்களில் ஒரு இளம் பெண், காதலோ? என்ன கண்றாவியோ? என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். நான் பெரும் லஜ்ஜையுடன் தலையைத் தாழ்த்தி தரையைப் பார்க்கலானேன். ஆனாலும் அந்த வார்த்தை உத்தோ ஒரு கொடூரப் பிணம்தின்னிப் பறவையாக மாறி என் தலையைச் சுற்றிச் சுற்றி வந்தது. அதன் கர்ணகொடூரமான குரல் இதயத்தில் ஊடுருவி இரத்தக் குழாயை அடைத்தது.

பின்வந்த நாட்களில், நான் பாதாள அறையொன்றில் அடைக்கப்பட்டிருந்தேன்.

தேகம் நிர்வாணமாயிருந்தது. குளிரில் என் தேகமானது நடுங்கிக்கொண்டிருக்க குறண்டிப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பேன். என் எதிரே உத்தோ உட்கார்ந்திருந்தார். முழு அம்மணமாய்க் கால்களைப் பரப்பி அவர் உட்கார்ந்திருக்கும் தோரணையே எனக்கு பலவேளைகளில் எரிச்சலைக் கிளப்பும். அத்தோடு நின்றிராமல் அவர் தினந்தோறும் என்னைப் பார்த்து உத்தோ உத்தோயென்று சீண்டிக்கொண்டேயிருந்தார். நான் அவரைக் காலால் எட்டி உதைப்பேன். அப்போதும் கூட அவர் என்னைப் பார்த்து உத்தோயென்று கூறிக்கொண்டேயிருந்தார். காலப்போக்கில் உத்தோ என்ற அந்தச் சொல் அந்தப் பாதாள அறை முழுவதும் நிரம்பியிருப்பதாய் எனக்குப் பட்டது. அதன் பிறகே அவர் என்னை தற்கொலை செய்துகொள்ளச் சொன்னார்.

சரியாக மூன்று மாதங்களின் பின் நான் விடுதலையானேன். விடுதலையாகும் அந்தத் தருணத்தில் கூட இராணுவப் பெண் என்னைப் பார்த்து பல்லிளித்தாள். தனது இடதுபுறக் கையினால் எனது ஆண்குறியைப் பிடிக்க வருவதுபோல் பவ்வியம் செய்தாள். நான் சடுதியாக அவளை விட்டு விலகி, ஓரமாய்ப் பாய்ந்தபோது அவள் மறுபடியும் தன்னுடைய அகோரம் நிரம்பிய பற்களைக் காட்டிச் சிரித்து, உத்தோ என்றாள்.

*3*

இவையனைத்தையும் மாமாவிடமிருந்து 'தோரின்' கதையைக் கேட்கும் ஒரு குழந்தையின் தோரணையுடன் கேட்டுக்கொண்டிருந்தவர் எழுந்து கழிப்பறைக்குச் சென்றார். அவர் திரும்பி வரும்போது திராட்சை ரசப் போத்தலொன்று அவர் கையிலிருந்து. இரண்டு குவளைகளையெடுத்தவர் இருவருக்குமாக ஊற்றி, ஒன்றை சிலோன் நாதனிடம் கொடுத்தார். தன்னுடைய குவளையிலிருந்த திராட்சை இரசத்தை ஒரே மடக்கில் குடித்து முடித்தவர் மறுபடியும் அதை நிரப்பிக் கொண்டார். பின் சிலோன் நாதனைப் பார்த்து இப்படிச் சொன்னார்.

நல்லவர்கள் எப்போதும் அவமானப்படுத்தப் பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். ஆனால், அவற்றையெல்லாம் நினைத்துக்கொண்டிருப்பது மகா அபத்தம். ஒரு வாடிக்கையாளன் என்னைச் சூத்தோட்டையெனத் திட்டினான். உன்னைப் போன்றுதான் நானும்; நித்திரையற்றுத்திரிந்தேன். ஆனால் அதெல்லாம் கொஞ்ச காலம்தான். என் மனைவி என்னை ஆறுதல்படுத்தினாள். அவளின் வார்த்தைகளில், ஸ்பரிசத்தில் எல்லாமுமிருப்பதாக நான் உணர்ந்தேன். ஒரு பெண்ணின் அரவணைப்பினைப் போல் சிறந்தது எதுவுமில்லை.

அப்போது ஒரு பதினெட்டு வயதுப் பெண்ணொருத்தி பாஷ்பேர்கிடம் நலம் விசாரித்து இனிப்புப் பாண்கள் சிலவற்றை வாங்கிச் சென்றாள். அவள் போனதும் மறுபடியும் பாஷ்பேர்க் குடிக்கத் தொடங்கினார். சிலோன் நாதனுக்கு பாஷ்பேர்க் பற்றி நினைக்கும்போது ஆச்சர்யமாகயிருந்தது. கடை திறந்ததிலிருந்து இந்த நிமிஷம் வரை குறைந்தது ஒரு ஏழெட்டுப் பேரே வந்திருப்பார்கள். சிறப்பான வியாபாரமென்று சொல்வதற்கில்லை. இன்றென்றல்ல; தினந்தோறும் இதுதான் வாடிக்கை. ஆனால் அது குறித்து பாஷ்பேர்க் துன்பப்பட்டதாகவும் தெரியவில்லை. மாதம் பிறந்தால் தன்னுடைய ஊழியப் பணத்தை எந்தவொரு முகச்சுளிப்புமற்று கொடுத்துவிடும் அவரை சிலோன் நாதனுக்கு ஒரு தேவ ஊழியக்காரனாகவே நினைத்துக் கொள்வார்.

பாஷ்பேர்க் மறுபடியும், மறுபடியும் குடித்துக்கொண்டேயிருந்தார். சிலோன் நாதன் தன்னுடைய முதலாவது குவளையை ஒருவாறாகக் குடித்து முடித்தார். மறுபடியும் மரணம் பற்றியே அவர் சிந்தித்தார். பின் தலையை உலுப்பி விடாப்பிடியாக உலகுக்குள் நுழைத்தால் வெளியே இருண்மை கண்டிருந்தது. மா படிந்திருந்த தட்டுகளை ஒவ்வொன்றாகக் கழுவித் துடைத்து அடுக்கினார். திராட்சை இரசத்தின் போதை அவரைச் சற்றே தள்ளாட வைத்தது. நெஞ்சில் படிந்திருந்த துணியை அவிழ்த்து கதவின் பின்பக்கமாய் கொழுவியபோது பாஷ்பேர்க் அவரை அழைத்து நடனமாடினார். சிலோன் நாதனின் குவளை மீண்டுமொருமுறை நிரப்பப்பட்டது. பழைய ஜெர்மானிய பாடலொன்றைத் தன்னுடைய வானொலியில் ஒலிக்கவிட்ட பாஷ்பேர்க் ஒரு உற்சாகத்துடன் ஆடத் தொடங்கினார். சிலோன் நாதனின் கைகளைப் பிடித்து, உயர்த்தித் தன்னையே சுற்றி ஆடியவர், பின் அதை நிறுத்தி சிலோன் நாதனின் தோள்களைக் குலுக்கிக்

கீழே விழுந்தார். தொட்டுப் பார்த்தபோது பாஷ்பேர்க் உயிரற்றிருப்பது தெரிந்து.

*4*

திரு. மைக்கல் பாஷ்பேர்க்கின் பிணமானது கிடத்தப்பட்டிருந்தது. வெள்ளைச் சட்டையும் கத்தரிக்கப்பட்ட முடியைக் கொண்டவளுமான பெண்ணொருத்தி தன்னுடைய அகண்ட கண்களால் அழுது கொண்டிருந்தாள். அவளை ஆறுதல் படுத்திக்கொண்டிருப்பவன் அவள் கணவனாயிருக்க வேண்டும். ஒடிசலாக, வதங்கியிருந்தான். பெருத்த தேகமும், சராசரிக்குக் கொஞ்சம் உயரம் குறைந்தவருமான நான்கடி ஐந்தங்குலம் கிறிஸ்தவத் தந்தையொருவர் அப்பால் நின்று ஜெபித்தார். அப்போதும் மழை தூறிக்கொண்டிருந்தது. சிலோன் நாதன் உயிரற்றிருக்கும் பாஷ்பேர்க்கின் உடலையே பார்த்துக் கொண்டிருந்தார். கைகளைப் பொத்திப் பிடித்திருந்த பாஷ்பேர்க்கின் முகமானது வெளிறியிருந்தது. எல்லாமே ஒரு க்ஷண நேரத்தில் முடிந்துவிட்டது. இதுதான் இறப்பு. நேற்றுவரை உயிரோடிருந்தவர் இன்று உயிரோடில்லை. அவர் மரணத்தின் குகைக்குள் சென்றுவிட்டார்.

சிலோன் நாதனுக்கு உயிரற்றிருக்கும் பாஷ்பேர்க்கினை தட்டியெழுப்பி நீங்கள் இறந்து விட்டீர்களெனக் கூறவேண்டும்போல் தோன்றியது. ஆனால் அடுத்த க்ஷணமே தான் அப்படி நினைத்ததிலுள்ள முரணை நினைத்துச் சிரித்தார். இறந்தவர்களை மறுபடியும் எழுப்புதல் சாத்தியம் தானா? இருந்தாலும் ஏதோ ஒன்று பாஷ்பேர்க்கினை மறுபடியும் எழுப்புமென்று அவருக்குள் சொல்லிக்கொண்டேயிருந்தது.

பாஷ்பேர்க்கின் உடலானது குழியில் இறங்கும்போது வாழ்க்கையின் கோட்பாடு பற்றி எண்ணத் தோன்றியது. வாழ்தலை அறிதலே வாழ்வின் கோட்பாடு. ஆனால் இறப்புக்கென்று ஒரு மயிர்க் கோட்பாடும் கிடையாது. இறப்பினை யாராலும் அறிய முடியாது. அப்படியெனில், சப்த ரிஷிகள் இறப்புக்குப் பின்னரான வாழ்வு பற்றிச் சொல்லியிருக்கின்றார்களே? 'யமுத்தின பத்திர ரிஷி' இறந்த பிறகும் வாழ்ந்தாரெனச் சொல்லப்பட்டிருக்கின்றதே?

உண்மையில் சிலோன் நாதன் குழப்பமாக இருந்தார். வாழ்வு இறப்பு, இறப்பு வாழ்வு என்றவாறாக எதிலும் தீர்மானமில்லாமல் இருந்தார். சைமன் ரிச்சர்ட் எழுதிய வாழ்க்கைத் தத்துவம் பற்றி பின்னர் மீண்டுமொருமுறை படித்துப் பார்க்கவேண்டுமென நினைத்தார். கண்டதையும் வாசித்தால் இப்படித்தான் மண்டை வெடித்து சுக்குநூறாகிவிடும். வாழ்க்கையைப் பற்றி மாத்திரமே யாரும் புஸ்தகம் எழுதியிருக்கின்றார்களாயெனப் பார்த்து நூலகத்திலோ அல்லது பணம் கொடுத்தோ கண்டிப்பாக ஒரு புஸ்தகத்தினை வாங்கிவிடுவதென தீர்மானித்தார். அதுவரை என்ன செய்யலாம்?

*5*

இப்போது அவர் மொத்தமாக நான்கு போத்தல்கள் பியர்களை அருந்தியிருந்தார். கண்கள் இருண்மையடைவதாய்ப் பட்டபோது எழும்பி நடக்க ஆரம்பித்தார். வெளியே இன்னமும் மழை தூறிக் கொண்டிருந்தது. சிலோன் நாதன், பாதையின் ஓரமாய் நடக்க ஆரம்பித்தார். கால்கள் தள்ளாடுவதைப் போலுணர்ந்த அவர் விழாமல் இருப்பதற்கு பிரயத்தனப்பட்டார். ஊசி குத்துவத்தைப் போல் மழையானது முகத்திலடித்தது. ஒற்றைக்கையால் முகத்தில் படிந்திருந்த மழைநீரை வழித்துத் துடைத்த அவர் வீட்டுக்குப் போக மனமில்லாமலும், எங்கே போவதென்ற உத்தேசமில்லாமலும் மழையோடு சேர்ந்து நடக்க ஆரம்பித்தார். அதுவொரு முடிவற்ற பயணமாயிருந்தது. கால்கள் வலிக்க ஆரம்பித்தபோது எதிரே வரும் கதிரையில் உட்கார்ந்துகொள்வார். பிறகு மீண்டும் தன் பயணத்தைத் தொடங்குவார். இப்படியாக நடந்துகொண்டிருக்கும்போதுதான் சிலோன் நாதனுக்கு வேசி வீட்டுக்கு போகலாமென்று தோன்றியது.

மினுக், மினுக்கென்று முழு நிர்வாணமாயிருக்கும் பெண்ணினுடலை அப்போதுதான் முதல்முறையாக சிலோன் நாதன் பார்த்தார். மார்புக்குக் கீழே சதை கண்டிருந்தது. விரிந்த இடுப்பும், பெருத்த தொடையுமாக வேசி சிலோன் நாதனைப் பார்த்துச் சிரித்தபோது அவர் தரையைப் பார்த்து சிரித்துக் கொண்டார். அப்போது வேசியானவள் முழங்காலினால் நடந்து சிலோன் நாதனை அரவணைத்து அவரின் உதடுகளில் முத்தமிடத் தொடங்கினாள். அவளின் வலது கையின் விரல்கள் சிலோன் நாதனின் அடர்ந்த

தலைமுடிக் கற்றைக்குள் ஒரு ஐந்து தலைப் பாம்பினைப் போல் நுழைந்துகொண்டிருந்தது. சிலோன் நாதனின் தேகம் நடுங்கத் தொடங்கியது. அவரின் உதடுகள் வார்த்தைகளற்று குழறின. முதுகின் நடுப்பக்கமிருந்து வழிந்தோடிய வியர்வைத்துளியொன்று அவரின் பிருஷ்டம் வரை சென்று பின் அப்படியே நின்றுகொண்டது. வேசியின் இடதுகை சிலோன் நாதனின் ஆண்குறியைத் தீண்டியபோது சடாரென்று அவளின் கையைத் தட்டிவிட்ட அவர், வேண்டாம் அதில் எனக்கு விருப்பமில்லையென அறுந்துவிழுந்த வார்த்தைகளினால் சொல்லி முடித்தார். அப்போதும் அவரின் கண்கள் தரையைப் பார்த்தவாறேயிருந்தன. தன்னுடைய விரல்களினால் சிலோன் நாதனின் தலையைத் தூக்கிப்பிடித்த வேசியானவள் முதல்முறையா என்று கேட்டபோது அவளுடைய விரல்களின் அழுத்தத்தினையும் மீறி தலையைத் தாழ்த்திக் கொண்ட அவர் ஆமாமென்பது போல் தலையசைத்தார்.

என்னிடமிருந்து உனக்கு எதுவுமே வேண்டாமாயென்று வேசி கேட்டபோது அவளை அப்படியே கட்டிலின் மீது படர்த்தி கொஞ்ச நேரம் அவளின் நிர்வாணத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். பெண்ணினுடல்தான் எவ்வளவு விசித்திரம் நிரம்பியது. உண்மையில் பெண்ணினுடலைப் போல் சுவாரஸ்யமான விஷயம் வேறில்லையென்பதைப் போல் பட்டது. இவர்கள் ஒரு புதிர். எந்தக் காலத்திலும் புரிந்துகொள்ளவே முடியாத புதிர்தான் இவர்களின் தேகம். சிலோன் நாதன் வேசியின் தொடைகளிரண்டினையும் விரித்துவைத்து அதன் பக்கமாய் தாழிட்டு அமர்ந்துகொண்டார். சுத்தமாக மழிக்கப்பட்ட வேசியின் பளபளப்பான யோனிவாசல் சற்றே அகண்டிருந்தது. வேசியின் தொடைகளிரண்டினையும் தூக்கிக்கொண்ட சிலோன் நாதன் அதன் மய்யத்தில் தன்னுடைய முகத்தைப் புதைக்கலானார்.

அப்போது என்னவென்றே தெரியாதவொரு இன்பம் தனக்குள் படர்வதைப் போலுணர்ந்த அவர் அந்த இன்பம் தன் மரணம் வரை தன்னைப் பின்தொடர வேண்டுமென்று நினைத்துக் கொண்டார். வாழ்வில் ஒரு அர்த்தமிருப்பதாகப் பட்டது. மின்சாரம் ஏற்றப்பட்ட உடலினைக் கொண்ட ஒரு மிருகமாய் வேசியைப் புணர ஆரம்பித்தார். அப்பொழுதும் அவள் இவரைப் பார்த்து சாயமடிக்கப்பட்ட உதடுகளினால் புன்னகைத்துக் கொண்டாள். என்ன பெண்ணிவள்? வெறும் நாணயங்களுக்காக எப்படி இவளால் இப்படிப் புன்னகைக்க முடிகிறது? ஒரேயொரு சிரிப்பின் மூலம் அது போலியோ அல்லது நிஜமோ ஒரு பெண் தான் நினைத்ததைச் சாதிக்கும் விந்தையை நினைத்து வியந்தார். இவர்களிடம் ஒரு அசாத்தியமான திறமையிருக்கின்றது.

போதை தெளிந்து விழிப்பு வந்தபோது அதிகாலையாயிருந்தது. சிலோன் நாதனுக்கு தான் வேசியின் வீட்டுக்குப் போனது நிஜமா? அல்லது கனவா? எனப் பெரும் குழப்பமாகயிருந்தது. நிஜம்தான் எனத் தெரியவந்தபோது தொண்டையடைத்து தேகமெல்லாம் உதறியது. சில நிமிடங்கள் அப்படியே வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்த அவர் பின் காற்றில் நடப்பதுபோல் நடந்து கழிவறைக்குச் சென்றார். தேகத்தின் படபடப்பு நின்றபாடில்லை. கண்ணாடியில் முகத்தைப் பார்த்தவரான அவர் கண்கள் சிகப்பேறியிருப்பதைக் கண்டு முகத்தில் தண்ணீர் அடித்துக்கொண்டார். மறுபடியும் கட்டிலில் விழுந்தவருக்கு, வேசியின் ஒப்பனை பூசப்பட்ட முகமும், ததும்பிய புன்னகையும் நினைவு வந்து அவஸ்தை கொடுக்க “ஓ”வென்று வாய்விட்டு அலறினார். வேசியின் நினைவு தன்னுடைய மூளையின் ஒவ்வொரு திசுக்களிலும் தங்கியிருப்பதாக அவருக்குப் பட்டது. இந்த நினைவுகளிலிருந்து மீள்வது சிரமமென்றும் அவருக்குத் தோன்றியது. ஆகவே மறுபடியும் அவருக்குத் தற்கொலையெண்ணம் வந்தது.

தொட்டியில் தண்ணீரை நிரம்பவிட்டு அதற்குள்ளேயே படுத்துக் கிடந்தார். என்ன நடந்தாலும் சரி தொட்டியை விட்டு எழுவதில்லையென்று தீர்மானமாயிருந்தார். சிலோன் நாதனின் மூக்கிலிருந்து நீர்க்குமிழிகள் வெளியேறலாயின. நுரையீரல் அடைத்துக்கொண்டு உப்புவதுபோலிருந்தது. அப்பொழுதும் கூட சிலோன் நாதனுக்கு வேசியின் நினைவே வந்தது. மூடிய கண்களைத் திறந்து பார்த்தபோது வேசியும் தன்னுடைய முகத்தினை நீருக்குள் அமிழ்த்தி தன்னைப் பார்த்துச் சிரிப்பதாக அவருக்குப் பட்டது. அந்தச் சிரிப்பின் ஒளி உருவம்கொண்டு, ஆடையுடுத்தி

எங்கும், எதிலும் வியாபித்திருப்பதாக அவர் நினைத்தார். ஒரு பாம்பின் சிவந்த நாக்கினைப் போன்று வேசியின் நாக்கானது தன்னுடைய உலர்ந்த உதடுகளைத் தீண்டுவது போலவும், அவளின் இடுப்பில் முகம் புதைத்திருப்பது போலவும், வியர்வை வடியும் தேகத்தோடு வேசியைப் புணர்வது போலவும், அதீதமானவொரு இன்பத்தில், வேசியானவள் தன்னுதடுகளைத் தானே கடித்துக் கொள்வது போலவும் காட்சிகள் படிமங்களாகி அவருள் விரிந்தன. அதற்கு மேல் சிலோன் நாதனினால் மூச்சை அடக்க முடியவில்லை. தொட்டியை விட்டு குபீரென்றெழுந்தார். நீர்த்திவலைகள் அந்த அறையெங்கும் பிசிறியடித்தன.

இப்படியாக எதிலும் பிடிப்பற்று சில நாட்கள் அலைந்தார். இப்பொழுது வேசியின் சிந்தனை வருவது குறைந்திருந்தாலும் நாளுக்கு மூன்று தடவையோ, நான்கு தடவையோ நினைத்தால் மயிர்கூர்ச்செறியும் அந்த எண்ணம் வரத்தான் செய்தது. பகல் நேரத்தில் அறைக்குள்ளேயே முடங்கியிருந்தவர் சாமத்தில் திக்கற்று அலைந்தார். சிலநேரங்களில் நத்தையைப் பற்றியெழுதினார். சிலநேரங்களில் ஓவியம் தீட்டினார். ஓவியத்தைத் தீட்டியவருக்குத் கைகள் உதறத் தொடங்கும். சடாரென்று தூரிகையைத் தூக்கியெறிவார். கைகளால் முகத்தை மூடி விரலிடுக்குகளின் வழியே முடிக்கப்படாமலிருக்கும் ஓவியத்தைப் பார்ப்பார். ஆக்ரோசமெடுத்துக் கத்துவார். ஃப்ரான்ஸ் காஃப்காவின் புத்தகங்களையும், மிலான் குந்த்ரேயின் புத்தகங்களையும் பைத்தியம் பிடிக்குமளவிற்கு வாசிப்பார். மிலான் குந்த்ரேயின் சிந்தனாசக்திக்கு எதிரான கோட்பாடு பற்றி விவாதம் செய்வார். காலீம் சைபரின், ‘நான் என்பது உண்மையில் ஒன்றல்ல ; நாம் இறந்த பின் அது இன்னோர் நானாகிறது’ என்ற கருத்தோடு ரொம்பவும் குழம்பி எக்கச்சக்கமான தர்க்கங்களைப் புரிந்து அவராக ஒரு முடிவுக்கு வந்து எதேச்சையாக அலக்சாந்தர் புக்கோனவின், “ஹாண்ட்டில் மைன்ஷ் மைண்ட்” புத்தகத்தைக் கையிலெடுத்தால் அண்ணளவாகப் பைத்தியமே பிடித்துவிடும்.

மது அருந்தலாமா? அருந்தினால் பழையபடி வேசியின் எண்ணம் வரும். வந்தாலென்ன? மறுபடியும் அவளின் வீட்டுக்குப் போகத் தோன்றும். போனாலென்ன? ஆமாம் அதனாலென்ன?

மதுச்சாலைக்காரன் இவரைப் பார்த்துச் சிரித்துவிட்டு நுரை வடிய கோப்பை பியரை கொணர்ந்து வைத்தான். ஒரு மிடறு குடித்தவர், பின்பு வாயில் படிந்திருந்த நுரையை அழுத்தித் துடைத்தார். அகண்ட யன்னலின் வழியே வெளியே பார்த்தவர், முகம் முழுவதும் சுருக்கம் விழுந்த கிழவியொருத்தி வயலின் வாசிப்பதைக் கண்டார். அவளின் முன்னால் வெள்ளைத்துணியொன்று விரிக்கப்பட்டு அதில் சில யூரோ நாணயங்கள் சிதறிக் கிடந்தன. அதற்கு அப்பால், கிளிங்கன் தெருவை ஒட்டிக் கடைக்காரரொருவர் தன்னுடைய சிறிய பெட்டிக்கடையைத் திறந்து அன்றைய தினசரி நாளிதழ்களை அடுக்கிக் கொண்டிருந்தார்.

பாஷ்பேர்க் சொன்னது உண்மைதான். ஒருவன் தன்னுடைய எதிரியை வெற்றிகொள்வதைக் காட்டிலும் அவர்களை அவமானப்படுத்துவதின் மூலமே முழுத் திருப்தியடைகிறான். அவனைப் பொறுத்தவரை அவமானப்படுத்தலென்பது கொலைசெய்வதை விட குரூரமானது. அது ஒருவிதமான மனநிலை. சூழ்நிலையும், அதிகாரமும் அதைத் தீர்மானிக்கின்றன. ஒருவனிடம் கெஞ்சிக்கொண்டிருக்கும் இன்னொருவன் நாளையே ஒரு அக்கிரமக்காரனாக மாறி மற்றொருவனை அவமானப்படுத்தக் கூடும். நல்லவன், கெட்டவனென்பது அவனுக்கிருக்கும் அதிகாரத்தினை அடிப்படையாகக் கொண்டது. பெரும்பாலான நேரத்தில் அதிகாரமென்பது ஒருவனைக் கெட்டவனாகவே மாற்றுகிறது. அதையும் மீறி நல்லவர்களாகயிருப்பது ஒருசிலரே.

சிலோன் நாதன், இன்னோர் கோப்பை பியரை வாங்கி ஒரே மூச்சில் குடித்து முடித்தார். மிதமான போதை வந்ததும், எழும்பி நடக்க ஆரம்பித்தார். லேசான தலை சுற்றலும், கூடவே மண்டைக் கிறுகிறுப்புமாயிருந்தது. நேரே வீட்டுக்குப் போனவர், கட்டிலில் விழுந்தார். வேசியின் நினைவும், இராணுவப் பெண்ணின் நினைவும் வந்தது. இராணுவப் பெண்ணின் நினைவிலிருந்து விடுதலையடைய நினைத்தவர், வேசியை நினைத்துச் சுயமைதுனம் செய்தார். போதையில் ஆண்குறி விறைக்கவில்லை. ஜன்னலைத் திறந்து தெருவைப் பார்த்தார்.

பதின்வயதுச் சிறுமியொருத்தி தொடைதெரிய விளையாடிக்கொண்டிருப்பது தெரிந்தது. சிலோன் நாதனின் ஆண் குறி புடைத்து விறைத்தது. அவருடைய கை இயந்திர கதியில் இயங்க ஆரம்பித்தது. விந்து வெளியேறியபோது ஆசுவாசமாயிருந்தது.

*6*

இதைப்போன்றதொரு பனி கொட்டும் கிறிஸ்துமஸ் தினமொன்றில்தான் நான் முதல் முதலாக சிலோன் நாதனைச் சந்தித்தேன். ஒரு உற்ற நண்பனிடம் சொல்வதைப்போன்று அவர் தனது சகலபாடுகளையும் என்னிடம் சொல்லிமுடித்தபோது நான் உங்களுடைய சகலபாடுகளையும் கர்த்தரானவர் பார்த்துக் கொள்வார் என்றே சொன்னேன். சிறிதுநேரம் அப்படியே தலைகுனிந்து உட்கார்ந்திருந்தவர் திடீரென்று என் கரங்களைப் பற்றி என்னுடைய பாடுகளை ஒரு கதையாக எழுத முடியாதாயென்றார். பதிலுக்கு அவருடைய கரங்களை இறுக்கிப் பிடித்துக்கொண்ட நான் இன்றில்லையெனினும் சர்வ நிச்சயமாக உங்கள் கதையை ஒருநாள் எழுதுவேனென்றேன்.

இது நடந்து இரண்டு மாதங்களின் பின்பு நான் சிலோன் நாதனின் பாடுகளை மேற்கண்டவாறு ஒரு கதையாக எழுதி, கதையின் முடிவென்று இரண்டு பத்திகளையும் இணைத்து அந்தக் கதைக்கு உத்தோயென்று தலைப்புமிட்டு எழுத்தாளரும், பாரிஸில் வசிப்பவருமான ஷோபாசக்திக்கு அனுப்பி வைத்தேன். அவர் கதையினை வாசித்துவிட்டு “படித்துவிட்டேன். கதையாக கூடிவரவில்லை என்றுதான் நினைக்கிறேன். இனி உங்கள் உத்தேசம் போலச் செய்யுங்கள். ” என்றவாறாக ஒரு மின்னஞ்சலை எனக்கு அனுப்பியிருந்தார்.

ஆகவே, சிலோன் நாதனின் இந்தக் கதையை ஒரு கதையாக எழுதி முடிப்பதற்கு நான் மீண்டுமொருமுறை சிலோன் நாதனைச் சந்திக்க வேண்டும். அவர் என்னை சந்தித்துவிட்டுச் சென்ற பிறகு அவருக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி அறிந்தாற்தான் இந்தக் கதையை என்னால் பூர்த்தி செய்ய முடியும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவரைத் தேடி அலைய ஆரம்பித்தேன். கண்டவர், தெரிந்தவர் என எல்லோரிடமும் அவரைப் பற்றி விசாரித்தேன். ஒருவருக்கும் அவரைப் பற்றித் தெரிந்திருக்கவில்லை. ஜெர்மனியில் தமிழர்கள் அதிகளவாய் கடை வைத்திருக்கும் தெருவிற்குச் சென்று கூட சிலோன் நாதனின் அங்க அடையாளங்களைக் கூறி அவரைப் பற்றி கேட்டுப் பார்த்தேன். ம்ஹூம்... யாருமே அவரைப் பற்றி அறிந்திருக்கவில்லை.

இவ்வாறாக நான் சிலோன் நாதனை தேடி அலைந்துகொண்டிருக்க ஒருநாள், தொலைக்காட்சியில், நான் வசிக்கும் நகரத்தினைக் குறிப்பிட்டு செய்தியொன்றினை ஒளிபரப்பினார்கள். நான் ஆவல் மிகுதியால் செய்தியை நுணுக்கமாகக் கேட்க ஆரம்பித்தேன். பிணமொன்று கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாகவும், அதீதமான குளிரினால் அந்தப் பிணமானது உறைந்து போயுள்ள தெனவும், இலங்கையிலிருந்து வந்து, போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து வதிவிட உரிமையைப் பெற்றுக்கொண்ட இலங்கைச் சிங்களவர் ஒருவரின் உடலே அப்பிணமெனவும் அதில் தெரிவித்தார்கள். சிங்களவர் என்றதும் நான் எனக்குள்ளிருந்த ஆவல் அனைத்தையும் அடக்கிக்கொண்டு செய்தியை மேற்கொண்டு பார்க்க விரும்பாமல் தொலைக்காட்சியை அணைத்தேன்.

அதன் பின்னான நாட்களில், சிலோன் நாதன், நத்தையெனப் பெயரிட்டு அதன்கீழ் நத்தையின் உருவப்படமும் கீறப்பட்டிருந்த ஒரு குறிப்புப் புத்தகத்தினை எனக்கு அனுப்பியிருந்தார். அப்போதுதான் கடைசியாக நான் அவரைச் சந்தித்தபோது என்னுடைய முகவரியை அவருக்குக் கொடுத்திருந்தது எனக்கு நினைவுக்கு வந்தது. குறிப்புகளால் நிரம்பியிருந்த அந்தக் குறிப்புப் புத்தகத்தின் எண்பத்திநான்காம் பக்கத்தில், ஒரு குறிப்பு மாத்திரம் சிகப்புநிற மையினால் எழுதப்பட்டிருந்தது. நான் அதற்கு ஏதும் விசேஷ காரணமிருக்குமென்பதால் அக்குறிப்பினை ஒரே மூச்சில் வாசித்து முடித்தபோது கால்கள் உதறத் தொடங்கின. மூளை நரம்புகள் வெடித்து மண்டைக்குள் குருதியானது வடிந்துகொண்டிருப்பதைப் போல் தோன்றியது. அந்தக் குறிப்பு கீழ்வருமாறு;

*7*

நான் மரணத்தினை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும் ஒரு மனிதன். ரோமன் ரிச்சர்ட் எழுதிய நாவலொன்றில் லூதன் தன்னுடைய மரணத்துக்காக இருபது ஆண்டுகள் வரை ஒரு மலையுச்சியிலேயே

காத்துக் கொண்டிருப்பான். அதைப்போல் மலையுச்சியிலில்லையென்றாலும் நானும் மரணத்தை விரும்பும் மனிதன். லூதன் சாவினை விரும்பியதற்கு ஒரு காரணமுமில்லை யெனினும் அதை அவன் ஒரு சுய விருப்பத்துடனே செய்து வருவான். ஆனால் நான் அப்படியல்ல நான் மரணத்தினை விரும்புவதற்கு ஒரு காரணமிருக்கின்றது. அன்று அந்த பாதாள உலகத்தில் என்னோடு சேர்த்து காலுடைந்திருந்த சிறுமியான கத்தலோனாவையும் அடைத்திருந்தார்கள். ஏற்கனவே பாதியாய் உடைந்திருந்த கத்தலோனாவின் காலினை அவர்கள் முழுதாக உடைத்து எடுத்தார்கள். மூன்று நாட்களாய் மயக்கமாகவேயிருந்த சிறுமி கத்தலோனா, நான்காம் நாள், என்னை விட்டுப் போய்விடாதேயுங்கோ, என்னை விட்டுப் போய்விடாதேயுங்கோ என்று கதறிக்கொண்டேயிருந்தாள். நான் சொல்வதற்கு வார்த்தைகளற்று தரையிலேயே முடங்கிக் கிடந்தேன். நடுச்சாமத்தில் அவர்கள் என்னை மறுபடியும் அடித்தார்கள். அப்போது முள்ளந் தண்டானது விலகிற்று. வலியில் நான் பெருங்குரலெடுத்து அலறினேன். அவர்கள் அப்போதும் எனக்கு அடித்துக்கொண்டேயிருந்தார்கள். எனக்கு இதற்கு மேல் தாங்கமுடியாதுயென தோன்றியபோது எந்த நிலைமையிலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் சொல்லவே கூடாதுயென நான் நினைத்திருந்த ஒரு விஷயத்தை அவர்களிடம் கூறினேன். *(ஊ)* கருணாகர கஹன்ன எபா. மம தனிகர சிங்கள மினியெக். மகே முழு நம விக்கிரமபாகு கருணாரட்ன. லங்காவே கமக உபன் உன மம அன்திம வசர தெகக் தெகக் வன்னியே இன்னவா.. மே மினிச்சு கேன மட தன்னெ னே.. மகே அம்மா பத் எடத் எக்க பலாகென இன்னவா.. ஏ நிசா மாவ நிதஹஸ் கரன்ன...

நான் அவ்வாறு கூறியதும், (எ) சிங்ஹல மினியெக் வெலா இதலா மேஹம தெமலுன்ட பஸ்ஸ பென்னனவானே..... என்று அவர்களில் ஒருத்தி என்னை முதலில் அடித்தாள். பின் அந்தக் கும்பலே என்னை அடித்தது. கண்கள் சொருகி, இருண்மையடைந்து மயங்கி விழுந்தேன். இரண்டு மாதங்களின் பின் அந்த பாதாள அறையிலிருந்து நான் விடுதலை செய்யப்பட்டபோது சிறுமி கத்தலோனா என் கால்களைப் பற்றிப் பிடித்து என்னை விட்டுப் போய்விடாதேயுங்கோ, என்னை விட்டுப் போய்விடாதேயுங்கோ என்றாள். நான் அவளின் முகத்தைப் பார்ப்பதற்கு திராணியற்று என் கால்களோடு சேர்த்து அவளையும் இழுத்துக் கொண்டு நடந்தேன். அப்போது இராணுவச் சிப்பாய் அவளை எட்டி உதைத்தாள். என் கால்களைப் பற்றியிருந்த சிறுமி கத்தலோனாவின் பிடி கொஞ்சம் கொஞ் சமாய் விலகிற்று. ஆனால் அப்போதும் கூட என்னை விட்டுப் போய் விடாதேயுங்கோ, என்னை விட்டுப் போய்விடாதேயுங்கோ என்ற அந்தக் குரல் என் பின்னாலிருந்து ஒலித்துக் கொண்டேயிருந்தது.

*8*

நான் நிதானமிழந்து குறிப்புப் புத்தகத்தைப் படாரென்று மூடியபோது என் கால்களுக்குக் கீழாக நத்தையொன்று ஊர்ந்துகொண்டிருப்பதைக் கண்டு “ஆ” வென்று வீறிட்டுக் கத்தினேன்.

---

**அ. இந்தியாவிலிருந்து பஞ்சம் பிழைக்க வந்த பரதேசிகளுக்கு ஈழம் கேட்கின்றதா?**

**ஆ. எப்படி இருக்கின்றாய்?**

**இ. நீ யார்?**

**ஈ. இதோ! இந்த மனிதர் மருத்துவராம்**

**உ மருத்துவராகயிருந்தாலென்ன?, ஒரு நாட்டின் அதிபராகயிருந்தாலென்ன? எங்களைப் பொறுத்தவரை தமிழர்களெல்லோருமே நாய்கள் தான்... புண்டை**

**ஊ. தயவுசெய்து அடிக்காதீர்கள்..... நானொரு கலப்பில்லாத தூய சிங்களவன்; என்னுடைய முழுப்பெயர் விக்கிரமபாகு கருணாரட்ன; இலங்கையின் தென்பகுதியிலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவனான நான் கடந்த இரண்டு வருடங்களாகவே வன்னியில் இருக்கின்றேன். புலிகளையோ, இந்த மக்களையோ நான் அறிந்தவனில்லை ; எனக்காக என் தாய் சோற்றுப் பருக்கைகளுடன் காத்துக்கொண்டிருக்கின்றாள்; ஆகவே என்னை விடுதலை செய்யுங்கள்.**

**எ. ஒரு சிங்களவனாக இருந்துகொண்டு தமிழர்களுக்கு குண்டி கொடுக்கிறாயே**

e-mail : mesathana@gmail.com

# வீடு

சாந்தினி (ஜெர்மனி)

எங்கு பார்த்தாலும் ஒரே இருட்டு. இருட்டை கீறிக்கொண்டு கரும் பாம்புபோல் நீண்டு நெளிந்து கிடந்த தெருவை வான் கடந்து கொண்டு இருந்தது. எப்ப யாழ்ப்பாணம் வரும்? பிள்ளைகள் நித்திரையைத் துரத்திவிட்டு மகிழ்வில் மூழ்கி இருந்தார்கள். அவர்களுக்கு முகம் தெரியாத பெரியம்மாவையும் பிள்ளைகளையும் பார்க்கும் மகிழ்வு. எனக்கும்தான்.

ஓவ்வொரு வசந்தம் மலரும் பொழுது எனது மனமும் முகமும் சுருங்கிவிடும். அந்தப் பெயர் தெரியாத பூவுக்குப் பயப்படுகிறமாதிரி நான் சிறுவயதில் பயப்பட்டது கணக்கு மாஸ்ரருக்கு மட்டும்தான். அந்த பூ பார்க்கும் பொழுதெல்லாம் சிரித்தபடி இருக்கும். சில மனிதர்களைப்போல. ஆனால் அது காய்ந்து பின் வெள்ளை பஞ்சு மாதிரி பறக்கும்போது எனக்குப் பயம் வந்திடும். ரவியும் புல்லுவெட்டுற மெசினால அதன் தலையை வெட்டிவிட்டு சூரன்ர தலையை வெட்டிப்போட்டன் இனிப்பயமில்லை என்று நிமிர்றதுக்கிடையில ராவணனின்ர தலை முளைக்கிறமாதிரி பச்சை புல்லுக்கிடையில தலையை நீட்டி என்னைப் பார்த்துச் சிரிக்கும். இந்தச் சின்ன மரத்தின் உறுதி என்னைச் சிந்திக்கத் தூண்டியது. இப்படித்தான் எங்களையும் வேரோட அழிச்சிடலாம் என்று நினைத்தார்கள். வான் மெதுவாக ஊர்வதுபோல் இருந்தது.



ஓவியம்: ஜே.கே.

திரும்பவும் செக்பொயின்ரோ? நினைவு அச்சப்படுத்தியது. ஆனாலும் முகமாலையில் அந்தப் பெண் ராணுவம் நடந்து கொண்ட விதம் மனம் எடைபோட முடியாமல் தவித்தது. ராணுவ பெண்ணின் அருகாமை என்னை பயப்படுத்தியது. ஆனால் பாவாடையில் பதிந்து கிடந்த கறையைப் பின்னால் குத்தி மறைத்த பொழுது மனம் நெகிழ்வில் மூழ்கியது. நன்றியைச் சிரிப்பால் உணர்த்திவிட்டு நகர்ந்தாலும் என் நினைவுகள் அந்த இடத்திலேயே வேர்விட்டு நின்றது. பிள்ளைகள் ரொம்மன் ஜெரியைப் பார்த்து மகிழ்ந்து கொண்டு இருந்தார்கள். இந்த ரொம் ஜெரி விளையாட்டு பார்க்க எனக்கு மிகவும் பிடிக்கும். அதில் ரொம் ஜெரியை ஏமாற்ற பல சதிகள் புரியும். சின்ன ஜெரி ரொம்மிட்ட ஏமாறுகிற மாதிரி ஏமாந்துவிட்டு கடைசியில ரொம் விரித்த வலையில அதையே விழவைத்து அதன் பொய் முகத்தையும் காட்டிகொடுத்துவிடும். வேர் தன் பிடியை மெல்ல தளர்த்தியது.

இருள் மெல்ல விலகிக்கொண்டிருந்த நேரத்தில் நான் விளையாடிய தெருவையும் என் நண்பிகளின் வீட்டையும் இமைகள் தடவிக்கொண்டு சென்றது. எல்லாமே மாறியிருந்தது. வீட்டு கேற் அருகில் வான் நின்றது. எத்தனை வருடம் எவ்வளவு ஏக்கம் ஒவ்வொன்றையும் தொட்டுத் தழுவ மனம் துடித்தது. அழுதுவிடுவேனோ எனப் பயப்பட்டது. முதலில் என் விழிகளில் விழுந்த அந்த மஞ்சள் மதில் நான் பாடசாலையால் வரும் பொழுது எனக்காக அதில் சாய்ந்து நிற்கும் என் அம்மாவும் ஜிம்மியும்...

அழுகை கண்ணை மறைக்க அக்காவின் முகம் மங்கலாகத் தெரிந்தது. அக்கா என்னை இறுக அணைத்த பொழுது அம்மா என்னை அணைப்பதுபோல் ஓர் உணர்வு எழுந்து அழுகையை அதிகப்படுத்தியது. இருபது வருடத்தின் பின் என்னுடைய வீட்டை எனக்குள் இருந்துகொண்டு எப்பொழுதும் தன்னையே நினைக்கவைக்கும் என்ர கனவு வீட்டை கண்டபோது. சிரிப்பும் சத்தமும் நிறைந்திருந்த வீடு மௌனத்தில் ஆழ்ந்து கிடந்ததைப் பார்க்க மனம் வலித்தது. ஒவ்வொரு இடத்திலும் அம்மாவின் நினைவுகள் உறைந்துபோய் கிடந்தன. அம்மாவின் கற்பனையை, சிரிப்பை, அழுகையை எல்லாவற்றையும் உள்வாங்கி தனக்குள் புதைத்துவைத்திருந்த என்ர அம்மாவின் வீடு இன்று அம்மா இல்லாமல் துயருள் ஆழ்ந்திருந்தது. இறுதிக்காலம்மட்டும் என்ர குஞ்சு அம்மாவை மழையில், வெய்யிலில், துயரில் எல்லாவற்றிலும் உடனிருந்து காத்த வீட்டை மெல்ல தடவினேன். பிள்ளையள் மனை உதவுறமாதிரி மக்கள் உதவமாட்டார்கள். அம்மாவின் தீர்க்க தரிசனம் கன்னத்தில் கோடுகளை வரைந்தன.

அக்காவின் தோற்றத்திலும் காலம் கைவைத்திருந்தது. கால ஓட்டத்தை மனிதனின் கைகளிலும் கால்களிலும் புரிந்து கொள்ளமுடியும் என்பது மாறி புன்னகை தொலைத்த வறண்ட முகம் எந்த உணர்வையும் என்னால் புரிந்து கொள்ள முடியாது இருந்தது.

களைச்சு போய் வந்திருக்கிறியள் முதல்ல குளிச்சிட்டு வாங்கோ என்று கூறியபடி அக்கா மெல்ல நகர்ந்தா.

வீட்டின் பின்பக்கச் சுவர் இடிந்து பாதி மண்ணில் படுத்துக் கிடந்தது. ஏதோ ஒன்று தன்கோபத்தைச் சுவரில் பதித்திருந்தது. இடிந்த சுவரில் சரித்தும் நெளித்தும் எழுதத் தெரியாத கை எதையோ கிறுக்கியிருந்தது. என்னவாக இருக்கும்? இந்த மண்ணும் வீடும் தனது என்று எழுதியிருப்பானோ? அழகான எழுத்தைக் கோணலாக எழுதியவனின் மனமும் அப்படித்தான் இருந்திருக்கும். புரியாத எழுத்தைச் சுற்றியே மனம் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஒன்று மட்டும் நிச்சயமாக தெரிந்தது. எமது ரணங்களுக்கு முதல் காரணம் புரியாத மொழியாகத்தான் இருக்க வேண்டும். இதனால் விழுந்த இடைவெளிகள் அதிகம். ஆனால் வெளிநாட்டில் மட்டும் எந்த நாட்டில் வாழ்கின்றோமோ அந்த நாட்டு மொழியைக் கற்று அழகாகப் பேசிக்கொண்டுதானே இருக்கின்றோம்.

அங்க நிண்டு யோசிச்சுக்கொண்டு நிக்காமல் கெதியா குளிச்சுபோட்டு வா. அக்காவின் குரல் மறுபடியும் அம்மாவை....

சுகந்தி கிடாரத்துக்க இருக்கிற தண்ணி முழுவதையும் அள்ளிக் குளி வாழையெல்லாம் வாடுது. நல்லா வாடட்டும். எனக்குப் பிடிக்காத வாழைக்குத் தண்ணிபோகக் கூடாது என்ன செய்யலாம்? என யோசித்தே நேரத்தைக் கடத்துவன். அம்மாவின் முகம் சிவந்து போகும். பின் மறுபடி சிரிக்கும். சிரித்த முகத்துடன் வளைய வரும் அம்மா இல்லாத வீடு கத்தி

அழவேண்டும்போல் இருந்தது. எங்கள் வீட்டில் மனிதர்களைவிட மரங்கள்தான் அதிகமாக இருந்தது. மனிதர்களோடு பேசுவதைவிட மரங்களோடு பேசுவது எவ்வளவு மகிழ்வை தரும். அண்ணா குறோட்டன் வளர்ப்பார். விதம் விதமா சுருண்ட தலையோட குழந்தைகள்போல் சிலிர்த்துச் சிரித்தபடி நிற்கும். அண்ணாவுக்கும் மாமாவின் மகனுக்கும் குறோட்டன் வளர்பதில் ஒரே போட்டி மாமா வீட்டில முதல் நாள்பார்க்கும் பொழுது வெறுமையாக இருந்த இடத்திலெல்லாம் புதுசா குறோட்டன் தானே நடந்து வந்து நிற்பதுபோல அதிசயமாக நிற்கும்.

பிறகுதான் புரிந்தது அதெல்லாம் சுப்பிரமணியம் பூங்காவின் கைங்கரியம் என்று.

அம்மா நித்திய கல்யாணி, தேமா, செவ்வரத்தை, அரளி, மல்லிகை என்று சுவாமிக்கு தேவையான பூமரத்தில் எப்பவும் கண்ணாக இருப்பா. அப்பா சாமிநாதனை ஏவிக்கொண்டே இருப்பார். எங்கள் வீட்டில் நாய் செத்தால் அதைத் தாட்டுவிட்டுத் தேசிக்காய் மரம் நடுவது சாமிநாதனின் வேலை. எத்தனை நாய் செத்தது என்று அடிவளவுக்குள் நிமிர்ந்து நிற்கும் தேசிக்காய் மரங்களைப் பார்த்தால் புரிந்து விடும். எனக்காக வளர்ந்த மரம் என்ர செரிமரம். கைகளைப் பரப்பி நிழலும், பழமும் தந்த அந்த மரம் நின்ற இடத்தில் இப்போ வாழையும் இல்லாமல் கிடங்குகள் வெட்டி மூடினமாதிரி..... என்னவாக இருக்கும்? அக்காவின் அழைப்பு என்னைக் குளிக்கத் தூண்டியது.

சாப்பாட்டறையில் அம்மாவின் சமயலையும் அந்த சங்கீத குரலையும் தவிர மிகுதி எல்லாம் இருந்தது என்னால சாப்பிடவே முடியேல்ல..

சுகந்தி உனக்கு எப்ப பார்த்தாலும் கதைக்கிறதும் சிரிக்கிறதும்தான் வேலை முதல்ல சாப்பிடு அம்மாவின் குரல் அந்த அறை முழுவதும் எதிரொலித்தது.

கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. எதுவும் நடக்காததுபோல் ரவி சாப்பாட்டில் கவனமாக இருந்தார். அக்கா என் தலையைத் தடவிவிட அதுபோதுமாக இருந்தது. அக்காவைக் கட்டிபிடித்து அம்மா அம்மா என்று விக்கி அழத் தொடங்கிவிட்டேன். நான் அழுவதை பார்த்துப் பிள்ளைகளும் அழத்தொடங்கி விட்டார்கள்.

இப்பிடித்தான் அங்கேயும் எப்ப பார்த்தாலும் தானும் அழுது பிள்ளைகளையும் அழவைச்சுக்கொண்டு இருப்பா.

இவள்தானே ரவி எங்கட அம்மான்ர செல்லம். கடைசி நேரத்திலையும் இவளைத்தான் கூப்பிட்டுக்கொண்டே இருந்தா. கடைசி நேரம்............. நெஞ்சுக்குள். அடங்கியிருந்த தீ எழும்பி எரிந்தது. எனக்குத் தெரியும் என்ர குஞ்சு அம்மா என்னைத்தான் தேடியிருப்பா எப்படி தேடியிருப்பா? மனதுக்குள் அழுது அழுது தேடியிருப்பா. எந்த அறையா இருக்கும்? அக்காவிடம் கேள் கேள் என மனம் தூண்டியது. வாய் மௌனித்து இருந்தது.

என் சின்ன அறை நானும் அம்மாவும் ஒன்றாகப்படுத்து, கதைத்து, சிரித்து களித்த அறைப்படிகள் என்னைப் பார்த்துக்கொண்டே இருந்தன. அவை ஏதோ சொல்ல நினைப்பதுபோல்

இந்த படியில்தானே அம்மாவின் மடியில் தலைவைத்துப் படுத்திருந்து ஆகாயத்தையும் நகரும் முகில்களையும், வேப்பமர இலைகளையும், அதில் கட்டியிருக்கும் ஊஞ்சலையும் ரசித்தபடி இருப்பன். படியில் அம்மா இருந்து என்னைப் பார்த்து சிரிப்பதுபோல், வா எனச் கை நீட்டி அழைப்பதுபோல்... மெதுவாகப்போய் படியில் தலை வைத்து நிமிர்ந்து பார்த்தேன். அதே முகில்கள் அந்த வேப்ப மரம் ஊஞ்சல் உரசிய அடையாளத்துடன். எல்லாம் அப்படியே ஆனால் என்ர அம்மா மட்டும்..... கண்ணீர் படிகளைக் கழுவின.

நினைவுகள் எப்போதும் இறப்பதே இல்லை. சாம்பலிலிருந்து எழும் பீனிக்ஸ் பறவையைப்போல எழுந்து கொண்டே இருக்கும். சில நேரங்களில் இந்த நினைவுகள்தான் என்னை உயிர்ப்புடன் வாழவைக்கின்றன. பல சமயங்களில் என்னை மூலையில் முடக்கியும் விடுகின்றது. இவைகளை உதறிவிட்டு எழவேண்டும் என மனம் துடிக்கும். ஆனால் ஏதோ ஒன்று என்னை திரும்பத் திரும்ப அதற்குள்ளே அமுத்திக் கொண்டே இருக்கும். இப்பவும் அப்படித்தான் அக்காவுக்கு என்ன சொல்லப் போகிறாயென? எனக்குள்ளேயே கேள்வி எழுந்து என்னையே கேள்வி கேட்டபடி இருக்க என் மனமோ அடிவளவையும் மரங்களையும் சுற்றிக் கொண்டே இருந்தன.

மரங்கள் சூழ்ந்த அடிவளவில் நிழல்கள் படர்ந்து

பரவிப்போய் கிடந்தன. இந்த மரங்களெல்லாம் சிரித்த நாட்களை விட என்னிடம் அடிவாங்கி அழுத நாட்கள்தான் அதிகம். கொட்டடி நமச்சிவாய பள்ளிக்கூடத்தில படிக்கேக்க சிவஞானம் ரிச்சர், முருங்கைகாய் மாதிரி நீட்டு விரல் இருக்கிற பஞ்சலிங்கம் மாஸ்ரர் அவர் வகுப்பு தொடங்குவதற்கு முதல் நீட்டு விரலால் தலையைச் சுற்றித் தலையே நீ வணங்காய் என்ற தேவாரத்தைச் சொல்லத் தொடங்கின உடனே திருராசா அழத்தொடங்குவான் அவன் அழுவதைப் பார்த்தால் எனக்கு அம்மாவின் நினைவு வரும் நானும் அழுவன். என்னைப் பார்த்து ராகினியும் அழுவாள்.

பிறகு மூன்று பேரும் கதிரையில் ஏறி நிற்கவேணும். அதில் ஏறி நிற்கேக்க வில்லுலீன்றி, சுடலைக்குச் சவம்போகும். பள்ளிக்கூடத்துக்குக் கிட்ட மேளம் அடிக்காமல் நமச்சிவாய பதிகம் பாடிக்கொண்டு போவார்கள். திருராசா என்னைக் கேட்பான் எங்க சவம்போகுது? இவன் இப்படி கேட்பான் என்று தெரிந்து கவனமா கையைப் பின்னால கட்டிக்கொண்டு நிற்பன். ஏனோ தெரியாது எப்பவும்போல ஏமாந்து கையைக் காட்டிடுவான். பிறகு அவன் எனக்கென்ன உன்ரை கை அழுகப்போகுது என்று சொல்லிச் சிரிப்பான். ராகினியும் சேர்ந்து சிரிப்பாள். நான் விரலைச் சூப்பிற்று அன்று முழுவதும் கையைப் பார்த்துப் பயந்து கொண்டே இருப்பன். சில நேரங்களில் சிலேற் பென்சிலைச் சுவரில் தேய்த்துவிட்டு கன்னத்தை உப்பென்று செய் கூரா இருக்கா எண்டு பார்ப்பம் என்று சொல்லிப்போட்டு குத்திவிடுவான். சுடுகாயாலும் சுடுவான். நான் றிங்பொட்டில் திறக்கேக்க மட்டும் நல்ல பிள்ளைமாதிரி சிரிப்பான். நான் அம்மாட்ட சொன்னா அம்மாவும் சிரிப்பா அம்மா அவனுக்கும் செல்லம். தன்ரை அண்ணான்ர மகன் என்று தடவுவ. எனக்கு அம்மாவில கோபம் கோபமா வரும்..

என்ர செரிமரத்தை வெட்டினது அவனுக்கு நல்ல சந்தோஷம். நான் அதில ஏறி நித்திரை கொண்டு விழுந்தததாலதான் அம்மா சாமிநாதனிட்ட சொல்லி செரி மரத்தை வெட்டினவ. சாமிநாதன் கோடலியோட நின்ற காட்சி என்னை என்னவோ செய்தது. மரம் என்னைப் பார்த்து அழுதது, கெஞ்சினது நானும் அழுதனான். ஆனா ஆருக்கும் எங்கட அழுகை தெரியவே இல்லை. அதை வெட்டின இடத்தில அம்மா வாழைவைக்க சொன்னா. அதுவும் வளர்ந்தது. நான் அதின்ர இலையை நுள்ளி கிளித்து ஏதாவது செய்து கொண்டே இருப்பன். கணக்கு மாஸ்ரரின்ர கோபத்தை எல்லா தென்னை மரங்களிலையும், நாவல் மரத்திலையும் காட்டுவன். அந்த மரங்களெல்லாம் பொல்லாத கணக்கு ரிச்சரைப் பார்த்துப் பயப்படுகிறமாதிரி என்னைப் பார்த்துப் பயப்பிடுங்கள்.. ஆனா நான் அடிக்காதது பாலப்பழ மரத்துக்கு மட்டும்தான். ஒரு வீட்டிலையும் இல்லாத பாலமரம் எங்கட வீட்டில மட்டும் இருக்கு என்று எனக்கு ஒரே பெருமை. எல்லாரிட்டையும் கேட்பன். எங்கட வீட்டில பாலமரம் நிக்குது உங்கட வீட்டில இருக்கே? அவையளின்ர முகம் சுருங்கிபோகும். அப்பபார்த்து ராகினி சொல்லுவாள். ஆனா காய்க்காது என்ன. இப்ப நான் சுருங்கி போய்விடுவன். ராகினியில கோபம் கோபமா வரும். இவள் சரியான எரிச்சல் பிடிச்சவள். எவடம் எவடம் விளையாடேக்க இவளை எறும்பு புற்றுக்குக் கிட்ட விடவேணும் என்று மனதுக்குள்ள நினைப்பன்.. இந்த மரம் ஏன் காய்க்கிதில்ல? அடியாத மாடு படியாது எண்டு அம்மா சொல்லிறது சரியோ? இதுக்கும் அடிச்சிருக்கலாமோ? எனப் பல கேள்வி முளைத்து நிற்கும். ஆரோ சொன்னவை எண்டு சாமிநாதன் விளக்கீட்டுக்கு வீட்டுமேல்கூட்டில, மதிலில எல்லாம் சுட்டியளைவைச்சிட்டு விளக்கு மாறல பாலை மரத்துக்கு அடிச்சவர். இன்டைக்கு அடிச்சா நாணத்தில அடுத்தவருஷம் காய்க்கும் அம்மா என்று சொல்லி அடிக்கேக்க எனக்கு பவமாக இருந்தது. எண்டாலும் காய்கட்டும் எண்டு பார்க்காத மாதிரி இருந்தனனான். பாலப்பழக் காலம் வந்து வந்து போனது. பழத்தைச் சாப்பிட்ட பிறகு வாய் கதைக்கேலாமல் ஒட்டிக்கொண்டு இருக்கிற மாதிரி மரமும் மௌனமாகவே நின்றது.

அம்மா இந்த மரம் ஏன் காய்க்கிதில்ல?

அது ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில தான் காய்க்குமாம்.

அப்ப எங்க காய்க்கும்?

காட்டுக்க காய்க்கும்.

எங்கட வீட்டிலையும் ஆரையும் அடிவளவுக்க போகாமல் செய்தா காய்க்குமே?

அம்மா என்னைப் பார்த்து அப்பவும் சிரிப்பா.

அம்மா சிரிக்கேக்க அவவின்ர வைரத்தோடு மாதிரியே சிரிப்பும் பளிச்சென்று இருக்கும். எனக்கு ஓடிப்போய் அம்மாவைச் கட்டிப்பிடிக்க வேணும்போல இருக்கும். ஆனாலும் கேள்வியை அடுக்குவன். சொல்லுங்கம்மா

என்னத்தைச் சொல்ல?

அதுதான் ஆரும் அடிவளவுக்க போகவேணாம் எண்டு சொல்லுவமே? ஐயோ அம்மா அப்புத்துரை

அம்மா ம் எண்டு சிரிப்பா

அப்புத்துரையை எப்பிடி மறிக்கிறது அம்மா? அவர் இல்லாட்டி எனக்கு விருப்பமான அப்பத்துக்கு ஆர் கள்ளுத்தாறது. ? அக்கா சொன்னா நீ போனபிறகு வீட்டில அப்பமே சுடேல்ல.

அப்பம் எண்டா எனக்கு ஓழிரு புழுகமா இருக்கும்; அம்மாவும் ரம்ளரை தந்து சொல்லுவா கோடியால அப்புத்துரை போகும் எங்கேயும் பிராக்குப் பாலீத்துக்கொண்டு இருந்திடாத. அடுத்த நாள் ஐஞ்சு மணிக்கு நடராசா தேங்காய் துருவிற சத்தம் கேட்கத்தொடங்க நானும் எழும்பி முதல்ல பிய்யிற அப்பத்தை சாப்பிட தொடங்குவன் பிறகு நல்ல அப்பம் வரேக்க எனக்கு வயிறு நிரம்பிவிடும். முட்டை அப்பம்; நல்ல அப்பம் எல்லாம் அக்கா சாப்பிடுவா. அம்மா என்னை கவலையா பார்ப்பா. இப்பவும் அப்படித்தான் என்ர அம்மா இங்க எங்கயாவது இருந்து என்னை பார்த்துக்கொண்டே இருப்பா. வாழ்க்கையில் சுகத்தை மட்டும் சுவாசித்து வாழ்ந்த அம்மாவின் மீது துன்பத்தின் நிழல் படரக் காரணமாய் இருந்த நான் பிறந்திருக்கவே கூடாது.. அந்த கடைசி நாள் பிரிவின் பாதை நீண்டு என்னையும் அம்மாவையும் பிரித்த அந்த கணம் இப்பவும் அம்மாவின் அழுத முகம் என் மனதில்.

நான் அக்காவுக்கு எப்பிடி சொல்லப்போகிறன்? ஒவ்வொரு விடியலும் நடுங்கிக்கொண்டே விடிந்தது. அக்காவின் உடைபடாத மௌனம் என்னுள் பயத்தை அதிகரித்தது. அக்கா மட்டும் அல்ல இந்த வீடும், மண்ணும், வீட்டை சுற்றி நிறைந்து நிற்கும் மரங்களும் எல்லாமே மௌனித்து நின்றன. ஆனால் அவர்களின் முகங்களில் சோகம் படிந்துபோய் இருந்தது. அக்கா சுகந்தி என்று கூப்பிடும் பொழுதெல்லாம் மனம் பயப்பட்டது. என்னுடைய கருத்தை அக்கா கேட்கப்போவதே இல்லை. மனம் உடைந்து உடைந்து விழுந்து களைத்து போயிருந்தது. நித்திரைகூட என்னைவிட்டு தூர விலகியிருந்தது. நிலவு முற்றத்தை நிறைத்து நின்றாலும் மனித இருப்பைத் தொலைத்த மௌனம் நிறைந்து கிடந்தது. வெளியில் முள்முருங்கையின் பூக்கள் சத்தமில்லாமல் உதிர்ந்து கொண்டே இருந்தன. குசினி விறாந்தையில் வரிசையாக நிற்கும் முருங்கைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அத்தானையும் நினைவுபடுத்தியது. எத்தனை முருங்கைகள் நின்றாலும் ஏழுவயதாக இருக்கும்போது நட்ட முருங்கையிலதான் எனக்குச் சரியான விருப்பம்.. அதற்குதான் நிறைய தண்ணீ விடுவன். அதுவும் வளர்ந்து கிளைகளைப் பரப்பி நிழல் தந்தது. நெருப்பு வெட்கை காலத்திலும் சிவப்பாய்ப் பூத்து குளிர்மையைத் தந்தது. மரங்களையும் பிராணிகளையும் நேசித்த காலம் எங்கேயோ தொலைந்து போயிருந்தது. இந்த மரங்களெல்லாம் என்னை தேடியிருக்குமோ? அம்மா மாதிரியே என்னை நேசித்த ஜிம்மியை எங்க தாட்டிரிப்பினம்? விடை தெரியாத கேள்விகளைச் சிந்திக்க சிந்திக்கப் பொழுதுகள் சுமையாக அழுத்தின.

என்னோடுசிரித்து,விளையாடி,சண்டைபோட்ட வாசுகியை அக்கா அறிமுகப்படுத்தும் அளவிற்கு அடையாளம் அழிந்து அந்த வாசுகியா இவள் என ஆச்சரியப்பட வைத்தாள். போரின் நிழல் அவளின் அகத்திலும் முகத்திலும் ஆழப்பதிந்திருந்தது. அவளின் சோகக்கதையை அக்கா சொன்னவுடன் அவளோடு தனிமையில் பேச வேண்டும்போல் இருந்தது. வாசுகியின் வீட்டுக்கு போகும் வழிகளில் ராணுவம் எத்தனையோ அப்பாவிகளைக் கொன்று குவித்த களைப்பிலும் பெருமிதத்திலும் அவர்களும் அவர்களின் ஆயுதங்களும் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தன. இவர்களில் யாரோ ஒருத்தன் சிலவேளை இவனாகவும் இருக்கலாம் வாசுகியின் ஒரே மகளையும் தேடிப்போன கணவரையும்....

உடல் நெருப்பாய் எரிந்தது. காகமும் குயிலும் சேர்ந்து கத்தி என்னைத் திடுக்கிடவைத்தது. என்னவாக இருக்கும்? காகம் கஸ்ரப்பட்டு கட்டின வீட்டை குயில்பிடித்திருக்குமோ? சும்மா முட்டை மட்டும்தான் போட்டுக் கொண்டிருந்தது. காகமும் இனம் காணும்

மட்டும்தான் காத்திருக்கும். இன்று என்ன நடந்தது? இங்க மனிதர்களே அடுத்து என்ன நடக்கும்? எனப் புரியாமல் தவிக்கும்போது.

வாசுகியின் வீட்டு முற்றம் உதிர்ந்த சருகுகளால் மூடிக்கிடந்தது. அவள் கதைக்கும் பொழுது எந்த மாற்றமும் தெரியவே இல்லை. இவள் சோகத்தை எல்லாம் மறந்திட்டாளோ? அக்கா ஏன் அப்படி சொன்னவ? என்றெல்லாம் என்னை சிந்திக்கவைத்தாள்.

இருட்டுது வாசுகி அக்காவும் ரவியும் தேடுவினம். நான் போயிற்றுவரட்டே.

இங்க பொறு நானும் வாறன் இவள் கலா தெரியும்தானே எங்களடோ படிச்சாள் அவளும் நான் படிப்பிக்கிற பள்ளிக்கூடத்திலதான் படிப்பிக்கிறாள். அவள் என்ர மகள் சுமதிக்கு டாப்பில ஒரே வட்டம் போடுறாளாம். அதுதான் ஏன் எண்டு கேக்கபோறன். இருண்ட வெளி நீண்டு கொண்டு போனது.

அந்தப் பாதையும் நீண்டு கொண்டுதான் இருந்தது. அக்கா சொன்னவ பேசாமல் தாவடியால போய் வைத்தீஸ்வராவால போங்கோ அங்கதான் ஆள்நடமாட்டம் இருக்கும். அண்ணா சொன்னான்

ஆக்கள் இல்லாத இடத்தால போனால் ஸ்பீடா போகலாம்.. வா நாவந்துறையால போய் சோனக தெருவால போவம்.

நாவந்துறை சந்தியில் அன்னியமணம் மணந்து வயிற்றுக்குள் என்னவோ செய்தது. அண்ணாவையும் ஸ்கூட்டரையும் மற்றபக்கம் நிற்பாட்டிச்சினம். தடுமாறி விழப்போன என்னை அப்பாமாதிரி கவனமா பிடிச்சினம். இவை வரேக்க எல்லாரும் கதைச்சவை இனி எங்களுக்குப் பயமில்லை காந்தி சொன்னமாதிரி இரவிலையும் பயமில்லாம நடக்கலாம். இவை எங்கட சகோதரம் என்றெல்லாம் சொல்லி மகிழ்ந்தவை. ஆனா அப்பாமாதிரி இருந்தவரின்ர கை அப்பான்ர கை மாதிரி இருக்கேல்ல. குரலும்

எங்க போறீங்க?

வீட்டை.

வீடு எங்க இருக்கு?

அங்க ஆஸ்பத்திரி றோட்டில. நீட்டின கையை பிடிச்சவன். தங்கச்சி சட்டைக்கே என்ன வைச்சிருக்க? அந்த நேரம் பார்த்து அவர்களுக்கு அவசர அறிவிப்பு வர தப்பிய மான்களாய் நாங்கள். அண்ணா சொன்னான் அம்மாட்டைச் சொல்லாத என்ன. பிறகு எங்களுக்குதான் அடிப்பா. ஓம் எண்டுதான் தலையாட்டினான். ஆனால் அம்மாவைக் கண்டோன்ன என்னையறியாமல் நான் வாழ்க்கையில் ஒருநாளும் அப்படி அழுததே இல்லை. அம்மாவின் முகத்திலும் நான் என்றுமே காணாத துயரவெள்ளம் நிறைந்திருந்தது. சீயாக்காயும் மஞ்சளும் போட்டு தேச்சு தேச்சு முழுகவார்த்தா. கிடாரத்தில் சுடுதண்ணீர் கொதித்து கொண்டு இருந்தது. தீயும் சுவாலைவிட்டு எரிந்தது. அம்மம்மா தன்ர அறையில ஆசையா வைத்திருந்த இந்திராகாந்தியின் படத்தைச் கழற்றி ஓரமாக வைத்தா.

இரவு படுத்திருக்கும்போது அம்மாவின் கண்ணைத் தொட்டுப்பார்த்தான். ஈரமா இருந்தது.

அம்மா ஏன் அழுகிறீங்க?

ஒண்டுமில்லை குஞ்சு. பிறகு அம்மா என்னைத் தடவித் தடவி அழுதா.

இப்ப ஏன் அழுகிறீங்க?

குஞ்சு பயப்பிட்டனியே? ஓம் எண்டு சொன்னா அம்மா இன்னும் அழுவா இல்லையெண்டு சொல்லுவமோ என நினைத்தாலும் தலை தன்பாட்டில் ஓம் எண்டது. அம்மா இறுக்கி கட்டிப்பிடிச்சா அம்மா இப்பிடித்தான் ஆனால் உங்கட கைமாதிரி இருக்கேல்ல பயமா இருந்தது. அம்மா சத்தமா விக்கி அழுதா. என்னை இறுக்கி கட்டிப்பிடிக்கேக்க அம்மான்ர மூச்சு இன்னும் சூடா இருந்தது. அன்று மட்டும் அம்மா கர்ணன் கதை சொல்லாத இரவாய் கழிந்தது. எனக்காய் தூக்கம் தொலைத்து, சுகம் துறந்து என்னையே சுவாசித்த என்ர அம்மாவின் நினைவுகள் ரகசியமாய் அழவைத்தது.

நினைவுகளில் மூழ்கியிருந்த என்னை அக்கா என் மடியில் அல்பத்தைவைத்து மீண்டும் அழவைத்தா. முதல் பக்கத்தில் என்ர குஞ்சு அம்மா தலைமாட்டில் குத்துவிளக்கு பக்கத்தில் பெரியம்மா, அக்கா, ஒரு கணம் என் உடலெல்லாம் தீப்பற்றியதுபோல் இருந்தது. வெளியில் சோவென மழை கொட்டிக்கொண்டிருந்தது. என் உதடுகளில்

மெல்ல உப்புக்கரித்தது. உணர்வே இல்லாமால் பக்கங்களைக் கை புரட்டின. சாய்மனைக்கதிரையில் அம்மா படுத்திருக்க இளநீராலும், பாலாலும் கரணவாய் குருக்கள் அம்மாவை அபிஷேகம் செய்து கொண்டிருந்தார். என் கண்களிலிருந்து அம்மா கொஞ்சம் கொஞ்சமாக மறைவதுபோல்.

என்ர குஞ்சு அம்மாவைப் பெட்டியில்வைத்து மூடப்போகும் படம் நெஞ்சில் ஆயிரம் ஊசியால் குத்துவதுபோல் வலித்தது. அம்மாவின் கண்கள் என்னையே பார்ப்பதுபோல் நீ வருவாய் வருவாய் எண்டு கடைசி நிமிஷம்மட்டும் பார்த்துக்கொண்டிருந்தனான். ஏன் என்னை ஏமாற்றினீ? என கேட்பதுபோல் இருந்தது. என்னால முடியேல்லையே அம்மா கண்ணீர் அம்மாவை கழுவிக்கொண்டு ஓடியது.

அம்மா

ம்

அம்மா

ஓம்

நான் செத்தா என்னைச் சவப்பெட்டிக்குள்ள வைச்சு மூடுவீங்களே? அம்மா என்னை ஒரு பார்வை பார்த்தா விழி ஓரத்தில் மெல்லிய கசிவு தெரிந்தது.

அம்மா ஏன் எண்டு கேட்கமாட்டீங்களே? ஏனெண்டா மூடினா இருட்டா இருக்கும் மூச்சுவிட ஏலாம பயமா இருக்கும். பிறகு மேளம் அடிக்கக் கூடாது ஆ சொல்ல மறந்திட்டன் முக்கியமா நமச்சிவாய பதிகம் பாடவேகூடாது. நீங்க விரும்பினா அம்மா எண்ட பாட்டை மட்டும் பாடுங்க என்ன. தன்னை மறந்து சிரித்த அம்மா வாய்மூடி, விரல்கட்டி உயிர் பிழியும் துயரம் கவிழ்ந்து கிடந்தது.

என்ர மனசில அலையும் சூறாவளியும் சேர்ந்தே அடித்தபடி. இனிக் கதைக்காட்டி இந்த சூறாவளி பெருத்துப் பெருத்து என்னையே அடிச்சு அழிச்சிடும். அம்மா அடிக்கடி சொல்வா

குஞ்சு உண்மையைச் சொல்ல நீ ஆருக்கும் பயப்பிடக்கூடாது. எது பேசினாலும் வார்த்தைகள் கைவீசி நடக்கவேணும்.

அக்கா

என்ன?

அம்மா சொல்லித்தந்த மாதிரி வார்த்தைகள் வரவில்லை அவை ஓடி ஒழிந்தன. அம்மா எந்த அறையில? அக்கா இருட்டில் நின்றபடி. பெருமூச்சுடன் சின்ன அறையைப் பார்த்தா. ஓ என்ர அறை அம்மாவும் நானும் சிரித்து, கதைத்து எனக்கும் அம்மாவுக்கும் பிடித்த அறை. உணர்வின்றிக் கால்கள் அறையை நோக்கி நடந்தன. இங்கதான் என்ர அம்மான்ர மூச்சு இந்த அறையிலதான் அமைதியாய், பெருமூச்சாய் மூசி மூசிச் கழிஞ்சிருக்கும். அம்மான்ர உயிர் எங்கேயும் போயிருக்காது. இந்த அறையிலதான் இங்கதான் என்னைத் தேடித் தேடி எனக்காக வில்லுலீன்றி பிள்ளையாரை வேண்டியபடி இருக்கும். என்ர வீட்டில இந்த அறையில ஒரு நிமிஷம் என்றாலும் இருக்க வேணுமென்று எத்தனை நாட்கள் ஏங்கி அழுதிருப்பன். இனி என்ர ஒரு கை எழுத்தால எல்லாம் மாறிப்போகப் போகுது. எங்கட வீட்டை தங்கட வீடு என்று ஆரோ எல்லாம் சொல்லப்போகினம். முகம் தெரியாதவர்களின் பாதங்கள் என்ர அம்மா நடந்த தடயங்களை அழிக்கும். ஓம் என்ர அம்மாவின் எல்லா அடையாளங்களையும் அழிக்கும். பிறகு என்ர அம்மான்ர உயிர் ஒரு நிமிஸம் கூட இங்க இருக்காது. ஓ என்று கத்தியபடி ஏதவாது ஒரு வெட்ட வெளியில் அலைஞ்சு அலைஞ்சு என்னை தேடுவா இது நடக்கக்கூடாது. நடக்க விடவும் மாட்டன். நான் என்ன அம்மா செய்ய? என் உயிரை யாரோ வேரோடு அறுப்பதுபோல் இருந்தது. எல்லாமே என் கையை விட்டு நழுவுவதுபோல்.

சுகந்தி.... இது என்ர அம்மா என்ர அம்மா சுவரில் சிரித்தபடி என்னையே பார்த்துக்கொண்டு இருந்தா. சுகந்தி.... அம்மா என்னை அழைப்பதுபோல். அம்மா கூப்பிட்டனீங்களாம்மா? அம்மா என்னை தொடுவதுபோல், என் தலை தடவி அணைப்பதுபோல் விரலுடன் விரல்கோர்த்து என்னை இறுக பிடித்து என்னைத் தவிக்க விட்டுட்டு போனமாதிரி இந்த வீட்டையும் விட்டுடாதே. ஒரு நிமிடத்தில் எல்லாம் கனவுமாதிரி. அம்மா என்னைப் பாருங்கம்மா என்னோட கதையுங்கம்மா, என்னைத் தனியா விட்டிட்டு எங்கேயும் போகாதேங்கம்மா. அம்மாவின் படத்திலிருந்த ஆணி என் கையைக் கீறி இரத்தம் வழிந்துகொண்டு இருந்தது. அக்கா கத்தினா சுகந்தி அழாத வா வந்து கையைக் கழுவு கழுவு எனக்குள் பதுங்கியிருந்த வார்த்தை அகல கை விரித்தது.

# கோணல் பிரார்த்தனை



பென் ஒக்ரி

**தமிழில் :** எம். ரிஷான் ஷெரீப் **(நைஜீரியா)**

வட நைஜீரியாவில் 15.03.1959 ஆம் ஆண்டு பிறந்த கவிஞரும், எழுத்தாளரும், நாவலாசிரியருமான பென் ஒக்ரி, பின் நவீனத்துவ எழுத்திலும், பின் காலனித்துவ கலாசாரத்தை எழுதுவதிலும் புகழ்பெற்றவர். இவரது தந்தை, சட்டக் கல்வியைப் பயில்வதற்காக லண்டன் சென்றபோது, தாயுடன் சிறு குழந்தையான இவரையும் எடுத்துச் சென்றார். எனவே தனது ஆரம்பக் கல்வியை லண்டனில் கற்றதோடு, ஒன்பது வருடங்களின் பின்னர் குடும்பத்தினரோடு நாட்டுக்குத் திரும்பி வந்தார். இன்று வரையும் பல நாவல், கவிதை, கட்டுரை மற்றும் சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்டுள்ள இவர், பல சர்வதேச விருதுகளையும் வென்றுள்ளார்.

சபா சித்தப்பாவிடம் கடிதத்தைக் கொடுத்த போது, அவர் திடீரென, என் கண் முன்னே முதியவராக மாறி விட்டதைப் போலத் தோன்றினார். அவரது முகம் முழுமையாக மாறிப் போனதோடு, எனது தலைக்கு மேலாக தொலைவில் பார்த்துக் கொண்டிருந்தார்.

'இதை உன்கிட்ட தந்தது எப்போ?' என ஒரு கணத்துக்குப் பிறகு கேட்டார்.

'இன்னிக்குச் சாயந்திரம். சித்தி இல்லாத நேரமாப் பார்த்து சித்தப்பா கிட்ட இதைக் கொடுக்கணும்னு அவ என் கிட்ட சொன்னா'

அவர் எதுவும் கூறவில்லை. அவரது முகத்தைப் பார்ப்பதைத் தவிர்க்க முயற்சித்தேன். எனினும் அதனை என்னால் செய்ய முடியாதிருந்தது. அவரது முகத்தில் சுருக்கங்கள் ஆழமாகப் பரவிச் சென்றிருப்பதாக எனக்குத் தோன்றியது. எனக்குள் கவலை உண்டானது. அவர் எதையோ சொல்ல வாயைத் திறந்தார். உடனே மூடிக் கொண்டார். அவருக்கு முன்னால் நின்று கொண்டேயிருந்த அசௌகரியத்துக்கு ஆளானேன். திடீரென அவர் கேட்டார்.

'அவ எப்படியிருக்கா?'

அந்தக் கேள்வியால் ஆச்சரியத்துக்கு உள்ளானேன்.

'சொல்லு,.. அவ எப்படியிருக்கா?'

'அவவுக்கு... அவவுக்கு ஒண்ணும் ஆகிடல சித்தப்பா'

அவர் என்னை முறைத்துப் பார்த்ததும் தான், நான் அவரது கேள்விக்கு மகிழ்ச்சிகரமான பதிலொன்றை வழங்கத் தவறியதை உணர்ந்தேன்.

'உங்கிட்ட இந்தக் கடிதத்தைத் தர்றதை யாராவது கண்டாங்களா?'

'யாரும் காணல. அவ என்னை அவவோட கடைக்குள்ள கூட்டிட்டுப் போய்த்தான் இந்தக் கடிதத்தைத் தந்தா'

அவர் தலையை அசைத்தார். அவருக்கு அப்பதில் ஆறுதலளித்தது போலிருந்தது. எனினும் இன்னும் எச்சரிக்கையாகவே இருந்தேன். புதிதாகப் பூத்த புன்னகை அவரது முகத்திலிருந்தது. பிறகு எனது தலை மீது கை வைத்து, அன்பாகத் தடவிக் கொடுத்தார்.

'உனக்கு ஏதாவது தெரியுமா?'

'இல்ல சித்தப்பா'

'நாங்க ஒரு குற்றத்தோட பங்காளிங்கன்னு உனக்குத் தெரியுமா?'

அவர் என்ன சொல்ல வருகிறாரென எனக்குப் புரியவில்லை. அதனால் நான் இல்லையென்று கூறினேன்.

'இல்லன்னு சொன்னதுக்கு அர்த்தமென்ன?'

'நான் ஆமான்னு சொல்ல வந்தேன் சித்தப்பா'

அவர் என்னை முறைத்துப் பார்த்துவிட்டு, தனது இடது கையில் வைத்திருந்த கடிதத்தைப் பார்த்தபடி தொடர்ந்தும் என்னுடன் கதைத்தார்.

'நீ எங்ககிட்ட வந்து எவ்வளவு காலமாகுது கேமே?'

‘ஒரு மாசமிருக்கும்னு நினைக்கிறேன் சித்தப்பா’

‘நீ எங்கக்கிட்ட இருந்து ஏதாவது கத்துக்கிட்டியா?’

அவர் இவ்வாறான கேள்விகளையெல்லாம் கேட்பது ஏனென்பது எனக்குள்ளே எழுந்த கேள்வியாகவிருந்தது. நான் உளறியவாறே பதிலளித்தேன்.

‘ஆமா சித்தப்பா’

‘என்ன கத்துக்கிட்டே?’

நான் தயங்கினேன். ஆனால் அவர் வற்புறுத்தினார்.

‘சமைக்கிறது எப்படி... அடுத்தவங்களோட வசிக்கிறதெப்படி.. தகவல் கொண்டு போறதெப்படி.. இப்படி.... ’

‘ம்ம்... நல்லது’ எனக் குறிக்கிட்டார்.

‘உன்னோட அப்பா புத்திசாலி. இடைக்கிடையே தன்னோட பிள்ளைகளைச் சொந்தக்காரங்க கூட தங்க அனுப்பி வைக்கிறது நல்ல பயிற்சிதான். அதன் மூலமா எங்கே போனாலும் பிழைச்சி வாழ்ந்துக்குற விதத்தைக் கத்துக்கிடலாம். ’

அவர் என் தலைக்கு மேலாகத் தொலைவில் பார்த்தார். பிறகு கதிரையின் கீழே மறைத்து வைத்திருந்த விஸ்கி போத்தலொன்றை எடுத்து, அதிலிருந்து சில மிடறுகள் பருகி விட்டு, மீண்டும் போத்தலை இருந்த இடத்திலேயே மறைத்து வைத்தார். அவர் போத்தலை மறைத்து வைத்திருப்பது அவரது மனைவியினால்தான் என எனக்குப் புரிந்தது. அவளது கையில் இப் போத்தல் சிக்கினால் பெரும் கலவரமே வெடிக்கும்.

‘சித்தப்பா... கடிதத்துக்குப் பதிலையும் வாங்கிட்டு வரும்படி என்கிட்ட சொல்லியிருக்கா’

அவர் அதனைக் கண்டு கொள்ளவில்லை.

‘என் பொஞ்சாதிய உனக்குப் பிடிச்சிருக்கா?’ என திடீரெனக் கேட்டார்.

நான் பொறியொன்றில் சிக்கிக் கொண்டுள்ளதாக எனக்குத் தோன்றியது. சித்தப்பா எப்போதும் அவ்வாறு நடந்து கொண்டதில்லை. போதையின் உச்சத்தில் இருக்கும்போது அல்லது வேறேதேனும் குழப்பத்தில் இருக்கும்போது மாத்திரமே அவர் இவ்வாறு நடந்து கொள்வார். அவரது கேள்விக்கு என்ன பதிலளிப்பதென எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் எனக்கு அவரது மனைவியைப் பிடிக்கவில்லை. ஆனால் அதனை எவ்வாறு அவரிடம் கூறுவது? அவள் என்னை ஒரு அடிமையைப் போல நடத்திக் கொண்டிருந்தாள். எப்போதுமே குட்டுவதோடு, சொற்பமாகவே உணவையும் தந்தாள். எனினும் அவள் அழகானவள். அதனால் அவளைப் பார்த்துக் கொண்டிருப்பது எனக்கு விருப்பமானது.

‘அப்போ என் பொஞ்சாதிய உனக்குப் பிடிக்கல... அப்படித்தானே?’

‘எனக்குப் பிடிச்சிருக்கு சித்தப்பா... பிடிச்சிருக்கு’

அவர் தனது கையிலிருந்த கடிதத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

‘கேமே... எனக்கு ரொம்ப அதிகமாத் தேவைப்படுறது எதுன்னு உனக்குத் தெரியுமா?’ எனக் கேட்டவாறு அவர் என்னைப் பார்த்தார். அவரது பெரிய கரு நிற விழிகள் என்னை உற்று நோக்கின. சபா சித்தப்பாவுக்கு அதிகமாகத் தேவைப்படுவது எதுவென எனக்குத் தெரியும். இந்த வீட்டுக்கு வந்ததுமே முதன் முதலில் நான் அறிந்துகொண்டது அதைத்தான். பள்ளிக்குப் போகும் ஒவ்வொரு தடவையும் அவர் அதற்காகப் பிரார்த்தித்து வந்தார். எல்லா காலை வேளைகளிலும் எம்மை எழுப்பும் அவரது மனைவி, நம் எல்லோரையும் வரவேற்பறையை நோக்கி அழைத்துச் செல்வாள். அங்கு நாம் எல்லோரும் அவரது தேவைகளை முன் வைத்து இறைவனைப் பிரார்த்திப்போம். ஆரம்பத்தில் அது எனக்குக் குழப்பமாக இருந்தது. எனினும் பிறகு எனக்குச் சபா சித்தப்பா குறித்து அனுதாபம் சார்ந்த உணர்வொன்றே தோன்றியிருந்தது.

‘சித்தப்பாவுக்குத் தேவை ஒரு குழந்தை’ என்றேன்.

அவர் மெதுவாக என்னைப் பார்த்தார். மீண்டும் கதைக்க அவருக்கு சற்று நேரமெடுத்தது.

‘உனக்குத் தெரிஞ்சிருக்கு. ஆண்டவர் சில நேரங்கள்ல எங்க பிரார்த்தனைகளுக்கு வினோதமாத்தான் பதிலளிச்சிடுறார்’

அவர் அவ்வாறு பதிலளித்ததைக் கண்டு நான் திகைத்துப் போனேன். அவரும், அவரது மனைவியும் பக்தி மிக்க கிறிஸ்துவர்களாக இருந்தனர். அவர் மீண்டும் என் தலையில் தட்டினார்.

‘கேமே, உனக்குத் தெரியுமா? நான் பெரிய ஒரு சிக்கல்ல மாட்டிக் கொண்டிருக்கிறேன். ஆனா

அது எந்த மாதிரியான சிக்கல்னு விளங்கிக் கொள்ற அளவுக்கு நீ இன்னும் பெரிய பையனாகல்ல'

'ஆமா சித்தப்பா'

'இப்பப் போய்த் தூங்கு. ஆனா இது எதையும் யார் கிட்டயும் சொல்லக் கூடாது.. புரியுதா? சரி.. நீ போலாம்.. ஏன் இன்னும் பார்த்துட்டிருக்கே?'

'இதுக்கு பதிலொண்ணு வாங்கிட்டு வரச் சொல்லி அவ சொன்னா. '

சபா சித்தப்பா களைத்துப் போனவரைப் போல மீண்டும் என்னைப் பார்த்தார்.

'நீ சிரமப்படாதே.. நானே போய் அவளுக்கு பதிலைக் கொடுக்குறேன்' என்றார்.

'சரி சித்தப்பா'

அன்றிரவே நான் பதிலைக் கொண்டு வந்து தந்தால், பத்துக் கோபோ காசுகளைத் தருவதாக அவள் தந்திருந்த வாக்குறுதியை நினைவில் கொண்டு நான் கூறினேன். ஆனால் அதைப் பற்றி நான் கவலைப்படத் தேவையற்று, அதற்குப் பதிலாக சித்தப்பா எனக்கு முப்பது கோபோ காசுகளைத் தந்தார். நான் அறையிலிருந்து வெளியேறும்போது, சபா சித்தப்பா சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த அவரது திருமணப் புகைப்படத்தை எனது தலைக்கு மேலால் பார்த்துக் கொண்டிருப்பது எனக்குத் தென்பட்டது.

மறுநாள் காலை, பிரார்த்தனை முடிந்ததன் பிறகு சித்தி வேலைக்குச் சென்றாள். நான் விளையாடுவதற்காக வெளியே சென்றேன். அது பள்ளிக்கூட விடுமுறை காலமென்பதால் விசேடமாகச் செய்ய வேலை ஏதுமிருக்கவில்லை. சித்தப்பா வசித்து வந்த பிரதேசத்தில் எனக்குப் பிடிக்காத விடயமென்றால் அது, விளையாடுவதற்குப் போதுமான அளவு பிள்ளைகள் இல்லாதிருந்ததுதான். அடுத்தது, சுற்றியிருந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகள் வெளியே போய் விளையாடுவதை அனுமதிக்காதது. ஏனெனில் அவர்களுக்கு வீட்டுக்குள்ளேயே செய்ய நிறைய வேலைகள் இருந்தன.

நான் மேரியின் கடைக்குச் செல்லத் தீர்மானித்தேன். எனக்கு அவளிடமிருந்து இனிப்புக்கள் கிட்டும். அவளது தம்பிகளுடனும் சேர்ந்து விளையாடலாம்.

'கேமே' என ஒரு குரல் கேட்டது. நான் நின்று திரும்பிப் பார்த்தேன். அது மேரியல்ல. எனவே அவளது சில்லறை மற்றும் காய்கறிக் கடையை நோக்கி ஓடிச் சென்றேன். என்னையழைத்தது அவளது இளைய தம்பி.

நான் அங்கு சென்றபோது, மேரி ஜன்னலால் தலையை வெளியே நீட்டி 'உள்ளே வா' என்றாள். நான் கடைக்குள் சென்றேன். அந்தச் சிறிய இடத்தில் சகோதர, சகோதரிகளுடன் அவள் வசிப்பது எப்படியென நான் வியந்தேன். அந்தக் குறுகிய இடத்தில் பல வித மூடைகளும், பெட்டிகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

'கேமே, என்னோட கடிதத்தை சபாக்கிட்ட கொடுத்தியா?'

'ஆமா... நேத்து ராத்திரியே கொடுத்துட்டேனே'

'பதிலெங்கே?' எனக் கேட்டபடி, யாரும் காணாதிருக்க கதவைச் சாத்தி விட்டாள்.

நான் எனது செருப்புக்களைப் பார்த்தேன். எனதிரு பாதங்களும் புழுதியால் மூடப்பட்டிருந்தன.

'சித்தப்பாவே வந்து பதில் சொல்றேன்னு சொன்னார்'

அவள் அழுக்கடைந்த மூங்கில் கதிரையில் அமர்ந்தாள். நான் தொடர்ந்தும் அங்கிருக்கக் கூடாதென எனக்குத் தோன்றியது.

'அவர் சரியாக என்ன சொன்னார்னு சொல்லு?'

நான் சற்று உற்சாகத்துடன் விவரித்தேன். அவள் என்னை மிகவும் கூர்ந்து கவனித்தபடிக் கதைத்தாள்.

'நீ நல்ல பையன். நாங்க தர்ற தகவலைக் கொண்டு போறாய். உன்னோட சித்தி என்ன சொன்னா?'

'சித்திக்கு ஒண்ணும் தெரியாது' என நான் உறுதியாகக் கூறினேன்.

'நெஜமா?'

'நான் ரொம்ப நேரம் வெளியே போய் தாமதிச்சா சித்தி என்னை அடிப்பா'

'அவள் நல்லவளா?'

'தெரியல'

'ஆனா அவ இன்னும் அவருக்கொரு குழந்தையப் பெத்துக் கொடுக்கல'

'நாங்க தினந்தோறும் பிரார்த்திக்கிறோம்...

எப்பவாச்சும் ஒருநாள் கிடைக்கும்'

மேரி கேலியாகப் புன்னகைத்தாள். தொடர்ந்து,

'நான் சபா சித்தப்பாவைக் கல்யாணம் பண்ணிக்குறது உனக்கு இஷ்டமா?' என்று கேட்டாள்.

நான் அதிர்ந்தேன்.

'சபா சித்தப்பா உங்களைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டார். அவர் கிறிஸ்தவர்'

நான் கூறியது முட்டாள்தனமான கூற்றெனக் கருதித்தான் அவள் என்னை உற்று நோக்குகிறாளோ என எனக்குத் தோன்றியது. பிறகு சிரித்தவாறே கேட்டாள்.

'எப்படிப்பட்ட கிறிஸ்தவர்? நாங்க சேர்ந்து என்னவெல்லாம் செய்றோம்னு உனக்குத் தெரியுமா?'

எனது சித்தப்பாவைப் பற்றி அவ்வாறாகக் கதைத்தபோது எனது முகம் சிவந்தது. அவளது முகத்திலிருந்த சிரிப்பு மறைந்துபோகும் விதத்தை நான் ஆராய்ந்தேன். அவளிடம் மனம் கவரக்கூடிய அழகிருந்தது. மெலிந்து நீண்ட முகம். அதில் அவளது விழிகள் துயரத்தால் கனத்திருந்தன. உயரமானவளாக இருந்த அவள் எப்போதும் கிழிசல் கண்ட ஆடைகளையே அணிந்திருந்தாள். அவளது கண்களைச் சுற்றி ஏதோவொரு பூச்சு பூசப்பட்டிருந்தது. முகம் முழுவதும் பவுடர் அப்பியிருந்தது. இதை விடவும் நல்ல அழகோடு, சுறுசுறுப்பான மனைவியிருக்கும்போது எனது சித்தப்பா, இந்தப் பெண்ணுக்கு இரகசியமாகத் தகவல் அனுப்புவதும், இருளில் சந்திப்பதுவும் ஏனோ என எனக்குப் புரியவில்லை. அநேகமாக மேரி, அன்பான ஏழைப் பெண்ணாக இருப்பதுவும், அகங்காரமற்றவளாக இருப்பதுவும் அதற்குக் காரணமாக இருக்கக் கூடும். மீண்டும் மேரி என்னுடன் கதைத்தபோது அவள் விரக்தியுற்றவளாகத் தெரிந்தாள்.

'நான் இப்ப போகணும்' என்றேன்.

'சரி. டொமீக்கிட்ட சொல்லி இனிப்பு கொஞ்சம் வாங்கிக்கோ... திரும்ப இங்க வந்து அவங்க கூட விளையாடு... சரியா?'

தலையசைத்த நான் வெளியே வந்தேன். நான் கதவைச் சாத்தியபோது அவள் அழத் தொடங்கியிருப்பாளென நான் நினைத்தேன். நான் வெளியே சென்று அவளது தம்பி, தங்கைகளுடன் விளையாடினேன். உதைப் பந்தாட்டமும், டென்னிஸும் விளையாடினோம். அவர்கள் எனக்குக் குளிப்பதற்கும் இடமளித்தனர். பிறகு நாங்கள் சீனத் திரைப் படமொன்றைப் பார்க்க ஒன்றாகச் சென்றோம்.

நான் திரும்பவும் வீட்டுக்கு வந்தபோது, எனது சித்தியின் வாகனம் அங்கிருப்பதைக் கண்டு திடுக்கிட்டேன். அவள் அலுவலகத்திலிருந்து நேரத்தோடு வந்திருக்கிறாள் அல்லது வேறு ஏதேனும் நடந்திருக்கிறது. நான் ரகசியமாகத் திண்ணை வழியே நடந்து சென்று, எனது அறைக்குள் புகுந்துகொள்ளப் பார்த்தேன். அவர்கள் குரலுயர்த்திக் கதைத்துக் கொண்டிருந்ததால் அதைச் செவிமடுக்காதிருக்க என்னால் இயலவில்லை.

'வாங்க... அறைக்குள்ளே போவோம்'

'எனக்குத் தலை வலிக்குது'

'உங்களுக்கு இந்தத் தலைவலி ஒரு கிழமையா இருக்கு'

'வேலை ஜாஸ்திங்குறதால'

'என்ன வேலை?'

தொடர்ந்து அமைதி. பிறகு கடதாசிகள் இழுபடும் சப்தம். வேகமாக மூச்செடுக்கும் சத்தம். இறுதியில் ஆறுதலாக மூச்சு விடும் சத்தம்.

'சபா, உங்களுக்கு இன்னொருத்தி இருக்காளா?'

'என்ன? ஏன் இப்படி முட்டாள்தனமாக் கதைக்குறே?'

'இல்லேன்னா ஏன் இப்படி நடந்துக்குறீங்க?'

'இங்க பாரு... நான்... '

'அப்படியொருத்தி இருக்கும்போதுதான் எல்லா ஆம்பளைங்களுமே இப்படிச் சொல்வாங்க'

தொடர்ந்து நீண்ட அமைதி.

'நீ ஏன் இன்னிக்கு நேரத்தோட வேலையிலிருந்து வந்தே?'

'நான் மருத்துவ பரிசோதனைக்குப் போனேன்'

'உனக்கு என்ன சொன்னாங்க கடவுள் உன் கருப்பையைச் சடுதியாத் திறந்துட்டாரா?'

'நீங்க இப்படிக் கதைக்க வேண்டிய அவசியமில்ல'

சிறிது நேரம் வரைக்கும் சித்தப்பா எதுவும் கூறவில்லை. பிறகு,

'நாங்க வயசாகிட்டே போறோம்ங்குறது உனக்குத் தெரியும்ல' என்றார்.

‘அதுக்கு?’

‘அதுக்கு? என்ன? பிள்ளையில்லாம இருக்க உனக்கு இஷ்டமா?’

‘அதுக்குச் செய்ய ஒண்ணுமில்லன்னா ஏன் தொடர்ந்து போராடணும்?’

‘எனக்குக் குழந்தையொண்ணு வேணும்ங்குறதால.. அதான் காரணம்... நாங்க இதைப் பற்றி பத்து வருஷமாக் கதைக்கிறோம். எனக்குப் போதுமாயிடுச்சு. உனக்குத் தெரியுமா? எனக்கு எல்லாமே வெறுத்துடுச்சு. ஒரு குழந்தையைப் பெத்துக் கொடுக்க உன்னால இன்னும் முடியல... இப்போ நான் போய் குளிச்சிட்டு வரலாம்னு நினைக்கிறேன்’

சித்தி தனது குரலையுயர்த்திக் கூர்மையாகக் கதைத்தாள்.

‘உங்களுக்குக் குழந்தையொண்ணு அவ்வளவு வேணும்னா போய் இன்னொருத்தியைக் கட்டிக்குங்க... எனக்குத் தெரியும் உங்களுக்கு அதான் இப்போ தேவைப்படுதுன்னு’

சித்தப்பா களைத்துப் போனவரைப் போல மெதுவாகக் கூறினார்.

‘உனக்குத்தான் தெரியுமே.. எனக்கு இன்னொருத்தியைக் கட்ட வேண்டிய அவசியமில்ல. ஆனா இங்கே வர்ற ஆட்கள் அடிக்கடி இதைப் பற்றியேதான் கதைக்குறாங்க. உனக்கும் கோபம் வரும்... உனக்குத்தான் தெரியுமே’

எனக்கு சித்தப்பா குறித்துக் கவலை தோன்றியது. அவரது குரல் பலவீனமாகி, வெறும் மூச்சாக மாறியது. அவருக்குள் ஏற்பட்டிருக்கும் துயரம் அதற்குக் காரணமாக இருக்கக் கூடுமென நான் நினைத்தேன்.

‘எனக்குத் தெரியும்.. எனக்குத் தெரியும் உங்களால முடிக்க முடியாதுன்னு... உங்களுக்கு எப்பவுமே தலைவலி.. இல்லேன்னா மூக்குல வலி.. வேற வேற வலியெல்லாம் வர்றது ஏன்னு எனக்குத் தெரியும். ஆனா நான் சத்தியமாச் சொல்றேன் நீங்க அப்படி ஏதாவது செஞ்சீங்கன்னா நீங்க கஷ்டத்துல விழுவீங்க... நான் உங்களைப் பிடிச்சுப்பேன். ’

தொடர்ந்து ஒரு விம்மலோசை கேட்டதோடு கதவு சத்தமாக அடைக்கப்படும் ஓசை கேட்டது. திண்ணையிலிருந்த நான் கேட்கக் கூடாததைக் கேட்டுக் கொண்டிருந்ததால் அசௌகரியமாக உணர்ந்தேன். நான் திரும்பவும் எனது அறைக்குள் புக முற்பட்ட போது கதவு திறந்தது.

‘கேமே நீ இங்க என்ன பண்ணிட்டிருக்கே? முழு நாளும் எங்க போயிருந்தே? நான் உன்னைத் தேடிக்கிட்டிருந்தேன்’

சித்தப்பா மென்மையாகக் கூறினார். நான் குற்றவாளி போல உணர்ந்தேன். இந்த வீட்டுக்கு வந்த நாளிலிருந்து அவரிடமிருந்து தண்டனை பெறுமளவிற்கு நான் எந்தக் குற்றமும் செய்திருக்கவில்லை. அவர் என்னை நேசித்தார். எனினும் சித்தி என் மீது குற்றம் சாட்டினாள். நான் சட்டியிலிருந்து இறைச்சியைத் திருடித் தின்பதாக அவள் கூறினாள். ஒரேயொரு தடவை மாத்திரம் நான் கருவாட்டுத் துண்டொன்றைத் திருடியிருந்தேன்.

சபா சித்தப்பா அன்போடு எனது தலையைத் தடவியபடி கூறினார்.

‘உன்னை உடனே வீட்டுக்குத் திருப்பியனுப்பச் சொல்லி உன்னோட அப்பா எனக்கொரு தகவல் அனுப்பியிருக்கார். கதவுக்கிட்டயிருந்து அடுத்தவங்க கதைக்குறத ஒட்டுக் கேட்குறது நல்ல பழக்கமில்ல... புரிஞ்சுதா?’

நான் அமைதியாகத் தலையசைத்து ‘ஆமா சித்தப்பா’ என்றேன். அவர் எனது உச்சந் தலையில் சடுதியாகக் குட்டினார். எனது கண்களிலிருந்து கண்ணீர் சிதறியது.

‘போய் உன்னோட சாமான்களையெல்லாம் எடுத்து வை’ எனக் கட்டளையிட்டார்.

‘நான் இன்னிக்கே போகணுமா?’

‘இல்ல.. நாளைக்குப் போகலாம்’

அன்றிரவு இன்னுமொரு கலகத்தின் ஓசை கேட்டது. அதற்குக் காரணம் என்ன என எனக்குத் தெரியாது. அன்று மாலை நிகழ்ந்தது அதற்குக் காரணமாக இருக்கக் கூடும்.

மறுநாள் காலை, வழமையைப் போல சித்தி பிரார்த்தனை செய்வதற்காக வரவேற்பறைக்கு வரும்படி அழைக்கவில்லை. சபா சித்தப்பா எனது தந்தையின் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றார். நான் வெளியிறங்கும்போது சித்தியைக் காணவில்லை. எனது வருகையையோ, எனது திரும்பிச் செல்லலையோ அவள் கவனத்திலேயே எடுக்கவில்லை எனப் புரிந்தது.

வாகனத்தை ஓட்டிச் செல்லும்போது சித்தப்பா மௌனமாகவே இருந்தார். நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவருக்கு ஏதோ

சொல்ல வேண்டிய தேவையிருந்ததாகத் தெரிந்தது. நாங்கள் வீதியில் வாகன நெருக்கடிக்குள் சிக்கிய போது, சித்தப்பா எனது தலையில் கை வைத்தார்.

'கேமே, எங்க கூட இருக்குறப்போ நீ சந்தோஷமா இருந்தியா?'

'ஆமா சித்தப்பா. நான் சந்தோஷமாத்தான் இருந்தேன். '

சிறிது அமைதிக்குப் பிறகு அவர் மீண்டும் கதைத்தார்.

'நீ மேரியைப் பார்த்தியா?'

'நான் நேத்துப் பார்த்தேனே'

'அவள் ஏதாவது சொன்னாளா?'

'ஆமா. அவ சொன்னா சித்தப்பா அ வ கி ட் டே யி ரு ந் து தூ ர மா கி ட் டே போறீங்களாம்... சித்தப்பா கூட இருக்கும்போது ரொம்ப சந்தோஷமாயிருக்கும்... ஆனா இப்போ சித்தப்பா தப்பிச்சுப் போகப் பார்க்கிறார்.. இப்படி.. '

சித்தப்பா எனது தலையிலிருந்து கையை எடுத்தார். நான் அவரைப் பார்த்தேன். அவரது முகம் இருண்டிருந்ததோடு, முகத்தில் சுருக்கங்கள் ஆழமாகப் பரவியிருந்தன. திடீரென அவர் பிரேக்கை அழுத்தினார். நான் முன்னே வீசப்பட்டுப் போய், முன்னாலிருந்த சாவிப் பெட்டியில் எனது தலை மோதியது. கோழிகளை விரட்டியபடியிருந்த மூதாட்டியொருத்தி பிரதான பாதையின் குறுக்கே பாய்ந்திருந்தாள். அவள் சித்தப்பாவின் வாகனத்தில் மோதி விடாமல் கடைசிக் கணத்தில் காப்பாற்றப் பட்டிருந்தாள்.

'உனக்கு என்னாச்சு?'

'ஒண்ணுமில்ல... தலையடிபட்டது மட்டும்தான்'

'மோட்டுக் கிழவி.. வீட்டுக்காகி படுக்கைல கிடக்க வேணாம்? கிழவி என் வண்டியில விழுந்து சாகாமலிருக்க ஆண்டவர் காப்பாத்தினாரு'

எனது தந்தையின் வீட்டுக்கு வரும் வரைக்கும் அவர் எதுவும் கதைக்கவில்லை. நான் மோட்டார் வாகனத்திலிருந்து இறங்கும்போது அவர் இரண்டு நைரா கரன்சி நோட்டுக்கள் அடங்கிய உறையை எனது கையில் வைத்தார். நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

'நன்றி சித்தப்பா'

'பரவாயில்ல கேமே' எனப் பதிலளித்தார்.

'ஆண்டவர், சித்தப்பாவுக்கு நிறையப் பிள்ளைகளைக் கொடுக்கட்டும்!'

பிரார்த்தனை செய்யும்போது அவர் எப்போதும் கூறும் 'ஆமென்' எனும் வசனத்தை, அவர் இப்போது கூறவில்லை. அவரது முகம் பளிச்சிட்டதோடு அவரது வாகனத்திலிருந்து இறங்கி, எனது தோளில் கை வைத்து, என்னை மேல் மாடிக்கு அழைத்துச் சென்றார்.

அதன்பிறகு பல வாரங்கள் கழியும் வரைக்கும் எனக்கு எனது சித்தப்பா, சித்தி, மேரி பற்றி எதுவும் கேள்விப்படவில்லை. எனது தந்தை சம்பிரதாயமாக நடைபெற்று வரும் பண்டிகையில் கலந்து கொள்ள வேண்டி என்னை அழைத்திருக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில், தனது எல்லாப் பிள்ளைகளையும் ஒன்று சேர்த்துக் கொள்வது அவரது தேவையாக இருந்தது.

நான் பள்ளிக்கூடம் சென்று திரும்பியிருந்த ஒரு மாலை நேரத்தில், கைகளில் நிறைய சாமான்களோடு சித்தப்பா எனது வீட்டுக்கு வந்தார்.

'சித்தப்பா எங்க கூட தங்க வந்திருக்கீங்களா?'

நான் கடைசியாக அவரைக் கண்ட போது இருந்ததை விடவும் வயதாகி, மெலிந்து, இருண்டு களைத்துப் போயிருப்பதான தோற்றம் அவரிடமிருந்தது.

'இல்ல கேமே' என்று பதிலளித்தார்.

தொடர்ந்து அவருக்குப் பின்னால் மேரி படியேறிச் செல்வதை நான் அவதானித்தேன். எனது சித்தப்பா, மேரியோடு பகிரங்கமாக வெளியே வந்தது ஏன்? பிறகு சற்று மேடிட்டிருந்த அவளது வயிற்றைக் கண்டேன். எனக்குள் தோன்றியிருந்த குழப்பத்தைச் சித்தப்பா உணர்ந்திருக்கக் கூடும். அதனால் அவர் எனது காதில் முணுமுணுத்தார்.

'கொஞ்சமிரு.. நான் உனக்குச் சொல்றேன். '

பிறகு அவர்கள் வரவேற்பறைக்குப் போனார்கள். எனது தந்தை அவரது அறைக்குள்ளே இருந்தார். நான் அவரது அறையின் பின் வாசற் கதவைத் தட்டி சபா சித்தப்பா இன்னுமொரு பெண்ணுடன் வந்திருக்கிறாரெனக் கூறினேன்.

எனது தந்தை அவர்களது வருகை குறித்து முன்பே கலந்தாலோசித்திருப்பாரென எனக்கு



ஓவியம்: ஜே.கே.

நிச்சயமாகத் தெரியும். அதனால் அவர் புன்னகையோடு வெளியே வந்து,

‘ஆஹ்... நீ உன் சிறிய பொஞ்சாதியையும் கூட்டிட்டு வந்திருக்கே’ என்றார்.

அறையின் மூலையொன்றில் நான் நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும், எனது தந்தையின் கண்கள் விரிந்தன. என்னை அங்கிருந்து அகற்றிவிடுவதே அவருக்கு அவசியப்படுகிறதென எனக்குப் புரிந்தது. நான் எனது அறைக்குள் சென்றேன். அவர்கள் வரவேற்பறையில் வைத்து வெகுநேரம் கதைத்துக் கொண்டிருந்தார்கள். பிறகு வெளியே வந்த சித்தப்பா எனது அறையின் கதவைத் தட்டி அவர் திரும்பிச் செல்வதாகக் கூறினார். நான் அவரைத் தொடர்ந்து படியிறங்கி வந்து, அவரது வாகனத்துக்கருகே சென்றேன்.

‘கேமே, உனக்கு எங்க பிரார்த்தனை நினைவிருக்கா?’

நான் தலையசைத்தேன்.

‘சரி... மேரி எனக்கு குழந்தையொண்ணு பெத்துக் கொடுக்கப் போறா’

‘அப்படீன்னா அவர் சித்தப்பாவோட பெண்டாட்டியாகப் போறாரா?’

அவர் சலிப்போடு புன்னகைத்தார்.

‘இல்ல கேமே. ’

நான் எதுவும் கூறவில்லை. ஏனெனில் எனக்கு எதுவுமே விளங்கவில்லை.

‘முன்பொரு நாள் சித்தப்பா சொன்ன சிக்கல் இதானா?’

‘ஆமா.. ஆனா இன்னும் முடியல. என்னோட பொஞ்சாதிக்கு இது இன்னும் தெரியாது. அவ இங்க வர்றதைக் கண்டா நீ உள்ளே போய் உன்னோட அப்பாவோட பொஞ்சாதிக்கிட்ட சொல்லணும்... புரியுதா?’

நான் தலையசைத்தேன். இப்பொழுது அதைப் புரிந்து கொள்வது எனக்கு இன்னும் சிரமமாக இருந்தது. சித்தப்பா தொடர்ந்தும் கூறிக் கொண்டே போனார்.

‘ஏலுமான எல்லா விதத்திலும் அவளுக்கு உதவி செய் கேமே. தண்ணி கொண்டு வந்து தர்ற வேலை போல ஏதாவது. நான் இடைக்கிடை வந்து போறேன்’

பிறகு எனது தலையைத் தடவிக் கொடுத்தார்.

'இப்போ என்கிட்ட சில்லறையில்ல. இருந்த எல்லாக் காசுக்கும் பொறக்கப் போற குழந்தைக்குத் தேவையானதை வாங்கிட்டேன். அதனால அடுத்த தடவை வரும்போது பார்ப்போம்'

சற்று இஷ்டமில்லாமலேயே நான் தலையசைத்தேன். அவர் வாகனத்தில் ஏறியபோது, நான் அவருடன் தங்கியிருந்த காலத்தில் அவர் கூறியிருந்த ஒரு விடயம் எனக்கு ஞாபகத்தில் உதித்தது. அதை நினைவுபடுத்தியவாறு,

'ஆண்டவர் எங்க பிரார்த்தனைகளுக்கு வினோதமாத்தான் பதிலளிச்சிடுறார்... இல்லையா சித்தப்பா?' என்றேன்.

வாகனத்தை உயிர்ப்பித்தபடியே புன்னகைத்தவாறு பதிலளித்தார்.

'ஆண்டவரே வினோதமானவர்தான். '

மேரி வேனிற்காலத்தில் மாத்திரமல்லாது, மழைக் காலத்திலும் எம்முடனேயே தங்கியிருந்தாள். அவளது வயிறு படிப்படியாக பெருத்துப் போனதோடு, அதைப் பார்ப்பது கூட அச்சப்படுத்துவதாக இருந்தது. அவள் பாடுபட்டு வேலை செய்யும் அமைதியான பெண்ணாக இருந்தாள். அவள், சமையல் வேலைகளில் எனது தந்தையின் மனைவிக்கு உதவியாக இருந்ததோடு, சில வேளைகளில் சந்தைக்குச் செல்வதையும், எப்போதும் துணி துவைப்பதையும் செய்து வந்தாள். நான் அவளை மிகவும் நேசித்தேன். அவளது மென்மையான வதனத்தில் கவலை படிந்திருப்பது தெரிந்தது.

சித்தப்பா எப்போதாவதுதான் வந்தார். அது அவரது தீய பண்பென நான் நினைத்தேன். அவருக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் குழந்தையை, அவருக்குப் பெற்றுக் கொடுக்கப் போகும் பெண்ணைப் பார்க்க அவர் வருவது எப்போதாவதுதான். ஒரு நாள் நாங்கள் வரவேற்பறையிலிருந்து கதைத்துக் கொண்டிருக்கும்போது, யாரோ கத்தியவாறு சாலையில் அங்குமிங்கும் நடக்கும் சப்தம் கேட்டது. எனது தந்தை வாசலை நோக்கி ஓடினார். நான் அவருக்குப் பின்னால் ஓடினேன். அங்கு நான் கண்டது சித்தியை. அவர் அரிவாளொன்றையும் எடுத்துக் கொண்டு வந்து ரௌத்ரமாகக் கத்திக் கொண்டிருந்தார்.

'போக்கிரியொண்ண பெத்துப் போடப் போற அந்த வேசியை எனக்குக் காட்டு... நான் அவளோட கழுத்த வெட்டணும்'

என்ன நடக்கிறதென நம்ப முடியாதிருந்தது. மேரியைக் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக அவள் ஓலமிட்டுக் கொண்டிருந்தாள். எனது தந்தை அவளுடன் கதைத்து அவளை அமைதிப்படுத்த முயற்சித்தார். எனினும் அவளது கோபத்தை அடக்க இன்னும் ஐந்து பேரது உதவியாவது தேவைப்படக் கூடும். பிறகு எனது தந்தை அவளை வாகனத்திலேற்றிக் கூட்டிக் கொண்டு சென்றார். மேரி மிகவும் குழப்பமடைந்திருந்தாள். எனக்கு அவளைக் குறித்தும், அவளது குழந்தையைக் குறித்தும் கவலை தோன்றியது. இதுவரைக்கும் சித்தப்பா வரவேயில்லை.

சித்தப்பா வரத் தயாராகும்போதெல்லாம் சித்தி குறுக்கிட்டுத் தடுத்திருந்தமையே அவர் வராதிருந்ததற்குக் காரணம் என்பது பிறகுதான் எமக்குத் தெரிய வந்தது.

'ஆஹ்.. நீ மெதுவாப் போகப்போறது அந்த வேசியைப் பார்க்கவா?'

சித்தப்பா, மேரியைப் பார்க்க அதன் பிறகு வரவில்லை. மேரிக்குக் குழந்தை பிறந்த பிறகும் கூட வரவில்லை. அது ஆண் குழந்தை. அது பலம் மிக்க தனது தந்தையின் சாயலைக் கொண்டிருந்தது. நான் மகிழ்ச்சியடைந்தேன். தொடர்ந்தும் கவலைப்படவில்லை.

இரண்டு கிழமைகள் கழிந்திருக்கும். சித்தப்பா வந்தார். மேரி பிரசவித்திருப்பதைக் கண்டு வியந்தார். நாங்கள் அனைவரும் அவர் மீது கோபத்துடனிருந்தோம். எனினும் அவர் மகிழ்ச்சியாக இருந்ததோடு, புன்னகைத்தார். நாங்கள் கூறியதையெல்லாம் அவர் கண்டுகொள்ளவேயில்லை.

சில கிழமைகளுக்குப் பிறகு மீண்டும் வந்த சித்தப்பா அவளுக்காக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்திருப்பதாகக் கூறினார். அது எமது வீட்டுக்கருகிலேயே இருந்த ஒரு சிறிய அறை. சித்தப்பாவுக்கு இப்போதுதான் புத்தி வந்து தனது பொறுப்புகள் நினைவுக்கு வந்திருப்பதாக எனக்குத் தோன்றியது. எனினும் மேரி அங்கு சென்ற பிறகும், சித்தப்பா அவளை எப்போதாவதுதான் பார்க்க வந்தார். அவளது உணவுக்கும், சிறு கடையொன்றை ஆரம்பிப்பதற்கும் எனது தந்தையே பணம் கொடுத்தார்.

அடுத்த தடவை சித்தப்பாவைக் கண்டபோது நான் திகைத்துப் போனேன். அவர் சிறையிலிருந்து வெளிவந்த ஒருவனைப் போல காட்சியளித்தார். நான் அவரைக் குறித்து தொடர்ந்தும் கவலைப்படவில்லை. இது அவரே சம்பாதித்துக் கொண்டது என எனக்குத் தோன்றியது. போதையில் வந்திருந்த சித்தப்பா, தனது வராமை குறித்து எனது தந்தையிடம் மன்னிப்புக் கோரினார். அவர் வினோதமான ஒருவராக மாறியிருந்தார்.

'கேமே... ஒரு மனுஷனுக்கு வாழ்க்கையில முகங்கொடுக்க வேண்டியிருக்குற விஷயங்களப் பார்த்தியா?' என என்னிடம் கேட்டார்.

'சித்தப்பா ரொம்ப மாறிட்டீங்க' என்றேன்.

'நான் ரொம்பக் கஷ்டப்பட்டுட்டேன்' என்று பதிலளித்தார். என்னைப் பார்க்கக் கூச்சப்பட்டார். அவரது கண்கள் குழி விழுந்திருந்தன. பல நாட்களாக தாடியை மழித்திருக்கவில்லை.

'என்னோட பொஞ்சாதி என்னோட எல்லாத்தையும் எடுத்துக்கிட்டுப் போய்ட்டா' எனக் கூறி விம்மினார்.

'அது எப்படி?'

'நீதிமன்றம் அவளுக்கு அதையெல்லாத்தையும் கொடுத்துடுச்சு'

'நீதிமன்றம் ரொம்ப மோசம்'

'இல்ல... நாந்தான் மோசம்'

நான் அமைதியாக இருந்தேன். சொற்ப நேரத்துக்குப் பிறகு சித்தப்பா கதைத்தார்.

'அவளிப்போ வேறொருத்தனோட ஊர் சுத்துறா. அவன், அவ வேலை செய்ற இடத்துலயே இருக்குற பணக்காரனொருத்தன்'

அதிகம் கதைக்காத எனது தந்தை கூறினார்.

'அது ஆண்டவரோட ஆசிர்வாதம்னு கருதிக்கோ. '

'ஆனா ஆண்டவர் வினோதமான ஒருத்தர் தானே' என்றேன்.

'வாயை மூடு கேமே. ஆண்டவர் கேலிக்குரியவரில்ல' என எனது தந்தை கூறினார்.

'ஆண்டவர் என்னோட வாழ்க்கையை என்னால தாங்கிக் கொள்ள முடியாதளவுக்கு பாரமாக்கிட்டார்' என்றார் சித்தப்பா.

எனது தந்தை இனிப்பு வாங்கிக் கொள்வதற்காக எனக்கு பணம் கொடுத்தார். அது, அவர்களுக்கு தனியாகக் கதைப்பதற்காக என்னை வெளியே அனுப்பும் தந்திரமென நான் அறிவேன்.

பிறகு நான், சபா சித்தப்பாவுடன் மேரி தங்கியிருந்த இடத்துக்குச் சென்றேன். நாம் அங்கு சென்றபோது அவள் சோறும், அவரைக்கறியும் சமைத்துக் கொண்டிருந்தாள். கைக் குழந்தை உறங்கிக் கொண்டிருந்ததோடு, அவள் அதை அவளது முதுகில் வைத்துத் துணியால் போர்த்திக் கட்டி வைத்திருந்தாள்.

சித்தப்பாவைக் கண்டதும் அவளது முகம் இருண்டது. கோபமடைந்த அவள் இரு கைகளையும் தூக்கிக் கொண்டு அவரிடம் ஓடி வந்தாள். அவள் அவரிடம் ஓடி வந்து இரு கைகளாலும் அவரது கழுத்தைக் கட்டிக் கொண்டாள். சித்தப்பா சிரித்தார். நாங்கள் அறைக்குள்ளே சென்றோம். அது காற்றுப் புகா அறை. மேரி அதனை அழகுற நேர்த்தியாக வைத்திருப்பது தெரிந்தது. அவள் மேசையொன்றும், கதிரைகள் சிலவும், மின்விசிறியொன்றும் வாங்கியிருந்தாள்.

அவள் சித்தப்பாவுக்கென பீர் போத்தலொன்றையும், எனக்காக கோக்கோ கோலா போத்தலொன்றையும் கொண்டு வந்து தந்தாள். குழந்தை விழித்து அழத் தொடங்கியது. மேரி அதை முதுகிலிருந்து எடுத்து, கையில் வைத்துக் கொண்டு முத்தமிட்டாள். அசௌகரியத்துக் குள்ளாகியிருந்த சித்தப்பாவுக்குக் குழந்தையைத் தூக்கிக் கொள்ள அவசியமானது. குழந்தை சந்தேகத்துக்குரிய ஏதோவொன்றைக் கண்டது போல, விழிகளை விரித்துச் சித்தப்பாவைப் பார்த்தது.

'ஷ்.. ஷ்... ஷ்... ' என்று குழந்தையைப் பார்த்துக் கூறினேன். குழந்தை அமைதியாக இருந்தது.

'இந்த அசிங்கமான மனுஷன் யார்ன்னு பிள்ளைக்குத் தெரியுமா?' என மேரி கிண்டலாக குழந்தையிடம் கேட்டாள். குழந்தை விழிகளை மேலும் விரித்து சித்தப்பாவைப் பார்த்தது.

'இதுதான் குழந்தையோட அப்பா' என்றேன்.

குழந்தை பற்களில்லாத வாயால் சிரித்தது. நாங்கள் எல்லோரும் சிரித்து மகிழ்ச்சியாக இருந்தோம். பிறகு சித்தப்பா, மேரியுடன் வசிப்பதற்காக அந்த அறைக்கே குடி வந்தார்.

ஒரு விதத்தில் பார்க்கும்போது 'ஆண்டவர் வினோதமானவர்' என்ற சித்தப்பாவின் கூற்று உண்மைதான்.

e-mail : mrishanshareef@gmail.com

# நிசி

கு. அழகர்சாமி கவிதைகள்

நிசியில் மறைந்தே நிசியை ஏமாற்றி விட முடியுமா?
சூழும் நிசியிடம் சூழ்ச்சி செல்லுமா?
மௌனத்தில் ஆழ்ந்து நிசி செய்யும் யோசனையை நட்சத்திரங்களின்
சமிக்ஞைகளில் அறிந்துவிட முடியுமா?
மோகம் கொண்டு தழுவும் அதன் முகம் காட்டாத முத்தத்தின் தடம்
நிலவென்று ஏமாந்துவிட முடியுமா?
என் விழி மூடிய நிசிக்குள் நிசியை நிசியில்லாமல் மறைத்து விட முடியுமா?
நிசி பேசாதிருப்பது நிறை ஞானமென்று அதனோடு சேர்ந்து கொண்டு
ஒன்றும் பேசாதிருந்துவிட முடியுமா?
ஏகாந்தம் இது தானென்று குயில் விட்டு விட்டுக் கூவி உறுதி செய்யாததை
நான் உறுதி செய்துவிட முடியுமா?
ஆதியில்
நிசி
ஆதி.
நிசி ஒளித்து வைத்திருக்கும் என் நிழலின் வேரை
ஆதியிலிருந்து தேடி விட முடியுமா?
நிசி முடியும் முற்றுப் புள்ளி சூரியனில் சுடரேற்றி
என்னுள் பிரகாசிக்க என்னால் முடியுமா?

# குழந்தையும் குதம்பைச் சித்தரும்



ஓவியம்: ஜே.கே.

தன்
குழந்தையோடு வருகை தந்த நண்பரின் குழந்தையால்
வீடே
திமிலோகப்படும்.
வீட்டின் மூலைமுடுக்கெல்லாம் புகுந்து குழந்தை
சுதந்திரமாய் விளையாடும்.
சாமான்களை
இழுத்துப் போடும்.
அவை என் நிறைவேறாத எத்தனையோ அற்ப ஆசைகள் போல்
இறைந்து கிடக்கும்.
ஒரு ஸ்பூனை எடுத்துக் கொண்டு ஏதோ ஒரு விநோதம் சொல்ல வருவது போல்
ஓடி வரும்.

ஓடி வருகையில்
தடுக்கி
கீழே
விழ
இது வரை அழாத அழுகையெல்லாம் சேர்த்து வைத்து அழுவது போல் அழும்.
அழுது கொண்டே தந்தையின் தோளில் தூங்கிப் போகும் ஸ்பூனைப்பற்றிக் கொண்டே.
ஸ்பூனில் நிரம்பி வழியும் சின்னக் குழந்தையின் ஆசை.
குழந்தையும் குதம்பைச் சித்தராகி விட்டால் எப்படித்தான் பின்
குழந்தையைக் கொண்டாட முடியும்?
நல்ல வேளை!
கொஞ்ச நேரம் கழித்து குழந்தை கண் 'முழித்துச்' சிரிக்கும் குழந்தையாய் 'பற்றில்' விடாமல் ஸ்பூனைப் பற்றிக் கொண்டே.

## போ




நீ உன் மூச்சு விடுவது போல்
நான் என் மூச்சு விடக் கூடாதா?
நீ உன் சொல் சொல்வது போல்
நான் என் சொல் சொல்லக் கூடாதா?
உனக்கு உன் நிறம் இருப்பது போல்
எனக்கு என் நிறம் இருக்கக் கூடாதா?
நீ உன் வழியில் செல்வது போல்
நான் என் வழியில் செல்லக் கூடாதா?
உன் திசை மேற்கென்றால்
என் திசை கிழக்காக இருக்கக் கூடாதா?
நீ மூச்சு விடாதே என்றால்
நான் மூச்சு விடாமல் இருக்க முடியுமா?
அடப்
போ!

கு. அழகர்சாமி கவிதைகள்
e-mail : galagarsamy@yahoo.co.in

இரா. இலக்குவன்

# பேயும் கடவுளும்

ஒரு எருமையின் அடித்தொண்டையில்
இருந்து வரும்
ம்ம்மாஹாஹாஆ என்ற சத்தம்
அன்பின் தவிப்பை உணர்த்துவதில்லை.
குயிலின் குக்கூ
விரகதாகத்தை
தூண்டுவதாகப்
பயிற்றுவிக்கப்படுகிறோம்.
ஒரு நாயின் நன்றியறிதலைப்
பேசும் அளவுக்குச்
செம்மறியாட்டின் சினேகத்தைப்
பேசுவதில்லை.
கன்றுகுட்டியின் அழகை
வியக்கும் நாம்
கழுதையின் ஆண்மையை
அருவெறுக்கின்றோம்.
எறும்புகளின் உழைப்பைப்
பேசுகின்றோம்.
பீயுருட்டிகளின்
கருமமே கண்ணான
யோகத்தைப்
பேசுவதில்லை.
பேசு பொருட்களென்றும்
பேசா பொருட்களென்றும்
காணக்கூசுது என்றும்
கையெடுக்க நாணுது என்றும்
சொல்லி
வளர்த்த கதைகளில்தான்
நாமும்
நமக்கான கடவுள்களும்
பேய்களும்.

# குத்தாலக் குரங்கு கொப்ப விட்டு இறங்கு

இன்று ஊருக்குள்
வந்த குரங்கு
மேலத்தெரு திருமாளிகை
மதிலில் நிற்பதாகச் சொன்னான்
இசக்கி.
ஓடிப்போனோம்
போட்டதை போட்டபடியே
போட்டுவிட்டு.
(கோலிக்காய்கள், கிட்டி கம்பு இன்னபிற)
கால்சராய் போடாத தம்பியும்
மணியாட்டிக்கொண்டே
பின்னால் ஓடி வந்தான்.
அழவும் செய்தான்
எங்களை அவன் தொடர முடியாத போது.
எதிரே ஓடி வந்த கூட்டத்தில்
இருந்த வேம்பன்
குரங்கு
அய்யாத்துரை தாத்தா வளவில்
நிற்பதாகவும்
பூல்பாண்டி வீட்டு சன்னலில் இருந்த
பவுடர் டப்பாவை எடுத்து
குலுக்கியதாகவும்
குரங்கோடு ரெண்டு குட்டி குரங்குகளும்
வந்திருப்பதாகவும் சொல்ல
நாங்கள் போன போது
ஒன்று படுத்துக்கிடக்க
ஒன்று பேன் பார்த்துக்கொண்டிருந்தது.
மற்றொன்று மரத்தில்.
நாங்கள் நிறைந்து
போட்ட ஊளையில்
குரங்குகள்
பாய்ந்து தாவி
மரக்கிளைகளில்
மறைந்தன
குற்றாலத்தை எங்களிடம்
விட்டுவிட்டு.

e-mail : ilakkuvanr@gmail.com

# தமிழ் உதயா [லண்டன்] கவிதைகள்

1

வங்கதேச நடுக்கடலில்
தத்தளிக்கிறது
என் தாய் மொழி

இரத்தத் துளிகளால்
வரைந்து முடியாத
என் தாய் மடி

வானம் விலங்கிடப்பட்ட
சிறகொடித்த பறவைகளாய்
என் உறவுகள்

கலைத்த கூடுகளில்
உடைந்து சிதறிய
முட்டைகள்
என் தேசியங்கள்

உதிரக் கொடி பறக்க
நாவு கிழித்து வரைந்த
என் தமிழ்

காற்றும் செத்து மடிய
கூக்குரலிட்ட வனாந்தரம்
என் அலறல்

இறையாண்மையில்
பங்கு போட்ட
என் கௌரவக் கொலை

சிற குரித்து
விருந்துக் கறி சமைத்த
என் போராட்டம்

இனியும்
பறப்பதெங்கே
என் நிழல்

குஞ்சும் முட்டையும்
கூடும் சிதறிய பின்னும்
ஓய்வதில்லை எந்தச் சிறகும்

ஞானம் புகட்டும்
இந்த இரத்தம் தோய்ந்த
சிறகுகளை எந்த
அருங்காட்சியகத்தில்
புதைப்பேன்?

2

கறுப்பு மரமேறிப்பறித்த
பழங்களாய் துயிலில்
குலுங்கும்
செந்நீரால் கழுவிய

காந்தள் நிலங்கள்
விளைகின்றன குருட்டு
வௌவால்கள்
கொந்திச் செல்வதற்காய்

கசக்கும் அதிகாலையை
பிழிந்த சாறென
இரவெல்லாம்
முகத்தில் அப்பிய
தீக்காயங்கள் இன்னும்
தழும்புகளாய்
உறங்கிக் கிடக்கிறது

கூக்குரலிட்ட காடுகளும்
வளைந்து சுருங்கி
கருகிப் போக

கானல் இரவுகள் சருகாகி
நீர்ச் சுனைகள் வற்றிப்
போகிறது

தாமரைக் குளங்கள்
மது போதையில் நிறைந்து
உப்பிப் புடைத்து
வலி கொண்டெழுகின்றன

கனவுகளை அள்ளிச் சென்ற
சிறகு முளைத்த
கழுகுகளைப்பிடித்து
உருண்டு கிடக்கிறது
ஊருக்குள் தேர்வடங்கள்

மீட்ட முடியாத
நரம்பறுத்த
இசைத்தந்திகளூடே
ஊர்ந்து செல்கிறது
சாலையில் ஒவ்வொரு
மரகத வீணையும்

காற்றின் பறவையென
பகலின் வலிகளை தாங்கி
உயிர் விதைத்த
செவ்வுடல்களின்
வானத்தை வாங்கி வந்து
எந்தப் பூமியில் நட்டு
வைப்பது

ஓர் உருகும் மெழுகின்
மௌனமாய்
உறையும் நொடிகளில்
விம்மும் இருளோடு தான்
வடிகிறது

ஒரு வனத்தின் விடியல்
வானமற்ற பூமியில்
கார்த்திகையில் மட்டும்
அல்ல.

# நெக்கான சுதந்திரம்

3

வலிகளால்
விதைத்துக் கிடக்கிறது
தாய்ச்சீமையின் கருவறை

மூலைக்கு மூலை
முளைக்கிறது போதி மரங்கள்
கழுகுகளின் எச்சத்தில்
இருந்த விதைகளால்

மறந்து துயில்கிறது
சித்தார்த்தனின் இமைகள்
தியானத்தை...

செழித்து வளர
மண்ணின் செங்குருதி காயும்

வெடித்த மண்படையில்
நீதியறுந்த மனிதங்கள்

பாறைகள்
பத்திரப் படுத்துகின்றன
பச்சை முளைவிடும்
நித்திலத்தின் வேர்களை....

ஆனாலும்
காலைகளை மாலைகள்
கல்லறைக்கு அனுப்பிய
படியே

# கரும்புலிகள்

4

பொன்னுடலைப்
பிய்த்தெறிந்த
பருத்திக் கொழுந்துகள்

சுகமான வலியோடு
சாவைக் கூவியழைத்த
சந்தனக் கட்டைகள்

திரி கொண்டெரித்து
தீட்டிய உயிர்களை கருக்கிய
தீபத்தின் ஏந்தல்கள்

வேள்வி வைத்துச் சுமந்து
வெடித்துச் சிதறிச் சிதறி
யாகத்தீயில் ஆகுதியானவர்கள்

பாசத்தை மடலில் புதைத்து
அன்னைக்கு அனுப்பி விட்டு
இலக்கின் இலட்சியம் தோய்த்தவர்கள்

ஈன்ற மண்ணிற்கு
தோன்றிய இலக்கணத்தின்
முழுமைச் செய்யுள்கள்!

ஆழிப் பேரலையின் நுரைகளில்
இலட்சியக் குழந்தைகளின்
மேழி தழுவிய நுரையீரல்கள்

எரிமலையின் சீற்றத்தால்
கனன்று எரித்துக் கருக்கிய
கொந்தளித்த குமுறல்கள்

மண்ணை மோகித்து
மரணத்தை காமுற்ற
தியாகத்தின் காதலர்கள்

மொழிக்காய்
உயிரை உருக்கி நெய்யாய்
வார்த்த உச்சிச் சூரியன்கள்

தலைவன் ஆணையில்
சுடர் ஏந்த தாமதம் கண்டு
சிலிர்த்தெழுந்த அக்கினிக் குஞ்சுகள்.

## தமிழ் உதயா [லண்டன்] கவிதைகள்

e-mail : uthaya1972@hotmail.com

# பிரிவின் தொலைவு

ஜான்னவி

தொலைவில் நிற்கின்றன
தேவதாரு மரங்கள்
நிலைத்த அற்புதப் பசுமையில்
நில்லாக் காற்று
அசைந்தாடுகிறது, நடனமாகிறது.
என்னை வசீகரிக்கிறதந்த வனம்
அது அனுப்புகிறது எனக்கு
குளிர்ந்த காற்றோடு சுவாசமும்
விரிசல் விழுந்த இதயத்திற்கு
பன்னீர்த் துளிகளும்.
அந்த வனத்தைச்
சென்றடைய வேண்டும்.
இடையே பரந்துக் கிடக்கிறது
இந்த ஏரி.
ஏரியில் விளையாடும்
சிற்றலைகள்
வெளியிட்டு விடுகின்றன.
காற்றோடு ஏரியின்
உரையாடலை
சலசலக்கும் சிற்றலைகளும்
என் மனமும்.
ஏரியைக் கடக்கப்
படகேதுமில்லை.
வெண்மலர்களைப் பொழிகிறது
நிறமற்ற வானம்
ஒரு வெண்ணிற உலகில்
உறைபனியாகிறது
ஏரியின் மேல்பரப்பு.
இப்போது நடந்தே
கடக்கலாம்.
ஆனால்
பனிப்பரப்பு மெலிதாக
இருக்கலாம்
என் எடை தாங்காமல்
உடையலாம்
நான்
மூழ்கிப் போகலாம்.
தயக்கத்தில் நான் நிற்க
நிற்கப் பயிலாக் காலம்
என்னைக் கடந்து
இந்த ஏரியைக் கடந்து
அந்த தேவதாரு மரங்களையும் கடந்து
சென்று கொண்டேயிருக்கிறது.
பனி உருகி ஏரிநீர்
பளீரிடுகிறது மீண்டும்
வலசை சென்று திரும்பும்
நீர்ப் பறவைகளை எதிர்நோக்கி
அவை சிறகசைத்து வந்திறங்கும்
ஒயிலை ரசிக்க

காற்று நிற்கும் நானும்
கேட்பேன் ஒரு நீர்ப்பறவையை
என்னை உன் சுந்தர முதுகில்
சுமந்து வண்ணச் சிறகுகளை விரித்து



ஜான்னவி



ஓவியம்: ஜே.கே.

அக்கரை கொண்டு சேர்ப்பாயா
என்னைப் பிரிந்து சென்றவர்
வசிக்கிறார் அந்த தேவதாரு மரங்களுக்கு
அப்பால் நான் கண்டிராத ஓரிடத்தில்.
அவரைச் சந்திக்க வேண்டும்.
அவ்விடம் மனம் வசதியாக
உணருகிறதா
இப்போது அந்த மனம் விரும்புவது
புதிய ஒளியையா
பழைய நிழலையா
என்று விசாரிக்க வேண்டும்.
இதைச் சொல்வேன்
அப்பறவையிடம்
மிக மிக ரகசியமாக.
நீர்ப் பறவைகள் அன்பின் மொழி
அறிந்தவை
குடும்பங்கள், அரசுகள்
மனிதனை இயந்திரமாக்கும்
ரசவாதி வேலைகள்
இவை போலன்றி
நீர்ப்பறவைகள்
கருணை மிக்கவை.
பிரிவின் தொலைவைக்
கடக்க என்னை
அக்கரை சேர்க்கப் போகும்
ஒரு நீர்ப் பறவைக்காகக்
காத்திருக்கிறேன் நான்.
நெடுந்தொலைவு சென்று விட்டன
தேவதாரு மரங்கள்.

e-mail : jannavi777@gmail.com

மனுஷி

# நீ

எனது சாலையோரத்தில்
கிளை பரப்பி அசையும் மரங்களின்
எந்தக் கிளையில் நீ அமர்ந்திருந்தாய்?

எனது கடற்கரையில்
விழித்தெழும் சூரியன் முன்பு
எந்த அலையில் நீ கால் நனைத்தாய்?

எனது பெருவனத்தில்
பூத்துக் கிடக்கும் மலர்ச் செடிகளில்
எந்த மலரின் வாசனையை நுகர்ந்தபடி
எனைக் கடந்து சென்றாய்?

எனது இரவின்மீது ஒளிரும் நட்சத்திரங்களில்
எந்தக் குட்டி நட்சத்திரத்தின் ஒளியை
எனது வாசலின் முன்பு வைத்தாய்?

எனது கல்லறையில் வந்தமர்ந்து
நீ பாடிய காதல் கீதங்களைக் கேட்டு
நான் மீண்டும் உயிர்த்துவிட்டேன்.

வாழ்வின் புதிர்களை அவிழ்த்து
நீ ஆடும் கண்ணாமூச்சி ஆட்டத்தில்
நான் உனக்குள்ளேயே ஒளிந்து
கொள்கிறேன்.

என்னைக் கண்டுபிடிக்க முடியவில்லை
எனச் சொல்லிச்
சிறு பிள்ளையைப் போல
தேடிக் கொண்டேயிரு நீ.



ஓவியம்: A.செல்வம்

e-mail : anangumakal@gmail.com

# ஞாநி
## சில நினைவுகள்...

எஸ்.எம்.ஏ. ராம்

**1978**ஆம் ஆண்டு இறுதிவாக்கில் நான் சென்னைக்குக் குடியேறிய போது, முதன் முதலில் தேடிச் சென்று அறிமுகம் செய்து கொண்ட கலை இலக்கியம் சார்ந்த நண்பர் ஞாநி தான். அப்போது அவர் தனது 'பரீக்ஷா' என்ற நாடகக் குழுவின் மூலம் மரபு சாராத நாடகங்களை நிகழ்த்துவதில் தீவிரமாய் இருந்தார். நான் அதற்கு முன்னர் மன்னார்குடியில் இருந்த போதே, 'கணையாழி'யின் வாயிலாக ஞாநி பற்றியும் அவரது சோதனை நாடகங்கள் பற்றியும் ஓரளவு அறிந்து வைத்திருந்தேன். என்னிடம் அப்போதுதான் நான் எழுதி முடித்திருந்த 'மூடிய அறை' நாடகப் பிரதி இருந்தது. அயனஸ்கோவின் *Absurd Drama*க்களின் உந்துதலால் அபத்த நாடக வடிவில் நான் பண்ணியிருந்த எனது கன்னி முயற்சி அது. அந்தப் பிரதியை நிகழ்த்துவதற்கான சாத்தியக் கூறுகளுடைய ஒரே நாடகக் குழு, சென்னையில் ஞாநியின் பரீக்ஷா மட்டுமே என்று நான் நம்பியதால், 'மூடிய அறை' பிரதியோடு நானும் நண்பர் ரவிச்சந்திரனும் அவரைப் போய்ப் பார்த்தோம். ஞாநி அந்தக் காலக்கட்டத்தில் பீட்டர்ஸ் காலனியில் வசித்து வந்தார்.

ஞாநியுடனான எனது அறிமுகம் அப்படித்தான் ஆரம்பமாயிற்று. ஞாநியைச் சுற்றி ஒரு நண்பர்கள் கூட்டம் எப்போதும் இருந்தது. அக்கினிப் புத்திரன், திலீப்குமார் போன்றவர்கள் கிட்டத்தட்ட எல்லா நேரமும் அவருடன் காணப்படுவார்கள். சபா நாடகங்களுக்கு மாற்றான, தீவிரத்தன்மை உள்ள ஒரு புதிய நாடகத்தைப் பார்வையாளர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற உத்வேகம் அவரிடம் இருந்தது. ஆனால், ந.முத்துசாமியின் முழுக்க முழுக்க *abstract*-ஆன நாடக வகையை அவர் தவிர்த்ததாகவே எனக்குப் பட்டது, (முத்துசாமியின் 'நாற்காலிக்காரர்' நாடகத்தைப் பரீக்ஷா நிகழ்த்தி இருந்தாலும் கூட). சபா பாணி



ஓவியம்: S. அருணகிரி

ஜனரஞ்சக நாடகங்களுக்கும், முத்து சாமி பாணி 'அரூப' நவீன நாடகங்களுக்கும் நடுவே ஓர் இடை நிலை நாடகங்களில் அவர் கவனம் செலுத்தினார். பிரபஞ்சனின் 'முட்டை', அறந்தை நாராயணனின் 'மூர் மார்க்கெட்'. இ.பா.வின் 'மழை', ஜெயந்தனின் 'மனுஷா மனுஷா' போன்றவை அவர் அந்தக் காலத்தில் தேர்வு செய்து நிகழ்த்திய நாடகங்கள்.

ஞாநிக்கு பாதல் சர்க்கார்மீது மிகுந்த ஈடுபாடு இருந்தது. வீதி நாடக இயக்கம் 1980களின் ஆரம்பத்தில் கல்கத்தாவிலிருந்து பாதல் சர்க்காரை அழைத்து வந்து, சோழ மண்டல ஓவியர் குடியிருப்பில் பத்து நாட்கள் நடத்திய நாடகப் பட்டறையில் அவர் கலந்து கொள்ளவில்லை என்றாலும், அது ஆரம்பிக்கிற அன்றைக்கு, அந்த நிகழ்வோடு ஒன்றி வருகிற மாதிரி. பாதல் சர்க்காரின் 'ஏவம் இந்திரஜித்' நாடகத்தை அவர் தனது பரீக்ஷா மூலம் மியூசியம் தியேட்டரில் நிகழ்த்தியது எனக்கு நினைவிருக்கிறது. அவர் தனக்கென்று தொடர்ந்து ஒரு தனிமுகத்தைப் பேணி வந்ததையே இது காட்டுகிறது.

அவரது முழுக் கவனமும் தனது பரீக்ஷா அமைப்பின் வாயிலாக நடுத்தர வர்க்கப் பார்வையாளர்களையே இலக்காகக் கொண்டிருந்தது எனினும், வீதி நாடக இயக்கம் சென்னை கடற்கரையில் நிகழ்த்திய தெரு நாடக நிகழ்வுகளிலும் அவர் அவ்வப்போது கலந்து கொண்டதை இங்குக் குறிப்பிட வேண்டும். வீதி நாடக நண்பர்கள் அக்கினிப் புத்திரன், பூமணி, கே.எஸ்.ராஜேந்திரன், பாரவி முதலியோர் பங்கு கொண்டு நிகழ்த்திய என் 'குப்பை' நாடகத்தில் அவர் பங்களிப்பும் இருந்தது.

அவர் தனது, பரீக்ஷாவுக்கான நாடகப் பிரதியைத் தேர்வு செய்கிறபோது அவ்வளவு இலகுவாகத் திருப்தி அடைந்து விடுகிறவர் இல்லை. அவரைச் சந்தித்த ஒரு சில நாட்களுக்குப் பிறகு ஓர் இரவு, நெடு நேரம் வரை, ஜெமினி மேம்பாலத்தின் அடியில் இருந்த புல்வெளியில், 'மூடிய அறை' நாடகத்தின் உள் அமைப்பு குறித்து அவர் எழுப்பிய கேள்விக் கணைகளுக்குப் பதில் அளிக்க நான் ஒரு நீண்ட விவாதத்தில் அவருடன் ஈடுபட நேர்ந்தது. அந்த அனுபவம் இன்னும் எனக்கு இன்று வரை மறக்க முடியாத ஒன்று. அந்த விவாதத்தின் போது நண்பர்கள் ரவிச்சந்திரனும், திலீப் குமாரும் உடன் இருந்தனர். 'மூடிய அறை'யை வெளிச்சத்துக்குக் கொண்டுவரவேண்டிய அவசியத்துக்கான நியாயங்களை ரவிச்சந்திரன் ஒரு தீவிரத்தோடு ஞாநியின் முன் வைத்தது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

ஞாநிக்கு 'மூடிய அறை' பிடித்திருந்தது. ஆனால், என்ன காரணத்தாலோ அவர் அதை உடனே நிகழ்த்தவில்லை. கிட்டத்தட்டப் பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு 1990களின் ஆரம்பத்தில் ஒருநாள், நானே அந்தப் பிரதியைப் பற்றி மறந்து போயிருந்த தருணத்தில், ஞாநியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் 'மூடிய அறை' நாடகத்தை மியூசியம் அரங்கில் அந்த வார இறுதியில் *'play reading'* என்கிற உத்தியில் நிகழ்த்த இருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்ததைப் படித்து நான் மிகுந்த வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன். அந்த நிகழ்வின்போது மேடையில் பரீக்ஷா குழுவினர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாத்திரத்தை ஏற்று வெவ்வேறு இடங்களில் உட்கார்ந்தபடி, அவரவர்க்கான வசனங்களைக் குரல்பாவங்களோடு படித்துக் காட்டியது புதுமையாக இருந்தது. அது மட்டும் அல்லாமல் அன்றைய நிகழ்ச்சிக்கு அசோகமித்திரனைத் தலைமை தாங்கிப் பேச அழைத்திருந்த ஞாநி, என்னையும் மேடைக்கு அழைத்துப் பேசச்சொல்லி கௌரவப்படுத்தி எனக்கு இன்னமும் ஆச்சரியம் அளித்தார்.. அதன் பின், ஒரு பின் விளைவே போல், அந்த நிகழ்வுக்கு வந்திருந்த ஞாநியின் நெருங்கிய நண்பர் வைத்தியநாதன், நாடகப் பிரதியால் கவரப்பட்டு தனது யவனிகா நாடகக் குழுவின் மூலம் 'மூடிய அறை'யை நாலு ஞாயிற்றுக்கிழமைகள் தொடர்ந்து நாரதகான சபா ஹாலில் நிகழ்த்திக் காட்டினார். ஞாநி பத்து வருடங்களுக்கு மேல் கவனமாகப் பாதுகாத்து வந்த எனது பிரதி, அதுநாள்வரை முழு நாடகமாக நிகழ்த்தப் படாத குறை ஞாநியின் நண்பரின் மூலம் தீர்ந்ததாக அப்போது எனக்குத் தோன்றியது.

ஞாநி தன்னை எப்போதுமே ஒரு பத்திரிகைக்காரர் என்று அடையாளப் படுத்திக்

கொள்வதையே விரும்பியதாக அவருக்கு நெருக்கமானவர்கள் சொல்வார்கள். ஆனாலும் நான் பார்த்தவரை அவர் பத்திரிகை, நாடகம் இரண்டு துறையையுமே இரண்டு கண்களாகத் தான் பாவித்து வந்தார். இதை நான் உறுதியாகச் சொல்லக் காரணம் உண்டு. 1993ஆம் ஆண்டு கோவையில் சுபமங்களா சார்பில் கோமல் சுவாமிநாதன் நடத்திய நாடக விழாவில் டில்லியிலிருந்து வந்து, பென்னேஸ்வரனின் யதார்த்தா குழுவினர் நிகழ்த்திய எனது எப்போ வருவாரோ நாடகம் எல்லாராலும் வெகுவாக சிலாகித்துப் பேசப்பட்ட சந்தர்ப்பம் அது. அந்த நிகழ்ச்சிக்கு ஞாநி செல்லவில்லை. அதனால். அந்தக் குறையைப் போக்கும் விதமாய், தனது சொந்த செலவில், கோமலுடன் இணைந்து சென்னையில் கிருஷ்ண கான சபாவில் மீண்டும் இன்னொரு முறை அந்த நாடகத்தைப் போட ஏற்பாடு செய்ததை, அவரது நாடக ஈடுபாட்டின் தீவிரத்திற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். உண்மையில், அந்த சமயத்தில் அவர் 'தீம் தரிகிட' பத்திரிகை நடத்தி நஷ்டம் ஏற்பட்டு மிகுந்த பணக் கஷ்டத்தில் இருந்ததாகப் பேசிக் கொண்டார்கள்.

ஞாநியின் பன்முகத் தன்மை ஆச்சரியப் படத்தக்கது. மனசில் பட்டதை, அது எவ்வளவு சர்ச்சைக்குரிய விஷயமாக இருந்தாலும் தைரியமாக எழுதக் கூடியவர். கலைஞர் கருணாநிதியைப் பற்றி அவர் எழுதிய, தவிர்த்திருக்கக் கூடிய ஒரு கருத்துக்காக, அவரது சாதியைப் பற்றிப் பேசி, அவரைக் கேவலப் படுத்தி நமது சமூகத்தின் 'முற்போக்கு அறிவுஜீவிகள்' எல்லாம் சேர்ந்து ஒரு பொதுக் கூட்டம் நடத்திய போது கூட, அவர் அதைப் பற்றி எல்லாம் லட்சியம் செய்யவில்லை. மாறாக, ஞாநியின் அபிப்பிராயங்கள், பெரிய அரசியல், இலக்கியப் புள்ளிகள் கூட்டம் போட்டு எதிர்வினை ஆற்றுகிற அளவுக்குக் கவனத்துக்குள்ளாயிற்று என்பதே இதில் சுவாரஸ்யமான விஷயம். சில சமயங்களில் அவர், தான் கவனம் பெறவேண்டும் என்பதற்காகவே சிலவற்றை சர்ச்சைக்குரிய விதத்தில் எழுதியதாக ஒரு தோற்றம் உருவானதென்றாலும், தனிப்பட்ட வாழ்வில் வெறும் முற்போக்கு விஷயங்களைப் பேச மட்டும் செய்யாமல், கூடியவரை அவற்றைக் கடைப்பிடித்தும் காட்டிய அபூர்வ மனிதர் அவர். உதாரணமாக, தனது பரீக்ஷா நாடகம் ஒன்றின் இடைவேளையிலேயே தனது திருமணத்தை நடத்தி, எல்லாரையும் ஆச்சரியப் பட வைத்தவர் அவர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, அவரது அதீதமான தைரியமும் அர்ப்பணிப்புணர்வும் ஆச்சரியமூட்டக் கூடியன. இறுதி நாட்களில், தனது இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் வாரத்துக்கு இரு முறை டயாலிசிஸ் செய்தே ஜீவித்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட போதும் அவர் துளியும் பதற்றமோ, சோகமோ இன்றி, தனது பொதுவெளிச் செயல்பாடுகளில் எப்போதும் போல் இயல்பாக ஈடுபட்டிருந்தது எல்லோராலும் அவ்வளவு எளிதாகச் செய்யக் கூடியதல்ல.

பொது வெளியில் ஞாநியின் பங்களிப்புகளைப் பற்றி நிறையப் பேர் எழுதிவிட்டார்கள். அவற்றையே மீண்டும் நானும் எழுத விரும்பவில்லை. அவரோடு, ஆரம்ப காலத்தில் பழகியவன் என்ற முறையில், எனது தனிப்பட்ட் அனுபவங்களையும் பார்வைகளையும் மட்டும் இங்கே நான் பதிவு பண்ணி இருக்கிறேன். ஒரு சில கருத்து மாறுபாடுகளால், அதற்கப்புறம் நிறைய அவரிடமிருந்து நான் விலகி வந்து விட நேர்ந்தாலும், அவரது தொடர்பின் மூலமாகவே எனக்குக் கிட்டிய பாரவி. கே.எஸ். ராஜந்திரன், வெளி ரங்கராஜன் போன்ற நாடகவியக்க நண்பர்களின் நட்பு இன்றும் தொடர்ந்து நிலைத்தே இருக்கிறது. இதை, ஞாநியோடு எனக்கு, நாற்பது வருஷங்களுக்கு முன்னால் பீட்டர்ஸ் காலனியில் ஒரு இனிய மாலை வேளையில் நிகழ்ந்த அந்த இனிய முதல் சந்திப்பின் நீட்சியாகவே கருதுகிறேன். இன்னும் பல ஆண்டுகள் இருந்து நிறைய சாதிக்க வேண்டிய ஏராளமான ஆற்றலைத் தன்னுள் பொதித்து வைத்திருந்தார் அவர். ஆனால், அதை வெளிப்படுத்த முடியாமல் அவர் இப்படித் திடுதிப்பென்று புறப்பட்டுப் போனதின் ஆற்றாமையையும் அதிர்ச்சியையும் அவ்வளவு எளிதில் என்னால் இப்போதும் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

e-mail : sma.raman@gmail.com

# ஞாநியின் அரங்கச் செயல்பாடு

வெளி ரங்கராஜன்

தமிழில் வர்த்தக ரீதியிலான கேளிக்கை நாடகங்களுக்கு மாற்றாக, இலக்கியத் தன்மையும், சமூகப் பார்வையும் கொண்ட மாற்று அரங்கத்துக்கான குரலை முன்னெடுப்பவராகவே 1970களின் இறுதியில் ஞாநியின் அறிமுகம் எனக்கு ஏற்பட்டது. 1975–ல் அவசர நிலை காலகட்ட ஒடுக்குமுறைகளுக்குப் பிறகு கருத்துரிமை போராட்டங்களுக்கு ஆதரவாக கலை இலக்கியவாதிகள் தீவிரக்குரல் எழுப்ப வேண்டும் என்பதுபோன்ற அழுத்தங்கள் அப்போது சூழலில் உருவாகியிருந்தன. இந்தியா முழுவதும் நிறுவன எதிர்ப்பு அலைகளை உருவாக்கிய சத்யஜித்ரே, மிருணாள் சென், ரித்விக் கடக், அடூர் கோபாலகிருஷ்ணன், கிரிஷ் கர்னாட் ஆகியோரின் நவீன திரைப்பட இயக்கங்களும், பாதல்சர்க்கார், விஜய் தெண்டுல்கர், சந்திரசேகர கம்பார் போன்றவர்கள் வங்காளத்திலும், மராட்டியத்திலும், கர்நாடகத்திலும் உருவாக்கிய புதிய நாடக இயக்கங்களும் நாடெங்கும் எழுச்சி அலைகளை உருவாக்கியபடி இருந்தன. தமிழில் புதுக்கவிதை, சிறுகதை, இலக்கிய விமர்சனம் ஆகியவற்றில் நவீன சிந்தனை ஓட்டங்களை முன்னெடுத்த சிறுபத்திரிகை இயக்கம் நாடகத் தளத்திலும் புதிய வெளிப்பாடுகளை நோக்கிப் பயணப்படத் துவங்கியிருந்த காலகட்டம் அது. 1977ல் பேராசிரியர் ராமானுஜம் மற்றும் பன்சிகௌல் முன்னெடுத்த காந்திகிராமம் நாடகப்பட்டறையும், 1980ல் வீதி நாடக இயக்கம் சென்னையில் பாதல்சர்க்கார் ஒருங்கிணைத்த நாடகப்பயிற்சிப் பட்டறையும் தமிழ்ப் படைப்பாளிகள் உடல் இயக்கத்தின் அதிர்வுகள் சார்ந்த புதிய அரங்க செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டியதின் அவசியத்தை உணர்த்தின. அதன் விளைவாகவே பரீக்ஷா, வீதி, நிஜ நாடக இயக்கம், சுதேசிகள் போன்ற இயக்கங்கள் புதிய அரங்க செயல்பாடுகளில் ஈடுபட்டன. நாற்காலிக்காரர், காலம் காலமாக, அப்பாவும் பிள்ளையும் ஆகிய புதிய நாடகப் பிரதிகளை தமிழுக்கு அளித்த சிறுகதை எழுத்தாளர் ந.முத்துசாமி, கூத்துப்பட்டறை என்கிற அமைப்பை கூத்துக்கும் நவீன நாடகத்துக்கான தொடர்புகளை மேம்படுத்துவதாக, நடிகனின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணரும் அரங்க செயல்பாட்டை முன்னெடுப்பவராகவும் செயல்பட்டுக்கொண்டிருந்தார்.




ஞாநியின் பரீக்ஷா நாடகக்குழு படித்த மத்திய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் மாற்றுக்குரல்களை முன்னெடுக்கும் ஓர் அமைப்பாகவே செயல்பட்டது. ஆனால் மேல்தட்டு மத்தியவர்க்கக் குறியீடாக இருந்த இறுக்கமான செவ்வக மேடை அமைப்பை உதறி, கடற்கரையிலும், திறந்த வெளிகளிலும், சிறிய முற்ற மேடை அமைப்புகளிலும் நாடகம் செயல்படுவதற்கான சாத்தியங்களை அது முன்னெடுத்தது. ஒரு கட்டத்தில் வட்டவடிவமான சென்னை மியூசியம் அரங்கம் நவீன நாடகங்களின் செயல்தளமாக மாறியதற்கு ஞாநியின், போர்வை போர்த்திய உடல்கள், முட்டை, பலூன், மனுஷா மனுஷா ஆகிய நாடகங்கள் பெரிதும் பயன்பட்டன. இலக்கிய உணர்வு கொண்ட மத்தியவர்க்க பார்வையாளர்களை, நவீன வெளிப்பாடுகளை நோக்கிக் கணிசமாகத் திரட்டியதில் அந்த நாடகங்களுக்குப் பெரும் பங்குண்டு.

இத்தகைய சூழல்களால் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு குழுக்களால் புதிய அரங்கச் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. சோதனை முயற்சிகள், அரங்க வெளியின் புதிய பயன்பாடு, பிரதிகளை கலைத்துப்போட்டு புதிய அர்த்த தளங்களை உருவாக்குதல் ஆகிய செயல்பாடுகள் தமிழ்ச் சூழலில் நிகழ்ந்துகொண்டிருந்தபோது, அதிகப் பின்பற்றுதல்கள் இருந்த நிலையிலும், புதிய விரிவாக்கங்கள் இன்றி வழமையான முயற்சிகளிலேயே பரீஷா நிலைகொண்டது. ஆனால், ஆரம்பகால நவீன நாடக இயக்கத்தை வலுப்படுத்தியதில் ஞாநியின் பங்கு சிறப்பானது.

e-mail : velirangarajan2003@yahoo.co.in

# சென்னை மனநலக் காப்பகம்
# 'பைத்தியக்கார' விடுதியிலிருந்து காப்பகம் வரை

சஃபி

மேற்கில் பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில்தான் மனநலத் துறையானது ஒரு சிறப்புப் பிரிவாக உருக்கொள்ளத் தொடங்கியது. அப்போதுதான் பைத்தியக் காரர்களை பராமரிப்பதற்கான விடுதிகளும், மனநோய்ப் பற்றிய கோட்பாடுகளும் கணிசமாகத் தோன்ற ஆரம்பித்தன. அதற்கு முன்னால் பைத்திய நிலையானது கடவுளுக்கு எதிரான சாத்தான்களின் செயல்பாட்டால் ஏற்படுகிறது என்ற பார்வைதான் நிலவி வந்தது. சாத்தானின் கரம் பட்டு, பிறழ்வாக நடந்து கொள்பவர்களை அடையாளம் காண்பதற்காகவே 1486ஆம் ஆண்டு ஹெய்ன்ரிச் க்ராமர் என்பவரால் பிரத்தியேகமாக *Malleus Maleficarum* என்ற நூலானது ஜெர்மன் மொழியில் எழுதப்பட்டது. பல மொழிகளில் பெயர்க்கப்பட்டு பல பதிப்புகளைக் கண்டது அப்புத்தகம். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக கருத்தியல் ரீதியாக, கடுமையான பாதிப்புகளை அப்புத்தகம் செலுத்தியிருக்கிறது. அந்நூலின் வழி காட்டுதலின்படி, சாத்தானால் பீடிக்கப்பட்டவர்கள் மதகுருக்களினால் விசாரணைக்கு ஆட்படுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறார்கள். தீக்கிரையாக்கப் பட்டுள்ளனர்.

**மனநலத் துறையில் நடந்த சில முக்கிய நிகழ்வுகள்**

*1773* ம்ஆண்டு அமெரிக்காவில் வர்ஜீனியா மாகாணத்தில் வில்லியம்ஸ்பர்க் என்ற இடத்திலும், *1784*ல் ஐரோப்பாவில் முதன் முதலாக வியன்னாவிலும் பைத்தியக்காரர் களுக்கான விடுதி ஏற்படுத்தப்பட்டது.

*1795*ல் பிரான்சில் சால்பட்ரியரெ என்ற பித்தர்களுக்கான விடுதியில் நோயாளிகளின் கைகால்களை பிணைத்திருந்த விலங்குகளை பிலிப் பினல் என்ற மருத்துவர் அப்புறப்படுத்தினார். பினலின் செயல் மனநலத்துறை வரலாற்றில் பெரிய சீர்திருத்த நடவடிக்கையாக கணிக்கப்பட்டுள்ளது.

*1856* ஆம் ஆண்டில் இரு முக்கிய நபர்கள் பிறந்திருக்கிறார்கள். தீவிரமான மனச்சிதைவு நோயின் தன்மைகளை விவரித்த எமில் கிரப்ளின் என்ற மனநல மருத்துவர் அந்த ஆண்டு பிறந்தார். அதே ஆண்டுதான் காரணகாரிய விளைவுகளை யோசித்து, பகுத்தறிவு ரீதியாக மட்டும் மனம் இயங்குவதில்லை. கவனத்துக்கு வராத நனவிலி மனதின் *(Unconscious)* செயல்பாடுகளும் உண்டு என்று மனித சிந்தனைகள் வரலாற்றில் புதியதோர் அறிவை வெளிப்படுத்திய சிக்மண்ட் ஃப்ராய்டும் பிறந்தார்.

*1885*களில் சார்கோ என்ற நரம்பியல் நிபுணர் பாரிசில் புதிய சிகிச்சை முறையாக ஹிப்னாடிசத்தை அறிமுகப்படுத்தி விரிவுரை நிகழ்த்தி வந்தார். உலகம் முழுக்க பல அறிஞர்களின், மருத்துவர்களின் கவனத்தை ஹிப்னாடிசம் ஈர்க்கத் தொடங்கியது.

*1911*இல் யுஜின் ப்ளுளர் என்ற புகழ் பெற்ற ஸ்விஸ் நாட்டு மனநல மருத்துவர் ஸ்கிசோபெர்னியா மனச்சிதைவு நோய் என்ற மருத்துவச் சொல்லை உருவாக்கி புழக்கத்தில் விட ஆரம்பித்தார்.

*1933*ல் வியன்னாவைச் சேர்ந்த மான்ப்ரெட் சாகெல் என்பவர் இன்சுலின் மருந்தை உடலில் செலுத்தி அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் முறையை அறிமுகப்படுத்தினார். *1935*ல் போர்ச்சுகல் லிஸ்பன் நாட்டைச் சேர்ந்த எகாஸ் மோனிஸ் என்பவர் மூளை அறுவை சிகிச்சை மூலம் மனநோயைக் குணப்படுத்தும் சிகிச்சையைத் தொடங்கி வைத்தார். அதனால் அவருக்குப் பின்னாளில் நோபல் பரிசும் கிடைத்தது.

ஹிட்லர் *1939*ல், மனநோயாளிகள் உட்பட குணப்படுத்த முடியாத நோயாளிகள் அனைவரும் கருணைக் கொலை செய்யப்பட வேண்டும் என ஆணையிடுகிறார். அதைத்தொடர்ந்து மனநலக் காப்பகங்களில் விஷவாயு அறைகள் கட்டப்பட்டு மனநோயாளிகள் கொல்லப்படுகின்றனர்.



ஐம்பதுகளில் மருத்துவ ரசாயனத்தில் நடந்த மாற்றங்களின் விளைவாகத் தூக்க மருந்துகளும் மற்ற மாத்திரைகளும் ஏராளமாக வந்து சிகிச்சை முறையில் ஒரு முக்கிய அங்கமாகி விட்டன.

**இந்தியச் சூழலில்**

மேற்கின் விஞ்ஞான ரீதியிலான மனம், மனநோய் தொடர்பான நவீன கருத்துக்கள் இந்தியாவிற்குள் புத்தகங்கள் வழியாக அறிமுகமாவதற்கு முன்பாகவே பைத்தியக்காரர்களுக்கான விடுதிகள் லூனாட்டிக் அசைலங்கள் முதலில் வந்து விட்டன என்று சொல்லலாம்.

நோயாளிகளுக்கான விடுதி என்பது முழுக்க ஆங்கிலேயர்களின் கண்டுபிடிப்பு. பிரிட்டிஷார் வருகைக்கு முன்பு பைத்தியக்காரர்களை சமூகத்திலிருந்து பிரித்துத் தனியே விடுதியில் அடைத்து பராமரிக்கும் போக்கு இந்தியாவில் இருந்ததில்லை என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஆங்கிலேயரின் வருகையையொட்டித்தான் அசைலங்கள் இந்தியாவில் தோன்றத் தொடங்கின.

கிழக்கிந்தியக் கம்பெனி செயல்பட்ட வணிக முக்கியத்துவம் வாய்ந்த மாகாணங்களான பம்பாயில் 1774லும், வங்காளத்தில் 1787லும், சென்னையில் 1794லும் விடுதிகள் உருவாக்கப்பட்டன. பிராந்தியப் பகுதிகளாய் விளங்கிய சித்தூர், திருச்சிராப்பள்ளி, தெள்ளிச்சேரி, மசூலிப்பட்டனம் போன்ற இடங்களில் விடுதிகள் தற்காலிகமாக நிறுவப்பட்டு பின்பு நிர்வாகக் காரணங்களால் 1822ல் மூடப்பட்டிருக்கின்றன. கல்கத்தாவில் மட்டும் மற்ற இனத்தவரோடு கலந்து விடாமல் இருப்பதற்காக ஐரோப்பிய நோயாளிகளுக்கென்றே பிரத்யேகமாக விடுதி கட்டப்பட்டிருக்கிறது.

**சென்னை மாகாண விடுதி.**

சென்னை விடுதியைத் தெரிந்து கொள்ள வால்டிரவுட் எர்னஸ்ட் என்ற ஆய்வாளரின் குறிப்புகளும், 1971ல் அரசு மனநலக் காப்பகம் அதன் நூற்றாண்டு நிறைவு விழாவில் வெளியிட்ட சிறப்பு மலரும் நமக்கு உபயோகமான தகவல்களைத் தருகின்றன.

1793ல் சென்னையில் விடுதிக்கான சுழி போடப்பட்டு அதற்கடுத்த ஆண்டு கட்டப் பட்டுள்ளது. கிழக்கிந்தியக் கம்பெனியானது தன்னிடமிருந்த வேலன்டைன் கனோலி என்ற சர்ஜனை புத்தி பேதலித்த ஐரோப்பியர்களைப் பராமரிக்குமாறு நியமித்தது. கம்பெனியின் ஊழியராக இருந்து கொண்டு பித்தர்களுக்காக தனியார் விடுதி உரிமையாளராகவும் இருந்து கொள்ளும் நிலை அப்போது இருந்திருக்கிறது. விடுதிக்கான வாடகையும், சர்ஜனுக்கான சம்பளத்தையும் கிழக்கிந்தியக் கம்பெனி கொடுத்திருக்கிறது. கனோலியும் விடுதி நடத்தி நல்ல வருமானம் பார்த்திருக்கிறார். சர்ஜன் கோல்டை என்பவர், கனோலியிடமிருந்து பழையகட்டிட மதிப்பை விட மும்மடங்கு அதிகத் தொகை கொடுத்து விடுதியை வாங்கியிருக்கிறார்.

விடுதியை கோல்டைத் தனக்கடுத்து சர்ஜன் டால்டன் என்பவருக்கு விற்று விற்றார். டால்டன் கனோலி நடத்தி வந்த விடுதி தாங்கும் நிலையில் இல்லை பலவீனமாக இருக்கிறது என்று சொல்லி பழைய கட்டிடத்தைப் புதுப்பித்துக் கட்டியிருக்கிறார். டால்டன் ஓய்வு பெறும் சமயத்தில் விடுதியை அதிக விலைக்கு விற்க முயற்சித்தபோது, விடுதியை விற்கவோ அல்லது குத்தகை ஒப்பந்தத்தை மாற்றவோ முடியாது என அரசாங்கம் தலையிட்டிருக்கிறது.

அரசு குறுக்கிடுவதற்குப் பின்னணியாக ஒரு சம்பவம் நடந்தது. 1808 ல் இரண்டு ஆங்கிலேய கனவான்கள் அதில் ஒருவர் கப்பல் கேப்டன் டால்டன் விடுதியில் சேர்க்கப்பட்டதையொட்டி சில சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன. அக்கனவான்களை சிகிச்சைக்காக ஆங்கிலேயர்களை விட இனரீதியாக தாழ்ந்த, கீழான ஆர்மேனியர்களோடு சேர்த்தது தவறு என்றும், அந்தக் கனவான்கள் சமூகத்தின் பர்ஸ்ட் கிளாஸ் சிட்டிஸன்கள். அவர்களுக்கு முதல்தர விடுதியும் பர்ஸ்ட் கிளாஸ் மரியாதையும் தரவேண்டும் என்று கல்லாகன் என்ற மருத்துவர் தனது கண்டனத்தை

மெடிக்கல் போர்டுக்கு தெரிவித்தார்.

அதுநாள் வரை ஐரோப்பிய நோயாளிகளின் நலனுக்காக பிரிட்டிஷ் அரசாங்கமானது அதிகப் பணத்தைச் செலவிட்டு வந்ததால் பித்தர்களுக்காக விடுதி நடத்துவது லாபகரமான வணிகமாகப் பார்க்கப்பட்டு வந்தது. அதன்படிப் பராமரிக்கப்படும் நோயாளிகள் உயர்தட்டைச் சார்ந்தவர்கள் என்று வகைப்படுத்தி அரசாங்கத்துக்கு விடுதி உரிமையாளர்கள் பொய்க் கணக்கு காட்டுவது இருந்து வந்தது.

கல்லாகனின் குறுக்கீட்டால் உயர்தட்டு பிரிவினருக்கென்று பிரத்யேகமாக செலவு செய்வதை நிறுத்திவிட்டு, பதிலாக நிர்ணயிக்கப்பட்ட தொகையை சூபரின்டென்டென்டுக்குச் சம்பளமாகக் கொடுக்க அரசாங்கம் முடிவு செய்தது. அதையொட்டி 1809ல் நோயாளிகளை விடுதியில் சேர்ப்பது, அவர்களை வகைப்படுத்துவது, விடுதி நிர்வாகம், குத்தகையை நிர்ணயித்தல் போன்ற அதிகாரங்கள் தனியார் விடுதி உரிமையாளர்களிடமிருந்து பறிக்கப்பட்டு மெடிக்கல் போர்டின் கை வசம் வந்தது. அதைத் தொடர்ந்து பிரிட்டிஷ் நோயாளிகள் மற்றவர்களோடு கலந்து விடாமல் அவர்களுக்கான தனி வார்டும் உருவாக்கப்பட்டது.

**வெயில்**

1818 ஆண்டுக்கு முன்பு வரை கல்கத்தா, பாம்பே, சென்னை போன்ற மாகாணத்திலிருந்த ஐரோப்பிய நோயாளிகளை பிரிட்டனுக்கு திரும்பி அனுப்பும் வழக்கம் இல்லை. கல்கத்தாவில் இருந்த ராபின்சன் என்ற மருத்துவர் நோயாளிகளை வெயில் கடுமையாக இல்லாத இதமான சீதோஷ்ண நிலை கொண்ட இங்கிலாந்திற்கே திருப்பி அனுப்பினால் விரைவில் குணமடைவார்கள், அரசுக்குச் செலவீனமும் மட்டுப்படும் என்று ஆலோசனை சொல்லியிருக்கிறார்.

அப்போது அறிவியல் வட்டாரத்தில், வெள்ளையர்கள் பைத்தியமாவதற்கு தாங்க முடியாத வெயில் ஒரு முக்கிய காரணம் என்று சொல்லப்பட்டது. இங்கிலாந்து போன்ற குளிர் பிரதேசங்களில் ஒருவர் பைத்தியமாவதற்கு பொருளில்லாத துர்பாக்கிய நிலையோ, ஆழ்ந்த மனச் சங்கடங்களோ, மாறாத துயரங்களோ காரணமாக இருக்கலாம். ஆனால் இந்நாட்டில் காரணங்கள் வேறு. சுட்டெரிக்கும் வெயிலும், கடுமையான வாழ்க்கையும் ஒருவரின் இதயத்தை, இரத்த நாளங்களை அதிகம் கிளர்ச்சியடையச் செய்துவிடும் என்ற காரணமானது பிரிட்டிஷாரின் மெடிக்கல் போர்ட் குறிப்புகளில் இருக்கிறது. அந்த ஆலோசனையைத் தொடர்ந்து ஐரோப்பிய நோயாளிகள் பிரிட்டனுக்கு திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.

1846ம் ஆண்டு நோயாளிகள் இருக்கும் பழைய விடுதியானது மோசமானதாக பாதுகாப்பற்றதாக இருக்கிறது என்ற எச்சரிக்கை குறிப்பை விடுதி சூபரின்டென்டென்டாக இருந்தவர் மேலிடத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார். ஐம்பதாண்டு காலமாகச் சுமார் விடுதி வாடகைப் பணமாக சுமார் 3, 50, 000 வரை செலவழித்திருந்ததைக்கணக்குப்பார்த்த சென்னை அரசாங்கம், புதியதாக ஒரு கட்டிடத்தைப் பழைய கீழ்ப்பாக்கம் பகுதியில் கட்டலாம் என முடிவு செய்தது.

அரசாங்கத்தின் நோக்கத்தை அறிந்த கீழ்ப்பாக்கம் பகுதியைச் சார்ந்தவர்கள், கீழ்ப்பாக்கம் சந்தைகளும், கோயில்களும் நிறைந்த வளர்ந்து வரும் புறநகர்ப்பகுதியாகும். விடுதிக்கு பொருத்தமான பகுதியல்ல. விடுதி கட்டினால் பப்ளிக் நியுசன்ஸ் ஏற்படும். இடமதிப்பும் குறைந்து போகும் என்ற காரணம்காட்டி அரசாங்கத்துக்கு பெட்டிஷன் ஒன்றை டிசம்பர் 1851ல் கொடுத்திருக்கின்றனர்.

அரசாங்கமும் பிரச்சினைகள் தவிர்ப்பதற்காக திட்டத்தை ஆறப்போட்டு, பின், அரசாங்க கெஜட்டியில் விடுதிக்கு இடம் தர விரும்புபவர்கள் முன்வரலாம் என்று பொது விளம்பரம் செய்தது. அதன்படி 1856–57 லோகாக்ஸ் கார்டன் வாங்கப்பட்டது. அதன் பிறகு சிப்பாய் கலகத்தின் நெருக்கடிகள், சூடு தணிந்த நிலையில் 1867 ஜனவரி மாதத்தில் போடப்பட்ட அரசு ஆணையின்படி வாங்கப்பட்ட 66. 1/2 ஏக்கர் நிலத்தில் விடுதி கட்டப்படுவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டது. மே 15, 1871 ல் விடுதி கட்டிமுடிக்கப்பட்டு 145 நோயாளிகளுடன் செயல்படத் தொடங்கியிருக்கிறது. 1891ம் ஆண்டு ஆணும் பெண்ணுமாகச் சேர்த்து 627 நோயாளிகள் வரை சிகிச்சைக்கு வந்து போயிருக்கிறார்கள். 1869–1919 வரை காப்பகத்தில் சூப்ரின்டென்டாக பணியாற்றியவர்கள் ஆங்கிலேயர்களாகவும் இராணுவத்தில் கர்னல், கேப்டன், மேஜர் என்ற



பதவி வகித்தவர்களாகவும் இருந்திருக்கின்றனர்.

1922ல்தான் கவர்ன்மென்ட் லூனாட்டிக் அசைலம் என்பது கவர்ன்மென்ட் மென்டல் ஹாஸ்பிட்டல் என்பதாக மாற்றப்பட்டிருக்கிறது.

1922 தொடங்கி பிரிட்டனில் மனநலத் துறையைச் சிறப்புப் பாடமாக பயின்ற சென்னை மாகாணத்தைச் சார்ந்த உள்ளூர் மருத்துவர்கள் சூப்ரின்டென்டாகச் செயல்பட ஆரம்பித்தனர். இளங்கலை மருத்துவ மாணவர்களுக்கும் மனநோய்களைப் பற்றிய பாடம் அறிமுகப் படுத்தப்பட்டது. மின் அதிர்ச்சி வைத்தியமும், இன்சுலின் கோமா சிகிச்சையும் காப்பகத்துக்குள் வந்தன. ஐம்பதுகள் தொடங்கி அதிகரித்து வந்த தேவையையொட்டிக் குழந்தைகள் பிரிவு பெண் மனநோயாளிகளுக்கான பிரிவு என்று புதிதாகப் பல பிரிவுகள் தொடங்கப்பட்டன. மனநலப் பணியாளர்களின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப் பட்டது. சிறைச்சாலை போல பெரிய கதவுகள், இரும்புக் கம்பிகள் என மனதை மிரட்டும் படியாக இருந்த காப்பகத்தின் தோற்றம் படிப்படியாக மாற்றப்பட்டது. வேலன்டைன் கனோலியைத் தொடக்கமாகக் கொண்டால் காப்பகத்துக்கு 224 வயது ஆகிறது.

காலனி ஆதிக்கத்தின்போது பிரிட்டிஷ் இந்தியாவில் உண்டாக்கப்பட்ட மனநல காப்பகங்களின் வரலாறு பெரும்பாலும் லண்டனில் இருக்கும் இந்தியன் ஆபிஸ் ரெகார்டுகளைத் தழுவி எழுதப்பட்ட ‘அதிகாரப் பூர்வமான‘ வரலாற்று ஆய்வுகளாகும்..

ஒருவர் மனநலம் பாதிக்கப்படுதல் என்பது மருத்துவம், சட்டம், சமூக ஒழுங்கு, கலாச்சார காரணிகள், தனிமனித சுதந்திரம் போன்ற பல விஷயங்களோடு தொடர்புடையது. ஒரு தனிமனிதனுக்குப் பொருந்தும் விஷயம் அம்மனிதனை உள்வாங்கும் காப்பகத்துக்கும் பொருந்தும். அதனடிப்படையில் காப்பகத்தின் வரலாற்றைப் பல தளங்களில் எழுதிப் பார்க்கலாம். பரந்துபட்டு ஆய்வு செய்யலாம். உதாரணமாக, இந்திய சமூகத்தில் ஒருவர் மன நோயாளியாவதற்குச் சொல்லப்படும் பழைய கருத்துக்கள் இன்னும் இற்றுப் போய் விடவில்லை. கர்மவினை, செய்வினை, பில்லி ஏவல் மற்றவர்கள் வைத்த சூன்யம், கிரகபலன்கள், சாபம் என்று நம்பிக்கைகள்தான் காரணங்களாகக் கூறப்படுகின்றன. அதே போல் மேற்கில் நடந்தது மாதிரி இந்தியச் சூழலில் மனநோயாளிகள் சமூகத்துக்கு ஒவ்வாதவர்கள் என்று தண்டிக்கப்பட்டதற்கான தரவுகள் இல்லை.

‘தூக்குப் போட்டு நாண்டுக்கிட்டு செத்துப் போனவ பிடிச்சிக்கிட்டா‘ என்று நோய்க்கான காரணத்தைச் சொல்லக் கேட்பதெல்லாம் மனநலத்துறையில் சர்வ சாதாரணம். சமீபத்தில் தனது மகளைச் சிகிச்சைக்காக அழைத்து வந்த தகப்பனார் ஒருவர், ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து ஏழு பேய்கள் தன் மகளைப் பிடித்தாட்டுவதாகச் சொன்னார். சொந்த மனதின் குதியாட்டத்தைப் புரிந்து கொள்ளவே திணறிக் கொண்டிருக்கும் எனக்கு, ஓர் இளம் பெண்ணின் மீதான ஏழு பேய்களின் கூட்டாட்சித் தத்துவத்தை எதிர்கொண்டது திகைப்பையே தந்தது. அப்பெண்ணை விளங்கிக் கொள்ள முயற்சிப்பது ஒரு பண்பாட்டை விளங்கிக் கொள்வதற்கான செயலாகும்.

இந்தக் கலாசாரப் பின்னணியில் நூற்றாண்டுகளுக்கு முன்னால் ஆங்கிலேயர்கள் பைத்தியமாவது குறித்து வேறுபட்ட பார்வை கொண்ட சமூகத்திற்கு எப்படி எதிர்வினை புரிந்தார்கள் என்ற கேள்வியை ஒரு முனையில் வைக்கலாம். அதன் மறுமுனையில் செய்வினை போக்குதல் என்று ஆன்மிக ஸ்தலங்களுக்குப் போய்க் கொண்டிருந்த நம் மக்கள் சென்னையில் வந்திறங்கிய நவீனமான காப்பகத்துக்குச் சுலபமாக, தயக்கமில்லாமல் போய்விட்டார்களா என்ற கேள்வியை வைக்கலாம். அதற்கு விடையாக ஒளிந்து கிடக்கும் ஆவணங்களைத் தேடி ஆய்வினைச் செய்தால் நமக்கு கிழக்கும் மேற்கும் சந்தித்துக் கொண்டபோது எழுந்த முரண்பாடுகளைப் பற்றியப் பண்பாட்டு ரீதியிலான பார்வை கிடைக்கும்.

e-mail : safipsy69@gmail.com

# வைக்கல் போரில் தொலைந்து போன ஊசி

வீ விஜயராகவன்

இந்த வயதிலும்
அன்பைத் தேக்கி வைத்து
அலைந்து கொண்டிருக்கிறேன்
விலையில்லாப் பண்டமாய்
வீணாகிக் கொண்டிருக்கிறது

யாருக்குமே நேரமில்லை
நாளையும் அலுவலையும்
அட்டவணைப்படுத்தி
அவகாசமின்றி விரைகிறது
அன்றாட உலகம்
தெரிந்த முகங்களையும்
தொலைந்து போகும்
கால இடைவெளிகளில்
தற்காலிகமாகப் புதைத்து விட்டு.


ஓவியம்: ஜே.கே.

உள்ள எரிச்சலுக்கு
உதவி நாடிப் போன
மனநலக் காப்பு மனையில்
விரைவு கதி உலகம்
அவ்வப்போது உதறி விட்ட
எச்சங்கள்
என்னைக் கண்டு சுதாரித்த கண்களில்
புரிதலுடன் ஒரு பெரிய கேள்விக் குறி:
‘எப்போதுமே இளிச்சவாயனாய்
இருந்தபோதே
எங்களுக்கும் சந்தேகம்தான்’.

சுற்றிலும் சுளிக்கும் முகங்கள்
கணநேரக் களிப்புக்கும்
இடமின்றி ஆட்டி வைக்கிறதோ
நாளையப் பொழுதின் கவலை?

புன்சிரிப்பு கசிய விடும்
மருந்தளவு அன்பையும்
பரிந்துரைச் சீட்டில்
பதிவு செய்திருந்தால்தான்
அணுகி வருவரோ?

# சிறை வைப்பு

குல்சார்

நகரத்துக்குள்
நுழைந்த போது
மாலை மங்கியிருக்க
காலம் புளித்துப் போய்த்
தேங்கிக் கிடந்தது.

மௌனம் மண்டியிருந்தது
சுவர் நெடுக
ஒரு நிழலும் படியாத தெருக்கள்
ஒளியோ, இருளோ
தெரியாத ஒரு மருள்.
பூட்டிக் கிடந்த கதவுகள்
ஜன்னல்கள் இழுத்து மூடப்பட்டு;
சிதறிக் கிடந்தன சந்துகளேற
பூஞ்சை பிடித்த காலத்தின்
துகள் துண்டுகள்.

அலைந்து திரிந்தேன் நகர் முழுதும்
தெருத் தெருவாக
ஒவ்வொரு கதவையும் தட்டிக் கொண்டு
'யார் அங்கே
யாராவது உண்டா உள்ளே?'
யாரும் வரவில்லை
எந்தப் பதிலும் இல்லை.

திடீரென்று
நகரம் விழித்துக் கொண்டது
அதன் எண்ணற்ற குரல்கள்
என்னை எட்டிப் பிடித்தன
இப்போது
இருக்கிறேன்
அக்குரல்களிடையே சிக்கிச்
சிறை வைக்கப் பட்டு.



ஓவியம்: ஜே.கே.

ஆங்கிலவழித் தமிழாக்கம்:
வீ விஜயராகவன்
(நன்றி: இந்தியன் லிட்டரேச்சர்)

e-mail : pkvrags@yahoo.com

# உருதுக் கவிதைகள்

ஹமீத் அல்மாஸ்

1. பசும் இலைகள் மிரண்டு பறந்தன
திக்குத்திசை தெரியாத
கிறுக்குக் காற்று
2. அன்று காலை பறந்து சென்ற வளர்ப்புப் பறவை
மாலை இருள் சூழத் திரும்பியது
தொலைதூர வனத்தில் பெரு விருந்து போல.
3. பார்க்க நேர்ந்தது
எறும்புகள் தேம்ப ஆரம்பித்ததைப்
பற்ற வைத்த நெருப்பின் அனல் அண்மை.
4. எண்ணற்ற வெண்ணிறப் பறவைகளின்
பறத்தலில் தொலைதூரத்
தொடுவானில் பறக்கும் கோல நிழல்கள்.
5. மெல்ல மறையும் கிரணங்கள்
முனையில் தனி இலையை முத்தமிட
சிலிர்க்கும் மரம்.

# சமூகம் வேலைவாய்ப்பின்மை உளவியல்

எம்.குமரேசன்

**சமூகக் கட்டமைப்பு**

சமூகம் வர்க்கங்களால் கட்டமைக்கப் பட்டுள்ளது. அவை பெரும்பாலும் பொருள் உற்பத்தி, உற்பத்தியைச் சந்தைப்படுத்துதல் மற்றும் பொருளாதாரச் சம்பந்த அடிப்படையில் என்பது ஒரு பார்வை. அந்த உற்பத்திக்கு ஒருவர் எவ்விதத்தில் சம்பந்தப்பட்டுள்ளார் அல்லது உற்பத்தியுடனான அவருடைய உறவே வர்க்கத்தை நிர்ணயிக்கிறது. அதில், உற்பத்திக்கான சாதனங்களான மூலாதாரங்களைக் கொண்டுள்ள வலுவான வர்க்கமும், உடல் உழைப்பையோ அல்லது திறமையையோ மட்டுமே மூலதனமாகக் கொண்டு அதன் மூலம் மட்டுமே வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லும் இரண்டாவதும் மிகவும் பலவீனமான வர்க்கமும் ஆகும்.

**சமூகம் இயங்கும் விதம்**

சமூகத்தின் உயிர்நாடி உற்பத்தி, சந்தைப்படுத்துதல், நுகர்வு, நுகர்வு சார்ந்த உற்பத்தி எனும் சுழற்சியைச் சார்ந்தே இருக்கிறது. சமூகக் கட்டமைப்பின் இரு வர்க்கங்களுக்கிடையேயான இன்றியமையாத இவ்வுறவு பொருளாதாரத்தின் அடிப்படையை நிர்ணயிக்கிறது. இவ்வடிப்படை உறவுகளின் கட்டமைப்பானது, புறக்கட்டமைப்புகளைத் தன்சார்புடையதாக இயங்கச் செய்கிறது. எடுத்துக்காட்டாக, கல்விமுறையின் கட்டமைப்பு பொருளாதாரக் கட்டமைப்பின் காரணிகளைச் சார்ந்த கட்டமைப்பாக உருவாக்கம் பெறுகிறது.

தொழிற்நுட்பத்தின் தாக்கத்தினால் வாணிபத்தின் அளவு விரிவடைந்து விஸ்தரிக்கும்போது, வாணிபத்தின் உரிமைக்கும், கட்டுப்படுத்தும் கட்டமைப்பிற்கும் இடையான இணைப்பு பலவீனப்படுகிறது. வாணிபம் பல்வேறு தரப்பினரும் உரிமை கொண்டாடும் நிலையைப் பங்குதாரர்கள் வடிவில் அடைகிறது. இதன் ஒருபக்கம் சாமானியர்களும் தொழிற்கூடங்களில் உரிமையுள்ளவர்களாகப் பரிணாம வளர்ச்சியடையும் நிலை ஏதுவாகிறது. இதன் மறுபக்கம் ஏற்படும் தாக்கம் உழைப்பையும் திறனையும் மட்டுமே மூலதனமாகக் கொண்டிருந்த ஒன்றுபட்ட வர்க்கம் தற்போது உளவியல் ரீதியாக ஓர் பிளவைச் சந்திக்கிறது. அதுவே நடுத்தர வர்க்கம் எனும் அடையாளத்தை உருவாக்குகிறது. இந்தப் புதிய நடுத்தர வர்க்கம் என்றுமே வலுவற்ற (உழைக்கும்) வர்க்கத்தின் உட்பிரிவாகவே வலுவான வர்க்கத்தினரால் பார்க்கப்படுகிறதே ஒழிய முன்னேறியதாகச் சேர்த்துக்கொள்ளப் படுவதில்லை.

**வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை எனும் இருமை**

இந்தப் புதிய நடுத்தர வர்க்கம் பெரும்பாலும் தொழில் சார்ந்த நிபுணத்துவமோ, மேலாண்மைத்திறனோ உள்ளவர்களும். அலுவலக ஊழியர் போன்ற இடைநிலை உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்தவர்களுமே ஆவர். இவர்களில் தொழில் முதலீடு செய்து தொழில் முனைவோர்களாகும் திறன் இன்னமும் பெரிய அளவில் வளர்ச்சியடையவில்லை. இந்த நடுத்தர வர்க்கமும் மற்ற ஏனைய உழைக்கும் வர்க்கத்தைப்போல வேலைவாய்ப்பு எனும் உழைப்பை மூலதனமாக்கும் உழைக்கும் வர்க்கமாகவேத் தொடர்கிறது. மேலும், சிறு குறு தொழில் முதலீடுகள் பல்வேறு காரணங்களால் தடுமாற்றத்துடனே இருக்கிறது. இதன் விளைவாகவும், சர்வதேச அளவில் பொருளாதார ஸ்திரத்தன்மை இல்லாத காரணத்தினாலும் வேலைவாய்ப்பு இழப்புகள் தவிர்க்க இயலாதவகையில் முன்னிறுத்தப்படுகிறது. இந்த வேலைவாய்ப்பு இழப்புகளும், புதிய வேலைவாய்ப்பு உருவாக்கம் இல்லையென்ற நிலையும் சேரும்போது தனிமனிதன் மீதும் சமூகத்தின் மீதும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ

உளவியல் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. சமூகம் தனிமனிதனைப் பெரும்பாலும் அவனுடைய வேலை அல்லது தொழில் சார்ந்தே அடையாளப்படுத்திப் பார்க்கிறது. எப்பொழுதுமே அனைத்துத் தரப்பிலிருந்தும், கேள்விகள், ஒருவர் செய்யும் வேலையைப் பற்றிய கேள்விகளாகவே தொடங்குகின்றன. வேலை இழந்துவிட்ட ஒருவருக்கு, இத்தகைய கேள்விகள், அடிப்படையில் தன்னைத்தானே மோசமாக உணர வைக்கிறது.

வேலை வாய்ப்பின்மையின் அளவீடுகளில் உலகளாவிய முக்கியமாக அளவீடு *Unemployment Rate* (வேலையின்மை விகிதம்) சதவீதத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. இன்றுவரையிலான அதன் வரையறை அனைவராலும் முழுவதுமாக ஒப்புக்கொள்ளப்படவில்லையெனினும் உபயோகத்தில் இருக்கிறது. இதை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் அல்லது ஒரு பிராந்தியத்தின் வளர்ச்சியையும் மறைமுகமாக அனுமானிக்க முடியும் என்ற ஒரு கருத்தும் உண்டு. கீழேயுள்ள படத்தில் நாம் காண்பது இந்தியாவின் வேலைவாப்பின்மையின் *30* நாள் சராசரியின் நகர்வு. இது ஓரளவு நாட்டின் வளர்ச்சியையும் அனுமானிக்க உதவுகிறது. வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு கால இடைவெளியில் கணக்கிடப்படுகிறது. இந்தியாவில் இது ஆண்டுதோறும் அளவிடப்படுகிறது.

இந்தியாவின் *Unemployment Rate* (மூலம்:பம்பாய் பங்குச்சந்தை *bseindia. com*)

**உலகளாவிய நாடுகளின் வேலைவாய்ப்பின்மை விகிதம்**

*(மூலம்: https://tradingeconomics. com)*

*Unemployment Rate 22 Oct 2017*

| India | Urban | Rural |
|---|---|---|
| 5. 3% | 6. 7% | 4. 5% |

*(Source: https://unemploymentinindia. cmie. com)*

வேலைவாய்ப்பின்மை விகிதம் (த.நா.–புதுச்சேரி)
*(மூலம்: http://www. bseindia. com/)*

**வேலைவாய்ப்பின்மையின் உளவியல்**

வேலை வாய்ப்பின்மை என்பது சிக்கலான, பல பரிமாணங்களைக் கொண்டது. அது பல்வேறு காரணங்களால் ஏற்படும் வேலை இழப்பையும், போதிய திறமையும் தகுதியும் இருந்தும் வேலை கிடைக்கப் பெறாத நிலையையும் உள்ளடக்கியது. *Indian Journal of Health and Wellbeing* ல் பிரசுரிக்கப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையின்படி ஹிமாச்சல் பிரதேசத்தில், *200* ஆண்கள் மற்றும் *200* பெண்கள் கொண்ட மாதிரியின்மீது நடந்த ஆராய்ச்சியின் மாறுபாட்டெண் முடிவுகள் சில விடயங்களைத் தெளிவாகவே உணர்த்தின. அதில், வேலை இழந்தவர்கள் குறிப்பிடத்தக்க வகையில் அதிகப்படியான உளவியல் சார்ந்த இடர்ப்பாடுகளை அனுபவிக்கின்றனர் என்று முடிவினை முன்வைத்துள்ளனர். வேலை இழந்தவர்களின் உளவியல் சம்பந்தப்பட்ட பாதகமான விளைவுகள் கவலையில் தொடங்கி உயிரை மாய்த்துக்கொள்ளும் நிலை வரை செல்கிறது. இதேவிதமான ஆராய்ச்சி, பீகார் மாநிலத்திலும் *30* பணியிலிருக்கும் மற்றும் *30* வேலையிழந்த / வேலை தடம் மக்கள் மாதிரிகளில் நடத்தப்பட்டு, *Sinha Anxiety scale and Beck Depression Inventory* எனும் கவலையும் மன அழுத்தத்தையும் அளவிடுவதற்கான முறைகளின் மூலம் தங்களுடைய ஆராய்ச்சியின் வெளிப்பாடுகளை அறிவித்துள்ளனர். முறைகள் நுட்பத்தில் மாறுபட்டாலும் முடிவுகள் ஒரே மாதிரிகளாகத்தான் இருக்கின்றன.

*2007* டிசம்பரிலிருந்து அமெரிக்காவில் வேலை இழப்புகளால் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுகளைச் சந்தித்த அவதியுறுபவர்கள் நம்மைச் சுற்றி இருப்பதாகவும், அவர்களின் உளவியல் பாதிப்புகள் கவனிக்காமல் விடப்படக்கூடாது என்று பதிவிடுகின்றார் ஸ்காட்லாந்தின் *University of Stirling*ஐ சேர்ந்த டாக்டர். டேவிட். அவர் *50* ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தரவுகளை அவதானித்துள்ளார். அதன்படி *40%* மேற்பட்ட வேலையில்லாதவர்கள் உளவியல் பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர் என்றும், அது அவர்களுடைய வாழ்க்கைப் பாதையையே முற்றிலுமாக நிரந்தரமாகப் பாதிப்பதோடல்லாமல். முக்கியமாகச் சுயமரியாதை மற்றும் நம்பிக்கை இழப்பும், அதனால் ஏற்படும் தனிமைப்படுத்திக் கொள்ளலும், அதீத உணர்ச்சியாட்படுதலும், இவற்றின் சுழற்சியில் உழன்று கொண்டிருத்தல் மறுபடியும் வேலை கிடைக்கும்வரை தொடர்கிறது என்கிறார். அவர்களின் குடும்ப அங்கத்தினர்களையும் பாதிப்புக்குள்ளாக்குகிறது

என்கிறது பெரும்பாலான ஆராய்ச்சிகள். முக்கியமாகப் படிக்கும் வயதில் இருக்கும் பிள்ளைகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர் என்கிறார்.

இவ்வகை உளவியல் மாற்றம் உடலையும் பாதிப்புக்குள்ளாக்குகிறது. சிலர் உணவு உட்கொள்வதைத் தவிர்த்து விடுவதால் பலவீனமடைதலும், சிலர் மது அல்லது போதைக்குச் செல்வதும் இயற்கையிலேயே நடைபெற்று வாழ்வு சீர்குலைகிறது. வேறு சிலருக்கு முற்றிலும் எதிர்மறையாகத் தேவைக்கும் அதிகமாக உணவு உட்கொள்ளல் தூண்டப்பட்டு அதனால் இரத்த அழுத்தம், மாரடைப்பு போன்ற உடல் உபாதைகளால் அவதியுறும் நிலையும் ஏற்படுகிறது. மன அழுத்தம், தெளிவற்ற சிந்தனை, கவனச் சிதறல்கள், மற்றும் மூளை பாதிப்பினால் ஏற்படும் உடல் உபாதைகளும் ஏற்படுவதாக ஆராய்ச்சிகள் பதிவிடுகின்றன. *Duke University* ஆராய்ச்சியாளர்கள் *14,000* தொடர்ந்து ஆராய்ந்ததில் வேலை இழப்புக்கு உள்ளானவர்களுக்கு மாரடைப்பிற்கான சாத்தியக்கூறு பலமடங்கு அதிகரித்ததாகப் பதிவிடுகிறது. பொருளாதாரப் பின்னடைவுகளின் அல்லது மோசமான பொருளாதாரத்தின் விலை பண இழப்பீடுகளினால் மட்டும் அளவிடமுடியாது என்பதை நிறுவுகின்றது.

நீண்டுகொண்டே செல்லும் வேலை இழப்பின் உளவியல் சிக்கல் கடைசியாக, ஏற்கனவே கூறியது போல், தற்கொலைகளில் முடிகிறது. *2008*ம் ஆண்டின் உலகளாவிய நிலையில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவினால் உண்டான வேலையிழப்புகள் மட்டுமே *5,000* கூடுதல் தற்கொலைகளுக்கு வித்திட்டன என்கிறது *British Medical Journal.* பலரும் பேச முற்படாதது தொழில் முனைவதில் இருக்கும் சிக்கல்களும் அதன் தொடர் தோல்விகளும். இதனால் உண்டாகும் பாதிப்பு தொழில் முனையும் வர்க்கத்தையும் விட்டுவைப்பதில்லை. வேலை வாய்ப்பை இழக்கும் ஒருவருக்கு ஏற்படும் அதே உளவியல் சம்பந்தமான பிரச்சனைகள் இவர்களுக்கும் தொடர்கிறது. இந்த நிலை நீடிப்பது எவருக்கும் நன்மை பயக்காது.

**குறிப்பு: வேலை வாய்ப்பின்மையின் உளவியல் தாக்கத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளின் தரவுகள் கட்டண அடிப்படையிலேயே விலைகொடுத்து வாங்க வேண்டியுள்ளதால் கட்டுரையில் சேர்க்க இயலவில்லை.**



**மோசமான வேலை / வேலையின்மை**

*Australian National University¡ Center for mental health research¡ Dr. Leana Leach* கூறுகையில், மன ஆரோக்கியத்தைப் பொருத்தமட்டில் வேலை இழந்தோரின் நிலை பணியிலிருப்பவர்களைக் காட்டிலும் மோசமாகவே இருக்கிறது. மோசமான பணிச்சூழலில் வேலை செய்பவர்களின் மன ஆரோக்கியம் வேலையிழந்தவர்களின் மன ஆரோக்கியத்தைக் காட்டிலும் மிக மோசமாக இருக்கிறது. மோசமான வேலை என்பது, பணிச்சூழல், பணித்தரம், சகப் பணியாளர்கள், ஊதியம் மற்றும் பணிச்சுமைப் போன்ற புறக் காரணிகளாலும் அமைகிறது. [அன்டன் செகோ(வ்)வின் ஓர் அரசு குமாஸ்தாவின்

சாவு, நினைவில் வருவது இயற்கை.] இதனால் அறிவுறுத்தப்படுவது "ஒன்றுமில்லாததற்கு, ஏதோவொன்று மேல்" என்ற எண்ணம் தவறாக முடியும் என்று பதிவிடுகிறார்.

**சில அனுபவங்களின் பதிவு**

திரு. அந்தோணி, *P.G.* முடித்தக் கையுடன், கல்லூரியில் வேலை வாய்ப்பிற்கான ஏற்பாடுகள் நடக்காத நிலையில் சுயமான வேலைதேடல், தகுதி, உழைக்கும் வேட்கையும், பணமீட்ட வேண்டிய அவசியமும் இருந்தது. சில நிறுவனங்களில் அனுபவம் இல்லை என்பதால் நிராகரிப்பு, சில நிறுவனங்கள் நாங்கள் எதிர்பார்க்கும் தகுதியைவிட அதிகமாக இருக்கிறது என்று நிராகரித்தனர். இதற்குமுன் பட்டறிவு இல்லாததால் நகரம் அச்சுறுத்தியது. தங்க இடமில்லை. கடைசியாகப் புகலிடம் அளித்தது அரசு மருத்துவமனை. ஓரிரு நாட்களே தாங்க முடிந்தது. உணவு பொது குழாய்களின் தண்ணீரே. ஒருவழியாக இந்தியாவின் மாபெரும் கணினி நிறுவனத்தில் வேலை கிடைத்தது. இடைப்பட்ட நாட்களைப் பற்றி விவரிக்க மனமில்லை. ஆனால், இன்னும் ஒரு வாரம் நீடித்திருந்தால் நகரத்தில் தற்கொலை செய்து கொள்ள மானாவாரியாக இடங்கள் இருக்கின்றன என்று முடித்தார்.

திருவாளர் கிருஷ்ணன், இளைஞர்; ஏற்கனவே பிரபல தனியார் கல்லூரியில் விரிவுரையாளர். நல்ல திறமை; படித்தது அத்தனையும் அரசு பொறியியல் கல்லூரிகளில்; தனியார் கல்லூரிகளின் செயல்பாட்டில் விரக்தியடைந்து, கம்பெனிகளின் பக்கம் செல்ல நினைத்தார். பொருளாதாரம் ஒரு பிரச்சனை இல்லை. பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளை; பெற்றோர்கள் அப்போது அரசு பணியில்; திருமணம் செய்யாமல் இருப்போம் என முடிவெடுத்ததால், பெற்றோர்கள் இவரை வைத்து காப்பாற்றுவதில் எந்தச் சிரமமும் இல்லை; வேலை விட்டதும் ஐ.டி. நிறுவனங்களில் நுழைய தன்னைத் தயார்படுத்திக் கொண்டார்; பெங்களூரில் நண்பர்கள் வரவேற்றனர்; தாமசம் நட்புகளுடன்; ஒரு மாதம் கடந்தது; *over qualification* என்ற நிராகரிப்பே பெரும்பாலும்; தினமும் அறைத்தோழர்களின் விசாரிப்பு, பரிந்துரை; சில நாட்கள் காலையில் அவர்கள் புறப்பட்டு சென்றபின் வெறுமை; ஒரு நிலையில் அறையின் மின்விசிறித் தொங்க அழைப்பது போன்ற மனநிலை நரகம் சார் என்றார் தப்பித்தார்.

திரு. சுந்தரம், *48* வயது வரை மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனத்தில் டெக்னீசியன் பணி, நல்ல வருமானம், ஊக்கத்தொகை, இன்னபிற சலுகைகள்; ஆட்குறைப்பு; வேலையிழப்பு; சொந்த மாநிலம் திரும்பியது; செட்டில்மெண்ட் பணம் கரைதல்; நிரந்தர செலவுகளோடு குழந்தைகளின் கல்லூரி படிப்பு எனும் கூடுதல் சுமை; உறவுகளின் கேள்விகள்; மன உளைச்சல்; தனது திறமைக்கு மிகவும் தாழ்ந்த பணியேற்கவேண்டிய சூழல்; வாழ்க்கை நகர்கிறது.

பெண்களும் இவ்வித மன உளைச்சல், உடல் உபாதைகளை எதிர்கொள்கிறார்கள் என்றே ஆராய்ச்சிகள் பதிவிடுகின்றன. மாணவி பிரியா, தந்தை இல்லை; தாயாருக்கு உடல் நிலை மோசமாகியுள்ளது; சிறிது நிலம் உண்டு; விற்ற பணத்தில் வங்கிப் பணிக்கான பயிற்சிக்குச் சேர்ந்தார்; இப்போது வங்கி ஊழியர்; படிப்புக்கும் வேலைக்கும் சம்பந்தம் இல்லையென்ற நிலை மட்டுமே.

**முடிவாக**

வேலைவாய்ப்பின்மையின் உளவியல் பாதிப்பு மிகக் கவனத்துடன் கையாளப்பட வேண்டிய ஒன்று. வேலைவாய்ப்பின்மையின் தாக்கம், பொருளாதார அளவில் மட்டுமல்ல, உளவியல் பாதிப்பும், அதன் தொடர்ச்சியாக வரும் உடல் சார்ந்த பாதிப்புகளும் தனி ஒருவரை மட்டுமல்லாமல் குடும்பங்களையும், சமூகத்தையும், நாட்டையும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றன. இதைப் பல்வேறு தளங்களில், பல ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சிகளின் முடிவுகளில் நிறுவியுள்ளனர்.

முடிவாக, இத்தகையத் தவிர்க்க இயலாத காலகட்டத்தில், தனிமனிதர் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ளுதலினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து தற்காத்துக்கொள்ள தன் தொழில்சார்ந்த மக்களுடனும், உறவுகளுடனும் தொடர்ந்து தொடர்பிலிருப்பது அவசியம் எனவும், மாற்றுத் திறன்களை வளர்த்துக் கொள்வதும், அரசாங்கங்கள் நிலைமைக்கேற்ப தனிமனித முன்னேற்றத்திற்கான திட்டங் களையும், பொருளாதாரச் சீர்திருத்தங்களையும் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரைக்கின்றனர்.

---

e-mail : kumaresanmuruganandam@yahoo.com

# ஒரு குவளைப் பால்

மானுவேல் ரோஹாஸ்

**தமிழில் :** அமரந்த்தா



மானுவேல் ரோஹாஸ் (1896–1973) சிலே நாட்டைச் சேர்ந்தவர். ஆனால் அவர் பிறந்தது அர்ஜென்தினா தலைநகர் பொய்னோஸ் அயிரேஸ் நகரத்தில். இவர் செய்யாத வேலை என்று ஏதுமில்லை. ஆந்தேஸ் *(Andes)* மலைத் தொடரைக் கடந்து செல்லும் தொடர்வண்டிப் பாதை அமைக்கப்பட்ட போது அதில் கூலித் தொழிலாளியாகவும், வால்பராயிசோ கடற்கரையில் கப்பலில் பளுதூக்கும் கூலியாகவும், நாடகக் குழுவில் கட்டியங்காரனாகவும், செய்தித்தாள் விநியோகிப்பவராகவும், ஆசிரியராகவும் இவர் பற்பல பணிகளைச் செய்துள்ளார்.

1931 ஆம் ஆண்டு மானுவேல் சிலே பல்கலைக்கழகப் பதிப்பகத்தின் இயக்குனராக நியமிக்கப்பட்டார். 1957 ஆம் ஆண்டு இவர் இலக்கியத்திற்கான தேசிய விருதினைப் பெற்றார். லாஸ் ஏஞ்சல்ஸ் *(Los Angeles)* நகரிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலும் (1962) மிடில்பரி கல்லூரியிலும் (1959) பின்னர் ஓரேகான் பல்கலைக்கழகத்திலும் (1963) ஆசிரியராகப் பணியாற்றினார்.

இவர் இரண்டு சிறுகதைத் தொகுதிகளையும் ஒரு நாவலையும் வெளியிட்டுள்ளார். மானுவேலின் *'Hiji de ladron'* (திருடனின் மகன்) என்ற நாவல் தென்னமெரிக்காவில் பிறந்த கறுப்பினத்தவரின் எளிமையான கதை சொல்லும் பாணியை உடைத்தெறிந்த நாவல்களில் ஒன்று; அதுவே அவரது நாவல்களுள் சிறந்தது என்றும் கருதப் படுகிறது. 'குற்றவாளி' என்ற தலைப்பிலான சிறுகதைத் தொகுப்பில் 'ஒரு குவளைப் பால்' இடம் பெற்றுள்ளது.

ஆங்கில மொழியாக்கம்: ரொசாலீ தோரெஸ் ரியோசெகோ என்பவரது மொழிபெயர்ப்பை அடியொற்றி செமோர் மென்டன் பதிப்பித்தது.

கப்பல் முகப்பின் வலதுபுறத்தில் கம்பியின் கீழ் சாய்ந்து நின்றிருந்த கடலோடியைப் பார்த்தால் யாரையோ எதிர்பார்ப்பவன் போலத் தெரிந்தது. இடது கையில் எண்ணெய்ப் பிசுக்கேறிய வெள்ளைக் காகிதப் பொட்டலம். வலது கையில் புகைக் குழல்.

பாரம் ஏற்றிய வண்டிகளின் பின்னாலிருந்து மெலிந்த இளைஞன் ஒருவன் தோன்றினான். ஒரு கணம் கடலை வெறித்து விட்டுப் பின்பு கப்பல் துறை மேடையோரமாக அவன் கைகளை ஜேபிக்குள் விட்டவாறு நடப்பதைப் பார்த்தால் ஏதோ ஞாபகமாய் குழப்பத்தில் இருப்பவன் போலத் தோன்றினான்.

கப்பலின் முன் அவன் வந்தபோது கடலோடி அவனை ஆங்கிலத்தில் கூவி அழைத்தான். "இதோ, இங்கே பாரேன்!"

தலை தூக்கிப் பார்த்த இளைஞன் அவனுக்கு நடந்தபடியே ஆங்கிலத்தில் பதில் சொன்னான்.

"ஹலோ, என்ன செய்தி?"

"உனக்குப் பசிக்கிறதா?"

ஒருகணம் மௌனம். இளைஞன் ஏதோ யோசிப்பது போலத் தெரிந்தது. நிற்கப் போகிறவன்போல அடியெடுத்து வைத்தவன் பாதியில் நின்றான். ஆனால் கடலோடியைப் பார்த்து சுரத்தில்லாமல் புன்னகைத்தபடி பதில் சொன்னான்.

"இல்லை, பசியில்லை. நன்றி கடலோடியே!"

"அப்படியானால் போய்வா!"

புகைக் குழலை வெளியே எடுத்துக் காறி உமிழ்ந்துவிட்டு மறுபடி வாயில் வைத்துக்

கொண்ட கடலோடி, வேறெங்கோ வெறிக்கத் தொடங்கினான். கருணை வேண்டுபவனாக காட்சியளித்தமைக்காக வெட்கப்பட்ட இளைஞன், மனம் மாறி விடுவோமோ என்ற அச்சத்தில் அங்கிருந்து வேகமாக நடந்து செல்லத் தொடங்கினான்.

சற்று நேரத்தில் பொன்னிறத் தாடியும் நீலக் கண்களும் கொண்ட நாடோடி ஒருவன் கடலோடியின் முன்பு நடந்துபோனான். கிழிந்த ஆடைகளும் பெரிய அளவு சப்பாத்துகளும் அணிந்திருந்தான். அவனிடம் கடலோடி எந்த முகமனும் கூறாமல், உனக்குப் பசிக்கிறதா?' என்று கேட்டான்.

கடலோடியின் கையிலிருந்து பொட்டலத்தை ஆவல் மின்னும் கண்களால் வெறித்த நாடோடி, அவன் கேட்டு முடிக்கும் முன்பே அவசரமாக பதில் சொன்னான். 'ஆம் ஐயா, ரொம்பப் பசிக்கிறது.'

கடலோடி புன்னகைத்தான். பொட்டலம் பறந்து வந்து பசித்தவனின் ஆவலான கைகளில் விழுந்தது. நன்றி கூட சொல்லாமல் அவன் தரையில் அமர்ந்து வெதுவெதுப்பாக இருந்த பொட்டலத்தைத் திறந்தான். உள்ளிருந்த உணவைப் பார்த்து மகிழ்ச்சியில் கைகளைத் தேய்த்துக் கொண்டான். துறைமுகத்தில் திரியும் சோம்பேறிக்கு நன்றாக ஆங்கிலம் பேசத் தெரிய வேண்டியதில்லைதான். ஆனால் ஆங்கிலம் பேசுபவரிடம் உணவைக் கேட்டுப் பெறுமளவுக்கு அந்த மொழி தெரியாதிருப்பது மிகப்பெரிய குற்றமாகிவிடும்!

சற்றுமுன் அவ்விடத்திலிருந்த இளைஞன் அருகில்தான் இருந்தான். நடந்ததையெல்லாம் கவனித்தான்.

அவனுக்கும்கூட பசித்தது. அவன் சாப்பிட்டு மூன்று நாட்கள் சரியாக மூன்று நாட்கள் ஆகிவிட்டன. பணிவையும், அவமானத்தையும் விட அவனுக்குச் சுயகௌரவம் அதிகமிருந்தது. அதனால்தான் அவனால் சாப்பாட்டு நேரத்தில் இடைவழியில் நிற்க முடியவில்லை. கடலோடிகளின் தாராள குணத்தால் மீந்துபோன உணவும், மாமிசத் துண்டுகளும் கொண்ட பொட்டலம் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருக்க அவனால் முடிந்ததில்லை. எப்போதும் அப்படி முடியப் போவதுமில்லை. சற்றுமுன்பு நடந்ததுபோல் யாராவது எதையாவது கொடுக்க முன் வந்தாலும் அதை அழுத்தமாக மறுத்தான். மறுப்பதால் பசி மேலும் அதிகரிப்பதை அவன் உணர்ந்தே இருந்தான்.

கடந்த ஆறு நாட்களாக அவன் அந்தத் துறைமுகத்தின் சரக்கு மேடையிலும், அருகிலுள்ள பக்கவாட்டுத் தெருக்களிலும் அலைந்து கொண்டிருந்தான். பூந்தா ஆரெனாஸ் துறைமுகத்திலிருந்து அவனை ஏற்றிக்கொண்டு வந்த ஆங்கிலேயக் கப்பல் இங்கே இறக்கி விட்டுவிட்டுப் போய்விட்டது. அதற்கு முன்பு அவன் வேறொரு கப்பலில் கேப்டனுடைய உணவறை உதவியாளனாகப் பணியாற்றினான். ஒரு மாத காலம் நண்டு பிடிக்கும் ஆஸ்திரியப் படகில் உதவியாளனாகப் பணி செய்தவன் அங்கிருந்து வடக்கே செல்லும் முதல் கப்பலில் ஏறிப் போய்விட்டான்.

புறப்பட்ட மறுநாளே பிடிபட்ட அவனை, பாய்லர் அறையில் வேலை செய்யும்படி ஆணையிட்டார்கள். அடுத்த பெரிய துறைமுகத்தில் அவர்கள் இறக்கிவிட்ட இடத்தில்தான் இப்போதும் அவன் இருந்தான். சேருமிடம் குறிக்கப்படாத சரக்குப்போல நாதியற்றவனாக, கையில் சல்லிக்காசு இல்லாமல், வேலையில்லாமல் திரிந்து கொண்டிருந்தான்.

துறைமுகத்தில் கப்பல் நின்றிருந்தவரை எப்படியோ சாப்பாடு கிடைத்து வந்தது. ஆனால் அதன் பிறகு? துறைமுகத்தின் பின்புறத் தெருக்களுக்கு அப்பாலிருந்த பெரு நகரம் அவனைக் கவரவில்லை. எண்ணற்ற உணவு விடுதிகளும் மலிவான தங்கும் விடுதிகளும் அங்கே இருந்தன. கடல் அலைகள் உயர்ந்து தழுவாத இடம் அவனுக்கு காற்றும் வெளிச்சமும் இல்லாத சிறைபோலத் தோன்றியது. நேரான தெருக்களுக்கும், உயர்ந்த சுவர்களுக்கும் இடையே வாழும் மனிதர்கள் நகரத்தின் வாதனையூட்டிலும் பரபரப்பிலும், இரைச்சலிலும் திக்குமுக்காடி வாழ்ந்து மடிகிறார்கள்.

வலிமை வாய்ந்த கரம் மெல்லிய உலோகக் கம்பியை வளைத்துப் போடுவதுபோல் முழு அமைதியும், ஒழுங்கும் கொண்ட வாழ்வைப் புரட்டிப்போட்டது கடல். கடலின்மீது ஏற்பட்ட இனம் புரியாத ஈர்ப்பு அந்த இளைஞனை ஆட்டிப் படைத்தது. வயதில்

மிகவும் இளையவனாக இருந்தாலும் அவன் தென்னாப்பிரிக்கக் கடலோரமாக பலமுறை பல கப்பல்களில் பயணம் செய்திருக்கிறான். அப்போது அவன் செய்தது போன்ற வேலைகளில் ஒன்றுகூட நகரில் கிடையாது.

கப்பல் புறப்பட்ட பின்பும் இளைஞன் நடந்து கொண்டே இருந்தான். ஊர் போய்ச் சேரும் வரை வாழ்க்கையைத் தள்ள பற்றுக் கோடாக ஏதேனும் அகப்படாதா என்ற எதிர்பார்ப்பில் அவன் இருந்தான். ஆனால் அப்படி எதுவும் அகப்படவில்லை. துறைமுகத்தில் போக்குவரத்து அதிகமில்லை. வந்துபோன ஒரு சில கப்பல்களில் வேலை இருந்தாலும் இவனை யாரும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளவில்லை.

சரக்கு மேடைகளில் ஒரே நாடோடிகளின் கூட்டம். கப்பல் மாறுவதற்காகவோ அல்லது இவனைப்போல தவறிழைத்துவிட்டு தண்டனையிலிருந்து தப்புவதற்காகவோ வெளியேறி வந்த வேலையில்லாத கடலோடிகள், சும்மாயிருப்பதில் சுகம் கண்ட சோம்பேறிகள். எல்லோரும் எப்படிச் சாப்பிடுகிறார்களோ கடவுளுக்கே வெளிச்சம் திருடுகிறார்களா பிச்சையெடுக்கிறார்களா? அழுக்கடைந்த ஜபமாலை மணிகளைப்போல நாட்களை எண்ணியபடி, எந்த எதிர்பாராத நிகழ்வுகளுக்காக காத்திருக்கிறார்களோ? அல்லது அவர்கள் எதையுமே எதிர்பார்ப்பதில்லையா? அவர்களெல்லாம் முன்பின் தெரியாத நாடுகளிலிருந்தும் அதிசயமான இனங்களிலிருந்தும் வந்திருப்பது நேருக்கு நேராக அங்கே பார்க்கும்போது தான் தெரிந்தது.

***

இனி பொறுக்க முடியாது என்று முடிவாகத் தெரிந்தபின் மறுநாளாவது எப்படியும் உணவைப் பெறும் வழியைக் கண்டுபிடிப்பதென்று முடிவெடுத்தான் இளைஞன்.

நடந்து கொண்டிருந்தவன் சரக்கு மேடையருகே ஒரு கப்பல் நிற்பதைப் பார்த்தான். முதல் நாள் இரவில் துறைமுகம் வந்தடைந்த அந்தக் கப்பலிலிருந்து கோதுமை மூட்டைகளை இறக்கிக் கொண்டிருந்தார்கள். கப்பலின் சரக்குத் தளத்திலிருந்து கனமான சரக்கு மூட்டைகளைத் தோளில் சுமந்தபடி வரிசையாகப் பல ஆட்கள் கப்பல் தளத்தில் நுழைவாயிலை நோக்கி நடப்பதைப் பார்த்தான். அங்கே கப்பலின் சுமையாட்கள் மூட்டைகளை வாங்கிக் கொண்டார்கள்.

மேற்பார்வையாளரை அணுகி வேலை கேட்குமளவுக்கு தைரியம் வரும் வரை அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். அவர் அனுமதித்தவுடன் உற்சாகத்துடன் பணியாளர்களின் நீண்ட வரிசையில் சேர்ந்து கொண்டான்.

நாளின் முதல் பாதி நேரம்வரை அவன் நன்றாக வேலை செய்தான். ஆனால் அதன் பிறகு அவனுக்குச் சோர்வாகவும் தலை சுற்றுவது போலவும் இருந்தது. தோளில் சுமையோடு பலகை மீது தள்ளாடியபடி நடந்தான். காலடியில் கனமான கப்பல்துறை மேடைக்கும், கப்பலின் பக்கவாட்டுச் சுவருக்கும் இடையே தென்பட்ட பிளவின் வழியே கடல்நீர் தெரிந்தது. எண்ணெய் கசிவும் குப்பையுமாய் ஓசையின்றி கடல்நீர் கப்பலில் மோதியபடி இருந்தது.

உணவுக்கான சிறு இடைவேளையின்போது சிலபேர் சாப்பிட வெளியே போனார்கள். சிலர் கையோடு கொண்டு வந்திருந்ததைச் சாப்பிட்டார்கள். இவன் மட்டும் பசியை மறைத்துக்கொண்டு ஓய்வாக நீட்டிப் படுத்தான்.

அன்றைய வேலையை முடிக்கும்போது முற்றிலும் களைத்துப்போய் வியர்வையில் தெப்பமாய் நனைந்து, இனி ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலையை எட்டியிருந்தான். கூலியாட்களெல்லாம் கிளம்பிப் போனபோது இவன் மட்டும் மூட்டைகளின் மேல் போய் உட்கார்ந்தான். கடைசி ஆளும் போனபிறகு எழுந்து மேற்பார்வையாளரை அணுகினான். குழப்பத்தில் வாய் குளற தன் நிலைமையைப் பற்றி எதுவும் சொல்லாமல், உடனடியாகக் கூலி கிடைக்குமா, அல்லது கூலியில் சிறிது முன் பணம் கிடைக்குமா என்று கேட்டான்.

வேலையின் முடிவில் கூலி கொடுப்பதுதான் வழக்கம் என்றும், கப்பலில் சரக்கு முழுவதையும் ஏற்றுவதற்கு மறுநாளும் வேலை செய்தாக வேண்டும் என்றும் கண்காணிப்பாளர் பதில் சொன்னார். இன்னொரு நாளா? முன்பணமாக ஒரு சென்ட் கூட தரமாட்டார்களாம்.

“ஆனால் உனக்கு வேண்டுமானால் 40 சென்ட்

கடன் தருகிறேன். என்னிடம் அவ்வளவுதான் இருக்கிறது" என்றார் கண்காணிப்பாளர்.

உதவி செய்ய முன்வந்ததற்கு நன்றி சொல்லும் வகையில் வலி நிறைந்த புன்னகையோடு இளைஞன் அவ்விடத்தை விட்டு அகன்றான்.

தாளமுடியாத கசப்புணர்வு அவனைப் பற்றிக்கொண்டது. அவனுக்கு ஒரே பசி பசி பசி! அகன்ற கனமான சாட்டையால் அடிபட்டவன்போல பசி அவனை இரண்டாக மடியச் செய்தது. சுற்றிலும் தென்பட்ட அனைத்தும் நீலநிறத்தில் குழம்பித்தெரிந்தபோது, அவன் குடிகாரனைப்போல தட்டுத் தடுமாறி நடந்தான். புலம்பவோ, கத்தவோகூட முடியாது போலிருந்தது. அந்தளவுக்கு துன்பம் ஆழமாக, சோர்வூட்டுவதாக இருந்தது. அது வெறும் வலியல்ல. ஆறாத்துயர்... அதுவே முடிவு... ஏதோவொரு பெருஞ்சுமை தன்னை அழுத்துவதுபோலத் தோன்றியது அவனுக்கு.

திடீரென்று உள்ளெல்லாம் பற்றி எரிய அவன் அப்படியே நின்றான். பலங்கொண்டு வளைக்கப்படும் இரும்புக் கம்பியைப்போல அவன் இரண்டாக மடிந்தான். கீழே விழுந்துவிடுவோம் என்று அவனுக்கே தோன்றிவிட்டது. அந்தக் கணத்தில் கண்முன்னே ஒரு ஜன்னல் திறந்தாற்போலிருந்தது. அவனுடைய வீடு... அம்மா, சகோதர சகோதரிகள் என அவனது அன்புக்கும், மகிழ்ச்சிக்கும் உரிய அனைத்தும் அங்கே தெரிந்தன. சோர்வினால் மூடிய அவன் கண்களில் இக்காட்சி தோன்றி மறைந்தது... மெல்ல மெல்ல மயக்கம் கலைந்து அவன் நிமிர்ந்தபோது வயிற்றின் எரிச்சலும் மட்டுப்பட்டது. கடைசியில் அவன் நேராக நிமிர்ந்து ஆழமாக மூச்சை இழுத்து விட்டான். இப்படியே இன்னும் ஒரு மணி நேரம் போனால் அப்படியே மயங்கித் தரையில் விழுந்துவிடுவான்.

தலைசுற்றி விழுவதிலிருந்து தப்பிப்பவன் போல அவன் வேகமாக நடக்கத் தொடங்கினான். நடக்கும்போதே எங்கேயாவது போய் காசு கொடுக்காமல் சாப்பிட வேண்டியது தான் என்று முடிவெடுத்தான். அவமதித்தாலும், அடித்தாலும் சிறைக்கே அனுப்பினாலும் கூட சரிதான் இப்போது சாப்பிடுவதுதான் முக்கியம். சாப்பாடு சாப்பாடு என்று நூறு முறை மனதிற்குள் சொல்லிக்கொண்டே போனதில் அந்தச் சொல்லே பொருளற்றதாகி விட்டது. மண்டை சூடேறி காலியாகிப் போயிற்று.

ஓடிப்போகும் எண்ணம் அவனுக்கில்லை. கடைக்காரரிடம் அவன் உள்ளதைச் சொல்லிவிடுவான். "ஐயா, எனக்கு ஒரே பசி பசி பசி... என்னிடம் காசுமில்லை... என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்... "

ஒருவழியாக முதலில் தென்பட்ட தெருவினுள் வந்து சேர்ந்தான். அங்கிருந்த பால் அங்காடியைப் பார்த்தான். சுத்தமான சிறிய அங்காடி காற்றோட்டமாக இருந்தது. மேசைகளின்மீது பளிங்குக் கல் பரவியிருந்தது. தடுப்பு மேடையின் பின்னாலிருந்த பொன்னிறக் கூந்தல் கொண்ட பெண்மணி வெள்ளை வெளேரென்ற மேலங்கி அணிந்திருந்தாள்.

இந்த இடத்தைத்தான் அவன் தேர்வு செய்தான். அங்கே அதிக நடமாட்டமில்லை. சரக்கு இறக்கும் இடத்தருகே உள்ள மலிவான பொறித்த உணவுக் கூடங்களில் போய் சாப்பிட்டிருக்கலாம் தான். ஆனால் அங்கெல்லாம் சூதாடிகளும், குடிகாரர்களும் நிரம்பியிருந்தார்கள்.

ஆனால் இந்தப் பால் அங்காடியில் ஒரே ஒரு வாடிக்கையாளர் தான். ஒடுங்கிய தோற்றத்தோடு மூக்குக் கண்ணாடியணிந்த கிழவர் ஒருவர் அங்கே செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்தார். நாற்காலியோடு ஒட்டிக்கொண்டு விட்டாற்போல அசையாமல் செய்தித்தாளுக்குள் மூக்கை நுழைத்துக்கொண்டிருந்தார் கிழவர். அவர் முன்னால் மேசையின் மீது பாதி காலியான பால் குவளை இருந்தது. தாழ்வாரத்தில் முன்னும் பின்னும் நடந்தபடி கிழவர் கிளம்புவதற்காகக் காத்திருந்தான். மெல்ல வயிறு எரியும் உணர்வு மறுபடி அதிகரிக்கலாயிற்று. ஐந்து, பத்து, பதினைந்து நிமிடம் வரை காத்திருந்தான். சோர்ந்து போய் கதவோரமாக நின்று கிழவரைக் கொன்றுவிடுவது போலப் பார்த்தான்.

இவ்வளவு ஆர்வமாக இந்தச் சாத்தான் என்னத்தைப் படிக்கிறான்? கிழவன் தனக்கு எதிரி என்று கூட அவன் கற்பனை செய்தான். தான் எண்ணி வந்தது என்னவென்று தெரிந்து கொண்டு அதை முறியடிக்க வந்தவன் என்றெண்ணி கிழவனை எதிரியாகக் கற்பனை செய்து கொண்டான்.

என்ன இழவை அவன் இவ்வளவு ஆர்வமாகப் படித்துக் கொண்டிருக்கிறான்?

அவரே எழுந்து ஓடிப்போகும்படி அவமரியாதையாக எதையாவது சொல்லி விடலாமா என்று கூட நினைத்தான். குறைந்த காசுக்குப் பால் வாங்கிவிட்டு ஒரு மணி நேரம் உட்கார்ந்து படிக்க உரிமையில்லை என்று உறைக்கிற மாதிரி ஒரு வார்த்தை... ஒரு வசைச்சொல்...

ஒரு வழியாக அந்த வாடிக்கையாளர் படித்துக் கொண்டிருந்ததை முடித்துவிட்டார் அல்லது நிறுத்திவிட்டார். மீதியிருந்த பாலை ஒரே விழுங்கில் குடித்து விட்டு மெதுவாக எழுந்து காசைக் கொடுத்துவிட்டு கதவை நோக்கி நடந்தார். வெளியிலும் போய்விட்டார். தளர்ந்துபோன தோள்களுடன் அவரது சிறிய உருவத்தைப் பார்த்தால் தச்சர் அல்லது வர்ணமடிப்பவர் போலத் தென்பட்டார்.

வெளியே வந்ததும் வராததுமாகக் கிழவர் மூக்குகண்ணாடியைச் சரிசெய்து கொண்டு மறுபடி செய்தித்தாளில் மூக்கை நுழைத்துக்கொண்டு மெதுவாக நடக்கத் தொடங்கினார். பத்துத் தப்படிக்கு ஒருமுறை நின்று கூர்ந்து கூர்ந்து தாளை வாசித்தார்.

கிழவர் சிறிது தொலைவு போகும்வரை காத்திருந்துவிட்டு இளைஞன் உள்ளே நுழைந்தான். ஒரு கணம் எங்கே போய் உட்காருவதென்று தெரியாமல் கதவு அருகிலேயே தயங்கி நின்றான். கடைசியில் ஒரு மேசையைத் தேர்ந்தெடுத்து, அதில் போய் உட்காரச் சென்றவன் மனம் மாறி திரும்பி வந்து, வழியில் இருந்த நாற்காலி தடுக்கி கீழே விழப்போனான். ஒரு மூலையில் இருந்த நாற்காலியில் போய் உட்கார்ந்தான்.

கடைப் பெண்மணி மேசையருகே வந்து துணியால் மேசையைத் துடைத்துவிட்டு ஸ்பெயின் நாட்டவரின் தொனியில் மென்மையாகக் கேட்டாள்:

“என்ன சாப்பிடுகிறீர்கள்?”

“ஒரு குவளைப் பால்” என்று நிமிர்ந்து பார்க்காமலே பதில் சொன்னான்.

“பெரிய குவளையா?”

“ஆமாம். பெரிய குவளை... ”

“அது மட்டுந்தானா?”

“கேக் இருக்கிறதா?”

“இல்லை. வெனிலா பிஸ்கெட்”

“சரி, வெனிலா பிஸ்கெட். ”

பெண்மணி திரும்பிச் சென்றாள். குளிருகிற நேரத்தில் சூடான பானத்தை அருந்தப் போகிறவன்போல இளைஞன் குதூகலத்துடன் கைகளைக் கால் முட்டிகளின்மேல் தேய்த்துவிட்டுக் கொண்டான்.

பெரிய குவளையில் பாலும், சிறிய தட்டில் வெனிலா பிஸ்கெட்டுகளும் எடுத்துக்கொண்டு வந்த பெண் அவற்றை அவன் முன்னால் வைத்துவிட்டு மறுபடி மேடைக்குப் பின்புறம் தனது இடத்திற்குச் சென்று விட்டாள்.

ஒரே விழுங்கில் பாலைக் குடித்துவிட்டு, பிறகு வெனிலா பிஸ்கெட்டுகளைச் சாப்பிட வேண்டுமென்றுதான் முதலில் அவன் நினைத்தான். ஆனால் உடனே மனதை மாற்றிக் கொண்டு விட்டான். அந்தப் பெண்ணின் கண்கள் ஆர்வத்துடன் தன்னைக் கவனமாகப் பார்ப்பதை அவனால் உணர முடிந்தது. அவளை நிமிர்ந்து பார்க்கும் தைரியம் அவனுக்கில்லை. அப்படிப் பார்த்தால் தனது இப்போதைய நிலையையும் வெட்கக்கேடான நினைப்பையும்கூட அவள் ஊகித்துவிடக்கூடும் என்று நினைத்தான். அப்படி நேர்ந்தால் கேட்டு வரவழைத்த எதையும் தொடாமல் எழுந்துபோக வேண்டிவரும்.

மெதுவாக ஒரு வெனிலா பிஸ்கெட்டைக் கையிலெடுத்தான். ஒரு வாய் பாலைக் குடித்துவிட்டு பிஸ்கெட்டை ஒரு கடி கடித்தான். மறுபடி திடீரென்று ஆதரவற்ற நிலைமையின் கனம் அவனுக்கு உறைத்தது. உள்ளுக்குள் எதுவோ இறுகிப்போய் மேலெழும்பி தொண்டையை அடைப்பது போலிருந்தது. பெரிதாக வாய்விட்டு அழப்போகிறோம் என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. தொண்டையில் எரியும் அந்த முடிச்சு இறுகிக்கொண்டே வந்தது. அந்தப் பெண்மணி தன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்று தெரிந்தும், அவனால் தனது உணர்வைக் கட்டுப்படுத்தவோ மடைதிறந்தாற்போல்

பொங்கிவரும் கண்ணீருக்கு அணைபோட இயலவில்லை. ஒரே போராட்டமாகி விட்டது, வேகவேகமாக விழுங்கிக்கொண்டே அவன் போராடினான். சாப்பிட விடாமல் அழுகை தடுத்துவிடும் என்று அவன் பயந்துவிட்டான் போலும்... பாலையும், பிஸ்கெட்டுகளையும் சாப்பிட்டு முடித்தவுடன் கண்கள் குளமாகி மூக்கு வழியாக சூடாக ஏதோ உருண்டு குவளைக்குள் விழுந்தது. பயங்கரமான விம்மல் புறப்பட்டு அவன் உடம்பு முழுவதையும் உலுக்கிப் போட்டது.

தலையைக் கைகளால் பிடித்துக்கொண்டு நெடுநேரம் அவன் அழுதான். கோபத்திலும், துக்கத்திலும் குமுறிக் குமுறி முன்னெப்போதும் அவன் இதுபோல் அழுததில்லை.


ஓவியம்: ஜே.கே.

குனிந்து உட்கார்ந்து அழுது கொண்டிருந்தவன், ஒரு பெண்ணின் கரம் சோர்ந்து போய்விட்ட தன்னுடைய தலையை வருடுவதை உணர்ந்தான். ஸ்பானிய நாட்டவருக்கே உரிய மென்மையான உச்சரிப்பில் ஒரு குரல் தன்னிடம், “அழு மகனே, அழு... ” என்று சொல்வதையும் கேட்டான்.

மீண்டும் கண்கள் குளமாக முன்னைவிட வேகமாகக் குமுறி அழுதான். ஆனால் இம்முறை அவன் தாளாத துயரத்தில் அழவில்லை. அவன் மகிழ்ச்சியில் அழுதான். தன்னுள் பெரும் புத்துணர்வு நிறைவதையும், சற்று முன்பு தொண்டையை நெறித்த எரியும் உணர்வு மெல்ல அணைந்து போவதையும் உணர்ந்தான். தெளிந்த நீரில் கழுவிய கண்ணாடிக் குவளையைப்போல் அழ அழ தனது உயிரும், உணர்வுகளும் தூய்மையானதைப்போன்ற உணர்வு அவனுக்கு உண்டானது. முந்தைய நாட்களின் தெளிவையும், உறுதியையும் மீட்டுத் தந்தது.

அழுகை நின்றதும், நிம்மதியுடன் கைக்குட்டையால் கண்களையும், முகத்தையும் துடைத்துக் கொண்டான். தலையைத் தூக்கி அந்தப் பெண்மணியைப் பார்த்தான். ஆனால் அவள் அவனைப் பார்க்காமல் தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அகன்ற வெளியில் எங்கோ நெடுந்தொலைவில் வெறித்துக் கொண்டிருந்தவளின் முகம் சோகமாக இருந்தது.

அவன் முன்பு மேசைமீது இன்னொரு குவளை பாலும் வெனிலா பிஸ்கெட்டுகள் குவித்து வைத்திருந்த தட்டும் இருந்தன. எதைப் பற்றியும் நினைக்காமல், எதுவுமே நடவாததுபோல் அவன் மெதுவாகச் சாப்பிட்டான். வீட்டில் இருப்பது போலும், மேடைக்குப் பின்னே நிற்கும் பெண்மணி தனது அம்மா என்றும் நினைத்துக் கொண்டான் போலும்...

சாப்பிட்டு முடித்தபோது பொழுது இருட்டிவிட்டது. கடைக்கு மின்சார விளக்கு ஒளியூட்டியது. சிறிது நேரம்வரை போகும்போது அந்தப் பெண்ணிடம் என்ன சொல்வது என்று யோசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். சொல்வதற்குப் பொருத்தமான எதையும் அவனால் யோசிக்க இயலவில்லை.

கடைசியில் எழுந்து போகும்போது தயக்கமின்றி, “நன்றி அம்மா. வணக்கம்” என்றான் அவளிடம். பதிலுக்கு அவளும், “போய் வா மகனே” என்றாள்.

அவன் வெளியேறிச் சென்றான். அழுது சூடேறிப் போயிருந்தவன் முகத்தைக் கடற்காற்று குளிர்வித்தது. சிறிது நேரம் இலக்கின்றி நடந்தவன், சரக்கு மேடையை நோக்கிச் செல்லும் தெருவில் நடந்தான். பெரிய நட்சத்திரங்கள் மினுங்கும் வானம் இரவை அற்புதமானதாக்கியது.

பொன்னிற முடிகொண்ட பெண்மணி தன்னை மிகுந்த கருணையுடன் நடத்தியதைப் பற்றி யோசித்தான். பணம் கிடைத்தவுடன் அவளுடைய பாக்கியை செலுத்துவதோடு, தகுந்த முறையில் அவளுக்கு வெகுமதியும் அளிக்க முடிவு செய்தான். ஆனால் முகத்தின் எரிச்சல் மாறியதும் அந்த நன்றியுணர்வு சுவடின்றி மறைந்து போனது! எத்தனையோ கடந்தகால நினைவுகளின் மடிப்புகளில் இந்த சமீபத்திய நிகழ்வு பற்றிய நினைவு மெல்ல அமிழ்ந்து போனது.

தாழ்ந்த குரலில் எதையோ பாடிக் கொண்டிருப்பதை அறிந்து திடீரென்று அவன் ஆச்சரியப்பட்டான். நிச்சயமான உணர்வோடு மகிழ்வோடு திடமாக நிமிர்ந்து நடைபோடத் தொடங்கினான்.

கரையருகே மேலும், கீழும் நடந்தபோது அவனது நடையில் ஒரு துள்ளல் இருந்தது. கலைந்து போய்விட்டிருந்த நெஞ்சுரம் மீண்டு உறுதிப்பட்டதில் முற்றிலும் புதிய மனிதனாக உணர்ந்தான்.

மரத்துப்போன உணர்வு கால்களைப் பற்றி மேலேறியபோது, சோர்வு மீதூற முரட்டுக் கோணிச் சாக்குக் குவியலின்மேல் அவன் உட்கார்ந்தான். கடலைத் திரும்பிப் பார்த்தான். கப்பல்துறை மேடையிலும், கப்பல்களிலும் மினுங்கிய விளக்குகளின் வெளிச்சம் செம்பொன்னிறக் குமிழ்களாகக் கடல் நீரில் மெல்லப் பரவிக் கலைந்தன. மல்லாந்து படுத்துக்கொண்டு நீண்ட நேரம் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். எதைப் பற்றியும் நினைக்கவோ, பாடவோ, பேசவோ அவன் விரும்பவில்லை. உயிரோடிருப்பது தெரிகிறது அது போதும்... முகத்தைத் திருப்பிக் கடலைப் பார்த்தவாறு அவன் உறங்கிப்போனான்.

e-mail : amarantha1960@gmail.com

# எங்கள் ரகசியம்

இசபெல் அயந்தே

**தமிழில் :** அமரந்த்தா

புகழ்வாய்ந்த இந்த எழுத்தாளர் சிலே நாட்டில் பிறந்தவர். ஆனால் புலம் பெயர்ந்து வேறு நாடுகளில் வசிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானவர்.

சிலே நாட்டில் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்ட்ட குடியரசுத் தலைவர் சால்வதோர் அயந்தே 1970 ஆம் ஆண்டு நவம்பர் 3 ஆம் தேதி பதவி ஏற்றார். வங்கிகள், பெரும் தொழில் நிறுவனங்கள், தாமிரச் சுரங்கங்கள், அறுபது லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் இவையாவும் அயந்தே அரசினால் நாட்டுடமை ஆக்கப்பட்டதால், "மார்க்ஸியவாதிகளிடம் இருக்கும் அதிகாரத்தை விடவும் அபாயகரமானது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க்ஸியவாதிகளிடம் இருக்கும் அதிகாரம்" என்று சிஐஏ முடிவு கட்டியது.



சிலே நாட்டு ராணுவ அதிகாரிகளில் 'விசுவாசமான' சிலரின் உதவியோடு குடியரசுத் தலைவர் அயந்தேவை அதிபர் மாளிகையில் வைத்தே 1973 செப்டம்பர் 11 அன்று சி.ஐ.ஏ. படுகொலை செய்தது. புதிய காலனிகளாக உருமாறிய வளரும் நாடுகளின் வட அமெரிக்க எதிர்ப்பு 'தொற்றுநோய் போலப் பரவிவிடும்' என்று 'பயந்துபோய்' நாட்டின் குடியரசுத் தலைவரையும், அவரது ஆதரவாளர்களையும், பல்லாயிரக்கணக்கான மக்களையும் படுகொலை செய்துவிட்டு பினோசெத் என்ற வெறி பிடித்த மிருகத்தின் தலைமையில் ராணுவ சர்வாதிகாரத்தை நிறுவியது. 'கம்யூனிச ஆதரவாளர்கள்' என்று காரணம் காட்டி அயந்தே அரசின் ஆதரவாளர்களான பல்லாயிரம் இளைஞர்களை கொடூர சித்திரவதைக்கு ஆளாக்கியது. அவற்றிலிருந்து உயிரோடு மீண்டவர்கள் லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவற்றில் தஞ்சம் புகுந்தார்கள்.

இந்தக் கதையின் ஆசிரியை இசபெல் அயந்தேவின் நிலையும் அதுதான். வெனிசுவேலாவில் தஞ்சம் புகுந்து கடினமான வாழ்நிலையில் கழித்த நாட்களை அவர் தனது படைப்புகளில் விவரித்திருக்கிறார். இவரைப் போலவே சித்திரவதையும், அவமதிப்பும் எத்தனையோ பேரின் நினைவில் ஆழப்பதிந்து, அன்றாடம் பயத்தையும், விரக்தியையும் ஏற்படுத்தியிருக்கின்றன. அண்மையில், பினோசெத் மீதான விசாரணை ஒரு வழியாக நடந்தேறியபோது, 'எனக்கு வயதாகி விட்டது. இப்போது எனக்கு எதையும் சொல்ல இயலாது, என்று அவர் அப்பாவிபோல நடித்ததை வாசகர்களில் சிலர் தொலைக்காட்சியில் கண்டிருக்கலாம், செய்தித்தாளில் படித்திருக்கலாம்!

**இசபெல் அயந்தே**

*1. The House of Spirits ((1982) 2. of Love and shadows (1984) 3. Eva Luna (1987) 4. Paula (1994) 5. Daughter of Fortune (1999) 6. City of Beasts (2002)7. Portrait in sepia 8. Ire's of My soul (2006) 9. My invented Country (2003) 10. Zorro (2005) 11. The sum of our days (2007) 12. Maya's Note book (2011) 13. In the Midst of Winter (2017)* ஆகிய நூல்களின் ஆசிரியர்.

**உ**டல் முழுவதையும் வருட விட்டவாறு அசையாமல் கிடந்தாள் அவள். முதுகெலும்பு உட்குழைந்த இடுப்புப் பகுதியில் வேர்வைத் துளிகள் அரும்பியிருந்தன. உடலிலிருந்து தீய்ந்த சர்க்கரைப் பாகின் மணம் வீசியது. ஒரே ஒரு மெல்லிய ஓசை எழுந்தாலும் அது எப்படியோ ஞாபகத்தினுள் புகுந்து இந்த எளிய மனிதன் அருகிருக்கும் இக்கணத்தை நாசமாக்கி தூள் தூளாக்கி விடக்கூடும் என்று அவள் அஞ்சினாள். பரிபூரண அமைதியில் கிடந்தாள்.

அன்று காலையில் தான் எதேச்சையாகச் சந்தித்தாள். கடந்த கால நினைவுகள் ஏதுமற்ற மற்றொரு மனிதன். கோதுமை நிறக் கூந்தலையும், வெயில் கண்டறிய தோலையும், குறத்தி வளையல்களின் ஓசையையும் கண்டு அவள் பால் ஈர்க்கப்பட்டவன். தெருவில் இலக்கின்றி நடந்தபடி அவளுடன்

வானிலையையும், போக்குவரத்து நெரிசலையும் பற்றிப் பேசத் தொடங்கினான். இந்த அந்நிய நாட்டில் வாழும் சொந்த நாட்டு மக்களில் பலரைப்போல அவனிடமும் அந்தச் செயற்கையான தன்னம்பிக்கையைக் கண்டாள். வருத்தமும் கோபமுமற்ற, குற்றவுணர்ச்சியற்ற, பனிபோன்ற தூய்மையுடன் புத்தகக் கடைகளிலும், பூங்காக்களிலும் அவளுடன் திரிந்தபடி அன்றைய பொழுதை அவன் கழித்தான். இந்தச் சந்திப்பைக் கொண்டாடும் வகையில் காபியைச் சுவைத்தபடிப் பழைய நினைவுகளை அசைபோட்டான். பதினான்கு வயதில் ஒரே நகரத்தின் ஒரே பகுதியில் ஒன்றாக வளர்ந்ததை நினைவிருக்கிறதா? காலணிகளைக் கொளகொளக்கச் செய்யும் பனி இறங்கும் குளிர்காலங்கள், மெழுகெண்ணை அடுப்புகள், பீச் மரங்கள் பூக்கும் கோடைக்காலங்கள்... இப்போது இவர்கள் அந்நாட்டிற்குச் செல்வது தடை செய்யப்பட்டுவிட்டது... ஒருவேளை தனிமை உணர்வு மேலிட்டதோ? அல்லது எந்தப் பிரச்சனையுமின்றி கலவியில் தன்னை மறக்கும் வாய்ப்பென்று கருதினாளோ? என்ன காரணமோ பொழுது சாயும் வேளையில் இனிமேலும் நடப்பதற்கு எந்தச் சாக்குமில்லை என்றானபோது அவன் கையைப் பற்றி தன் வீட்டுக்கு அழைத்துப் போய்விட்டாள்.

குப்பைத் தொட்டிகள் நிறைந்த சந்தில், அழுக்குப்பிடித்த மஞ்சள்நிற கட்டடம் ஒன்றில் மற்ற புலம் பெயர்ந்த மக்களுடன் தான் அவளும் தங்கியிருந்தாள். சின்னஞ்சிறிய அறை. கோடுபோட்ட போர்வையுடன் மெத்தை தரையில் விரித்திருந்தது. செங்கல் அடுக்கி மேலே அட்டைகளை வைத்து உருவாக்கிய அலமாரியில் புத்தகங்கள், சுவரொட்டிகள், நாற்காலியின் மேல் உடுப்புக்கள். மூலையில் ஒரு சிறு பெட்டி. மகிழ்வூட்டும் ஆவலுள்ள சிறு பெண்ணைப்போல எந்த சம்பிரதாயமும் இன்றி அவள் உடைகளைக் களைந்தாள்.

அவனும் அவளை மகிழ்விக்க முனைந்தான். அவளுடலின் மேடு பள்ளங்களில் ஏறி இறங்கி, ரகசிய வழிகளையெல்லாம் கடந்து வந்தான். போர்வை மடிப்புகளின் மேல் குழைந்து கிடந்த அவளை மென்மையான களிமண்ணைப்போல் பிசைந்து தன் வசமாக்கியபோது, அவள் அவனுக்காகத் திறந்து கொடுத்தாள். அப்போது அவன் மௌனமாக, ஓசைப்படாமல் விலகினான். அவள் சுதாரித்துக் கொண்டாள். அவனை நாடிச் சென்று வயிற்றின்மீது தலைவைத்து வெட்கப்படுபவள் போல முகத்தை மறைத்து செல்லங்கொஞ்சி நாவால் நக்கிக் கொடுத்து உணர்வுகளைத் தூண்டிவிட்டாள். அவனும் சற்று நேரம் கண்களை மூடி அவள் செய்தவற்றை அனுபவித்துத் தன்னை இழக்க முயன்றான். ஆனால் துயரமோ வெட்கமோ தோற்கடித்தபோது அவன் அவளைத் தள்ளி விட்டான்.

இருவரும் மற்றொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்கள். இப்போது எந்தச் சிக்கலுமில்லை. பகலில் அவர்களை ஒன்றிணைத்த அவசர எதிர்பார்ப்பு காணாமல் போய்விட்டது. இப்போது மெத்தைமேல் எளிதில் உணர்ச்சிக்கு இரையாகும் இரண்டு பேர்... எந்த ஞாபகமுமின்றி பேசப்படாத சொற்கள் உண்டாக்கிய குரூரமான வெற்றிடத்தில் மிதந்து கொண்டிருந்தார்கள். காலையில் சந்தித்தபோது அவர்களிடையே இயல்புக்கு மாறான எந்த எதிர்ப்பார்ப்புமில்லை. எந்தச் சிறப்புத் திட்டமுமில்லை. வெறும் உடனிருப்பும், கொஞ்சம் இன்பமும் மட்டுமே அவர்களின் தேவையாக இருந்தது. ஆனால் அவர்கள் ஒன்றிணையும்போது துயரம் சூழ்ந்துவிட்டது. அதற்கொரு சாக்குக் கண்டுபிடித்தாள் அவள். நாம் சோர்ந்து போய்விட்டோம் என்று புன்னகைத்தாள். நேரம் கடத்துவதன் கடைசி முயற்சியாக அவள் முகத்தைக் கையிலெடுத்து கண்ணிமைகளில் முத்தமிட்டான். கைகோர்த்து நெருக்கமாகப் படுத்துக் கொண்டார்கள். பசுமையான வளமையான இந்த நாட்டில் எதேச்சையாக சந்தித்துக் கொண்டது பற்றியும், எங்கே எத்தனைக்காலம் வாழ்ந்தாலும் என்றென்றும் வெளிநாட்டவராகவே கருதப்படுவது பற்றியும் பேசிக் கொண்டார்கள்.

விரைவில் உடைகளையணிந்து விடைபெற்றுப் புறப்பட்டுவிட வேண்டும் என்று நினைத்தான். இரவுக் கொடுங்கனவின் ராட்சதச் சிலந்தி அந்தச் சூழலை நாசப்படுத்த அனுமதிக்கக் கூடாதென்று நினைத்தான். ஆனால் பாதுகாப்பற்ற அந்த இளம்பெண்ணின் நண்பனாக இருக்கவும் விரும்பினான். காதலனாக அல்ல, நண்பனாக. எதிர்பார்ப்புகளோ பொறுப்புகளோ இல்லாமல் அமைதியான கணங்களைப் பகிர்ந்து



ஓவியம்: A.செல்வம்

கொள்ளும் நண்பனாக, பயத்தை விலக்க உடனிருப்பவனாக...

அவன் கிளம்பவுமில்லை. அவள் கையை விடவுமில்லை. தனக்கும் அவளுக்குமான கதகதப்பான மென்உணர்வு பெரும் கருணையுணர்வொன்று பொங்கி அவன் கண்களைக் கரித்தது. ஜன்னல்திரை பாய்மரம் போல் உப்பிப் பறந்தபோது, ஜன்னலை மூடுவதற்காக அவள் எழுந்தாள். உடனிருக்கும் ஆவலை, கலவிக்கான ஆவலை இருட்டு மீட்டுத்தருமென்று அவள் நினைத்தாள். ஆனால் அவனுக்கு இருட்டு நல்லதில்லை. தெருவிலிருந்து செவ்வக வடிவில் அறைக்குள் வரும் ஒளி அவனுக்குத் தேவை. இல்லாவிட்டால் அந்த 90 சென்டிமீட்டர் சிறையில் நேரங்காலம் தெரியாமல் ஜுரவேகத்தில் நுரைத்துப் பொங்கும் தன்னுடைய மலக்குவியலினிடையே மீண்டும் வீழ்ந்து கிடக்கும் உணர்வு ஏற்பட்டு விடும். உன்னைப் பார்க்க வேண்டும், திரையை மூடவேண்டாம் என்று பொய் சொன்னான். அந்த நாசமாய்ப்போன தாகத்தை, முள்கிரீடம் போல தலையில் அழுந்திய கட்டை, ஆழமான குகைகளின் தோற்றத்தை, எண்ணற்ற பேய்களின் தாக்குதலை அவளிடம் சொல்லும் தைரியம் அவனுக்கு வரவில்லை. அதைப்பற்றி அவளிடம் பேச அவனால் முடியவில்லை. பேசத் தொடங்கினால் ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவி, இதுவரை பேசப்படாத பலவற்றைப் பேச வேண்டியதாகிவிடும்.

மறுபடி படுக்கைக்குத் திரும்பியவள், ஏதோ நினைவில் மூழ்கியவளாக அவன் கைகளை வருடினாள். மெல்லிய வரிகளின்மீது விரல்களை ஓடவிட்டு ஆராய்ந்தாள். கவலைப்படாதே, அது ஒன்றும் தொற்றுநோயல்ல. வெறும் வடுக்கள்தான் என்று சிரிக்க முயன்றபோது அவன் கிட்டத்தட்ட விம்மத் தொடங்கினான். அவனுடைய வேதனை அவளுக்குப் புரிந்துவிட்டது. அவள் உஷாரானாள், கைகள் அசையாமல் நின்றன. அக்கணத்திலேயே அவன், இது ஒரு புதிய காதலின் தொடக்கமல்ல, குறுகிய கால உறவுமல்ல, வெறும் தற்காலிக இடைநிறுத்தம் அப்பழுக்கற்ற சிறியதோர் இடைவேளையன்றி வேறல்ல என்று அவளிடம் சொல்லியிருக்க வேண்டும் அக்கணத்திலேயே அவன், விரைவில் நீ தூங்கியவுடன் கிளம்பிப்போய் விடுவேன் இந்த உறவுக்கு எதிர்காலம் கிடையாது. ரகசிய சைகைகள் கிடையாது. கைகோர்த்து மறுபடியும் தெருக்களில் நடக்க முடியாது. காதலர் விளையாட்டில் பங்கேற்கவும் முடியாது என்று அவளிடம் சொல்லியிருக்க வேண்டும். ஆனால், அவனால் பேச முடியவில்லை. தொண்டையில் முள்போல் எங்கோ புதைந்துவிட்டது அவன் குரல். எங்கோ அடியாழத்தில் மூழ்குகிறோம் என்று அவனுக்குப் புரிந்துவிட்டது.

எதிலாவது சிந்தையைப் பதியவைத்து நழுவப்பார்க்கும் எதார்த்தத்தைப் பற்றிக்கொள்ள முயன்றான். நாற்காலி மேலிருந்த துணிமணி, தரையிலிருந்த புத்தக அடுக்கு, சுவரில் தொங்கிய சிலே நாட்டுப்படம், இந்தக் கரீபிய இரவின் தண்மை, தெருவின் தூரத்து ஓசை எதுவானாலும் சரி... தனக்கு அர்ப்பணிக்கப்பட்ட அப்பெண் உடலில் – அபரிமிதமான கூந்தலும் தீய்ந்த சர்க்கரை மணக்கும் தோலையும் கொண்ட அவளுடலில் கவனத்தைக் குவிக்க முயன்றான். குரலற்றுப்போன அவன் இந்தக் கண்களைக் காப்பாற்ற உதவி செய்யேன் என்று கெஞ்சினான். அவளோ படுக்கையின் மறுமுனையில் துறவிபோல சம்மணமிட்டு உட்கார்ந்திருந்தாள். அவனது நடுக்கத்தையும், பற்களின் தாளத்தையும் முனகலையும் கவனித்துக் கொண்டிருந்தாள். அவளின் வெளிறிய முலைகளும், தொப்புளும் கூட அவனை கவனிப்பது போலிருந்தது. ஏற்கெனவே பலமுறை நிகழ்ந்ததுபோலவே இம்முறையும் நிகழ்ந்தது. பாறை முகட்டிலிருந்து

ஆழங்காண முடியாத பள்ளத்தில் நழுவி விழுவதை உணர்ந்து தன் போராட்டத்தைக் கைவிட்டான். கை கால்களின் மீதிருந்த பொருக்குத் தட்டிய காயங்களைத் தடவிப் பார்த்தான். மிருகத்தனமான அடிகள், கிழிந்த தசைநார்கள், பெயரைச் சொல்லும்படி கேட்டு இழிவுப்படுத்திய குரல்கள், அருகில் வைத்து சித்திரவதை செய்யப்பட்ட ஆனாவின் மறக்கவே முடியாத அலறல்கள், முற்றத்தில் கைகளைக்கட்டித் தொங்கவிடப்பட்டவர்களின் அலறல்கள் எல்லாவற்றையும் மறுபடி கேட்டான்.

என்னவாயிற்று? அடக் கடவுளே, என்ன தவறு நடந்தது? தூரத்திலிருந்து ஆனாவின் குரல் கேள்வியெழுப்பியது. இல்லை... இன்னமும் ஆனா தெற்கேயுள்ள புதைமணலில் அழுந்திக் கிடக்கிறாள். பெயரைச் சொல்லி அழைத்துத் தன்னை உலுக்கி எழுப்பும் நிர்வாணப் பெண்ணை அடையாளம் தெரிவது போலத்தான் தோன்றியது. பாம்பாக நெளியும் சாட்டைகளும், அலையும் கொடிகளும் கொண்ட நிழல் உருவங்களை விட்டு அவனால் விலகிவர இயலவில்லை. குனிந்து உட்கார்ந்து குமட்டலை அடக்கிக்கொள்ள முயன்றான். ஆனாவுக்காகவும் மற்றவர்களுக்காகவும் அழத் தொடங்கினான். மறுபடியும் எங்கிருந்தோ அழைக்கும் அந்தப் பெண் குரல். ஒன்றுமில்லை. என்னைப் பிடித்துக்கொள் என்று கெஞ்சினான். மெதுவாக அவனை நோக்கி நகர்ந்தவள் அவனை அணைத்துக்கொண்டு குழந்தைபோலத் தாலாட்டினாள். நெற்றியில் முத்தமிட்டாள். அழு, எவ்வளவு முடியுமோ அழு என்றபடி அவனை மெத்தையில் மல்லாக்கப் படுக்கை வைத்து, சிலுவையில் அறையப்பட்டவள்போல அவன் மீது படர்ந்தாள்.

இருவரும் அப்படியே அசையாமல் ஓராயிரம் ஆண்டுகள் கிடந்தார்கள். பிறகுதான் மருட்டும் தோற்றங்கள் மெல்ல மறைந்து மறுபடி அவன் அந்த அறைக்குத் திரும்பினான். இன்னமும் சீரான ரத்த ஓட்டத்துடன் சுவாசித்துக்கொண்டு உயிரோடிருப்பதை உணர்ந்தான். அந்தப் பெண்ணுடலின் கனத்தை, மார்மீது பதிந்திருந்த அவளின் தலையை, பயத்தால் உறைந்த இரண்டு அனாதைகள் பின்னிப் பிணைந்து கிடப்பதை உணர்ந்தான்.

அந்தக் கணத்தில் எல்லாம் தெரிந்தவள்போல அவள் பேசத் தொடங்கினாள். ஆசையைவிட, காதலை விட, ஏன் வெறுப்பு, குற்றவுணர்வு, வெறி இவையெல்லாவற்றையும் விட இன்னும் சொல்லப்போனால், நேர்மையை விட பயம் வலிமையானது. பயம் எல்லாவற்றையும் நிர்மூலமாக்கிவிடும்... தன் கழுத்தில் அவளுடைய கண்ணீர் வழிந்தோடுவதை உணர்ந்தான். எல்லாமே முடிவுக்கு வந்துவிட்டது. அடியாழத்தில் மறைந்திருந்த காயத்தை அவள் தொட்டுவிட்டாள். தன்மீது பரிதாபப்பட்டு படுக்கைக்கு அழைக்கும் சாதாரணப் பெண் அவளல்ல என்று சூசகமாக அவன் அறிந்துதான் இருந்தான். ஸ்தூலமாக உறைந்த அமைதிக்குப் பின்னால், எங்கும் வியாபித்திருந்த தனிமைக்குப் பின்னால், அந்தக் கர்னலின் கொடுமைக்கும், தான் செய்த கொடுமைக்கும் பின்னால், ஒளிந்து கொண்ட மூடிய பெட்டிக்குப் பின்னால், ஆனா தியாசும் கண்கள் கட்டப்பட்ட நிலையில் வரிசையாக அழைத்துச் செல்லப்பட்ட மற்ற காட்டிக் கொடுக்கப்பட்ட தோழர்களுக்கும் பின்னால் இருந்தது பயம்தான் என்று அவளுக்குத் தெரிந்திருக்கும் என்று அவன் உணர்ந்திருந்தான். அவளுக்கு எப்படி எல்லாம் தெரிந்தது?

அவள் எழுந்து உட்கார்ந்தாள். விளக்கைப் போட உயர்த்திய அவளுடைய கை ஜன்னல் வெளிச்சத்தில் நிழலாகத் தெரிந்தது, விளக்கைப் போட்டுவிட்டு கையிலிருந்த உலோக வளையல்களை ஒவ்வொன்றாக கழற்றி ஓசையெழ படுக்கை மீது போட்டாள். அவனை நோக்கிக் கைகளை நீட்டினாள். முகத்தில் பாதியைக் கூந்தல் மறைத்திருந்தது. அவளுடைய மணிக்கட்டிலும் கூட வெள்ளையாக வடுக்கள் இருந்தன. அவன் ஆடாமல் அசையாமல் அவற்றை உற்றுப்பார்த்த கணம் முடிவற்று நீண்டது... மின்சாரக் கம்பியுடன் பிணைக்கப் பட்ட அவளைக் கண்டதும்... இப்போது அவன் காதலையும் மற்றெல்லாவற்றையும் புரிந்து கொண்டான்.

அதன் பிறகு இருவரும் கட்டியணைத்துக் கொண்டு அழுதார்கள். உடன்படிக்கைகளையும் வாக்குகளையும் தடை செய்யப்பட்ட வாக்குறுதி களையும் நாளைக்கான சத்தியங்களையும் பெரும் ஆர்வத்துடன் பரிமாறிக் கொண்டார்கள். இறுதியாக, அடியாழத்தில் மறைத்து வைத்திருந்த ரகசியத்தையும்கூட பகிர்ந்து கொண்டார்கள்.

---

e-mail : amarantha1960@gmail.com

### லென்ஸ் திரைப்படத்தை முன்வைத்து – I

# பாலியலின் உளவியல்

அவனி அரவிந்தன்




அண்மையில் வெளிவந்த 'லென்ஸ்' திரைப்படம் மனித மனத்தின் வக்கிரத்தை முகத்தில் அறைந்தது போல வெளிப்படுத்தியிருந்தது. அன்பின்பால் கூடும் இரு உடல்களை அவர்களுக்குத் தெரியாமல் படம் எடுத்து, இணையத்தில் பரவவிட்டு, தானும் கண்டு சுகம் அடையும் ஒருவித உளவியல் குறைபாட்டை திரைக்கதையாக்கி இருந்தனர். ஆனால் பொதுவாகப் பார்த்தால் அன்பின் மிகுதியிலோ, இச்சையின் உச்சத்திலோ, மண உறவுக்குட்பட்டோ வெளியிலோ இத்தகைய எந்த வரைமுறையும் இன்றி பாலுறவைப் பார்ப்பதாலேயே பரவசம் அடையும் பிறவிகள் இருக்கிறார்கள். கிணற்றடியில், ஓடை புதர் மறைவில், ஊர்மக்களில் இருவர் கலவி கொண்டதைக் கண்டு அதை விவரித்துச் சொல்லும் பழைய பொழுதுபோக்கின் மிக மோசமான தற்போதைய பரிணாமம்தான் இணையப் பார்வைமோகம் *(Internet voyeurism).*

இயற்கையின் எந்தப் படைப்பை விடவும் மர்மமானது எதுவெனக் கேட்டால், மனித உளவியல் என்று தயங்காமல் சொல்லலாம். எத்தனை எத்தனை ஆராய்ச்சியாளர்கள், கவிஞர்கள், நாவலாசிரியர்கள் அத்தனை பேரும் எழுதி எழுதித் தீராத விஷயம் அது. பார்வை மோகம் கொண்டவர்களை எந்தப் பட்டியலுக்குள்ளும் அடக்கிவிட முடியாது. சமூகத்தில் எல்லா தட்டில் உள்ளவர்களும் இதில் அடங்குவர். தான் வாழாத வாழ்க்கையின் அந்தரங்கங்களைத் தெரிந்து கொள்ளும் அற்ப ஆவல் அனைவருக்குமே உண்டு. அதிலும் அடித்தட்டு அம்மணங்களைச் செல்வந்தர்களும், மாளிகைகளின் காமக்கேளிக்கைகளை நடுத்தர, அடித்தட்டு மக்களும் மிகுந்த விருப்பத்துடன் காண முயலும் நிலை வெளிப்படையாக இல்லாவிட்டாலும் இணையத் தொடர்பு கொண்ட கைப்பேசியில் மிக எளிதாக இருக்கிறது.

லென்ஸ் திரைப்படத்தைப் பொறுத்தவரை யாரென்றே தெரியாத எளிய மக்களின் படுக்கையறையில், குளியலறையில் நுண்ணிய ஒளிப்படக்கருவியைப் பொருத்தி படம் பிடித்து இணையத்தில் விடுவதைப் பொழுது போக்காகச் செய்யும் ஒருவனை அவனது மனைவியின் நிர்வாணத்தைக் கொண்டே பழிவாங்குவதாகக் காட்சிகள் விரியும். பிறகு அது அவனது மனைவி இல்லை. அவளைப் போன்ற உடல்வாகு கொண்ட ஒரு பாலியல் தொழிலாளி என்பது போல சொல்லிப் பாதிக்கப்பட்டவனை நியாயப்படுத்தியிருப்பார்கள். இந்த இடத்தில் வெறும் பார்வை மோகம் என்பதைத் தாண்டி பாலியல் பழிவாங்கல் *(Revenge Porn)* என்ற மனநிலைக்குள் கதை மெல்ல நம்மை இட்டுச்செல்கிறது.

இப்போதைய விரைவான இணையச் சூழலில், இருக்கும் கணக்கற்ற சமூக வலைத்தொடர்பு செயலிகளில், அன்பு கொள்வதும் அதை முறித்துக்கொள்வதும் கணப்பொழுதில் நிகழக்கூடியவையாக இருக்கின்றன. பிரிந்த பின் வெறுப்பை வெளிக்காட்டவும், பழிவாங்கவும் பத்தாண்டா ஆகப்போகிறது. அதுவும் நொடியில் நடந்து விடுகிறது. கை கோர்த்துச் சேர்ந்திருந்த நிழற்படங்கள் முதற்கொண்டு, உடல்கள் கூடிய ஒளிப்படம் வரை ஒரு நிமிடத்தில் இணையத்தில் ஏற்றப்பட்டு இமை மூடித்திறப்பதற்குள் எங்கெங்கோ பரவி அனுப்பியவருக்கே திரும்ப வரும் அளவுக்குத் தொழில்நுட்பத்தில் முன்னேறி இருக்கிறோம். இணையம் என்பது கைக்கொள்ளாக் கடல். கடலில் கரைத்த உப்பைக் கைவிட்டா எடுக்க முடியும். ஒரு முறை பதிவேற்றம் செய்துவிட்டால்

பிறகு அதன் பரவலைத் தடுப்பது எளிய மக்களுக்குக் கிட்டத்தட்ட இயலாத காரியம்.

திருட்டுப்பயலே2 படமும் இத்தகைய மனநிலை கொண்ட ஒருவனை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தில் கதை நாயகனுக்கும் எதிர் நாயகனுக்கும் இருக்கும் வேவு பார்ப்பதில் ஒற்றுமை, ஆனால் கதை நாயகன் அரசுக்காக வேவு பார்க்கிறான், எதிர் நாயகன் ஆசைக்காக வேவு பார்க்கிறான். இரண்டு கதாபாத்திரங்களிலும் தீமையின் சாயலைக் கதையின் போக்கிற்கு ஏற்றாற்போல ஏற்றியும் இறக்கியும் காட்டியிருப்பார்கள். கதைநாயகன் தொடக்கத்தில் அடுத்தவரின் அந்தரங்கங்களின் சுவாரசியங்களை ரசிக்கிறான். அதைத் தொடர்ந்து அந்த ரகசியங்களைப் பணமாக்கும் குறுக்கு யுக்திகளையும் மேற்கொள்கிறான். ஒரு கட்டத்தில் தன் மனைவியே இன்னொருவனின் கணிப்'பொறியில்' சிக்கி இருப்பதைத் தெரிந்து அதையும் சமாளித்து அந்தச் சிக்கலான அனுபவங்களால் தான் மேற்கொண்ட கைப்பேசி ஒட்டுக்கேட்கும் வேலையை வெறுக்கத் தொடங்குகிறான். எதிர் நாயகனோ பார்வை மோகத்தின் படியில் இருந்து பாலியல் பழிவாங்கலுக்குத் தாவுவதாக கதை செல்கிறது. தரமணி திரைப்படத்தில் கூட தான் காதலித்தப் பெண் அமெரிக்கா சென்று அங்கிருப்பவரை திருமணம் செய்யவிருக்கிறாள் என்பது தெரிந்த காதலன் அவள் மீது மனதில் வன்மம் கொள்கிறான். அவள் மீண்டும் சொந்த ஊர் திரும்பும்போது நயமாகப் பேசி உறவு கொண்டு அதை கைப்பேசியில் படம் எடுத்து வைத்துக்கொள்கிறான், மிரட்ட வசதியாக இருக்கும் என்று. இன்னொரு கட்டத்தில் பெண்கள் மீது வெறுப்பு ஏற்பட்டதைச் சமன் செய்ய, கிடைக்கும் பெண்களிடம் எல்லாம் கைப்பேசியில் மணிக்கணக்கு இல்லாமல் பேசுகிறான். பெரிய குடும்பத்துப் பெண்களிடம் பணம் பிடுங்குகிறான். தேநீர்க்கடையில் அருகில் அமர்ந்திருப்பவர்கூட தான் காதலித்தப் பெண் தன்னைக் கைவிட்டதாகக் கூறி அவள் எண்ணையும் கொடுத்து சித்திரவதை செய்யுங்கள் என்று ஆர்வமுடன் கூறுகிறான். இவையும் பாலியல் பழிவாங்கலின் ஒரு உத்தி என்றே சொல்லலாம்.

மொத்தத்தில் இப்படிப்பட்ட மனம் உடல் சார்ந்த இணையைத் தனியுரிமை அத்துமீறல்களை நாம் வாழும் சமூகம் எப்படிப் பார்க்கிறது என்று எண்ணிப்பார்த்தால், பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்களையே பழி சொல்வதாகத்தான் இருக்கிறது *(Blaming the victims)*. எச்சரிக்கை உணர்வு இல்லை. நடத்தை சரி இல்லை. உடையில் கண்ணியம் கிடையாது என்று பட்டியலை நீட்டும். அதையே பண்பாடு என்றும் பறைசாற்றும் பாங்கே இங்கு அதிகம். அதிலும் முதன்மையாக பெண்களை மட்டுமே குறைசொல்வதுதான் குலவழக்கம். கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், கவுரவத்தையும் பாவம் இந்தச் சமூகம் பெண்களின் அங்கங்களில் வைத்திருக்கிறது. இத்தனையும் மீறி பாலியல் தனியுரிமை குறித்துப் பேச வேண்டியது முன்னெப்போதையும் விட இன்று மிக மிகத் தேவையாக இருக்கிறது.

அண்மையில் பரபரப்பை ஏற்படுத்திய 'லட்சுமி' குறும்படம் எழுப்பும் கேள்விக்கான பதிலைத் தேடும்போது பாலியல் அத்துமீறலுக்கும் பாலியல் தனியுரிமைக்குமான தொடர்புப்புள்ளிகளையும் விலகும் புள்ளிகளையும் கண்டறியலாம். தாளம் மாறாத இயந்திர வாழ்க்கையை ஒரு ஒண்டுக்குடித்தனத்தில் வாழும் குடும்பம் எதிர்கொள்ளும் இருத்தல் குறித்த குழப்பங்களையும் அதனால் தடம் புரளும் கதாபாத்திரங்களாக ஒரு கணவன் மனைவியை நம் முன் உலவ விடுகிறார்கள். அதில் கணவனுக்கு வேறு பெண்ணுடன் தொடர்பு இருப்பதாக பார்வையாளருக்குத் துப்புக் கொடுக்கப்படுகிறது. பின் வரும் காட்சிகளில் மனைவி தினமும் செல்லும் ரயிலில் சந்திக்கும் ஒருவன் இவளின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பவனாகவும், கலையிலக்கியங்களில் வித்தகனாகவும் இருப்பதால் ஈர்ப்பு ஏற்படுகிறது. தனது வீட்டுக்குத் திரும்ப முடியாத ஒரு மழையிரவில் அவனது வீட்டில் தனிமையில் சந்தித்துப் பேசிக்கூடித் திரும்புகிறாள். மறுநாளில் இருந்து ரயிலில் இல்லாமல் பேருந்தில் பணிக்குச் செல்வதாகப் படம் முடிகிறது. பலருடைய பார்வையும் ஆண் தவறு செய்தால் பெண்ணும் பதிலுக்குத் தவறு செய்யலாமா? என்பது போலவே அமைகிறது. ஆழமாகப் பார்த்தால் இந்தப் படமும் கூட பாலியல் சுதந்திரத்தைப் பட்டவர்த்தனமாகப் பேசவில்லை. பெண் தனக்குப் பிடித்த இணையுடன் சேருவதை நியாயப்படுத்த

அவளது கணவன் தவறு செய்கிறான் என்பதைக் காட்ட வேண்டிய கட்டாயம் இருப்பதை பதிவு செய்கிறது. மணமுறிந்த பெண்ணை விரும்பும் ஆண் குறைந்தபட்சம் காதல் தோல்வி உற்றவனாகவேனும் இருக்க வேண்டும் என்ற நிர்பந்தமான எதிர்பார்ப்பு நம்மிடையே இருப்பதைப் பிரதிபலிக்கும் சமீபத்திய படங்கள் தர்மதுரை, தரமணி போன்றவை.

பெண்களைத் தெய்வமாக மதிக்கிறேன், அவர்களைப் பாதுகாப்பேன், அவர்களின் தவறைத் திருத்தி நல்ல குடும்பப் பெண்ணாக்குவேன் என்று தமிழ்ப்படக் கதாநாயகர்கள் இனியும் சொல்வது நகைச்சுவைக் காட்சியாக வேண்டுமானால் இருக்கலாம். ஏன் பெண்ணுக்குச் சுதந்திரம் கொடுப்பேன் என்று ஒரு ஆண் சொல்வதே ஆணாதிக்க மனநிலை தான். அவரவர் சுதந்திரம் அவர்கள் கையில் தான் இருக்கிறது. அது கொடுத்துப் பெற்றுக்கொள்ளும் பண்டம் இல்லை தானே. எந்த ஒரு ஆணும் பெண்ணும் உடல் சார்ந்தும், உள்ளம் சார்ந்தும் மற்றவரை அடிமையாக்காமல் இருந்தால் போதும்.

தற்போதைய கல்விச்சூழலும், ஆணுக்கும் பெண்ணுக்கும் தொழில்நுட்பத்துறையிலேனும் இருக்கும் பொருளாதாரச் சமநிலையும் பெண்ணுக்கான பாலியல் தனியுரிமையை அவள் எடுத்துக்கொள்வதற்கான காலத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நடைமுறைப்படுத்தும். தரமணி படத்தில் தன்மீது அன்பு கொண்டவன் தனக்குத் தீங்கிழைத்திருந்தாலும் மீண்டும் மன்னித்து ஏற்றுக்கொள்ளும் முடிவை ஆண்டீரியா கதாபாத்திரமே எடுக்கிறது. அங்கே ஆணின் தன்னகங்காரத்தை நிர்கதியான தூசியாக்கிப் பறக்கவிடுகிறார் இயக்குனர். பாலியல் ரீதியிலான அத்துமீறல்களும், பழிவாங்கல்களும், சுதந்திரமும் ஒரே இடத்தில் ஒன்றரக் கலந்து இருந்தாலும் மூன்றையும் பகுத்தறிந்து நிராகரிக்க வேண்டியதை விலக்கி ஏற்க வேண்டியவற்றை ஏற்றுக்கொண்டால், மனிதகுலம் அடுத்த பரிணாமத்தை நோக்கி முன்னேறிச்செல்லும் பாதை குற்றமற்ற ஒளி மிகுந்ததாக இருக்கும்.

e-mail : arvinstar@gmail.com




# லென்ஸ் திரைப்படத்தை முன்வைத்து – II

# மெய்நிகர் உலகம்

சர்வோத்தமன்

ஒரு பெண்ணைப் பார்த்து அவளுடன் பழகி அவளைப் பிடித்து அவளிடம் காதலைச் சொல்லிப் பின், அவள் அதை ஏற்று இருவரும் திருமணம் செய்து கொள்கிறார்கள் அல்லது அவள் அதை நிராகரிக்கிறாள். வழக்கமாக, தமிழ் சினிமாவில் வரும் கதை இதுதான். நேர் பரிச்சயம் இல்லாமல் கடிதம் மூலமாகவும் உறவுகள் பலப்படும். ஆனால் இணையத்தில் சமூக வலைத்தளங்களால் உருவாகும் உறவுகள் எந்தளவு பலமானது,

அப்படி உருவாகும் காதல்களும் எதிர் பால் ஈர்ப்பும் நிஜ வாழ்க்கையில் எந்தளவு பாதிப்பு செலுத்த வல்லது. இது குறித்து தமிழில் அதிக படங்கள் வரவில்லை. காதலர் தினம் போன்ற படங்களில் அவர்கள் விரைவில் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்கிறார்கள். அது மெய்நிகர் உலகத்திலிருந்து மெய் உலகத்திற்கு வந்துவிடுகிறது.

சமீபத்தில் வெளியான லென்ஸ் திரைப்படம் இப்படி மெய்நிகர் உலகில் உருவாகும் உறவுகளும் அது நிஜ வாழ்க்கையில் ஏற்படுத்தும் பாதிப்பையும் ஓரளவு தீவிரத்துடன் பேசுகிறது. சமூக வலைதளங்களில் புழங்கும் போது உருவாகும் நமது ஆளுமையும் நிஜ வாழ்க்கையில் இருக்கும் நமது ஆளுமையும் முரணாகக் கூட இருக்கலாம். பல நேரங்களில் அது முரணாகத்தான் இருக்கிறது. நீங்கள் நிஜ வாழ்வில் ஒருபோதும் பயன்படுத்தாத வசைச்சொல்லை மிக எளிதாகச் சமூக வலைதளத்தில் பயன்படுத்துவீர்கள். உங்களுக்கு அப்போது அதன் தீவிரம் உறைக்காது. நீங்கள் மிக எளிதாக அதைக் கடந்துவிடுவீர்கள். ஆனால் உங்களின் வசைச்சொல்லை படிக்கும் எதிர்தரப்பில் இருப்பவர் உங்களைத் தன் வாழ்நாள் எதிரியாகப் பாவிப்பார். நிஜ வாழ்வில் ஒரு வசைச்சொல் எந்தளவு அவரைப் பாதிக்குமோ அதே அளவு மெய்நிகர் உலகின் வசைச்சொல்லும் அவரைப் பாதிக்கும்.

காந்தி தனது அந்தரங்க வாழ்வைப் பகிரங்கமாக வெளிப்படுத்துபவராக இருந்தார். ஆனால் அது அவரே சொன்னது. வேறு ஒருவர் அவருக்குத் தெரியாமல் படக்கருவியை காந்தியின் படுக்கையறையில் வைத்து அதைப் பத்திரிக்கைகளுக்கு கொடுத்திருந்தால் காந்தியின் சொல்லுக்கு இருந்த வலிமை அதன் பின் இல்லாமல் போயிருக்கும். அவரது முழுமை சந்தேகத்திற்கு உள்ளாகியிருக்கும். அவர் அரசியில் வாழ்க்கையே முடிந்திருக்கும்.

காந்தி தன் அந்தரங்க வாழ்வை பகிரங்கப்படுத்தும்போது அவர் அதை அகங்காரத்தோடு செய்கிறார். அவர் மேலும் முழுமையானவராக மாறுகிறார். மேலும் சத்தியமானவராக ஆகிறார். அவர் எந்தவித பிறழ்வும் அற்றவராகிறார். ஆனால் அவர் தன் அந்தரங்க வாழ்வைப் பற்றி சொல்லும்போதே அது எடிட் செய்யப்படுகிறது என்று நாம் உணர்வதில்லை. அதை அவர் தெரிந்து எடிட் செய்வதில்லை. ஆனால் அது நடக்கிறது. உலகில் எழுதப்பட்டுள்ள அனைத்து அந்தரங்க குறிப்புகளும் செப்பனிடப்பட்டவைதான். மனம் கொள்ளும் அதீத தாவுதல்களை நாம் குறிப்புகளில் சேர்ப்பதில்லை. அதற்கு ஒரு காரணம், அது நடந்த விதம், அதை பகிரங்கமாக முன்வைக்கிறேன் என்கிற அகங்காரம் ஆகியவற்றோடுதான் அதை செய்கிறோம்.

ஆனால் உங்களின் படுக்கையறை காட்சி உங்களின் அனுமதியின்றிச் செப்பனிடுதல் இன்றி பலரின் பார்வைக்குச் சென்று சேரும்போது நாம் துணுக்குறுகிறோம். நாம் வன்புணர்வுக்கு உள்ளானது போல் உணர்கிறோம். ஒரு கூட்டு வன்புணர்வுக்கு உள்ளானவர் கொள்ளும் அதே அவமானத்தைக் கொந்தளிப்பைத் திருடப்பட்ட உணர்வை இதிலும் உணர்கிறோம். அது தற்கொலை வரைகூட இட்டுச் செல்கிறது. ஆனால் தன் பக்கத்து வீட்டுக்காரரின் வரவேற்பறையை கூட பார்க்கத் தயங்கும் ஒருவர் இணையத்தில் வெளியாகும் யாரோ ஒருவரின் படுக்கையறை காட்சியை பார்க்கும் போது அந்தத் தயக்கத்திலிருந்து விடுபடுகிறார். நமது ஆழ்மன இச்சைகள், பயங்கள் எந்தவித முகமூடியும் இல்லாமல் சமூகவலைதளங்களில் இணையத்தில் செயல்படுகின்றன. எப்போதும் மெய்நிகர் உலகில் பாதிக்கப்பட்டவருக்குத் தான் அது நிஜ வாழ்வில் பாதிப்பைச் செலுத்துகிறது. அதில் நுகர்வோராக இருப்பவர் அதை எளிதில் கடந்துவிடுகிறார்.

கனடாவில் பள்ளிச்சிறுமி ஒருத்தி சமூகவலைதளங்களில் வெளியான தன் நிர்வாணப் புகைப்படங்களால் தொடர்ந்து கேலிக்குள்ளாகி ஒரு கட்டத்தில் தற்கொலை செய்து கொண்டாள். அந்தச் செய்தியிலிருந்து உருவானதுதான் லென்ஸ் திரைப்படம். கேலியும் கிண்டலும் ஒரு துரோகத்தைவிட நம்மை ஆழமாகப் பாதிக்கிறது. துரோகம் இழைக்கப்படும்போதும், கொல்லப்படும் போதும், பழிவாங்கப்படும்போதும் நீங்கள் எதிர்தரப்புக்கு நிகரானவராக இருக்கிறீர்கள். கேலி கிண்டலுக்கு உள்ளாகும்போது நீங்கள் கீழானவராக மாறுகிறீர்கள். உங்களின் அகங்காரம் மிகத் தீவிரமாகச் சீண்டப்படுகிறது.



உங்களால் மறுதரப்பை எதிர்த்து ஒன்றுமே சொல்ல முடியாத சூழலில் அந்த இடத்தைவிட்டு விலகுதலும் ஒருகட்டத்தில் தற்கொலையும் கூட நிகழ்கிறது.

சமூகவலைதளங்களில் உருவாகும் உறவுகள் நிலையற்றவை. ஆனால் அதில் உருவாகும் உரையாடல்கள், கருத்து பரிமாற்றங்கள், உணர்வுகள் மெய் உலகத்திற்கு நிகரானவை. லென்ஸ் திரைப்படத்தில் வருபவன் எந்தப் பெண்ணுடனும் நிஜமான உடல்உறவை வைத்துக்கொள்வதில்லை. ஆனால் அவனது மனைவி இறுதியில் அவளிடமிருந்து விலகுகிறாள். வீடியோ கேம் விளையாடும் ஒருவர் தன் எதிரிகளை எளிதாக துப்பாக்கியால் சுடுகிறார். அத்தனை கொலைகளைச் செய்து அவர் எதிராளியின் கோட்டையைக் கைப்பற்றுகிறார். நிஜ வாழ்வில் அவர் ரத்தத்தைக் கண்டால் மயங்கி விழுபவராக இருப்பார். *Second life* என்றோரு இணையதளம் இருக்கிறது. மெய்உலகம் முதல்வாழ்க்கையாக இருக்கும் போது இந்த இணையதளத்தால் உருவாகும் உலகம் இரண்டாம் வாழ்க்கையாக இருக்கிறது. இதில் நீங்கள் உறுப்பினராகி நீங்கள் விரும்பும் அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளலாம். இடம் வாங்கலாம். காதலிக்கலாம். மதம் மாறலாம். இதில் காதலித்தவர்கள் நிஜ வாழ்வில் திருமணம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

நடிகர் ராதிகா ஆப்தேவின் நிர்வாணப் படம் ஒன்று சமூக வலைதளங்களில் வலம் வந்தது. ஒரு பத்திரிகையாளர் அவரிடம் இது குறித்து நீங்கள் வருத்தப்படவில்லையா என்று கேட்டார். அந்தப் படத்தைப் பார்த்தவர்கள் அதைப் பகிர்ந்தவர்கள்தான் அவமானப்பட வேண்டும் என்று ராதிகா ஆப்தே கூறினார். அதற்குக் கேள்வி கேட்டவர், உங்களைப் புண்படுத்தியிருந்தால் மன்னிக்கவும் என்று சொன்னார். ராதிகா ஆப்தே பதிலுக்கு அதைப் பார்த்தவர்களும் பகிர்ந்தவர்களும்தான் புண்பட வேண்டும் என்று சொன்னார். பத்திரிகையாளருக்கு அதன்பின் என்ன பேசுவது என்று தெரியவில்லை.

அனுராக் காஷ்யப்பின் தேவ்டி திரைப்படத்தில் வரும் பள்ளி மாணவி தன்னைப் புணர்பவன் அதைப் படம்பிடித்து பகிர்ந்து கொள்ளும்போது துவள்கிறாள். அவளுடைய தந்தையே அந்த வீடியோவைப் பார்த்தும் விடுகிறார். அவள் அவரிடம் நீங்கள் எப்படி அதை பார்க்கலாம் என்று கேட்கிறாள். நீ ஒரு கோழை என்று திட்டி அவரது போலித்தனத்தைப் பாசாங்கைச் சுட்டிக் காட்டுகிறாள். தன் செயல் ஒருவகையில் அவரது மகளின் உடலுறவுக் காட்சியை அவளுக்கு தெரியாமல் அவளது படுக்கையறையில் எட்டிப்பார்ப்பது போன்றதுதான் என்பதை அப்போதுதான் அவர் உணர்கிறார். அவர் தற்கொலை செய்துக்கொள்கிறார். அவள் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். தனக்கான வாழ்வைக் கண்டடைகிறாள். ஆனால் அவள் அந்தக் கேள்வியைக் கேட்கும் வரை அவரால் தன் தவறை உணர முடியவில்லை. அவர் நிஜவாழ்க்கையில் தன் மகளின் அறைக்குச் செல்லும்போது கதவைத் தட்டிவிட்டு வரலாமா என்று கேட்டுவிட்டுச் செல்பவராக இருக்கலாம். ஆனால் இந்த மீறலை அதன் தீவிரத்தை அவரால் முதலில் உணரமுடியவில்லை. மெய்நிகர் உலகில் உங்கள் ஆளுமை மாற்றம் கொள்கிறது என்பது முக்கியமான விஷயம். நாம் வேறொருவராக மாறுகிறாம். நமது ஆழ்மன இச்சைகள் பசிகள் குரூரங்கள் கோபங்கள் கோழைத்தனங்கள் பாசாங்குகள் எந்தவித முகமூடியும் இல்லாமல் வெளியில் வருகின்றன. அங்கு நீங்கள் அடையாளமற்றவர். மெய் உலகின் தந்தை மெய்நிகர் உலகில் அந்தப் பெண்ணின் தந்தை இல்லை. அதே நேரத்தில் மெய்நிகர் உலகம் மெய் உலகத்தின் அதே பாதிப்புகளைப் பாதிக்கப்பட்டவருக்கு ஏற்படுத்துகிறது. அது மற்றொரு உண்மை. பாதிப்பவர் தன் பாதிப்பின் தீவிரத்தை உணராமலும் இருக்கச் செய்கிறது. அடுத்த தலைமுறை இன்றையத் தலைமுறையைவிட இந்த மெய்நிகர் உலகை எளிதாகக் கையாளும் என்றுத் தோன்றுகிறது.

e-mail : sarwothamans@yahoo.com

### சமூக உளவியல் சினிமா

# மனக்கதவே தாள் திறவாய்

செ. க. கார்த்திக்

ஒரு நாள் பொழுதில், எத்தனையோ மனிதர்களை நாம் கடந்து செல்கிறோம். சிலர் மீது அளவு கடந்த மரியாதையை, சிலர் மீது அதீத வெறுப்பை, சிலர் மீது அளவிட முடியாத பாசத்தைக் கொட்டிச் செல்கின்றோம். அத்துடன் முடிகின்றதா? மிச்சம் இருக்கும் பலரின் இருப்பை நாம் ஒருபோதும் அங்கீகரிப்பதேயில்லை. அதே அளவில்தான் நம்மையும் யாரோ ஒருவர் 'மற்ற பலராய்' பார்க்கப் போகின்றார்கள். நம் உலகம் நமக்கே தெரியாமல், இந்த பூவுலகின் பெரு வாழ்கையில், மிகச் சிறியதாகச் சுருங்கி விடுகின்றது. சக மனிதனைப் பார்க்கும் பார்வை, தீர்ப்பளிக்கும் நெற்றிக்கண்ணுடனே இருக்கின்றது. இதைச் சரியானதொரு வாழ்க்கை முறை என்று நாம் சொல்லலாமா? அந்த கேள்விக்குப் போவதின் அவசியம், நம் மனதின் வெற்றிடங்களுக்குப் புரியலாம்; ஆனால் நமக்கு ஒரு போதும் புரியப்போவதே இல்லை. மனிதனின் உளவியல் அவனது சமூக கட்டமைப்பின் முதுகெலும்பாய் இருக்கின்றது என்பதை நாம் உணராததின் பின்னணிதான், நம்மை இன்றைக்குப் பாடாய்ப் படுத்திக் கொண்டிருக்கின்றது. 'இருந்துட்டு போகட்டுமே' என்று நாம் சொல்லலாம். ஆனால் நமது சமுதாயம், நம் நாகரீகத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியக் கட்டாயத்தில் இருக்கின்றது.

எத்தனையோ வழிமுறைகள் கொண்டு, மனிதனின் உளவியல் கூறுகளை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அவை நாம் அன்றாடம் சமூகத்தில் இயங்கும் முறையைப் பற்றி நல்லதொரு புரிதலை நமக்குத் தந்துள்ளது. அப்படிப்பட்ட புரிதல்கள், நம்மை மேலும் ஆரோக்கியமான அணுகுமுறைகளோடு சமூகத்தில் இணைந்து செல்ல உதவுகின்றது. அப்படி, சமூகஉளவியலின் அடிப்படையில் எடுக்கப்பட்டத் திரைப்படங்களும் நம் மனதிற்கு மிகவும் நெருக்கமாய் இருந்துவிடுகின்றது. மேற்கத்தியத் திரைப்படங்கள், இவ்வகைத் திரைக்கதைகளை சிறந்தவொரு முறையில் கையாண்டு, நல்லதொரு பெயரை வாங்கி இருக்கின்றன. முழுத் திரைக்கதையில் மட்டும் இல்லாமல், அந்த திரைக்கதையில் வரும் கதாபாத்திரங்களுக்கு மற்றுமொரு பரிமாணத்தை வழங்க, இந்த உளவியல் ஆய்வுகள் எழுத்தாளர்களுக்கு உதவி இருக்கின்றன.

இரண்டாம் உலகப்போரின் முடிவில், மனிதனின் கசப்பான மறுபக்கம், பலருக்கும் பயத்தை உண்டுபண்ணியது. ஹிட்லர் போன்ற பெரிய ஆளுமையின் கீழ் நிகழ்ந்த கோரங்களும், தேசப்பற்று என்ற பெயரில், வென்ற தேசம் தங்களின் போர் வீரர்களை வதைத்த முறையும் நாம் யாவரும் அறிந்ததே. ஆனால், நிகழ்ந்த உலக யுத்தம் நமக்கு முக்கியமானதோர் பார்வையை விட்டுச் சென்றுள்ளது. சென்ற நூற்றாண்டின் பிற்பாதியில், மனிதவள மேம்பாட்டுத்துறை இப்பேரழிவின் பின்விளைவால் உருவான ஒரு முக்கியப்பிரிவே. இத்துறையின் ஆரம்ப நோக்கம், மனிதனின் அடிப்படை உளவியலை அறிந்து ஆராய்ந்து, அவனை ஆற்றல் மிக்க தொழிலாளியாக மாற்றுவதுதான். அத்தொழில், போர் ஆகட்டும், கைதிகளின் விசாரணையாகட்டும், குழந்தைகளுக்குப் பாடம் சொல்லுவதாகட்டும், பெரியதொரு தொழிற்பேட்டையை நிறுவுவதாகட்டும். சமூக உளவியலின் ஆய்வு முடிவுகள், அனைத்துத் தொழில்முறைகளிலும் பின்பற்றப்படுகின்றது. சமூகஉளவியல் அமைதியையும், வர்த்தகத்தையும் நிர்வகிப்பதற்கு நல்லதொரு திட்டமாய் மனிதனுக்கு உலகப்போரின் மூலம் கிடைத்த ஒரு பெருஞ்செல்வம். இன்றளவிலும், எண்ணற்ற சமூகஉளவியல் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அதில் தலை சிறந்த 10 ஆய்வு முறைகளையும், அவை சார்ந்த 10 மேற்கத்திய திரைப்படங்களையும் பற்றி இந்தக் கட்டுரையில் நாம் பகிர்ந்துகொள்வோம்.

இந்தக் கட்டுரையில், முதலில் ஒரு சமூக உளவியல் ஆய்வின் முடிவு உங்களுக்கு அறிமுகப்படுத்தப்படும். அந்த ஆய்வுமுறையைச் சார்ந்த ஒரு மேற்கத்திய படம் அதைத் தொடர்ந்து அறிமுகப்படுத்தப்படும். அப்படியாக

அறிமுகப்படுத்தப்படும் படத்தின் கதையானது, அந்த ஆய்வுமுறையை ஆவணப்படுத்துவதாகவும் இருக்கலாம், அல்லது அந்தக் கதைக்களம், மேற்கூறிய ஆய்வு முறையை உள்ளடக்கியதாக எழுதப்பட்டிருக்கலாம், அல்லது அந்தக் கதையில் வரும் ஒரு குறிப்பிட்ட கதாபாத்திரத்தின் உருவாக்கத்தின் பின்னணியை விவரிக்கலாம். விவாதிக்கப்படும் சமூகஉளவியல் முறையானது, அதன் கண்டுபிடிப்பின் முக்கியத்துவத்தைப் பொறுத்தும், மக்களிடத்தில் பெற்ற வரவேற்றபின் அடிப்படையிலும், இக்கட்டுரையில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது. கீழிருந்து மேலாக, அத்தரவரிசையில் இடம்பெற்றுள்ள முறைகளை, ஒன்றன் பின் ஒன்றாக, நாம் இங்கு பார்ப்போம்.

### 10. பெரும்பான்மையுடன் இணங்கி நடத்தல் *(Conformity)*

கூட்டுச் சமூகத்தின் சாபக்கேடாய் அமைந்த ஒன்றுதான் பெரும்பான்மைக்கு இணங்குதல். 'ஊரோடு ஒத்து வாழ்' என்ற வரியை நாம் கேட்டிருப்போம். முட்டாள்தனமாய் இருந்தாலும், தனியாய் எந்த விதத்திலும் சிக்கி விடக் கூடாதென்று பெரும்பான்மையினர் கூறும் மடத்தனத்திற்கு நம்மில் பலர் இசைந்திருப்பர். இது சமூகஉளவியலின் முக்கியதொரு கண்டுபிடிப்பாகக் கருதப் படுகிறது. இந்த நடத்தை முறையை ஒரு ஆய்வின் மூலம் *Asch* என்ற உளவியல் நிபுணர், 1951ல் நிரூபித்துள்ளார். ஒரு காகிதத் துண்டில், மூன்று வெவ்வேறான அளவில் உள்ள கோடுகளை வரைந்து, அதில் எந்தக் கோடு பெரிய கோடு என்பதை கண்டறியுமாறு ஒரு குழுவில் உள்ள நபர்களிடம் அவர் கேட்டுள்ளார். இதில் சிறப்பான ஒன்று என்னவென்றால், குழுவில் பெரும்பான்மை மனிதர்கள், *Asch* குழுவினரால் நியமிக்கப் பட்டவர்கள். அவர்கள் அனைவரும், சிறிய கோடொன்றைத் தேர்வு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தனர். ஆய்வில் பங்கு பெற்ற, *Asch* குழுவைச் சாராத மனிதர்கள், தவறான கோட்டைப் பெரிய கோடு என்று மற்றவர்கள் சொல்லுகிறார்கள் என்பதைக் கவனித்தார்கள். அது தவறு என்று தெரிந்திருந்தும், பெரும்பாலானோர் கூறுவதால், அந்தத் தவறான சிறிய கோட்டையே பெரிய கோடு என்று அவர்களும் கூறினார்கள். கூட்டுச் சமூகத்தில் வாழும் மனிதனின் உளவியல், இப்படி பெரும்பான்மைச் சமூகத்தினால் கடுமையாக பாதிக்கப்படுவதை, இந்த ஆய்வுமுறை நிரூபித்துக்காட்டியது. ஓட்டுப் பதிவு முறை, இப்படிப்பட்ட பெரும்பான்மைக் கருத்துகள் மூலம் பாதிக்க படக்கூடாது என்பதற்காகத்தான் கண்டுபிடிக்கப்பட்டது. இருப்பினும், கருத்துக் கணிப்பு என்னும் பெயரிலே, 'இவர்கள்தான் வெற்றி பெறப் போகிறார்கள்' என்று ஊடகங்கள் அனைவருக்கும் அறிவிக்கும் பொழுது, ஒரு சாதாரண மனிதன், வெற்றி பெறும் பெரும்பான்மைக் கட்சியில் இருக்க விரும்பி, துறுத்திக் காட்டப்பட்ட வேட்பாளருக்கே வாக்களித்து விடுகின்றான். அப்படி வெற்றி பெற்ற வேட்பாளரினால் சமூகத்திற்கு நல்லது கெட்டது உண்டா என்பதை மறந்து விடுகின்றான். எதிர்த்து நிற்கும் துணிவு, தனித்து நின்று தன் அடையாளம் காத்தல், மாறுபட்ட சிந்தனை போன்ற அடிப்படை அறிவுக்கூறுகள் இப்படிப்பட்ட உளவியலால் சிதைக்கப்படுவதை புரிந்துகொள்ளாமல் செயல்படுகின்றான்.

மேற்கத்தியப் படங்கள், இந்த உளவியல் நடைமுறையை உள்ளடக்கிய பல கதைகளை, தன்னுள் வைத்திருக்கின்றன. அப்படிப்பட்ட படங்களில், அதீதப்படியாகப் பாராட்டப்பட்ட படம் 12 *Angry Men* (1957). ஆனால் இங்கே உங்களுக்கு அறிமுகப்படுத்தப்படப்போகும் படம் *Nightcrawler* (2014). ஒரு சாதாரண மனிதன், இந்த உலகில் வாழ்வதற்குப் பணம் தேவை என்று, தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகள் மூலம் தெரிந்து கொள்கின்றான். அன்றாடம் பொருள் ஈட்டுவதற்கு ஒரு கல்வி, வேலை நிச்சயம் தேவை. ஈட்டிய பொருளை வைத்து மகிழ்ச்சியாக வாழ்வதற்கு, இரவு நேர கேளிக்கை விடுதி தேவை. இதுதான் இந்த சமூகம் பெரும்பாலானோர் வாழ்க்கை முறையிலிருந்து நமக்குக் கற்றுக்கொடுத்தவை. இதை தானும் செய்ய நினைக்கின்றான் கதையின் நாயகன்.



ஆனால், அவனுக்குப் படிப்பு கிடையாது. மூலதனம் இல்லை. ஒரு நிகழ்பதிவி–யின் உதவியைக் கொண்டு, செய்திக்காக, பரபரப்பான நொடிகளை ஒளிப்பதிவு செய்து, செய்தி நிறுவனத்திற்கு விற்றுவிடுகின்றான். தன் மனசாட்சிக்கு விரோதமாக, மனிதநேயமற்ற முறையில், வெறும் அற்பச்செய்திக்காக, ஆபத்தில் இருப்பவர்களுக்குக் கூட உதவாமல், அவர்களின் வலிகளை ஒளிப்பதிவு செய்து விற்றுவிடுகின்றான். இந்தக் கதையின், மிகப்பெரியக் கருத்து, இதுதான் வாழ்க்கை முறை என்று பெரும்பான்மையினர் விதித்த வரையறையானது, ஒரு சாதாரண மனிதனை எவ்வளவு மாசுள்ளவனாய் உருவாக்கி இருக்கின்றது என்பதுதான். கதையின் முடிவில், இப்படிப் பட்ட மனிதர்கள் வாழும் உலகத்தில் நாமும் வாழ்கின்றோம் என்பதை நினைத்து நிச்சயம் வெட்கப்படுவீர்கள்.

### 09. உடன் நின்றவர்களின் உணர்ச்சியின்மை
*(Bystanders Apathy)*

தமிழ் சினிமாவின் திரைக்கதைத் தாரக மந்திரமே இப்பொழுது நாம் அறிந்துகொள்ளப் போகும் சமூகஉளவியல்தான். கண்ணுக்கு முன்னே கொடூரங்களும், அநியாயங்களும் நிகழ்ந்துகொண்டே இருக்கும். ஆனால் ஒருபோதும் நம் தலையீடு அதில் இருக்காது. சற்றுத்தொலைவில் சென்று, 'கலிகாலம்' என்று தலையில் அடித்துச் செல்ல மட்டும் நாம் தவறியதே இல்லை. இந்த அநியாயத்தை தட்டிக் கேட்க யாராவது வர மாட்டார்களா? என்று மனம் குமுறிக் கேட்கத் தெரியுமே அன்றி, அதைத் தாண்டி, பிரச்சனையை சரி செய்ய நம்முள் ஒருவரும் எத்தனிக்காத சூழல், நிகழாமலில்லை. இந்தச் சமூக நோயைப் போக்க நாம் செய்தது என்ன? ஒரு மிகப்பெரிய நட்சத்திர நாயகனை, ஒரு திரைப்படத்தில் கதாபாத்திரமாய் கொண்டு, வெறும் திரைக்கதையில் தட்டிக் கேட்கச் செய்து, நம் ஆற்றாமையை போக்கிக் கொள்வதுதான் நாம் செய்த சாதனை. அப்படியும் இல்லை என்றால், இன்னும் ஒருபடி மேலே போய், அந்த நட்சத்திர நாயகனைக் கொண்டுசென்று அரசியல் களத்தில் நிற்கவைத்து அழகு பார்ப்பது. வேறு என்ன தெரியப்போகிறது நமக்கு? சரி, என் பினாத்தலைச் சற்று தள்ளி வைத்துவிட்டு, உங்களுக்கு ஒரு கதை சொல்கிறேன்.

*1964*ல், அமெரிக்காவில், *Kitty Genovese* என்ற விடுதி மேலாளரை, நள்ளிரவு பொழுதில், பலர் பார்க்கும்போதே, *Winston Marley* என்பவன் கத்தியால் குத்தி கொலை செய்தான். அந்தக் கொலையை தடுக்கவோ, அதன்பின், சாட்சியம் சொல்லவோ, அதைப்பார்த்த அங்கிருந்த மக்கள் ஒருவர் கூட வரவில்லை. மக்களின் மனநிலையைக் கண்டு அரசு மிகவும் வருத்தப்பட்டது. பத்து நாள் கழித்து, வேறு ஒரு கொள்ளையின் பொழுது, கைதான அந்தக் குற்றவாளி, தான் செய்த கொலையை தானே ஒப்புக்கொள்ள, அவனுக்கு மரண தண்டனை வழங்கப்படுகின்றது. பிறகு அது ஆயுள் தண்டனையாய்க் குறைக்கப்பட்டு, சிறையில் இருக்கும்போதே மார்ச் *28, 2016* அன்று இயற்கையாய் மரணமடைகிறான் அவன். ஒரு குழுவாக இருந்த மக்களின் மனோநிலை, அவர்கள் ஒரு சின்ன கத்திக்கு பயந்து போய் இருந்தார்கள் என்ற நிலைக்கு ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. அவர்கள் குழுவாய், அந்நிகழ்வைத் தட்டிக்கேட்டுத் தடுத்திருக்க முடியும். இருந்தும் அது நடக்கவில்லை. ஏன், நம்மூரில், பட்டப்பகலில், ரயில் நிலையத்தில், ஒரு பெண்ணின் கழுத்து அறுக்கப்படும் நேரத்தில், யாரும் தடுக்கக்கூட முன்வரவில்லையே! எதனால் இப்படி?

*Darley & Latane* இந்த சமூகஉளவியலை *1968*ல் ஒரு ஆய்வுக்கு உட்படுத்தினர். முகம் பெயர் தெரியாத மனிதர்கள் பலரை அழைத்து, தனித்தனி அறையில் அவர்களை அமர்த்தி, ஒரு இடைச் செய்தித் தொலைபேசியின் மூலம் ஒவ்வொருவரின் பிரச்சனையையும், மற்றவர்களிடம் கலந்து பேசுமாறு கேட்டுக் கொண்டார்கள். பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, குழுவில், தங்களால் நியமிக்கப் பட்ட ஒரு மனிதரை, மூச்சுத் திணறலால் பாதிக்கப்பட்டுச் சாகும் நிலைக்குச் செல்லப்போவதுபோல் நடிக்கச்சொன்னார்கள். அப்படி அவர் நடிக்கும் பொழுது, மற்றவர்கள் எவ்வாறாக நடந்துகொள்ளப் போகிறார்கள் என்பதைக் கவனித்தார்கள். கூட்டத்தின் அளவு பெரியதாக இருக்கும் பட்சத்தில், உதவி செய்யும் நபர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதை ஆய்வாளர்கள், இந்தச் சோதனையின் மூலம் கண்டுபிடித்தார்கள். மேலும் உதவி செய்யாமல் அமர்ந்திருந்தவர்கள்,




இக்கட்டான சூழ்நிலையாலும், குற்ற உணர்வினாலும் பாதிக்கப் பட்டவர்களாக இருப்பதையும் அவர்கள் கண்டறிந்தார்கள். அவர்களை விசாரிக்கும் பொழுது, தங்களுக்குள் ஏற்பட்ட அந்தத் தயக்கத்திற்கு (உதவி செய்யாமல் தயங்கி நின்றது) அவர்களால் ஒரு நியாயமான பதில் சொல்ல முடியவில்லை. இந்த ஆய்வின் முடிவைக் கேட்டறிந்த அரசாங்கம், ஒரு மனிதனாய், ஒரு குடிமகனாய், இடர் சூழ்நிலையில் தவிக்கும் பிறருக்குத் தானே முன்வந்து உதவவேண்டும் என்ற மனோபாவத்தை கொண்டு வர பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. தனித்தோ. அல்லது குழுவிலோ, இடரில் இருக்கும் சக மனிதருக்கு உதவுவது ஒரு மனிதனின் கடமையாக இருக்கின்றது என்பதை அந்நாட்டில் பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் கற்பிக்கப்பட்டது. விரைந்து செயல் பட, தொலைத்தொடர்பு கருவிகளையும், வழிமுறைகளையும் மக்களுக்கு அரசு அறிமுகப்படுத்தியது. அது அரசாங்கம்.

இந்த சமூகஉளவியல் முறையை வைத்து, பதைபதைக்கும் வகையில் பெல்ஜிய பிரஞ்சுத் திரைப்படம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. *38 Witnesses (2012),* என்ற ஆங்கில தலைப்பில், அந்தப் படம் வெளியாகி மக்களின் மனதை பெரிதளவு கவர்ந்தது. ஒரு அடுக்கு மாடிக் குடியிருப்பில், அனைத்துக் குடும்பங்களும் வேடிக்கை பார்க்க, ஒரு பெண் கோரமாகக் கற்பழித்துக் கொல்லப்படுகின்றாள். அந்தக் கொலையை தடுக்கவோ, அல்லது கொலையாளியை அடையாளம் காட்டவோ யாரும் முன் வரவில்லை. அந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் இருக்கும் ஒரு மனிதன், இதைக் கண்டு, மிகுந்த குற்ற உணர்வோடு வாழ்கின்றான். சக மனிதர் காட்டும் உணர்ச்சியின்மை அவனை வதைக்கின்றது. காவல் துறையினரை வேகப்படுத்திக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கப் போராடும் அந்தக் கதாப்பாத்திரம், தன் குற்ற உணர்வையும், வேடிக்கைப்பார்த்த மக்களையும், இறுதியில் அந்தக் கொலையாளியையும் எப்படிக் கையாண்டான் என்பது திரைக்கதையாய் நம் முன் விரிகின்றது. அனைவரும் பார்க்க வேண்டிய நவீன காலத் திரைப்படம். குறிப்பாய், எவன் எக்கேடு கெட்டால் எனக்கென்ன என வாழும் அடுக்குமாடிக் குடியிருப்புவாசிகள் பார்க்க வேண்டியப் படம்.

### 08. பேச்சுவார்த்தை அல்லது பேரம் பேசுவதின் உளவியல் *(Psychology behind bargaining)*

காலை முதல் மாலை வரை நாம் நடத்தும் இந்த நாடக வாழ்க்கையே ஒரு பெரும் பேரம்தான். ஒன்பது மணிக்கு வந்தா ஒழுங்காய் சம்பளம். ஏழு மணிக்கு மேல் வேலை செய்தால் இன்னும் அதிக சம்பளம். முதலாளியிடம் புறம் பேசும் சக ஊழியர்களை போட்டுக் கொடுத்தால் இன்னும் சிறப்பு. பணி உயர்வு, பணக்கார வாழ்க்கை, இன்னும் எத்தனையோ. ‘எவன் எப்படி இருந்தால் என்ன? நானும் என் குடும்பமும் நல்லா இருந்தா போதும்’ என்ற மனோநிலை. எட்டப்பர்களாகவும், எருமை மாடுகளாகவும் வாழத்தானே இன்றைய கல்விமுறை நம்மைத் தயார் செய்துள்ளது. ஒத்துழைப்பே எங்கள் தாரக மந்திரம் என்று தங்கள் நிறுவனத்தின் கொள்கை வடிவமைப்பில் எழுதி, ஊரெங்கும் விளம்பரப்படுத்திவிட்டு, உள்ளே ஒருவனுக்கொருவன் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் ஈடுபடலாம்; கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்று பிரச்சாரம் செய்துவிட்டு, சாதி அரசியல் பேசி வாக்காளரையும் பிரிக்கலாம். நமக்கென்று ஒரு தேவை வந்தால், அதனால், மற்றவர்களுக்கு ஏதேனும் தொந்தரவு இருக்குமா என்று யோசிப்பதே இல்லை. ஒரு உறவு முறையாகட்டும், அல்லது அரசியல் சூழலாகட்டும், சற்றும் யோசிப்பதேயில்லை. தன் முடிவே முக்கியம் என்று செயல்படாத ஆட்கள் யார் இங்கே? ‘நான் சொல்றத கேட்க முடியுமா முடியாதா? முடிஞ்சா இருப்பேன்; இல்லனா இருக்குறத எடுத்துகிட்டு அத்துட்டு போய்டுவேன் பாத்துக்க’னு சொல்லாதவர்கள் இந்தச் சமூகத்தில் மிகக் குறைவு. ‘இத்தனத் தொகுதி தான் வேணும், இல்லனா ஆள விடு. எனக்கு அந்த கட்சியில இன்னும் ரெண்டு தொகுதி சேத்து தராய்ங்க. அங்குட்டு போய்டுவேன் பாத்துக்க’ என்று சொல்லாத அரசியல்வாதி யாரு இங்கே? பேசிப் புரிந்துணர்வுக்கு வருவது பழக்கமே இல்லாத ஒன்றாய் மாறிவிட்டது. குடும்பம் முக்கியம் என்று இருக்கும் தம்பதிகள், பேச்சுவார்த்தையின்போது ஒருபோதும் பிரிவைக் கூறி மிரட்ட மாட்டார்கள். மக்கள் நலம் முக்கியம் என்று எண்ணும்

அரசியல்வாதிகள், கூட்டணி மாறிடுவேன் என்று மிரட்டித் தொகுதி கேட்க மாட்டார்கள். மிரட்டிப் பேரம் செய்யும் சுபாவம்தான் நம் சமூகத்தில் தலை தூக்கிக் கொண்டிருக்கின்றது. ஏன் இப்படி இருக்கின்றோம்?

Deutsch & Krauss, என்ற அறிஞர்கள், 1962ல் மனிதர்களின் இந்த பேர முறையைக் கண்டு வியந்து போய், எப்படிப்பட்ட பேரம் தோதாக இருக்கும் என்ற கேள்விக்கு ஒரு ஆய்வின் மூலம் விடை கண்டார்கள். இரண்டு நபர்களைத் தேர்வு செய்து, தொழிற்துறை விளையாட்டு (Business Board games) வகைகளில் ஒன்றான சரக்குப் போக்குவரத்து நிர்வாக விளையாட்டில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டனர். விளையாட்டில், ஒரு மிக எளிய பாதையின் இருமுனையிலும் ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் ஒரு சாவடியை எதிராளி சென்று சேரும் இடத்திற்கு முன்பாக அமைத்துத் தந்துள்ளனர். அந்தச் சாவடியைத் தாண்டிச் செல்வதற்கு, பங்கேற்பாளரின் எதிராளி அனுமதித்தாலே ஒழிய வேறு வகையில் அந்தத் தடத்தில் வண்டிகளை இயக்க முடியாது. அத்துடன், அந்த எளிய பாதை ஒரு வழிச் சாலையாக வேறு அமைக்கப்பட்டிருக்கின்றது. எனவே, பங்கேற்பாளர்கள், ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாமல் விளையாடும் பொழுது, எளிய வழியில் செல்லும் சரக்கு வாகனம், நேருக்குநேர் சந்தித்துக் கொண்டு, நகர முடியாமல் நடுவே நின்று விடுகிறது. அல்லது அடுத்த பங்கேற்பாளரின் சாவடியில் சென்று மாட்டிக் கொள்கின்றது. இதனால், இரண்டு பங்கேற்பாளர் களினாலும் சரக்கு போக்குவரத்தைச் சரியான முறையில் நிர்வகிக்க முடியவில்லை. நெடிய பாதையை தேர்வு செய்து, இருவரும் விளையாட்டில் தோல்வி அடைகின்றனர். இருவரையும் பேசி விளையாட அனுமதித்தப் பிறகும் கூட, ஒருவருக்கொருவர் எளிமையான ஒருவழிப் பாதையின் சாவடியில் வண்டியை நிறுத்தியும், ஒருமித்த கருத்துக்கு வராமலும் நட்டமடைந்தனர். ஆய்வாளர்கள், அவர்களை ஒருவருக்கொருவர் பேசிப் பழகி பின்பு விளையாட அனுமத்தித்தப் பொழுது, ஓரளவு சுமூகமான ஒரு சூழல் ஏற்பட்டு, ஒருவருக்கு ஒருவர் இடம் கொடுத்துப் போட்டியில் கணிசமான லாபத்தை இருவரும் ஈட்டினார்கள். இந்த ஆய்வின் முடிவு, நமக்கு மிகவும் பிரம்மிப்பூட்டும் முடிவுகளை சொல்லித் தருகின்றது. ஒருதடத்தில் இருவரும் வலுப் பெற்றவர்களாக மாற்று திசையில் சுங்கச் சாவடி அமைக்கும் பொழுதே சம பலம் பொருந்தியவர்களாக மாறிவிடுகின்றார்கள். இந்த நிலைமையில், ஒருவரை ஒருவர் மாறி மாறி தடுத்து நிறுத்தி மிரட்டிக் கொள்வதன் மூலம் இருவரும் நட்டமடைகின்றார்கள் தொழில்தான் முக்கியம் என்ற சூழ்நிலையில், பேசிப் புரிந்துணர்வு சூழலுக்கு வரும் பொழுது, இருவருமே லாபம் பார்க்கிறார்கள். சம பலம் பெற்ற அரசியல் கட்சிகள், தம்பதிகள், தேசங்கள், தங்களின் வலிமையை நிரூபிக்கும்வண்ணம் தன் சகாக்களை ஏதாவது ஒரு செயலின் வழியே மிரட்டுவதன் மூலம், அவர்களின் அடிப்படை ஆதாயத்தில்தான் சுணக்கம் ஏற்படுகின்றது என்பதை இந்த ஆய்வு தெளிவுபடுத்தி உள்ளது. மேலும் பரஸ்பரக் கருத்துப் பரிமாற்றத்தினால் ஒரு இணக்கமான முடிவுக்கு வரும் பொழுது, அவர்களின் உறவு செழிக்கின்றது, மேலும் அவர்களின் கொள்கையும் வெற்றி பெறுகின்றது. இதனால்தான், எப்பொழுதும், கட்சிகளிடையே பேச்சுவார்த்தை, சம பலம் வாய்ந்த நாடுகளின் கூடு பயிற்சி, விவாகரத்துக் கேட்கும் தம்பதிகளுக்கு கொடுக்கப்படும் புரிந்துணர்வு காலம் போன்ற நிகழ்வுகள் நடந்துகொண்டே இருக்கின்றது.

2010ஆம் ஆண்டு வெளிவந்த ஆங்கிலப் படமான Unthinkable (2010) திரைக்கதை, இந்த சமூகஉளவியல் முறையைக் கொண்டது. மிகுந்த பரபரப்பான காட்சி அமைப்புடன், அதிகபட்சம் ஒரு வீட்டுக்குள் நிகழும் இந்தக் கதையானது, முறையாகப் பேரம் பேசுவதின் அவசியத்தை நமக்கு உணர்த்துகின்றது. அமெரிக்க நாட்டின் முக்கியப் பகுதியில், பேரழிவு வெடிகுண்டை அந்நாட்டின் முன்னாள் அதிகாரி ஒருவன் மறைத்து வைத்திருக்கிறான். அது ஒரு



குறிப்பிட்ட நேரத்தில் வெடித்துவிடுமாறு அவன் செய்திருக்கின்றான். எத்தனை ஆயுதங்கள் அதுபோல அந்த நான்கு இடத்தில் வைக்கப் பட்டிருக்கின்றன, அவை எப்பொழுது வெடிக்கும் என்று யாருக்கும் தெரியாது. அந்நாட்டிடம் சிறந்த தொழில்நுட்பக் கருவிகள் இருக்கின்றன. மிகப்பெரிய ராணுவம் இருக்கின்றது. இருப்பினும் அந்நாட்டு அதிகாரியால் தங்கள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அந்த வெடிகுண்டு இருக்கும் இடத்தை விரைவில் கண்டு பிடிக்க இயலாத ஒரு சூழ்நிலை. இந்த நேரத்தில், கைது செய்யப்பட்ட அதிகாரியிடம் இருந்து உண்மையை வாங்குவதற்காக, குற்றவாளிகளிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் நிபுணரை அழைக்கின்றனர். ஆனால் அவர் பேச்சுவார்த்தையைத் தாண்டி அதிகாரத் தொனியில் விசாரிக்க ஆரம்பிக்கின்றார். பின்பு, அவர் அவனை, அவனது குடும்பத்தைக் காட்டி மிரட்டுகின்றார். வெடிகுண்டுகளின் இருப்பிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டதா? குண்டு வெடித்ததா? இந்த மிரட்டும் பேச்சு வார்த்தை யாருக்குச் சாதகமாய் அமைந்தது? போன்ற கேள்விகளுக்கு விடைதருமாறு திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது. ஒரு பேச்சுவார்த்தை அல்லது விசாரணை முறை எப்படி இருக்கவேண்டும் என்று இந்தப்படம் பார்த்தப் பின்பு நீங்களும் புரிந்துகொள்வீர்கள்.

### 07. சமூக அடையாளக் கோட்பாடு
*(Social Identity Theory)*

இங்கு எல்லோருக்கும் ஒரு பிரிவு இருக்கின்றது. இல்லையென்றாலும் பிரிவில் சேர்க்கப்படாதவர்கள் என்று ஒரு பிரிவு இருக்கின்றது. தனி மனிதனுக்கு ஏன் பிரிவுகள் தேவைப்படுகின்றன? என் மொழி, என் இனம், என் சாதி என்று நாம் பிரிவினைவாதம் பேசுவதற்கு எது காரணம்? நம் சமூக அமைப்புதான் காரணம். கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு கடவுள் இல்லை என்று ஒரு பிரிவு, அதே கருப்புச் சட்டையைப் போட்டுக்கொண்டு இவர்தான் கடவுள் என்று ஒரு பிரிவு. எந்தப் பிரிவில் நாம் இருக்க முற்படுகின்றோம்? அம்மா அப்பா உறவினருக்காக வீட்டில் ஒழுக்கமானவன் என்ற பேர் வாங்கிக்கொள்வதற்கு ஒரு கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு மலையேறுகின்றோம். நண்பர்கள், தலைவர்கள், சக வேலையாட்கள் முன்பு ஒழுக்கமானவன், பகுத்தறிவாளன் என்ற பெயர் வாங்குவதற்காக ஒரு கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு போராட்டக் களத்தில் இறங்குகின்றோம். ஏன் இப்படிப்பட்ட ஒரு முரணோடு மனிதன் வாழ்கின்றான்? ஒரு பிரிவு சார்ந்தவனாக தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள அவன் ஆசைப்படுவதின் உளவியல்தான் என்ன?

*1972ல், Henry Tajfel* மற்றும் அவருடைய சக ஆய்வாளர்கள், இந்தப் பிரச்சனைக்குப் பின் இருக்கும் உளவியலை புரிந்து கொள்ள முயற்சிக்கின்றார்கள். சம்பந்தமே இல்லாத, ஒருவருக்கொருவரை தெரியாத மாணவர்களை அவர்களது ஆய்வுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். *Klee & Kandinsky* வரைந்த படங்களில் ஒரு படத்தைத் தேர்வு செய்யுமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். தேர்வு செய்த படங்களின் அடிப்படையில் அவர்கள் இரு குழுக்களாகப் பிரிக்கப்படுவர் என்பதை முன்னமே அவர்களிடம் கூறிவிடுகின்றார்கள். இந்தச் செயல்பாடு முடிந்தவுடன், ஒருவருக்கொருவர் தெரிந்து கொள்ளா வண்ணம் அவர்கள் தேர்வாகியிருக்கும் அணியின் பெயரைக் கூறிவிடுகின்றார்கள். பின்பு அவர்களை, சம்பந்தமே இல்லாமல், செயற்கைப் பணத்தை மற்ற மாணவர்களுக்கு விநியோகிக்குமாறு ஒவ்வொரு மாணவர் களையும் அவர்கள் கேட்டுக்கொள்கின்றார்கள். இந்த விநியோகத்தின் பொழுது, மற்ற மாணவரின் முகமோ அல்லது பெயரோ தெரியா வண்ணம் அவர்கள் தனித்தனி அறைகளில் அமரவைக்கப் பட்டனர். விநியோகிக்கும் மாணவரிடத்து, எதிர் அறையில் இருக்கும் மற்ற மாணவனின் அணி விவரத்தையும் அவனின் அடையாள எண்ணையும் மட்டுமே ஆய்வாளர்கள் சொல்கின்றார்கள். இந்த செயல்பாட்டின் முடிவு, வழக்கம்போல ஆச்சரியப்படுத்தும் விதமாக இருந்தது. முன்பின் தெரியாத, ஒரு மாணவன், தான் சார்ந்த அணி என்பதற்காக மட்டுமே அவனுக்கு அதீத பணம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. நடந்த செயல்பாட்டின் மூலம் அவர்களுக்கு எந்த ஒரு உண்மையான லாபமும் கிடையாது. அது வெறும் செயற்கைப் பணமே. இருந்தும், தான் சேர்ந்த அணிக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதனைச் சார்ந்த மாணவர்களுக்கு இந்த ஆய்வின் செயல்பாட்டில்

அதிக பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. காரணம், தான் சார்ந்த பிரிவு, அதீத பணம் உள்ள, கவுரவமான ஒரு அணியாய் திகழ வேண்டும் என்பதே. அது மட்டும் அல்ல, தாங்கள் வளர்ந்தவர்கள், சிறந்தவர்கள் என்று வெளியே காட்ட, ஒரு வளர்ச்சி அடையாத, மந்தமான ஒரு அணி தேவைப்படுகின்றது. இந்தப் பேதமையை ஏற்படுத்துவதன் மூலமாய்த் தான், தனக்கென ஒரு அடையாளத்தை, தான் வாழும் சூழலில் உருவாக்க முடியும் என்று நம் மனம் சிந்திக்கின்றது. அதனால் தான், மற்ற அணியைச் சேர்ந்த மாணவர்களுக்கு மிகக்குறைவான பணம் கொடுக்கப்பட்டுள்ளது. பணமே கொடுக்காமல் இல்லை. ஆனால் குறைந்த பணம் கொடுக்கப்பட்டுள்ளதை இங்கு நீங்கள் கவனிக்க வேண்டும்.

*Roman Polanski* இயக்கத்தில், ஒரு பிரஞ்சு நாடகத்தைத் தழுவி எடுக்கப்பட்ட 2011ல் வெளிவந்த *Carnage* (2011) என்ற திரைப்படத்தை மேற்கூறிய சமூக உளவியலுக்கு ஒரு எடுத்துக்காட்டாய் நாம் இங்கு பார்க்கலாம். இரண்டு சிறுவர்களுக்கு நடுவே ஒரு சண்டை. அதைப்பற்றி பேசுவதற்காக அவர்களின் பெற்றோர்கள் மட்டும் ஒரு வீட்டில் சந்திக்கின்றார்கள். பிரச்சனையைப் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, அவர்களுக்கு நடுவே அவரவர் சார்ந்த பிரிவின் மேல் கருத்து விவாதம் முட்டிக்கொள்கின்றது. ஒவ்வொருவரும் தங்களின் பிரிவில் உள்ள நியாய அநியாயங்களைப் பேசுகின்றார்கள். ஒருவரின் சமூக அடையாளத்தை மற்றவர் இழிவுபடுத்துகிறார். பிரச்சனை




பெரிதாகிக்கொண்டே இருக்கின்றது. ஒரு கட்டத்தில்,சண்டையிட்ட இரண்டுசிறுவர்களும் சேர்ந்து விளையாட சென்றுவிடுகின்றார்கள். பெரியவர்கள் தங்களது சமூக அடையாளத்தை நிறுத்திக்கொள்ளும் பொருட்டு, எந்தப் பிரச்சனையை பேச வந்தார்களோ அதை விடுத்து, மற்ற ஒரு பிரச்சனைக்காக சண்டையிட்டுக் கொண்டிருப்பார்கள். இன்று அற்ப நிகழ்வுகளுக்கு நடக்கும் சண்டைகளும், தேவையற்ற சச்சரவுகளுக்கு ஊடகம் கொடுக்கும் முக்கியத்துவமும், படம் பார்க்கும் பொழுது நம் கண் முன்னே நிழலாடும்.

## 06. பொய்யான கருத்தொற்றுமை

*(The false consensus bias)*

‘எல்லாவற்றிலும், எல்லா நிகழ்வுகளைப் பற்றியும் எனக்கு ஒரு கருத்து உண்டு. அது தான் மிகவும் சரியானது. நான் மட்டும் அல்ல, என்னைச் சுற்றி மற்ற பலரும் அதைத்தான் ஆமோதிக்கிறார்கள்’ என்று தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்தான் என்று கூறி வாதாடி, அதற்குச் சாட்சி சொல்லப் பக்கத்து நபரைக் கூட்டிக்கொண்டு வரும் மனிதர்களைத் தான், நம் அன்றாட வாழ்வில் பார்த்து வருகின்றோம். தனக்கென ஒரு கருத்து உள்ளது, அது என் தனிப்பட்ட விருப்பு வெறுப்புச் சார்ந்தது என்று முதலில் கூறிப் பழக மாட்டார்கள். சொன்ன கருத்துக்குக் கடும் எதிர் குரல் பெரும்பான்மையினரிடமிருந்து வந்தபின்பு, இது என் தனிப்பட்ட கருத்து என்று கூறி, தங்களை நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். இந்த சம்பவங்கள் எல்லாம் சமூக வலைத்தளங்களில் நடக்காதவையா என்ன? தான் சொல்வதைத்தான் பலரும் நினைக்கின்றார்கள் என்ற மனநிலை எங்கிருந்து வருகின்றது? தன்னைச் சுற்றி நாம் சேர்த்து வைத்திருக்கும் மனிதர்களில் பெரும்பான்மையானோர், நம்மோடு கருத்தொற்றுமை உடையவர்களே. மிச்சம் பலரை நாம் சந்தித்ததுகூடக் கிடையாது. இந்த நிலையில் அவர்களுக்கும் சேர்த்துத் தானே கருத்துக் கூறிவிட்டு, அதுதான் சரியாக இருக்கும் என்று நம்புவது எவ்வளவு அபத்தமானது. நம்மைச் சுற்றிப் பாருங்கள். ‘வாழ்க பாரதம் என்று சொன்னால்தான் இந்தியன், வளர்க தமிழ் என்று சொன்னால் தேசத்துரோகி’

என்று ஒரு பிரிவு சுற்றுகின்றது. ‘உலகத்திற்கே மூத்தவன் தமிழன்தான். நாங்கள் எப்படி வேண்டுமானாலும் இருப்போம்’ என்று ஒரு குழு கத்திக்கொண்டிருக்கின்றது. இந்த முடிவுக்கு வந்த நபர்களின் சமூக உளவியல்தான் என்ன? தனக்குத் தலையாட்டும் பொம்மைகளை மட்டும் சுற்றி வைத்துக்கொண்டு, ஒரு முடிவுக்கு வந்துவிட்டு, அதுதான் தலையானது; மக்கள் அதைத்தான் ஆணித்தரமாக நம்புகின்றார்கள் என்று அழுத்தம் திருத்தமாக சொல்லிக் கொண்டிருப்பதின் விளைவுதான் என்ன? வைப்புத்தொகைக்குக் கூட வக்கில்லாத தேர்தல் தோல்விதான் கடைசியில் சந்திக்க நேரிடும். இந்த மனநிலைக்கு என்னதான் காரணம்?

*1977ல், Ross, Green & House* ஆகியோர்களைக் கொண்ட ஆய்வுக்குழு, ஒரு சோதனையில் ஈடுபட்டது. ஒரு குறிப்பிட்டக் கணக்கில், முன்பின் தெரியாத நபர்களை அழைத்து வந்து, அவர்களுக்கு ஒரு செயல்பாடு வழங்கப்பட்டது. அவர்களின் முன், ஒரு அனுமானிக்கப்பட்ட இக்கட்டான சூழல் விளக்கிச் சொல்லப்படுகின்றது. அந்தச் சூழலில், பொதுவாக மக்கள் எப்படிப்பட்ட முடிவுகளை எடுத்தால் சரியாக இருக்கும் எனக் கேட்கப்பட்டது. அவர்கள் எப்படிப்பட்ட முடிவை அந்தச் சூழலில் எடுப்பார்கள் என்றும் கேட்கப்பட்டது. கடைசியாக, தாங்கள் எடுத்த முடிவுக்கு மாற்றாக முடிவெடுத்தவர்களைப் பற்றி அவர்கள் என்ன நினைகின்றார்கள் என்றும் கேட்கப்பட்டது. முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே இருந்தன. முதல் கேள்விக்குப் பதில் சொன்னவர்களிடம், கேட்கப்பட்ட இரண்டாம் கேள்விக்கு, பொதுவாக மக்கள் என்ன முடிவெடுப்பார்கள் என்று கூறினார்களோ அதே முடிவைத்தான் தாங்களும் எடுப்போம் என்று அவர்கள் கூறினார்கள். அந்த முடிவை எடுக்காத மற்றவர்களுக்கு, ஏதோ அடிப்படைப் பிரச்சனை இருப்பதாகவே அவர்கள் கருதினார்கள். இந்த கடைசிக் கேள்விக்கான பதில் பெரும் புதிராக இருந்தது. அனுமானிக்கப்பட்ட இடர் சூழ்நிலையில் எடுக்கப்பட வேண்டிய முடிவுக்கு ஒன்றும் பெரும்பான்மையான விடைகள் கிடைக்கவில்லை. இருந்தும், தாங்கள் கருதும் முடிவை எடுக்காத மற்றவர்களுக்கு, அடிப்படையில் பிரச்சனை இருப்பதாகக் கருதும் மனிதனின் சமூகஉளவியல் வியப்பில் ஆழ்த்துவதாக அமைகின்றது. இதற்குக் காரணம், அன்றாடம் அவர்களைச் சுற்றி இருக்கும் குடும்ப நபர்கள், நண்பர்கள், பக்கத்து வீட்டு ஆட்கள் போன்றவர்களே. அவர்களைச் சார்ந்தே இவர்களின் முடிவெடுக்கும் திறமை வடிவமைக்கப்படுகின்றது. இதனால் தான் ஒரு நல்ல தலைவர் இந்த தேசத்தில் உருவாவதில் பிரச்சனை நிலவுகின்றது. அடித்தட்டு, நடுத்தட்டு, மேல்தட்டு மக்களைப் புரிந்த ஒரு தலைவன் உருவாவதே இல்லை. வளர்ந்த பாரதத்திற்கு, எது தேவை என்பதில் இன்னும் கட்சிகளுக்கு நடுவே குழப்பங்கள் சூழ்ந்திருக்கின்றது. இதனால் தான், வளரும் பொழுதே குழந்தைகள், மற்ற மாநிலங்களுக்குப் பயணித்து, மற்ற மனிதர்களோடு பழகி, அவர்களின் தேவை என்னவென்று புரிந்துகொள்ள அவர்களைப் பழக்குவது அவசியமாக இருக்கின்றன. அப்படித் தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தின் தேவையை அறிந்து கொண்ட ஒரு மாணவச் சமூகம்தான், தனக்கென ஒரு தொலைநோக்குத் திட்டத்தைத் தீட்டிக்கொண்டு, அதைச் சார்ந்த படிப்புக்கு பயணித்துப் பட்டம் பெற்று, அந்த மக்களுக்காகப் போராடி இந்த சமூகத்தை முன்னே இழுத்துச் செல்லும். பத்திற்கும் மேற்பட்ட நுழைவுத்தேர்வு எழுதியோ, நல்ல தொழிற்சாலையை அல்லது தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் கல்லூரிகளைப் பார்வை இடுவதாலோ சிறந்ததோர் மாணவச் சமுதாயம் அமைந்துவிடாது.

*2006ல், Christopher Nolan* இயக்கி வெளிவந்த *The Prestige (2006)* திரைக்கதை இந்த சமூக உளவியல் உத்தியை மையப்படுத்தி வெளிவந்ததுதான். கதையில், இரண்டு தந்திரவாதிகள் மக்களை மகிழ்வூட்ட தந்திர நிகழ்வுகளை நடத்திக் காட்டுகின்றார்கள். ஒருவருக்கொருவர் அற்புதமான தந்திர உத்திகளைக் கையாண்டு மக்களை வியப்பில் ஆழ்த்தி மகிழ்விக்கின்றார்கள். இருந்த போதும் அதில் ஒரு தந்திரவாதி, மற்ற தந்திரவாதியை விட அதியற்புதமான தந்திரக்காட்சியை மக்களிடம் காண்பிக்க அவனுடன் போட்டிபோடுகின்றான். அதற்காக, கடுமையாக உழைத்து, பதைபதைக்கும் காரியத்தைச் செய்கின்றான். கடைசியாக, மற்ற தந்திரவாதியின், மக்கள் அதிகம் விரும்பிய ஒரு தந்திரக்காட்சிக்கு

இணையான ஒரு தந்திரக்காட்சியை அவனும் நிகழ்த்துகின்றான். ஆனால் அந்த தந்திரக்காட்சிக்கு அவன் செய்தச் செலவு உங்களை வியக்க வைக்கும். இறுதியில், ஒரு சாதாரண முறையில் அழகாகத் தந்திரம் செய்த தன் எதிராளியின் முன், பெருஞ் செலவு செய்து நிகழ்த்தியத் தன்னுடைய தந்திரக்காட்சி இணையற்றதாய்ப் போனதை உணர்கின்றான். மக்களை வியப்பில் ஆழ்த்த, பெரும்செலவுதான் செய்ய வேண்டும் என்று நம்பி, இருந்த அந்த தந்திரவாதி, மக்களுக்குச் சாதாரண முறையில் கேளிக்கைக் காட்டினாலே போதுமானது என்று சரியாக அறிந்திருந்த மற்ற தந்திரவாதியிடம் தோற்றுப் போகின்றான். இருப்பினும் இவர்களுக்கு நடுவே ஏற்படும் கௌரவப் பிரச்சனையில், இருவரும் என்னதான் இழந்தார்கள், என்னதான் பெற்றார்கள் என்பதை வைத்துக் கதை ஒரு முடிவுக்கு வருகின்றது. கதையின் முடிவு மிரட்சி ஊட்டுவதாக நிச்சயம் இருக்கும்.




### 05. கீழ்ப்படிதல் சோதனை

*(Obedience Experiment)*

பள்ளிக்கூடத்தில் பேசாமல் அமைதியாய் ஒரு வகுப்பில் இருந்ததாய் நம்மில் யாருக்கேனும் நினைவு இருக்கின்றதா? விடுப்பெடுக்காமல் நாம் பள்ளி சென்ற வருடம் ஞாபகத்தில் இருக்கின்றதா? இன்று உங்கள் நிலைமையைச் சற்று யோசித்துப் பாருங்கள். காலை எட்டு மணிக்கு வேலைக்கு வரவேண்டும் என்றால், ஆறு மணிக்கே கிளம்பி, சரியான நேரத்திற்குள் அலுவலக வாசலுக்கு உள்ளே செல்லுகின்றோம். இரவு பத்து மணிக்குத்தான் திரும்ப வீடு செல்ல வேண்டும் என்றால் எந்திரம் போல அமைதி காத்து உடல் உழைப்புக் கொட்டி வேலை செய்கின்றோம். ஏன் என்ற கேள்வி கேட்பதே இல்லை. மாத முடிவில் சம்பளம் வந்தால் போதும். கொடுக்கும் வேலையை செய்துவிட்டு, மனசாட்சிக்கு விரோதமாய் நான் எதையுமே செய்யவில்லை என்று நம்மை நாமே ஆறுதல்படுத்திக் கொள்கின்றோம். நம்நாட்டின் மனிதவளம், மற்ற தேசத்துப் பொருளீட்டாளர்களால் மிகக் குறைந்த விலையில், உறிஞ்சி எடுத்துக் கொள்ளப்படு கின்றது. நம் தேசத்தின் பொருளாதாரம் இன்றும் வளர்ந்த பாடில்லை. ஒரு பக்கம் காசைக் கொட்டி கொடுப்பது போல கொடுத்து, மறு பக்கம், விளம்பரங்கள் மூலம் அவர்கள் பொருளை உள்ளூர் சந்தையில் விற்று, கொடுத்த சம்பளத்தை விட அதிகமாக லாபம் சம்பாரிக்கின்றார்கள். எனக்கென இரண்டு நாற்சக்கர வாகனம் வாங்கி, சாலையே சரியாக இல்லாத இந்தத் தேசத்தில் எங்கு ஓட்டப்போகின்றேன் என்று கேள்விகூட கேட்கத் தெரியவில்லை. மாங்கு மாங்கு என வேலை பார்த்து வீட்டையும் வாகனத்தையும் வெறும் விளம்பரங்களைக் கண்டு வாங்கிப் போட்டுவிடுகின்றார்கள். வாங்கிய வீட்டில் வாழும்பொழுது தங்காமல், கோவாவில் தான் சொர்க்கம் இருப்பதாகக் கருதி, அங்கு சென்று செலவு செய்கின்றார்கள். இந்த மனித சமூகத்தின் உளவியல் இன்று ஏன் இப்படி இருக்கின்றது? அரசன் சொன்னான் நான் கொன்றேன் என்று அன்று சொன்னதற்கும், முதலாளி சொன்னார் நான் செய்தேன் என்று இன்று சொல்வதற்கும் என்ன வித்தியாசம்? நமக்கெதற்கு இந்தச் சனநாயகம்? எதில் கீழ்ப்படிந்தோம் எதில் கீழ்ப்படியவில்லை என்பதை வைத்து ஒரு உளவியல் இருப்பதை உங்களுக்கு நான் சொல்லுகின்றேன். தயவு செய்து கேளுங்கள்.

1963ல், உலகப்போரின் போது மக்களை மலைமலையாய்க் கொன்றுக் குவிக்க எப்படி வீரர்களுக்கு மனம் வந்தது என்றக் கேள்வியை நோக்கி, Milgram என்னும் ஆய்வாளர் ஒரு சோதனையை நிகழ்த்தினார். ஒரு வாத்தியார் ஒரு மாணவனுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் சூழ்நிலையை அவர் ஆய்வரங்கத்தில் உருவாக்கினார். பல மனிதர்களை ஆசிரியர் பாத்திரத்தில் கலந்துகொள்ளுமாறு அவர் அறிவுறுத்தினார். பத்து வார்த்தைகளை ஆசிரியர் மாணவருக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். அந்தப் பத்து வார்த்தையை மாணவர் சரியான வரிசையில் திரும்பச் சொல்ல வேண்டும். தவறும் பட்சத்தில், தவறொன்றுக்கு ஒரு குறிப்பிட்ட மின்சார அளவு மாணவருக்குத் தண்டனையாய்ச் செலுத்தப்படும். தவறு அதிகரிக்கும் பொழுது, மின்சாரம் மாணவரை நிலைகுலையும்

அளவிற்குச் செலுத்தப்படும். இந்த முறையை அறிந்தே அனைவரும் கலந்துகொண்டனர். தவறுக்குத் தண்டனை வழங்கும் ஆசிரியர் கதாப்பாத்திரத்தில் இருக்கும் நபரின் மனோநிலையை அவர் ஆராய்ந்தார். எதிரில் இருக்கும் மாணவர் கதறும் பொழுதும், பலர், தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை ஈவிரக்கமின்றி செய்தனர். சிலர் மனம்வருந்திச் செய்தனர். வெகு சிலரே ஆய்விலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டனர். இத்தனைக்கும், எதிர் பக்கத்தில் மாணவனாக ஆய்வாளர் அவர்களால் நியமிக்கப்பட்ட ஒரு நடிகரே அமர்ந்திருந்தார். மின்சாரம் தாக்கி வலிப்பது போல அவர் நடிக்க மட்டுமே செய்தார். ஆனால் இது எதிர்பக்கத்தில் இருப்பவர்களுக்குத் தெரியாத வண்ணம், அறைக்கு நடுவே சுவர் ஒன்று எழுப்பப்பட்டிருந்தது. இந்த ஆய்வின் முடிவு நமக்கு சொல்லவரும் கருத்து கவனிக்கத்தக்கது. அதிகாரத்தில் இருக்கும் ஒருவர், தனக்குக்கீழ் வேலைபார்க்கும் ஒருவருக்கு எந்த விதத்திலும் பிரச்சனை வராது என்று உறுதிப்படுத்தும் வண்ணம் பேசி, அவர்களுக்குக் காசு கொடுத்து மனிதாபிமானமற்ற வேலையை வாங்கும் பொழுது, அறநெறிகளையும் மீறி ஒரு குழுவில் வேலைபார்க்கும் நபர் தன் வேலையைச் செய்து முடிக்கின்றார். இன்றைக்கு நாம் வாழும் சூழலைப் பாருங்கள். பாதி பேர் பிழைப்புக்காக அதிகார வர்க்கத்தின் ஆளுமையின்கீழ் சிக்கி நாட்டைக் கெடுக்கும் அநியாயம் உங்களுக்குப் புரியும்.




*2006*ல், ஜெர்மானியத் திரைப்படமாய் வந்த *The Lives of Others (2006)* மேற்கூறியச் சமூக உளவியல் பிரச்சனையை மையப்படுத்தியதே. இந்தக் கதையில், தனக்கிட்டக் கட்டளையின் படி, ஒரு குறிப்பிட்ட குடும்பத்தை, ஒரு ராணுவ வீரன் வேவுபார்க்கின்றான். அன்றாடம் வேவு பார்த்து தன் அதிகாரிகளுக்கு அறிக்கையை அனுப்பி வைக்கின்றான். அரசாங்கத்திற்கு எதிராக வேலை பார்க்கும் அந்தக் குடும்பத்தில், ஓர் எழுத்தாளன் இருக்கின்றான். தேசத்திற்கு எதிராக எழுதுவதாக கருதப்பட்ட அவனை, அந்த வீரனைக் கொண்டு வேவுபார்க்க அரசு முடிவு செய்தது. எழுத்தாளரின் மாற்றுச் சிந்தனையிலும், கொள்கையிலும் மூழ்கிப்போன அந்த வீரன், தன் அரசாங்கத்தின் போக்குச்சரியானதல்ல என்ற முடிவுக்கு வருகின்றான். அவன் அந்த எழுத்தாளனை காப்பாற்றினானா? அல்லது அரசிடம்காட்டிக்கொடுத்தானா? என்பதைக் கொண்டு கதை விறுவிறுப்பாக நகரும். அரசுக்குக் கீழ்படிந்த வீரனின் நிலைமை என்னவென்று கதையின் முடிவு நமக்கு விளக்கும். கண்களை கலங்க வைக்கும் கதைக்களம்.

அந்தப்படத்தைத் தவிர, இந்தச் சோதனை முறையையும், ஆய்வாளர் *Milgram*ன் வாழ்க்கைமுறையையும் விளக்கும் வகையில் ஒரு படம் வெளிவந்துள்ளது. அந்தப்படத்தின் பெயர், *Experimenter (2015)*. இந்தத் திரைக்கதை, இந்தச் சமூக உளவியல் முறையைப் பற்றி இன்னும் தெளிவாய் விளக்கும். அனைவரும் பார்க்க வேண்டிய படம்.

### 04. அதிகார உருமாற்றத்தின் விளைவு
*(Stanford Prison Experiment)*

காலையில் வந்து அனைவரிடமும் சிரித்து மகிழ்ந்து தனக்கான கடமைகளை சரியாகச் செய்து அலுவலகத்தை விட்டுச் செல்லும் நல்ல நபர் அவர். ஆயினும் வீட்டுக்குச் சென்று அவரைப் பற்றிக் கேட்டால், மிரட்டும் தனத்தை, முரட்டுக் கணவன் என்று சொல்கின்றார்கள். அலுவலகத்தில் சாதுவாய் அனைவருடனும் இணங்கி வாழும் ஒரு நபர், மாலைப் பொழுதில் எப்படி இவ்வளவு வித்தியாசமாய் நடந்துகொள்ளக்கூடும் என்ற கேள்விக்கு என்ன விடை சொல்வது? மனிதன் தனக்குத் தேவையான இடத்தில் தேவையான முகமூடியை மாட்டிக்கொண்டு ஒரு கதாப்பாத்திரமாக வாழ முற்படுகின்றான். ஏனென்றால், இங்கு ஒரு குறிப்பிட்ட முகங்களை மட்டுமே அலுவலுக்கு பயன்படுத்த முடியும். மனிதனின் பன்முக குணங்கள் அவனைச் சந்தையில் வியாபாரப்படுத்த முடியாத

ஒரு பொருளாய் மாற்றிவிடுகின்றது. நன்கு படித்த பொறியியல் மாணவனுக்கு வங்கியில் வேலை வாங்கித் தாருங்கள். மருத்துவம் படித்த மாணவனுக்கு மாவட்ட ஆட்சியர் வேலை வாங்கித் தாருங்கள். ஒரு முகமூடி கொடுத்து ஒன்று செய்யச் சொல்லிவிட்டு, வேறொரு முகமூடியை வலுக்கட்டாயப்படுத்தி மாற்றிவிடும் குடும்ப சூழலில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவனுக்குள் உருவாகும் குரூரங்கள் யார் மேல் பாயப்போகின்றது? நாளை வரும் மனைவியிடமும் பிள்ளைகளிடமும்தான். ஒரு சாதாரண சமூகத்தில் வாழும் மனிதனை எது கொடுமையானவனாக மாற்றுகின்றது? நீங்கள் அவனுக்கு அமைத்துக் கொடுக்கும் சந்தர்ப்பம் தான். ஆனால் அது உண்மையா?

1971ல், *Zimbardo* அவர்களால், ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தின் கீழ்த்தளத்தில் நடத்தப்பட்ட ஆய்வு, நாம் மேலே கேட்ட கேள்விக்குப் பதிலாய் அமைகின்றது. முன்பின் தெரியாத மனிதர்களை இந்த ஆய்வுக்கு உட்படுத்துகின்றார்கள். ஆய்வில் பங்கேற்றவர்களுக்கு, ஒரு நாடகச் சூழல் தரப்படுகின்றது. குறிப்பிட்ட மக்கள் காவலர்களாகவும், மற்றவர்கள், சிறைக் கைதிகளாகவும் இருக்கவேண்டும். இதற்கு ஒப்புதல் தெரிவித்தவர்களை, ஆய்வில் சேர்த்துக்கொண்டார்கள். திடீர் என்று ஒரு நாள் கைதிகளாக தேர்வு செய்யப்பட்டவர்களை, அவர்களுக்குத் தெரியப்படுத்தாமல், பொதுவாக குற்றவாளிகளைச் சாலையில் பிடிப்பதைப் போலவே பிடித்துப், பல்கலைக்கழகத்தின் கீழ்த்தளத்தில் ஒரு சிறைச்சாலையை உருவாக்கி, அதில் அவர்களை அடைத்தார்கள். இதில் ஈடுபட்ட காவலாளிகளும் மற்றவர்களைப் போல தன்ஆர்வலர்களே. முதல் சில நாட்கள் அமைதியாகச் சிறைச்சாலை இருந்தது. போகப்போக, கைதிகள் காவலாளிகளிடத்தே தகராறில் ஈடுபட்டனர். மிகவும் சாதாரணமான வாழ்க்கை முறையில் வாழும் மனிதர்களுக்குத் தங்குதடையின்றி காவலர்கள் என்ற அதிகாரம் வழங்கியபொழுது, சக மனிதர்களை, உண்மைச் சிறைச்சாலையில் கொடுமைப்படுத்துவது போலவே கொடுமைப்படுத்த ஆரம்பித்தார்கள். நிர்ணயிக்கப்பட்ட நாட்களுக்கு முன்னரே, இந்த ஆய்வு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. நிலைமை மோசமாகாமல் பார்த்துக்கொள்ளப் பட்டது. இந்த ஆய்வின் முடிவு, அதிகாரம் கிடைக்கும் மனிதனின் மனோபாவம் சரியாக இல்லையென்றால், அதைத் தவறாக பயன்படுத்த முயலுவான் என்று கூறியது. இன்றும் உயர் பதவியில் வருபவர்களுக்குத் தகுந்த முறையில் நேர்முகத் தேர்வு நடத்தி பதவி வழங்குகின்றார்கள். இருந்தும் படித்து வந்த ஆட்சியாளர்களிடையே அதிகமாக விதிமீறல்கள், மனித நேயமற்ற குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இது கூட பரவாயில்லை, அரசியல்வாதிகளுக்குக் குற்றப்பின்னணி இருந்தும் நம் மக்கள் வாக்களித்து அதிகாரம் கொடுப்பது தான் வேடிக்கை. சாதுவான பையனைத் திருமணம் செய்துவைக்காமல், உளவியல் சிக்கல் இல்லாதவனை தேர்வு செய்யும் முறை பெற்றோர் பார்த்துவைக்கும் திருமணத்தில் நடக்கப் போவதே இல்லை. காதல் திருமணங்களில் ஓரளவு இந்த அதிகார மீறல்கள் குறைந்தே காணப்படுகின்றது.

2001ல், *Robert Redford* நடித்து வெளிவந்த அமெரிக்கத் திரைப்படமான *The Last Castle*




(2001), இந்த உளவியல் சிக்கலை எடுத்துக்காட்டும் திரைக்கதையாய் நாம் கருதலாம். கதையில், ராணுவச் சிறைச்சாலையில், போர்க்குற்றம் மற்றும் அதிகாரத்திற்கு இணங்காமல் நடந்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்படுகின்றார் ஒரு ராணுவ உயர் அதிகாரி (கதாநாயகன்). அவருக்கும் சிறைச்சாலை உயர் அலுவலருக்கும் இடையே இருக்கும் கவுரவப் பிரச்சனை, சிறையில் கைதிகளை ஒரு குழுவாகவும், காவலாளிகளை ஒரு குழுவாகவும் உருவாக்கிவிடுகின்றது.

இறுதியில், நடக்கும் கடுமையான சண்டையில், சிறைக்காவலர் தனது அதிகாரத்தை அளவுக்கு மீறிப் பயன்படுத்தி கைதிகளை அடக்க முயல்கின்றார். இந்த அதிகார மீறல், கைதிகளை வேறு ஒரு பாதையில் போராட வைக்கின்றது. இறுதியில் நிகழும் கலவரத்தில், யாருக்கு என்ன ஆனது என்பதைச் சொல்லும் திரைக்கதையாய் இப்படம் அமைந்திருக்கும். மனதுக்கு நெருக்கமான படமாய் இது நிச்சயம் அமையும். சமீபத்தில், *2015*ல், *Stanford Prison Experiment (2015)* என்ற ஒரு திரைப்படம், இந்த ஆய்வு நிகழ்த்தப்பட்ட விதத்தை ஆவணப்படுத்தும் வகையில் எடுக்கப்பட்டுள்ளது. அப்படமும் பார்க்க வேண்டியப் படம்.

### 03. யுத்தம், அமைதி மற்றும் அதிகாரத்தின் பங்கு *(Robber's Cave Sheriff Experiment)*

நமக்கென ஒரு நாடு, நமக்கென ஒரு மொழி, நமக்கென ஒரு சின்னம், நமக்கென ஒரு கொடி, நமக்கென ஒரு கோட்பாடு, நமக்கென ஒரு பதாகை, இப்படி நமக்கான அடையாளம் ஒன்றே ஒன்றை உருவாக்கிவிட்டு, அதைச் சார்ந்து இணங்க மறுத்த மக்களின் மேல், மொழிப்போரும், இனப்போரும் செய்து மாண்டோர் கோடி. இந்தியா போன்ற கலாச்சார தொட்டிலில் இப்படிப்பட்ட ஒருங்கிணைந்த அடையாளத்தை நம்மால் உருவாக்கவே முடியாது. அனைத்துத் தரப்பினருக்கும் மதிப்பளித்து யாவரும் சேர்ந்த பூமியிது எனக்கூறும் அரசினால் தான், நம் போன்ற சனநாயக தேசத்தில் ஒழுங்கான ஆட்சியை அமைக்க முடியும். இல்லையென்றால் காவியும் கட்சியும் மூலைமுடுக்கெங்கும் தோன்றி, தெருவெங்கும் சண்டை சச்சரவுகள் தான் நிகழும். ஆனால் ஏன் இந்த அடையாளங்கள் மனிதனுக்கு முக்கியமாகப்படுகின்றது. இந்த அடையாளங்களைக்கொண்டு நல்லதோர் காரியத்தில் மக்களை ஈடுபடுத்த முடியுமா?

*1961*ல், *Sherif* மற்றும் அவரது ஆய்வுக்குழுவினர், ஒரு சோதனை மூலம் இந்த உளவியலைப் புரிந்துகொள்ள முற்பட்டனர். கோடை விடுமுறையைக் கொண்டாடும் வண்ணம், கோடை முகாமுக்கு வாருங்கள் என்று கூறி மாணவர்களை இந்த ஆய்வாளர்கள் *Robbers Cave State Park Oklahoma*விற்கு அழைத்தனர். அவர்களுக்கு ஒருவரை ஒருவர் தெரியாது. அவர்களை இரண்டு குழுவாக பிரித்தார்கள். அவர்களுக்கென்று ஒரு பிரத்யேக ஆடை வடிவமைக்கப்பட்டது. அவர்களுக்கென்று ஒரு கொடி கொடுக்கப்பட்டது. குழுவினருக்கு ஒரு விடுதி என அவர்களை இரண்டு விடுதிகளில் தங்க வைத்தனர். சில நாட்களில் மாணவர்கள் அவர்கள் குழு சார்ந்த நபர்களைத் தெரிந்துகொண்டு நன்றாகப் பேசி பழக ஆரம்பித்தார்கள். பின்பு விளையாட்டு போட்டிகள் மற்ற செயல்பாடுகளின்பொழுது, மற்ற அணியினரிடம் மனக்கசப்பு ஏற்பட்டு, சண்டைக்குச் சென்றார்கள். இந்த சமயம், அவர்கள் இருவருக்கும் அந்த விடுதியில் இருக்கும் ஒரு பிரச்சனையைச் சரிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டபொழுது, அவர்கள் ஒன்றிணைந்து அந்தப் பிரச்சனையை சரி செய்தார்கள். மீண்டும் அவர்களை எதிர் எதிர் அணியாக விளையாட்டில் மோதவிடும் பொழுது, பிரச்சனைகள் எழுந்தன. சில நாட்கள் கடந்து, இரு அணிக்கும் பிரச்சனை வரும் வண்ணம் மீண்டும் மீண்டும் போட்டி நடத்தும் ஆய்வாளர்கள் மீது அவர்கள் கோபம் திரும்பியது. இந்த ஆய்வின் முடிவு சில முக்கிய தகவல்களை நமக்குத் தருகின்றது. போடும் சட்டை, பிடிக்கும் கொடி வைத்து பார்க்கும் பொழுது இரு அணிக்கும் சண்டை வருகிறது. நம் தேசத்தில் சாதிமதச் சண்டைக்கு இதுதான் முக்கியக் காரணம். தன் மத அடையாளத்தோடு ஒருவன் திரிந்தான் என்றாலே மற்றவருக்குப் பொறுக்காது. இந்தியா வெள்ளையர்களிடமிருந்து விடுதலை வாங்கிய பொழுது அந்நேரத்தில் மட்டும் நம் மக்கள் ஒன்றாய்ப் பாடுபட்டனர். பின்பு பெரிய கலவரத்தில் நாடுகள் துண்டாடப்பட்டது வரலாறு. தங்களை ஒருவருக்கொருவர் மோத விட்டுக் கொண்டிருப்பது ஆய்வாளர்கள் தான் என்று உணர்ந்த மாணவர்கள், ஆய்வாளர்களுக்கு எதிராகப் போராட ஆரம்பித்தனர். இதுதான் இன்றைய இளைஞர்களின் போராட்டம். சமுதாயப் பிரச்சனையை முன்னிறுத்தாமல், வேறு பல கதைகளை முன்னிறுத்தி மக்களைச் சண்டையிடச் செய்யும் ஊடகங்களுக்கு எதிராகவும், அரசியல் கட்சிக்கு எதிராகவும் ஒருங்கிணைந்துள்ள நம் இளைஞர்களின் போராட்டம். வலு பெறாமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் விழித்துக்கொண்டார்கள் என்பதை நாம் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.



*1998*ல், *Jim Carrey* நடித்து வெளிவந்த, *The Truman Show (1998)* திரைப்படம் இந்த உளவியல் பிரச்சனையை உள்ளடக்கியது. பிறந்தது முதலே, ஒரு நகரம் போல அமைக்கப்பட்டப் பெரும் அறையில், பல நூறு நிகழ்பதிவு ஒளிப்பதிவு செய்ய, கதாப்பாத்திரத்தின் அன்றாட வாழ்க்கை, அவருக்கே தெரியாமல் மக்களுக்கு ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்த உலகத்தின் கடினமான வாழ்வுமுறையிலிருந்து காப்பாற்றப்பட்ட மனிதன் எப்படி வாழ்கின்றான் என்று நாங்கள் உங்களுக்குக் காட்டுவதாகக்கூறித் தயாரிப்பாளர்கள் மக்களுக்கு அந்நிகழ்ச்சியை ஒளிபரப்பி பிரச்சாரம் செய்தார்கள். அதை நம்பி, மக்களும் கதாநாயகனின் வாழ்க்கையை சுவாரசியமாக பார்த்தார்கள். ஒரு கட்டத்தில், அந்நிகழ்ச்சியின் கொடுமையான சிறைச்சாலை வாழ்க்கை நிலையை புரிந்து கொண்ட மக்களும் கதாநாயகனும், தயாரிப்பாளருக்கு எதிராக போராடுகின்றார்கள். இறுதியில், கதா நாயகனுக்கு என்னவானது, தயாரிப்பாளர்கள் என்ன செய்தார்கள் என்பதை, மிக அழகான ஒரு திரைக்கதை மூலம் நமக்குத் தந்திருக்கின்றார்கள். மனதுக்கு நெருக்கமான ஒரு படமாக இப்படம் இருக்கும்.

### 02. நம்மை நாம் எப்படி ஏமாற்றிக் கொள்கின்றோம்? அறிவாற்றலின் சிதைவு *(Cognitive Dissonance)*

'இந்தப் புத்தாண்டோடு எல்லாக் கெட்டப் பழக்கத்தையும் நான் விட்டுவிடுவேன்' என்று சபதம் ஏற்கும் ஆசாமிகளை நாம் பரவலாக பார்த்திருப்போம். அவர்களுக்கு அடுத்த ஆண்டு வரும்பொழுதுகூட இப்படிச் சபதம் ஏற்கும் அளவுக்குக் கெட்டப் பழக்கம் இருக்கும். அவர்களுக்குப் புது வருடம் தொடங்கினால் சபதம் செய்வதற்காகக் கெட்டப் பழக்கங்கள் தேவைப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. மாலை போட்டு ஒரு மண்டலத்திற்கு என்னால் விரதமிருந்து நல்லவனாய் நடிக்க முடியும், ஆனால் அதற்குப் பின்னால் தான் நினைத்த மாதிரி கெட்டுக் குட்டிச் சுவராகுவேன் என்று கூறும் மனிதர்களும் உண்டு. கேட்டால் நான் என்ன இப்பொழுது மாலையா போட்டிருக்கின்றேன் என்று கூறுவார்கள். கொள்ளை அடிப்பது தவறு. தனக்கென ஒரு தேவை வந்துவிட்டது. இதுநாள் வரை நல்லசாமியாய் வாழ்ந்தாகிவிட்டது. நாமும் கொஞ்சம் அடித்துக்கொள்வோம். ஊரே கொள்ளையடிக்கின்றது, நான் இத்தனை காலம் நல்லவனாய்த் தானே வாழ்ந்தேன், நான் அடிக்கக் கூடாதா என கேட்காத நபர் யாரிங்கே? ஐந்தாண்டுக்கு ஒருமுறை இதைக்கூறித்தானே ஆட்சியைப் பிடிக்கின்றார்கள். நாமும், அவனை விட இவன் கொஞ்சம் பரவா யில்லாமல் திருடுகின்றான் என்றுதானே ஓட்டை மாத்திப் போடுகின்றோம். துரத்தவோ, இவர்களை துறக்கவோ, இன்னும் *NOTA*விற்கு ஓட்டு போடும் மனம் பெரும்பான்மைக்கு வரவில்லையே. எங்கு பார்த்தாலும், செய்யும் திருட்டில் ஒரு நியாயம் கண்டு, நம்மை நாமே ஏன் இப்படி ஏமாற்றிக் கொள்கின்றோம்?

*1959*ல், *Festinger & Carlsmith* ஒரு உளவியல் ஆய்வில் ஈடுபடுகின்றார்கள். ஒரு உப்பு ஒறைப்பு இல்லாத வேலையை அறிவியல் ஆய்வுக்காக செய்யுமாறு மக்களில் சிலரை அவர்கள் கேட்டுக்கொள்கின்றார்கள். அவர்களில் ஒருவரிடம், அந்த வேலையை செய்து முடித்த பிறகு, எவ்வாறு உணர்ந்தீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர் கடுப்பாக இருந்ததாகக் கூறினார். அவரிடத்தில், பொதுவாக இந்த வேலையை மக்கள் விரும்பிச் செய்வார்கள். தங்களுக்குத்தான் ஏதோ பிடிக்கவில்லை என்று கூறுகின்றார்கள். ஆய்வுக்காக அந்த வேலையைத் தொடர வேண்டும் என்பதற்காக, அடுத்த மக்கள் தொகுப்பை அழைக்கின்றார்கள். ஆனால் அவர்களிடத்தே, தான் செய்த வேலை மிகவும் ரசிக்கத்தக்க வேலை என்று பொய் சொல்லுமாறு அந்த நபரிடம் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அவர்கள் ஒரு கணிசமான தொகையையும் அவருக்குக் கொடுத்தார்கள். இதை செய்து முடித்து வந்த நபரிடம், மற்றொரு ஆய்வுக்குழு பேட்டி

கண்டது. நீங்கள் செய்த வேலையை எவ்வாறாக உணர்கின்றீர்கள் என்று அவர்கள் கேட்டதற்கு, ‘பரவாயில்லை; அறிவியல் ஆய்வுக்குத்தானே; ஓரளவு பிடித்துத்தான் செய்தேன்’ என்று அவர் கூறுகின்றார். அதே சமயம் மற்றொருவரை, இதேபோல் வேலை முடிந்து வந்தப் பொழுது, அடுத்த மக்கள் தொகுப்பின் முன் சென்று பொய் சொல்ல இவருக்கு மட்டும் ஒரு பெரும் தொகை வழங்கப்பட்டது. அந்தப் பொய் சொல்லி வந்தவரிடம் கருத்து கேட்டப் பொழுது, அது ஒரு மோசமான சுவையற்ற ஒரு வேலை என்று வெளிப்படையாகப் போட்டு உடைத்து விடுகின்றார். இங்கு நடந்தது என்ன? தான் சொன்ன பொய்க்கு ஓரளவு காசு கொடுக்கப்பட்டுள்ளது. அப்படி இருக்க பொய் சொன்னதை ஏற்காத மனம்கொண்ட முதல் பங்கேற்பாளரின் மனதானது, அறிவியலுக்காகத்தானே செய்தோம், பரவாயில்லை, ஓரளவு நன்றாகவே இருந்தது என்று முற்றிலும் முரணான கூற்றை மனமானது சொல்ல வைத்தது. அவருக்கு அந்தத் தொழில் ஒரு உப்பு ஒறைப்பு அற்ற தொழில் என்று நன்கு தெரிந்தும், இப்படி ஒரு பொய்யைத் தனக்குள்ளே அவர் சொல்லிக்கொண்டார். ஆனால் மற்றவரோ, ‘சொன்ன பொய்க்கு அதிகமாய் காசு வந்தாகி விட்டது. இந்நேரத்தில் கருத்து கேட்கும் பொழுது ஏன் பொய் சொல்ல வேண்டும். அவர்கள் காசு கொடுத்தார்கள், அங்கே நான் பொய் சொன்னேன். சரியாகிப் போய்விட்டது. உண்மையில் அந்த வேலை ஒரு கடுப்பான வேலை தான்’ என்று மற்றவர்களிடம் போட்டு உடைத்துவிடுகின்றார். தங்கள் மனசாட்சிக்கு எதிராக சொன்ன மனிதனுக்கு தக்கச் சன்மானம் கொடுக்கும்பொழுது, ஒரு இடத்தில் பொய் சொல்லிவிட்டு மற்றொரு இடத்தில் ஒப்புக்கொள்கின்றான். அது கிடைக்காதபொழுது, அந்தப் பொய்யையே உண்மையென நம்பி வாழ ஆரம்பித்து விடுகின்றான். நமக்கு விதித்தது இவ்வளவு தான் என்று இந்தச் சமூகத்தில் முரணோடு வாழாத மனிதர்கள் யார்தான் இங்கே? ஊரே தூய்மையாக இருக்கவேண்டுமென்று களத்தில் இறங்கி போராடுவான் ஒருத்தன். வீட்டிற்கு வெளியே குப்பையை முதலில் அவன்தான் கொட்டுவான். கேட்டால், நான் போடும் இந்தச் சிறு குப்பையில்தான் உலகம் அழுக்கேறிப் போகப்போகின்றதா? எனப் பேசுவான். இப்படி நம்மை நாமே ஏமாற்றித்தான் நாட்டையும் வீட்டையும் இந்த மனிதச் சமூகம் கெடுத்து வைத்திருக்கின்றது.

*1997ல், Matt Damon & Ben Affleck* திரைக்கதை எழுதி நடித்து, ஆஸ்கர் விருது வாங்கிய *Good Will Hunting (1997)* இந்த உளவியல் சிக்கலைப் பிரமாதமாகப் பிரதிபலிக்கும். கதாநாயகன் அடிப்படையில் ஒரு கணிதமேதை. கணித கேள்விகளை வெகு எளிதாய் தீர்க்கும் ஆற்றல் படைத்தவன். இருப்பினும் அவன் பிறந்து வளர்ந்த இடம் வெறும் முரடர்களைக் கொண்ட புறப்பகுதி. அங்கே பிழைக்க வேண்டுமென்றால் கொடுமையாக மற்றவர்களிடம் தன்னைக் காட்டிக்கொள்ள வேண்டும். இதனால் பல தகராறில் சிறைவாசம் அனுபவித்த வண்ணம் கதாநாயகன் இருக்கின்றான். இதனால் மேற்படிப்புப் படிப்பதில் சிக்கல்கள் ஏற்படுகின்றது. தான் புறப்பகுதியை சேர்ந்தவன், அதுதான் தன் வாழ்க்கை என்று நண்பர்களோடு இருக்க எத்தனிக்கின்றான். இருந்தும் ஓரமாக ஒரு கல்லூரியில் கணிதப் பாடம் பயில்கின்றான். ஒரு மருத்துவப் படிப்பு படிக்கும் பெண்ணை காதலிக்கின்றான். தன் தகுதிக்கு மீறியவள் என்று புரிந்துகொண்டு விட்டுவிடுகின்றான். பிறகு காதலிக்காக சேரியையும் நண்பர்களையும் துறக்கின்றான். இப்படி ஒரு முரணான வாழ்க்கையை அவன் வாழ்ந்து கொண்டிருகின்றான். கடைசியில் அவனுக்கு என்ன ஆனது என்பதை சிறப்பான ஒரு கதை ஓட்டத்தில் நமக்கு இப்படம் காட்சிப்படுத்தும். ஒரு அழகான சமூக உளவியலைக் காட்டும் படம்.



**01. வெளுத்ததெல்லாம் பால்** *(Halo Effect)*

“ஐயா கோட்டு சூட்டெல்லாம் போட்டு இருக்கீங்க. நீங்க சொன்னா எல்லாம் சரியாதான் இருக்கும். எதுல கைநாட்டு வெக்கணும்னு சொல்றீங்களோ அதுல வெச்சா போச்சு. எங்கள நீங்க பாத்துக்க மாட்டீங்களா? உங்களுக்கு எங்க மேல இல்லாத அக்கறையா அடுத்தவங்களுக்கு வந்துடப்போது”. இப்படி சொல்லவைத்து எத்தனை நிலங்கள் நம் விவசாயிகளிடம் இருந்து பறிக்கப்பட்டிருக்கின்றது. எத்தனை வளங்கள் நம் நாட்டில் இருந்து சுரண்டப்பட்டிருக்கின்றது! அட புத்திசாலியாக இருப்பதற்கு இந்த நாட்டில் அக அறிவுக்கான அவசியமே இல்லை. பகட்டான வெள்ளை சட்டையும், கருப்புப்பேண்டும், ஒரு ஜோடி பூட்சும் ஒரு டையும் போதுமானதே! கடவுளுக்கு அடுத்த சந்நிதானத்தில் வைத்து அவனையும் கூட கும்பிட்டுவிடலாம். அப்படியொரு உத்தமன் என்று நம்பும் போக்கு நம் சமூகத்தில் இல்லாமலா இல்லை? அழுக்கேறிய வேட்டியும் தேய்ந்த செருப்பும் போட்டுக்கொண்டு வருடக்கணக்கில் மக்களுக்காக உழைத்த ஒரு மனிதன் மக்களிடம் ஒட்டு கேட்க வரும்பொழுது அவனுக்கு தரப்படும் மரியாதையைப் பாருங்கள். களப்பணிக்கும் கட்சிப்பணிக்கும் வித்தியாசம் தெரியாத ஒரு கோமாளி, மக்கள் வடம்பிடித்து இழுக்க, தேரில் அமர்ந்து வந்து ஓட்டுப்பிச்சை கேட்கும் அழகைப் பாருங்கள். நாமே கோமாளிக்குத்தான் ஓட்டுப்போடுவோம். அழகியலுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் அறிவுக்குக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையில் ஒரு சமூகம் என்றைக்கு வரும்? ஒரு திரைக்கதையில் அநியாயத்தைத் தட்டிக்கேட்கும் கதாநாயகன் நிஜ வாழ்கையிலும் மக்கள் பிரச்சனையைத் தட்டிக்கேட்பான் என்ற எண்ணம் எங்கிருந்து வருகின்றது? கூலிக்குக் கூத்தாடுபவன் குடிகளுக்காக குரல் கொடுப்பான் என்று எதைவைத்து நம்புகின்றார்கள்? மக்கள் தொகை அதிகம்கொண்ட ஒரு சமூகத்தில் வெகுசிலரைத் தவிர பெரும்பாலானோர் வெளுத்ததெல்லாம் பால் என்ற ஏன் நம்புகின்றார்கள்?

*1977ல், Nisbett & Wilson* நடத்திய ஆய்வானது மக்களின் இந்த சமூக உளவியலை மையப்படுத்தியது. அவர்களது ஆய்வில் கல்லூரி மாணவர்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்களை அழைத்து ஓர் ஆசிரியர் நடத்தும் வகுப்பைக் கவனித்து, அவ்வகுப்பிற்கு மதிப்பீடு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். மேலும் அவ்வகுப்பெடுத்த ஆசிரியரின் குணாதிசயசத்தையும் மதிப்பீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் ஆங்கில மொழியில் பாடமெடுத்த அந்த ஆசிரியருக்கு பெல்ஜிய நாட்டுப் பேச்சு வழக்கம் சொல்லாடலில் காணப்பட்டது. ஒரு மாணவர் குழு மதிப்பீடு செய்யும்பொழுது மிகவும் கனிவுடன் பேசி கலந்துரையாடி பாடம் நடத்தினார் அந்த ஆசிரியர். இந்தக் குழு அவ்வாசிரியரின் குணாதிசயத்தை மதிப்பீடு செய்யும்பொழுது அதிக மதிப்பெண் வழங்கினார்கள். இத்தனைக்கும் அவரது ஆங்கில சொல்புலமை மிகவும் மோசமானதாக இருந்தது. மற்றொரு குழு அதே ஆசிரியரின் பாடத்தை மதிப்பீடு செய்யச்சென்றது. அப்பொழுது மாணவர்களிடம் அவரது அணுகுமுறை சற்று கடுகடுவெனவே காணப்பட்டது. பாடம் முடித்த பின்பு மதிப்பீடு செய்த மாணவர்கள் அவருக்கு மிக மோசமான மதிப்பெண்களை வழங்கினார்கள். இத்தனைக்கு அவ்வாசிரியர் இருவருக்கும் முறையே ஒரு தொகுதி பாடத்தை முழுதாய் நடத்திமுடித்துவிட்டிருந்தார். தங்களிடம் நடந்துகொண்ட முறையை மட்டும் வைத்து அவரது வகுப்பை அனைத்து பிரிவுகளிலும் அவருக்குக் குறைந்த மதிப்பெண் வழங்கினார்கள். ஒரு சாராருக்குப் பிரச்சினையாகவே தெரியாத அவரது பெல்ஜியம் கலந்த ஆங்கிலச் சொல்லாடல், இன்னொரு சாராருக்குப் பெருங்குற்றமாய்ப்பட்டது. காரணம், அந்த கடுகடு சமாச்சாரம். இப்படி கருப்பொருளைக் கவனிக்காமல் வெளிப்பொருளை மட்டும் பார்த்துவிட்டு “வெள்ளையா இருக்கறவன் பொய் சொல்லமாட்டான்டா” என்ற நமது சொல்லாடல், சமூகத்தில் பரவலாக நிகழ்வதன் பின்னணியே ஒரு சமூக உளவியல் தான் என்று ஆய்வாளர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர்.

*2015ல், Sandra Bullock* நடிப்பில் வெளிவந்த, *Our Brand is Crisis (2015)* திரைப்படம் மேற்கூறிய உளவியல் முறையை உள்ளடக்கியக் கதைக் களம். கொலம்பியாவில் அதிபர் தேர்தலுக்கான காலகட்டம். முன்னாள் அதிபர் ஒருவர் மீண்டும் போட்டியிடுகின்றார். அவர் ஆட்சியில் நடந்த சில தவறுக்காக பின் வந்த தேர்தல்களில் அவர் தோல்வி அடைகின்றார். அவர் மீண்டும் வெற்றி பெற வேண்டும். அமெரிக்காவைச்




சார்ந்த ஒரு தேர்தல் பிரச்சாரக் குழுவை அவர் நாடுகின்றார். அந்தப் பிரச்சார குழுவின் தலைவிதான் கதாநாயகி. நாயகியின் பரம விரோதி தான் எதிரணியின் பிரச்சாரக் குழுத் தலைவன். மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பில்லாமல் காணப்பட்ட முன்னாள் அதிபரை மக்கள் கவனிக்கச் செய்யும் பொருட்டு, மக்களிடத்தில் அவரைப்பற்றிப் பேச்சு எழ வேண்டும் என்பதற்காக, அவரைப் பற்றிய சர்ச்சைக்குரிய சில காட்சிகளை மக்கள் மத்தியில் உலாவவிட்டு, அது எதிர்க்கட்சியின் திட்டமிட்ட சதி என்று நாயகியின் குழு ஒரு நாடகத்தை அரங்கேற்றியது. மக்கள் முன்னாள் அதிபரைப் பற்றி அதிகம் பேச ஆரம்பித்துவிட்டார்கள். எதிர்க்கட்சி வேட்பாளருக்குத் தோல்வி பயம் வந்த காரணத்தினால்தான் இப்படி ஒரு காரியத்தில் ஈடுபட்டுவிட்டார் என்று மக்களை நாயகியின் குழு நம்ப வைத்துவிடுகின்றது. இதைப்பற்றி ஒரு ஊடகவியலாளர் வெறுப்பேற்றும் வகையில் கேள்வி கேட்க, கோபத்தில் அவனை அடித்துவிடுகின்றார் முன்னாள் அதிபர். இதைப்பார்த்த மக்கள் அவன் ஒரு முரடன் என்று நம்ப ஆரம்பித்தார்கள். அந்த நேரத்தில், எதிர்க்கட்சித் தலைவர் ஒரு நாசிச கொள்கையுடையவர். பழைய நாசிச கட்சியில் இருந்த நபர்களுடன் தொடர்பில் உள்ளார் என்று கொளுத்திப் போட்டார்கள். அவரிடத்து ஆட்சி அமைந்தால் நாட்டை வித்துவிடுவான் என்று நம்ப வைத்தார்கள். அதனை பெருங் கோபத்துடன் இயங்கும் முன்னாள் அதிபர் ஆட்சிக்கு வரும்பொழுது இரும்புக்கரம் கொண்டு ஒழிப்பார் என்றும் நம்ப வைத்தார்கள். அவரிடம் காணப்படும் வேகமும் கோபமும் மக்களை ஒரு வழியில் அவர்கள் நினைத்தது போலவே நம்பவைத்துவிடுகின்றது. இறுதியில் நாயகியின் குழு கையாண்ட முறை வெற்றிக்கு வழி வகுத்ததா? வெற்றி பெற்றவர்கள் அந்த மக்களுக்கு நன்மை செய்தார்களா? என்ற கேள்விகளுக்குப் பதிலாய் கதைக்களம் மிக வேகமாய் பதற்றத்துடன் நகரும்.

இந்தக் கட்டுரையில், பத்து சமூகஉளவியல் சிந்தனையின் அடிப்படை, எப்படி ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பதை மட்டும்தான் சொல்லியிருக்கின்றோம். அந்த ஆய்வுகள் பலதரப்பட்ட சோதனைகளுக்கு மீண்டும் உள்ளாக்கப்பட்டு அதன் மீது பல்வேறு கருத்துக்களும் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அதைப் பற்றி எல்லாம் பேசுவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. அதே போல, இந்த சமூக உளவியல் கோட்பாட்டை மையப்படுத்தி வந்த திரைக்கதைகள் ஏராளம். இங்கே கூறப்பட்டுள்ள படங்கள் அனைத்தும் எழுதியவரின் விருப்பத்தைப் பொறுத்தே தேர்வு செய்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு சமூகமாக வாழும் நாம், எவ்வளவு தான் தனித்து இயங்கினாலும், இந்தச் சமூக கட்டமைப்பில் ஒருவரை சார்ந்தே ஒருவர் இயங்கிக்கொண்டிருக்கின்றோம். இந்தச் சூழ்நிலையில், நமது அடிப்படை உளவியல் முறைகளைப் புரிந்து கொண்டு, நாம் செய்வது சரியா தவறா என்று நம்மை சுய பரிசோதனைக்கு உட்படுத்தி வாழும் பொருட்டு, நாம் வாழும் சூழலின் ஆரோக்கியத்தை நம்மால் பேணிக்காக்க முடியும் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. ஒவ்வொரு நடவடிக்கையிலும் நம் மனதைத் திறந்து கருத்தை உள்வாங்கி பகுத்தாய்ந்து, எந்த பாரபட்சமும் இல்லாமல் இந்தச் சமூகத்தில் வாழ அனைவருக்கும் சந்தர்ப்பங்கள் அமையாமல் இல்லை. காலம் ஒவ்வொரு முறையும் நம் கதவைத் தட்டி ஒரு மாசற்ற மனிதனாய் வாழ நமக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்த வண்ணம்தான் இருக்கின்றது. அப்படித் தட்டும் பொழுதெல்லாம் (யோசனையின்றி, நடவடிக்கையில் ஈடுபடாமல்), நம் உள்ளுணர்வுக்கு ஒரு வாய்ப்பு வழங்கி, நாம் நம் மனக்கதவின் தாள் திறப்போமா?

e-mail : skkarthick@ymail.com

# அவரும் அவனும் - ஒரு வெள்ளை அறிக்கை

ஆர். ரமணன்

நடுநிசி. வயிற்றில் கப கப என பசித்தீ எரிந்தது. மணி என்ன இருக்கும்? கூர்க்கா விசில் ஊதிக்கொண்டு போனதைப் பார்த்தால் ஒரு மணி இருக்கும் போலிருக்கிறது. ராத்திரி கோதுமை உப்புமா சாப்பிட்டிருந்தார். இந்த வயசில் அது போதாதா? ஏன் இப்படிப் பசிக்கிறது? ஒருவேளை புதுசா சாப்பிட்ட மாத்திரை எஃபெக்ட்டாக இருக்கலாம். பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்தவள் எழுந்துவிடக் கூடாது என்ற ஜாக்கிரதை உணர்வுடன் கட்டிலிலிருந்து மெதுவாக எழுந்தார். இருந்தாலும் கிரீச்சென்றது. கட்டில் வாங்கும்போது நாலைந்து கடைகள் அலையாமல் ஏதோ ஒன்றை வாங்கிவிட்டார்கள். கரண்ட் கட்டாகியிருந்தது. கும்மிருட்டாக இருந்தது. கட்டிலுக்கும் பீரோவுக்கும் நடுவில் ஓர் ஆள் நடந்துபோகும் அளவுக்குத்தான் இடம். மெதுவாக கையால் தடவி தடவி இடித்துக் கொள்ளாமல் நடந்து போனார். படுக்கை அறைக் கதவை சாத்திவிட்டு ஹாலுக்கு வந்தார். கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார். பிஸ்கெட் டப்பா இருக்கும் இடம் லெக்காக தெரியும். அதை எடுத்து மர நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு மூன்று பிஸ்கெட்களை வாயில் போட்டுக்கொண்டார். வயிறு கொஞ்சம் அடங்கியது போல் தெரிந்தது. கரண்ட் வந்தது.

பேப்பரை எடுத்துக்கொண்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்தார். அதை வாங்கும்போதும் சின்னச் சண்டை. வீட்டில் இடம் இருக்காது என்று. ரிடையர்மெண்ட் பணத்தில் சின்ன அபார்ட்மெண்ட்தான் வாங்க முடிந்தது. அவருடைய நண்பர்களெல்லாம் சர்வீஸ்ல இருக்கும்போதே வீடு வாங்கிவிட்டார்கள். அப்ப பத்து லட்சதிற்கு வாங்கியது இப்ப ஐம்பது லட்சம் ஆகிறது. அவர்களால் அப்பொழுதே இ,எம்,ஐ கட்டமுடிந்தது. இவரால் ஏன் கட்ட முடியவில்லை? வாழ்க்கை ஆரம்பிக்கும்போதே கடனில் தொடங்கியதாலா இல்லை சிக்கனமாக இருக்க தெரியவில்லையா; உறவினர் சப்போர்ட் இல்லையா? இதெல்லாம் சேர்ந்ததாக இருக்கலாம்.

பகலிலேயே பேப்பர் முழுவதும் படித்துவிட்டார். இந்த மாதிரி இரவில் தூக்கம் வராவிட்டல் படிப்பதற்காக சில கட்டுரைகளை மட்டும் விட்டுவைத்திருந்தார். இப்படி எப்ப பார்த்தாலும் எதையாவது படித்துக்கொண்டும் யோசித்துக் கொண்டும் இருந்ததாலே இவரால் குடும்பம், பணம், வீடு போன்றவைகளை திட்டமிடமுடியாமல் போனது.

* * *

சிறு நகரம் ஒன்றில் அலுவலகப் பணியைத் தொடங்கியவன். முதல் ஐந்து ஆண்டுகள் தாயார், விதவை சகோதரி அவனுடய பிள்ளைகள் என குடும்ப செலவுகள் இருந்தன. மாதா மாதம் கடுமையான பற்றாக்குறை. நண்பர்களிடம் கடன் வாங்கியும் கொஞ்சம் வட்டிக்கு வாங்கியும் சமாளித்தான். நடுவில் எல்லோருக்கும் அந்த வயதில் வரும் காதல் அல்லது பருவக் கோளாறு இவனுக்கும் வந்தது. சொந்தக்காரப் பெண் ஒருவர் படிப்பு விசயமாக அவன் வீட்டில் சில நாட்கள் தங்கினாள். ஊரிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் அந்தக் கல்வி நிறுவனம் இருந்தது. அப்பொழுது பஸ்ஸெல்லாம் விடவில்லை. நடந்துதான் போகவேண்டும். நிறைய மாணவர்கள் போகிறார்கள் தனியாகவே போய்விடுவேன் என்று அவள் சொன்னாலும் இவன் துணைக்குப் போவான். அவள் சென்னையைச் சேர்ந்த பெண். இயல்பாகவே தன்னம்பிக்கை நிறைந்தவள். அதனால் அவனுடன் சகஜமாகப் பழகினாள். நாவல், சினிமாக்களில் மட்டுமே

பெண்களைப் பார்த்திருந்த அவன் அதைக் காதல் என்றே நம்பினான். அவள் அவனுடைய உயரம் இருப்பாள். அவனைவிட ஆறு மாதம் பெரியவள். ஆனால் அவனுக்கு இரண்டு விசயம் ஆறுதலாய் இருந்தது. அவள் அவனைப்போல கறுப்பு நிறம். பி. யு. சி தான் படித்திருந்தாள். அரசாங்க வேலை தேடிக்கொண்டிருந்தாள். அவளுடைய தேர்வோ கான்டாக்ட் செமினாரோ என்னவோ ஒன்று ஒரு வாரத்தில் முடிந்தது. ரயில் நிலையம் சென்று அவளை வழியனுப்பிவிட்டு வரும்போது அவனுக்கு உண்மையிலேயே துக்கம் தொண்டையை அடைத்தது.

அவள் பெரிய மனசு பண்ணி தன்னுடைய விலாசத்தைக் கொடுத்திருந்தாள். பத்து நாளுக்கு ஒருமுறை கடிதம் எழுதத் தொடங்கினான். இரண்டு மூன்று கடிதங்களுக்குப் பிறகு ஒரு பதில் வரும். தன் காதலை வெளிப்படையாக அவன் எழுதியதற்கு இரண்டு பேருடைய குடும்ப நிலமைகளையும் குறிப்பிட்டு இப்பொழுது திருமணத்தைப் பற்றி தன்னால் நினைக்க முடியாது என்று எழுதியிருந்தாள். அவன் அலுவலக வேலை விசயமாக சென்னை போகும்பொதெல்லாம் அவளை சந்திக்க முயற்சி செய்வான். ஏதாவது ஒரு முறைதான் அவள் சந்திக்க அனுமதிப்பாள். சென்னையே அவனுக்கு புதிது. இருந்தாலும் அவள் சொல்லும் இடங்களைத் தேடிக் கண்டுபிடித்து அவளுடன் பேசிவிட்டு திரும்புவான். தங்கசாலையில் ஏதாவது ஒரு சந்தில் அவளது வீடு இருக்கும். அடுத்த முறை திருவான்மியூர் ஜயந்தி தியேட்டர் அருகில் வரச் சொல்வாள். அப்பொழுது அந்த இடம் அத்துவானக் காடு போல இருந்தது. இந்த இடத்தில் எப்படித்தான் பயமில்லாமல் தனியாக வேலை செய்கிறாளோ என்று நினைப்பான். அப்படிப்பட்ட ஒருமுறை சற்று உணர்ச்சி வசப்பட்டு முத்தமிட முயற்சி செய்தான். அவள் கடுமையாகக் கோபித்துக் கொண்டாள். ஊருக்குத் திரும்பி வந்து மன்னிப்பு கேட்டு நீண்ட கடிதம் எழுதினான்.

அவன் ஒரு தகரப் பெட்டி வைத்திருந்தான். அதில் அவளிடமிருந்த வந்த கடிதங்களை எல்லாம் அம்மாவிற்கு தெரியாமல் மறைத்து வைத்திருந்தான். ஒரு நாள் அவளிடமிருந்து அதிர்ச்சி தரும் அந்தக் கடிதம் வந்தது. தனக்கு வேறு ஒருவருடன் திருமணம் நிச்சயம் ஆகிவிட்டதாகவும் அவன் தன் திருமண வாழ்க்கையில் குறுக்கிட்டு வாழ்க்கையை பாழாக்க மாட்டான் என்று நம்புவதாகவும் எழுதியிருந்தாள். அன்றுதான் கமல்ஹாசன் நடித்த ‘பட்டாம்பூச்சி’ படம் பார்த்துவிட்டு வந்திருந்தான். சோகமான படம் அது. அன்று இரவு அம்மாவிற்கு தெரியாமல் அவளிடமிருந்து வந்த கடிதங்கள் அத்தனையும் தீயிட்டுக் கொளுத்தினான். தன் காதல் நிறைவேறாமல் போனதைவிட தான் அவள் வாழ்க்கையைக் கெடுத்துவிடுவானோ என்று அவள் நினைத்தது அவனை அதிகமாக வருத்தியது.

இந்த விசயத்தையெல்லாம் அவனுடைய அம்மா புரிந்துகொண்டிருந்தாள். அவன் கொஞ்ச நாளாகப் பித்து பிடித்தவனைப்போல இருப்பதைப் பார்த்தவள் சொந்தத்தில் ஒரு பெண்ணைப் பார்த்து முடித்து விட்டாள். அவனும் தன் தாயாருக்காக அதை ஏற்றுக்கொள்வதாக சொன்னான். அவனுடைய அலுவலகத்தில் அவனைவிட வயதானவர்கள் சிலர் இன்னமும் திருமணம் செய்துகொள்ளாத நிலையில் இவனுடைய திருமணம் ஆச்சரியமாக இருந்தது. ஒரு சிலர் அவசரப்படவேண்டாம் என்று சொல்லிப் பார்த்தார்கள். ஆனாலும் ஏதோ ஒரு உணர்ச்சிவசத்தில் மணம் செய்துகொண்டான். அவனுடைய தாயாரின் திடீர் மரணத்திற்குப் பிறகு தொழிற்சங்கம், அரசியல், இலக்கியம் என்று அவனுடைய நாட்டம்போனது.

அந்த ஊரில் இலக்கிய நிகழ்ச்சிகளில் ஸாதிக் ராபர்ட், வசுமதி பிரபலமானவர்களாக இருந்தனர். மூன்று பேரும் பல்கலைக்கழக மாணவர்கள். அவர்களை வைத்து இவனும் ‘முற்போக்கு மேடை’ எனும் அமைப்பில் சில நிகழ்ச்சிகளை நடத்தினான். சில ஆன்மீகப் பேச்சாளர்களுடனும் நட்பு இருந்தது. சுருக்கமாக சொல்லப் போனால் அந்த ஊரில் நடக்கும் எல்லா மேடைகளிலும் இவனுக்கு ஏதோ தொடர்பு இருந்தது. திடீரென்று சாதிக் காணாமல் போனான். விசாரித்ததில் மத அமைப்பில் தீவிரப் பிரச்சாரகனாக ஆகிவிட்டதாகவும் அவன் தந்தைக்கு அதில்

உடன்பாடு இல்லை என்றும் தெரியவந்தது. வசுமதியும் ராபர்ட்டும் திருமணம் செய்துகொண்டனர். பெரிய முற்போக்கு நிகழ்ச்சி என்று நினைத்துப் போனான். அங்கே வசுமதி கிறித்துவ முறைப்படி அலங்காரம் செய்யப்பட்டு சர்ச்சில் பாதிரியார்கள் மந்திரம் ஓத மணம் நடைபெற்றது. இவனது முற்போக்கு மேடை சரிந்து வீழ்ந்தது. வசுமதியின் தந்தை வீட்டு திண்ணையில் பிரமை பிடித்தவர் போல் உட்கார்ந்திருந்தார். "கொஞ்ச நாளில் சரியாகிப் போய்விடும்" என்றார்கள். தீபாவளிக்கு இனிப்புகளைச் சேகரித்து சேரிவாழ் மக்களுக்கு வினியோகித்த ஆன்மீக நண்பர்கள் சுந்தரமும் ராமச்சந்திரனும் 'இந்து விரோதி திப்பு சுல்தான், ஹைதர் அலி, பசு மாட்டைக் காப்பற்றிய வீர சிவாஜி' என்று சரித்திரத்தை புரட்டிப் போட்டுக் கொண்டிருந்தார்கள். அதிலிலிருந்தும் விலகினான்.

அவனுடைய அலுவலகத்தில் ஒரே சாதிக்குள் காதல் மணம் செய்துகொண்டவர்கள்; ஜாதகப் பொருத்தமின்மையால் பெற்றோர் எதிர்ப்பு மணம் செய்துகொண்டவர்கள்; குடும்ப சுமையால் மணம் செய்ய முடியாதவர்கள்; மணம் செய்துகொள்ளாததற்கு காரணம் தெரியாத கன்னி மற்றும் காளையர்கள் என சுவாரசியங்களுக்குக் குறைவில்லை. இவன் மட்டும் சங்கம், அரசியல் என கண்ணைக் கட்டிக் கொண்டு ஓடினான்.

பிறகு ஒரு சின்ன ஊதிய உயர்வு வந்தது. அந்த நேரத்தில் நகரைச் சுற்றி ஆங்காங்கே ப்ளாட்டுகள் முளைக்கத் தொடங்கியிருந்தன. இவனுடய அலுவலக முகவர் ஒருவர் வட்டிக்கடை வைத்திருந்தார். அவர் ஒரு லே அவுட் போட்டார். எட்டாயிரம் ரூபாய்க்கு ஒரு கிரவுண்ட். ஆயிரம் ரூபாய் அட்வான்ஸ் கொடுத்தால் போதும். மீதியை இரண்டு மூன்று தவணைகளில் கொடுக்கலாம். அலுவலகத்தில் ஏழு எட்டு பேர் வாங்கினார்கள். இவனுக்கும் ஒரு சபலம். எப்படியோ ஆயிரம் ரூபாய் புரட்டி அட்வான்ஸ் கட்டிவிட்டான். அந்த லே அவுட் அப்ரூவ் ஆகிவருவதற்கு இரண்டு ஆண்டுகள் ஆனது. அதற்குள் இவனது நிதி நிலமை மீண்டும் மோசமானது. இரண்டு குழந்தைகள் பெற்றிருந்தான். அவனுக்கு எதிலுமே ஒரு நிலைத்த பிடிப்பு இல்லை. அரசியல் தொடர்பிலும் விரிசல் விழுந்திருந்தது. அந்த ஊர், அந்த அலுவலகம், அந்த நண்பர்கள் எல்லாமே திடீரென்று வெறுப்பாக உணர்ந்தான். சென்னைக்கு மாற்றல் பெற்று சென்றுவிட்டான். போகும்போது அந்தப் ப்ளாட்டை இன்னொரு நண்பருக்கு ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு கொடுத்துவிட்டான். அப்ப அதன் விலை 25000/ என்று சொல்லப்பட்டது. மூன்று ஆண்டுகள் சென்னை வாசம் நல்லபடியாத்தான் போனது. ஆனால் பொருளாதாரம் கொஞ்ச நாள் கழித்து மீண்டும் கீழே போக ஆரம்பித்தது. குடும்ப விழாவிற்கு ஏராளமான உறவினர்கள் வந்ததால் நிறைய தண்ணீர் செலவழித்தான் என்று சொல்லி வீட்டுக்காரர் வீட்டைக் காலி செய்யச் சொன்னார். பிள்ளைகளை இரண்டு பள்ளிகள் மாற்றிவிட்டிருந்தான். இந்த சமயத்தில் மீண்டும் ஒரு இட மாறுதல். இந்த முறை சிறிய பதவி உயர்வுடன்.

புதிய ஊர்; புதிய அலுவலகம்;புதிய நண்பர்கள். அந்த ஊர்ல இருந்த தமிழ்ப் பேராசிரியர்கள் சிலர் தொடர்பு;இலக்கியக் கூட்டங்கள் என்று அவன் புத்துணர்வு கொண்டான். அந்த அலுவலகத்தில் எல்லோருமே இளம் வயதினர். அங்கு ஒரு காதல் திருமணம் நடந்தது. சின்ன வயதிலிருந்து பழகி நட்பாகி பின் காதலாகி 300 மைல்களுக்கு அப்பாலிலிருந்து பாதுகாப்பான தன் வீட்டை ஜாதியை விட்டு ஒரு பெட்டியுடன் வந்த அந்தப் பெண்ணின் காதலும் உறுதியும் அவளைக் கண்ணியமாக ஏற்று திருமணம் செய்துகொண்ட அவனுடைய நண்பனின் நேர்மையும் அவனுக்கு வியப்பை அளித்தது. இன்னொரு காதல் முறிந்தது. காதல் முறிவின் சோகத்தைத் தண்ணி போட்டு வந்து இவன் வீட்டில் கொட்டிவிட்டுப் போனார்கள். இதையெல்லம் உங்களிடம் வந்து ஏன் சொல்கிறார்கள் என்று மனைவி கேட்டாள். அவனுக்கும் தெரியவில்லை. ஒரு அலுவலர் நெஞ்சு வலி வந்ததால் பதவி உயர்வு வேண்டாம் என்று திரும்பிப் போனார். அலுவலகத்தில் ஊழியர்கள் இரண்டு பிரிவினர்களானார்கள். இவனுக்கு இரண்டிலுமே நியாயம் இருப்பதாகத் தோன்றியது.

அவனுடைய மனைவிக்கு ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியர் வேலை கிடைத்தது. அந்த ஊர் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருப்பதாகவே தோன்றியதால் இரண்டு ஆண்டுகளில் சென்னைக்கு திரும்பும் வாய்ப்பு கிடைத்தும் இன்னும் ஒரு ஆண்டு அங்கேயே இருக்கலாம் என்று முடிவெடுத்தான். மூன்றாவது ஆண்டு அந்த ஊரில் கடுமையான தண்ணீர்ப் பஞ்சம். தெருக்குழாயில் அடி பம்பில் தண்ணீர் அடித்து முதல் மாடி ஏறி கால் ஓய்ந்து போயிற்று. மோட்டார் போட்டு தண்ணீர் ஏற்றும் வசதி உள்ள வீட்டிற்கு அதிக வாடகை கொடுத்துப் போனான். பன்றிகள் அதிகம் இருக்கும் அந்த ஊரில் ஏதேதோ வியாதிகள் வந்து பயமுறுத்தியது. பிள்ளைகள் பாதி கல்வியாண்டில் இருக்கும்போது சென்னை மாறுதல் வந்தது. இந்த முறை உடனே குடும்பத்தை அழைத்துக்கொண்டு போகாமல் அவன் மட்டும் போனான். வாராவாரம் வந்து போகும் செலவு; சென்னையில் அவனுடைய செலவு என்று மீண்டும் கடன் ஆனது. அந்த அலுவலகத்திலும் ஒரு மேல்சாதி கலப்புத் திருமணம் நடந்தது. பார்ப்பதற்கு அவர்கள் இருவரும் எதிரெதிர் துருவங்கள் போல் தெரிந்தனர். எது அந்த இரண்டு பேரையும் ஈர்த்தது என்று அவனுக்குப் புரியவில்லை. இந்த முறை மணமகன் சாதி மாறினான்.

ஒரு வழியாக அடுத்த வருடம் குடும்பத்தை சென்னைக்கு அழைத்துக் கொண்டான். ஆனால் அவனுடைய சுழி சும்மா இருக்குமா? பேப்பரில் அப்போதிருந்த நிதி மந்திரி வீட்டுக் கடன்களையெல்லாம் நிறுத்தப் போவதாக அறிவித்திருந்தார். அரண்டுபோய் எங்கேயோ ஒரு மூலையில் மோசமான இடத்தில் அலுவலகத்தில் கடன் வாங்கி வீடு கட்டினான். அவனுடைய அரசியல் நண்பர்களும் சரி 'அரசியல் இல்லாத' நண்பர்களும் சரி இவனைப்போல அவசரப்படவில்லை. சிலர் நகரத்திலேயே வீடு வாங்கியிருந்தார்கள். மற்றவர்கள் காத்திருந்தார்கள். இவனுக்குத்தான் அரசியலும் தெரியவில்லை; வாழ்க்கையும் தெரியவில்லை போலும்.

பிள்ளைகள் பள்ளிக்குப் போக ஒரு கிலோமீட்டர் நடை; கொஞ்ச தூரம் ரயில்; பிறகு பஸ் என்று மிகுந்த சிரமப்பட்டார்கள். மனைவியும் ஒரு மணி நேரம் பயணம் செய்து நகருக்கு வந்து ஏதோ ஒரு அலுவலகத்தில் வேலை செய்தாள். இவனுக்கு ரயில் பயணம் நண்பர்கள் துணையுடன் பேச்சும் அரட்டையுமாகப் போனது. மழைக்காலங்களில் குடியிருப்பு முழுவதும் முழுகிவிடும். மின்சாரம் பல நாட்களுக்கு இருக்காது. தண்ணீர் சிவப்பாக வரும். ஒரு நாள் இவனுக்குக் கடுமையான ஜுரம். வெள்ளக்காடாக இருந்தது குடியிருப்பு. கையில் மாத்திரை எதுவும் இல்லை. இன்னொரு நாள் மனைவி தோட்டத்தைச் சுத்தம் செய்துகொண்டிருந்தபோது நல்ல பாம்பு ஒன்று சீறிக்கொண்டு வந்தது. ஆறாம் வகுப்பு படிக்கும் மகன் விளையாட்டுப் போட்டி முடிந்து களைப்பில் தூங்கிப்போய் இரண்டு ரயில் நிலையங்கள் தாண்டி இறங்கி எப்படியோ திரும்ப வந்தான். தொலைபேசியெல்லாம் கிடையாது. ஆறு ஆண்டுகள் நரகத்தில் இருப்பதுபோல் கழித்தார்கள். அவனுடைய பெண் பெரியவளானதும்தான் விழித்துக்கொண்டான். இருட்டிய பிறகு டியூஷன் போவதிலிருந்து ரயில் நிலயத்தில் பின் தொடரும் பையன்கள் என்று பல பிரச்சினைகளை அவள் சந்திக்க வேண்டியிருந்தது.

மீண்டும் நகரத்திற்கே வந்து வாடகை வீட்டில் இருக்க ஆரம்பித்தார்கள். வீட்டை அலுவலக நண்பர் ஒருவருக்கே விற்றுவிட்டான். லாபமும் இல்லை; நஷ்டமும் இல்லை. ஆனால் இனி சொந்த வீடு வாங்க முடியாது. மாதா மாதம் வாடகை சுளையாக அவிழ்த்து வைக்க வேண்டும். மகள் மகன் இருவரும் கல்லூரி படிப்பு தொடங்கியிருந்தது. மீண்டும் கடன். சம்பள உயர்வு; கடன் அடைப்பு என அவனது வாழ்க்கை சக்கரம் சுழன்றது. அவனது ஐம்பதாவது வயதில் மகளுக்கும் ஐம்பத்தைந்தாவது வயதில் மகனுக்கும் திருமணங்கள் நடந்தன. சொந்த சாதியில் சம்பிரதாயங்கள் சடங்குகளுடன்தான் நடந்தன. அப்பொழுதும் கடன் வாங்க வேண்டியிருந்தது.. ஆனால் அடைக்க முடிகிற கடன்.. மீண்டும் பதவி உயர்வு; சம்பள உயர்வு. கடைசியாகப் பணி ஓய்வும் அதனுடன் வந்த பணப்பலன்களும் எல்லாவற்றிற்கும் முற்றுப் புள்ளி வைத்தது.




கடனே இல்லாமல் ஓய்வு பெற்றவர்கள்; இட மாறுதல்களே இல்லாமல் ஓய்வு பெற்றவர்கள்; பதவி உயர்வு இல்லாமல் ஓய்வு பெற்றவர்கள்; அலுவலகப் பதவியில் அதிக உயரத்திற்கு போனவர்கள்; வாழ்க்கையில் அதிகம் அடிபடாமல் ஓய்வு பெற்றவர்கள் என பல தரப்பட்ட மனிதர்கள் மத்தியில் இவன் எல்லாவற்றிலும் கொஞ்சம் கொஞ்சம் பெற்று ஆனால் எதுவும் பெறாத உணர்வுடன் ஓய்வு பெற்றான்.

பணி ஓய்வுக்கு பின் பல நண்பர்கள் சொந்த ஊருக்கு சென்றுவிட்டார்கள். அமைதியான சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சிலர் நகரத்திலேயே தொடர்ந்து வருமானம் ஈட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஊதியத்திற்கு ஓய்வில்லை வயிற்றில் பசிக்கும் சற்று ஓய்வில்லை என்னும் போது. ஓய்வூதியம் ஒரு தற்காலிகச் சமன், பசிக்கும் வயிற்றுக்குச் சிறு தீனியும் அத்தகையதே எனத் தோன்றியது. கொஞ்ச காலம் தள்ள முடியும்.

* * *

அவரால் இப்போது சற்று அமைதியுடன் பேப்பர் படிக்க முடியும் வெள்ளை பேப்பர்.

e-mail : r.ramananlic@gmail.com

# கோடீஸ்வரர்களும் கோட்டிக்காரனும்

ஏ.ஏ.ஹெச்.கே. கோரி

"நம்மத் தம்பி பத்துக் கோடி வச்சிருக்கான், சொன்னேனா ஒங்கிட்ட?"

திரும்பத் திரும்ப இந்தக்கேள்வியைக் கேட்டு ஏன் என்னை மேலும் மேலும் கடுப்பேற்றுகிறான் என்று வெறுப்பாயிருந்தது.

'நம்மத் தம்பி என்னடா, நம்ம்ம்பத் தம்பி? என் தம்பின்னு சொல்லித் தொலையேண்டா. ஒந்தம்பி பத்துக் கோடி வச்சிருப்பான், பத்தாயிரம் கோடியும் வச்சிருப்பான், அவன் என்ன எனக்கா தரப்போறான்? என்னோட எமர்ஜென்ஸிக்கி இப்ப அம்பதே லட்சம் தேவை. குடுத்து உதவுவானா ஒந்தம்பி? சும்மாப் போட்டு அனத்திட்டிருக்காத' என்று உதடுவரை வந்துவிட்ட வார்த்தைகளை மென்று விழுங்கிவிட்டு, 'ஆமா, சொன்ன' என்கிற சுமுகமான ரெண்டே வார்த்தைகளில் அவனுக்கு பதில் தந்துவிட்டு மனப் பொருமலை ஆற்றிக் கொண்டேன்.

கோடீஸ்வரனுடைய அண்ணனிடம் கொஞ்சம் கவனமாய்த்தான் வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டும்.

கோடீஸ்வரனுடைய அண்ணன் என்கிற டைட்டிலோடு, வில்லங்கப் பார்ட்டி என்கிற ஸப்டைட்டிலும் இவனுக்கு உண்டு.

இவனைத்தவிர, இன்னொரு வில்லங்கப் பார்ட்டியும் இந்தச் சிறுகதையில் ஒரு கதாபாத்திரமாய் வருவதால், முன்னவனை 'எக்ஸ்' என்றும், பின்னவனை 'ஒய்' என்றும் கொள்ளுவோம்.

நான் சென்னைக்குப் புலம்பெயர்ந்து வந்த பின்னால்தான் 'எக்ஸ்'ஸோடு எனக்குப் பழக்கம் என்றிருக்க, 'ஒய்'யோ, மதுரையில் அவன் கள்ளங்கபடமில்லாத சின்னஞ்சிறு பிள்ளையாயிருந்தபோது அவனுடைய அம்மா அவனை மடியில் போட்டுக்கொண்டு, 'ஆசை அன்பெல்லாம் கொள்ளை கொண்ட நேசா, பேசும் ரோஜா என்னைப் பாரு ராஜா' என்று, ஜமுனா ராணியின் பாடலைத் தாலாட்டாய்ப் பாடிக் கொஞ்சிக் கொஞ்சித் தூங்கவைப்பார்களே, அந்த ஆதிகாலந் தொட்டுத் தெரியும்.

நம்மப் பள்ளிப் பருவத்தில், கோடை விடுமுறைக்கு, தாதாசாபுடைய ஊரான ராஜபாளையத்தில் ஒரு மாதம் டேரா போட்டு எங்கள் ஜட்ஜ் சாய்புத் தெருவை தாதாசாபுடைய பேரப்பிள்ளைப் பட்டாளம் நாங்கள், ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருந்தபோதும் 'ஒய்'யுடைய அம்மா அவனை மடியில் போட்டுக்கொண்டு அதே பாடலைத்தான் பாடிக்கொண்டிருப்பார்கள். ஜட்ஜ் சாய்பும் தாதாசாபும் ஒரே நபர்தான் என்பது ராஜபாளையத்தோடு தொடர்பு கொண்டிருப் பவர்களுக்கும், சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கும் தெரியும். டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜாயிருந்து ரிட்டயர் ஆகியிருந்த தாதாசாப், தான் நீதிபதியாயிருந்த காலத்தில் பாரபட்சம் பார்க்காமல்தான் நீதி வழங்கியிருப்பார். ஆனால் அவர் ரிட்டயர் ஆனபின்னால் பாரபட்சமில்லாமலிருக்கவில்லை. எப்போதுமே ஒரேயொரு பார்ட்டிக்கு சாதகமாய், ஓரவஞ்சனையோடுதான் நடந்து கொண்டார்.

அந்த ஒரேயொரு பார்ட்டி, இந்த ஏழு வயசு, எட்டு வயசு, ஒன்பது வயசு பேரப்பிள்ளைதான்.

கோடை விடுமுறையில் ஜட்ஜ் சாய்புத் தெருவில் ஒரு நாடக விழா நடக்கும். நாடகப் போட்டி என்றும் கொள்ளலாம். நாடகப் போட்டிக்கு ஜட்ஜ் சாய்புதான் ஜட்ஜ். போட்டி ஆரம்பிக்கும் முன்பே முதல் பரிசு யாருக்கு என்பதை அவர் முடிவு செய்திருப்பார்.

கட்டபொம்மனின் ஒட்டு மீசையோடு நான் வீரபாண்டியக் கட்டமொம்மனாய் மேடையில் தோன்றி, சிவாஜி கணேசன் பாணியில் வசனம் பேசுவேன்.

"கிஸ்தி, திரை, வரி, வட்டி! ஹ! வானம் பொழிகிறது, பூமி விளைகிறது, உனக்கேன் கொடுப்பது கிஸ்தி? எங்களோடு வயலுக்கு வந்தாயா? ஏற்றமிறைத்தாயா? நீர்ப்பாய்ச்சி நெடுவயல் நிறையக் கண்டாயா? நாற்று நட்டாயா? களை பறித்தாயா? கழனிவாழ் உழவருக்குக் கஞ்சிக்கலயம் சுமந்தாயா? அங்கே கொஞ்சி விளையாடும் எங்குலப் பெண்களுக்கு மஞ்சளரைத்துப் பணிபுரிந்தாயா? அல்லது நீ மாமனா மச்சானா? மானங்கெட்டவனே! எதற்குக் கேட்கிறாய் திரை? யாரைக் கேட்கிறாய் வரி?"

பரவசப்பட்டு தாதாசாப் பலமாய்க் கைதட்டுவார். குறிப்பறிந்து அவரைவிட பலமாய்ப் பார்வை யாளர்கள் கைதட்டுவார்கள். பிறகென்ன, முதல் பரிசு, ஏகமனதாய் எனக்குத்தான்.

என்னைவிட சிறப்பாய் நடித்ததாய் நம்பிக் கொண்டிருந்தசகபோட்டியாளர்கள்,மனசுக்குள்ளே பொருமுவார்கள். மனசுக்குள்ளே தான் பொரும முடியும், வெளிப்படையாய் எதிர்ப்பைத் தெரிவிக்க முடியாது.

ஜட்ஜ் சாய்புத் தெருவில் தாதாசாபின் சர்வாதிகார ஆட்சி!

வீட்டுக்கு சர்வாதிகாரியாயிருந்த நம்ம வாப்பாவின் கெடுபிடிகள் தாதாசாபிடம் செல்லுபடியாகாது.

பாளையங்கோட்டைக் கான்வென்ட்டில் நாலாங்கிளாஸ் படித்துக் கொண்டிருந்தபோது, கிறிஸ்மஸ் விடுமுறைக் காலத்தில் ஒரு நாள் காலையில் பள்ளிவாசலில் சுபுஹ் தொழுதுவிட்டு வீட்டுக்குள்ளே நுழைந்த வாப்பா, 'இன்னிக்கிக் காலைல எட்டு மணிக்கு ஒனக்கு சுன்னா' என்று அதிரடியாயொரு அறிவிப்பை மொழிந்தார்.

"ஹஜ்ரத் வருவார், மோஸின்சாப் வருவார், பார்பர் வருவார். ரெடியாயிரு."

ரெடியாயிருக்கவா! எப்படி ரெடியாயிருப்பது, எந்த உறுப்பை ரெடியாய் வைத்திருப்பது என்பதை உணர்ந்தபோது உதறலெடுத்தது. எட்டு மணிக்கு, உதறல் அலறலாய் விஸ்வரூபமெடுத்தபோது, அமுக்கிப் பிடிக்க மூன்று பேர் இருந்தார்கள்.

தாதாசாபுக்கு செய்தி எட்டியபோது, தன்னுடைய செல்லப் பேரப்பிள்ளைக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் கண்டனம் தெரிவித்துக் கடிதம் எழுதினார், ஓர் அஞ்சு பைசா அஞ்சலட்டையில்.

'நல்ல நாள் குறிக்கவில்லை, பந்தல் போடவில்லை, நாலுபேருக்குச் சொல்லவில்லை, விருந்து கொடுக்க வில்லை, என்ன மகனே கத்னா இது!'

அந்த வருஷக் கோடை விடுமுறைக்கு ராஜபாளையம் போனபோது அந்த அநீதிக்குப் பரிகாரம் காணப்பட்டது.

புத்தாடை அணிவிக்கப்பட்டு, மாலை சூட்டப் பட்டு, கல்யாண மாப்பிள்ளை மாதிரி முகத்தை மறைத்து 'ஸெஹ்ரா' அலங்காரம் செய்து, குதிரையில் ஏற்றப்பட்டு, நம்ம முறைப்பெண்கள் அல்லது முறைச் சிறுமிகள் மலர் தூவி வர, பாதி ராஜபாளையத்தைச் சுற்றி ஊர்வலம் வர ஏற்பாடு செய்து அமர்க்களப்படுத்திவிட்டார் தாதாசாப்.

பொருமுவது இப்போது வாப்பாவுடைய முறை!

இந்த நாடக விழாக்கள், வெற்றிப் பரிசுகள், குதிரையேற்றங்கள், ஊர்வலங்கள், கோலாகலங்கள், கொண்டாட்டங்கள்,சின்னஞ்சிறிய பிராயத்திலேயே ஒரு கதாநாயகனாய் நான் உயர்த்திப் பிடிக்கப் பட்டது, ஒரு ஹீரோவாய் நான் பிரகாசித்தது எல்லாம் இந்த 'ஒய்'க்கு, அவனுடைய அம்மா மடியில் பாட்டுக் கேட்டுக்கொண்டு படுத்துக் கிடந்த 'ஒய்'க்கு அர்த்தமாயிருக்க சாத்தியக்கூறுகள் ரொம்ப ரொம்பக் குறைவு.

கொஞ்சம் பெரிய சிறுவனாய் வளர்ந்துவிட்ட பின்னால், மதுரை செயின்ட் மேரிஸ் உயர்நிலைப் பள்ளியில் நான் படித்துக்கொண்டிருந்த காலத்தில், ஹைஸ்கூலுக்குப் பின்புறமிருந்த எலிமெண்ட்ரி ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தான் 'ஒய்'.

நம்மப் பள்ளிக்கூடத்திலிருந்து ஆறேழு நிமிஷ நடையிலிருந்த திருமலை நாயக்கர் மஹாலில் மதுரை நீதிமன்றம் இயங்கிக் கொண்டிருந்த, கல்தோன்றி மண்தோன்றாக் காலம் அது.

வழக்கறிஞராயும் 'ஒய்'க்குத் தகப்பனாராயுமிருந்த எங்கப் பெரிய வாப்பாவுக்கு நீதிமன்ற வளாகத்திலிருந்தச் சேம்பருக்கு, மதிய உணவு வரும், எனக்கும் 'ஒய்'க்கும்.

அவனை அவனுடைய பள்ளிக்கூடத்திலிருந்து பிக்அப் பண்ணிக்கொண்டு, சாலையைக் கடந்து மஹாலுக்கு வழி நடத்திப் போய், மதிய உணவுக்குப் பிறகு பத்திரமாய்த் திரும்பக் கூட்டிக்கொண்டு வந்து பள்ளிக்கூடத்தில் விட வேண்டியது அண்ணனான என்னுடைய பொறுப்பாயிருந்தது.

கல்லூரிப் பருவத்தில், பெங்களூரில் நானொரு துணிக்கடையில் ஆங்கிலத்தில் பேசியதைப் பார்த்து அசந்து போனான்.

"இங்லீஷ்ல பேசறீங்கண்ணே?"

"கன்னடம் தெரியாட்டி, பெங்களூர்ல இங்லீஷ்லதான் பேசணும்."

"அதில்லண்ணே, இங்லீஷ்ல வெளுத்துக் கட்றீங்களேண்ணே!"

"என்ன மாதிரி, காலேஜுக்குப் போறப்ப நீயும் வெளுத்துக் கட்டுவ."

என்னை மாதிரி, கல்லூரிக்குப் போனான். என்னைத் தாண்டி சட்டக் கல்லூரிக்கும் போனான். நான் சென்னைக்குப் புலம் பெயர்ந்த பின்னால் அவனும் பெயர்ந்தான்.

அவங்க வாப்பாவைப் போல அவனும் ஒரு வக்கீலானான்.

ஆனால் எங்க வாப்பாவைப் போல நானொரு இன்ஜினியராகவில்லை, ஒரு பிஸினஸ்மேனாய் ஆனேன்.

இன்ஜினியராய் ஆவதற்கு ஒரு தகுதி தேவை. பிஸினஸ்மேனாய் ஆவதற்கு ஒரு தகுதியும் தேவையில்லை.

இப்படியாய், அவன் ஒரு வழக்கறிஞனாயும், நான் ஒரு தொழிலதிபனாயும் ஒரு பதினஞ்சு வருஷத்தை ஓட்டிய பின்னால், ஒரு நாள் ஓட்டமும் நடையுமாய் வந்தான் என்னுடைய டிப்பார்ட்மென்ட் ஸ்டோருக்கு.

'அண்ணே, ஒரு அர்ஜன்ட் மேட்டர்' என்று மூச்சிரைத்தான்.

"அண்ணே, நா கனடாவுக்குப் போறேன்"'

"வெரிகுட், சமத்தாப் போய்ட்டு வா தம்பி, எத்தன மணிக்கி ரயில்? ரயிலா, இல்ல பஸ்ஸா?"

"கிண்டல் பண்ணாதீங்கண்ணே, நெஜம்மாவே நா கனடாவுக்குக் குடும்பத்த ஷிஃப்ட் பண்றதா இருக்கேன். அந்த விஷயமாத்தான் ஒங்களப் பாக்க வந்தேன். அவசரமா ஒரு உதவி தேவப்படுது."

"சொல்லு தம்பி, என்ன உதவி, சொல்லு. என்னால முடிஞ்சதக் கட்டாயம் செய்றேன்."

"ஒங்களுக்கு இது சின்ன மேட்டர்ண்ணே, விஸா அப்ளை பண்ணக் கனடியன் எம்பஸிக்கிக் போயிருந்தேன். விஸா ஃபீஸ் ஒரு அஞ்சாயிரம் ஷாட் ஆகுது. நீங்க குடுத்தீங்கன்னா, எம்பஸிக்கி ஓடிப்போய்க் கையோட வேலய முடிச்சிருவேன். நாளக்கி பேங்க்ல எடுத்து ஒங்களுக்குக் கேஷ் திருப்பிக் குடுத்துருவேன்."

"அட, இவ்ளவு தானா! இந்தா ஐயாயிரத்தப் புடி. டைம் வேஸ்ட் பண்ணாத, கௌம்பு."

"நாளக்கி ஒங்களுக்குக் குடுத்துர்றேண்ணே."

"அத விடப்பா, எனக்கு ஒண்ணும் அவசரமில்ல, மொதல்ல நீ வேலய முடி. எப்பக் கௌம்பறதா ஐடியா?"

"அதுக்கு எப்டியும் ஒரு ஆறு மாசம் ஆகும்ணே. கேஷுக்கு நன்றிண்ணே. அப்ப நா கௌம்பறேன். ஆட்டோ வெய்ட்டிங்."

பதினஞ்சு வருஷம் நம்மத் தொழிலுக்கு சாதகமாய் வீசிக் கொண்டிருந்த காற்று, திடீரென்று மாற்றியடிக்க ஆரம்பித்தது.

நஷ்டம், நஷ்டத்துக்கு மேல் நஷ்டம். நஷ்டங்களை சீர் செய்வதற்கென்று வாங்க ஆரம்பித்த மார்வாடிக் கடன்களும் வட்டிகளும் ஏறிக்கொண்டே போயின.

ஒரு மார்வாடிக் கடனை செட்டில் செய்வதற்கு அடுத்த மார்வாடியிடம் கடன். பிறகு அந்தக் கடனைத் தீர்ப்பதற்கு இன்னொரு மார்வாடி.

தயக்கமே இல்லாமல் மார்வாடிகள் ரொம்ப சந்தோஷமாய்க் கடன் தந்து உதவினார்கள்!

ரெண்டு வீடுகள் வைத்திருக்கிறான். வீடுகளை விற்று எப்படியாவது நம்மக் கடன்களை வட்டியோடு அடைத்து விடுவான் என்கிற அபார நம்பிக்கை!

சென்னையிலிருந்த வீடும், பாளையங்கோட்டையில் வாப்பா கட்டியிருந்த வீடும் விற்பனைக்குப் பேசியாச்சு என்றாலும் மார்வாடிகளின் ஆசைப்படி டீல் உடனடியாய் முடியாமல் இழுத்தடித்தது. மார்வாடிகளின் நெருக்கடி, கிடுக்கிப்பிடியாய்ப் பரிணாம வளர்ச்சி பெற்றபோது 'ஒய்'யின் நினைப்பு வந்தது. அவனிடம் ஓர் அஞ்சு லட்சம் கேட்டுப் பார்த்தாலென்ன?

"அன்னிக்கி ஒரு ஆத்திர அவசரத்துக்கு ஒங்கக்கிட்ட தெரியாத்தனமா ஒரு அஞ்சாயிரம் வாங்கிட்டேன். அதுக்குப் பழிக்குப்பழி வாங்க இப்ப என்னத் தேடி வந்திருக்கீங்க."

"ஐயையோ, அப்டியெல்லாம் இல்ல தம்பி. இதுவும் ஒரு எமர்ஜன்ஸிதான். இப்பக் குடுத்து ஹெல்ப் பண்ணேன்னா ரெண்டே மாசத்ல திருப்பிக் குடுத்துருவேன்."

"ரெண்டே மாசமா! என்னண்ணே அசால்ட்டாச் சொல்றீங்க! நீங்க கடைய மூடப் போறீங்கன்னு கேள்விப் பட்டேன். நீங்க பாட்டுக்குக் கடைய மூடிட்டுத் தலைமறைவாயிருவீங்க. ஒங்களுக்குக் கடன் குடுத்துட்டு நா லோலோன்னு அலையவா? இன்னும் மூணு மாசத்ல நா கனடாவுக்குக் கௌம்பணும் வேற."

"கடையை மூடிட்டு நா தலைமறைவாயிருவேனா! என்ன தம்பி இப்டியெல்லாம் பேசற?"

"நீங்கி இன்னிக்கி இருக்கிற இந்தப் பரிதாபமான நெலமையில எவன்ட்ட போய் நீங்க உண்டியல் குலுக்கினாலும் இப்டித்தான் பேசுவான். அஞ்சு லட்சமெல்லாம் கைல இல்ல. ஒரு மாசத்ல தந்திருவீங்கன்னு ப்ராமிஸ் பண்ணீங்கன்னா ஒரு லட்சம் தர்றேன்."

வெட்கம் மானத்தை விட்டு அந்த ஒரு லட்சத்தை வாங்கிக் கொள்ள வேண்டிய அளவுக்கு பொருளாதார நெருக்கடி. கடன் வாங்கிப் பத்துப் பதினஞ்சு நாட்களிலேயே, நாட்கள் வேக வேகமாய் ஓடி மறைந்து, அந்த ஒருமாதக் கெடு முடிவடைந்து விட்டது. ஒரு லட்சத்தைத் திருப்பித்தர இயலவில்லை.

உறவினர்களோ நண்பர்களோ யார் முகத்தையும் பார்க்கத் தெம்பு இல்லாமல், வெளியே எங்கேயும் தலைகாட்டாமல், வீட்டை விட்டால் கடை, கடையை விட்டால் வீடு என்றிருந்த அந்த அஞ் ஞாதவாசக் காலத்தில் டாக்டர் சாச்சாவிடமிருந்து அழைப்பொன்று வந்தது.

ஆசிரியர் காலனியில் புதிதாயொரு க்ளினிக் திறக்கிறாராம், தவறாமல் நான் வரவேண்டுமாம். டாக்டர் சாச்சா ஓர் உத்தமமான மனிதர். அவர் அழைப்பு விடுத்தால் தட்டமுடியாது. போகத்தான் வேண்டும்.

'ஒய்'யும் அங்கே வருவான் என்று தெரியும். ஆனாலும், டாக்டர் சாச்சாவின் அழைப்பை நிராகரிக்க முடியாது. போகத்தான் வேண்டும்.

போனேன்.

ரிப்பன் வெட்டி, துஆ ஓதி, எல்லோரும் கட்டிடத்துக்குள் புகுந்து உள் கூடத்தில் ஜமுக்காள விரிப்பில் உட்கார்ந்த பின்னால், வெளி அறையில் தேநீர் பரிமாறப்படுகிறது என்று சொல்லப்பட, எல்லோரும் எழுந்து வெளியேறினார்கள், என்னைத் தவிர.

நான் மட்டும் ஒரு மூலையில் அமர்ந்திருந்தேன்.

தனியாய் அமர்ந்திருந்தேன்.

தலைகவிழ்ந்து அமர்ந்திருந்தேன்.

நான் பயந்த சம்பவம் அப்போது நிகழ்ந்தது. 'ஒய்' உள்ளே பிரவேசித்தான்.

'என்ன அண்ணே தனீயா ஒக்காந்திருக்கீங்க?' என்று இளக்காரமாய் ஒரு கேள்வி வந்தது.

'இது.... வந்து... தம்பி, நா டீ குடிக்கிறது இல்ல, அதான்......' என்று தடுமாறினேன்.

'தனீயா ஒக்காந்திருக்கீங்க சரி, தலகுனிஞ்சி ஒக்காந்திருக்கீங்களே' என்று அடுத்த இளக்காரத்தை அவன் என்மேலே இறக்கி வைத்தபோது, பதில் பேச என்னிடம் வார்த்தைகள் இல்லை.

"நீங்க தலையக் குனிஞ்சிக்கிட்டு ஒரு மூலைல ஒக்காந்திருந்தீங்கன்னா எம்பார்வைல படாமத் தப்பிச்சிர முடியுமா? குற்றவுணர்ச்சி குறுகுறுக் குதோ? அப்படிக் குற்றவுணர்ச்சி எல்லாம் ஒங்களுக்கு இருக்காது. இருந்திருந்தா, வாங்கின ரூவாய டைம்ல திருப்பிக் குடுத்திருப்பீங்களே! ஒரு மாசம்னு சொல்லி வாங்கினீங்க. ரெண்டு மாசம் ஆகப்போகுது, மூச்சுப்பேச்சில்லாம இருக்கீங்க. அப்டியே இன்னும் ஒரு மாசம் இழுத்துருவோம். இந்தப் பயல் ஊரக் காலிபண்ணிட்டுக் கனடாவுக்குப் போயிருவான், ஒரு லட்சத்த

அப்டியே காந்திக் கணக்ல எழுதிருவோம்னு நெனச்சிருப்பீங்க."

"அல்லா, அப்டியெல்லாம் இல்லிங்க தம்பி. இன்னும் ஒரேயொரு வாரம் டைம் குடுங்க. எப்டியும் திருப்பிக் குடுத்துர்றேன்."

"மனுஷனுக்கு நாணயம் வேணும்ணே. வாக்கு சுத்தம் வேணும். அதில்லன்னா, செத்துப் போயிரலாம்."

ஒருவாரம் ஓடிப்போய் விட்டது.

ஒரு லட்சம் ஏற்பாடு செய்ய முடியவில்லை.

என்னால் செத்துப் போகவும் முடியவில்லை.

ஒரு வாரம் கழிந்து சரியாய் எட்டாவது நாள் காலையில் என்னை ஏசுவதற்குக் கடைக்கே வந்துவிட்டாள், 'ஒய்'யுடைய மனைவி.

"ஒரு வாரத்ல அமவுன்ட்டத் தர்றதாச் சொன்னீங்களாமே, வாங்கிட்டு வரச் சொன்னாங்க."

"வந்து....அமவுன்ட்இன்னும்ரெடியாகலியேம்மா...."

"இதச் சொல்றதுக்கு ஒங்களுக்கு வெக்கமாயில்லியா அண்ணே? திருப்பிக்குடுக்க வக்கில்லன்னா நீங்கள்ளாம் எதுக்குக் கடன் வாங்கறீங்க? வாங்கும்போது கையப்புடிச்சிக் காலப்புடிச்சி வாங்கிக்க வேண்டியது, அப்புறம், ஜவ்வா இழுத்து, மொங்காம் போட்ற வேண்டியது. போனாப் போகுதுன்னு இன்னும் ஒரு வாரம் தர்றோம். அதுக்குள்ள ஒரு லட்சம். வரலன்னா, அவர் வருவார், வந்து ஒங்கக் கஸ்டமர்ஸ் முன்னால கன்னா பின்னான்னு கலாட்டா பண்ணுவார். அவர் வரலன்னா நா வருவேன்."

அவன் வருவான், இல்லையென்றால் இவள் வருவாள். ரெண்டு பேரும் சேர்ந்து வந்தாலும் வந்து விடுவார்கள்!

வீடுகளின் விற்பனை இழுத்தடித்துக் கொண்டிருக்கிற எக்கச்சக்கமான சூழ்நிலையில், மார்வாடிக் கடன்கள் கத்திகளாய்க் கழுத்தை அழுத்திக் கொண்டிருக்க, இந்த லட்சியத் தம்பதி அல்லது லட்சத் தம்பதி கடைக்குப் படையெடுத்து வருமுன் ஏதாவது செய்தாக வேண்டுமே என்று நம்ம சகோதரிகள் நான்கு பேரிடமும் விண்ணப்பம் வைத்தேன்.

திருவனந்தபுரத்து அக்காவிடமிருந்தும், டாக்டர் தங்கச்சிகள் ரெண்டு பேரிடமிருந்தும் கேள்வி முறையே இல்லாமல் லட்சங்கள் வந்து சேர்ந்தன.

*'My sisters are all Angels'* என்று கண்ணீர் மல்க என்னுடைய டய்ரியில் எழுதி வைத்தேன்.

ஒரே சகோதரனுடைய இக்கட்டான நிலைமையில், பிரதிபலன் பாராமல் உடனடியாய் உதவிக்கு வந்த நம்ம சகோதரிகள் எல்லோருமே சந்தேகத்துக்கிடமில்லாமல் தேவதைகள்தான். ஆனால், மதுரைத் தங்கச்சியிடமிருந்து சாதகமான தகவல் வருவது தாமதப்பட்டுக்கொண்டிருக்கிறதே என்பது ஓர் உறுத்தலாயிருந்தது.

மதுரையிலிருந்த கடைக்குட்டித் தங்கச்சியிடமிருந்து தகவல் வராத சஸ்பென்ஸில், தயக்கத்தோடு மதுரைத் தங்கச்சிக்கு ஃபோன் செய்த சமயம், சொல்லாமல் கொள்ளாமல் அவள் ஃபோனை மச்சானின் கையில் கொடுத்து விட்டபோது சங்கடப்பட்டுப்போய், ஒரு மாதிரி சமாளித்தேன்.

"ஒண்ணுமில்ல மச்சான், சும்மாத்தான் ஃபோன் பண்ணேன். சவுக்கியமாயிருக்கீங்களா மச்சான்?"

"நாங்க நல்லா சவுக்கியமா இருக்கோம் அண்ணே. ஒங்க மேட்டர் ஒங்க ஸிஸ்டர் சொன்னாப்டி. மெட்ராஸ்ல இண்டியன் பேங்க்ல எங்களுக்கு ஒரு ஃபிக்ஸ் டெப்பாஸிட் இருக்கு அண்ணே, அது வர்ற இருவத்தி நாலாந்தேதி மெச்சூர் ஆகுது. நாங்க ரெண்டு பேரும் இருவத்தி மூணாந்தேதி பாண்டியன்ல கௌம்பி இருவத்தி நாலாந்தேதி காலைல மெட்ராஸ்க்கு வர்றோம், இன்ஷா அல்லா. டெப்பாஸிட் அஞ்சி லட்சம். அப்டியே எடுத்து ஒங்கக் கைல குடுத்துர்றோம் அண்ணே."

இருபத்தி மூணாந் தேதி காலையில மச்சானிடமிருந்து ஃபோன் வந்தது.

"அண்ணே, நாங்க ரெண்டு பேரும் மெட்ராஸ்க்கு வந்துட்டோம்."

"ஆனா, மச்சான், நாளக்கில்ல நீங்க வர்றதா சொன்னீங்க?"

"நாளக்கி, இருவத்தி நாலாந்தேதி வர்றதாத்தான் இருந்தது. அந்த எஃப்டி பேப்பர்களப் பாத்தப்ப அது இருவத்தி மூணாந்தேதியே மெச்சூர் ஆயிருதுன்னு தெரிஞ்சது. அப்புறம் எதுக்கு ஒரு நாள் டிலே பண்ணணும்னு, ட்ரெய்ன் டிக்கட்டக் கேன்ஸல் பண்ணிட்டு, நேத்து ராத்திரி பஸ்ல கௌம்பி வந்துட்டோம். நாங்க ரெண்டு பேரும் இப்ப பேங்க்குக்குக் கௌம்பிட்டிருக்கோம். நீங்களும் வந்துருங்க."

பேங்க்கில் போய் அந்த அஞ்சு லட்சத்தைப் பெற்றுக் கொண்ட போது எனக்கு அழுகையைக் கட்டுப்படுத்த இயலவில்லை. அழுகை கொஞ்சம் தணிந்த பின்னால், 'வீடு விக்ய ஏற்பாடு பண்ணிட்டிருக்கேன் மச்சான், வீடு வித்தவொடன இந்த அமவுன்ட்ட ஸெட்டில் பண்ணிர்றேன்' என்று நான் சொன்னதற்கு, 'அண்ணே, மொதல்ல ஒங்கப் பிரச்சனை முடியட்டும். எப்ப ஸெட்டில் பண்ணுவீங்கன்னு ஒங்கள நா கேட்டேனா?' என்று, திரும்பவும் அழவைத்தார்.

மச்சான் தந்த அஞ்சு லட்சத்தோடு நேரே'ஒய்' யுடைய வீட்டுக்குப் போய் ஒரு லட்சம் கடனை அடைத்தேன்.

'ஒரு லட்சத்துக்கு வட்டி கிட்டி போட்டுக் குடுத்துராதீங்கண்ணே' என்றான், பணம் கை மாறுகிறபோது.

"வட்டி வாங்கறதும், வட்டி குடுக்கறதும் இஸ்லாத்ல ஹராம் அண்ணே."

"சரிங்க தம்பி."

"அப்புறம் அண்ணே, நா ஏதும் கோபமாப் பேசியிருந்தா வருத்தப்பட்டுக்கிராதீங்க."

"எனக்கு வருத்தமே இல்லீங்க தம்பி. நா இன்னிக்கி இருக்கிற இந்தப் பரிதாபமான நெலமையில யார்ட்ட போய் உண்டியல் குலுக்கினாலும் இப்டித்தான் பேசியிருப்பாங்க."

"அடுத்த மாசம் குடும்பத்தோட கனடாவுக்குக் கெளம்பறேன் அண்ணே."

"சந்தோஷமாப் போய்ட்டு வாங்க தம்பி."

"கனடாவுக்கு வந்திங்கன்னாக் கட்டாயம் நம்ம வூட்டுக்கு வாங்க அண்ணே."

குரூரமான ஒரு நகைச்சுவைத் துணுக்கை என்மேலே சுமத்திவிட்டு நம்ம 'ஒய்' இந்தக் கதையிலிருந்து கழன்றுகொண்டு கனடாவுக்குக் குடிபெயர்ந்து விட்டான்.

புன்னகையோடு அம்மா கழற்றிக் கொடுத்த தங்க வளையல்கள், மனைவியின் நகைகள், மற்றும் சகோதரிகளுடைய லட்சங்களைக் கொண்டு கடன்களை ஒருமாதிரி அடைத்து விட்டுக் கடையின் ஷட்டரையும் இறக்கியாச்சு.

பிஸினஸ்மேனாய் ஆவதற்கு ஒரு தகுதியும் தேவையில்லை என்று நினைத்திருந்தது தப்பு, பிஸினஸ்மேனாய் ஆவதற்குக்கூட தகுதிகள் தேவை என்று தெரிந்து கொள்வதற்கு எனக்குப் பதினஞ்சு வருஷம் பிடித்திருக்கிறது!

சொந்த வீடுகளை விற்றுவிட்டு, நோய்வாய்ப்பட்டிருக்கிற பெற்றோரோடு ஒரு டபுள் பெட்ரூம் வாடகை ஃப்ளாட்டுக்குக் குடி வந்தாச்சு.

நம்ம பிஸினஸின் கடைசிக்கட்ட நெருக்கடி நிலையில், இந்தச் சிறுகதையின் முதல் பத்திக்குக் கால்ஷீட் கொடுத்திருந்த 'எக்ஸ்', மறுபடியும் இப்போதுதான் என்ட்டர் ஆகிறான்.

'ஒன்ட்ட ஒரு விஷயம் கேக்கணும், ஃப்ரீயா இருந்தேன்னா நம்ம ஆஃபீஸுக்குக் கொஞ்சம் வந்துட்டுப் போயேன்' என்று தொலைபேசியில் அழைத்தான்.

'வேலை வெட்டியில்லாம வீட்டோடு இருக்கிறவன். ஃப்ரீயாயில்லாமல் வேறே எப்படி இருப்பான்!' என்று எனக்கு நானே விரக்தியாய்ப் பேசிக்கொண்டு அவனுடைய அலுவலகத்துக்குப் போனபோது, 'நம்மத் தம்பி பத்துக் கோடி வச்சிருக்கான், சொன்னேனா ஒங்கிட்ட?' என்று ஆரம்பித்தான்.

'ஆனா, ஒன்ன இப்பக் கூப்ட்டது இதச் சொல்றதுக்கில்ல. தம்பி அசத்தலா ஒரு வாட்ச் வாங்கி அனுப்பிச்சிருக்கான். ஆனா ஏற்கனவே எங்கிட்ட அருமையான வாட்ச்ஒண்ணு இருக்கு. ஒரு கைல தான் வாட்ச் கட்டணும்னு மடத்தனமா ஒரு ரூல் வச்சிருக்கானுங்க. ரெண்டு கை இருக்கும்போது, ரெண்டு வாட்ச்சும் இருக்கும்போது, ரெண்டு கைலயும் வாட்ச் கட்னா என்னன்னு ஒன்ட்ட ஐடியா கேக்கத்தான் ஒன்ன வரச்சொன்னேன். பணத்திமிர்ன்னு பொதுமக்கள் சொல்லுவாங்களோ?"

"சீச்சீ, யார் சொன்னது? பணத்திமிர்ன்னுல்லாம் பொதுமக்கள் சொல்ல மாட்டாங்க."

"என் வயித்ல பால வார்த்தேடா."

"ஆனா ஒண்ணு, கிறுக்கன்னு சொல்லுவாங்க. ரெண்டு கைலயும் வாட்ச்சக் கட்டிக்கிட்டுத் திருநெல்வேலிப் பக்கம் போனேன்னா, 'அடக் கோட்டிக்காரா!' ன்னு சிரிப்பாஹ. தப்பித்தவறி யாழ்ப்பாணத்துக்குப்போய்ட்டன்னா,'உமக்கென்ன விசரோ!' எண்டு பகிடி பண்ணுவினம்."

இந்த உரையாடல் நிகழ்ந்த ஒரு வாரத்தில் அடுத்த நெருக்கடி. அம்மாவுக்கு மருந்துகள் வாங்குவதற்கு ஒரு ரெண்டாயிரம் ரூபாய் வேண்டும். வாப்பாவுடைய பென்ஷன் தாமதமாகிறது. ஆனால் மருந்துக்கு அவசரம்.

யாரிடம் போய்க் கையேந்தலாம் என்று யோசித்தபோது, கைக்கெட்டுகிற அருகாமையில் இருக்கிறவன் 'எக்ஸ்' தான் என்று உதித்தது. ரெண்டு கைகளும் ரெண்டு வாட்ச்களும் வைத்திருக்கிறவன், ரெண்டே ரெண்டாயிரம், ஓர் அவசரத்துக்குத் தந்து உதவமாட்டானா என்கிற நம்பிக்கையில் அவனுடைய அலுவலகத்துக்கு, அவன் அழைக்காமலேயே போனேன்.

'என்ன, திடீர்னு வந்து நிக்கிற?' என்று அவன் கண்ணியக் குறைவாய் வரவேற்றதை நான் பொருட்படுத்தவில்லை. வாழ்க்கையில் இதைவிட மஹாப் பெரிய கேவலங்களையெல்லாம் எதிர்கொண்டாச்சு. நமக்கு வேலையாக வேண்டுமே!

வந்து, ஒன்ட்ட ஒரு உதவி கேட்டு வந்திருக்கேன்' என்று சொல்லி, நான் வாயை மூடுமுன்பே, 'பணவுதவியத் தவிர வேற என்ன உதவி வேணும்ன்னாலும் கேளு' என்று முற்றுப்புள்ளி வைக்கப்பார்த்தான்.

'ஆனா, நா வந்தது பண உதவிக்கித்தான்......' என்று தயங்கித் தயங்கி இழுத்தேன்.

"அம்மாவுக்கு மருந்து வாங்கக் காசு கொஞ்சம் கொறையுது.... அப்பாவோட பென்ஷன் அடுத்த வாரம் வந்துரும்......"

"நீ தவறான எடத்துக்கு வந்திருக்க நண்பா. சுத்தமா என்ட்டக் காசு இல்ல. நம்பத் தம்பிதான் கோடீஸ்வரன், நா இல்ல. நம்மத் தம்பி பத்துக் கோடி வச்சிருக்கான், சொன்னேனா ஒங்கிட்ட?"

'நீ கோட்டிக்காரனில்லடா, ஒன்ட்டயும் ஒரு உதவி கெடைக்கும்னு நம்பி வந்தேனே. நாந்தான் கோட்டிக்காரன்' என்று மனசுக்குள் கறுவிக்கொண்டு அவனை உற்ற்றுப் பார்த்தேன்.

பிறகு அவனுடைய வக்கிரமான கேள்விக்கு உக்கிரமாய் ஒரு பதிலைத் தந்துவிட வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று, வாயைத் திறந்தேன்.

"ஒம்போது கோடி தடவ சொல்லியிருக்க. இன்னும் ஒரேயொரு கோடி தான் பாக்கி."

e-mail : ghoriaahk@yahoo.com

## பார்வைக்கும் படிப்புக்கும் புதிய புத்தகங்கள்



ஒரு மாபெரும் நகரத்தை நீரில் புதைத்த கதைதான் டிசம்பர் 2015 சென்னை வெள்ளத்தின் கதை. பெயலின் கதை. துயரமும், வீரமும், தியாகமும், அன்பும் பின்னிப்பிணைந்த வரலாறு சைலபதியின் சொற்களில்....

**பெயல்**
*தமிழில்: சைலபதி*
**வெளியீடு:** *யாவரும் பப்ளிஷர்ஸ், 214, புவனேஸ்வரி நகர், 2வது மெயின்ரோடு, வேளச்சேரி, சென்னை-600042.*
*விலை ரூ.180/-*

---

**வலி**
*ஆசிரியர்: அமரந்தா*
**வெளியீடு:** *சந்தியா பதிப்பகம்,*
*விலை ரூ.110/-*
*#77, 53வது தெரு, 9வது அவென்யூ, அசோக் நகர், சென்னை-600 083.*
*தொ.பேசி: 044-24896979*

சக மனிதர்கள் ஏற்படுத்திய ரணவலியை காலத்தால் ஆற்றிவிட முடியுமா? காய்ந்த புண்கள் வடுக்களாகவும் ஆறாத்துயர் நோயாகவும், வலி தொடர்வதை தடுக்கத்தான் முடியுமா? சமூகத்தின் அடுக்குகளின் வெவ்வேறு பருவத்துப்பெண்கள் அனுபவிக்கு வலிகள்....




---



வாசிப்பின் பேரனுபவத்தை வாசகருக்கும் கடத்தும் முயற்சியே கவிஞர் சமயவேலின் இக்கட்டுரைத் தொகுப்பு. துய்ப்பு விமர்சனம் *(Appreciative Criticism)* என்ற வகைமையில் இக்கட்டுரைகள் அடங்குவன என்கிறார் தொகுப்பாளர்.

**ஆண்பிரதியும் பெண்பிரதியும் கட்டுரைத் தொகுப்பு**
*ஆசிரியர் : சமயவேல்*
**வெளியீடு:** மணல்வீடு, *விலைரூ.150/-*
ஏர்வாடி, குட்டப்பட்டி அஞ்சல், மேட்டூர் வட்டம், சேலம்மாவட்டம்.
தொலைபேசி: *: 98946 05371*

---

**மெர்சோ : மறுவிசாரணை**
**மொழிபெயர்ப்பு நாவல்**
*தமிழில்: ஸ்ரீராம்*
**வெளியீடு:** க்ரியா, *விலை ரூ.195/-*
*25,17-வது கிழக்கு தெரு, திருவான்மியூர், சென்னை-600041.*

ஆல்பெர் காம்யு எழுதிய 'அந்நியன்' நாவலின் தொடர்ச்சியாகவும், அதன் மறுபக்கமாகவும், எதிரொலியாகவும் அமைந்திருக்கும் 'மெர்சோ: மறுவிசாரணை', 'அந்நியன்' நாவலைப் படித்த ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய படைப்பு.




---




எண்ணங்களை உடனே பதிவுசெய்ய முகநூலின் வசதியை இப்போது வருகிற பத்திரிகைகள் உருவாக்கித் தரத்தயங்குகின்றன... முகநூலில் எழுதுபவர்கள் அவர்களாகவே அவர்களின் எழுத்துக்களின் தரத்தை நிர்ணயித்துக்கொள்ளவேண்டும் – அழகிய சிங்கர்

**திறந்த புத்தகம்-கட்டுரைத் தொகுப்பு**
*ஆசிரியர்: அழகியசிங்கர்*
**வெளியீடு:** விருட்சம், *விலை ரூ.170/-*
*சீத்தாலட்சுமி அபார்ட்மெண்ட்ஸ், 7, ராகவன் காலனி, மேற்குமாம்பலம், சென்னை-600 033.*
*தொ.பேசி: 044-24710610*

---

**இடம் பொருள் மனிதர்கள்**
**கட்டுரைத் தொகுப்பு**
*ஆசிரியர் : மாதவ பூவராக மூர்த்தி*
**வெளியீடு:** விருட்சம், *விலை ரூ.130-*
*சீத்தாலட்சுமி அபார்ட்மெண்ட்ஸ், 7, ராகவன் காலனி, மற்குமாம்பலம், சென்னை-033. தொ.பே: 044-24710610*

காலமும் தூரமும் மாறியிருக்கலாம், பெயர்களும் உறவும் மாறியிருக்கலாம், தாக்கமும், விளைவும் வேறாகலாம். ஆனால் உணர்வுகளும் மனதின் பதிவுகளும் ஒன்றுதான். அவசரமான இந்த காலகட்டத்தில் நீங்கள் நினைக்க விரும்பி மறந்துபோன அனுபவங்களைத்தான் நான் எழுதியிருக்கிறேன்.



**பதிவு**

## கி.ரா.95 சிற்றிதழ்களுக்கான கரிசல் விருது, 2017




ஒரு புதிய இலக்கிய இதழ் தேவையா என்பது குறித்து ஓவியர்கள், வாசகர்கள், எழுத்தாளர்கள் என 20க்கும் மேற்பட்ட நண்பர்கள் ஒன்றுகூடி, தொடர்ந்த கருத்து பரிமாற்றங்களுக்கு பின்பு, 70களில் தொடங்கியச் சிற்றிதழ்களின் மரபில் ஒரு இதழை காலாண்டிதழாக கொணரலாம் என முடிவெடுத்தனர். அதன்படி, சி.சு.செல்லப்பா அவர்களின் நூற்றாண்டினை ஒட்டி, முதல் இதழ் ஜனவரி, 2013ல் கொணரப்பட்டது. சி.சு.செல்லப்பாவின் உருவப்படத்தை ஓவியர் ஜே.கே. அவர்கள் முகப்பு படமாக வரைந்திருந்தார்.

ஒவ்வொரு இதழிலும் ஓவியர்களுக்கு, 25 சதவிகித பக்கங்கள் அளிக்கவேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டதை ஒட்டி, கடந்த 17–18 இதழ்வரை ஓவியர்களும், சிற்பிகளும் அவர்களுக்குரிய பங்கினை நட்புடனும் உரிமையுடனும் ஆற்றிவருகின்றனர். நவீன இலக்கியம் சார்ந்த முன்னோடிகளின் எழுத்துக்களை புதிய வாசகர்களை நோக்கிக்கொண்டுசெல்வதுடன், இளம் எழுத்தாளர்களையும், விமர்சகர்களையும், வாசகர்களையும் இன்றைய இலக்கிய சூழலில் முன்னெடுக்க வழிவகுப்பதும், எந்தவித அமைப்பு அல்லது முகாம் அல்லது போக்குகள் சார்பு இல்லாது தளம் இதழ் வெளிவருமெனும் முடிவினையும் செயல்படுத்தும் வகையில் தளம் இதழின் கடந்த 4 ஆண்டு வெளிப்பாடு அமைந்துள்ளமையை வாசகர்கள் அறிவார்கள்.

விளம்பரங்களை, பரிசுகளை, விருதுகளை அறம்பிறழ் வணிக நிறுவனங்களிடமிருந்து பெறுவதில்லை என்பதோடு, பரிசுகள் விருதுகள் பற்றி தளம் பாராட்டுவதோ, இகழ்வதோ இல்லை. ஒவ்வொரு இதழிலும் ஒரு குறிப்பிட்டப் பொருளை முதன்மைப்படுத்தி விவாதத்திற்கு முன்னெடுத்துச் செல்லும் தன்மைத்ததாய் தளம் கொணரப்படுகிறது.

சிற்றிதழ்க்கான கி.ரா.95–கரிசல் விருதினை பெறும் இத்தருணத்தில், தளம் இதழின் ஆதாரமாக விளங்கும் வாசகர்களையும், ஓவியர்களையும், எழுத்தாளர்களையும், நண்பர்களையும் மகிழ்வுடன் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களின 95வது அகவை நிறைவினையொட்டி கி.ரா. அவர்கள் 2017–ம் ஆண்டிற்கான சிறந்த சிற்றிதழ் விருதினை தளம் இதழுக்கு வழங்கினார். 16–09–2017 அன்று புதுவை பல்கலை அரங்கில் வழங்கப்பட்ட இவ்விருதினை தளம் இதழ் ஆசிரியர் பாரவி பெற்றுக்கொண்டார்.

Published by Karthikeyan Pugalendi on behalf of THALAM at 10/2 (8/2), Police Quarters Road, T.Nagar, Chennai-600 017.
Printed at : Jothy Enterprises, Chennai. Editor : Paaravi.